ஓம் சக்தி

# மேல்மருவத்தூர் அன்னையின் அருள்வாக்கு

வெளியீடு

**ஆதிபராசக்தி கல்வி, மருத்துவ, பண்பாட்டு அறநிலை**

மேல்மருவத்தூர்-603 319.

முதற் பதிப்பு 1980
இரண்டாவது திருத்திய பதிப்பு மே 1984
மூன்றாவது திருத்திய பதிப்பு டிசம்பர் 1993
நான்காவது திருத்திய பதிப்பு 1997
ஐந்தாவது திருத்திய பதிப்பு 2002
**உரிமை அறநிலையத்திற்கே**

**கிடைக்குமிடம்:**

**ஆதிபராசக்தி கல்வி, மருத்துவ, பண்பாட்டு அறநிலை**
மேல்மருவத்தூர்-603 319.

**அச்சிட்டோர்:**

**ஓம் சக்தி ஆப்செட் பிரிண்டர்ஸ்**
மேல்மருவத்தூர் - 603 319.
போன்: (044) 27529565

## பொருளடக்கம்

பக்கம்

1. அன்னை அருளிய உபதேசங்கள் 5
2. அன்னையின் அருள்வாக்கு 49
3. ஊழ்வினை 60
4. அடிகளார் 71
5. ஆன்மிகம் 102
6. பெண்கள் 238
7. தொண்டு நெறி 262
8. செவ்வாடைத் தொண்டர்களுக்கு 278
9. விஞ்ஞான முன்னேற்றம் 302
10. புலனடக்கம் – கட்டுப்பாடு 319
11. இன்றைய உலகின் நிலை 339
12. தான – தருமங்கள் 380
13. பக்தி – பக்தர்கள் 406
14. இயற்கை 437
15. தியானம் 501
16. இருமுடி 512
17. ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கம் 523
18. விழாக்கள் 528
19. ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றங்கள் 542
20. வேள்விப் பூசை, வழிபாடு 546
21. அன்னை அருளிய மருத்துவக் குறிப்புகள் 570

# 1. அன்னை அருளிய உபதேசங்கள்

**உ**பதேசங்கள் என்று கூறினவுடன் ஒரு குருவானவர் சீடனின் காதுக்கருகில் தம் வாயைக் கொணர்ந்து வைத்துக் கொண்டு ஒரு பட்டைப் போர்த்து மூடிக்கொண்டு ஏதாவது ஒரு மந்திரத்தை உபதேசஞ் செய்கின்ற செயல் யாவருக்கும் நினைவுக்கு வரும். மேல்மருவத்தூர் அன்னையின் உபதேசங்கள் இவ்வழியிலிருந்து சற்று மாறுபட்டவை.

சாதாரணக் குருமார்கள் உபதேசம் மனிதனுடைய அகவாழ்வு முன்னேற்றத்திற்கு மட்டுமே செய்யப்படுவது. உபதேசம் பெறுபவர் அந்த மந்திரத்தைக் குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட கிரியைகளுடன் தவறாமல் சொல்லி வருவாரானால் அவருக்கு ஆன்ம முன்னேற்றம் ஏற்பட அந்த உபதேச மந்திரம் வழி வகுக்கும் என்பது நம்பிக்கை.

## கீதையும் இந்நாட்டவரும் செய்த உபதேசம்:

இந்த வகை உபதேசத்திலிருந்து ஓரளவு மாறுபட்டது கீதாசாரியன் அர்ஜுனனுக்குச் செய்த உபதேசம். சாதாரணக் குருமார்கள் உபதேசஞ் செய்தால் அது அகவாழ்வுக்கு மட்டுமே பயன்படும் என்று கூறினோம். உபதேசம் பெற்றவர் எந்தத் தொழிலைச் செய்தாலும் எத்தகைய மனநிலையில் இருந்தாலும், எத்தகைய வாழ்க்கை வாழ்ந்தாலும் சாதாரணக் குருமார்கள் அதுபற்றிக் கவலைப்படுவதில்லை. அதிலிருந்து மாறுபட்டது கீதை உபதேசம். எவ்வாறு? மனிதனுடைய வாழ்நாள் முழுவதும் அகம் புறம் என்ற இரண்டிலும் எவ்வாறு வாழவேண்டும் என்று கூறுகிறது கீதை. கர்மயோகம் என்ற பெயரில் மனிதனுடைய முழு வாழ்வையும் வகைப்படுத்துகிறது கீதை.

ஒரு சுலோகத்தை மட்டும் குருட்டுப் பாடம் போட்டு தினம் ஆயிரம் முறை கூறுக என்று கீதை கூறவில்லை. வாழ்க்கை முழுவதையும் எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்று கூற வந்த கீதை, தொண்டு செய்வதை வாழ்க்கையில் பெரும் பேறாகக் கூறிச் சென்றது. யக்ஞம் என்று கீதையில் வரும் இடங்களில் எல்லாம் மக்கள் தொண்டு என்று பொருள் எழுதிச் சென்றார் மகாத்மா காந்தியடிகள். மக்கள் தொண்டு தான் மகேசன் தொண்டு என்று இந்த நாட்டில் தோன்றிய பெருமக்கள் பல காலமாகக் கூறிவந்துள்ளனர்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

என நாவரசர் பெருமானும்,

"நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின்

படமாடும் கோயில் பரமர்க்கு அங்கு ஆகும்"

எனத் திருமூலரும்,

"அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டு விட்டால்

இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே"

எனத் தாயுமானவர் என்ற சித்தரும் கூறிச் சென்றுள்ளமை கீதாசாரியன் கூறியதை இந்நாட்டுப் பெரியவர்களும் கண்டு கூறிப் போயினர் என்பதை உணர்த்தும்.

மருவத்தூர்ப் பெருமாட்டி இதையே ஒரு தொண்டரிடம் கூறும்பொழுது கூட "மகனே! என் கோவிலைப் பெரிது படுத்த வேண்டா. இருக்கின்ற கோயில்களையே ஒழுங்காக வைத்துக் கொள்ள முடியாத மக்களுக்கு மேலும் மேலும் கோவிலைக் கட்டித் தருவதில் பயனில்லை. இன்று ஏழை மக்களின் துயர் துடைப்பது தான் தலையாய கடமை" என்று கூறினாள். அந்தச் சொற்களை விடாமல் போற்றுகின்றவள் போலவே செயல் செய்ய ஆணை இடுகின்றாள்.

### யாவரும் கவலைப்படவில்லையே?

திருமண மண்டபம் கட்டி முடித்த பிறகு அதன்மேல் முதல் மாடி ஒன்றை 100x40 அடியில் கட்ட ஆணையிட்டாள். "மகனே! திருமணத்தில் கூடிக்களித்துச் செல்கின்ற மக்கட்கூட்டம வாழ்விழந்து விதவைகளாக நிற்கும் சகோதரிகளைப் பற்றி என்றாவது நினைத்ததுண்டா? எனவே அவர்கட்கு ஓரளவு வாழ்வளிக்க வேண்டும் என்ற காரணத்தால் இந்த முதல் மாடியை "விதவைகள் புனர் வாழ்வு இல்லமாக" ஆக்கப் போகிறேன். தையல் இயந்திரங்கள் சிலவற்றையும், பிளாஸ்டிக் கூடைகள் முதலியன பின்னுகின்ற கருவிகளையும் இதில் வாங்கிப் போட்டு அவர்கள் தம் கைகளை நம்பி வாழ வழி வகுக்கப் போகிறேன்" எனக் கூறினாள் இப்பெருமாட்டி.

### யாருக்கு மருத்துவமனை?

இந்த மண்டபத்திற்கு அடுத்தபடியாக மருத்துவமனையும், தொழிற் பயிற்சிப் பள்ளியும் அடுத்தடுத்துத் தோன்ற உள்ளன.



மருத்துவமனை கட்டவேண்டும் என்று கூற வந்த கருணைக்கடலாம் இவ்வன்னை, "மகனே! மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவம் முக்கிய இடம் பெறும்! வண்டி வைத்துக்கொண்டு வரக்கூடிய வசதி படைத்தவர்கள் தெற்கே அச்சிறுபாக்கத்திற்கோ அன்றி வடக்கே மதுராந்தகத்திற்கோ சென்றுவிட வாய்ப்புண்டு. வலி கண்டவுடன் எங்கும் மருத்துவமனையை நாடிச் செல்ல வாய்ப்பு இல்லாமல் என்னை நினைத்து, அம்மா! என்று கதறுகின்றவர்கள் இருக்கும் இடத்தை உங்களிடம் நான் கூறுவேன். நீங்கள் நோயாளியை அழைத்து வரும் ஆம்புலன்ஸ் வண்டியை எடுத்துச் சென்று வலியால் வாடும் அத்தாயை அழைத்து வந்து இலவச மருத்துவஞ் செய்து, பின்னர் இலவசமாக மருந்தும் தந்து வீட்டில் மறுபடியும் கொண்டு சேர்க்க வேண்டும்" என்று கூறினாள்.

### உண்டி கொடுத்தோர்:

சோறு போடுதல், துணி வழங்குதல், பள்ளிச் சிறார்க்கு உடை வழங்கல், புத்தகம், எழுத்துப் பலகை வழங்கல் என்பன இந்த அன்னை வருடத்தில் இருபது முறைக்கும் மேலாகச் செய்து வருகின்ற அறச்செயல்களாகும். எந்த விழாவாயினும் அன்னதானம் என்பது விழாவை விட முக்கியமான பணியாகும். ஆடிப்பூரம், நவராத்திரி, சித்திரா பௌர்ணமி, தைப்பூசம் போன்ற விழாக்களில் அன்னதானத்துடன் உடை வழங்கலும் தவிர்க்க முடியாத அருட்கொடையாகும்.

### அன்னதானம் எப்படிச் செய்வது?

அன்னதானம் என்பதை ஏதோ வடித்தோம், சோற்றை ஏழைகட்கு வழங்கினோம் என்று இப்பெருமாட்டி கருதவில்லை என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்துள்ளனர் ஆதிபராசக்தி கல்வி, மருத்துவப் பண்பாட்டு அறநிலையினர். 20.1.1980 அன்று தைப்பூச விழா ஏறத்தாழ நாலாயிரம் பேருக்கு அன்னதானம். சோறு மலை போல் வடித்துக் கொட்டப்பட்டுள்ளது. அண்டாக்களில் சாம்பார் சாதம், ஒரு கறி, தயிர்ச்சாதம் என்று கிளறி வைக்கப்பட்டுள்ளது. திருமண மண்டபத்தைச் சேர்ந்த சமையல் அறையில் இவை தயாரிக்கப்பட்டு உணவு உட்கொள்ளும் அறையில் வைக்கப்பட்டிருந்தன.

மதியம் பன்னிரண்டு மணியளவில் திடீரென்று அன்னை வந்துவிட்டாள். அத்தகைய விழா நாட்களில் அருள்வாக்குச் சொல்லும் பழக்கம் இல்லை. எனவே அன்னை வந்தவுடன் அறநிலையக் குழுக்கள் அன்னையைப் பின்தொடர்ந்தனர். திடீரென்று அன்னை சமையல் அறைப்பக்கம் வந்தது பலருக்கும் வியப்பைத் தந்தது.

அன்னை நேராகச் சோறு வடித்துக் கொட்டியிருக்கும் இடத்திற்கு வந்தாள். அன்பர்கள் அன்னையின் பின்னே வந்து நின்றனர். ஒரு அன்பரை முன்னே வரச்செய்த அன்னை, “மகனே! இந்த இடத்தில் சோற்றுப் பருக்கைகள் சிலவற்றை எடுத்து வாயில் போடு!” என்று ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினாள். அவர் அதனை எடுத்து வாயில் போட்டு மென்றார். ஏன் அன்னை இவ்வாறு செய்யச் சொல்கிறாள் என்று யாருக்கும் புரியவில்லை. அதே போல் மூன்று இடங்களை (அன்னக்குவியலின் இரண்டு மூலைகள், நடுப்பகுதி) சுட்டிக் காட்டினாள். அவரும் எடுத்து வாயில் போட்டார். “எவ்வாறு இருக்கிறது மகனே!” என்றாள் தாய். அன்பர், “தாயே! நடுப்பகுதியில் உள்ள சோறு வேகவில்லை” என்று கூறியவுடன் அனைவரையும் பார்த்து அன்னை “நீங்கள் அன்னதானம் என்று செய்வதால் எதை வேண்டுமானாலும் ஏழைகள் தலையில் கட்டலாம் என்று நினைக்கிறீர்கள் அல்லவா?” என்று கேட்டாள்.

## சாம்பார் சாதமா இது?

அன்பர்களுள் யாருக்கும் பதில் பேசும் தைரியம் இல்லை. அடுத்து ஒரு பெரிய கரண்டியை எடுத்து வருமாறு கூறினாள் தாய். கரண்டி வந்தவுடன் மற்றொரு அன்பரை விளித்து “மகனே! அண்டாவில் இருக்கும் சாம்பார் சாதத்தில் மேலாக ஒரு கவளத்தையும், கரண்டியை உள்ளே செருகி இடைப்பகுதியில் ஒரு கவளத்தையும், ஆழமாகத் திணித்து அடியில் இருக்கும் பகுதியில் ஒரு கவளத்தையும் எடுத்துத் தனித்தனியே உண்டு பார்!” என்று ஆணையிட்டாள்.

அன்பர் தின்று பார்த்துவிட்டு முகத்தைச் சுளித்தார். சாதம் நன்றாகக் கிளறப்படவில்லை. பத்துக்கு மேற்பட்ட சமையல்காரர்கள் இருந்தும் இது பக்குவமாகச் செய்யப் படாமைக்குக் காரணம் இரண்டு. ஒன்றாவது ஏழைகட்குப் போடப்படும் சோறுதானே என்ற அலட்சியம் சமையல்காரர்களுக்கு. இரண்டாவது அறநிலையக் காரர்கள் யாரும் இந்த அன்னதானப் பகுதிக்கு வந்து எல்லாம் செம்மையாக நடைபெறுகின்றனவா என்று கவனிக்கத் தவறிவிட்டமையும் ஆகும்.

பொதுவாக அன்னதானம் என்றால் சமைக்கின்றவர்களுக்கும் அதனைச் செய்கின்றவர்கட்கும் ஓர் அலட்சிய மனப்பான்மை வந்துவிடுவதைப் பல இடங்களிலும் காண்கிறோம். அன்னதானத்தில் சோற்றை வாங்கி உண்கின்ற ஏழைகள் அந்த உணவு சரியில்லை என்று கூறப்போவதில்லை! அப்படியே கூறினாலும் இலவசச் சாப்பாட்டில் குற்றம் வேறு காண்கிறாயா என்று மக்கள் அவர்களைக்



கடிந்து கொள்வார்கள். ஆகையினால் தான் அன்னதானம் என்பது ஓர் இழிநிலையை அடைந்து விட்டது. ஆதிபராசக்தியின் ஆணையால் நடக்கின்ற அன்னதானமும் இந்த நடைமுறைக்கு விலக்கல்ல. எனவே தான் அன்னை அறநிலை அன்பரை நல்வழிப்படுத்தவும், அவர்கள் தவற்றை எடுத்துக் காட்டவும், சமையலறைக்குத் தானே எழுந்தருளினாள்.

அது மட்டுமன்று. “ஏழைகள் தானே உண்கிறார்கள். உணவின் நிறை குறைகளை அவர்கள் எங்கே எடுத்துக் காட்டப் போகிறார்கள் என்ற எண்ணத்தில் தானே இவ்வாறு கவனக்குறைவாக இருந்துவிட்டீர்கள்? அவர்கள் ஏழைகளாக இருக்கலாம். ஆனால் பசியும் வயிறும் அவர்களுக்கும் உங்களுக்கு உள்ளவை போலவேயாகும்” என்றும் அறிவுறுத்தினாள்.

அத்தகைய உபதேசத்தை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் ஓர் அம்மையார் செய்தார். அவர் பெயர் மணிமேகலை. பிற உயிர்களையும் தம் உயிர்போல பாவித்து அவர்கள் துயர் துடைக்க வேண்டும் என்பது அன்னையின் தலையாய உபதேசமாகும்.

## தனித்தனிப் பொறுப்பாளர்கள்:

உணவு படைப்பதைப் பற்றிப் பேசும்பொழுது இதன் தொடர்பாக அன்பர்கள் சிலருக்கு அன்னை மற்றொரு நாள் உபதேசஞ் செய்ததை இங்கு நினைவு கூர்தல் பயனுடையதாகும்.

ஆடிப்பூரம், அன்னையின் கோவிலில் நடைபெறும் விழாக்களில் எல்லாம் மிக மிக முக்கியமானதாகும். கூட்டமும் மிக மிக அதிகமாக இருக்கும். மூன்று நாட்கள் திருக்கோவில் மிகப்பெரிய அளவில் விழாக்கோலம் கொண்டிருக்கும். அன்னதானம் மிக விரிவான முறையில் நடைபெறும். எனவே சமையல் சாமான்கள் வாங்க ஒருவர், சரக்குகள் வைக்கும் (உக்ராணம்) அறைப் பொறுப்பாளி ஒருவர், சமையலை மட்டும் கவனிக்க ஒருவர், உணவை வழங்கும் பகுதிக்கு ஒருவர் என அன்னை பலருக்கும் பணிகளைப் பிரித்துக் கொடுத்திருந்தாள். இவர்கள் ஒவ்வொருவர் கீழும் பல தொண்டர்கள் பணியாற்றி வருவர்.

ஆடிப்பூரம் என்றால் மூன்று நாட்கள் பல அபிடேகங்களும், பலவகை அலங்காரங்களும், பல பூசைகளும் நடைபெறும். எனவே, எந்த இடத்தில் எந்தப் பணியை ஆற்றுகின்றவர்களும் பூசை நேரங்களில் பூசையைக் காண வேண்டும் என்று நினைப்பதும், எங்கிருந்தாலும் சன்னதிக்கு அந்த நேரங்களில் ஓடிவருவதும் சகஜமான செயல்கள் ஆகும்.

## மறக்கக்கூடாத உபதேசம்:

5.8.1980 செவ்வாய்க்கிழமையன்று அடுத்து வரப்போகும் ஆடிப் பூரத்திற்குச் செய்ய வேண்டிய பணிகட்குப் பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியை அன்னை ஆதிபராசக்தி தொடங்கினாள். சரக்கறை, சமையல், விநியோகம், பாதுகாவல் என்ற நான்கும் மிக இன்றியமையாத பகுதிகள் அல்லவா? இவற்றிற்கு உரிய பொறுப்பாளர்களை முதலில் நியமித்துவிட்டுத் தண்ணீர் வசதி, விளக்குகள், மின்சாரம், சொற்பொழிவு மேடை முதலிய பிறவற்றிற்கும் பொறுப்பாளர்களை நியமித்தாள்.

எல்லாவற்றையும் விட முக்கியமானவை கலசபூசை, யாகம் என்பவையாகும். அவற்றிற்கும் இளைய அன்பர் ஒருவரை நியமனம் செய்தாள். இறுதியாக அனைவருக்கும் சேர்த்து எவ்வாறு தத்தம் கடமைகளை அவர்கள் செய்யவேண்டும் என்று கூறிய அறிவுரைகள் (உபதேச மொழிகள்) என்றும் மறக்கற்பாலன அல்ல. அங்கு இப்பணிகளை மேற்கொண்டவர்களுக்கு மட்டுமே இந்த அறிவுரைகள் பொருந்தும் என்பதில்லை. உலகின் எல்லாப் பாகங்களில் வாழும் எல்லாருக்கும் எல்லாக்காலத்திற்கும் இந்த அறிவுரைகள் பொருந்தும்.

## நான் அங்கே இருக்கமாட்டேன்:

“இப்பொழுது உங்கள் அனைவருக்கும் ஒவ்வொரு பணியைக் குறித்துக் கொடுத்துவிட்டேன். அந்தந்தப் பணிக்கு அவரவர் முழுப் பொறுப்பாக இருத்தல் வேண்டும். இவ்வாறு கூறிவிட்டமையின் தத்தம் பணிகள் தவிர அடுத்தவர் அழைத்தால் இது என் பணி இல்லை என்று ஒதுக்கிவிட வேண்டா. ஒன்றுடன் ஒன்று கலந்து பணிகள் செய்யப் பெற்றால்தான் முழுத்தன்மை உடையனவாக இருக்கும். எனவே அவரவர் பணியில் முழுக்கவனத்தையும் செலுத்திச் செய்யவேண்டும்.

இதில் மிக மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. பெரிய விழாவாகலின் கோவிலுக்குள் ஓயாத அபிடேகம், ஆராதனை, அருச்சனை, தூபதீப அலங்காரங்கள் என்பவை நடைபெற்றுக் கொண்டே இருக்கும். அங்குள்ளவர்கள் அதில் ஈடுபட்ட பாவனையில் உச்சஸ்தாயியில் “ஓம் சக்தி” என்று கத்துவார்கள். அதில் எதையேனும் பார்க்க வேண்டும் என்றோ அல்லது என்னையே தரிசிக்க வேண்டும் என்றோ யாரும் அங்கே செல்லக் கூடாது.

ஒரு வினாடி கூட உங்களுக்கு இட்ட பணியை விட்டுவிட்டுத் தரிசனம் செய்து விட்டு வரலாம் என்று ஒருவரும் எக்காரணத்தைக் கொண்டும் செல்லக்கூடாது. ஏன் தெரியுமா? நீங்கள் அங்கே



தரிசனம் செய்யச் சென்றால் நான் அங்கே இருக்க மாட்டேன். எவன் ஒருவன் நான் இட்ட பணியைத் தலைமேல் தாங்கி அந்த இடத்திலேயே இருந்துகொண்டு பணியை ஆற்றுகிறானோ அவனிடமே நான் இருப்பேன். எனவே பணி செய்யும் இடத்தில் இருக்கும் என்னை விட்டு விட்டுக் கோவிலுக்குள் சென்று தேடவேண்டா!” இவ்வாறு கூறிய அன்னை சமையல் நடைபெறுவதைக் கவனிக்கிற இருவரையும் நோக்கி மறுபடியும் கூறத்தொடங்கினாள்.

## சோற்றுப்பானைக்குள் என்னைக் காணலாம்:

“நீங்கள் இருவரும் மிக முக்கியமான பணியில் ஈடுபட்டிருக்கின்றீர்கள். சரக்கு அறையில் இருப்பவன் அதை விட்டு வெளியே வரத்தேவை இல்லை. எந்த நேரத்திலும் எந்தப் பொருள் வேண்டுமென்றாலும் உடனே எடுத்துக் கொடுக்கத் தயாராக இருத்தல் வேண்டும். சமையலைக் கவனிப்பவன் அந்த இடத்தை விட்டு வெளியே செல்லக் கூடாது. சிறுநீர் கழிக்க வெளியே செல்வது தவிர இருபத்து நான்கு மணி நேரமும் அதே இடத்தில் தான் இருத்தல் வேண்டும்.

கோவிலில் நடக்கும் பூசை, தூபதீபம் முதலியவற்றைக் காணச் செல்ல வேண்டா. அங்கே ஏன் போகப் போகிறாய்? மகனே! என்னைப் பார்க்க வேண்டும் என்றுதானே மணிச் சத்தம் கேட்டவுடன் ஓடிச் செல்லவேண்டும் என்று நினைக்கிறாய்? நான் இப்பொழுதே உனக்குக் கூறுகிறேன். மணி அடித்துத் தூபதீபம் காட்டும் அந்த இடத்தில் நான் இருக்க மாட்டேன். என்னைப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிற நீ, நான் இல்லாத இடத்திற்கு ஏன் ஓட வேண்டும்? நான் எங்கே இருப்பேன் என்று கேட்கிறாயா? 10 படி அரிசி கொதித்துச் சோறாக மாறும் தவலை அடுப்பில் இருக்கிறதல்லவா? 500 பேருடைய வயிற்றைக் குளிரச் செய்யப் போகிற சோறு கொதிக்கின்ற அந்தத் தவலைக்குள் குனிந்து பார்! அதனுள் நான் இருப்பேன்! ஏழைகளின் வயிற்றைக் குளிரச் செய்யும் சோறு கொதிக்கும் தவலையே என் இருப்பிடமாக இருக்கும். உண்மையாகவே என்னைக் காண விரும்பினால் அதனுள் தான் காணலாம். ஆம்! என் ஆணையைச் சிரத்தின் மேல் தாங்கி அதனை நிறைவேற்றுவதில் இம்மியளவும் கவனக்குறைவு இல்லாமல் எவன் நிறைவேற்றுகின்றானோ அவனிடம் நான் தங்கியுள்ளேன்.

கடமையைச் செய்வதில் கண்ணுங்கருத்துமாக இருப்பவன் என்னைத் தேடி வேறு எங்கும் செல்ல வேண்டிய தேவை இல்லை. எங்கே அவன் கடமையை நிறைவேற்றுகின்றானோ அங்கேயே நான்

இருப்பேன்'' என்று கூறி முடித்தாள் மருவத்தூரில் குடிகொண்டு ஏழை எளியவர்களின் துயர்துடைக்க முன்னிற்கும் அருள்நிறை அன்னை ஆதிபராசக்தி.

**ஒவ்வோர் உடம்பும் இறைவியின் கோவில்:**

அன்னயின் இந்த உபதேச மொழிகளில் நம் கருத்தைக் கவர்கின்ற முக்கியமான பகுதி இருக்கிறது என்பதை மறவாமல் மனத்தில் பதிக்க வேண்டும்.

இத்தனை காலமாக நம் முன்னோர் கூறிய தொண்டு மனப்பான்மையை நாம் மறந்துவிட்டு வெறும் ஆடம்பரம், படாடோபம், கிரியைகள் என்பவற்றில் பொழுதைக் கழிக்கத் தொடங்கிவிட்டோம். இறையன்பு இல்லாமல் வாழ்பவன் விலங்குக்குச் சமமாவான். ஆனால் இறையன்பை வெறும் பூசை, தூபதீபம் என்பவற்றில் மட்டும் காட்டினால் போதாது. ஒவ்வோர் உயிரும் இறைவன் குடியிருக்கும் ஆலயம் அல்லவா?

''உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்''

என்று திருமூலரும்

''என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே''

என்று நாவரசர் பெருமானும்

''எம்பெருமான் நடம்புரியும் இடம் என நான் தேர்ந்தேன்''

என்று வள்ளலாரும் பாடிச் சென்றனர். ஒவ்வோர் உடம்பும் இறைவன் உறைகின்ற ஆலயம் என்றால் பிற உயிர்கள் அனைத்தையும் மதித்து நடத்தல் வேண்டும். பிற உயிர்களுக்கு வரும் துன்பங்களைப் போக்க முயலவேண்டும். இதனையே வள்ளுவப் பேராசான்

''அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்
தன்னோய்போல் போற்றாக் கடை''

என்று கூறினார்.

எனவே, மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் தலையாய கடமை யாது எனில் பிற உயிர்களின் துன்பத்தைப் போக்க முயல்வதேயாகும். அதுவே பெரும் பூசையாகும். அதனைச் செய்பவன் வேறு பூசையில் ஈடுபட வேண்டா. அவன் வாழ்நாள் முழுவதும் இருபத்திநான்கு மணி நேரமும் அவன் பூசை செய்ததாகவே கருதப்பெறும். உழைப்பே இறைவனை அடையும் வழி என்றுதானே கண்ணனும் கூறுகிறான்? இடைக்காலத்தில் நாம்



மறந்துவிட்ட இந்த மாபெருந் தத்துவத்தை அன்னை ஆதிபராசக்தி ஓயாமல் நினைவூட்டுகிறாள். கோவிலில் சென்று வழிபடுவதும் வேண்டும். அதனைவிட அதிகமாகப் பிறருக்காக உழைக்கவும் வேண்டும். ஏழைகளின் துயர் துடைக்க முன்னிற்பவன் வேறு பூசைகளில் ஈடுபடக் கூடத் தேவையில்லை. அன்னை வலியுறுத்திக் கூறும் இந்தக் கருத்தை இரவீந்திரநாத் தாகூர் தம் கீதாஞ்சலி என்ற கவிதை நூலில் மிக விரிவாகவும் கூறுவதைக் காணலாம்.

''மந்திரங்களை முணுமுணுப்பதையும், பாடல்கள் பாடுவதையும், உருத்திராட்ச மாலை உருட்டுவதையும் சற்று நிறுத்துங்கள்! இந்த இருண்ட தனி அறையில் கதவுகளை மூடிக்கொண்டு யாரை நினைத்துப் பூசை செய்கிறீர்கள்? உங்கள் கண்களைத் திறந்து பாருங்கள்! நீங்கள் வழிபடும் தெய்வம் அங்கே இல்லை என்பதை அறிவீர்கள்.

ஏர் உழுபவன் கடினமான தரையை எங்கெங்கே உழுகின்றானோ, சாலை போடுபவன் எங்கே கற்களை உடைக்கின்றானோ அங்கே உள்ளான் நீங்கள் காண விரும்பும் கடவுள். வெயிலிலும், மழையிலும் தூசுபடிந்த உடையுடன் அவர்களுடன் இருக்கிறான் ஆண்டவன். உங்கள் மடியான ஆடையைக் களைந்துவிட்டு உங்கள் ஆண்டவனைப் போலவே நீங்களும் புழுதிபடிந்த தரைக்கு வாருங்கள்.

விடுதலையா? எங்கே இருக்கிறது அந்த விடுதலை? நாம் வணங்கும் நம் ஆண்டவனே கூடப் படைப்புத் தொழிலை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டுள்ளானே! நம்முடன் இன்றைக்கும் என்றைக்கும் தொடர்பை ஏற்றுக் கொண்டுள்ளானே அவன்!

கண்மூடிச் செய்யும் தியானத்திலிருந்து வெளியே வாருங்கள்! பூவையும், நறும்புகையையும் சற்று விட்டு வாருங்கள். உங்கள் உடைகள் கிழிந்து கறைபட்டால் என்ன ஆகிவிடும்? உங்கள் ஆண்டவனைச் சந்தித்து அவன் பின்னேயே, நெற்றி வியர்வை நிலத்தில் விழ நில்லுங்கள்''

(கீதாஞ்சலி பா-11)

அன்னை அன்பர்கட்குச் செய்யும் உபதேசத்தைக் கவிஞர் தாகூர் அவர்கள் தம் கவிதையில் பிழிந்து தந்துள்ளார். அருள்வாக்கு நடைபெறும் நேரங்களில் கூட ஏழைகள் தான் முதலில் வரவேண்டும் என்று கட்டளை இடுகிறாள் அன்னை. அவர்கட்காக அவள் காட்டும் பரிவு அளவிடற்கரியது!

## பணி செய்வதே தவமாம்:

ஜப தவங்கள் செய்வதை விட்டு வெளியே வருக என்று தாகூர் பாடுவதைப் பார்க்கும் அதே நேரத்தில் அன்னையிடம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வருகிறது. சென்ற செப்டம்பர் (1980) மாதத்தில் ஒரு நாள் நன்கு கற்றுத் தேர்ந்து, நல்ல பதவியையும் வகித்து அதிலிருந்து ஓய்வும் பெற்ற ஓர் அம்மையார் அன்னையைக் காண வந்தார்.

“மகளே! பெரிய கவலையுடன் வந்திருக்கிறாய்! உனக்கு என்ன வேண்டும்? தாராளமாகக் கேள் மகளே!” என்று கருணை ததும்பும் குரலில் அன்னை அந்த அம்மையாரைப் பார்த்துக் கூறினாள்.

அந்த அம்மையார் “தாயே! எந்த உலக விஷயம் பற்றியும் கேட்கவேண்டுமென்று நான் வரவில்லை என்பதை நீ நன்கு அறிவாய்! பிள்ளை, குட்டிகள், வீடு, செல்வம் என்பவற்றைப் பற்றிக் கேட்க நான் வரவில்லை. இத்துணை வயதாகியும் ஒரு குறிப்பிட்ட தியானம், மந்திரம், பூசை என்ற எதுவும் செய்யாமல் நான் இருந்து வருகிறேனே! இது சரியென்று படவில்லை. வாழ்நாளில் எஞ்சியுள்ள நாளையும் வீணாகக் கழித்துவிட்டுச் செல்ல நான் விரும்பவில்லை. எனக்கு ஏதாவது ஒரு வழிகாட்டுவாய் என்ற நம்பிக்கையுடன் உன்னை வந்து அடைந்துள்ளேன்” என்று கூறினார். அதற்கு அன்னை கூறிய விடை தாகூரின் பாடலை நினைவூட்டுவதாக உள்ளது.

“மகளே! இதுவரை நீ உன் குடும்பத்தையும் பார்த்துக் கொண்டு ஓர் பதவியையும் வகித்து உன் கடமைகளை நிறைவேற்றினாய். அவையெல்லாம் வீணாகக் காலங்கழித்தலாக நீ கருதுவது சரியன்று. ஒரு மூலையில் இருந்து கொண்டு ஏதாவது ஒரு மந்திரத்தை நீ முணுமுணுப்பதுதான் நீ முன்னேற வழி என்று நீ கருதுவது தவறு. இதன் எதிராக எல்லா நேரமும் மக்கட்பணி செய்வதும் முன்னேற்றத்திற்கு ஒரு வழியாகும் என்பதை மறந்து விடாதே. நீ செய்ய முடியாத அளவுக்கு உனக்குப் பணிகள் வைக்கப் போகிறேன். உன் கவனம் முழுவதையும் அதில் செலுத்தி அந்தப் பணிகளை நிறைவேற்றுவாயானால் அதை விட நீ கருதும் முன்னேற்றத்திற்குச் சிறந்த வழி எதுவும் இருக்க முடியாது. கவலைப்படாமல் இரு. மிக விரைவில் உனக்கு வேண்டுமான பணிகள் வைக்கப் போகிறேன்” என்று திருவாய் மலர்ந்தாள் அன்னை.

## பழைய நம்பிக்கைகள் தடையாக உள்ளன:

ஆன்மிக வழிகளை நாடி வருபவர்களிடம் அன்னை



வழிகாட்டாமல் விடுவதில்லை. இதில் தொல்லை எங்கே வருகிறது என்றால், வருபவர்கள், சில அடிப்படையான பழைய நம்பிக்கைகள், கொள்கைகள் என்பவற்றில் அளவுகடந்த உறுதிப்பாட்டுடன் வருகின்றனர். அவர்களைப் பொறுத்த மட்டில் ஆன்ம முன்னேற்றம் என்றால் அது குறிப்பிட்ட வழியில் தான் இருக்க முடியும் என்று உறுதியாக நம்புகின்றனர். எனவே அன்னை வேறு ஏதாவது ஒரு வழியைக் கூறியவுடன் அவர்கள் நம்பிக்கை கொள்ள மறுக்கின்றனர். பரம்பரை பரம்பரையாக வருகின்ற நம்பிக்கைகளை அவ்வளவு சுலபமாக எறிந்துவிடுவதும் கடினந்தான்.

## அன்னையிடம் பக்தி, ஆனால் சோதிடமும் பார்க்கலாம்:

அன்னையிடம் வந்து பயன்பெற வேண்டுமானால் தளராத நம்பிக்கையும் சரணாகதி மனப்பான்மையும் இருத்தல் வேண்டும். இந்த நம்பிக்கையும் சரணாகதி மனப்பான்மையும் இல்லாமையால் அன்னையிடம் வந்த பிறகும் பிறரை நாடிச் செல்வதும், பிறரிடம் குறிகேட்கச் செல்வதும், ஜோஸ்யம் பார்க்கப் போவதும் நடைபெறுகின்றன. அன்னையிடம் உறுதியான நம்பிக்கை தனக்கு உண்டு என்று அன்னையிடமே ஓர் அன்பர் கூறினார். தாய் உடனே “ஆம் மகனே! என்னை மிக உறுதியாக நம்புகிறாய்! கோவிலை விட்டுச் சென்றதும் கைரேகை பார்ப்பவனிடம் சென்று கையைக் காட்டுகிறாய்!” என்று அன்னையே கேலியாகக் கூறியதும் உண்டு. பல இடங்களில் நடைபெறும் குறி சொல்வதையும் இதனையும் ஒன்று எனக் குழம்பிக் கொண்டு பலர், “இன்ன இடத்தில் குறி கேட்கப் போனேன் சார்! மருவத்தூரில் இருப்பவள் எனக்கு அக்காளாக வேண்டும்; நான் அவளுடைய தங்கைதான்” என்று அங்கே குறியில் கூறினார்கள் என்று பேசுகிறவர்கள் இன்றும் உண்டு. அன்னை ஆதிபராசக்திக்கு அக்கா, தங்கை கற்பிக்கின்றோமே என்ற ஐயங்கூட இவர்கள் மனத்தில் தோன்றுவதில்லை. காரணம் யாது? தாங்கள் விரும்பி வந்த காரியம் உடனே முடியாத காரணத்தால் அடுத்த இடம் செல்வதும் எங்கேயாவது தான் விரும்புவது உடனே கிடைத்துவிடாதா என்ற ஆதங்கமுந்தான்.

## சட்டி சுட்டதடா!

அன்னையின் சொற்களில் அசையாத நம்பிக்கை ஏற்பட்டால் ஒழிய அவளிடம் செல்வதன் முழுப்பயனை அடைய முடியாது. இவ்வாறு கூறினவுடன் நம்பிக்கை உள்ளவர்கள் மட்டுமே இங்குச் செல்லவேண்டும் போல் இருக்கிறது என்று யாரும் நினைத்துவிட வேண்டா. சாதாரண உலகியல் விஷயங்களைப் பற்றிக் கேட்க வருகின்றவர்களுக்கு இத்துணை நம்பிக்கை தேவை இல்லை.

அவர்கள் கருதி வரும் தேவைகளை அன்னை உடனே பூர்த்தி செய்துவிடுகிறாள். இன்றேல் இத்துணை முறை அங்கப்பிரதட்சணம் செய்க, இத்துணை எலுமிச்சம் பழத்தோலில் விளக்கிடுக என்று ஏதோ சில பரிகாரம் கூறுகிறாள். அவர்களும் குறை தீர்ந்தவுடன் ''சட்டி சுட்டதடா! கை விட்டதடா!'' என்ற முறையில் அன்னையை மறந்து விடுகிறார்கள்.

## இவர்கள் விரும்புவது வேறு:

ஆனால், ஆன்மிகத் துறையில் முன்னேற வேண்டும் என்று அன்னையிடம் வரும் ஒரு சிலரைப் பொறுத்தமட்டில் முழு நம்பிக்கையும் அதன் விளைவாகிய சரணாகதியும் அவசியம் தேவை. ஒரு நாள் இரண்டு அன்பர்களுக்கு அன்னை கூறிய உபதேச மொழிகள் பின்வருமாறு: இருவர் இருப்பினும் அன்னையின் சொற்கள் குறிப்பாக ஒருவருக்கே பேசப் பெற்றன. என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். அன்னை கூறினாள்:

''மகனே! என்னை நினைத்துத் தியானம் செய்ய உட்காருகிறாய். கண்ணை மூடியவுடன் காட்டில் இருக்கின்ற உணர்ச்சி தோன்றுகிறது. புலி, சிங்கம், சிறுத்தை முதலியன (உலகத் துன்பங்கள்) உன்னையே தின்றுவிடத் தயாராய் இருப்பது போல் உன்னையே பார்த்துக் கொண்டிருக்கின்றன. காரணம் என்ன தெரியுமா? என் மேல் கொண்டுள்ள பக்தி உறுதிப்படவில்லை. ஆகையால் இந்தக் கொடிய வனவிலங்குகள் உன் மேல் பாய நேரம் பார்த்துக் கொண்டிருப்பதை நீ அறியமுடிகிறது. என்மேல் உறுதியான நம்பிக்கையுடன் கண்ணைத் திறந்து பார்! அந்த வனவிலங்குகள் ஓடிவிட்டன என்பதை நீயே அறிய முடியும். என்மேல் உள்ள பக்தி உறுதிப்படப்பட இவ்வுலகப் பிரச்சனைகள் என்ற வனவிலங்குகள் ஓடி ஒளிந்து கொள்ளும் என்பதை நீயே உணர முடியும். பக்தியையும், நம்பிக்கையையும் எப்படி உறுதிப்படுத்துவது என்று வினவ விரும்புகிறாயா? இதோ கூறுகிறேன்.

## காக்கும் பொறுப்பு அவளுக்கு:

அன்னையின் முன் நிற்கும் உன்னைப்பார்த்து, ''மகனே! இந்தக் கிணற்றில் உடனே விழுந்துவிடு என்று கூறுகின்றேன் என்று வைத்துக்கொள். ஒரு வினாடி கூடத் தாமதிக்காமல் அன்னையின் ஆணை என்ற கருத்தில் கண்ணை மூடிக்கொண்டு கிணற்றில் குதித்தால் நான் என்ன செய்வேன் தெரியுமா? கிணற்றில் நூறு அடித் தண்ணீர் இருப்பினும் அதனைக் கானல் நீராக மாற்றிக் கீழே பஞ்சு மெத்தை விரித்து நீ விழும் பொழுது எவ்வித இடையூறும்



நேராதபடிக் காப்பேன். ஏன் தெரியுமா? என்னுடைய ஆணையை நிறைவேற்றுகிறாய். நீ என் ஆணையின் பலாபலன்களைப் பற்றிச் சிந்திக்காமல் ஆணையை உடனே நிறைவேற்றினால் உன்னைக் காக்க வேண்டிய பொறுப்பு எனதாகிவிடுகிறது. எந்த நிலையிலும் உன்னை எப்படியாவது காப்பாற்றியே தீருவேன். என்னை முழுவதுமாக நம்பினவர்களை எந்த நிலையிலும் நான் கைவிட மாட்டேன். முழுவதுமாக என்னைச் சரண் அடைந்து விட்டவனுடைய குடும்பமும் என் பொறுப்பில் வந்து விடுகிறது. என்னைச் சரணம் அடைந்துவிட்ட ஒருவன் காரணமாக அவன் குடும்பம் முழுவதையும் தாங்குகிறேன். இதை மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இதன் எதிராக, மகனே! அன்னை ஆணை இட்டுவிட்டாள். எப்படியும் கீழ்ப்படியத்தான் போகிறேன்; கிணற்றில் விழப்போவது உறுதிதான், என்றாலும் விழுவதன் முன்னர்க் கிணற்றை எட்டிப்பார்த்து விட்டு விழுவாயேயானால் நான் கைவிட்டுவிடுவேன் மகனே! காரணம் என்மேல் உள்ள நம்பிக்கையைவிட உன்னையே நீ காத்துக் கொள்ளும் தற்காப்பு உணர்ச்சி அதிகமாக உள்ளது. உன் அறிவின் துணை கொண்டு நீ கிணற்றின் ஆழம், உயரம் முதலியவற்றை ஆராயத் தொடங்கிவிட்டாய் அல்லவா? இவ்வாறு ஆராயவில்லை தாயே! சும்மாதான் கிணற்றை எட்டிப்பார்த்துவிட்டு விழ முடிவு செய்திருந்தேனே! இது நீ அறியாததா? என்று கேட்டுப் பயனில்லை. உன்னுடைய தற்காப்புணர்ச்சி தொழிற்படத் தொடங்கியவுடன் நான் அங்கு வருவதில்லை'' என்று விளக்கம் தந்தாள்.

## சரணாகதித் தத்துவம்:

இந்த உபதேசம் சரணாகதியின் தத்துவத்தை நுணுக்கமாகவும் விளக்கமாகவும் விவரிக்கின்ற அழகைக் காண்கிறோம். சரணாகதியில் அரைக்கிணறு, முக்கால் கிணறு தாண்டும் தன்மை இல்லை. ஒன்று அன்னையிடம் முழுவதுமாக ஒப்படைத்துவிடு. 'அன்றே என்றன் ஆவியும் உடலும், உடைமை எல்லாம் குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ?'' என்பது மணிவாசகரின் திருவாசகம். சரணாகதி என்பது ஆவி, உடல், பொருள் என்ற மூன்றையும் அவளிடம் ஒப்படைப்பதற்கு மறுபெயராகும்.

பழங்காலத்தில் பெரியவர்களைக் கண்டால் வணங்குவதற்குப் பெயர் ''தண்டன் இடுதல்'' என்பதாகும். தண்டன் இடுதல் என்ற சொல்லுக்குப் பொருள் யாது? தண்டு என்ற சொல் நீளமான கம்பை (மூங்கில் கம்பு)க் குறிக்கும். இந்த நீளமான தண்டு அல்லது தண்டினைப் பிடித்திருப்பவர் கையை எடுத்துவிட்டால் உடனே

தண்டு என்ன செய்கிறது? எவ்விதமான தடங்கல் அல்லது இடையூறு இல்லாமல் எப்படிக் கீழே திடீரென்று விழுகிறதோ அதே போலப் பெரியவர்களைக் கண்ட மாத்திரத்தில் கீழே விழுந்து வணங்க வேண்டும். அதனாலேயே அதற்குத் தண்டன் இடுதல் எனப் பெயர் வந்தது. இவ்வாறு தண்டுபோல் தனக்கென ஒன்றும் இல்லாமல் விழுந்து சரணாகதி அடைந்தவர்களை எப்படியும் காப்பாற்றியே தீர வேண்டிய பொறுப்பு அன்னையுடையது.

அன்னையின் இந்தச் சொற்கள் கீதையின் 10-வது அத்தியாயத்தின் 66-வது சுலோகத்தை நினைவுகூரச் செய்கிறது. "ஸர்வதர்மான் பரித்யஜ்ய" என்று தொடங்கும் இந்தச் சுலோகம் இதே கருத்தை எதிரொலிக்கின்றதை அறியலாம்.

### காந்தமும் இரும்பும்:

மற்றோர் நாள், பிறிதோர் அன்பருக்கு அன்னை பின்வருமாறு உபதேசம் செய்தாள். "மகனே! காந்தம் இருக்கிறதல்லவா? அது தன் எதிரே வரும் இரும்பு ஊசியை ஈர்த்து விடுகிறது. இனி அந்த ஊசியைத் தொட்டுக் கொண்டிருக்கும் மற்றோர் ஊசியும் இழுக்கப்படுகிறது. இப்படியே நான்கு ஐந்து ஊசிகளைக் கூட இழுக்க முடிகிறது. இப்பொழுது காந்தத்தைத் தூக்கி நிறுத்தினால் அதில் ஒட்டிக் கொண்டிருக்கும் ஊசிகளும் தொங்குகின்றன. இரும்பு, ஊசியைத்தான் இழுக்கிறதே என்று கூறிக்கொண்டு அடுத்திருக்கும் ஊசியின் பக்கத்தில் இதனைக் கொண்டு போனால் அதை இழுக்கவில்லை. இரும்பை ஏன் காந்தம் இழுக்கவில்லை என்று அதிசயப்பட்டுப் பக்கத்தில் சென்று ஊசியைச் சோதனை செய்தால் உண்மை விளங்குகிறது. அது ஊசிதான்; இரும்பு தான்; ஆனால் முற்றிலும் துருப்பிடித்து விட்டது. வடிவம் தான் இரும்பு ஊசியின் வடிவமே தவிர அதன் இரும்புத் தன்மை என்றோ அழிந்துவிட்டது. எனவேதான் காந்தம் அதனை இழுக்கவில்லை. இந்தத் தத்துவத்தை நன்கு புரிந்து கொள்க" என்பது அவள் தத்துவ போதனை.

### விளக்கம்:

இந்த ஊசி-காந்தப் பிரச்சனையைக் கொஞ்சம் அமைதியாக ஆராய்ந்தால் ஒழிய அன்னையின் தத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியாது.

இங்குக் காந்தம் என்பது அன்னையின் அருட்சக்திதான். அதனால் இழுக்கப்படும் இரும்பு ஊசி ஆன்மாக்களாகிய மக்கள் கூட்டம். உண்மையைக் கூறவேண்டுமானால் காந்தம் இரும்பு ஊசியைத்தான் இழுக்குமே தவிர ஊசி வடிவத்துடன் உள்ள பிற உலோகங்களையே, மரத்தையோ இழுக்காது.



அதேபோல மக்கள் வடிவில் உள்ள அனைவரையுமே அன்னை இழுப்பதில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில் மக்கள் வடிவுதான் உள்ளதே தவிர மக்கட்பண்பு இல்லை. எனவே அன்னையிடம் இழுக்கப்பட முடியாது. துருப்பிடித்த இரும்பையும் இழுக்கமுடியாது. துருப்பிடித்த ஊசி ஒரு காலத்தில் இரும்பாக இருந்தது உண்மை. அப்பொழுது காந்தத்தால் ஈர்க்கப்படும் இயல்பு அதனிடம் இருந்தது. ஆனால் இடையில் ஏறிய துரு இரும்பின் தன்மையையே மாற்றிவிட்டது. ஆகவே வடிவத்தால் ஊசியைப் போல் இருப்பினும் இரும்பின் இயல்பை இழந்து விட்டமையின் அதைக் காந்தம் இழுப்பதில்லை!

மனிதர்களுள்ளும் சிலர் மனித இயல்பை இழந்த நிலையில் உள்ளனர். வடிவால் மனிதர்களாக இருப்பினும், இயல்பால் மனிதத் தன்மையை இழந்தவர்களாதலின் அன்னை அவர்களைத் தன்பால் ஏற்றுக் கொள்வதில்லை என்பதே இதன் கருத்தாகும்.

முதல் ஊசி காந்தத்துடன் ஒட்டிய பிறகு மற்றோர் ஊசியை இழுக்கும் சக்தி முதல் ஊசிக்கு எவ்வாறு கிடைக்கிறது? காந்தம் தனது இழுக்கும் சக்தியில் ஒரு சிறுபகுதியை முதல் ஊசிக்குத் தருகிறது. அந்த சக்தியைக் காந்தத்திடமிருந்து பெற்ற முதல் ஊசி தானும் காந்தத்தைப் போல ஆகி அடுத்த ஊசியை இழுக்கிறது. இதன் தத்துவம் அன்னையிடம் அடைக்கலமாக வந்து அவள் திருவடியில் நின்று பணிபுரிகின்றவர்களுக்கு அவள் ஆற்றலைத் தருகிறாள் என்பதாகும். அந்த ஆற்றலை வைத்துக்கொண்டு அவர்கள் கூட ஒருசிலவற்றைச் செய்ய முடிகிறது. ஆனால் முதல் ஊசி எவ்வளவு நேரம் காந்த சக்தியைப் பெறுகிறது? காந்தத்துடன் ஒட்டிக்கொண்டு இருக்கிற வரையில்தான். அதேபோல் அன்னையின் திருவடியில் ஒட்டிக்கொண்டு இருக்கிறவரைதான் நமக்கு ஆற்றல் கிடைக்கிறது.

ஏதோ நமக்கும் அந்த ஆற்றல் வந்துவிட்டது என்று கர்வங்கொண்டு அன்னையின் திருவடிகளை மறந்தால் அந்த ஆற்றல் நம்மை விட்டு நீங்கிவிடும் என்பதையும் மறந்துவிடக்கூடாது. அன்னை செய்யும் உபதேசங்களை ஓய்வாக இருந்து சிந்தித்தால் நாம் அடையக்கூடிய பயன் அளவிடற்கரியது.

### பின் சந்ததியாருக்கு:

அன்னை செய்யும் உபதேசங்கள் அனைத்தையும் புரிந்து கொள்ளும் ஆற்றல் யாருக்கும் இல்லை என்பது கண்கூடு. அப்படி இருந்தும் ஏன் அன்னை இந்த உபதேசங்களைச் செய்கிறாள் என்று நினைத்துப் பார்த்தால் ஓர் உண்மை புலப்படாமல் போகாது.

பெரும்பாலும் இந்த உபதேசங்களை ஆறு அல்லது ஏழு பேர் இருக்கும் பொழுதுதான் அன்னை செய்கிறாள். பிறகு இவர்கள் ஒருவருக்கொருவர் தம்முள் கலந்து உரையாடும் பொழுது ஒருவர் மறந்ததை மற்றவர் நினைவூட்ட ஏதுவாகலாம் என்ற கருத்தில் செய்கிறாள் போலும் என்று நினைக்க வேண்டியுள்ளது.

எத்துணைப் பேர் இருப்பினும் அவற்றை முழுவதும் புரிந்து கொள்வது இயலாத காரியம். ஒருவேளை அப்பெருமாட்டி கூறுவதை அப்படியே எழுதி வைத்தால் பின்னே வருபவர்களுக்கு அது பயன்படலாம் என்று நினைத்து இப்பொழுது செய்கிறாளோ என்னவோ தெரியவில்லை!

## நீரில் வந்த ஆவி:

9.4.1981 வியாழக்கிழமை அன்னை இவ்வாறு உபதேசம் செய்ய முற்பட்ட இரண்டாவது தடவையாகும். நாம் அன்றாடம் வழங்கும் சொற்களை அன்னை பயன்படுத்தும் விதமே மாறுபட்டதாகும். ஒரு மொழியில் உச்சரிப்பும், ஒலியுந்தானே முக்கியமானதாகும்? வரி வடிவில் எழுத்து மாறுபாடு இருப்பினும் ஒலியளவில் இந்த இரண்டும் ஒன்றுதானே? எனவே தமிழ்ச்சொற்களை அன்னை பந்து போல் பயன்படுத்துகிறாள்.

ஆன்மாவின் தோற்றம் பற்றி இன்று பேசினாள். ஆன்மா, உயிர், ஆவி என்ற சொற்கள் ஒரே பொருளைக் குறிப்பனவாகும். ஆவி என்ற சொல்லை இன்று எடுத்துக் கொண்டாள்.

“மகனே! நீராவி என்ற சொல்லைப் பார்! நீரினுடைய ஆவி அல்லது நீர் ஆவியாகச் செல்வது என்று மட்டுமே நினைக்கிறாய் அல்லவா? நீர் எல்லா உயிர்களும் தோன்றக் காரணமாய் இருத்தலின் தாயைப் போன்றது. அந்தத் தாயாகிய நீரில் தோன்றிய ஆவி மறுபடியும் உடம்பை விட்டு விட்டு ஆவியாக மேலே சென்றுவிடுகிறது. சென்று மேலேயே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. நீரில் தோன்றிய ஆவி, மேலே சென்று உடம்பு இல்லாமல் ஆவியாக இருந்து தக்கதொரு உடம்பைத் தரக்கூடியவர் கிடைக்கும் பொழுது மறுபடிக் கீழே இறங்குகிறது. எப்படி? நீராவி என்ற சொல்லைத் திருப்பிப் போட்டுப் பார்! உண்மை விளங்கும்.

ஆவிநீர் என்றால் என்ன பொருள்? ஆவி (உயிர்) நீரின் வழி இறங்குகின்றது. எனவே இரண்டு தடவைகளிலும் நீர் இந்த ஆவி உடம்பைப் பெறுவதற்கும் உடம்பை விட்டு மேலே போவதற்கும் உதவியாக இருத்தலின் தாய் என்றே அழைக்கப்படுகிறது. ஆம்! தண்ணீர் தாய் என்றே சொல்லப்படுகிறது.



இப்படிப் பிறந்து, இறந்து மறுபடிப் பிறந்து சுற்றிவரும் உயிர்களை அருளுடன் நான் ஒதுக்குகிறேன். என்னிடம் ஒதுங்கினால் அந்த உயிர் உய்கதி அடைய வழி உண்டாக்குகிறேன். ஆனால் இந்த உயிர்கட்குத் தான் என்ற அகங்காரமாகிய துடுப்பு ஒன்று உண்டு. பிரபஞ்ச வாழ்க்கை என்ற தண்ணீரில் மிதந்து வரும் இந்த உயிர்கள் அகங்காரம் என்ற துடுப்பைப் பயன்படுத்தாமல் வருமானால் நான் அந்த ஆவிகளை ஒதுக்குகிறேன்.

நான் ஒதுக்கிக் கொள்வதால் அந்த ஆவிகட்கு நற்காட்சி, நல்ஞானம் என்பவை சித்திக்கின்றன. ஆனால் “நான்” என்ற துடுப்பைப் பயன்படுத்திக் கொண்டு பிரபஞ்ச வாழ்க்கையில் சுற்றிவரும் உயிர்கள், கருணையுடன் நான் ஒதுக்க நினைத்தாலும் தம்முடைய துடுப்பைப் பயன்படுத்துவதால் என் கைக்கு வருவதில்லை. நான் என் பக்கம் ஒதுக்க நினைத்தாலும் அவை தாமே வேறிடத்தில் ஒதுங்கி விடுகின்றன.

என்னிடம் ஒதுங்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் உள்ள உயிர்களை நான் ஒதுக்கிக் கொள்கிறேன். ஒதுங்கவேண்டும், அதாவது என்னிடம் அடைக்கலமாக வந்துவிட வேண்டும் என்ற நினைவு சாதாரணமாக வந்துவிடுவதில்லை. அதுவும் என் அருளால் தான் வரவேண்டும் என்பதும் உண்மைதான். ஆனால் அந்த அருள் எப்படிக் கிடைக்கும்?

உன்னுடைய ஆர்வம் தூய்மையானதாக இருக்கும் பொழுது நீ அகங்காரத்தை எவ்வளவுக்கெவ்வளவு நீக்குகிறாயோ அவ்வளவுக்கவ்வளவு என் அருள் உன்னிடம் நிறையும். அகங்காரம் குறையக்குறைய அருள் நிரம்பும். அருள் நிரம்ப நிரம்ப அகங்காரம் குறையும். எனவே அருளை நிரப்புவது என் கடமை. அகங்காரத்தைச் சிறிது சிறிதாகப் போக்குவது உன் கடமை.

## பூனையும் குட்டியும்:

இதற்கு மேல் நீ செய்யக்கூடியது எதுவும் இல்லை. பூனைக்குட்டி தாயிடம் முழு நம்பிக்கை வைத்து தனக்கென்று ஒரு செயலும் இல்லாமல் இருக்கும்பொழுது தான் தாய்ப்பூனை அக்குட்டியை வாயில் கவ்வி எடுத்துச் சென்று பாதுகாவலான இடத்தில் வைத்துவிடுகிறது. அதுபோல சம்சாரக் கடலில் சிக்கித் தவிக்கும் உன்னைத் தாய்ப்பூனை போல் நான் அலுங்காமல் எடுத்துப் பாதுகாவலான இடத்தில் வைக்கிறேன்.

## சுயதரிசனம்:

இதற்கு மேலும் சில அருளைச் செய்யப் போகிறேன். உங்களுள் இருக்கும் ஆவி (ஆன்மா)யை நீங்கள் பார்க்க முடிவதில்லை. அதுபோல உங்களுடைய ஆவியும் உங்கள் உடம்பை, தான் என்று பார்க்க முடிகிறதே தவிர புறநிலையாக (objective) பார்க்க முடிவதில்லை அல்லவா? இவை இரண்டு ஆற்றலையும் உங்கட்குத் தரமுடியும்.

உங்கள் ஆன்மா உங்கள் உடம்பை எனது (மமகாரம்) என்ற எண்ணமில்லாமல் புறப்பொருளாகப் பார்க்கக்கூடிய ஆற்றலை வழங்கப் போகிறேன். இந்த உடம்பை வேண்டாம் என்று நினைக்கும் பொழுது தீப்பற்றி எரியச் செய்ய முடியும். இந்த ஆற்றலையும் எளிதாக உங்களில் சிலர் பெற முடியும்.

எத்தனை பிறவிகள் எடுத்தாலும் பழம் பிறப்பின் நினைவுடன், இனி என்ன செய்ய வேண்டும் என்ற நினைவுடன் ஒரு சிலரைப் பிறக்குமாறு செய்யப்போகிறேன். அவர்களை வைத்துக்கொண்டு உலகில் பெரும் மாற்றங்களைச் செய்யப் போகிறேன்.

## குழந்தை–தாய்–உறவு:

மிகச்சிறிய குழந்தை தன் தாயை எவ்வாறு அறிந்து கொள்ள முடிகிறது? அந்தத் தாயைத் தவிர பிறர் யார் பக்கத்தில் வந்தாலும் அதை ஒதுக்கிவிடும் வன்மை குழந்தைக்கு எவ்வாறு வருகிறது?

தாய்ப்பாலை உண்பதால் மட்டும் இது வந்துவிடுவதில்லை. அந்தத் தாயின் அன்புள்ளத்திலிருந்து வெளிப்படும் அதிர்வுகள் (Vibrations) குழந்தையினுட் புகுந்து ஒரு அதிர்வை உண்டாக்குதலின் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளவும், ஈடுபடவும் வாய்ப்பு உண்டாகிறது. அந்த அதிர்வுகளை அறியவும், அதனை ஏற்றுக்கொள்ளவும் வேண்டுமாயின் குழந்தை தாய் இருவரும் அதற்குத் தயாராக இருத்தல் வேண்டும். அதுபோல நான் பக்கத்தில் இருக்கும் பொழுது உண்டாகும் அதிர்வுகளை அறிந்துகொள்ளும் சக்தி உங்களிடம் வேண்டும். தூய்மையான அன்பு இருக்குமாயின் அதனை உணர்ந்து கொள்ளும் ஆற்றலும் வாய்ப்பும் உங்களுக்கு ஏற்படும்.

வலுவான இரும்பை வளைக்க வேண்டுமானால் என்ன செய்கிறாய் மகனே? நெருப்பிலே காய்ச்சி உஷ்ணப்படுத்தினால் இரும்பை வளைக்க முடிகிறதல்லாவா? அதே போலத் தியானம், தவம் என்பவற்றால் உடம்பில் சூடு ஏற்றினால் எங்கோ செல்கின்ற மனத்தைத் திருப்பி ஆன்மா பக்கம் செலுத்த முடியும். தியானம்,



பக்தி, தவம் என்பவற்றால் உடம்பில் சூடு ஏற்றினால் ஒழிய நீ நினைக்கின்ற பயனை அடைய முடியாது'' என்றாள்.

## தியானம் செய்யும் முறை:

ஒரு முறை அன்னை ஓர் அன்பருக்குத் தியானம் செய்ய வேண்டிய முறை பற்றிக் கூறினாள். பல்வேறு முன் செயல்களைக் கூறிய பிறகு தியானம் எவ்வாறு செய்ய வேண்டும் என்று கூறிய பகுதி முக்கியமானது.

''அமர்ந்து கொண்ட பிறகு எந்தக் குறிப்பிட்ட மந்திரத்தையும் நீ கூற வேண்டா. மனைவி, மக்கள், ஊர், உலகம் என்று உன் மனம் எங்கெங்கே சுற்றி அலைகிறதோ அதன் போக்கில் விட்டுவிடு. எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்க வேண்டா! நேரம் செல்லச் செல்ல இந்த எண்ண ஓட்டங்கள் அடங்கி ஒருமுகப்படுதலை நீ உணர முடியும். நாளாவட்டத்தில் நீ வேறு, உன் மனமும் பொறிபுலன்களும் வேறு என்பதனை எளிதில் உணர முடியும்.

ஆடு, மாடு மேய்ப்பவர்களை நீ கண்டதில்லையா? அவன் என்ன செய்கிறான்? ஒவ்வொரு மாட்டின் பின்னேயுமா செல்கிறான்? உயர்ந்த ஓர் இடத்தில் அமர்ந்து கொள்கிறான். மாடுகள் தம் விருப்பம் போல் சுற்றிப் புல்தரையில் மேய்ந்து கொண்டிருக்கின்றன. ஓரிரு முறைகள் தன் இருப்பிடத்திலிருந்தபடியே மாடு மேய்ப்பவன் மாடுகள் புல் மேய்வதைப் பார்த்துக் கொள்கிறான். அதே போல் நீயும் இருத்தல் வேண்டும்.

உன் பொறிபுலன்கள் மனத்தின் நிலையில் நின்று, அதனுடன் தொடர்பற்ற முறையில் நின்று, மனம் நினைப்பதை வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருக்கப் பழகுவாயாக. நாளாவட்டத்தில் உன் ஆன்மா மனக்கோட்டத்தில் ஈடுபடாமல் மனம், பொறி, புலன்கள் இவற்றின் செயல்களைப் புறநிலையாகத் தனித்து நின்று காணும் இயல்பைப் பழகிக் கொள்ளும்'' என்று திருவாய் மலர்ந்தாள் மருவத்தூர்ப் பெருமாட்டி.

## கலச பூசை, விளக்குப் பூசைகள்:

தைப்பூசம், ஆண்டுப்பிறப்பு, ஆடிப்பூரம் முதலிய நாட்களில் கலசபூசை, விளக்குப்பூசை முதலியவற்றைச் செய்ய அன்னை ஆணை இடுகிறாள். 108 கலசங்கள் முதல் ஆயிரம் கலசம் வரை பூசையில் இடம் பெறுகின்றன. இதன் அடிப்படை என்ன என்று சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். கலசங்களை எவ்வாறு வைத்து இப்பூசை நடைபெறுகிறது? ஒவ்வொரு முறையும் கலச பூசை நடைபெறுவதற்கு நான்கு நாள் முன்னர் எத்தகைய சக்கரம்

அமைக்கவேண்டும் என்று அன்னையே ஆணை இடுகிறாள். இவற்றுள் சில சக்கரங்கள் நாம் முன்னரே பார்த்தவை. அறுகோணம், முக்கோணம் என்ற முறையில் அமைந்தவை அவை.

இவ்வாறில்லாமல் 19.1.1981 தைப்பூசத்தில் விளக்குப் பூசைக்கும் 18.4.1981 சித்திரா பௌர்ணமிக் கலச பூசைக்கும் புதுவிதமான சக்கர அமைப்பு ஒன்றை அன்னை அமைத்துத் தந்தாள். “மகனே! இதுவரை யாரும் நினைத்துக்கூடப் பாராத புதிய ஒரு சக்கரத்தை நிருமாணிக்கப் போகிறேன்” என்று கூறி அது எவ்வாறு அமையவேண்டும் என்பதையும் விளக்குகிறாள்.

அன்னையின் அருகில் இருக்கும் அன்பர்களான பொறியியல் துறை வல்லுநர்கள் அன்னையின் பேச்சைக் கேட்டு அதே இடத்தில் ஒரு வரைபடத்தை வரைந்து அவள் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றனர். அன்னை அதற்கு வேண்டிய திருத்தங்களை உடனுக்குடன் அறிவிக்கின்றாள். இறுதியாக அவளுடைய கருத்துப்படி சக்கரம் உருவாக்கப் பெறுகிறது.

இதற்கடுத்து இந்தச் சக்கரத்துள் எத்தனை கலசங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதையும் அப்பெருமாட்டி கூறிவிடுகிறாள். இந்தச் சக்கரத்தின் முகப்பில் ஒரு யாக குண்டமும் உருவாக்கப்படுகிறது. சக்கரத்தின் அமைப்புக்கு ஏற்ப யாக குண்ட அமைப்பும் மாறிவிடுகிறது.

கலச பூசைக்கு இரண்டு நாள் முன்னர் மூன்று அல்லது நான்கு பொறியாளர்கள் தத்தம் கருவிகளுடன் வந்து ஏற்கனவே அளவுக்குட்பட்டு வரையப்பட்ட வரைபடத்தை வைத்துக்கொண்டு புற்று மண்டபத்தின் எதிரே சக்கரத்தை அளந்து வரைகின்றனர். அளவு திருப்தியாக அமைந்தவுடன் கலசங்கள் வைக்கவேண்டிய இடங்களை வர்ணங்களில் குறியிடுகின்றனர்.

அடுத்து, யாக குண்டமும் அன்னை கூறிய அளவில் கட்டப்படுகிறது. பல வல்லுநர்கள் இரண்டு அல்லது மூன்று இரவுகள் கண் விழித்து இப்பணியைச் செய்து முடிக்கின்றனர். இதன் பிறகு பல்வேறு பொருள்களுடன் கலக்கப்பெற்ற தூய நீரைக் கலசங்களில் நிரப்புகின்றனர்.

ஒவ்வொரு கலசத்தின் மேலும் ஒரு நார் உரிக்காத தேங்காயை அதன் மேல் வைக்கின்றனர். அத்தேங்காயின் மேல் மாலை ஒன்று அணிவிக்கப் பெற்று அதனடியில் உடைத்த தேங்காய், பழம், வெற்றிலைபாக்கு முதலியவை வைக்கப் பெறுகின்றன. இக்கலசங்கள் அனைத்தும் ஒரே அளவாக இருத்தலின் அவற்றின் மேல் மஞ்சள்



நனைத்த நூல் சுற்றப் பெற்றுள்ளது. இத்தனையும் முடிந்த பிறகு நடுவே உள்ள வினாயகர் கலசத்திலிருந்து ஒரு நூலை ஒவ்வொரு கலசத்தையும் வலஞ் சுற்றிக் கொண்டு வந்து மேலே தூக்கிச் சென்று அன்னையின் திருவடிகளில் கட்டப் பெறுகிறது. இதன் பிறகு சனிமூலை தொடங்கிப் பல கோணங்களில் பூசுணைக்காய், எலுமிச்சம் பழங்கள் வைக்கப் பெறுகின்றன. சக்கரத்தைச் சுற்றி வெளிச் சுற்றில் அகல்விளக்குகள் எரிகின்றன. யாக குண்டத்திற்கு வேண்டிய சமித்து, நெய் முதலிய பொருள்களும் தயாராக உள்ளன. அன்பர்கள் அனைவரும் அன்னையின் வரவுக்காக ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

திடீரென்று அன்னை கையில் வேப்பிலைக் கொத்துடன் காட்சி அளிக்கிறாள். கலச சக்கரம் வரைந்த அன்பர்களும் கலசங்களை அடுக்கி மலர் அணிவித்த அன்பர்களும், யாகப் பொறுப்பேற்றுள்ள அன்பரும் உதறலுடன் காத்திருந்தனர். உதறல் ஏன் தெரியுமா? பின்னே நடைபெறப் போவதை அறிந்து கொண்டால் உதறல் ஏன் என்பது நன்கு விளங்கிவிடும்.

அன்னை நேராகச் சக்கரத்தின் மேல் அடுக்கப் பெற்ற கலசங்கள் உள்ள இடத்திற்கு நேரே வருகின்றாள். சக்கரத்தை ஒருமுறை சுற்றி வருகின்றாள். திடீரென்று ஓரிடத்தில் நின்று கொண்டு தன் பொற்கரத்தை நீட்டி ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டுகிறாள். என்ன குறை என்று தெரியாமல் அன்பர் விழிக்கின்றார். அன்னை, “மகனே1 குறிப்பிட்ட கலசத்தின் மேல் உள்ள அந்தத் தேங்காய் மற்றவற்றுடன் நேர்க்கோட்டில் நேர்கோணத்தில் அமையவில்லை பார்!” என்பாள்.

அதனைச் சரிசெய்தவுடன் அன்னை மற்றோர் பகுதியைச் சுட்டிக்காட்டி அந்தக் கோட்டில் உள்ள குறிப்பிட்ட ஒரு கலசம் நேர்க்கோட்டில் அமையவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவாள். இன்னும் ஓரிடத்தில் நின்று அந்தக் குறிப்பிட்ட கலசத் தேங்காயின் குடுமியில் சுற்றிய நூல் வலமாகச் சுற்றப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டுவாள்.

எந்தச் சக்கர வடிவம் வரையப்பெற்றாலும் அதன் மேல் அடுக்கப் பெற்றுள்ள தேங்காய்களும் ஒரே கோட்டில் அமைய வேண்டும். இதில் ஏதாவது ஒரு தேங்காய் நேர்க்கோட்டிலிருந்து ஒரு மில்லிமீட்டர் அளவு பிறழ்ந்து இருந்தாலும் அன்னை விடமாட்டாள். சக்கரத்தில் கலசம், விளக்குகள் என்ற எதனை அடுக்கினாலும் ஒரு மூலையிலிருந்து மற்றோர் மூலைக்கு ஒரு கோடு கிழித்தது போல் நேர்பட அமைந்திருக்க வேண்டும்.

**கலச நீரின் ஆற்றல்:**

இக் கலசத்தில் உள்ள தூநீரைச் சாதாரணத் தண்ணீராக நினைத்து விடக்கூடாது. செயற்கரிய செய்ய வல்ல தூநீர் அது. சாதாரணமான தலைவலி, காய்ச்சல் என்பவற்றிற்கு அத் தூநீரைப் பயன்படுத்தத் தேவை இல்லை. நம் முயற்சிக்கு அப்பாற்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகும் போது அந்தத் தீர்த்தத்தில் ஓர் அரை தேக்கரண்டி அளவு நீரை உட்கொண்டால் அதன் பயனை உடனே அறியலாம்.

கோவைப் புளியம்பட்டியில் உள்ள டாக்டர் ஒருவர் இத்தீர்த்தத்தின் அருமை பெருமைகளை நன்கு அறிந்தவராவார். தம் மருத்துவமனையில் (Nursing Home) மருத்துவம் செய்யப் பெற்றுக் கைவிடப்பட்ட நிலையில் வீட்டிற்கு அனுப்பப்படும் ஒரு நோயாளிக்கு, இறுதிக்காலத்தில் கங்கைத் தண்ணீரை வாயில் ஊற்றுகின்ற பழக்கம் உண்டாகலின் கங்கை நீரை ஊற்ற விரும்பினார். கங்கைத் தண்ணீர் கிடைக்காமையின் டாக்டர் அன்னையின் தீவிர பக்தராதலின் கலசத் தீர்த்தத்தில் ஒரு தேக்கரண்டி அளவு தந்து வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

எக்காரணத்தைக் கொண்டும் சில மணிநேரங்களுக்கு மேல் பிழைத்திருப்பது கடினம் என்று முடிவு செய்யப்பட்ட நோயாளி எழுந்து கொண்டார். நாளாவட்டத்தில் பூரண குணம் பெற்றுவிட்டார்.

**சக்கர விளக்கம்:**

இவ்வாறு செய்யப்படும் கலச பூசை, அதற்குரிய சக்கரம் என்பவற்றில் ஏற்படும் பயன் பற்றிச் சித்திரா பௌர்ணமிக் கலச பூசைக்கு முதல் நாள் (17.4.1981) அருள்வாக்கில் அன்னை கூறினாள்.

“மகனே! ஒரு குடும்பத்தைத் திருத்த அதன் தலைவன் ஒருவனைத் திருத்தினால் போதுமானது. ஓர் ஊரைத் திருத்த ஒரு கிராமத்தைத் திருத்தினால் போதும். உலகைத் திருத்த ஒரு நாட்டைத் திருத்தினால் போதும். இங்கு நீங்கள் போடும் சக்கரமும், கலச பூசையும் அண்டங்கள் அனைத்தையும் வழிப்படுத்த உதவும்”.

எனவே, இந்தக் கலச பூசையும் யாகமும், சக்கரமும் கற்பனைக்கடங்காத பெரும்பயனை அளிக்கக் கூடியவை என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

சக்கரம் போடுவதில் ஒரு பகுதிக்கு மற்றோர் பகுதி ஒரு நூலிழை வித்தியாசம் தானே இருக்கிறது என்று அலட்சியப்படுத்தி



விடக்கூடாது. ஒரு குடம் பாலுக்கு ஒரு சொட்டு மோர் பிறையிடுவது போல இது பெருந்தீங்கை உண்டாக்கிவிடும்.

மற்றோர் நாள் அன்னை இம்மாதிரியான உபதேசம் ஒன்றைச் செய்தாள். “மகனே! வேண்டாத தீய எண்ணங்களை மனத்தில் ஏற்றாதே! அப்படி ஏற்றிவிட்ட பிறகு, தாயே! நீயே தான் இந்த எண்ணத்தை என் மனத்தில் விளைத்தாய் என்று என் மேல் பழிபோடப் பார்க்கிறாய்! தாயே நீதான் நீதான் இதற்குக் காரணம் என்று நினைக்கிறாய் அல்லவா? ஆம். நீதான் என்ற சொல்லைப் பலமுறை விடாமற் கூறிப்பார். அதிலேயே திருப்பித் திருப்பிக் கூறினால் “நீதான், நீதான், நிதான்” என்று வரும். அதாவது நிதானம் என்ற விடை கிடைக்கும்”.

மற்றோர் நாள் அவதாரத் தத்துவம் பேசினாள். “மகனே! இரும்பைக் காந்தம் இழுக்கிற நிகழ்ச்சியைப் பார்த்திருக்கின்றாய் அல்லவா? காந்தம் மிகச் சிறியதாகவும் இரும்பு மிகப் பெரியதாகவும் அமைந்துவிட்டால் என்ன நடைபெறும் என்று தெரியுமல்லவா? காந்தத்தினிடம் இரும்பு ஓடுவதற்குப் பதிலாக அசைக்க முடியாத இரும்புத் துண்டினிடத்தில் காந்தம் ஓடிச்சென்று பற்றிக் கொள்கிறதைக் காணலாம். அதே போலத்தான் நீ உன் வினை காரணமாக அதிக பாரத்துடன் இருக்கின்றாய். ஆனால் என்னை அடைய வேண்டும் என்ற உறுதி உன்னிடம் வலுப்பட்ட நிலையில் காந்தம் ஓடிச் சென்று இரும்பை அணைவது போல நான் உன்னிடம் ஓடி வந்து அடைகிறேன்.

**ஓங்காரம் போல் வளைக:**

பல நாட்களில் அன்னை கூறிய உபதேசங்கள் சில கீழே தரப்பெற்றுள்ளன.

“மகனே! என்னை எவ்வாறு காண்பது? எவ்வாறு அறிந்து கொள்வது என்று நினைக்கிறாயா? நேரே நிற்கும் உனது உடல் பணிவால் வளையவேண்டும். எப்பொழுது பணிவால் ஒருவன் வளைய முடியும்? அகங்காரம் எனப்படும் மண்டை வீக்கம் குறையும் பொழுதுதான் ஒருவன் பணிவினால் முன்புறம் வளைய முடியும்?

நிமிர்ந்து நிற்கும் உடம்பினுள் உள்ள அறிவு என்னைப் பற்றி அறிந்திருந்தாலும் புற உலகில் என்னைத் தேடி அலைகிறது. ஆனால் முதுகந்தண்டு வளையும்படி இருக்குமேயானால் உன் உடலின் வடிவம் ஓம் என்ற எழுத்தின் வடிவத்தைப் பெற்றுவிடுகிறது அல்லவா?

ஓங்காரத்தையே வடிவாகக் கொண்டு அதனுள் நானே இருக்கின்றேன் என்பதை நீ கேள்விப்பட்டது இல்லையா? ஆகவே நீ முதுகந்தண்டின் வளைவுடன் பணியும் பொழுது, உன் கண்கள் புறத்தே பாராமல் அகத்தே பார்க்க முற்படும் பொழுது அங்கே என்னைக் காண முடியும்.

முதுகந்தண்டு வளைதல் என்பது உருவகமாக ஆணவத்தை அழித்து விட்டுப் பணிவுடன் இருப்பதைக் குறிப்பதாகும். அதாவது அகங்காரம் அடங்கிய நிலையில், பார்வையை அகமுகமாகச் (உள்முகமாக) செலுத்தினால் அன்னையை உள்ளே காணலாம் என்பது பொருள்.

## ஏன் உடனே குறை தீர்க்கவில்லை?

“மகனே! தாயிடம் இவ்வளவு தூரம் மன்றாடி முறையிட்டேனே! அவள் என்னிடம் கருணை கொண்டு என் குறைகளை நீக்க முற்படவில்லையே என்று கலங்குகிறாய்! நான் யார் தெரியுமா? உலகனைத்தையும் ஈன்ற தாய் அல்லவா?

குழந்தை அழத் தொடங்குமுன் பால் கொடுப்பவள் சிறந்த தாய் அல்லள் ஏன் தெரியுமா? குழந்தை கால் கைகளை உதைத்துக் கொண்டு அழவேண்டும். கண்களிலிருந்து கண்ணீர் வெளிப்பட வேண்டும். கண்ணீர் வெளிப்படும் பொழுது தான் கண்ணீர்த் துளிகள் தூய்மை அடைகின்றன. கால் கைகளைக் குழந்தை உதைத்துக் கொள்ளும் பொழுது தான் அவை வலுப்பெறுகின்றன. அவ்வாறு இல்லையானால் குழந்தையின் கால் கைகள் சூம்பிப் போய் விடும். ஆகவேதான் குழந்தையை ஓரளவு அழவிட்ட பின்னரே தாய் பால் கொடுக்கிறாள்.

நீங்களும் உங்கள் பிழைகளை நினைத்து வருந்திக் கண்ணீர் விட்டால் தான் உங்கள் மனம் தூய்மை அடையும். அதன் பின்னரே நான் அருள் செய்வேன்’’.

## குளவியும் முட்டையும்:

13.4.1981 அன்று தந்த உபதேசம். “மகனை மிக விரைவாக மகானாக்கி வருகிறேன். மைந்தன் வளர்ந்து சித்தனாகி விட்ட பிறகு எனக்கு இங்கு என்ன வேலை இருக்கிறது? அந்த நிலை வருகின்ற பொழுது அருள்வாக்கு முதலியவை நின்று போகும்.

ஆம்! மகன் பேசுவதெல்லாம் அருள்வாக்காகவே இருக்கும். இதற்கென்று தனியான நேரம், இடம் முதலியவை இருக்கமாட்டா! அவன் தங்கியுள்ள இந்த மண்ணை மிதித்து விட்டாலே குறைகள்



நீக்கப்படும். அவன் இந்த நிலையை அடைந்துவிட்ட பிறகு எனக்கு இங்கு என்ன வேலை? நான் ஓம் என்ற மந்திரத்தின் உள்ளே உறையச் சென்று விடுவேன்.

குளவி எங்கோ ஓரிடத்தில் இடும் முட்டையைத் தன் கூட்டுக்குள் கொண்டு வந்து வைக்கிறது. அந்த முட்டையைக் குளவியின் குழந்தை என்று அறிந்து கொள்ளாத மக்கள் வேறு ஓர் புழுவைக் குளவி கொண்டு வருவதாக நினைத்து மருள்கின்றனர். இதன் உண்மையைச் சற்று ஆழமாகச் சிந்திக்க வேண்டும். குளவி எங்கே முட்டை இட்டுள்ளது என்பது குளவிக்குத்தான் தெரியுமே தவிரப் பிறர் அறிய வாய்ப்பு இல்லை. அதுபோலக் குளவியாகிய யான் பாலகனை (அடிகளாரை) எங்கே பிறப்பித்துள்ளேன் என்பதை என்னையன்றிப் பிறர் அறிய வாய்ப்பு இல்லை. குளவி இட்ட முட்டையைப் பிற முட்டைகளிலிருந்து இனம் பிரித்துக் காண்டல் இயலாத காரியம்’’.

அதுபோல மானுட உடலுடன் பிறந்து எங்கோ ஒரு கிராமத்தில் ஒரு கோபால நாயகருடைய மகனாகப் பிறந்து, திரு. பங்காரு என்ற பெயர் தாங்கி நம்முடன் பேசிப்பழகி உண்டு, உடுத்து வருகின்ற ஒருவரை அன்னையின் மகனாகிய சித்தன் என்று இனம் கண்டுகொள்வது இயலாத காரியம்.

அன்னை, தன் மகனாகிய சித்தனை நம்மிடம் வளர விட்டிருக்கிறாள். இப்பொழுது அந்தப் பாலகன் வளரத் தொடங்கி முழுநிலைச் சித்தனாக மாறி வருகின்றார். இவரைப் பிற மனிதர்களிடமிருந்து இனம்பிரித்துக் கண்டு கொள்ள வேண்டும் என்பதே அன்னை இந்த உபதேசம் செய்ததன் நோக்கமாகும்.

திரு. கோபால நாயகரின் மகனார் என்று மட்டும் உலகத்தார் அறிந்து கொண்டுள்ள உடம்பில் (கூட்டினுள்) அன்னை ஆதிபராசக்தியாகிய குளவி தன் முட்டையாகிய சித்தனை இருக்குமாறு செய்துவிட்டாள். பிற முட்டைகளிலிருந்து குளவி முட்டையை இனம் பிரித்து அறிந்து கொள்ள முடியாத மானிட இனம் அடிகளார் அன்னையின் முட்டை என்பதை அறிய முடியாமல் உள்ளனர். நாளாவட்டத்தில் குளவியின் முட்டை வடிவு மாறி இறுதியில் குளவியாகவே வளர்ந்து விடுவது போலத் திரு. பங்காரு அடிகளார் என்ற உடம்பினுள் பராசக்தியின் முட்டை என்ற அடுத்த நிலையை மிக விரைவில் அடையப் போகிறது. குளவி முட்டை முழு வளர்ச்சி அடைந்தவுடன் தாய்க் குளவிக்கு அங்கு என்ன வேலை இருக்க முடியும்? எனவே தான் அன்னை ஆதிபராசக்தி

மகன் முழுச் சித்தனானவுடன் தான் ஓங்காரத்துள் உறையப் போவதாக அடிக்கடி அறிவுறுத்தி வருகின்றாள்.

இந்த உண்மையை அறிய, உணர முடியாமல் குறி சொல்லும் இடம் என்று மருவத்தூர் ஆலயத்தையும், குறி சொல்பவர் என்று அருள்திரு பங்காரு சித்தரையும் நினைப்பவர்கள் பெரும் இலாபத்தை இழப்பவர்களாவார்கள். இந்தக் குளவி முட்டை, புழுப்பருவத்தைத் தாண்டிக் குளவி வடிவை அடைந்து வரும் இந்த நேரத்தில் அதன் அருகில் இருப்பவர்களும், பழகுகின்றவர்களும் புண்ணியஞ் செய்தவர்கள் என்பதில் சந்தேகம் எள்ளளவும் இல்லை.

எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக அருள்திரு அடிகளார் சாதாரணமான நம்மைப் போன்ற மனிதர் இல்லை என்பதையும், சித்தர் நிலையை அடைந்து கொண்டிருக்கும் அன்னை ஆதிபராசக்தியாகிய குளவியின் முட்டை என்பதையும் அறிகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நம்முடைய நற்பயன் அதிகமாகிறது. இதனை விளங்கிக் கொள்ள ஓர் எடுத்துக் காட்டையும் காணலாம்.

**மகான் மகனுள் அடக்கம்:**

18.4.1981 சனிக்கிழமை சித்திரா பௌர்ணமி நாள். அன்னையின் ஆணையின்படி 500 கலசங்கள் வைத்துக் கலசபூசை அற்புதமான முறையில் நடைபெற்றது.

அந்தக் கலசபூசைக்கு அன்னை இதுவரை யாரும் நினைத்துப் பார்த்திராத சக்கரம் ஒன்றைப் பயன்படுத்தினாள். எல்லாம் இனிது நிறைவேறிய அன்றிரவு அருள்திரு பங்காரு அடிகளார் அறநிலையக் கட்டடத்திலேயே தங்கிவிட்டார். அறநிலையத்தைச் சேர்ந்த அன்பர் ஒருவரும் அதே கட்டடத்தில் மற்றோர் பகுதியில் தங்கி இருந்தார். இரவு 11.45 மணிக்கு அடிகளார் இடையில் உள்ள அரை நிக்கருடன் வேறு உடை எதுவுமில்லாமல் அன்பர் தங்கியிருந்த அறைக் கதவை மெல்லத் திறந்தார்.

அன்பர் உறங்கப் போவதற்காகப் பாயில் படுத்துச் சில வினாடிகள் தான் ஆகியிருந்தன. அவருக்குப் பக்கத்தில் மற்றோர் அறநிலைய அன்பர் பகல் எல்லாம் ஓடி ஆடி உழைத்ததன் காரணமாக அயர்ந்த உறக்கத்தில் இருந்தார். முதல் அன்பர் கதவு திறக்கப்படுவதை (மெல்லிய கிறீச் சப்தம்) அறிந்தவுடன் யார் என்று பார்ப்பதற்காக எழுந்து வந்தார்.

அருள்திரு அடிகளார் என்று அறிந்தவுடன் வணக்கத்துடன் வரவேற்றார். அடிகளார், “எலுமிச்சம் பழம் இருக்கா?” என்று



வினவினார். அன்பர் ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டு, “தயை கூர்ந்து ஒரு நிமிஷம் இதில் உட்காருங்கள். வெளியில் சென்று எலுமிச்சம்பழம் கிடைக்குமா என்று பார்த்து வருகிறேன்” என்று கூறிவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு வெளியே சென்றார்.

கோயிற்பணி செய்யும் பழைய அன்பர் ஒருவருடைய உதவியால் ஒரு கடையில் இருந்த மிகச்சிறிய எலுமிச்சம் பழங்கள் மூன்றைப் பெற்றுக்கொண்டு அன்பர் மீண்டார்.

கதவு சாத்தியபடியே இருந்தமையின் மிகவும் மெதுவாகக் கதவுகளைத் திறந்தார் அன்பர். என்ன வியப்பு! அடிகளார் வெள்ளைச் சட்டை ஒன்றை உடம்பில் மாட்டிய கோலத்தில் இருந்தார். அன்பர் எலுமிச்சம்பழங்களை இரண்டு கைகளிலும் வைத்துக் கொண்டு நீட்டினார். நீட்டிய கைகளிலிருந்து எலுமிச்சம்பழங்களைத் தம் கையால் எடுத்துக் கொண்டு அடிகளார் தம் அறைக்குள் சென்றுவிட்டார்.

அன்பரும் படுக்கையில் அமர்ந்து கொண்டு சிந்திக்கத் தொடங்கினார். தாம் வெளியில் போகும் பொழுது அடிகளார் உடம்பில் சட்டை எதுவும் இல்லை. ஆனால் உள்ளே மறுபடியும் நுழையும் பொழுது சட்டை எவ்வாறு வந்தது? அதிலும் வேடிக்கை என்னவென்றால் சட்டை அடிகளாருடையதன்று. அவரைப்போல் இருமடங்கு சதைப்பற்றுடன் இருப்பவர் போடும் சட்டை அது. இவ்வளவு பெரிய சட்டையை அடிகளார் ஏன் போட்டுக்கொள்ள வேண்டும்? அன்பர் தங்கியிருந்த அறையில் அவருக்கு சட்டை ஏது? உள்ளே நுழையும் பொழுது சட்டை இல்லாமல் இருந்தவர் இப்பொழுது எவ்வாறு சட்டையுடன் காட்சி அளிக்கின்றார்? என்றெல்லாம் எண்ணிக்கொண்டு அன்பர் படுக்கையில் படுக்காமல் அயர்ந்து இருந்தார்.

ஒரு இரண்டு அல்லது மூன்று நிமிஷங்களுக்குள் கதவு மறுபடியும் திறந்தது. அன்பர் எழுந்து சென்றார். அடிகளார் வடிவத்தில் அவரை விட உயரத்துடன், அடிகளார் வாயிற்படியில் நுழைந்து பாதி உடம்பு வெளியிலும் பாதி உடம்பு உட்புறமாகவும் நின்றிருந்தார். அன்பர் மூன்று அல்லது நான்கு அங்குல தூரத்தில் நின்று கொண்டு என்ன வேண்டும் என்ற குறிப்பில் அடிகளாரின் முகத்தைப் பார்த்ததும் தம்மை மறந்துவிட்டார்.

அந்த அற்புத முகத்தில் காணப்பெற்ற புன்சிரிப்பு, உலகம் முழுவதையும் கொள்ளை கொள்கின்ற புன்சிரிப்பு! அந்தச் சிரிப்பில் தம்மை மறந்து நின்றுவிட்டார் அன்பர். இரண்டு மூன்று நிமிஷங்கள்

ஆனது போல உள்ள நிலையில் அடிகளார் குரல் அல்லாத ஒரு குரலில் அன்பரைக் கனிவுடன் பார்த்து, "என்னைத் தெரியலையா?" என்று கேட்டது.

அன்பர் விதிர்விதிர்த்துப் போய் "தெரியலையே அம்மா!" என்று விடை கூறினார். முகத்தில் இருந்த புன்னகை மாறி "என்னைத் தெரியவில்லையா! பைத்தியக்கார முண்டமே!" என்று கூறிவிட்டு அந்தத் தெய்வத்திருவுரு திரும்பிச் சென்று அடிகளாரின் அறையில் புகுந்து கொண்டது. அந்த அறையில் புகுமுன் திரும்பி "சட்டை வித்தியாசங்கூடத் தெரியவில்லையா?" என்று கேட்டுவிட்டுச் சென்றுவிட்டது.

அன்பர் கைக்கெட்டிய கனி வாய்க்கு எட்டாமல் போன தம் விதியை நினைத்து அழுதுகொண்டு அடிகளார் அமர்ந்திருந்த அதே நாற்காலியில் அமர்ந்திருந்தார். இரண்டு நிமிஷங்களுக்குள் உண்மையான அருள்திரு பங்காரு அடிகளார் சட்டை, வேட்டி முதலியன அணிந்து கொண்டு "சார்! நல்லாத் தூங்கிட்டு இருந்தேன்! யாரோ என்னைத் தட்டி எழுப்பி உங்களிடம் வரச் சொன்ன மாதிரி இருந்தது. இங்கே என்ன நடந்தது? ஏன் இந்த நேரத்தில் உங்களைப் பார்க்க வேண்டும்" என்று கேட்டவுடன் அன்பர் நடந்தவற்றைக் கூறித் தம் வினையை நொந்து கொண்டார்.

## கவனமாக இருக்கவும்:

இந்த நிகழ்ச்சி உறுதியாக அருள்திரு பங்காரு அடிகளார் யார் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி என எடுத்துக்காட்டி விட்டது. இனி அவர் மேல்மருவத்தூர் திரு. கோபால் நாயகரின் திருமகனார் அல்லர்; நம்முடைய நண்பர் அல்லர்; பள்ளி ஆசிரியர் அல்லர்; ஆம்! பராசக்திக்குளவி இட்ட முட்டை, புழுப்பருவம் தாண்டி முழுக் குளவியாகிவிட்டது ஆம்! மகன் மகான் ஆகிவிட்டார்.

இந்த உண்மையை மறுக்கவோ மறைக்கவோ செய்பவர்கள் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்கின்றனர். அன்னையை இல்லை என்று கூறுபவர்களும், அவள் ஆற்றலை, திரு. பங்காரு சித்தரைக் குறை கூறுபவர்களும், பழி பேசுபவர்கள் மன்னிக்கப்பட மாட்டார்கள். உலகம் இதனை உடனடியாக மறவாமல் மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும்.

## என்னை அடைவது எப்படி?

4.4.1982 அன்று அன்னை ஆலயத் தொண்டர்களுக்கும், அறநிலையினர்களுக்கும் ஆன்மிக மாநாடுகள், அவற்றின் பயன்



பற்றி அருள்வாக்குச் சொல்லிக் கொண்டு வந்தாள். அப்போது அன்பர் ஒருவர், "தியானம் செய்ய முடியவில்லை. அதனை எவ்வாறு செய்ய வேண்டும்?" என்று கேட்டார். உடனே அன்னை மிகப்பெரிய உபதேசச் சொற்பொழிவு ஒன்றைச் செய்துவிட்டாள்.

"தியானம் செய்வதும், தவம் செய்வதும் ஒரு வகையான வழிதான். ஆனால், தியானத்தினால் மட்டும் என்னை அடைந்துவிட முடியும் என்று மனப்பால் குடிக்காதே!

"தவம் செய்யத் தொடங்கித் தங்கள் உடம்பின் மேல் புற்று முளைக்கின்ற நிலையில் உள்ளவர்களும், புற்று மண்ணும் அதன் மேல் மரம் முளைத்த நிலையில் உள்ளவர்களும் இன்றும் பலர் இருக்கின்றார்கள். என்றாலும் அவர்களால் என்னைக் காண முடிந்ததா? இல்லை! ஏன் தெரியுமா? அவர்கள் எவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டாலும் என்னை வந்து அடைய முடியாது. உன் முயற்சியால் என்னை அடைந்துவிட முடியாது என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும், உன் முயற்சியைக் கண்டு இரக்கம் கொண்டு நான் உன்னிடத்தில் வரவேண்டுமே தவிர, நீ என்னிடத்தில் வருதல் இயலாத காரியம். அதனால் நீ முயற்சி செய்ய வேண்டாம் என்பது கருத்தில்லை. ஆனால் பிற உலகியல் விஷயங்களில் உன் முயற்சி எவ்வளவு பெரிதாக இருப்பினும், என் அருள் இருந்தால் ஒழிய அந்த முயற்சி எவ்விதப் பலனையும் அளிக்காது. ஜெபம், தவம் என்ற இரண்டும் இல்லாமலே என் அருளைப் பெறமுடியும் என்பதையும் நீ அறிய வேண்டும்".

## ஆராயாதே!

"முழுவதுமாக என்னையே சரணம் என்று அடைந்துவிடு. அதன் பிறகு நானாக உனக்கு என்ன பணி இடுகின்றேனோ அதனை ஏன்? என்ன? எதற்கு என்ற ஆராய்ச்சிகளில் ஈடுபடாமல் முழுமனத்தோடு செய்ய முற்படு! அப்பொழுது என்னை எளிதாக அடைய முடியும்".

## தொண்டுநெறியில் உள்ள சௌகரியம்:

"தொண்டுநெறி என்ற இந்த நெறியில் இருக்கும் சௌகரியத்தைத் தெரிந்து கொள்! நான் உன்னிடம் வரவேண்டும் என்று கருதி நீ செய்யும் செபம், தவம் இவற்றால் என்னை வரவழைக்க முடியாது என்று கூறினேன். ஆனால், நானாக உன்னிடம் வரும் அரிய சந்தர்ப்பம் ஒன்று உண்டு. அது எப்பொழுது தெரியுமா?"

## பயன்படுத்திக்கொள்!

“நானே உன்னிடம் வந்து ஒரு பணியைச் செய்யுமாறு ஏவுகின்றேன். அந்தப் பணி சிறியதாகவோ!, பெரியதாகவோ, கடினமானதாகவோ, எளிமையானதாகவோ இருக்கலாம். ஆனால், ஒன்றை மறந்துவிடாதே! நான் எங்கோ இருந்து கொண்டு ஏவவில்லை. உனக்கு அருகில் வந்துதான் இப்பணியைச் செய் என்று ஏவுகின்றேன். நான் உனக்கு அருகில் வரும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள். எவ்வாறு என்று கேட்கிறாயா?”

## நான் இட்ட பணியைச் செய்!

“நான் இட்ட பணியை உடனே நீ செய்து முடித்தால் என்னை நீ பற்றிக் கொள்ள முடியும். நானே உன்னிடம் வந்துதான் அந்தப் பணியை உனக்கு இடுகின்றேன். என்னிடம் நீ வரவேண்டும் என்ற உன் விருப்பத்திற்கு இணங்காத நான், இப்பொழுது நானே உன்னிடம் வருகிறேன் அல்லவா? இதைவிட அரிய வாய்ப்பு உன் வாழ்க்கையில் வேறு எப்போது கிடைக்கப்போகிறது? எந்தப் பொருளை எப்படியாவது நெருங்க வேண்டும் என்று நீ நினைத்துச் செபம், தவம் முதலியவற்றை மேற்கொள்கிறாயோ அந்தப் பொருளே இப்பொழுது உன்னை நாடி உன் அருகில் வந்து ஒரு பணியை உனக்கு இடுகிறது என்றால் அதைவிட உனக்குக் கிடைக்கும் வாய்ப்பு வேறு எதுவாக இருக்க முடியும்?

எந்த ஒன்றை நாடி நீ செபம், தவம், தியானம் முதலியவற்றை மேற்கொள்கிறாயோ அந்த ஒன்று உன்னிடமே வந்து ஒன்றைச் செய்யுமாறு ஏவுகின்றது என்றால் இதைவிடப் பெரிய அதிர்ஷ்டம் வேறு என்ன இருக்க முடியும்?

நீ அந்தப் பணியை முழுமனத்துடன், முழு முயற்சியுடன் செய்து முடிப்பது தான் என்னை உன்னை விட்டுப் போகவிடாமல் பற்றி இருத்திக் கொள்ளும் எளிய வழியாகும்.

தொண்டு செய்வதன் மூலம் என்னை எளிதாகப் பற்றிக் கொள்ள முடியும். எந்தப் பணியை நான் இட்டாலும் அதில் உயர்வு தாழ்வு கருதாமல் லாப நஷ்டங்களைக் கணக்குப் போடாமல் செய்து முடிப்பதே என்னை அடையும் வழியாகும்.”

## எளிய வழி:

“தவம் மேற்கொண்டு புற்றாகவும், மரமாகவும் நிற்கின்றவர்கள் என்னை இன்னும் காணவில்லை. ஆனால் என் பணியைத் தலைமேற்கொண்டு செய்யும் உன் எதிரில் நான் நிற்கின்றேன்.



இந்த எளிய வழியை நீ விட்டுவிடாதே!” இவ்வாறு அன்னை கூறி முடித்தாள்.

## விதையும் – வினையும்:

ஆரம்ப நாட்களில் அன்னை அருள்வாக்குச் சொல்லியபோது நூற்றுக்கணக்கான மக்களே வந்து பயன் அடைந்தனர். அப்போது ஓர் அன்பர் தம் குடும்பத்தில் உள்ள உறுப்பினர் ஒருவர் உடல்நிலை பற்றிக் கோயில் தொண்டர்களிடம் கூறினார். அவருக்குக் கால் கைகள் விளங்காமல் இருப்பதாகவும், எழுந்து ஓரடிகூட நடக்க முடியாது என்றும் சொல்லி அழுதார். “அதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என்று தொண்டர்கள் கேட்டனர்.

“அருள்திரு பங்காரு அடிகளார் அவர்கள் தம்முடைய வீட்டுக்கு வருகை தரவேண்டும். அவர் மூலமாக அன்னை தன் வீட்டில் எழுந்தருள வேண்டும். மந்திரிப்பு மூலமாகவோ வேறு எதன் மூலமோ நோயாளியைக் குணப்படுத்த வேண்டும். அந்த, நோயாளி சற்று நடக்க முடிந்தால் எப்படியாவது கோயிலுக்கு அழைத்து வரலாம். அது முடியாத போது வேறு என்ன செய்வது?” என்று அழாத குறையாக முறையிட்டார். இதுபற்றித் தொண்டர்கள் அன்னையிடம் முறையிட்டனர்.

அன்னை, “மகனே! விதை-வினை. விதைதான் நிலத்தை நோக்கிப் போகவேண்டும். விதை இருக்கும் இடத்தை நோக்கி நிலம் வராது. அதுபோல வினைக்கு உரியவன் தான் தெய்வத்தை நோக்கி வரவேண்டும். தன்னைத் தேடித் தெய்வம் வரவேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. எப்படியிருந்தாலும் அவனை இந்த மண்ணை மிதிக்கச் சொல்” என்று சொல்லிவிட்டாள்.

## ஊழ்வினை பற்றி அன்னை:

“அம்மா! ஊழ்வினை ஊழ்வினை என்கிறாயே! அந்த ஊழ்வினை எங்களுக்கு எப்படி வருகின்றது? விளக்கமாகச் சொல்லவேண்டும்” என்று ஆலயப் புலவருள் ஒருவர் அன்னையிடம் முறையிட்டார். அன்னை பின்வருமாறு சொல்லியருளினாள்.

“மகனே! உ-ஊ; “உ” நீண்டால் “ஊ” எழுத்தாக ஆகின்றது. தாயின் வயிற்றிலிருந்து மனிதன் பிறக்கின்றான். அப்போது தனக்கு உணவு வேண்டும், உடை வேண்டும் என்று முறையிட்டுக் கேட்கத் தெரியவில்லை. தாயே பசியறிந்து உணவூட்டுகிறாள்; கவனித்துக் கொள்கிறாள் அல்லவா? குழந்தை மனிதன் ஆகின்றான். வளர்கின்றான். அவன் வளர வளர அவன் உள்ளம் நீளுகின்றது. விரிகின்றது. அது வேண்டும், இது வேண்டும் என்று அலைகிறது.

ஆசைப்பட்டவற்றையெல்லாம் அடைய நினைக்கின்றது. உள்ளம் விரிய விரிய - நீள நீள ஆசைகளும், தேவைகளும் பெருகுகின்றன. ஊழ்வினைகள் வந்து சேர்கின்றன'' என்றாள்.

## பேராசை கொண்டு சொத்து சேர்ப்பதால்:

பெரிய செல்வந்தர் ஒருவர் அன்னையிடம் அருள்வாக்கு கேட்க வந்தார். அவரிடம் அன்னை கூறினாள். ''மகனே! வடியாத ஆற்றில் எப்படித் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறதோ அதுபோல் உனக்குச் செல்வம் வந்து கொண்டே இருக்கிறது. ஓடும் ஆற்றில் தண்ணீரைத் தடைப்படுத்தினால் தண்ணீர் தேங்கி நின்று, நாற்றமெடுத்து, அருந்துவதற்குப் பயன்படாமல் போகும். நீ தருமம் செய்து கொண்டே வந்தால் உனக்குச் செல்வமும் வந்து கொண்டே இருக்கும். ஆனால் பேராசையினால் நீ மேலும் மேலும் தருமம் செய்யாமல் சேர்த்துக் கொண்டே போனால் செல்வம் வந்தும் கடனாலும் நோயாலும் அனுபவிக்க முடியாமற் போகும்'' என்றாள்.

## ஏழை பக்தர் முறையீடு:

வசதியில்லாத ஏழை பக்தர் ஒருவர், அன்னையிடம், ''தாயே! வசதியிருப்பவர்கள் உனக்கு எதை எதையோ செய்கிறார்கள். இந்த ஆலயத்திற்கு நாமும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. என்னிடம் ஒன்றுமே இல்லையே தாயே! நான் என்ன செய்வேன்?'' என்று கேட்டார். அது கேட்ட அன்னை, ''மகனே! என் சந்நிதிக்கு வரும்போதெல்லாம் அங்கப்பிரதட்சணம் செய்! அதுவே போதும். உன் நிலைமை தாய்க்குத் தெரியும். அது பற்றிக் கவலைப் படாதே! தாயே என்று மனம் உருகி நீ வருகின்ற ஒவ்வொரு அங்கப்பிரதட்சணமும் பத்தாயிரம் ரூபாய்க்குச் சமம்'' என்று சொல்லி அனுப்பினாள்.

## தாய்ப்பறவைகளும் – குஞ்சுகளும்:

சென்னையில் நடைபெற்ற ஆன்மிக மாநாட்டின் போது, அருகிலிருந்த தொண்டர்களுக்கு அருள்வாக்கு அளிக்கும் போது அன்னை பின்வருமாறு கூறினாள்.

''மகனே! உங்களையெல்லாம் ஆன்மிகத்தில் உயர்ந்த நிலைக்கு ஏற்றி வைக்கத்தான் நினைக்கிறேன். தாய்ப்பறவை குஞ்சுகளையும் சேர்த்துக் கொண்டு பறக்கும் போது, அக்குஞ்சுகள் பறக்க முடியாமல் கீழே விழுகின்றன. அதுபோல நீங்களும் பந்தபாசங்களை விடமுடியாமல் அடிக்கடி கீழே விழுகிறீர்கள். தரையிலிருந்து எழுந்த தாய்ப்பறவை மேலே பறப்பதற்கு எவ்வளவு சக்தியைச் செலவழிக்க வேண்டியுள்ளது? விழுந்த குஞ்சுகளை



மீண்டும் அழைத்துக் கொண்டு பறக்கத் தாய்ப்பறவை தரைக்கு வருகிறது. முதலில் எவ்வளவு சக்தியைச் செலவழித்து மேலே சென்றதோ அந்த அளவு மீண்டும் தாய்ப்பறவை சக்தியைச் செலவழிக்க வேண்டி உள்ளது. அந்த நிலையில் தான் மகனே! உங்களை உயர்த்த நான் மீண்டும் இறங்கிவர வேண்டி உள்ளது!'' என்றாள்.

## 108, 1008 படி!!

ஓர் அன்பர் தாய், தந்தையரை இழந்தவர். இளமையிலிருந்தே மன வேதனைகளும், பயங்களும் சேர்ந்தன. கடவுளை நினைத்து அடிக்கடி அழுவார். குடும்பத்தில் உள்ளவர்கள் எப்போதும் கடுகடு சிடுசிடு என்று பேசியதால் வாழ்க்கையே வெறுப்பாயிற்று.

தெற்கே இராமநாதபுரம் கோவிலூர் மடத்துச் சந்நியாசிகளோடு சேர்ந்து கொண்டு வேதாந்த பாடம் கேட்டார். மனச்சாந்தி ஏற்படவில்லை. பல மடங்களில் தங்கினார். காசி, ரிஷி கேசம் எல்லாம் போனார். இந்தி படித்தார். பக்தி நூல்கள், ஞான நூல்கள் எல்லாம் படித்தார். மன நிம்மதி கிடைக்கவில்லை.

தமிழ்நாட்டுக்கே மீண்டும் வந்தார். பல மடங்களில் தங்கியிருந்து வேதாந்த பாடம் சொல்லிக் கொண்டு வந்தார். வேதாந்த பாடம் கற்றுத் தந்தவர்க்கு மடாதிபதிகள் மூலம் மனச் சஞ்சலம் உண்டாயிற்றே தவிர மனச் சாந்தி ஏற்படவில்லை.

மேல்மருவத்தூர் வந்தார். அன்னையிடம் அருள்வாக்கு கேட்டார். அன்னை அவரிடம் ''108, 1008 போற்றி படி'' என்று மட்டுமே சொல்லி அனுப்பினாள். சக்தி ஒளிக்கும் அவர் எழுதியிருந்தார். ''அதிலிருந்து ஓராண்டாகக் கிடைக்காத மனச்சாந்தி கிடைத்தது. சக்தி ஒளி படிக்கப் படிக்கப் பரமானந்தமாக இருக்கிறது!''

## என்னை ஈர்க்கும் வகையில் தொண்டு செய்!

சென்னையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், அன்னையின் தொண்டர். அவருக்கு ஏதோ சில பிரச்சனைகள்! அன்னையிடம் மூன்று முறை அருள்வாக்கு கேட்டார். ஒவ்வொரு முறையும் அன்னை கூறினாள். ''மகனே! இந்த மண்ணை மிதித்துவிட்ட உனக்கு என் அருள் எப்போதும் உண்டு! நீ என் பணிகளைச் செய்! உன் பணிகளை நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்றாள்.

அம்மா சொன்னதையே சொல்கிறதே, நம் பிரச்சனைகள் தீர்வதற்கு வழி சொல்லவில்லையே என்ற மனக்குறை அவருக்கு! ஒரு நண்பரிடம் குறைபட்டுக் கொண்டார்.

“இன்னொரு முறை விளக்கமாகக் கேட்டுவிட வேண்டியது தானே... ஏன் தயக்கம்?” என்றார் அவர் நண்பர். நான்காவது முறையாக அருள்வாக்கு கேட்டபோதும் அன்னை சொன்னதையே திருப்பிச் சொன்னாள்.

“அம்மா! நான் உன்னிடம் வரும்போதெல்லாம் நீ இதே வார்த்தைகளைத் தான் சொல்கிறாய்?” என்றார்.

உடனே அன்னை அவரைப் பார்த்து, “உனக்கு என்ன சொன்னாலும் ஏறாதடா மகனே! ஏறுகிற வகையில் சொல்கிறேன் கேள்!” என்று சொல்லி அவரிடம் கேள்வி மேல் கேள்வி கேட்க ஆரம்பித்தாள். அன்னை கேட்டதும் அவர் சொன்ன பதில்களும் வருமாறு:

“பலமாடிக் கட்டடங்களில் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு என்னடா இருக்கும்?”

“தண்ணீர்த் தொட்டி இருக்கும் தாயே!”

“சரிடா மகனே! அதிலே தேக்கி வைத்திருக்கும் தண்ணீரை ஒவ்வொரு தளத்திற்கும் அனுப்புவதற்கு என்னடா இருக்கும்?”

“குழாய்கள் இருக்கும் தாயே!”

“சரி! ஒரே சமயத்தில் அத்தனை தளத்தில் இருப்பவனும் குழாயைத் திறந்தால் என்னடா நடக்கும்?”

“தண்ணீர் வரும் தாயே!”

- இப்படி அவர் பதில் சொன்னதும் அன்னை, “இந்த இடத்தில் தான் உனக்கு ஏறவில்லை. நீ சொன்னது போல் தண்ணீர் வரும். ஆனால் தரைமட்டத்தில் இருக்கிற தளத்திற்குத் தான் அதிகத் தண்ணீர் வரும். உயர உயர வேகம் குறைந்துவிடுமடா மகனே!’ என்றாள் அன்னை.

மேலும், “நான் எல்லோருக்கும் அருள் கொடுக்கிறேன். ஆனால் என்னை ஈர்ப்பதற்குத் தகுந்தாற்போல் எவன் ஒருவன் தொண்டு செய்கிறானோ அவனுக்கு அந்த அருள் வேகமாகச் செல்கிறது. அவ்வாறு அம்மாவை ஈர்க்கும் வகையில் உன் தொண்டு அமைந்தால் உன் பிரச்சனைகள் தீர்ந்துவிடுமடா மகனே!” என்றாள் அன்னை.

“அம்மா...” என்று இழுத்தார் அவர். “தொண்டு செய்! தொடர்ந்து செய்! உத்தரவு” என்றாள் அன்னை.



## தாய்க்குத் திருஷ்டி எதற்கு?

தொண்டர் ஒருவர், அன்னையிடம், “தாயே! எங்களுக்குத் தான் திருஷ்டி! உனக்கு அலங்காரம் எல்லாம் முடிந்த பிறகு திருஷ்டி கழிக்கச் சொல்கிறாயே! உனக்குக் கூடவா திருஷ்டி கழிக்க வேண்டும்?” என்று கேட்டார். அதற்கு அளித்த விளக்கம் இது!

“மகனே! ஒரு தாய் தன் குழந்தையை நீராட்டி, உடல் துடைத்து தலைக்கு எண்ணெய் தடவித் தலை வாரி - முகத்துக்கு வாசனைத் தூள் பூசி, இறுதியில் குழந்தையின் அழகைப் பார்த்துத் தன் கண்ணே பட்டுவிடும் என்று ஒரு திருஷ்டிப் பொட்டு வைக்கிறாள் அல்லவா? அதுபோல் எனக்கு நீ அலங்காரமெல்லாம் செய்து முடிக்கிற வரை நீ எனக்குத் தாய் ஆகிவிடுகிறாய். நான் குழந்தையாகி விடுகிறேன். அதன் பிறகே நீ என் மகனாகிறாய். நான் தாயாகிறேன்” என்றாள்.

## வெயிலும் – புழுக்கமும்:

“தாயே! இந்த ஆலய எல்லைக்குள் வந்ததும் இனம் புரியாத மகிழ்ச்சியும் மன அமைதியும் கிடைக்கிறது. நீயோ மகா சக்தி! உன்னிடம் வந்து சென்றதும் மீண்டும் கவலைகள் தொற்றிக் கொள்கின்றனவே. அது ஏன்?” என்று தொண்டர் ஒருவர் கேட்டார்.

அதுகேட்டு அன்னை கூறியருளினாள். “மகனே! வெளியில் அலைந்துவிட்டு மரத்தின் நிழலில் ஒதுங்கினாலும் புழுக்கம் உண்டல்லவா? ஆர, அமர ஓய்வு எடுத்த பிறகு தானே புழுக்கம் போகும்? இன்பம்-துன்பம், பகல்-இரவு, வெயில்-நிழல், இருள்-ஒளி என்று இப்படித் தானே பிரபஞ்சத்தைப் படைத்திருக்கிறேன்?

எல்லா ஆன்மாக்களையும் ஈர்க்கிற சக்தியாக நான் இருப்பதால் இந்த எல்லைக்குள் வரும்பொழுது மற்றவற்றையெல்லாம் மறக்க வைக்கிறேன். இந்த ஆலய எல்லையைத் தாண்டும்போது உன் போக்கிலே விட்டுவிடுகிறேன். மறுபடியும் உன்னை மாயை சூழ்ந்து கொள்கிறது” என்றாள் அன்னை.

## மாதா, பிதா, குரு, தெய்வம்:

அன்பர் ஒருவர் அருள்வாக்கில் அன்னையிடம் கேட்டார்.

“தாயே! மாதா, பிதா, குரு, தெய்வம் என்கிறார்கள். தெய்வத்துக்குக் கடைசி இடம் தானே கொடுக்கப்பட்டிருக்கிறது? அது ஏன்?” என்றார்.

“மகனே! உன்னை வயிற்றில் சுமந்தவள் உன் தாய். அதனால் அவளுக்கு முதலிடம்! நீ பிறக்கக் காரணமானவன் உன் தந்தை!

அவனுக்கு இரண்டாம் இடம்! என்னை உனக்குக் காட்டிக் கொடுத்து உன்னை என்னிடம் கொண்டு வந்து சேர்ப்பவன் குரு! அவனுக்கு மூன்றாம் இடம்! மாதா, பிதா, குரு மூவரையும் ஒருசேரக் காப்பது தெய்வம்; அதனால் தான் தெய்வத்திற்கு நான்காம் இடம்!'' என்று விளக்கம் சொல்லி அனுப்பினாள் அன்னை.

## கலியுகத்தில் வந்து மாட்டிக் கொண்டாய்:

"தாயே! இந்த நாட்டில் இவ்வளவு அநியாயங்களும், அக்கிரமங்களும் நடக்கின்றனவே? இவ்வளவையும் பார்த்துக் கொண்டு இருக்கிறாயே?'' என்று கேட்டார் ஒருவர். அவருக்கு அன்னை கூறியது இது!

"என்ன செய்வது மகனே! நீ கலியுகத்தில் வந்து மாட்டிக் கொண்டாய். உலகெங்கும் தீமையும், அக்கிரமங்களும் நடக்கிறதே என்று நீ மட்டும் கவலைப்பட்டு ஆகப்போவது ஒன்றுமில்லை. வெயில் கொடுமையாகத் தான் இருக்கிறது. தாயே நான் என்ன செய்வேன் என்று என்னிடம் வந்தால் வெயில் கொடுமை தாக்காதவாறு உனக்குக் குடை கொடுப்பேன். நிழல் பெறச்செய்வேன். நீ நிழலில் நடந்து போகலாம். தாயை நோக்கி வருபவனுக்குத் தான் நான் குடை அளிக்க முடியும். என்னிடம் வரவே விரும்பாதவனுக்கு நான் என்ன செய்ய முடியும்?'' என்றாள்.

## தகப்பன் பாவத்தில் பிள்ளைக்கும் பங்குண்டு:

இளைஞர் ஒருவர். அவருக்கு என்னென்ன பிரச்சனையோ? அவர் அருள்வாக்கில் அன்னையிடம், "அம்மா! நான் யாருக்கு என்ன பாவம் செய்தேன் எனக்கு ஏன் இவ்வளவு கஷ்டங்கள்?'' என்று கேட்டார். "என்ன செய்வது மகனே! உன் தகப்பன் செய்த பாவம் உன்னைத் தாக்குகிறது'' என்றாள் அன்னை.

"இது என்ன நியாயம் தாயே? என் தகப்பன் செய்த பாவத்திற்கு நான் எப்படிப் பொறுப்பாளியாக முடியும்?'' என்று கேட்டார் அந்த இளைஞர்.

அது கேட்ட அன்னை, "உன் தகப்பன் சொத்தில் உனக்கு உரிமை கோருகிறாய் அல்லவா மகனே? அதற்கு உனக்கு உரிமை இருக்கிறபோது, அதை அனுபவிக்கிற உனக்கு உன் தகப்பன் பாவத்திலும் பங்குண்டு'' என்றாள் அன்னை.

## 108 மந்திரம் சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்!

தாம்பரம் - சேலையூரைச் சேர்ந்த அன்பர் ஒருவர், அன்னையிடம் தீவிர பக்தி கொண்டவர். ஓரளவு ஆன்மிகத் தெளிவு பெற்றவர்.



அவர் அன்னையிடம் அருள்வாக்கில் கேட்டார். "அம்மா! எனக்கு மறுபிறவி என்றாலே பயமாக இருக்கிறது தாயே! இந்தப் பிறவியோடு என் கணக்கை முடித்துவிடு!'' என்றார். அது கேட்ட அன்னை, "தினந்தோறும் 108 மந்திரம் சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பாரடா மகனே!'' என்றாள்.

## எது முன்னேற்றம்?

ஆசிரியர் ஒருவர், அன்னையின் பக்தர். அவருக்கு நீண்ட நாட்களாக ஒரு மனக்குறை. "நம்மோடு படித்தவர்கள் எல்லாம் பதவி உயர்வு பெற்று வசதி வாய்ப்போடு இருக்கிறார்களே! அம்மா யார் யாருக்கோ வாழ்க்கையில் முன்னேற்றம் அளிக்கிறாளே... நமக்குப் பதவியிலும் முன்னேற்றம் இல்லை... சொந்த வீடு கூட இல்லாமல் கிடக்கிறோமே. அன்னையிடம் வந்துங்கூட ஒருவித முன்னேற்றமும் அடையாமல் இருக்கிறோமே...''

ஒரு நாள் அவருக்கு அருள்வாக்கில் அன்னை கூறினாள். "மகனே! பட்டம், பதவி பெறுவது முன்னேற்றமல்ல. வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வது முன்னேற்றமல்ல. விஞ்ஞான வசதிகளைப் பெருக்கிக் கொள்வது முன்னேற்றமல்ல. காசு, பணம் கூடுவது முன்னேற்றமல்ல! மனத்தையடக்கிப் புலன்களை ஒடுக்கி என்றைக்கு என்னிடம் வந்து சேர்கிறாயோ அதுதானடா முன்னேற்றம்! மற்ற எதுவுமே முன்னேற்றம் அல்லடா!'' என்றாள்.

## குழந்தையின் வளர்ச்சி தாய்க்குத் தான் தெரியும்:

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த அன்னையின் பக்தர் ஒருவர். அவர் அன்னையிடம் அருள் வாக்குக் கேட்கச் சென்றார். "மகனே! ஆன்மிகத்தில் நீ முன்னேறி வருகிறாய். மகிழ்ச்சி மகனே!'' என்றாள் அன்னை.

அது கேட்ட அவர், "அம்மா! உன்னிடம் வந்தது முதல் இன்று வரை அப்படியே தானே இருக்கிறேன்? ஒரு வளர்ச்சியும் எனக்குத் தெரியவில்லையே?'' என்றார்.

"முட்டாள்! குழந்தையின் வளர்ச்சி தாய்க்குத் தெரியுமா? குழந்தைக்குத் தெரியுமா? தாய்க்குத் தானடா குழந்தையின் வளர்ச்சி தெரியும்'' என்றாள் அன்னை.

## இது தான் உனக்கு உபதேசம்:

அன்னையின் நீண்ட நாள் பக்தர் ஒருவர். அந்தரங்க பக்தி கொண்டவர் அவர். அவருக்கு அன்னை கூறியது இது!

“மகனே! எங்கே பிறந்தோம்? எப்படி வளர்ந்தோம்? எங்கே படித்தோம்? மருவத்தூருக்கு எப்படி வந்து சேர்ந்தோம்? அடிக்கடி இதனையே எண்ணிக் கொண்டிரு! இதுதான் நான் உனக்குக் கொடுக்கிற உபதேசம்!” என்றாள் அன்னை.

## பசி ஏப்பக்காரனுக்கு அன்னதானம் செய்!

சென்னையில் உள்ள வழக்கறிஞர் ஒருவர்; 15 ஆண்டுகளாகத் தவறாமல் சபரிமலை சென்று இருமுடி செலுத்திவிட்டு வரும் வழக்கமுடையவர். அவ்வாறு செல்கிற போதெல்லாம் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அறுசுவை விருந்து அளித்துவிட்டு அதன் பிறகே மலைக்குப் புறப்படுவார். நாமும் அன்னதானம் செய்துவிட்டுத்தான் மலைக்குப் புறப்படுகிறோம் என்பது அவர் எண்ணம்.

அவர் ஒருநாள் அன்னையிடம் அருள்வாக்கு கேட்டபோது அன்னை கூறினாள். “மகனே! ஆண்டுதோறும் சபரிமலைக்குச் செல்லும் முன்பாக அன்னதானம் செய்வதாகக் கருதிக்கொண்டு புளியேப்பக்காரனுக்கு விருந்து படைக்கிறாய்! இங்கே வந்து பசியேப்பக்காரனுக்கு அன்னதானம் செய்! வரும்போதெல்லாம் இங்கே தியானம் செய்! இங்கே கிடைக்கிற தியான அனுபவங்களை வைத்து என்னைப் புரிந்து கொள்!” என்றாள். அவ்வாறு செய்யத் தொடங்கிய பிறகு அவருக்குத் தியானத்தில் பல அனுபவங்களைக் கொடுத்து வருகிறாள் அன்னை.

## அன்னை கொடுத்த புள்ளி விவரம்:

1982-ஆம் ஆண்டு ஆதிபராசக்தி அறநிலைப் பொறுப்பாளர்களுக்கு, அருள்வாக்கு அளித்தபோது அன்னையே ஒரு புள்ளிவிவரம் கொடுத்தாள். அந்த ஆண்டு எத்தனை பேர் என்னென்ன பிரச்சனைகளோடு வந்தார்கள்? எத்தனை பேர்க்கு அருள் பாலித்தேன்? சிலர் பலன் பெறாமல் போனது ஏன்? என்று குறிப்பிட்டாள்.

“1982-ஆம் ஆண்டு புற்றுநோயுடன் என் சந்நிதிக்கு வந்தவர்கள் 1200 பேர். அவருள் குணம் பெற்றவர்கள் 1100 பேர். குணமடைந்து கொண்டு வருபவர்கள் 50 பேர். நான் சொன்னபடி மருந்துண்ணாமல் அலட்சியமாக இருந்தவர்கள் 25 பேர். இறந்தவர்கள் 25 பேர். காரணம் வினைப்பயன்.

திருமணம் கைகூட வேண்டி வந்தவர்கள் 5000 பேர். இவருள் 4001 பேர்க்குத் திருமணம் முடிந்துவிட்டது. மற்றவர்களுக்குத் திருமணம் ஆகும் நிலை உருவாகி வருகிறது.



குழந்தைப் பேறு வேண்டி வந்தவர்கள் 501 பேர். அருள் பெற்றவர்கள் 329 பேர். எஞ்சியவர்க்கு உரிய காலம் வரும்போது கிடைக்கும்” என்றாள் அன்னை.

## கல்லின் இடையிலும் செடி வளர்கிறது!

அன்பர் ஒருவர் தன் மகளுக்கு மணம் முடிக்க நல்ல வரன் தேடிக் கொண்டிருந்தார். நல்ல வரன் கிடைக்காமல் சலிப்பும் சோர்வும் அடைந்து விட்டார். “அடி தாயே! பண பலமும் இல்லை. படை பலமும் இல்லை. ஒரு சிறுபான்மைச் சமூகத்தில் என்னைப் பிறக்க வைத்துவிட்டாயே! எந்தப் பலமும் இல்லாமல் என் மகளுக்கு எப்படி இந்தத் திருமணத்தை நடத்தி முடிக்கப் போகிறேன்? என்று மனம் நொந்து கொண்டு அன்னையிடம் அருள்வாக்கு கேட்பதற்காகச் சென்று அமர்ந்தார்.

“மகனே! காட்டிலேயும் செடிகொடிகள் வளர்கின்றன. விளை நிலத்திலேயும் செடிகொடிகள் வளர்கின்றன. மலைமேலேயும் செடி கொடிகள் வளர்கின்றன. ஒரு கோபுரத்தின் கல் கட்டிடத்தின் இடையிலேயும் செடி கொடிகள் வளர்கின்றன. கல்லின் இடையிலே வளர்கின்ற செடி கொடிகளுக்கு யார் தண்ணீர் ஊற்றுகிறார்கள்? யார் உதவியில்லாமலும் அந்தச் செடி வளரத்தானே செய்கிறது? வேண்டாத கவலைகளை வளர்த்துக் கொண்டு புலம்பாதேடா மகனே! எதை எதை எப்போது எப்படிச் செய்ய வேண்டும் என்பது அம்மாவுக்குத் தெரியும் போ!” என்றாள் அன்னை!

## கடல் போலச் செல்வம்; அலைபோலத் துன்பம்!

தொழில் அதிபர் ஒருவர். அவரிடம் ஒருமுறை அன்னை அருள்வாக்கின் போது கேட்டாள். “அடிகளார் உன் வீட்டிற்கு வந்து, பாதபூசையை ஏற்றுக் கொண்டு வந்த பிறகு உன் தொழில் ஓகோ என்று வளர்ந்து வருகிறது அல்லவா மகனே?” என்றாள். அது கேட்ட அவர், அகமும், முகமும் மலர, “ஆமாம்மா! ஆமாம்மா!” என்றார். “அதிக சந்தோஷம் அடையாதே மகனே! கடல்போல செல்வம் உண்டு. அலைபோல் கஷ்டங்களும் உண்டு” என்றாள் அன்னை.

## தோலும் – சுளையும்:

அன்னைக்கு அயராமல் தொண்டு செய்யும் அன்பர் ஒருவர். “தாயே! உனக்கு அதிகமாகத் தொண்டு செய்பவனுக்குத்தான் அடிக்கடி வேலை வைக்கிறாய்; சோதனை வைக்கிறாய். நீ எதைச் சொன்னாலும் தலையாட்டிக் கொண்டு சிலபேர் போய்விடுகின்றனர். உன் கட்டளையைச் சிரம் மேற்கொண்டு செய்ய மாட்டேன்

என்கிறார்கள். அப்பபடிப்பட்ட அவர்களை நீ ஒன்றும் கேட்கமாட்டேன் என்கிறாயே?'' என்று முறையிட்டார். அந்த அன்பரின் மனக்குமுறலைக் கேட்ட அன்னை கூறினாள்.

'என்ன செய்வது மகனே! இதுவரை சுளைகளையே விழுங்கிக் கொண்டு வந்தாய். தோலை அப்புறமாக எடுத்து எறிந்து இருக்க வேண்டும். அதனைச் செய்யாமல் தோலையும் சிறுகச் சிறுகச் சேர்த்துக் கொண்டே வந்தாய். தோல் மூட்டையாகிவிட்டது. நாள்பட நாள்பட அழுகிவிட்டது. நாற்றம் எடுக்கும் நிலையும் வந்துவிட்டது. தோலையெல்லம் வீசி எறிந்துவிட வேண்டும் அல்லவா? அதற்காகத்தான் மகனே! உன்னைப் போன்ற சிலரைக் கசக்கிப் பிழிகிறேன்'' என்றாள்.

அன்னை இவ்வாறு தோலும் சுளையும் வைத்து உவமையாகச் சொன்னதன் உட்பொருள் என்ன என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

பிறவிதோறும் நாம் செய்த நல்வினைகளின் பயனை அனுபவித்து இன்பம் அடைகிறோமே அது சுளையைத் தின்பதற்குச் சமம். பிறவிதோறும் சேர்த்துக் கொண்டு வந்த பாவங்களைப் போக்கிக் கொள்ளாமல் இருக்கின்றோமே அது தோல்களையெல்லாம் கீழே வீசி எறிந்துவிடாமல் மூட்டை கட்டிக் கொண்டே வந்ததற்குச் சமம்.

மூட்டை பெரிதாகிவிட்டது. நாள்பட்டு நாள்பட்டு அந்தத் தோல்கள் நாற்றம் எடுக்கத் தொடங்கிவிட்டன. நாம் செய்த பாவங்களைப் போக்கிக் கொள்ள முயலாததால் அதன் விளைவாக நமக்குத் துன்பங்களும் துயரங்களும் அதிகமாகி வருகின்றன. வினைப் பயன்களால் வருகின்ற இவற்றைப் போக்கவே அன்னை சிலரைக் கசக்கிப் பிழிகின்றாள்.

## படுவது அடியானாலும் இருப்பது என் மடியில்!

அன்பர் ஒருவர் அன்னையிடம் கேட்டார். "தாயே! நேற்று வந்தவனுக்கெல்லாம் நீ அள்ளி அள்ளிக் கொடுக்கிறாய். அவனும் வாங்கிக் கொண்டு போய்விடுகிறான். இத்தனை வருடமாக உன்னை நாய்க்குட்டி போலச் சுற்றிக் கொண்டிருக்கிறேன். என்னை மட்டும் கவனிக்காமல் பாராமுகம் காட்டுகிறாயே? எங்களுக்கே அடிக்கடி சோதனைகள் கொடுக்கிறாயே? இது உனக்கே நியாயமா?'' என்று மனக்குமுறலோடு கேட்டார்.

அதுகேட்டு அன்னை கூறினாள். "மகனே! என்னிடம் வருபவர்கள் சிலருக்கு வாரி வழங்குகிறேன். அவர்களும் அதைப்



பெற்று இன்புறுகிறார்கள். நான் இரு கைகளால் அள்ளிக் கொடுக்கும் பொழுது என் எதிரில் நின்று தான் பெறுகின்றார்கள். என்னுடன் ஐக்கியமாவது இல்லை. நான் கொடுக்கிற வரையில் தான் அவர்கள் வருவார்கள். கொடுப்பதை நிறுத்திக் கொண்டால் அவர்கள் உறவும் அத்துடனே முடிந்து விடுகிறது. அதற்குப் பிறகு நான் யாரோ? அவர்கள் யாரோ? என்ற நிலைதான் முடிவு.

ஆனால் எவன் ஒருவன் என்னிடம் வந்தவுடன் அடிபடுகிறானோ அவனை என் மடியில் வைத்தல்லவா அடிக்கின்றேன்? படுவது அடியானாலும் அவன் இருப்பது என் மடியில் தான் என்பதை அறிய வேண்டும். அது மாறாத உறவு. அந்த உறவு எளிதில் கிட்டாது'' என்றாள்.

## அவன் ஊழ்வினை அப்படிப் பேசவைக்கிறது:

ஆலயம் வளர்ச்சி அடையாத அந்த நாளில் ஓர் அன்பர் அருள்வாக்குக் கேட்க வந்தார். அவரிடம் அன்னை, ஆலயத்தின் முன்பாக ஒரு படிக்கட்டு அமைக்குமாறும், அவர் துன்பத்தைத் தீர்ப்பதாகவும் சொல்லி அனுப்பினாள். அதைக்கேட்டு வெளியில் வந்த அந்த அன்பர், "என் கஷ்டத்தைச் சொல்லி இந்த அம்மாவிடம் அருள்வாக்குக் கேட்க வந்தால், இந்த அம்மன் படிக்கட்டு வாங்கிப் போடு! உன் கஷ்டத்தைத் தீர்க்கிறேன் என்று சொல்கிறது. அதற்கு நூறு ரூபாய்க்கு மேல் செலவாகுமே! இப்படிக் கேட்கும் இது தெய்வமா? தெய்வமாக இருந்தால் இப்படிப் பேரம் பேசுமா? என்று கண்டபடித் திட்டிவிட்டு வெளியேறினார்.

அந்த ஆள் இப்படி அலட்சியமாக் கண்டபடித் திட்டிவிட்டுச் சென்றதைக் கேட்டுக் கொண்டிருந்த தொண்டர் ஒருவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உடனே அன்னையிடம் சென்று இதுபற்றி முறையிட்டார். அன்னை கூறினாள். "மகனே! அவன் செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தமாகப் படிக்கட்டு ஒன்றை வாங்கிப் போடு என்றேன். அப்படி அவன் வாங்கிப் போடுகின்ற படிக்கட்டில் பலபேர் கால்கள் பட்டுத் தேயும் அல்லவா? அப்படிப் பலபேர் கால்கள் அவன் வாங்கிப் போடும் படிக்கட்டில் பட்டுப்பட்டுத் தேய்ந்தால் அவன் பாவமும் தேயும். ஒரு புண்ணியத்தைச் செய்ய வைத்து அவன் பாவத்தைப் போக்க வழி சொன்னேன். அவனோ தெய்வம் பேரம் பேசுகிறது என்கிறான். நான் என்ன வழி காட்டினாலும் அவன் செய்த ஊழ்வினை அவனை அப்படிப் பேச வைக்கிறது. அவனிடம் எதுவும் கேட்காதே விட்டுவிடு!'' என்று கூறிவிட்டாள் அன்னை.

## கல்லால் அடிப்பதும் நானே! கல்லால் அடிபடுவதும் நானே!

ஒரு முறை ஆலயத்திற்கு வெளியே செவ்வாடைத் தொண்டர்களுக்கும், இந்த ஆலய வளர்ச்சிக்கு எதிரான கோஷ்டியினருக்கும் தகராறு ஏற்பட்டது. அது அடிதடி வரை சென்றது. செவ்வாடைத் தொண்டர்களைக் கற்களால் தாக்கினர்.

அன்று அருள்வாக்கு நடைபெற்ற வண்ணமிருந்தது. ஒரு தொண்டர், அன்னையிடம் "தாயே! செவ்வாடைத் தொண்டர்களைக் கல்லால் அடிக்கிறார்களே...!" என்று முறையிட்டார்.

அது கேட்டு அன்னை கூறிய பதில் இதுதான்!

"மகனே! கல்லால் அடிப்பதும் நானே!
கல்லால் அடிபடுவதும் நானே!"

## இடி மின்னல் பக்தி:

தொண்டர்கள் இருவருக்கு, அன்னை அருள்வாக்கில் கூறினாள். "வர வர உங்கள் மனத்தில் பக்தி குறைந்து வருகிறதடா மகனே! கஷ்டம் வருகிற போது தான் விழுந்து விழுந்து மந்திரம் படிக்கிறீர்கள். மற்ற நேரங்களில் அம்மாவின் நினைப்பு உறுதிப்படவில்லை. இந்த இடி, மின்னல் பக்தி உதவாது" என்றாள் அன்னை.

மழைக்கான சூழ்நிலை உருவாகிற போது தான் இடி இடிக்கிறது. மின்னல் மின்னுகிறது. அதுபோல துன்பம் வருவதற்கான சூழ்நிலைகளில் மட்டுமே சிலர், 108 1008 மந்திரங்களைப் படித்து வழிபடுகிறார்கள். கோயிலுக்கு ஓடி வந்து அங்கப்பிரதட்சணம் வருகிறார்கள். கோயில் தொண்டுகளில் கலந்து கொள்கிறார்கள்.

கஷ்டங்கள் வருகிறபோது மட்டும் அன்னையை நினைப்பது, வழிபடுவது, தொண்டு செய்ய வருவது என்ற இத்தகைய மனப்பான்மையை அன்னை, "இடி மின்னல் பக்தி" என்று குறிப்பிட்டாள்.

## சீதையைக் காப்பாற்றியது யார்?

அந்த அன்பர் ஒரு வைணவர். அவர் ஏதோ ஒரு பிரச்சனை குறித்து அன்னையிடம் அருள்வாக்கு கேட்டார். அவரது துன்பத்திற்குத் தீர்வு சொன்ன அன்னை, "தினமும் உன் பூஜை அறையில் என் படத்தையும் வைத்து வழிபட்டு வா!" என்றாள்.

"அம்மா! நானோ இராம பக்தன். உன் படத்தைப் பூஜை அறையில் எப்படி வைப்பேன்?" என்றார். அவரது பக்குவமின்மையைக் கண்ட அன்னை, "மகனே! உன்னுடைய இராமன் சீதையை நெருப்பில் குளித்து எழுந்து வா! என்று சோதனை வைத்தபோது அவளைக் காப்பாற்றியது எது? அது தான் என் சக்தி!" என்று கூறினாள்.



## எந்த மந்திரம் சொல்லி வழிபட்டாலும்...

முருக பக்தர் ஒருவர். "அம்மா! நானோ முருக பக்தன். முருகனையே இஷ்ட தெய்வமாகக் கொண்டவன். உன்னை நான் எப்படி வழிபடுவேன்?" என்று ஆற்றாமையோடு கூறினார். அதுகேட்டு அன்னை, "மகனே! நீ எந்தத் தெய்வத்தை எந்த மந்திரம் சொல்லி வழிபட்டாலும் அந்த மந்திரத்தை ஏற்பவள் நான் தானடா" என்றாள்.

## எல்லோருக்கும் எல்லாவற்றையும் அள்ளிக் கொடுத்துவிட முடியாது:

மாவட்டப் பிரச்சாரக்குழுத் தலைவர் ஒருவர். ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு அன்னையின் மகிமை பற்றிப் பேசினார்.

அப்போது அவர் குறிப்பிட்டார். "நீங்கள் எல்லோரும் ஒருமுறை மேல்மருவத்தூர் வாருங்கள். உங்களுக்கு எது கேட்டாலும் அம்மா கொடுப்பாள். என்ன கேட்டாலும் அம்மா கொடுப்பாள்" என்றார்.

சில நாட்கள் கழித்து அந்தத் தலைவர் அன்னையிடம் அருள்வாக்கு கேட்கப் போனார்.

"என்ன மகனே! அவனவனுக்கும் தேன் தடவுகிறாய்?" என்றாள் அன்னை.

"புரியலையேம்மா..! நான் யாருக்குத் தேன் தடவினேன்?" என்றார்.

"அம்மாவிடம் வாருங்கள். எது கேட்டாலும் அம்மா கொடுப்பாள். என்ன கேட்டாலும் கொடுப்பாள்! என்று கிராமங்களில் பிரச்சாரம் செய்கிறாயே! இப்படி அவனவனுக்கும் தேன் தடவி அனுப்பலாமா?" என்று வினாவினாள் அன்னை.

"அம்மா! நான் சொன்னது தப்பா? நீ நினைத்தால் கொடுக்க முடியாதா?" என்றார் அந்தத் தலைவர்.

"ஒரு பக்தன் என்ற முறையில் நீ அவ்வாறு பேசியது சரி! ஆனால் மகனே! எல்லோருக்கும் எல்லாவற்றையும் அள்ளிக் கொடுத்துவிட முடியாது மகனே! அவனவன் பாவ, புண்ணியம் என்ற கணக்கு உண்டு மகனே!" என்றாள் அன்னை.

## ஊசிமுனைத் தவமா செய்துவிட்டாய்?

"அம்மா! நீ சொல்கிறபடியே ஆன்மிகப் பணிகள் செய்கிறோம். அப்படியிருந்தும் அவற்றைச் செய்ய முடியாதபடிப் பல இடைஞ்சல்களும், தடைகளும் வருகின்றனவே! அம்மா பணியில் இப்படி வரலாமா?" என்று கேட்டார் ஒருவர்.

"நீ ஈடுபடுகிற காரியமெல்லாம் உடனுக்குடன் நிறைவேறுவதற்கு நீ என்ன ஊசிமுனைத் தவமா செய்துவிட்டாய் மகனே!" என்று திருப்பிக் கேட்டாள் அன்னை.

**இறந்த பிறகு தகப்பன் சொத்து:**

தூத்துக்குடியைச் சேர்ந்த அன்பர் ஒருவர் அன்னையிடம் அருள்வாக்கு கேட்டார். அவருக்குச் சொல்ல வேண்டியவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லிய அன்னை, இறுதியாக ஒன்றைச் சொல்லியருளினாள்.

"மகனே! தகப்பன் இறந்தபிறகு அவன் சம்பாதித்த சொத்துக்களைத் தான தருமம் செய்துவிட வேண்டுமடா! எவன் அவ்வாறு செய்கிறான்? இதையெல்லாம் வெளியே போய் எடுத்துச் சொல் மகனே!" என்றாள்.

**இனி எந்த யுகத்தில் அவதாரமாக வரப்போகிறேன்?**

வட ஆற்காடு மாவட்டத்தில் ஆன்மிககுரு அடிகளார் அவர்கள் ஆன்மிகப் பயணம் மேற்கொண்டு வருவதாக இருந்தது.

அம்மா மன்றத்துக்கு வரும்போது, ஒவ்வொரு மன்றத்திலும் வேள்விப்பூசை வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வது நல்லது என்று கூறியிருந்தார் மாவட்டத் தலைவர்.

வாரவழிபாட்டு மன்றத் தலைவர் ஒருவர், "வேள்விப்பூசை என்றால் ஆயிரம், இரண்டாயிரம் எனச் செலவாகும். எனவே அவருக்கு அதில் மனமில்லை. "வேள்வி செய்து கூப்பிட்டால் தான் அம்மா வருமா? இல்லாவிட்டால் அம்மா வராதா?" என்று கேட்டார்.

இவ்வாறு மன்றத்தலைவர்கள் ஒருசிலர் கேட்கிறார்களே எனக்கருதி வேள்விப் பொறுப்பாளர் அன்னையிடம் சென்று முறையிட்டார்.

"மகனே! அவன் வேள்வி வைத்து என்னைக் கூப்பிட்டாலும் சரி! வேள்வியில்லாமல் கூப்பிட்டாலும் சரி! நான் போகிற வழியில் மன்றம் இருக்குமானால் வருகிறேன் மகனே! இனி எந்த யுகத்தில் நான் மறுபடியும் அவதாரமாக வரப்போகிறேன் மகனே!" என்றாள் அன்னை.





# 2. அன்னையின் அருள்வாக்கு

## ஆலயம், மேல்மருவத்தூர், ஆதிபராசக்தி

**உலகம் என்னுடையது:**

"உலகம் என்னுடையது. அதனை இயக்கும் சக்தியே ஆதிபராசக்தி! பம்பரம் சுற்றுவதற்கு விரலும் சாட்டையும் தான் தேவை என்று நினைக்கலாம். அது சுற்றுவதற்கு விசை அவசியம். சக்தி அவசியம். ஆடுவது யார்? ஆட்டுவிப்பது யார்? என்பதை எல்லாம் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்".

**சக்திக்கு அப்பாற்பட்டது:**

"சக்திக்கு அப்பாற்பட்டது எதுவும் இல்லை. சக்தியே சாதிக்கும் தன்மை படைத்தது".

"ஓடுவதும் நானே! உடைவதும் நானே! காடும் நானே! களர் நிலமும் நானே! பார்க்கும் பொருளும் நானே! பார்க்கப்படும் பொருள்களும் நானே!"

**தன் பரத்துவம் சொல்லியது:**

"ஆணிவேரும், சல்லிவேரும் இல்லாமலேயே மரம் வளர்ப்பவள் நான்! சிறு தெய்வங்களெல்லாம் என்னை எவ்வாறு வந்து வழிபடுகின்றன என்பதைக்கூட ஒருசிலர்க்குக் காட்டுவேன்".

**ஆதிபராசக்தி:**

"எனக்கு உருவம் கிடையாது. என்னுடைய தோற்றங்கள் அணு! சோதி! குழந்தை! பாம்பு! விளக்கு! சித்தர் முதலியன ஆகும்".

**சித்தர்கள் தலைவி நானே:**

"தேவர்களுக்கும் சித்தர்கள் உண்டு. தேவிகளுக்கும் சித்தர்கள் உண்டு. சித்தர்களின் தலைவி நானே!"

**ஆராயாதே!**

"என்னையும் என் வழிமுறைகளையும் ஆராயாதே! அவை உன் மூளைக்கு எட்டா!"

**தமிழில் அருள்வாக்கு:**

“தாய்ப்பாசம் உள்ள மண் தமிழ்மண்! இயற்கையை நம்புகிற மண் இந்த மண்! எனவே தான் இந்த மண்ணிலே நான் தமிழில் பேசி அருள்வாக்கு தருகிறேன் மகனே!”

**அருள்வாக்கு:**

“குஞ்சுக்குத் தாய்ப்பறவை இரைதேடி உணவளிக்கிறது. குஞ்சு சிறகடித்துப் பறக்கும் போது தாய் தன் குஞ்சுக்கு இரை தேடுவதில்லை. ஆன்மிக உலகில் மனிதன் சிறகடித்துப் பறக்கும் வரை அன்னையின் அருள்வாக்கு உண்டு”.

**ஒரு குழந்தைக்குச் சொல்வது போல...**

“ஒரு தாய் எவ்வாறு தன் குழந்தையை அன்போடு நீராட்டி உடை உடுத்து உணவூட்டுகிறாளோ அதுபோலவே உங்களுக்கு ஒவ்வொன்றையும் நான் சொல்லிக்கொடுத்து வருகிறேன். அதை அறிந்து பணிசெய்வது உங்களிடந்தான் உள்ளது. வந்த வாய்ப்பை நழுவவிடாதீர்கள்!”

**நான் கூறும் வார்த்தைகள்:**

“நான் கூறும் இந்த வார்த்தைகள் அனைத்தும் காற்றோடு காற்றாகப் போய்விடாமல் பார்த்துக் கொள்வது உங்கள் பொறுப்பு! அவை வீணாகப் போய்விடாமல் பார்த்துக் கொள்வது உங்கள் கடமை!”

**உள்ளே ஒன்று; வெளியே ஒன்று:**

“என்னிடம் அருள்வாக்குக் கேட்டுவிட்டு உள்ளே ஒன்றும், வெளியே ஒன்றுமாகத் திரித்துச் சொல்லாதே!”

**என்னையே சரண் அடைந்தவர்களுக்கு:**

“என்னையே முழுவதும் நம்பிச் சரணடைந்த பக்தர்களுக்கு ஜாதகம் பார்ப்பது, சோதிடம், நாடி சோதிடம் சென்று ஏடு எடுத்துப் பார்ப்பது என இவையெல்லாம் தேவையில்லாதவை. அவற்றால் பயனும் இல்லை”.

**அவநம்பிக்கையை உண்டாக்கி விடுகிறேன்:**

“மகனே! குறிப்பிட்ட ஒருசிலர் இங்கே வரவேண்டாம் என்று நினைக்கிறேன். அவர்கள் வினையை அனுபவித்தே தீரவேண்டும் என்று எண்ணுகிறேன். அதற்கு வழியென்ன? அவர்களைத் தாயிடம் வராமல் செய்துவிடுவது ஒன்றுதான் வழி! தாயிடம் வந்தால், தாயின் மண்ணை மிதித்தால் அதற்குரிய பலனை நான் தந்தேயாக வேண்டும். இது நடைபெறாமலிருக்க ஒரே வழி அவர்களை இங்கு வரவிடாமல் செய்வதேயாகும். அது நடைபெற என்ன வழி? என்பால் அவநம்பிக்கை உண்டாகுமாறு செய்துவிடுகிறேன். இவ்வாறு வருபவர்கள் ஆன்மிக அடிப்படையில் வருவதில்லை மகனே! ஆன்மிக அடிப்படையில் வருபவர் என்னைத் தவிர வேறெதையும் விரும்பியோ வேண்டியோ வருவதில்லை. எனவே அவனை வெருட்டி அனுப்ப வேண்டிய தேவையில்லை. பயன் கருதி ஓர் இலாபத்தைக் கருதி வருபர்களுக்கு அந்த இலாபம் இல்லாமல் செய்துவிட்டால் அவர்கள் வருவதை உடனே நிறுத்தி விடுவார்கள். இதனாலேயே நடைபெறாததை நடைபெறும் என்று கூறி அவர்கள் நம்பிக்கையைக் குலைத்துவிடுகிறேன்”.

**எல்லா மதமும் இங்கு வந்து சேரும்:**

“உலகத்தில் உள்ள எம்மதமும் இங்கே வந்து சேரும். எங்கோ பிறக்கும் நதிகளெல்லாம் கடலில் வந்து தான் கலக்கின்றன. அது போலப் பல்வேறு மதங்களைச் சேர்ந்த என் குழந்தைகள் இந்தச் சந்நிதியில் வந்து சேர்வார்கள்”.

**மேல்மருவத்தூர் மகிமை:**

“இங்கே ஆலயத்திற்கு அடிக்கடி வந்து செல்வதன் காரணமாகப் பல ஆபத்துக்களிலிருந்து நீங்கள் காப்பாற்றப் படுகிறீர்கள். இங்கே தியானம் செய்துவிட்டுச் சென்றால் இங்கு வந்து செல்வதற்கான முழுப்பலன் உண்டு!”

**மருவத்தூர் மண்ணும் – ஆன்ம ஞானமும்**

“எவன் ஒருவன் ஆதிபராசக்தி மண்ணை மிதித்துவிட்டானோ அன்றே அவனுக்கு ஆன்மிக ஞானம் வர ஆரம்பித்துவிட்டதென்று பொருள். அவன் அடிக்கடி இந்த மண்ணை மிதிக்க மிதிக்க அது அதிகமாக வளரும்”.

**மருவத்தூர் மண்:**

“இந்த மண்ணை மிதித்தாலே அதற்கு ஏற்ற பலன் உண்டு”.

**மேல்மருவத்தூர் பற்றி...**

“இந்த இடம் திறந்தவெளி போன்றது. இங்கே குறுகிய எண்ணங்களுக்கு இடமில்லை. மனித இனத்திற்குள் பாகுபாடு தோன்றக்கூடாது. சென்ற பிறப்பில் செய்த புண்ணியப்பலன்களால் தான் நீங்கள் என்னிடம் அருள்வாக்கு கேட்கிறீர்கள்!”

**மருவத்தூர் உலகம்:**

“அணுவைப் பிரிக்கலாம். அந்த அணுவின் உள்ளே இருக்கும் கருவைப் பிரித்தால் என்ன ஆகும்? மனித இனமே அழிந்துவிடும். கரு உலகம் காக்க மறுஉலகம் தேவை. அதற்கு இந்த மருவத்தூர் உலகம் தேவை”.

**மேல்மருவத்தூர் ஆன்மிகம்:**

“பொன்னுக்கும், பொருளுக்குந்தான் பிற ஆன்மிக இடங்களில் முக்கியத்துவம். அருளையும் ஆன்மாவையும் வளர்ப்பது இந்த இடம். தவிர வேறு எங்கும் இல்லையென்பதைப் புரிந்து கொள்”.

**மேல்மருவத்தூர்:**

“எவ்வளவுதான் ஆழமாகக் கிணற்றை வெட்டினாலும் மழை பெய்தால்தான் கிணறு நிரம்பும். எத்தனை முறை மன்றத்திற்குச் சென்றாலும் போதாது. இங்கே அடிக்கடி ஆலயம் வந்து சென்று கொண்டிருக்க வேண்டும்”.

**அடிகளாரும் – மருவத்தூரும்:**

“ஆன்மிகம், கட்டுப்பாடு, ஒழுங்கு, அமைதி, பொறுப்பு, சமாதானம் - இவற்றை மருவத்தூர் மண்ணிலிருந்துதான் பெற முடியும். இந்த மருவத்தூர் மண்ணிற்கே அடிகளாரால்தான் பெருமை!”

**எனக்கு விருப்பு, வெறுப்பு இல்லை:**

“எத்தனை தவறுகள் செய்தாலும் அவனும் என் பிள்ளைதான். நான் பெற்ற பிள்ளைகளுள் ஒருவன் கொலைகாரன். ஒருவன் குடிகாரன். ஒருவன் கள்ளக்கடத்தல் செய்பவன். ஒருவன் கள்ள வாணிபம் செய்பவன். ஒருவன் ஞானி. ஒருவன் பெரும் கல்விமான். இவர்கள் அனைவருமே என் பிள்ளைகள் தாம். இப்பிள்ளைகளில் ஒருவன்மீது விருப்போ மற்றவன் மீது வெறுப்போ எனக்கில்லை. ஞானி என்பதால் ஒருவனை விரும்புவதும் கொலைகாரன் என்பதால் ஒருவனை வெறுப்பதும் என்பால் இல்லை”.

**எல்லோரையும் ஏற்றுக்கொள்கிறேன்:**

“யார் இங்கு வரலாம்; யார் வரக்கூடாது என்று கூற யாருக்கும் உரிமையில்லை. எவ்வளவு தீய குழந்தையானாலும் தாயைத் தேடி வரும். குழந்தையைத் தடுத்து நிறுத்த யாருக்கும் அதிகாரம் இல்லை. என்னேயே இல்லை என்று சொற்பொழிவு செய்துவிட்டு இரகசியமாக



வருபவனையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். யாரிடமும் விருப்போ, வெறுப்போ எனக்கில்லை”.

**பதவிகள் கொடுப்பது ஏன்?**

“இங்கே நான் ஒருவனுக்குப் பதவிகள் கொடுப்பது அவன் பட்டம், படிப்பு, பணம் பதவிகளைப் பொறுத்து அல்ல மகனே! அவனது பூர்வபுண்ணியத்தின் பலனை வைத்துத்தான் மகனே!”

**மேல்மருவத்தூரின் மகிமை:**

“இங்கேதான் உனக்கு நிம்மதி கிடைக்கும்; அமைதி கிடைக்கும்; உணவிற்கும் வழி கிடைக்கும்; உறக்கம் கிடைக்கும். ஏன் தெரியுமா? நானே இங்கு வந்திருக்கிறேன்!

கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவது போல, தாயான என்னை உறுதியாகப் பற்றிக்கொள்ள முயல்வதை விட்டுவிட்டு அங்கும் இங்கும் ஏன் அலைகிறாய்?”

**ஆதிபராசக்தி கோயிலே சிறந்தது ஏன்?**

“எல்லாக் கோயில்களையும் விட இந்த ஆதிபராசக்தி கோயில்தான் சிறந்தது. எனது அவதாரமான அடிகளார் இங்கேதான் இருக்கிறான். இங்கேதான் பஞ்சபூதங்களுக்கு வழிபாடு நடக்கிறது. இங்கேதான் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

ஏதோ ஏழை எளியவர்களுக்குச் சோறு போடுகிற உணவிடம்; பயணிகளுக்கு உறைவிடம் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது.

உங்கள் உள்ளுணர்வுகளைப் பண்படுத்தவும், உங்கள் உள்ளத்தில் உண்மை வளரவும் வேண்டியே இந்த ஆலயம். அதற்காகவே இங்கே விழாக்கள்!”

**வழிகாட்டி மரம்!**

“ஒரு வழிகாட்டி மரம் இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால்தான் பிறருக்கு வழி காட்ட முடியும். அதை உன்னுடைய வீட்டில் எடுத்துக்கொண்டு போய் வைத்துக் கொண்டால் பிறருக்கு வழிகாட்ட முடியுமா?

நான் உங்கள் அனைவருக்கும் வழிகாட்டி மரமாக வந்திருக்கிறேன். நான் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால்தானே அனைவருக்கும் வழிகாட்ட முடியும்? நான் ஒருவருக்கும் தனிப்பட்ட சொத்து அல்ல!”

**குருவின் துணை:**

“ஆன்மிகம் தான் உங்களைக் கரைசேர்க்க முடியும். ஒவ்வொருவரும் ஒரு குருவை நாடிப் போகிறார்கள். தென்னை மரம் வளர்வதற்கு எப்படி குருத்து ஓலை தேவைப்படுகிறதோ, அதுபோல ஆன்மிகத்தில் வளர்வதற்கு ஒரு குரு மிகவும் தேவை.

ஒரு குருவினால் தான் ஒருவன் ஆன்ம வளர்ச்சி அடையமுடியும். அடிகளார் காலத்தில் வாழ்ந்தோம் என்று பெருமையாகக் கூறிக்கொள்ளும் காலம் வரும்!”

**எல்லாமே விளையாட்டிற்கு!**

“பூமி, ஆகாயம், நீர், நெருப்பு, காற்று இவையெல்லாம் எதற்கு? உலகம் தேவைதானா? எனக் கேட்கலாம்.

எல்லாமே விளையாட்டு. ஐம்பூதங்களை வணங்காவிட்டால் மனிதவாழ்வில் பிரச்சனைதான் ஏற்படும்”.

**பழங்கதை பேசாதே!**

“ஆன்மிகத்துறையில் நடந்து போன பழங்கதைகளையே பேசிக்கொண்டிருக்காதே! இங்கே நடைபெறுகின்ற - நடைபெற்றுக் கொண்டிருக்கிற - நான் நடத்தி வருகிற புதுமைகளை உலகத்திற்கு எடுத்துச் சொல்! இவற்றையே அடிக்கடி நினைத்துப் பழகு!”

**உலக நன்மைக்கான கோரிக்கைகள்:**

“உலக நன்மைக்கான கோரிக்கைகள் உங்களிடமிருந்து தான் வரவேண்டுமே தவிர, நானோ, அடிகளாரோ கூப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது”.

**ஆதிபராசக்தியே அனைத்துக்கும் கரு:**

“சூரியன், சந்திரன், பூமி, காற்று, ஆகாயம், மரம், செடி, கொடி, ஈ, எறும்பு முதலிய எல்லா இயற்கைப் பொருள்களிலும் ஆண், பெண் என்ற இனம் உண்டு. எல்லாவற்றிற்கும் கரு உண்டு. அந்தக் கரு தான் ஆதிபராசக்தி!”

**இங்கே தான் சக்தி!**

“என்றும் அழியாமல் இருப்பது தர்மம். அனைவரையும் கவர்ந்து இழுப்பது சக்தி! அந்தச் சக்தி இங்கே தான் இருக்கிறது!”

**நான் யார்?**

“நான் யார் என்ற உண்மை வெளிப்படக்கூடாது. அப்படி வெளிப்பட்டால் நீ என்னைச் சுலபமாகப் பிடித்துக் கொள்வாய்.



பிறவியில்லாமல் சித்தியும் முக்தியும் பெற்றுவிடுவாய். அதனால் தான் உங்களுக்கு ஆசை என்ற ஒன்றை வைத்தும், மனம் என்ற ஒன்றை வைத்தும் அவ்வப்போது உங்களைத் திசை மாற்றி விடுகிறேன்.

முழுவதுமாக என்னைச் சரணடைந்துவிடு! உள்ளன்போடும், உண்மை உணர்வோடும் நான் சொல்லும் தொண்டுகளைச் செய்துகொண்டு வா!”

**உட்கார்ந்துகொண்டே எல்லாம் செய்துவிட முடியாதா?**

“ஏதோ ஆன்மிகம், ஆன்மிகம் என்று அம்மா சொல்கிறது. ஏதோ நாமெல்லாம் “மின்னும் புவிக்கெலாம்” என்று பாடுகிறோம். அம்மா வருகிறது! அம்மா உடல் அசைகிறது! கையில் சின்முத்திரை காட்டுகிறது. வேப்பிலை எடுக்கிறது. கற்பூர தீபாராதனை காட்டுகிறது. அன்னம் போல் நடக்கிறது. மயில் போல் நடக்கிறது. வேப்பிலை கிள்ளி வீசுகிறது.

அம்மா தெய்வம் தானே? உட்கார்ந்து கொண்டே எதையும் வரவழைத்துச் செய்துகொள்ளக் கூடாதா? என்றெல்லாம் நீங்கள் நினைக்கலாம்.

எந்த ஓர் அணுவும் அசைந்தால்தான் பலன் உண்டு. அந்த அசைவு இல்லையேல் அழிவுதான் உண்டாகும்.

சின்னஞ்சிறிய அணுவுக்கே ஓர் அசைவு தேவைப்படுகிறபோது, அந்த அசைவு ஆன்மாவுக்கும் சேரவேண்டும்.

அசைவினால் தான் ஆக்கம்; அசைவில்லையேல் அழிவு!”

**நிம்மதியும் அமைதியும்:**

“உங்களுக்கு நிம்மதியும் அமைதியும் வேண்டுமானால் ஆன்மிகத்துறையிலும், என் ஆலயத்திலும் தான் கிடைக்கும்.”

**ஆன்மிகம் பரவ மூலஸ்தானம்:**

“எங்கேயோ ஓரிடத்தில் விளைகின்ற பொருள் நாட்டின் எல்லா இடங்களிலும் விநியோகம் ஆவது போல, இந்தச் சித்தர் பீடம் தான் ஆன்மிகம் பரவ மூலமான இடம். ஆன்மிகம் என்ற உணர்வு எல்லா இடங்களிலும் பரவ மூலப்பொருள் இந்தச் சித்தர் பீடமே ஆகும்.”

**சித்தர் பீடம்:**

“தீய சக்திகளை பாட்டிலில் (Bottle) அடைத்து வைப்பது போல,

இந்த ஆதிபராசக்தி சித்தர் பீடம் தான் அழிவுகள், பொறாமைகளை அடக்கி வைக்க வேண்டும்.''

**மேல்மருவத்தூரின் சிறப்பு:**

''பெண்களைக் கருவறையில் அனுமதிக்கலாம். அவர்களைப் புரோகிதர்களாக நியமிக்கலாம் என்பதெல்லாம் வெறும் பேச்சளவில்தான் உள்ளன. மேல்மருவத்தூரில்தான் அது நடைமுறைப்படுத்தப்படுகிறது.''

**அருள்வாக்கு ஏன்?**

''சாலை ஓரம் ஒரு பீடம் அமைத்து அருள்வாக்கு சொல்லி, கலச விளக்கு வேள்விகள் செய்ய வைத்து, ஆன்மிகம் வளர்ப்பது எல்லாம் உங்கள் உள்ளம் என்ற பாத்திரத்தைச் சுத்தமாக்குவதற்காகத்தான்.''

**சிறிய உலகத்தை வைத்து...**

''இங்கே சிறிய உலகத்தை வைத்துப் பெரிய உலகம் படைக்கிறேன்.''

**மண்பாண்டம் போன்றது:**

''பொன், வெள்ளி, பித்தளை போன்றவற்றுக்கு முலாம் பூச வேண்டும். ஆனால் மண்பாண்டத்திற்கு முலாம் பூச வேண்டியதில்லை. அந்த மண்பாண்டம் போன்றதுதான் மேல்மருவத்தூர்.''

**வழி நடத்திச் செல்கிறேன்:**

''ஏதோ மருவத்தூர்; ஏதோ ஆதிபராசக்தி; ஏதோ அருள்வாக்கு என்ற பெயரை வைத்துக் கொண்டு உங்களை வழி நடத்திச் செல்கிறேன். அருள்வாக்கை அது எப்படி? இது எப்படி? என்று ஆராய்ச்சி செய்யக் கூடாது.''

**ஆலயத்திற்கு எப்படி வர வேண்டும்?**

''இன்னதற்கு இன்ன பலன் என்று எதையும் கேட்டுத் தெரிந்து கொண்டு ஆலயத்திற்கு வரக் கூடாது. அம்மா! என்ற பாச உணர்வுடன் வந்தால் உனக்குத் தேவையான எல்லாவற்றையும் தருவேன்.''

**இதை வியாபார ஸ்தலமாக ஆக்கி விடாதே!**

''அம்மா! என்று பாசத்துடன் வந்தால் நிம்மதி கிடைக்கும். கார்



வேண்டும், பங்களா வேண்டும், பஸ் வாங்க வேண்டும் என்று வந்தால் நிம்மதி கிடைக்காது.

எது தேவை என்று புரியாமல் உன்னையே நீ ஏமாற்றிக் கொள்கிறாய்.

பெண்ணிற்குத் திருமணம் ஆக வேண்டுமா? அந்த ஸ்தலத்திற்குப்போ! குழந்தை வேண்டுமா? இந்த ஸ்தலத்திற்குப்போ! என்றெல்லாம் ஸ்தலங்களை வியாபார ஸ்தலமாக்கி விட்டீர்கள். இந்த ஸ்தலத்தை அப்படி மாற்றி விடாதே!''

**அருள்வாக்கு என்ற பாத்திரம்**

''என்னுடைய அருள்வாக்கு என்ற பாத்திரத்தைப் பயன்படுத்தி எதிர்கால வாழ்வினை அமைத்துக் கொள்ள வேண்டும். எல்லோருக்கும் பகிர்ந்து அளிக்க வேண்டும்.''

**இங்கு வருபவர்கள்:**

''இங்கு வருபவர்கள் பதராக ஆகிவிடக்கூடாது. மணியாக ஆக வேண்டும். ஆலய மணியாக இருக்க வேண்டும்.''

**அன்னதானம்:**

''படிப்பிற்கு இங்கிலாந்து; மருத்துவத்துக்கு ஐரோப்பா என்கிறார்கள். அன்னதானத்திற்கு மேல்மருவத்தூர் என்ற நிலை வரவேண்டும்.''

**முக்திக்கு முயல வேண்டும்:**

''முற்காலத்தே முனிவர்கள் காட்டிற்குச் சென்று ஐம்புலன்களை அடக்கி என்னை அடையத் தவம் செய்தார்கள். தங்கள் மேல் புற்று வளர்வதும், மரம் முளைப்பதும் கூடத் தெரியாத அளவுக்குப் புலன்களை அடக்கித் தவம் இருந்தார்கள். ஆனால், இன்று நானே உங்களை நாடி வந்திருக்கிறேன். உங்கள் வீட்டில் இருந்தபடியே ஐம்புலன்களை அடக்கும் வழியையும், முக்தி அடைவதற்கான வழியையும் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்து வருகிறேன். இவற்றையெல்லாம் பின்பற்றி நீங்கள் முக்திக்கு முயல வேண்டும்.''

**என்னை நாடி வராதவர்களும் – வந்தவர்களும்**

''தாயான என்னை நாடி வராதவர்களே மிகுதி. இங்கு வராமல் இருப்பவர்கள் காற்றில் அலையும் பஞ்சுபோல இங்கும் அங்குமாக அலைபவர்கள்.

இங்கே என்னிடம் வந்து ஒட்டிக் கொண்டவர்களோ பஞ்சில்

உள்ள விதை ஊன்றிச் செடியாகவும், பின்பு மரமாகவும் வளர்கிறவர்கள்.''

**மேல்மருவத்தூர்: ஒன்று சேர்க்கும் இடம்:**

“ஆன்மாக்கள் அனைத்தும் ஒன்றுதான். அவை தனித்தனியாகச் செயல்படும்போது தான் துன்பங்கள் ஏற்படுகின்றன. ஆன்மாக்களை ஒன்று சேர்ப்பது இந்த இடம் தான் (மேல்மருவத்தூர்) இந்த ஆலயம் என்னுடையது; நம்முடையது. இது என் தாய் வீடு என்ற உணர்வோடு நீங்கள் செயல்பட வேண்டும்.''

**ஆன்மிகம் என்ற ஞானப்பழம்:**

“ஆன்மிகம் என்ற மாம்பழம் மேல்மருவத்தூரில் உண்டு''

**இந்தப் பூமிக்காகத்தான் அருள்வாக்கு:**

“முதலில் எதிலும் நம்பிக்கை தேவை. அவனுக்காக, அவளுக்காக, இவனுக்காக, இவளுக்காக, சொந்தபந்தங்கட்காக இங்கே நான் அருள்வாக்கு சொல்வதில்லை.

இந்தப் பூமிக்காகத்தான் இங்கே அருள்வாக்குச் சொல்லி வருகிறேன்.''

**நான் சொல்லும் தத்துவங்கள்:**

“நான் சொல்லும் தத்துவங்கள் புராணங்களிலும், கல்வெட்டுகளிலும் கிடையாது.''

**பெண்களை உருவாக்கிக் கொடுப்பது:**

“மேல்மருவத்தூர் தான் பெண்களை ஆன்மிகத்திற்கு உருவாக்கிக் கொடுக்கிறது. பெண்களைப் பேதைகளாக நினைக்கக் கூடாது.''

**பழமைச் சிறப்பு:**

“2001 ஆண்டுகட்கு முன்பே இந்த மருவத்தூருக்குப் புராணம் உண்டு. (1999-ஆம் ஆண்டு சொல்லியது)

**உன் தேவை என் தேவை:**

“உன் தேவை எனக்குத் தேவையில்லை. ஆனால் என் தேவை உனக்குத் தேவை.''

**எத்தனைபேர் வந்தாலும் சென்றாலும்....**

“எல்லா ஆலயமும் சிறந்த ஆலயமாகி விடாது. எல்லாப் பெண்களும் சிறந்த பெண்கள் ஆகிவிட முடியாது.



பூமியிலிருக்கும் புல், பூண்டு, செடி, கொடி போன்றவற்றின் விதைகள் மழை வந்தவுடனே முளைக்க ஆரம்பிக்கும். அவற்றுள் குறிப்பிட்ட பயன் தரும் மரங்கள் மட்டுமே காய்த்துப் பழுத்துப் பயன் தரும்.

அதுபோல இந்த மருவத்தூருக்கு எத்தனைபேர் வந்து சென்றாலும் ஒரு சிலரால்தான் மற்றவர்கட்குப் பயன் உண்டாகும்.''

**உங்களை அழிவிலிருந்து காப்பாற்ற...**

“பாவம் செய்வது தெரியாமலே பாவியாகி விடுகிறீர்கள். உங்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு இந்தச் சித்தர் பீடத்தில் தான் வழி கிடைக்கும்.''

**அவரவர் நோக்கத்துக்குத் தக்கபடி:**

“ஆலயம் என்பது ஆலமரம் போன்றது. எந்த நோக்கத்தோடு வருகிறார்களோ அது அதற்கு ஏற்றபடிப் பயன் கிடைக்கும்.''

**நான் செய்யும் ஆன்மிகப் புரட்சி...**

“ஆன்மிகத் துறைக்கு உபயோகம் இல்லாத உங்களையெல்லாம், இழுத்துப் பிடித்து வைத்து உங்களை ஆன்மிகத்திற்கு உபயோகம் உள்ளவர்களாக மாற்றிவருகிறேனே, உங்களைத் தொண்டு செய்ய வைத்து, ஆன்மிகத்தில் பக்குவப்படுத்தி வருகிறேனே அதுதான் நான் இங்கே செய்யும் ஆன்மிகப் புரட்சி! இதனை உணர்வதற்கும் கூட ஒரு பக்குவம் வேண்டும்.''

# 3. ஊழ்வினை

### விதையும்—வினையும்:

“விதை! - வினை! விதைதான் நிலத்தைத் தேடிப் போகவேண்டும். விதையை நோக்கி நிலம் வராது. வினைக்கு உரியவன் தான் தெய்வத்தை நோக்கி வரவேண்டும். தெய்வம் வினைக்கு உரியவனைத் தேடி வரவேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது.”

### செய்யத் தகாதவற்றையெல்லாம் செய்துவிட்டு...

“செய்யத் தகாத தவறுகளையெல்லாம் செய்துவிட்டு ஓம் சக்தி என்று வந்து விழுபவர்களையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அதனால் தவறுகளையும் ஏற்றுக்கொண்டேன் என்று ஆகிவிடாது. உரியகாலத்தில் அதற்குத் தண்டனை உண்டு. ஆயினும், தாயே! என என்னிடம் வந்ததால் அதற்கான சில பலன்களையும் அவர்கள் பெறுகிறார்கள்!”

### வினையும் – விளைவும்:

“தினை விதைத்தவன் தினையறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான். நெல் விதைத்தவன் நெல் அறுப்பான். அவனவன் செய்யும் வினைக்கேற்பப் பலன் கொடுப்பவள் நான்!”

### அவரவர் கரும வினைகள்:

“இனிப்பின் ருசியை நாவும், தொண்டையும் தான் அறிய முடியும். வயிற்றுக்குள்ளே போய்விட்டால் எந்த ருசியும் தெரிவதில்லை. ஆனால் அவரவர் கருமவினைகளை அவரவர் உள்ளத்தால் தான் உணரமுடியும்.”

### ஊழ்வினையும் – நிழலும்:

“ஒவ்வொருவன் பின்னாலும் அவனவன் நிழல் தொடர்ந்து வரும். அதுபோல ஒவ்வொருவன் ஊழ்வினையும் தொடர்ந்துவரும். இதனைப் புரிந்து நடக்க வேண்டும்”.



### உன் கர்மத்தைக் குறைக்கிறேன்:

“இருப்பவனிடமிருந்து வாங்கி இல்லாதவனுக்குக் கொடுக்கச் சொல்கிறேன். கொடுப்பவனுடைய கர்மத்தைக் குறைக்கிறேன். கருவியாக இருந்து பணிபுரியும் உன் கர்மத்தையும் குறைக்கிறேன்.”

### பாவத்தின் பலன்கள்:

“ஒரு சில குச்சிகளை எடுத்து நட்டால் கூட அவற்றில் உள்ள ஈரப்பசையின் காரணமாகத் துளிர்விடத் தொடங்குகின்றன. குச்சியில் உள்ள ஈரப்பசையால் இலைகள் துளிர்விடுவது போல நீ செய்கிற பாவத்தின் பலன்களும் தளிர்க்கத் தொடங்குகின்றன.”

### பாவமூட்டை குறைய!

“கலச விளக்குகளுக்கு விலை வைப்பது உன் பாவமூட்டை குறைய!”

### பாவங்களும் – பலனும்:

“உளி, சுத்தி முதலிய ஆயுதங்களால் நன்கு வடிக்கப்பட்ட கற்சிலை என்றாலும் அதற்கும் அழிவுண்டு. வடிக்கப்படாத கல்லுக்கு அழிவில்லை. ஆசாபாசங்களுடன் ஆன்மிகத்தில் ஈடுபடுவோர்க்குப் பாவமும் வருவதுண்டு. அவைகள் இல்லாமல் ஆன்மிகத்தில் ஈடுபடுகிறவர்களுக்குப் பாவம் நேர்வதில்லை. அதிகமான பாவங்களைச் செய்து வருவோர் அவற்றுக்குரிய பலன்களையும் அனுபவித்தே தீரவேண்டும்”.

### அவரவர்களுக்கு அளந்தபடி:

“ஒவ்வொருவருக்கும் அவரவர்க்கு அளந்தபடி தான் கிடைக்கும். சொத்தும், சுகமும் அப்படியே! ஆன்மிகத்திற்கு வந்துவிட்டவன் எதைப்பற்றியும் கவலைப்படக்கூடாது. பற்றவேண்டியதைப் பற்றிக்கொண்டு விட்ட பிறகு நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படக்கூடாது.”

### உன் நிழலே உன்னைத் தொடர்கிறது:

“அம்மாவை வணங்குகிறோம். அம்மாவின் சொற்படியே நடக்கின்றோம். அம்மா சொல்லும் செயல்களையே செய்துகொண்டு வருகிறோம். அப்படியிருந்தும் நமக்குப் பல தொல்லைகள் ஏற்படுகின்றதே! இறப்பு ஏற்படுகின்றதே என்றெல்லாம் நினைக்காதே! இறப்பும் உண்டு; பிறப்பும் உண்டு. அடிகளும் உண்டு; உதைகளும் உண்டு. இவை நடந்தே தீரும். உன் நிழல் தான் உன்னைத் தொடர்கின்றது.”

## நெருப்பும் – தீமையும்:

"நெருப்பைக் கண்டு எப்படி எச்சரிக்கையாக நடந்து கொள்கிறாயோ, அதுபோல தீமையானவற்றில் எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டும்."

## பாவம் மிகுந்தால் பூமியும் அழியும்:

"படகு தண்ணீரில் செல்கிறது. அந்தப் படகில் மனிதன் வீடு கட்டியும் வாழ்கிறான். தாங்க முடியாத பாரம் ஏற்றப்படும்பொழுது படகும் மூழ்கும். வீடும் மூழ்கும். பூமியும் அந்தப்படகு போன்றது. பாவங்கள் அதிகரிக்கிறபொழுது பூமியும் அழியும்."

## துன்பமும் ஓர் அனுபவம்:

"துன்பத்தின் மூலம் தான் சிறந்த அனுபவம் கிடைக்கும். அதை அனுபவித்தே பெற வேண்டும். என்னை நெருங்க வேண்டும் என்று துடிப்பவர்கள் இவ்வுலகத் துன்பங்களையும், ஊழ்வினைகளையும் இப்போதே என் முன்னாலேயே அனுபவித்துக் கழித்துவிட வேண்டும்."

## உன் வினையைக் குறைப்பது எப்படி?

"மகனே! இந்த வினாடியிலேயே உன் குறையைப் போக்கிவிடுவேன். ஆனால் எந்த ஒரு பிராரத்துவ வினையினால் இந்தக்குறை உனக்கு வந்ததோ அந்த வினை சும்மா இராது. இந்தக்குறையைப் போக்கினால் வேறுவிதமாக அது உடனே உன்னைத் தாக்கும். இப்பொழுது உள்ள வயிற்றுவலியை நீக்கினால் நாளை தலைவலியாக வரும். அதை நீக்கினால் முதுகுவலியாக வரும். அந்த வினை தீருகின்ற வரையில் ஏதாவது ஒருவகையில் அதன் தாக்கம் உன்னிடம் இருந்துகொண்டு தான் இருக்கும். எனவே, கவலைப்படாமல் இரு. வினை தீருகின்ற காலத்தை நான் அறிவேன். அது தீருகின்ற காலம் வரும்வரை உன்னை ஒன்றும் செய்யாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். உரிய காலம் வரும்பொழுது குறையைப் போக்குகிறேன்."

## வினைப்பயனும் . முக்தி நிலையும்:

"மருவூர் மண்ணை மிதித்து "ஓம் சக்தி" எனச் சரணாகதி அடைந்தால் உன் வினைப்பயனை நோகாமலே அனுபவிக்கும் ஆற்றலை உனக்குத் தருகிறேன். தீவினைப் பயனை வருந்தி அனுபவித்த பின்னர் பிறவிப்பயனைத் தருகிறேன். அதாவது முக்திநிலை தந்து இனிப்பிறவி இல்லாமல் உன்னை அணைக்கிறேன்."



## விதியை மாற்ற வேண்டுமானால்:

"மகனே! உன் விதியை மாற்றியமைக்கும் வல்லமை எனக்கு உண்டு. சாதாரணமாக உன் விதியை நீ அனுபவிக்கும்படி நான் விட்டுவிடுகிறேன். என்னிடம் அளவுகடந்த பக்தி செலுத்தி, சரணாகதியடைந்து நான் சொல்கிற பணிகளைச் சிரத்தையோடு செய்துவந்தால் அப்போது உன் விதியையும் மாற்றியமைக்கும் செயலை மேற்கொள்கிறேன்."

## பொறாமைப்படாதே!

"என்னுடைய மரம் விழுந்துட்டதே! அவன் வைத்த மரம் விழவில்லையே என்று நினைக்காதே! உன் அறிவீனத்தால் ஆழமாக நடாமல் மேலோட்டமாக நட்டுவைத்தாய். அதனால் அந்த மரம் சீக்கிரம் விழுந்துவிட்டது. அடுத்தவன் ஆழமாக நட்டான். அக்கறையாக மரம் வளர்த்தான். அதனால் விழவில்லை. எனவே அடுத்தவனைப் பார்த்துப் பொறாமைப்படக் கூடாது."

## ஊழ்வினை தணிவதற்காக...

"தைப்பூசம் என்றால் இருமுடி செலுத்த வேண்டும். நவராத்திரி என்றால் இலட்சார்ச்சனை செய்யவேண்டும். ஆடிப்பூரம் என்றால் கஞ்சி ஊற்றவேண்டும். பாலபிடேகம் செய்யவேண்டும் என்றெல்லாம் சலித்துக் கொள்ளாதே!

இவையெல்லாம் எனக்காகவோ, அடிகளார்க்காகவோ அல்ல! உன் ஊழ்வினைகள் தணிவதற்காக!"

## கருமவினை – உலகியல் பயன்கள்:

"பெரிய விருந்தில் கலந்து கொள்ளச் செல்லும் போது முதல் பந்தியில் வருபவனுக்கு நல்ல சாப்பாடும், அனைத்து உணவு வகைகளும் கிடைக்கின்றன. இரண்டாவது பந்தியில் வருபவனுக்குச் சுமாராகவும் ஒரு சில குறைந்தும் கிடைக்கின்றன. கடைசிப்பந்தியில் வருபவனுக்குச் சரியான விருந்து சாப்பாடு கிடைப்பதில்லை.

அதுபோலவே அவரவர் கருமவினைகளுக்கு ஏற்றவாறே உலகியல் பலன்கள் கிடைக்கின்றன."

## பஞ்சபூதங்கள்: ஊழ்வினை:

"ஐம்பூதங்கள் இருப்பது போல மனிதனுக்கும் ஐந்து குணங்கள் உண்டு. ஆனால் பஞ்சமா பாதகங்களை மனிதன் செய்யக்கூடாது. நீ எங்கே ஓடி அலைந்தாலும் உன் நிழல் உன் கூடவே வரும்.

நீ செய்யும் காரியங்களின் பலனை நீயே அனுபவித்துத் தான் ஆகவேண்டும் என்பதை மறவாதே!"

**யானை வரும் பின்னே:**

"யானை வரும் பின்னே! மணி ஓசை வரும் முன்னே! என்பது போல நீங்கள் பின்னே வர உங்கள் ஊழ்வினை முன்னே வரும். நீங்கள் செய்யும் தருமம் தான் எப்போதும் உங்கள் கூட வரும்."

**செய்த பாவம் விடாது:**

"எந்த மாமருந்தும் வேலை செய்யாது. மருவூர் மாமருந்து தான் வேலை செய்யும். பறவைகளுக்கு உப்பு தேவையில்லை. மனிதனுக்கு உப்பு தேவைப்படுகிறது. அதனால் தான் நோய் வருகிறது.

எந்த ஊசியாலும், மாத்திரையாலும் எல்லா நோயையும் கட்டுப்படுத்தி விட முடியாது. நீ செய்த பாவம் உன்னை விடாது."

**ஊழ்வினையை அனுபவித்துக் கழிக்க வேண்டும்:**

"உன் பசிக்கு நீ தான் சாப்பிட வேண்டும். உன் தாகத்திற்கு நீ தான் தண்ணீர் குடிக்க வேண்டும். உன் ஊழ்வினையை நீ தான் அனுபவித்துக் கழிக்க வேண்டும். எந்தச் சட்டமும் உன்னைப் பாதுகாத்துவிட முடியாது.

தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள ஆன்மா அவசியம்; அதற்கு என் அருள் தேவை."

**உழைப்பு தேவை:**

"காரணமில்லாமல் காரியமில்லை. உழைக்காமலேயே ஊழ்வினை என்று சொல்லிக் கொண்டு சோம்பியிருக்கக் கூடாது. எதிலும் கருத்து இருக்க வேண்டும். அதில் கரு இருக்கவேண்டும்."

**விதைத்ததை அறுவடை செய்தே ஆகவேண்டும்:**

"என் ஆலயத்திற்கு வந்துவிட்டாலும், வினை விதைத்தவன் வினையை அறுத்துத் தான் ஆகவேண்டும். திருந்தி வாழ முற்படாமல் ஆலயத்திற்கு வந்து போனால் மட்டும் போதாது."

**ஊழ்வினை! செய்வினை!**

"தன்னால் ஆக்கப்பட்டது ஊழ்வினை! பிறரால் செய்யப்படுவது செய்வினை!"

**அபிடேக ஆராதனைகளால்...**

"நீ செய்யும் அபிடேக ஆராதனைகளால் மட்டும் உன்னுடைய தீவினைகள் தீர்ந்துவிடாது. உன் ஆன்மா சுத்தமாக இருக்க



வேண்டும். கலங்கிய நீருக்கு எடை அதிகம். சுத்தமான நீருக்கு எடை குறைவு. உன் உள்ளம் சுத்தமாக இருந்தால்தான் பாவங்கள் குறையும்."

**உன் நிழலே உன்னைக் கண்காணிக்கும்:**

"உன்னுடைய நிழலே உன்னைக் கண்காணித்து வருகிறது. இருட்டில் நிழலைக் காணமுடியாது. வெளிச்சத்தில் நிழல் தெரியும். எல்லாப் பொருளுக்கும் நிழல் உண்டு. தெய்வசக்தி நிழலைப் போல உன்னைக் கண்காணித்துக் கொண்டு வருகிறது."

**பரிகாரங்களால் பயனில்லை:**

"ஒரு தாய் வயிற்றில் பிறக்கும் குழந்தை கூனாகவோ, குருடாகவோ, செவிடாகவோ பிறப்பதற்கு அந்த ஆன்மாவின் முன் வினையே காரணம். தாய் காரணமாக மாட்டாள். சோதிடர்கள் கூறுகிற பரிகாரங்களால் அத்தகைய ஊனங்கள் தீர்ந்து விடாது."

**ஏமாற்றுபவனை விடமாட்டேன்:**

"தன் பிள்ளை, தன் பெண், தன் குடும்பம், தன் பேரன், தன் பேத்தி எனத் தானும் தன் குடும்பமும் மட்டும் வாழவேண்டும் என்பதற்காகப் பிறர் பொருளைச் சுரண்டி ஏமாற்றுபவனை, மரத்தின் உச்சியில் ஏறிப்பழம் பறித்துச் சாப்பிடும் வரை விட்டு வைப்பேன். அவனை இறக்கிவிட மாட்டேன். அவன் தானாகவே கீழே விழுந்து அடிபட வேண்டியவனே. அவனவன் எண்ணமே அவனவனுக்கு எமனாக மாறும்."

**மறுபிறவி சுற்றிச் சுற்றி வரும்:**

"பிறப்பு, வளர்ப்பு, இறப்பு என்று உண்டு. மழை பெய்து கடலை அடைவது போல ஆன்மா மறுபிறவியை அடைவது உண்டு.

ஒரு விதையானது குழியில் விழுந்து செடியாகி, மரமாகி, பூ பூத்துக் காய் காய்த்துப் பழம் பழுத்து மீண்டும் விதையாவது போல மறுபிறவியும் சுற்றிச் சுற்றி வரும்."

**நீ சம்பாதிக்கும் பொருள்:**

"நேர்மையாக உழைத்து வியர்வை சிந்திப் பெறுகிற பொருள் தான் உனக்கு நிலைக்கும். மற்றவை நிலைக்காது."

**சறுக்கி விழும் ஓர் அடி:**

“ஆன்மிகத்தில் பத்து அடி ஏறினால், பதினோரு அடி சறுக்கி விழுகிறீர்கள். அந்த ஓர் அடி தான் நீ செய்யும் பாவத்தின் அளவாகும்.”

**மனத்தூய்மை:**

“உன் மனம் மட்டும் தூய்மையாக இருந்துட்டால் எந்த வினையும் நெருங்காது. சூனியமும் கிடையாது.”

**எப்படி இயக்குகிறேன்?**

“இயற்கையில் உள்ள ஐம்பூதங்களையும் உங்கள் வாழ்க்கைக்குத் தக்கவாறு அமைத்துத் தருகிறேன்.

உழைப்பை உணவாக மாற்றித் தருகிறேன். வாயுவை வாயாக மாற்றுகிறேன். கண்ணீரைத் தண்ணீராக மாற்றுகிறேன். காற்றைக் காற்றாக மாற்றுகிறேன். இவ்வாறு மாற்றி உன்னுடைய ஆன்மிக உணர்வை இயக்குகிறேன்.

ஆனாலும் தொல்லைகள் பல வருகிற போது உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை குறைகிறது. அதனால் அந்தச் சாமி, இந்தச் சாமி என்று ஓடுகிறீர்கள்?

எல்லாச் சாமிக்கும் சக்தி கொடுக்கிற சாமி தான் இந்தச் சாமி! இந்தச் சாமி தான் ஆதிபராசக்தி என்ற எண்ணமும் நம்பிக்கையும் வருவதில்லை.

அந்த நம்பிக்கை வராதபோது உங்கள் ஊழ்வினைகளை எப்படி மாற்ற முடியும்?”

**வினை – விளைவு:**

“கல், இரும்பு ஆகியவற்றை வேண்டுமென்று உதைப்பதில்லை. நம் கால் தான் வலிக்கும் என்றெண்ணி உதைப்பதில்லை. அதுபோல ஆன்மிகத்திலும் எது செய்தால் என்ன விளையும் என்று புரிந்து கொள்ளக்கூடிய மனப்பக்குவம் வேண்டும்.”

**தவறான முறையில் சம்பாதித்தால்...**

“தவறான முறையில் நான்கு காசு சம்பாதித்தால் அதைக் கொண்டு ஆடம்பரமாக வாழத் தோன்றும். பிறகு அந்த நான்கு காசுக்காக அடிமையாகும் நிலை ஏற்படும்.”



**அம்மா தண்டிக்கவில்லையே...**

“நாம் தவறு செய்துவிட்டுத் தீய நோக்கத்துடன் தான் வந்து கொண்டிருக்கிறோம். இருந்தும் அம்மா நம்மைத் தண்டிக்கவில்லையே என்று நினைத்துக் கொள்ளாதே!

எல்லாவற்றுக்கும் சேர்த்து உனக்குச் சாட்டையடி கொடுத்தால் உன்னால் தாங்க முடியாது. அகல்விளக்கில் அகப்பட்ட விட்டில் பூச்சி போல ஆகிவிடுவாய். என்னுடைய வழிகாட்டுதலைத் தவறாக மதிப்பிட்டுத் தவறாகப் பயன் படுத்த முயலாதே!”

**உடனே தண்டிக்காதது ஏன்?**

“தீயவர்களை உடனே தண்டிக்காதது ஏன்? விஷத்தை விஷத்தால் முறியடிப்பது போல அகங்காரத்தை வளரவிட்டே அழிப்பேன்.”

**விதியின் வழியே...**

“உனக்கு என்ன நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதோ, அதற்குத் தக்கபடி விதி உனக்கு வழி செய்து கொடுக்கிறது. அதற்கு ஏற்றாற் போலவே நல்லதும், கெட்டதும் நடக்கிறது. அதற்கு ஏற்றவாறு உயிர் உன்னை ஆட்டுவிக்கிறது.”

**காரண – காரியம்:**

“ஒருவனுடைய படிப்பு, நடிப்பு, உயர்வு, தாழ்வு அனைத்திற்கும் ஒரு காரணம் உண்டு; காரணம் இல்லாமல் காரியம் இல்லை.”

**விதியும் – மதியும்:**

“எதைச் செய்ய நினைக்கிறாயோ அதைச் செய்ய முடியவில்லை எல்லாம் என் விதி என்று விதியை நொந்து கொள்கிறாய். உன் ஆன்மாவைச் சரி செய்தால் விதியை மதியால் திருத்த முடியும்.”

**தொடரும் ஊழ்வினை:**

“உன் உடம்பில் சளியும் தண்ணீரும் எவ்வாறு வற்றாத ஜீவநதி போலச் சுரந்து கொண்டு வருகிறதோ, அதுபோல உன் ஊழ்வினையும் உன்னைத் தொடர்ந்து கொண்டே இருக்கும்.”

**எந்த வினையும் அணுகாது:**

“அம்மாவின் துணை நமக்கு எப்போதும் இருக்கிறது என்கிற தைரியம் உனக்கு இருந்தால் எந்த வினையும் உன்னை அணுகாது.”

**பிறவியில் தள்ளி விடும்:**

“மீன் தண்ணீரில் ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருக்கும். கொக்கு நேரம் பார்த்துத் தனக்குத் தேவையான மீனைக் கொத்திக் கொண்டு போய்விடும்.

மனிதன் பந்தம், பாசம், வீடு, வசதி, சொத்து, சுகம் என்றே விளையாடிக் கொண்டிருக்கிறான். அவ்வாறு விளையாடிக் கொண்டிருப்பதால் அவ்விளையாட்டின் பயனாக அவன் ஊழ்வினை மீண்டும் பிறவியில் தள்ளி விடுகிறது.”

**அனுபவித்தே ஆக வேண்டும்:**

“சென்ற பிறப்பின் பலனை அனுபவித்துத் தான் ஆக வேண்டும்.

உள்ளம் நன்றாக அமைந்து விட்டால் அமைதி கிடைக்கும். உள்ளத்தை விட்டு வினை அகலாது.”

**பாவ புண்ணியங்கள் நிழல்போல தொடரும்:**

“உன்னுடைய நிழல் உன் கூடவே வருகின்றது. மரத்தின் நிழல் அதன் அருகிலேயே விழுகின்றது. பறவையின் நிழல் அது பறக்கும் போது கூடவே வருகின்றது.

மிருகம், சூரியன், சந்திரன், மேகம், என்பவற்றுக்கும் நிழல் உண்டு. அதுபோல நீ ஆன்மிகத்தில் ஈடுபட்டிருந்தாலும் உன் பாவ புண்ணிங்கள் நிழல் போல உன் கூடவே வரும்.”

**சுயநலப் போர்வழிகள்:**

“தனக்காகவே எல்லாவற்றையும் வைத்துக் கொள்பவனுக்கு நிம்மதி இருக்காது.”

**கோளங்கள் வெடிப்பது ஏன்?**

“நீங்கள் செய்யும் பாவமும் தெய்வ நிந்தனையும் தான் கோளங்களை வெடிக்கச் செய்கின்றன.”

**கர்ம வினை:**

“நல்ல எண்ணம் இருந்தால் தருமம் செய்யத் தோன்றும். ஆனால் உன் கர்ம வினை அதைத் தடுக்கும்.”

**விதிக்கேற்றபடியே பிறவி:**

“கரும்பு, நெல், வாழை போன்ற பயிர்கட்குத் தக்கபடி உரிய ஆழத்தோடு உழுது பயிர் செய்தால் தான் அவை நன்றாக வளரும்.



விதைக்கேற்றபடி பயிர் முளைப்பது போல அவனவன் விதிக்கேற்றபடியே பிறவியும் ஏற்படும்.”

**உடலுக்குள் பாவம் இருக்கும்:**

“கல்லுக்குள் தேரையும், பழத்திற்குள் பூச்சியும் இருப்பது போல உங்கள் உடலுக்குள் பாவமும் இருக்கும்.”

**கெடுக்கும் தன்மை வருவது ஏன்?**

“உரம் போட்டு உரம் விளைய வேண்டியதில்லை. சொல்லிச் சொல்லித் தெய்வ நம்பிக்கை உண்டாவதில்லை. கேட்டுக் கேட்டுக் கொடுக்காததால் தான் ஒருவனுக்குக் கெடுக்கும் தன்மை வந்து விடுகிறது.”

**பாவத்திற்குத் தக்கபடி...**

“அவனவன் பாவத்திற்குத் தக்கபடி அவனவன் பேச்சு அமையும்.

பாவம் நீங்க நல்ல குணத்தையும் நல்ல தொண்டையும் வளர்த்துக் கொண்டால் போதும்.”

**சென்றதை எண்ணி வருந்தாதே!**

“முற்பிறவியில் என்ன செய்தேனோ அனுபவிக்கிறேன். சென்ற பிறவியில் என்ன செய்தேனோ எனக்கு இப்படி வந்து விட்டது என்று கடந்து போனதைப் பற்றி எண்ணி வருந்தாமல், இந்தப் பிறவியில் உங்களுக்கு நான் தருகின்ற வாய்ப்புகளைப் பயன் படுத்திக் கொண்டு கரையேற முற்படு”

**எல்லோரும் ஆக முடியாது:**

“எல்லோரும் அறிவாளியாகவும் எல்லோரும் பணக்காரனாகவும் ஆகிவிட முடியாது.”

**நீ சும்மா இருந்தாலும்...**

“நீ சும்மா இருந்தாலும் உன் ஊழ்வினை சும்மா விடாது.

செவ்வாடை கட்டுகிறீர்கள்; வேள்வி செய்யப் பழகினீர்கள். ஆனாலும் இன்னும் உங்கள் உள்ளம் நல்லதாக மாறவில்லை.

மனசாட்சியும் கிடையாது; தெய்வ சாட்சியும் கிடையாது. எவ்வளவுதான் தொண்டு செய்தாலும் மறுபடியும் பழைய நிலைக்கே போய்விடுகிறீர்கள்.

இனி எப்போது துளிர்விட்டு; காய் காய்த்துப் பழம் பழுப்பது?

**பூக்களும் – குழந்தைகளும்:**

“பூக்களில் பலவகை இருந்தாலும் ஒரு சில பூக்களுக்கு மட்டுமே கவர்ச்சி இருக்கிறது. அதுபோல குழந்தைகள் பல இருந்தாலும் ஒருசில குழந்தைகள் மட்டுமே முன்னேற்றம் அடைய முடியும்.”

**கருமவினைக்குத் தக்கபடிப் பிறவிகள்:**

“நீங்கள் எல்லோரும் பலதரப்பட்ட தண்ணீரைப் போன்றவர்கள். இங்கு வந்து சமுத்திரமாகிய என்னிடத்தில் கலந்து உப்பாக மாறி விடுகிறீர்கள்.

அவரவர் செய்யும் செயல்களின் பலா பலன்களை வைத்து அவர்களை ஈயாகவும், எறும்பாகவும் மாற்றுவேன்.

சிலரை மேகமாக மாற்றி மறுபிறவு இல்லாமலும் செய்வேன்.”





# 4. அடிகளார்

**பண்டமும்–பாண்டமும்:**

“மகனே! சிலர் என்னுடைய அருளை மட்டும் விரும்புகிறார்கள். பாலகனை அவமதிக்கிறார்கள். அவர்களுக்குப் பண்டம் பிடிக்கிறது. பாண்டம் பிடிக்கவில்லை. அடிகளார் என்கிற பாண்டத்தின் மூலந்தான் அருள் என்கிற பண்டம் கிடைக்கும் என்பது தெரியவில்லையே மகனே!”

**அடிகளார் என்கிற தங்கத்தில்...**

“செங்கல்லில் தங்கத்தைத் தேய்த்தால் அந்தச் செங்கல்லிலும் தங்கம் ஒட்டிக்கொள்ளுமடா மகனே! பாலகனோடு இணக்கமும் உறவும் வைத்துக் கொண்டு வணங்கி வந்தால் செங்கல்லான உனக்கும் என் அருள் சேருமடா மகனே!”

**ஒருவனாவது இருக்கிறானா...?**

“மகனே! இந்தப் பாலகனுக்குச் சீடனாக இருந்து பயன் பெறவேண்டும் என்று எவனாவது நினைக்கிறானா? இந்தப் பாலகனுக்குப் பிறகு ஆன்மிகத்துறை வளரவேண்டுமே என்று கவலைப்பட ஒருவனாவது இருக்கிறானா...?”

**யார் உண்மையான ஆன்மிகவாதி?**

“எவன் அடிகளாருக்கு மதிப்புக் கொடுத்து மரியாதைக்குரிய பொருளாகவும் கருதுகின்றானோ அவன் தான் இங்கே உண்மையான ஆன்மிகவாதி!”

**அடிகளாரோடு இருப்பேன்:**

“சாதாரண நிலையிலும் நான் அடிகளாரோடு இருப்பேன்.”

**முற்பிறவியில் செய்த நல்வினைப் பயன்:**

“அடிகளாரின் பார்வை படுதல்; அவனுக்குப் பாதகாணிக்கை செலுத்தும் வாய்ப்புப் பெறுதல்; அவனிடம் சந்தேகம் கேட்டல்; அவனுடைய ஆசியும், அருளும் பெறுதல்; ஆகிய இவை யாவும்

தற்செயலாக உங்களுக்குக் கிடைத்தவை அல்ல! முற்பிறவியில் நீங்கள் செய்த நல்வினைப் பயனால் கிடைப்பவை.''

**அடிகளாரும், ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கமும்:**

''அடிகளார் இல்லறத்துறவியாக இருப்பது தான் இந்த ஆன்மிக இயக்கத்திற்கே சிறப்பு. இந்த ஆன்மிக இயக்கத்தில் நீங்கள் கணவன் மனைவியாக இருவரும் ஈடுபடுவது தான் மிகச்சிறப்பு.''

**அடிகளாரின் குருவருள் பெற:**

''குருவருள் கிடைக்க வேண்டுமானால் அடிகளார்க்குத் தொண்டு செய்வது மட்டும் போதாது. அடிகளாரைக் குருவாக ஏற்றுக்கொண்டு தொண்டு செய்கிறானே தொண்டன்...? அந்தத் தொண்டனுக்கும் தொண்டு செய். அப்போது உனக்குக் குருவருள் எளிதில் கிட்டும்.''

**தியானப் பயிற்சி:**

''நீங்கள் அடிகளாரிடம் தியானப் பயிற்சியைக் கற்றுக்கொள்ள வேண்டும்.''

**வேறெங்கும் கற்க முடியாது:**

''நீ பாலகனிடம் (அடிகளாரிடம்) கற்றுக்கொள்ள முடியாததை வேறெங்கும் சென்று கற்றுக்கொள்ள முடியாது.''

**சமுதாய வளர்ச்சிக்குத் தக்கபடி:**

''இந்த மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்குத் தக்கபடிதானடா அடிகளாரது ஆற்றலை வெளிப்படுத்துவேன்.''

**அன்னையும் அடிகளாரும்:**

''அடிகளாரும் அன்னையும் கடலடா! அவனை உன்னாலல்ல! வேறு எவனாலும் புரிந்துகொள்ள முடியாது. அவனுக்குள் புதைந்திருக்கிற பொக்கிஷத்தை எவனாலும் அளக்க முடியாது.''

**அடிகளாரை வைத்துத் தான்...**

''அடிகளாரை வைத்துத் தானடா உங்களுக்கு நன்மையைச் செய்ய வேண்டியிருக்கிறது.''

**ஆன்மிகத்துக்கென்று நான்கு பேர் கூட இல்லை:**

''நாற்பதாயிரம் பேருக்கு நல்வாக்குக் கூறிவிட்டு ஆன்மிகத்துக்கென்று நான்கு பேர் கூட இல்லாமல் இந்த அடிகளார் தவிக்கின்ற தவிப்பு யாருக்கடா தெரியும்? யாருக்கடா புரியும்? அவனை யாராவது புரிந்து கொண்டார்களா?''



**ஜென்ம சாபல்யம்:**

''ஆயிரத்தெட்டு முறை பாலகன் பார்வை எவன் எவன் மீது படுகின்றதோ அவனுக்கெல்லாம் ஜென்ம சாபல்யமடா!''

**பாதத்தைப் பற்றிக் கொள்:**

''நீ வேறொன்றும் செய்யவேண்டிய அவசியமில்லை. அவன் பாதத்தை மட்டும் உறுதியாகப் பற்றிக் கொள்! உன்னைக் கரையேற்றுவது அவன் பொறுப்பு!''

**சாப்பிடாமல் ஜீரணம் செய்வான்:**

''மகனே! பசிக்கிறதே என்று உண்கின்றோம்; ஜீரணம் ஆக வேண்டுமடா! பாலகன் பசித்தும் இருப்பான். எதையும் ஜீரணம் செய்வானடா! சாப்பிடாமலேயே ஜீரணம் செய்வான். நான் எதைச் சொல்கிறேன் என்று உனக்கு விளங்குகிறதா?''

**உன் வேலை... என் வேலை...**

''அடிகளாரை வணங்குவது உன் வேலை. உன்னை ஏற்றுக்கொள்வது என் வேலை!''

**தொண்டு செய்து தான்...**

''மகனே! இந்த யுகத்தில் நீ அடிகளாரின் முழு அருளையும் அடையவேண்டுமானால் தொண்டு செய்து தான் அடைய முடியும்.''

**அடிகளாரின் பார்வை:**

''அடிகளாரின் பார்வைக்கு மகத்துவம் உண்டு. பாவங்களைப் போக்கும் சக்தியுண்டு. அடிகளார் பேசிச் சாதிப்பதை விடப் பேசாமல் சாதிப்பது ஏராளம்! அடிகளாரின் பார்வை தீர்க்கமாகப் படுமாறு பார்த்துக்கொள்! அதனால் உனக்குப் பயன்கள் உண்டு!''

**வேள்விச் சக்கரத்தின் தன்மைகள் தெரியும்:**

''அடிகளாருக்கு வேள்விச் சக்கரத்தின் தன்மைகளெல்லாம் தெரியும்!''

**அடிகளார் கலியுக அவதாரம்:**

''அடிகளார் கலியுக அவதாரம்! அடிகளாரிடம் பழகுகிற வாய்ப்பு இன்னும் சில வருடங்களுக்குத் தான் உண்டு. அவனிடம் நெருங்காமலும், நீங்காமலும் பழகவேண்டும். ஆலயக் கருவறைக்குள் எப்படி நெருங்க முடியாதோ, அதே போல அடிகளாரிடமும் நெருங்கிப் பழக முடியாத நிலை வரும்!''

**மின்சக்தி நிலையம் – அடிகளார்:**

“ஒரு மின்சக்தி நிலையம் எப்படித் தன் சக்தியையெல்லாம் அடக்கி வைத்துக் கொண்டு அந்தந்த இடத்திற்கு ஏற்றாற்போல் மின்சாரத்தைக் கொடுக்கிறதோ, அதே போன்று அடிகளார் மூலமாக என் சக்தியை அவனவன் பக்குவத்திற்கு ஏற்றபடிக் கொடுக்கிறேன்.”

**அடிகளார் பாதமும் – பாதம்பட்ட மண்ணும்:**

“அடிகளார் பாதத்திற்கும் பாதம் பட்ட மண்ணிற்கும் முக்கியத்துவம் உண்டு.”

**யாருக்காக இந்த அவதாரம்?**

“உங்களுடைய ஆதாரத்திற்காகத் தான் நான் அடிகளாராக அவதாரம் எடுத்து வந்திருக்கிறேன்.”

“பெண்களின் மேன்மைக்காகவே சக்தி ரூபம் எடுத்து வந்திருக்கிறேன்.”

**அடிகளார் – செவ்வாடைத் தொண்டர்கள் – பக்தர்கள்:**

“அடிகளாரை ஆசிரியராகவும், உங்களைப் புத்தகமாகவும் வைத்திருக்கிறேன். புத்தகத்தைப் படித்து அறிவை வளர்த்துக் கொள்வது போல செவ்வாடைத் தொண்டர்களாகிய உங்களைப் பார்த்து மற்ற பக்தர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஆகவே, செவ்வாடைத் தொண்டர்களாகிய நீங்கள் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும்.”

**அடிகளாரை வருத்தி:**

“அடிகளாரின் வியர்வையை வேப்பிலையால் துடைத்து அபிடேகமாக ஏற்றுக்கொள்கிறேன். இதிலிருந்து அடிகளாரை எவ்வளவு வருத்தி ஆன்மிகத்தில் ஈடுபடுத்துகிறேன் என்பதைப் புரிந்து கொள்!”

**அடிகளாரும் நீங்களும்:**

“அடிகளார் இயந்திரம் போன்றவன். இரயில் பெட்டிகளாகிய நீங்கள் அவனைப் பின்பற்றிப் பயன் அடைந்து கொள்ள வேண்டும்.”

**அடிகளாருக்கு ஆசாரிய அபிடேகம் செய்தது முதல்:**

“மகனுக்கு என்றைக்குத் தண்ணீர் ஊற்றி மகானாக ஆக்கினேனோ அன்றே என் அருளைப் பரிபூரணமாகப் பெற்றுக் கொண்டான்.



முன்பெல்லாம் நானே அருள்திலையில் வந்து யாக கலசம், சக்கரம் முதலியவற்றில் திருத்தம் சொல்வேன்.

இப்போது அருள்நிலையில் நான் வராமலேயே மகன் திருத்தங்கள் சொல்கிறான் என்பதைப் பார்த்துக் கொண்டு வருகிறீர்கள் அல்லவா?

இப்போதாவது மகனைப் பற்றிப் புரிந்துகொள்ளுங்கள்!”

**அடிகளார் யார் என்று ஆராய்வதற்கு முன்பு...**

“நீ யார்? உன் தன்மை என்ன? என்பதைப் புரிந்து கொள்ளும் சக்தி அடிகளார் பார்வைக்கு உண்டு.

அடிகளார் யார்? அறநிலை என்பது என்ன? என்பதை நீயே புரிந்துகொள்ள முற்படு!

உன்னுள் இருக்கின்ற அழுக்குகளை நீக்கிக் கொண்டு உள்ளத் தூய்மையுடன் ஆன்மிகப் பணிகள் செய்! அடிகளார் யார் என்பதை நீயே புரிந்துகொள்வாய்!”

**தூற்றுவதால் அடிகளார் பெருமை குறையப்போவதில்லை:**

“சிலை என ஒன்றிருந்தால் அதன்மேல் பறவைகள் எச்சமிடலாம்; நாய்கள் சிறுநீர் கழிக்கலாம். அதனால் சிலையின் சக்தி மாறுவதில்லை.

அசுத்தம் செய்திருப்பதால் அதனை அசிங்கம் என்று ஒதுங்குபவர்கள் சிலையின் சக்தியை அறியாமல் விலகிப் போய்விடுகிறார்கள். அதுபோலச் சக்தியின் தன்மையை அறியாமல் அவதூறு பேசுகிறவர்களை நான் ஒதுக்கி விடுகிறேன்.

சிலையில் உள்ள அசுத்தங்கள் மழைநீரால் சுத்தமாகிவிடுகின்றன. அவர்களின் அவதூறு பேச்சால் பாலகனின் சக்தி குறைபடுவதில்லை.”

**அடிகளாரும் அம்மாவும் ஒன்றே!**

“என்னைத் தூற்றுவதுமில்லமல் என் பாலகனையும் தூற்றுகிறார்கள். தாயையே எட்டி உதைக்கிற காலமடா இது!”

**அடிகளாராகவே அவதரித்து வந்திருக்கிறேன்:**

“இன்று நான் அடிகளாராகவே அவதரித்து உலவி வருகின்றேனே... என்னை எவனடா புரிந்துகொண்டீர்கள்? ஒவ்வொரு நொடிப்பொழுதும் நான் அவனாகவே உலவி வருகின்றேனே... அதையாவது உணர்ந்து கொண்டீர்களா?”

**உன் அஞ்ஞானம் விலகுவது எப்போது?**

“என்றைக்கு நீ அடிகளாரை முழுமையாகப் புரிந்து கொள்கிறாயோ அன்றைக்குத் தான் உன் அஞ்ஞானம் விலகும்; ஆன்ம ஞானம் பிறக்கும். அதுவரை நீ அலைய வேண்டியது தான்.”

**அடிகளாருக்கு உலகை ஆட்டுவிக்கும் சக்தியுண்டு!**

**அடிகளாரும் – நானும்:**

“நானாக அவன் இருப்பான்; அவனாக நானிருப்பேன்.”

**அடிகளார் உத்தரவுப்படியே:**

“அடிகளார் உத்தரவுப்படியே தான் இங்கே எதுவும் செய்ய வேண்டும். அடிகளாரிடம் ஏதோ சக்தி இருக்கிறது என்று மட்டும் எண்ணாதே! ஏன்? நானே அடிகளார்! அடிகளாரே நான்! அடிகளாரே சித்தன்! சித்தனே நான்! நானே அவன்! அவனே நான்!

இது உனக்கு இப்போது புரியாது. குழந்தையின் மொழி தாய்க்குப் புரியும். ஆனால் தாயின் மொழியைத்தகுந்த காலம் வரும் போது தான் குழந்தையால் உணரமுடியும். தக்க காலம் வரும்போது தான் இது உனக்குப் புரியும்.”

**தியானத்தால் கிடைக்கும் சக்தி!**

“தியானத்தின் மூலமாகக் கிடைக்கின்ற சக்தி வேறு! அடிகளார் உங்களிடம் காட்டுகின்ற அன்பினால் நீங்கள் அடையக்கூடிய சக்தி வேறு!”

**அடிகளாரால் உங்களுக்குப் பயன்:**

“உங்களுக்கு ஆன்மிகம் என்கிற கல்வியைப் போதிக்கிற நல்லாசிரியன் அடிகளார். அவனால் பயனடைகிறவர்கள் நீங்களே தவிர, உங்களால் அடிகளார் பெறப்போகிற பயன் யாதொன்றும் இல்லை. இதனை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

அடிகளாரின் பெருமையை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும். இதனைப் பின்பற்றி நீங்கள் வாழ்ந்தால் இதன் பயன் போகப் போகப் பின்னால் உங்களுக்குத் தெரியும்.”

**அன்னதானம் செய்:**

“அடிகளார் பிறந்த நாளில் ஏழைகளுக்கு அன்னதானம் செய். ஆடைதானம் செய். ஏழைகளுக்குக் குளிர் நீங்கப் போர்வை வாங்கிக் கொடு. குரு காணிக்கை வைத்து வழிபடு! இறைக்கிற கிணறு தான் சுரக்கும்.”



**அடிகளார் காப்பது எப்படி?**

“பறவை தன் குஞ்சுகளைக் காப்பது போல, அடிகளார் உங்களைக் காத்துவருவதைப் புரிந்து கொள்!”

**அடிகளாரும் நானும்:**

“அடிகளார் காலில் விழுந்து வணங்குவதால் உனக்குத் தன்னலம் கருதாத தவப்பயன் உண்டாகும்.”

அருள்வாக்கு - அடிகளார் - இந்த இடம் எதற்கு? என்பதை எல்லாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அருள்வாக்குக் கேட்டுவிட்டுச் சென்றால் மட்டும் போதாது. இந்தச் சித்தனைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும்.”

**அறியாமையால் அடிகளாரைத் தூற்றுகிறார்கள்:**

“ஒரு ஞானியும் தெய்வமும் சந்திக்கும்போது இரண்டும் ஜோதியாகி எரியும். அந்த நெருப்பில் விவரம் தெரியாதவன் நுழைந்தால் நெருப்பில் அகப்பட்டு அல்லல் பட வேண்டியிருக்கும்.”

**அடிகளார் ஓர் ஆலமரம்:**

“சின்னஞ்சிறிய விதை தான் பெரியதொரு ஆலமரம் ஆகிறது. அதுபோல உலகத்தின் பார்வைக்குச் சாதாரணமாகத் தென்படும் இந்த அடிகளாரால் தான் பெரியதொரு ஆன்மிகத்தை வளர்க்க முடியும்.”

**நாளைய உலகில் அடிகளார்:**

“நாளைய உலகில் அடிகளார் பேச்சுக்கும் பார்வைக்கும் மகிமை உண்டு.”

**ஆராய்ச்சி செய்யாதே! கரையேற வழி தேடு!**

“அம்மாவும் அடிகளாரும் ஒன்று என்பது எப்படி? ஆதிபராசக்தி பெண் தெய்வம் ஆயிற்றே! அடிகளார் ஆண் ஆயிற்றே! அப்படியானால் ஆதிபராசக்தி ஆண் தெய்வமா? பெண் தெய்வமா? என்றெல்லாம் வீணாக ஆராய்ச்சி செய்யாதே! உன் சிற்றறிவிற்கு இவையெல்லாம் எட்டாதவை.

இங்கே கொடுக்கிற வாய்ப்பையும் கிடைக்கிற வாய்ப்பையும் பயன்படுத்திக்கொண்டு கரையேற வழி தேடு!"

## அம்மனா? அடிகளாரா?

"அம்மனா? அடிகளாரா? - அடிகளாரா? அம்மனா? என்ற குழப்பம் தேவையில்லை. அடிகளாரின் ஆன்மாவின் மூலம்தான் என்னை நான் வெளிப்படுத்திக் கொள்கிறேன்.

மனிதர்கள், பறவைகள், தாவரங்கள் ஆகியவற்றுக்கெல்லாம் உருவம் உண்டு. ஆனால் ஆன்மாவிற்கு உருவம் கிடையாது.

காற்றை உன் கண்களால் காண முடியாது. வெளிச்சத்தில் உள்ளவர்களால் இருட்டில் உள்ளவர்களை எப்படிப் பார்க்க முடியாதோ அப்படியே ஆதிபராசக்தியாகிய என் உருவத்தை உன்னால் காண முடியாது.

சிலவற்றின் உருவங்களை உன்னால் தெரிந்து கொள்ள முடியாது. சக்தி எந்த ரூபம்? தர்மம் எந்த ரூபம்? என்பதையெல்லாம் உன்னால் தெரிந்து கொள்ள முடியாது."

## குரு காணிக்கை:

"அடிகளாருக்குக் குரு காணிக்கை வைத்து வழிபடு! அதனால் உனக்கு அருளும் உண்டு! பொருளும் உண்டு! எதையும் உள்ளன்போடு செய்! அதனால் உனக்குத் தான் பலன்! அடிகளாருக்கு அல்ல என்பதை மறவாதே!"

## உலக குருமார்கள்:

"லோக குருக்கள் என்பவர்கள் எல்லாம் என் திருவடியில் சுண்டு விரலின் நக விளிம்பின் ஓரம் உள்ள சிறு அணு அளவு ஞானத்தையே பெற்றுள்ளார்கள். இங்கே இப்போது நானே குருவாக அடிகளார் வடிவாக அவதரித்துள்ளேன்."

## அடிகளார் அபிமானம் ஒன்றே வழி!

"அடிகளார் அபிமானத்தின் மூலமே பிறவிப் பயனைப்பெற முடியும். மகனே! ஞான மார்க்கத்தின் மூலம் வீடுபேறு அடைந்தவர்கள் உண்டு. அந்த வழியில் செல்ல முடியாதவர்கள் கர்ம மார்க்கத்தைப் பின்பற்றி வீடுபேறு அடைவர். அவ்வழியில் செல்ல இயலாதவர்கள் யோக மார்க்கத்தைப் பின்பற்றுவர்.



அவ்வழியில் செல்ல இயலாதவர்கள் பக்தி மார்க்க மூலமாகப் பலன் பெற்றனர். பக்தியிலே சக்தியில்லாதவனுக்குப் பிரபத்தி (சரணாகதி) என்ற நெறி உறுதுணையாக அமைந்தது.

கர்ம அனுஷ்டானமும் ஆத்ம சிந்தனையும் பக்தி யோகமும் நம் சக்திக்கும் ஞானத்துக்கும் தக்கதல்ல என உணர்ந்து, அவைகளை விட்டு இறைவனிடம் சரண் புகுவதே பிரபத்தி (சரணாகதி). அந்த உபாயத்தையும் கைக்கொள்ள முடியாதவனுக்கு, "ஆசாரிய அபிமானம்" ஒன்றே வழி!

மோட்சத்தை அடையக்கூடிய மார்க்கத்தை யார் காண்பிக்கிறானோ அவனே ஆசாரியன். "ஆசாரிய தேவோ பவ!" ஆசாரியனைத் தெய்வமாக வழிபடு என்பது வேதவாக்கு.

ஆனால் இந்த ஆசாரிய அபிமான நெறியானது, ஆசாரியன் ஆசாரியனாக இல்லாத காரணத்தினால் பல நேரங்களில் பலனளிக்காமல் போய்விடுகின்றது. குருநாதர்கள் குருநாதர்களாக நடந்து கொள்ளாததும், சீடர்கள் சீடர்களாக நடந்து கொள்ளாததும், "ஆசார்ய அபிமான நெறி" பலன் குன்றிப்போக காரணமாகிவிட்டது. ஆகவே தான், நானே அடிகளாராக அவதாரம் செய்து "அடிகளார் அபிமானம்" என்கிற உபாயத்தை அருளியுள்ளேன்.

இதுவே முடிவான படிநிலை! இதுவே முடிவான வழிமுறை!

"அடிகளார் அபிமானம் என்பது வேறு ஒன்றுமில்லை! நீ செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. நீ அடிகளாரின் அபிமானத்திற்குப் பாத்திரமாய் இருந்தால் போதும்! அந்த எண்ணமே உனக்கு மோட்சத்தைக் கொடுக்கும். அடிகளாரை நினைத்துக் கொண்டு இருந்தாலே போதும்! அவனை நினைக்கும் போது அந்த நினைவில் கொள்ளும் அடிகளாரின் பார்வை பட்டாலே போதும்!"

## அடிகளாரை மகிழ்விக்கும் நெறி:

"சகஜமான நிலையில் அடிகளார் உங்களோடு பழகிக் கொண்டிருப்பதை வைத்து, பள்ளிக்கூடத்து வாத்தியாரைத் தெய்வமாக நினைப்பதா? என்று எண்ணாதே! தெய்வம் பள்ளிக்கூடத்து வாத்தியாராகப் பணி செய்ததை நினைத்து உண்மையை உணர்ந்து கொள்!

தெய்வமே தொண்டு செய்யும் பொழுது, நீயும் தொண்டு செய்து தான் ஆன்ம முன்னேற்றம் பெற முடியும். கைங்கரியம் என்ற தொண்டு நெறியே அடிகளாரை மகிழ்விக்கும் நெறி! நீ உய்வு பெறும் நெறி!"

## அடிகளாரைக் காட்டிக் கொடுத்திருக்கிறேன்:

"இந்த உலகில் ஆரம்பத்தில் ஒவ்வொரு சித்தனும் ஒவ்வொரு கருத்தைக் கொண்டு ஆன்மிகத்தை வளர்த்து வந்தான். பிறகு ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு குரு, ஒவ்வொரு தெய்வம் என்று வளர்ந்தது. இவ்வாறே ஆன்மிகம் வளர்க்கப்பட்டது.

மனத்தை ஒருமுகப்படுத்த வேண்டி ஒரு கல்லை வைத்து உருவம் தந்து வணங்கினார்கள். இன்றைக்குப் பாமரமக்களும் அடிமட்டத்தில் உள்ளவர்களும், பெண்கள் சமுதாயமும், ஆன்ம முன்னேற்றம் பெற வேண்டி அடிகளாரையே குருவாகவும், தெய்வமாகவும் உங்களுக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறேன்.

புரிந்து கொள்வதும், பற்றிக் கொள்வதும் உங்கள் பொறுப்பு."

## உங்களுக்கெல்லாம் ஒரு குரு வேண்டும் என்பதற்காக...

"அடிகளார் ஆலயத்தைச் சுற்றிவருவதும், நீங்களெல்லாம் "மின்னும் புவிக்கெலாம்" பாடுவதும், நான் ஒரு மனிதக்கூட்டில் பாய்ந்து உங்களுடன் பேசுவதும் எல்லாம் எதற்காக...? உங்களுக்கெல்லாம் ஒரு குரு வேண்டும் என்பதற்காக... நீங்களெல்லாம் ஆன்மிகத்தில் அனாதைகளாக ஆகிவிடக் கூடாதே என்பதற்காக!"

## உங்கள் வீடுகளுக்கு வரும்போது:

"உங்கள் வீடுகளுக்கு அடிகளார் வருகிற வாய்ப்பு வரும்போது வீட்டில் உள்ள குத்துவிளக்கையேற்றிக் கொண்டு வந்து அடிகளார் கையில் கொடுத்து வாங்கிக் கொள்ளுங்கள். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்."

## அன்றைக்குக் கண்ணன் வந்தபோது...

"கண்ணன் பஞ்சபாண்டவர்களுக்கு மைத்துனனாகவும் தோன்றினான். தெய்வமாகவும் தோன்றினான். ஆனால் துரியோதனன் கூட்டத்திற்கோ அவன் சாதாரண மனிதனாகத் தோன்றினான். அவனை மைத்துனனாகவும், தெய்வமாகவும், நினைத்தவர்களுக்கு வெற்றி கிடைத்தது. அவனை வெறும் மனிதனாகவே நினைத்தவர்களுக்கு அழிவுதான் ஏற்பட்டது.

அடிகளாரைத் தெய்வமாகவே நினைப்பவர்கள் நல்ல பலனை அடைகிறார்கள். வெற்று மனிதனாக நினைப்பவர்கள் அதற்குரிய பலனை அடைவார்கள்.

மாமன் பெரும் சக்தி படைத்தவன் என்பது துரியோதனன்



கூட்டத்திற்குத் தெரியாமலே போய்விட்டது. அடிகளார் மானிட உருவத்தில் இருப்பதனால் அவனது சக்தியைச் சிலர் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்."

## அவனும் – அவளும்:

"அவனின்றி ஓரணுவும் அசையாது. அவளின்றி ஓரணுவும் அசையாது. அடிகளாரும் ஆதிபராசக்தியும் இன்றி ஓரணுவும் அசையாது."

## ஆன்மிகம் என்ற பந்து:

"நான் வீசி எறிகின்ற ஆன்மிகம் என்ற பந்தினைத் தான் பிடித்துக் கொண்டு உங்களுக்குப் போடுகின்ற ஆன்மிக குரு தான் அடிகளார்."

## குருவின் பிறந்த நாள்:

"குருவின் பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்ற எண்ணம் இயல்பாகவே உங்களுக்கு வரவேண்டும். ஆதலால் அடிகளாரிடம் சென்று கேட்காதே. அதில் அவனுக்கு விருப்பமில்லை! உங்களுக்குத்தான் அந்த அக்கறை இருக்க வேண்டும்."

## அடிகளாரின் பார்வைக்கு மகிமையுண்டு:

"மின்சாரமும் ஒளியைக் கொடுக்கிறது. சூரியனும் ஒளியைக் கொடுக்கிறது. சூரிய ஒளியில் உள்ள வெப்பம் மின்சார ஒளிக்குக் கிடையாது. அடிகளார் பார்வை சூரிய ஒளிக்கு ஒப்பானது. அவன் பார்வைக்குப் பாவம் போக்கும் சக்தியுண்டு. மகிமையுண்டு."

## அடிகளார் மூலமாக...

"கம்பியின் மூலமாக மின்சாரம் பாய்வது போல, அடிகளார் மூலமாக நான் ஆன்மிகத்தைப் பரப்பி வருகிறேன். மின்சாரம் கம்பியின் ஒரு திசையில் மட்டுந்தான் பாயும். நான் அடிகளார் மூலமாக உங்கள் பாவங்களைக் குறைத்து, உங்களுக்குப் புண்ணியத்தையும் அதிகம் சேர்த்து இரண்டு வழிகளிலும் செயல்பட வைக்கிறேன்."

## அடிகளார் பிறந்த நாள் விழாவின் போது:

"அடிகளார் பிறந்த நாளின் போது, பாதபூசை செய்து பாதங்களில் வைக்கப்பட்ட குங்குமத்தை எடுத்து நெற்றியில் வைத்துக் கொள்ளுங்கள்."

**மனித தெய்வம்:**

“அடிகளாரை வஞ்சிக்கிறவர்கள் அனைவரும் வஞ்சிக்கப் படுவார்கள். தெய்வத்திற்கு முக்கியத்துவம் உண்டு. அதுபோலவே மனித தெய்வத்திற்கும் முக்கியத்துவம் உண்டு.”

**நடமாடும் தெய்வம்:**

“அடிகளார் நடமாடும் தெய்வம். அவனே தன் வீடு தன்னுடையதென்று கருதாமல் பொதுமக்களுக்காக ஒவ்வொரு துறையையும் கண்காணித்து வருகிறான்.”

**சாதாரண மனிதன் போல...**

“அடிகளார் ஏதோ சாதாரண மனிதர் போலப் பேசுகிறார். சாதாரண மனிதர் போலவே நடந்து கொள்கிறார் என்று நினைத்துக் கொள்ளாதே. சாதாரண நிலையிலும் கூட நான் அடிகளாரோடு இருக்கிறேன் என்பதை மறந்துவிடாதே!”

**அடிகளார் மூலந்தான் என்னை நெருங்க முடியும்:**

“அபிடேகம், அலங்காரம், அர்ச்சனை, தியானம் இவற்றால் எல்லாம் என்னை அடைய முடியாது. உன்னை நீயே அடைய வேண்டும். கம்பி மூலம் மின்சாரம் பாய்வது போல - கருத்துக்கள் மூலம் பொருள் புரிவது போல - அடிகளார் மூலந்தான் என்னை நீங்கள் நெருங்க முடியும்.

காந்தத் தன்மை பெற்ற காந்த ஊசியினால் இரும்பு கவரப்படுவது போல அடிகளார் மூலமாகத் தான் என்னை நீங்கள் நெருங்க முடியும். அடைய முடியும்.”

**அடிகளார் நிழல்:**

“நல்ல கருத்துக்களைப் புரிந்து கொண்டு, அடிகளாரின் ஆன்மிக நிழலை ஒவ்வொருவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தியானத்தை இன்னும் அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும்.”

**உங்களை நீங்களே வளர்த்துக் கொள்ள...**

“1008, 108 மந்திரம் படிப்பது. தொண்டு செய்வது. தியானம் செய்வது இவற்றால் மட்டுமே என்னையோ அடிகளாரையோ அடைய முடியாது.

இவையனைத்தும் இந்தச் சித்தர் பீடத்தையோ அடிகளாரையோ



வளர்ப்பதற்காக அல்ல. உங்களை நீங்களே வளர்த்துக்கொள்ள!”

**பொய்யான பக்தியோடு நெருங்காதே...**

“அடிகளார் நம்முடன் இருப்பவர் தானே...? நம்முடன் சகஜமாகப் பேசுகிறவர்தானே...? என்று ஆன்மிகப் போர்வையில் பொய்யான பக்தியோடு நெருங்க நினைத்தால் நீங்கள் அடிகளாரையும் அடைய முடியாது. ஆன்ம முன்னேற்றத்தையும் அடைய முடியாது.

கானல் நீர் தொலைவிலிருந்து பார்க்கும் போது நீர் போலத் தான் தெரியும். அருகில் வந்து பார்க்கும் போது தான் மறையும். பொய்யான பக்தியோடு நீங்கள் அடிகளாரை நெருங்கினால் அடிகளாரும் கானல் நீர்தான். ஆன்மிகமும் கானல் நீர்தான்!”

**உன் நினைப்பிற்குத் தக்கபடி:**

“நீ சாமி என்று நினைத்தால் சாமி தான்! சாணி என்று நினைத்தால் சாணி தான். கல் என்று நினைத்தால் கல்தான்!”

**அடிகளாரின் ஆன்ம சக்தி!**

“இயற்கையில் தாதுப்பொருட்கள் பல உள்ளன. இருந்தாலும் காந்தம் இரும்பை மட்டுமே ஈர்க்கிறது. இரும்பை ஈர்க்கும் சக்தி காந்தத்திற்கு மட்டுமே உண்டு. அதுபோல மனிதர்களிலும் பலவகை உண்டு. இருந்தாலும் ஆன்மிகம் பரப்புவதற்கு நான் அடிகளாரின் ஆன்ம சக்தியைத் தான் பயன்படுத்துகிறேன்.”

**எளிமையை வைத்து எடைபோடாதே!**

“அடிகளாரின் எளிமையைத் தவறாக எண்ணிக் கொண்டு நீ கிள்ளுக்கீரையாக நினைத்தால் உனக்குக் கீறல் விழும்.”

**ஆன்மிகச் சக்கரம் சுழல:**

“ஒரு சக்கரத்திற்கு அச்சு முக்கியம். அந்த அச்சிற்குப் பசை முக்கியம்.

ஆன்மிகம் என்ற சக்கரம் சுழல அடிகளார் என்ற அச்சு தேவை. அந்த அச்சிற்குப் பசை போல அடிகளாருக்குள் நான் இருக்கிறேன். உடல்தான் அடிகளாருடையது. அடிகளாரின் ஆன்மா என்னுடையது.”

**அடிகளார் என்ற மூலப்பொருள்:**

“அடிகளார் என்ற மூலப்பொருளை வைத்துத்தான் எதையும் நீங்கள் அடையமுடியும். அடிகளார் என்ற ஆதாரத்தை வைத்துத்தான்

நீங்கள் ஆதாயம் தேடுகிறீர்கள்.''

**ஆன்மிகத்திற்கு வேர்:**

''கண்ணாடி என்ற ஒன்று இருந்தால்தான் உன் உருவத்தைப் பார்த்துக் கொள்ள முடியும். எந்த ஆன்மிகவாதியாலும் இதுபோல இங்கே ஆன்மிகத்தை வளர்க்க முடியவில்லை என்பதையும் புரிந்துகொள்!

ஆன்மிகம் என்ற பழம் கிடைத்துவிட்டால் மட்டும் போதாது. அதனைப் புசித்துவிட்டால் மட்டும் போதாது. அடிகளார் என்ற வேரையும் மறவாமல் நினைத்துப் போற்றுகிற பண்பும் உங்களுக்கு வரவேண்டும்.''

**அடிகளார்: கண்ணாடி:**

''கண்ணாடி முன்பு நின்றுகொண்டு உன் முகத்தைப் பார்க்கிறபோது உன் முகம் எப்படியோ அதுதான் கண்ணாடியில் தெரியும்.

அடிகளார் என்ற இந்தச் சித்தனை நீ எப்படிப் பார்க்கிறாயோ உன் உள்ளத்திற்குத் தக்கபடி தான் அவனைப் புரிந்துகொள்ள முடியும்.

உன் அழுக்கு மனத்தை வைத்துக்கொண்டு அடிகளாரைச் சோதிக்காதே! சாது மிரண்டால் காடு கொள்ளாது.

பலதரப்பட்ட மக்களையும் ஆன்மிகத்தில் ஈடுபடுத்தி வழிக்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது.

ஆண்கள், பெண்கள், முதியவர்கள், இளைஞர்கள், ஏழை, பணக்காரன், அப்பாவி, கொடியவன் எல்லோரையும் ஆன்மிகத்தின் நிழலில் கொண்டுவர வேண்டியிருக்கிறது.

முள்ளை முள்ளால் எடுக்க வேண்டியிருக்கிறது. சிலருக்குத் தூரத்துப் பச்சை கண்ணுக்கு அழகாகத் தோன்றும். சில பேர் பனைமரத்தடியில் நின்று பால் குடிப்பதால் சந்தேகம் வருகிறது.

எல்லோருடைய மனப்பக்குவம், தரம், முன்வினை ஆகியவற்றை வைத்து அடிகளார் இங்கே ஆன்மிகம் வளர்க்க வேண்டியிருக்கிறது.

கம்பிமேல் நடக்கிற வித்தை தெரிந்தவன் அடிகளார். இன்றைய உலகில் அடிகளார் போல மற்றவர்களால் ஆன்மிகத்தை வளர்ப்பது முடியாது. அடிகளார் தான் எனது ஆன்மா! அடிகளாரைப் போன்ற



சிறந்த ஆன்மிகவாதி உலகில் கிடையாது.''

**ஆதாரமும் – அவதாரமும்:**

''இயற்கையில் உள்ள மரம், செடி, கொடி அனைத்துமே மனிதனுக்குப் பயன் தருபவை.

அந்தச் செடி கொடி மரங்களில் கிடைக்கிற பழம் என்ற பயன் உங்களுக்கு உண்டு. அவற்றுக்கெல்லாம் ஆதாரமாக உள்ளது வேர்.''

அதுபோல ஆன்மிகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள உங்களுக்குப் பலன்கள் உண்டு. அதற்கு ஆதாரமான வேர் தான் அடிகளார்.

ஆதாரம் தான் அவதாரம்! அவதாரம் தான் ஆன்மா! அடிகளாரை வைத்து ஆதாயம் தேட முயன்றால் அழிவுகள் தான் ஏற்படும்.

**கோழிக் குஞ்சுகளைக் காப்பது போல:**

''அடைக்கலம் நாடி வந்துள்ள உங்களையெல்லாம் அடிகளார் எவ்வாறு காத்து வருகின்றான் என்பதெல்லாம் உங்களுக்குப் புரியாது.

ஒரு கோழி தன் குஞ்சுகளைப் பாதுகாத்து வருவதுபோல் அடிகளார் உங்களைக் காப்பாற்றி வருகிறான்.

அடிகளார் என்கிற ஒரு ஜீவன் இல்லையென்றால் இங்கே பலர் ஜீவனத்துக்கே வழியில்லாமல் போய்விடும்.''

**எதற்காக ஏங்க வேண்டும்?**

''அடிகளார் பார்வைக்கும் அருளுக்கும் அன்புக்கும் தான் நீங்கள் ஏங்கவேண்டும். விஞ்ஞான முன்னேற்றங்களால் கிடைக்கிற வசதிகளுக்கு ஏங்குவது வீண். அவற்றால் அழிவுகளும் விரயங்களும் தான் ஏற்படும்.''

**அவதார புருஷன்:**

''அடிகளார் ஓர் அவதார புருஷன்.''

**அவதார நோக்கம்:**

1) தெய்வ நம்பிக்கை, தெய்வ பக்தி, ஆன்மிக உணர்வுகளை ஊட்டவே இந்த அவதாரம்!

2) பெண் குலத்தை ஆன்மிக வழியில் உயர்வுபடுத்தவே இந்த

அவதாரம்!

3) அடித்தளத்து மக்களை ஆன்மிக வழியில் உயர்வுபடுத்தவே இந்த அவதாரம்!

**அடிகளாரைப் பற்றிக்கொள்:**

“ஆன்மிகத்தை விடாமல் பற்றிக்கொள்! சரணாகதித் தத்துவத்தைக் கடைப்பிடி! அடிகளாரைப் பற்றிக்கொள்!

அடிகளார் காலத்தில் வாழ்கிறோம்; அவன் அருள் உரைகளைக் கேட்கிறோம் என்று பெருமைப்படு!

அடிகளாருக்குத் தொண்டு! அடிகளார் பார்வை படுதல்! ஆகியவற்றின் பெருமைகளைப் பின்னர் நீ அறிவாய்!”

**எப்படிப் பழக வேண்டும்?**

“அடிகளாரிடம் பழகும்போது பயபக்தியோடு பழக வேண்டும். அகலாமலும் அணுகாமலும் பழகவேண்டும்.

குளிர் காயும்போது நெருங்கினால் நெருப்பு உன்னைச் சுட்டுவிடும். அகன்று விலகிவிட்டால் குளிரில் நடுங்க வேண்டும். அகலாதும் அணுகாதும் குளிர்காய்வது போல் அடிகளாரிடம் பயபக்தியோடு பழகவேண்டும்.

**அவதாரத் திருநாள்:**

“பட்டிதொட்டி எங்கும் அடிகளாரின் அவதாரத் திருநாளை மக்களெல்லாம் அறியும்படிச் செய்யவேண்டும்.

உலகத்திற்கு அச்சாணியாகத்தான் அடிகளாரை அவதாரமாகக் கொடுத்திருக்கிறேன். உங்கள் ஆதாரத்திற்காகவே இந்த அவதாரம்!

**யாரால் வந்த வளர்ச்சி:**

“மரம் வளர்ந்திருப்பது கண்களுக்குத் தெரிகிறது. அதன் அடியில் உள்ள வேர் தெரிவதில்லை.

அம்மாவிடம் வந்து சேர்ந்த உங்களில் பலருக்கும் தங்கள் வளர்ச்சி தெரிகிறது. ஆனாலும் அதற்குக் காரணமான அடிகளார் என்ற வேர் உங்கள் கண்களுக்குத் தெரிவதில்லை.”

**பார்வையில் வேறுபாடு:**

“அடிகளாரைப் பார்க்கிறபொழுது சிலருக்கு எளிமை மட்டும் தெரிகிறது. சிலருக்கு அவனிடம் உள்ள சக்தி தெரிகிறது. சிலருக்கு மட்டுமே அம்மாவாகத் தெரிகிறது.”



**உங்கள் பார்வை – அடிகளார் பார்வை:**

“உங்கள் பார்வைக்குச் சூரியன் தெரியும். சந்திரன் தெரியும். நட்சத்திரங்கள் தெரியும்.

அடிகளார் பார்வைக்குச் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இவற்றையெல்லாம் தாண்டியும் தெரியும்.”

**சாது மிரண்டால் காடு கொள்ளாது:**

“அடிகளார் என்கிற ஒரு ஜீவனை வைத்துத்தான் இன்றைய உலகில் நான் ஆன்மிகம் வளர்த்து வருகிறேன்.

பசு சாதுவாகத்தான் இருக்கிறது. சாது மிரண்டால் காடு கொள்ளாது. அடிகளாரைப் புரிந்து கொண்டு நடந்து கொள்ள வேண்டும்.”

**அடிகளாரைப் பயன்படுத்தி:**

“ஒரு செடி வளர்ந்து கொடியாவதும், மரமாவதும், அது குத்துச் செடியாவதும், அந்தச் செடியின் வேரின் தன்மையைப் பொறுத்தது.

அதுபோல இங்கு அவரவர் மனப்பான்மைக்குத் தக்கபடி அடிகளாரைத் தூற்றுகிறார்கள். போற்றுகிறார்கள்.

ஒருவன் பணத்தைச் சம்பாதிக்கலாம். சொத்து சம்பாதிக்கலாம். பெயரைச் சம்பாதிக்கலாம். பத்து உள்ளங்களை வைத்து ஆன்மிகத்தை வளர்ப்பது தான் கடினமான காரியம். அந்தக் கடினமான காரியத்தைச் சாதிப்பவன் தான் அடிகளார்!”

**அடிகளார் மொழி:**

“இருட்டில் ஏற்றப்பட்ட மெழுகுவத்தியின் ஒளியிலும், சுற்றியுள்ள பொருள்களைக் கண்டறிவது போல, இருளடைந்த நெஞ்சம் கொண்ட நீங்களும் அடிகளார் மொழிவதைக் கவனித்து உணர்ந்து உங்களை நீங்கள் காத்துக் கொள்ள வேண்டும்.”

**தாய், தந்தை, ஆசிரியன், குரு:**

“தாய், தந்தையர் ஒருவன் படிப்பிற்கும், ஒழுக்கத்திற்கும் வழி காட்டியாக விளங்குகிறார்கள்.

கல்விக்கு வழிகாட்டியாக ஆசிரியன் விளங்குகிறான். உங்களுக்கு வழிகாட்டும் குருவாக அடிகளார் விளங்குகின்றான்.”

**அடிகளார் மூலமாகத்தான் நடக்கிறது:**

“ஒட்டைச் சட்டியில் உள்ள செடியைத் தூரத்திலிருந்து பார்க்கிறபோது, சட்டியிலிருந்து செடி வளர்ந்திருப்பதாகத் தெரிகிறது. அருகில் வந்து பார்க்கும் போது தான் அது பூமியில் வேர் ஊன்றி வளர்ந்திருப்பது தெரிகிறது.

அதுபோல நமக்கு நாமே ஆன்மிகத்தை வளர்த்துக் கொள்கிறோம் என்று உள்ளுக்குள் நீங்கள் நினைக்கிறீர்கள். அடிகளார் மூலமாகத்தான் அந்த ஆன்மிகத்தைப் பெற்று வருகிறீர்கள் என்பதை உணர்வதில்லை!”

**அடிகளாரும் – நீங்களும்:**

“பந்தபாசங்களை விடு! என்று அடிக்கடி சொல்கிறாயே தாயே! அடிகளாரும் இல்லறத்தில் இருப்பவர்தானே...? அவருக்கும் பந்தபாசங்கள் இல்லையா? என்று நீங்கள் நினைக்கிறீர்கள்-

அடிகளார் நிலைமை வேறு! உங்களுடைய நிலைமை வேறு! சர்க்கஸ் கம்பி மேல் நடக்கிற வித்தை தெரிந்தவன் அடிகளார். கீழே விழாமல் கம்பி மேல் நடக்கிற வித்தை தெரிந்தவன் அவன். உங்களால் அப்படி நடக்க முடியாது.

அதுபோல நீங்களும் நடக்க முயன்றால் கீழே விழுந்து அடிபடுவீர்கள். கம்பியும் உங்கள் மேல் விழும். அடிகளாரோடு உன்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளாதே!”

**ஒரு குரு தேவை:**

“உன் உருவத்தைப் பார்க்கக் கண்ணாடி தேவை. அக்கண்ணாடியில் உன் பின்பக்க உருவத்தை முழுமையாகப் பார்க்க முடியாது.

உனக்குத் தெரியாத ஓர் உருவம் உனக்கு உண்டு. உன்னுடைய பின்பக்க உருவத்தைப் பார்ப்பதற்கு ஆதிபராசக்தி என்ற கண்ணாடி தேவை. அதற்கு ஒரு குரு தேவை.”

**தாயும் – குருவும்:**

“தாயையும் குருவையும் மறக்கக்கூடாது.”

**அடிகளாரின் பிறந்த நாள் விழா:**

“அடிகளாரின் பிறந்த நாள் விழாவை ஏதோ ஒரு பிறந்த நாள் விழா என்று கருதிக் கொள்ளக் கூடாது. அது உங்களுக்கு ஒரு



வழிகாட்டியாக இருப்பதோடு உலகில் தாய்மைப் பண்பு செழித்து வளர்வதற்கு வாய்ப்பாகவும் அமையும்.”

**அடிகளாரோடு பழகும் வாய்ப்பு:**

“அடிகளார் பார்வைக்குள்ள தன்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். அடிகளாரோடு பேசுகிற வாய்ப்பும் இனி கிடைக்காமல் போகிற நிலை உண்டாகும்.”

**பக்தர் வழிபாடு – ஆசான் வழிபாடு:**

“பக்தர்களுக்குப் பக்தர்களே வழிபாடு செய்ய வேண்டும். ஆசான் வழிபாடு முக்கியம்.”

**அடிகளார் – சொற்பொருள்:**

“அடிகளார் என்றால் மக்களின் அன்புக்கும் பாசத்துக்கும் அடிமையானவன் என்பது பொருள்.”

**என்னை நெருங்கும் தகுதி:**

“அம்மாவுக்குக் கொடுக்கும் மரியாதையை அடிகளாருக்கும் கொடுக்கிற பக்குவம் என்றைக்கு வருகிறதோ அன்று தான் என்னிடம் நெருங்குகிற தகுதி உனக்குக் கிடைக்கும்.”

**அடிகளாரை நினைத்து எதையும் செய்:**

“அடிகளார் நம் குடும்பத்துக்கு வரவில்லையே! திருமணத்திற்கு வருகை தர முடியவில்லையே என்றெல்லாம் பக்தர்கள் கவலைப்பட வேண்டாம். அடிகளாரை நினைத்து ஒரு காரியத்தைச் செய்தாலே போதுமானது.”

**அடிகளார் படத்துக்குச் சக்தி:**

“கோயில் கருவறையில் உள்ள விக்கிரகத்தை வணங்கிப் பயன் அடைவதைப் போல, எதிர்காலத்தில் என் பாலகன் படத்தை வைத்து வணங்கிப் பக்தர்கள் பலன் அடையப் போகிறார்கள்.”

**விரல் அசைந்தால் – உலகம் அசையும்:**

“என் மகனைச் சிலர் சோதனை செய்து பார்க்கிறார்கள். சோதனைகள் செய்தால் வேதனைகள்தான் மிஞ்சும். இந்தத் தாயைச் சோதனை செய்தால் தாய் தாங்குவாள். மகனைச் சோதனை செய்தால் தாய் தாங்கமாட்டாள். மகன் விரல் அசைந்தால் உலகம் அசையும்.”

**அடிகளார் உள்ளப் பதிவு:**

“அடிகளார் உள்ளத்தில் என்ன பதிவு ஏற்படுகிறதோ அது தான் அம்மாவின் கருத்து என்பதைப் புரிந்து கொள்! அடிகளார் ஆசியே அம்மாவின் ஆசி!”

**பார்வையும் – பாதம் பட்ட மண்ணும்:**

“அடிகளார் பார்வைக்கும் பாதம் பட்ட மண்ணுக்கும் மகிமை உண்டு. அடிகளார் பார்வைக்குப் பாவம் போக்கும் சக்தி உண்டு. சூரிய ஒளிக்கு இருளை ஓட்டும் சக்தி இருப்பது போல, பிற பொருள்களை எரிக்கும் சக்தி இருப்பது போல, ஒருவனது பாவத்தை எரிக்கும் சக்தி அடிகளார் பார்வைக்கு உண்டு.”

**அடிகளாரைப் பயன்படுத்திக் கொள்!**

“மழை நீரை எந்த ரூபத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம். அதுபோலவே அடிகளாரையும் எந்தெந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அந்தந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஏனோதானோ என்று இருக்காதே! அடிகளாரைப் பயன்படுத்திக் கரையேற வழி தேடு!”

**அடிகளார் எளிமை:**

“எவ்வளவு தான் சூடேற்றினாலும் மண் பானை உருகுவதில்லை. வெள்ளிப் பாத்திரம், பித்தளைப் பாத்திரங்களைக் குறிப்பிட்ட வெப்ப நிலைக்கு மேல் சூடேற்றினால் உருகிப் போய்விடும். மண்பாண்டமேயானாலும் அதனைப் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். அது எளிமையானது தான் ஆனாலும் பயனுடையது. அடிகளார் எளிமையானவன் தான். அந்த எளிமையைக் கண்டு ஏமாறாமல் அவனைப் பயன்படுத்திக் கொண்டு ஆன்ம முன்னேற்றம் பெறுவது உன் கடமை.”

**அடிகளாரைத் தேடி:**

“நதியைத் தேடித் தண்ணீர் வருகிறது. அந்த நதி கடலைத் தேடி வருகிறது. அதுபோல ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்தில் அடிகளாரைத் தேடி நீதான் வரவேண்டும்.”

**உலகியலுக்கும் – ஆன்ம உயர்வுக்கும்:**

“கையில் கிடைத்த களிமண்ணைக் கொண்டு குரங்காகவும் பிடிக்கலாம். பிள்ளையாராகவும் பிடிக்கலாம். அது அவரவர்



மனோபாவத்தைப் பொறுத்தது.

அதுபோல அடிகளாரை உலகியல், ஆன்மிகம் என்ற எந்த ரூபத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம். பயன்படுத்திக் கொள்ளும் விதத்தைப் பொறுத்துத்தான் உன் வளர்ச்சி அமையும்.”

**பங்காரு தெய்வம் கொடுத்துள்ள முக்கியத்துவம்:**

“பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறேன். எந்த யுகத்திலும் தொழில்துறையிலும், அரசியல் துறையிலும், நாட்டு நடப்புத்துறையிலும், ஆன்மிகத்துறையிலும் இதுவரை பெண்களுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

பெண்களால் எதையும் செய்ய முடியும். சாதிக்க முடியும் என்பதை உலகிற்குக் காட்ட வேண்டியே பங்காரு தெய்வம் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.”

**அடிகளாரை வைத்து...**

“அடிகளாரை ஆதாரமாக வைத்துச் செவ்வாடை என்ற பெயரில் வியாபாரமும் செய்கிறார்கள். பிறருக்கு நீ சாணி பூச நினைத்தால் உன் கைதான் நாற்றம் அடிக்கும்.”

**அடிகளார் மூலமாக...**

“அடிகளார் மூலமாக நான் உங்களுக்குக் கைகாட்டியாகவும் வழிகாட்டியாகவும் இருந்து அருள் பாலிக்கிறேன்.

அடிகளாரை அம்மா என்று உண்மை உணர்வுடன் பார்க்கிறபோது சமுதாயத்திற்கு மழையும் கொடுக்கிறேன்.”

**உன் எண்ணங்களுக்கு ஏற்றபடி...**

“நீ என்னை அம்மா என்று நினைத்தால் நான் அம்மா தான்! அடிகளார் என்று நினைத்தால் அடிகளார்தான்! பங்காரு என்று நினைத்தால் பங்காருதான்! உன் எண்ணங்களுக்கு ஏற்றபடியே நான் இருப்பேன்.”

**அம்மாவும் அடிகளாரும்:**

“பம்பரம் சுழல்வதற்குக் கயிறும் தேவை; சக்தியும் தேவை. அதுபோல இன்றைய உலகத்தில் ஆன்மிகத்தை இயக்க அடிகளாரும் தேவை. அம்மாவும் தேவை.”

**அடிகளாரைப் பற்றிக்கொள்:**

“அடிகளாரின் பாதத்தைப் பற்றிக் கொண்டால் கரையேற முடியும். அடிகளாரைப் பற்றிப் பட்டிதொட்டியெங்கும் பரப்பும்

வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.''

## பாதுகாத்துப் பயன்படுத்திக் கொள்:

''ஒரு மரத்தை நட்டுவைத்துவிட்டால் மட்டும் போதாது. அதற்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும். வேலியிட்டுப் பாதுகாத்துப் பயன்பெற வேண்டும். அதுபோலவே அடிகளாரையும் பதமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பொல்லாத காலம் இது!''

## நிலம் ஆதிபராசக்தி! விதை அடிகளார்!

''உடல் வளர்ச்சிக்கு உணவு தேவை. அந்த உணவை உற்பத்தி செய்ய விதை தேவை. அந்த விதை முளைப்பதற்குத் தண்ணீர், காற்று, உஷ்ணம், ஈரப்பதம் தேவை. அப்போது தான் விதை முளைக்க ஆரம்பித்துப் பயிராகிறது. பயன் தருகிறது.

அதுபோல ஆன்மிகம் என்னும் பயிர் ஆதிபராசக்தி என்னும் நிலத்தில் அடிகளார் என்னும் விதையின் மூலம் வளர்கிறது.''

## ஆன்மிகத்துறையும் – பிற துறைகளும்:

''இன்றைய உலகில் ஒவ்வொரு துறையிலும் அதர்மம் உண்டு. ஆனாலும் ஆன்மிகத்துறையை விடாமல் அடிகளாரைப் பற்றிக் கொண்டால் உனக்கு நல்லது.''

## அடிகளாருக்காக...

''அடிகளாருக்காக ஊர்வலமும், உருள்வலமும் வந்துவிட்டால் போதாது. உன் உள்ளமும் அடிகளாரைச் சுற்றி வலம் வர வேண்டும். அடிகளாருக்காக நீ எந்தப் பிரார்த்தனை செய்தாலும் அந்தப் பிரார்த்தனையின் பலன் உனக்குத் தான் கிடைக்கும்.''

## ஆராய்ச்சி செய்யாதே!

''ஒரு நேரத்தில் பார்த்தால் பங்காருவாக இருக்கிறார். மற்றொரு நேரத்தில் பார்த்தால் அம்மாவாக இருக்கிறார். அப்படி இருப்பது எப்போது? இப்படி இருப்பது எப்போது? என்றெல்லாம் ஆராய்ச்சி செய்து எடை போடாதே! அடிகளாரைப் பற்றிக்கொண்டு ஆன்மிகத்தில் முன்னேறும் வழியைப் பார்!''

## படிப்படியாக...

''முதலில் பங்காரு வாத்தியார் என்று எண்ணினீர்கள். பிறகு



அடிகளார் என்றீர்கள். பேசும் தெய்வம் என்றீர்கள். மகான் என்று உணர ஆரம்பித்தீர்கள். பிறகு அம்மா என்றீர்கள். இப்போது ஆதிபராசக்தி என்று சொல்லும்படி ஆன்மிகத்தில் பண்பட்டு வருகிறீர்கள்.''

## காட்சி தருவேன்:

''சிலை ரூபமாகவும், அடிகளார் ரூபமாகவும் காட்சி தருவேன். ஆன்மா எந்த ரூபம் என்று எந்த விஞ்ஞானியாலும் கண்டுபிடிக்க முடியாது.''

## பாவங்களை எரிக்கும் சக்தி:

''சூரிய ஒளிக்கதிர்களைக் கண்ணாடியில் படும்படிக் குவியச் செய்தால், அடியில் உள்ள காகிதம் தீப்பற்றி எரிகிறது. அதுபோல அடிகளார் பார்வையினால் பாவங்கள் அழியும்.''

## பூனைக்கு மணிகட்டுவது யார்?

''இந்தக் காலத்தில் ஒருவரையும் நம்ப முடியாது. அந்தக் காலத்தில் இருந்த பக்தி, சக்தி, உழைப்பு, உணர்வு இப்பொழுது இல்லை.

பக்தியும், சக்தியும் இல்லாததால் கத்தி, துப்பாக்கி, வெடிகுண்டு, முகமூடிக் கொள்ளைகள் என இப்பொழுது மலிந்துவிட்டன.

இன்று வேலையாட்களையும் நம்ப முடிவதில்லை. மனிதனை மனிதனே பிடுங்கிச் சாப்பிடுகிறான். எந்தச் சட்டமும் ஒன்றும் செய்ய முடியாது.

இந்நிலையில் எப்படியாவது ஆன்மிகத்தின் மூலம் நல்வழிப்படுத்த வேண்டும். யாராவது பூனைக்கு மணி கட்டி ஆகவேண்டும். அதற்காகவே அடிகளார்!

ஆன்மிகத்தில் அழுக்கை அகற்றினால் அழகு கிடைக்கும். மனிதனுக்கு மனிதன் இரக்கத்தைக் காட்டுவதற்குப் பதிலாக இரத்தத்தை உறிஞ்சுகின்றான்.''

## பிறந்த நாள் தான தருமம் செய்து பார்!

''அடிகளார் பிறந்த நாளை ஒட்டித் தான தருமம் செய்து பார்! செலவு செய்து பார்! அதனால் வரும் பலனை உணர்வாய்.''

## அடிகளார் போல...

"எந்த ஆன்மிகவாதியும் அடிகளார் போலப் பெண்களை ஆன்மிகத்தில் ஈடுபடுத்தியதில்லை."

**அடிகளார் மூலம் அருள்:**

"அடிகளார் பார்வைக்குச் சக்தி உண்டு. அடிகளார் ரூபத்தில் என்னைப் பார்ப்பதால் அடிகளார் மூலம் தான் என் அருள் உங்களுக்குக் கிடைக்கும்.

இப்போது தான் குரு நம்பிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகிக் கொண்டே வருகிறது."

**அடிகளார் பாதம்:**

"அடிகளார் பாதம் மண்பாண்டம் போன்றது. அதனைக் கவனமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்."

**பயபக்தியுடன் நடந்து கொள்!**

"வீடு கட்டும் தொழிலாளிக்கு வீட்டின் அருமை புரியாது. சிலையை வடிக்கும் சிற்பிக்கு அந்தச் சிலையின் அருமை தெரியாது.

கருவறையில் அர்ச்சனை செய்பவனுக்கு அங்குள்ள சிலையின் மகத்துவம் தெரியாது.

அதுபோல ஆலயத்திற்கு வருகிறோம். அடிகளாரோடு பேசுகிறோம். பழகுகிறோம் என நினைத்துத் தொண்டு செய்பவர்களுக்கு அடிகளாரின் மகத்துவம் புரியாது.

எனவே, அடிகளாரிடம் பயபக்தியுடன் நடந்து கொள்!"

**உலக அமைதி அடிகளார் கையில்...**

"கட்சிவிட்டுக் கட்சி தாவினால் மட்டும் பலன் வந்துவிடாது. எங்கே சென்றாலும் இறுதியில் இங்கேதான் வரவேண்டும்.

உலக அமைதிக்கு அடிகளார் காட்டும் வழியைப் புரிந்து கொண்டு நடக்க வேண்டும். உலகம் உருள்கிறது. புரள்கிறது. உடைகிறது.

ஆன்மிகம் என்றால் தான் அமைதி காக்க முடியும். உண்மையான அமைதியையும், ஆன்மிகத்தையும் இன்று அடிகளாரிடமிருந்தே பெற முடியும். ஓம் சக்தி என்ற ஓங்காரம் எங்கும் ஒலிக்க வேண்டும்.

அம்மாவும் அடிகளாரும் நினைத்தால் தான் இங்கு எதுவும்



நடக்கும். இவர்களை நினைக்க வைப்பது உங்கள் பொறுப்பு."

**உங்கள் நன்மைக்காகவே...**

"உங்களையெல்லாம் ஆன்மிகத்தில் ஈடுபட வைத்து, இதைச் செய்! அதைச் செய்! என்று சொல்வதெல்லாம் எனக்காகவோ, அடிகளார்க்காகவோ அல்ல! எல்லாம் உங்கள் நன்மைக்காக!"

**எந்த வகையில் பயன்படுத்திக் கொள்வது?**

"எதிரே இலைபோட்டு, அந்த இலையில் எல்லாச் சுவைகளையும் கொண்ட உணவையும் வைத்துச் சாப்பிடு என்றால் எதைச் சாப்பிடுவது? என்ற தயக்கம் வரும். தடுமாற்றம் வரும். அதுபோல உங்கள் முன் அடிகளார் என்கிற உருவத்தை வைத்துவிட்டேன். அடிகளாரை எந்த விதத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமோ, அந்த வகையில் பயன்படுத்திக் கொள்வது உங்கள் கடமை."

**காப்பாற்றி வருவது அடிகளார்:**

"உன்னையும் உன் குடும்பத்தையும் அடிகளார் தான் காப்பாற்றி வருகிறான். அவன் எப்படிக் காப்பாற்றி வருகிறான் என்பதெல்லாம் உங்களுக்கு விளங்காது. எனவே, அடிகளாரை நம்பிக்கையுடன் பற்றிக்கொண்டு கரையேற வழி தேடு!"

**அடிகளார் என்ற தனிமனிதரால்...**

"ஒரு விதை பல பழங்களைக் கொடுக்கிறது. ஒரு நெல்மணி பல நெல் மணிகளை உற்பத்தி செய்கிறது. அதுபோல அடிகளார் என்ற தனிப்பட்ட மனிதர் பிறவியெடுத்து ஆன்மிகம் என்ற பலனைப் பலருக்கும் தருகிறார் என்பதைப் புரிந்து கொள்"

**அடிகளார் அன்றும் – இன்றும்:**

"ஆரம்ப காலத்தில் பாலகன் மற்றவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்குமெல்லாம் ஆளாக வேண்டியிருந்தது. இப்போது பாலகன் பேசுகிற நேரம் வந்து விட்டது."

**எளிமையிலும் வலிமை:**

"அடிகளார் எளிமையிலும் வலிமை உண்டு"

**நானும் அடிகளாரும்:**

"நானும் அடிகளாரும் அசைத்தால் தான் இங்கு எதுவும் நடக்கும். மற்றவர்களால் எதையும் செய்ய முடியாது."

**அவதார நாடகம்:**

"நீ பாலகன் என்றாலும், ஆசிரியர் என்றாலும், அடிகளார் என்றாலும், குரு என்றாலும், மகான் என்றாலும், அம்மா என்றாலும், யார் எந்த நிலையில் நின்று எப்படிச் சொன்னாலும் எல்லாம் ஒன்றுதான். அவரவர் மனத்துக்கும் எண்ணத்துக்கும் தக்கவாறு இந்த அவதார நாடகம் நடக்கிறது."

### ஆன்மிகத்துக்கு ஆணி வேர்:

"ஒரு மரத்தின் ஆணி வேர் ஊன்றி வளர்ந்தால்தான் அம்மரம் உறுதியாக நிற்கும். பூ பூத்துக் காய் காய்த்துக் கனிகளும் கொடுக்கும். அதுபோல இன்றைய உலகில் ஆன்மிகத் துறையில் அடிகளார் என்ற ஆணி வேர் இருந்தால் தான் ஆன்மிகமும் வளரும், பக்தியும் பெருகும்."

### ஆன்மிகத்தின் பலன்:

"மரம் வளர்ந்து காய்க்கும் போது தான் அதன் அருமை தெரிகிறது. அந்தப் பயனை மரம் அனுபவிப்பதில்லை. மற்றவர்கள்தான் அனுபவிக்கின்றனர். அதுபோல ஆன்மிகம் என்ற மரத்தை அடிகளார் பாடுபட்டு வளர்த்தாலும் பழம் என்ற பலனை அனுபவிக்கிறவர்கள் நீங்கள்தான் என்பதை மறந்துவிடக் கூடாது."

### செவ்வாடைத் தொண்டர்களுக்கு:

"என்னைப் பற்றியோ, அடிகளார் பற்றியோ, அடிகளார் குடும்பம் பற்றியோ யார் என்ன சொன்னாலும் காது கொடுத்துக் கேட்கக் கூடாது.

நீ இங்கு வந்த பிறகு உன் நிலைமை என்ன? உன் வளர்ச்சி என்ன? ஆலயம் என்ன? அடிகளார் யார்? ஆன்மிகம் என்றால் என்ன என்று உன் உள் மனத்தில் என்ன தோன்றுகிறதோ அதை நீ உணர்ந்து கொண்டால் போதும்.

உங்களுக்கு அடிகளார் தேவை. அடிகளார்க்கு நீங்கள் தேவையில்லை.

அடிகளார் குடும்பத்தைப் பற்றி நீங்கள் பேசக்கூடாது.

அடிகளார் மனத்தில் கீறல் விழுந்தால் உனக்கு நடக்க வேண்டியது எதுவும் நடக்காது.

### தெய்வக் கருத்து:



"எல்லோரையும் போலத்தான் அடிகளார் பேசுகிறார் என்று எண்ணுகிறீர்கள். அடிகளார் ஆன்மாவின் கருத்து தெய்வக் கருத்து."

### பாதுகாப்பாக வாழ வழி:

"ஒரு நல்ல குருவைத் தேர்ந்தெடுத்து ஆன்மிகத்தில் உழைக்க வேண்டும். உங்களுக்குக் கொடுத்த வாய்ப்புகளையெல்லாம் இழந்து வருகிறீர்கள். ஒவ்வொரு நிலையிலும் அழிவு உண்டு. ஒவ்வொரு தொழிலிலும் ஆபத்து உண்டு."

### மின்சாரத்தைச் சோதிப்பது போல...

"கம்பியில் மின்சாரம் பாய்கிறதா என்ற சந்தேகத்தை வைத்துக்கொண்டு மின் கம்பியைத் தொட்டு விடாதே!

அம்மாவா? அடிகளாரா? என்ற சந்தேகத்தை வைத்துக் கொண்டு அடிகளாரைச் சோதிக்க முயலாதே!

### அடிகளார் சொல்வது:

"உலகம் செவ்வாடை பக்தர்களாக மாறி வந்து கொண்டிருக்கிறது. அடிகளார் சொல்வது ஆன்மா சொல்வதாகும்.

### வளர்ச்சிக்குத் தடை:

"அடிகளார் நினைத்தால் வாழ வைக்க முடியும்.

இவ்வளவு தொண்டு செய்தும், அபிடேகம் செய்தும், வாழ்க்கையில் நிம்மதி இல்லையே என்று சிலர் நினைக்கிறார்கள்.

உள்ளுக்குள் அழுக்கை வைத்திருப்பதாலும், மற்றவர்களைக் குறை கூறிக் கொண்டிருப்பதாலும் அவர்களால் வளர்ச்சி அடைய முடிவதில்லை."

### உலகிற்கே வழி காட்டி:

"ஆரம்பத்தில் யாரோ வாத்தியார் குறி சொல்கிறார் என்றார்கள். பிறகு அருள்வாக்குச் சொல்கிறார் என்றார்கள். அந்த வாத்தியார்தான் இன்று உலகத்திற்கே வழிகாட்டியாக இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்."

### திருவருளும் – குருவருளும்:

"திருவருள் வேண்டுமானால் குருவருள் வேண்டும். குருவருள் இல்லையென்றால் திருவருள் கிடைக்காது."

### பங்காரு தெய்வம்:

“பங்காரு தெய்வம் தான் பக்தியைப் பரப்பும் சக்தி. அதுவே தெய்வசக்தி. அது சக்தியைக் கொடுக்கும்.

அங்கும் இங்கும் அலைந்து திரியாமல் கிடைக்கக் கூடிய அமைதி உனக்கு இங்கே தான் கிடைக்கும்.”

**எதுவும் அசையாது:**

“அடிகளார் என்கிற ஒரு ஜீவன் இல்லையென்றால் எதுவும் அசையாது என்பதைப் புரிந்துகொள்.”

**அடிகளாரைச் சோதிக்கிறார்கள்:**

“என்னதான் ஆற்றில் தெளிவாகத் தண்ணீர் ஓடினாலும், கையால் விலக்கித்தான் தண்ணீர் குடிக்கிறீர்கள். அதுபோல அடிகளாருக்கு எவ்வளவு சக்தி இருந்தாலும் சக்தி இருக்கிறதா என்று சோதித்துத்தான் பார்க்கிறீர்கள்”

**ஏங்கும் நாள் வரும்:**

“அம்மாவின் அருள்வாக்கு கிடைக்குமா? அடிகளார் பார்வை கிடைக்குமா? என்று ஏங்கும் நாள் வரும்.

ஒரு பொருள் கையில் இருக்கும் பொழுது அதன் மதிப்பு தெரிவதில்லை. கையில் இல்லாத போதும், கைக்குக் கிட்டாத போதும்தான் அதன் மதிப்பு தெரியும்.”

**குருவின் அவசியம்:**

“மரம் செடி கொடிகளில் கூட வயதானவை உண்டு.

காட்டு விலங்குகட்கும் தலைவன் உண்டு. அதுவே அக்கூட்டத்தை வழி நடத்தும்.

தேனீக்களிலும் கூட ராணி தேனீ, ராஜா தேனீ, வேலைக்காரத் தேனீ என உண்டு.

செம்மறியாடுகளும் ஒரு ஆடு முன்னே போனால் அதனைத் தொடர்ந்து கூடவே போகும்.

யானையும் கூட்டத்தோடும் தலைவனோடும் வாழ்கிறது.

அதுபோல ஆன்மிகத்திலும் உங்கட்கு ஒரு குரு தேவை. ஒரு குருவை ஏற்றுக் கொண்டு வாழ வேண்டும்.

குரு என்று ஒருவரை ஏற்றுக் கொண்ட பிறகு அவரை ஆராய்ச்சி செய்யக் கூடாது. அவர் அப்படி இப்படி என்று எடைபோடக் கூடாது.

தெய்வத்தையும் குருவையும் ஆராய்ச்சி செய்யக் கூடாது.”



**இனி கிடைப்பது அரிது:**

“அடிகளார் பார்வையும், பாதமும் இனி கிடைப்பது அரிது. (1.1.2000 அன்று கூறியது)

**அடிகளார் என்கிற பொக்கிஷம்:**

“அடிகளார் என்கிற பொக்கிஷத்தை மனிதகுலம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.”

**சிலையும் குருவும்:**

“தெய்வம் சிலையாக இருந்தாலும், உற்சவராக இருந்தாலும் அலங்காரம் இல்லையென்றால் அதற்கு மரியாதை இல்லை.

ஆன்மிகத் துறையில் குரு இல்லையென்றால் ஈர்ப்பு இல்லை; பொருள் இல்லை அன்பு, பண்பு, பாசம் என்ற உன்னதமான குணங்கள் இல்லை.”

**தாயும் குருவும்:**

“ஒரு குழந்தைக்குத் தாய் அவசியம்; அதுபோல உங்களுக்கு ஒரு குரு அவசியம்.”

**மானிட வடிவில் அவதாரம் ஏன்?**

“ஒரு இரும்பைக் காந்தம் என்ற ஒரு இரும்புதான் இழுக்க முடியும். அதுபோல மனித ரூபத்திற்குத்தான் மனிதனை இழுக்கும் சக்தி உண்டு. அந்த உள்ளத்திற்கு உயிரை இழுக்கும் சக்தி உண்டு.”

**பிரித்துப் பார்க்காதே!**

“பங்காரு என்றும், அம்மா என்றும் பிரித்துப் பார்க்கக் கூடாது. அவ்வாறு பிரித்துப் பார்த்தால் உன் மனத்தில் அழுக்குத்தான் சேரும். அவ்வப்போது உயிரைக் தட்டிக் கொண்டே இரு! அழுக்கு சேராமல் பார்த்துக் கொள்!”

**பாதபூஜை:**

“பௌர்ணமி தினத்தில் குருவிற்குப் பாத பூஜை செய்து, தான் செய்த பாவச் செயல்கட்கு மன்னிப்பு கேட்பது நல்லது.”

**எட்டி இருக்கும் போது...**

“அடிகளார் நமக்குப் பழக்கப்பட்டவர் தானே என்று அன்று நினைத்தீர்கள். இப்பொழுது பார்க்கக்கூட முடியவில்லை என்று வருந்துகிறீர்கள்.

கிட்டி இருந்தபோது அருமை தெரியவில்லை. எட்டி இருக்கும் போது தான் அருமை தெரிகிறது.”

### நீறு பூத்த நெருப்பு:

“அடிகளார் வெறும் சாம்பல்தான் ஊதினால் பறந்து விடுவார் என்றே ஆரம்பத்தில் நினைத்தார்கள். அடிகளார் நீறு பூத்த நெருப்பு என்பது அவர்களுக்குத் தெரியாமலே போய்விட்டது.”

### புத்தக அறிவால் முடியாது:

“அடிகளாரின் உருவத்தை வைத்து எடைபோட்டு ஏமாறக்கூடாது. அடிகளாரிடம் பழகிப் பழகித்தான் புரிந்துகொள்ள முடியும். வெறும் புத்தக அறிவைக் கொண்டு அடிகளாரைப் பற்றித் தெரிந்து கொள்ள உன்னால் முடியாது. பட்டறிவை வைத்துத்தான் தெரிந்து கொள்ள முடியும். புரிந்துகொள்ளவும் முடியும்.”

### குருவின் பிறந்த நாள் விழா:

“தாய் தந்தை பிறந்த நாள் விழா என்றால் குழந்தைகள் சந்தோஷப்பட வேண்டும்.

குழந்தைகள் பிறந்த நாள் விழா என்றால் தாய் தந்தையர் சந்தோஷப்பட வேண்டும்.

ஆன்மிகத்தில் குருவிற்குப் பிறந்த நாள் என்றால் பக்தர்கள் சந்தோஷப்படவேண்டும்.

குருவிற்குப் பிறந்த நாள் கொண்டாடுவது உங்கள் வாழ்வில் மிக முக்கியத்துவம் கொண்டது.”

### பழமும் – பறவைகளும்:

“ஆன்மிகம் என்ற செடியை வைத்துத் தண்ணீர் ஊற்றி, பூ பூத்துக் காய் காய்த்துப் பழம் பழுக்கிற சமயத்தில் பறவைகள் பலவும் வந்து தானும் உண்டு தன் குஞ்சுகளுக்கும் ஊட்டி வளர்க்கும். அப்பொழுது, ஒரே பழத்தைச் சாப்பிடுவதால் குஞ்சுகளும் வியாதிகள் இல்லாமல் ஆரோக்கியமாக வளரும்.

பழத்தை உண்பதில் பறவைகளிடையே சண்டை ஏற்பட்டால் பழம் கீழே விழும்.



மரம் ஏறத் தெரியாத நாயும், பூனையும் பழத்தை எடுத்துக் கொண்டுபோய்ப் பலன் அடையும். பறவைகள் சந்தர்ப்பத்தை இழந்து ஏமாந்து போகும். அதுபோல ஆன்மிகத்தில் நீங்கள் ஈடுபடும்போது போட்டி பொறாமை, சண்டை சச்சரவு, சலசலப்பு இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் அந்தப் பறவைகள் போல ஏமாந்து போவீர்கள். மற்றவர்கள் வந்து பலனை அனுபவிப்பார்கள்.

அடிகளார் ஓர் ஆன்மிக மரம். இம்மரம் யாரையும் நீ வா! என்றோ, நீ வராதே என்றோ சொல்லாது.

மரம் வளரும் காலத்தில் வாழும் பறவையை விட, அது பழுக்கும் காலத்தில் வந்து சேரும் பறவைக்குத்தான் பலன் அதிகம்.”

# 5. ஆன்மிகம்

### ஆன்மா பற்றி...

"எல்லா உயிரினங்களுக்கும் ஆன்மா உள்ளது. பறவையின் ஒலியிலும், பாம்பின் ஒலியிலும் "ஓம்" என்ற பிரணவ ஒலி உண்டு. ஆனால் உங்களுக்குப் புரியாது. ஆயினும் அ, உ, ம் என்ற மூன்றின் சேர்க்கையில் "ஓம்" என்ற ஒலியுண்டு.

குழந்தைக்கும் குழந்தை உள்ளம் பெற்ற ஞானிக்கும் ஆன்மா பற்றிய உணர்வு புலப்படும். குழந்தை சிரிக்கிறது. அழுகிறது. அதன் உள்நோக்கம் யாருக்கும் தெரியாது. வளர வளர அக்குழந்தையின் போக்கும் நினைப்பும் மாற்றமடைகிறது. ஞானிக்கும் குழந்தைக்கும் தெரிகிற ஆன்ம உணர்ச்சி பிறர்க்கு எட்டாது.

விருப்பு, வெறுப்பு, புகழ், பழி, ஆடம்பரம், அந்தஸ்து இவை பற்றிய உணர்ச்சி இல்லாதவனுக்கு ஆன்ம விளக்கம் தெரியும். இவ்வுணர்ச்சிகளைப் பெற்றவன் மேலான மகானாக இருந்தாலும், கீழ்நிலையில் உள்ள ஆன்மாவே."

### ஆன்ம பரிபக்குவம் பலவகை:

"பாலிலும் புளிப்பு உண்டு. மோரிலும் புளிப்பு உண்டு. மோர் கலந்த பால் தயிராகத் திரியும். பால் தயிராக மாறும். தயிர் பாலாக மாறுவதில்லை. அதுபோல ஆன்ம பரிபக்குவம் ஏற்பட்டவன் மீண்டும் திரிவதில்லை.

பால், மோர், எலுமிச்சை மூன்றிலும் புளிப்பு உண்டு. ஆயினும் ஒவ்வொன்றின் சுவையும் வேறுபாடு உடையதாகும். அதுபோல ஆன்ம பரிபக்குவம் பெற்றவர்களிடத்திலும் வேறுபாடு உண்டு."

### சுயம்பும் சக்தியும்:

"கடவுள் காட்சியை ஞானிக்குச் சோதியாக வழங்கிய போதே, அச்சோதியில் அந்த ஞானி தன் ஆன்மாவைக் கரைத்துக் கொள்வான். அதனால் தான் சுயம்பில் எப்போதும் ஈர்க்கின்ற சக்தியும், வளர்கின்ற சக்தியும் அமைகின்றன."



### ஆன்மிகம் என்றால் என்ன?

"ஒருவன் தன்னைத் தானே அறிவது; தன்னைத் தானே உணர்வது; தன்னைத் தானே புரிந்துகொள்வது ஆன்மிகம்."

### ஆன்மிகத்துறையில்...

"அறிவிற்கு அப்பாற்பட்ட அதிசயங்கள் ஆன்மிகத்துறையில் ஏற்படும்; விஞ்ஞானத்தால் வீழ்ச்சி தான் ஏற்படும்."

### நிம்மதிக்கு வழி:

"ஆன்மிகம் ஒன்றே நிம்மதிக்கு வழி! இயற்கை! அம்மா! இறை நம்பிக்கை! இவையே அமைதிக்கு வழி!"

### வீட்டை வெல்ல; நாட்டை வெல்ல:

"ஐம்புலன்களை அடக்குதல்; பொறாமை, பொச்சரிப்பு இன்றித் தொண்டு செய்தல் - இவற்றின் மூலம் வீட்டையும் வெல்லலாம். நாட்டையும் வெல்லலாம். ஆன்மிகத்திலும் வெல்லலாம்."

### எதிர்ப்பும் தேவை:

"ஆன்மிகத்தை வளர்க்கக் கசப்பும் தேவை! எதிர்ப்பும் தேவை!"

### ஏழுநிலைகளிலும் ஆன்மிக உணர்வு:

"பிறப்பிலிருந்து இறப்புவரையில் மனிதனுக்கு ஏழு நிலைகள் உண்டு. அந்த ஏழு நிலைகளிலும் மனிதர்களுக்கு ஆன்மிக உணர்வு இருக்க வேண்டும்."

### ஆன்மிகப் பயிர் வளர்க்கின்றேன்:

"நிலத்தைப் பக்குவப்படுத்திப் பயிர் வளர்ப்பது போல உங்கள் மனத்தைப் பக்குவப்படுத்தி ஆன்மிகப் பயிரை வளர்த்து வருகிறேன். அந்த மனப்பக்குவம் அடைவதற்காகவே, 1008, 108 மந்திரங்கள் கொடுத்திருக்கிறேன்."

### ஆன்மிகமே அமைதிக்கு வழி:

"அரசியலும், விஞ்ஞானமும் இயற்கையைக் கட்டுப்படுத்த முடியாது. இன்று மக்களின் உள்ளமும், உள்ளத்து உணர்ச்சிகளும் பேயாக மாறிவிட்டன. வேலியே பயிரை அழிக்கக்கூடிய நிலைமை உருவாகி வருகிறது. இத்தகைய போக்கினால் இயற்கைச் சீற்றத்தாலும் வெள்ளத்தாலும் அழிவுகள் ஏற்படும். தியானமும், ஆன்மிகமுந்தான் அமைதிக்கு வழிவகுக்கும். எங்கும் பணம்!

எதிலும் பணம்! என்று அலைந்தால் பிணம் பிணம் என்கிற நிலைமை தான் ஏற்படும். குணம் மாறிவிட்டால் குழப்பமேற்படும். குழப்பம் கொலையாக மாறும். அதுவே குழிதோண்டிவிடும்.''

**உன் மனமே உனக்கு எதிரி:**

''ஒரு குழந்தையிடம் துப்பாக்கியைக் கொடுத்தால் அது தன்னைத் தானே சுட்டுக் கொள்ளும். அதுபோல உன் மனத்தை நீயே கட்டுப்படுத்திக் கொள்ளாவிட்டால் அது உன்னையே அழித்துவிடும். ஒரு பக்கம் கட்டுப்படுத்தினால் மறுபக்கம் அவிழ்த்துக் கொள்ளும் இயல்பு படைத்தது மனம்! ஆகவே, தியானத்தையும் ஆன்மிகத்தையும் துணைக்கொண்டு உன் மனத்தை அடக்க வேண்டும்.''

**ஆன்மிகத்தில் முன்னேற...**

''அடிமேல் அடியடித்தாலும் துணியில் உள்ள அழுக்கு முழுவதும் போய்விடுவதில்லை. அதிகமாக அடித்தால் கையும் வலிக்கும்; துணியும் கிழிந்துவிடும். அதே துணியைச் சோப்புப் போட்டுப் பதமாக ஊறவைத்தால் அழுக்குப் போகும். அதுபோல வேதனைக்கு மேல் வேதனை வந்தாலும் தியானம், மனக்கட்டுப்பாடு, வாய்க்கட்டுப்பாட்டுடன் இருந்தால் நீங்கள் ஆன்மிகத்தில் முன்னேற முடியும்.''

**ஆன்மிக ஈடுபாடு உன் தலைமுறையைக் காப்பாற்றும்:**

''ஒரு செடியை நடுகின்ற போது தனக்கு ஆகாத செடி இது என்று கருதி வேறொரு செடியை நடுகிறாய். அடுத்தவன் அதுபற்றிக் குறை சொன்னால் பறித்துவிட்டு வேறொரு செடியை நடுகிறாய். செடிகளை நடும்போது பல தொல்லைகள் ஏற்படுகின்றன. வளர்ந்த பிறகு பூச்சிகள் அழிக்கின்றன. அதைக் கட்டிக்காக்கப் பொருளாதாரம் இடந்தரமாட்டேன் என்கிறது. எல்லா நெருக்கடியும் கடந்து விவசாயம் பலன் தரும்போது தான் அதன் பலனை உணர்கிறாய். அப்படி மரமாகிப் பலன் தருபவை உனக்கு மட்டுமின்றி உன் சந்ததிக்கும் பலன் தருகின்றன.

அதுபோலவே நீ ஆன்மிகத்தில் ஈடுபடும் போது பலர் உன்னைப் பலவிதமாகப் பேசுவர். பல இடையூறுகளும் வரும். வீட்டிலும் தொல்லைகள் வரலாம். அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் ஐம்புலன்களை அடக்கித் தியானத்தை மேற்கொண்டு முழுமையாக ஆன்மிகத்தில் ஈடுபடும்போது தான் ஆன்மிகத்தில் முழுப்பயனையும் உன்னால் பெறமுடியும். அவ்வாறு உனக்கு ஏற்படும் பயன்கள் உனக்கு மட்டுமின்றி உன் சந்ததிக்கும் கிடைக்கும்.''



**உலகியல்; ஆன்மிகம்:**

''காட்டில் புலி ஆட்டை அடக்கும்; இது உலகியல். ஆனால் ஆன்மிக உலகில் ஆடு புலியை அடக்கும்.''

**ஆன்மிக முன்னேற்றம் எப்படி வரும்?**

''ஊருக்கு உழைப்பதால் தான் உள்ளத்தெளிவு ஏற்படும். உள்ளத்தெளிவு உள்ளவர்களுக்கு ஆன்மிகத்தில் முன்னேறும் வாய்ப்பு உண்டு.''

**ஆன்மிகத்திலும் களைகள் தோன்றும்:**

''ஈ, எறும்பு முதல் மனிதன் வரை ஆன்மிகம் உண்டு. அக்கிரமம் அழிவிற்கு வழி வகுக்கும். செடியுடனே களை வளர்வது போல ஆன்மிகம் என்ற செடிக்கருகே களைகளும் தோன்றும். அந்தக் களை வளராமல் செடியைப் பாதுகாப்பது போல, ஆன்மிகச் செடி வளர பாரம்பரியத்தைப் பாதுகாக்க வேண்டும். அதற்குப் பராசக்தி உண்டு.''

**எதற்காக ஆன்மிகம்?**

''தெய்வசக்தி, மனிதசக்தி, வாழ்க்கை வளர்ச்சி இவை பற்றி எல்லாம் தெரிந்து கொள்வதற்கு ஆன்மிகம் தேவை.''

**ஆன்மிகத்தில் ஈடுபட வரும்போது:**

''பயனுள்ள செடிக்குத் தண்ணீர் ஊற்றும்போது வேண்டாத செடிகளும் முளைக்கின்றன. அதுபோல நீங்கள் ஆன்மிகத்தில் ஈடுபடும்போது உங்களுக்கு வேண்டாத எண்ணங்களும் தோன்றும்.''

**தொண்டர்களுக்கும் பக்தர்களுக்கும்:**

''ஆன்மிகத்துறைக்கு வந்துவிட்ட உங்களுக்குப் பொறுப்பு இருக்க வேண்டும். உங்கள் ஐம்புலன்களையும் அடக்குவதற்கே தியானம்!

ஆன்மிகத்துறைக்கு வந்துவிட்டு, ஆன்மிகத்தின் பேரால் சம்பாதிக்க வேண்டும் என்று நினைக்கக்கூடாது. ஆன்மிகம் என்ற பெயரால் இங்கே வந்து கொள்ளையடிக்க வேண்டும் என்றும், சுயலாபம் கருதியும் இங்கே வருவார்கள். அவர்களிடமிருந்து என் பக்தர்களும், தொண்டர்களும் உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.''

**ஆன்மிகத்தில் பழகப் பழக...**

''ஒரு பசு கன்றை ஈனும் போதைவிட இரண்டாவது மூன்றாவது

கன்றுகளை ஈனும் போது இன்னும் பாசமாகவும், அடுத்த பசுவின் கன்றைத் தன் கன்றாகவும் எண்ணுகிற பக்குவம் உண்டாகிறது. ஒரு பெண்ணிற்கு முதல் பிரசவத்தை விட அடுத்தடுத்த பிரசவங்கள் ஏற்படும் போதுதான் பாசம் மிகுதியாகின்றது. அடுத்தவர் குழந்தையையும் தன் குழந்தை போல நினைக்கத் தோன்றுகிறது.

அதுபோல ஆன்மிகத்தில் பழகப்பழக துன்பங்கள் மறைந்துவிடும். மற்றவர் துன்பங்களைத் தன் துன்பங்களாக நினைக்கும் பக்குவம் தோன்றும்.''

## ஆன்மிகமும் பக்தியும்:

“பக்தி இருந்தால் தான் ஆன்மிகத்தில் முன்னேறிவர முடியும். ஏதோ வந்தோம்; பணி செய்தோம்; தியானம் செய்தோம் என்றில்லாமல் உணவுக் கட்டுப்பாடு, உள்ளக் கட்டுப்பாடுகளையும் கூடவே வளர்த்துக் கொண்டு வந்தால் நீங்கள் ஆன்மிகத்தில் முன்னேறி வரமுடியும். எந்த அளவிற்குக் கட்டுப்பாட்டுடன் இருக்கின்றாயோ அந்த அளவிற்கு நீ ஆன்மிகத்தில் முன்னேற்றம் காண முடியும். உண்மை உணர்வோடும் கௌரவம் பார்க்காமலும் உள்ளத் தூய்மையோடும் இருந்தால் ஆன்மிகத்தில் முன்னேறி வர முடியும்.''

## மனிதனும் மிருகமும்:

“மிருகங்களுக்கு ஆன்மிகம் இல்லை. தெய்வத்தை அறிந்து கொள்கிறவன் மனிதன் ஒருவன் தான்.''

## உலக வளர்ச்சி:

“ஆன்மிகம், கல்வி, தருமம், அறநிலை, அறநெறி இவற்றால்தான் உலகம் வளரும்.''

## ஆன்மிகம் என்கிற பயிர்:

“பயிர்கள் செழித்து வளர்ந்தால் களைகளும் கூடவே தோன்றும். பயிரைப் பாதுகாப்பதோடு களைகளையும் அழிக்க வேண்டும். பயிருக்கு வேலியிட்டுப் பாதுகாப்பது போல ஆன்மிகத்தில் ஈடுபடும் உன் மனத்தில் தோன்றும் அழுக்குகளை நீக்கிக் கொண்டு வரவேண்டும். அதற்குத் தக்கபடியே உன் மனத்தைப் பக்குவப்படுத்திக் கொண்டு வரவேண்டும்.''

## ஆன்மிகமும், ஆதிபராசக்தி இயக்கமும்:

“ஆன்மிகத்தாலும் ஆதிபராசக்தி இயக்கத்தாலும் தான் உலகில் நல்ல வழி ஏற்படும்.''



## கடன்பட்டாவது:

“ஆன்மிகத்திற்காகக் கடன்பட்டேனும் செய்ய வேண்டும். ஆன்மிகத்திற்காகக் கடன் பட்டேன். ஆன்மிகத்திற்காக உயிர்விட்டேன். என்பதெல்லாம் பெருமை மகனே! அரசியல் தலைவனுக்காக உயிர்விட்டேன் என்பதெல்லாம் பெருமை அல்ல மகனே! அரசியல் அழியும் பொருள் மகனே! ஆன்மிகத்திற்காகக் கடன்படுவது, உயிர்விடுவது அழியாப் புகழ் மகனே!''

## உடலும் ஆன்மிகமும்:

“பல திசுக்களின் குடும்பமாக அமைவதே இந்த உடம்பு! அதுபோலப் பல குடும்பங்களும் சேர்ந்தது ஆன்மிகம்!''

## மின்சாரமும், ஆன்மிகமும்:

“மின்சார சக்தி மூலமாக ஒலியைப் பதமான முறையில் பேசுவதற்கும், பாடுவதற்கும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதுபோலப் பதமான முறையில் மற்றவர்களுக்குத் தருமம் செய்வதன் மூலமாகவும், தொண்டு செய்வதன் மூலமாகவும், ஆன்மிகத்துறையைப் பயன்படுத்தி நீங்கள் முன்னேற முடியும்.''

## ஆன்மிகம் என்ற பயிர் வளர வளர...

“ஆன்மிகத்தில் அமைதி வேண்டும். ஆன்மிகம் என்னும் பயிரை வளர்க்க வேண்டுமானால் தியானம், மௌனம், தொண்டு, தருமம் போன்ற முறைகளால் வளர்க்க வேண்டும்.''

## படக்காட்சியும், ஆன்மிகமும்:

“கூத்து, படக்காட்சி முதலியவற்றைக் காணும்போது உன் பக்கத்தில் எது நடந்தாலும் தெரிவதில்லை. உன் கண்ணும் கருத்தும் அந்தப் படக்காட்சியிலேயே ஒன்றிவிடுகின்றன. அதுபோல ஆன்மிகம் என்ற படக்காட்சியில் அபிடேகம், அர்ச்சனை, மௌனம், தருமம், தியானம், தொண்டு போன்ற காரியங்களில் ஈடுபடும் போது தான் நீங்கள் முழுமையான ஆன்மிக முன்னேற்றம் பெற முடியும். இந்த உலகியல் வாழ்க்கை என்கிற படக்காட்சியை விடத் தெய்வப்படக்காட்சி உங்களுக்கு உபயோகமானது.

சினிமாப் படக்காட்சியின் போது நீங்கள் அமைதியையும், மௌனத்தையும் கடைப்பிடிப்பது போல ஆன்மிகப் படக்காட்சியிலும் நீங்கள் அமைதியையும், மௌனத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்.''

## ஆன்மிக உணர்வு அவசியம் ஏன்?

“மனித இனத்தைப் பற்றியும் இந்த உலகப் பொருள்களைப் பற்றியும் அறிந்து கொள்ள ஆன்மிகம் அவசியம்.”

## ஆன்மிகந்தான் உங்களுக்குப் பாதுகாப்பு:

“தவளை தான் கத்துவதன் மூலமாகத் தன் வாயாலேயே எதிரியான பாம்பிற்குத் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுகின்றது. அதற்கு இரையாகவும் ஆகிவிடுகின்றது. ஆனால், புத்திசாலித்தனமான தவளை, மக்கள் நடமாட்டம் உள்ள இடத்திலிருந்து கொண்டு கத்தும்போது பாம்பிடமிருந்து காப்பாற்றப்படுகிறது.

அதுபோலப் புத்திசாலித்தனமாக நீங்கள் ஆன்மிகத்தில் ஈடுபடுத்திக் கொண்டால் தீயசக்திகளிடமிருந்து காப்பாற்றப்படுவீர்கள்.”

## ஆன்மிகம் என்பது:

“ஆன்மிகம் என்பது ஆன்ம ஒளியும் ஆன்மக் கருத்தும் நிறைந்ததாகும். மாயம் என்பது மனிதனுக்கு மட்டுந்தான்.”

## தருமங்களும் ஆன்மிகமும்:

“தருமநெறி தழைத்தோங்கினால் ஆன்மிகம் என்ற பயிர் என்றும் அழியாது. உங்கள் முன்னோர் செய்த தருமம் இன்றும் நிலைத்திருக்கின்றது.

நீங்கள் செய்யும் தருமம் தான் உங்களுக்குச் சாட்சியாகவும், உங்கள் முன்னேற்றத்திற்குச் சாதகமாகவும் அமையும்.”

## எதற்கு ஆன்மிகம்?

“உன்னை நீயே அறிந்துகொள்ள வேண்டும். அதற்காகத் தான் ஆன்மிகம் தேவை.”

## பலன் சொல்லி இழுக்கவேண்டியுள்ளது:

“காந்தம் இரும்புப் பொருட்களை இழுப்பது போல ‘இன்னது செய்; இன்ன பலன் கிடைக்கும்’ என்று சொல்லித்தான் உங்களை நான் ஆன்மிகத்திற்கு இழுக்க வேண்டியுள்ளது.”

## சிறிது சிறிதாக உங்களைப் பக்குவப்படுத்தி வருகிறேன்:

“ஒரு குழந்தை நடக்க ஆரம்பிக்கும் போது மேடுபள்ளத்திற்கு ஏற்றாற்போல - தரையின் தன்மைக்கு ஏற்றாற்போல, குழந்தையின்



மனப்பக்குவத்திற்கு ஏற்றாற்போல அக்குழந்தையின் தாய் நடக்க வைத்துப் பழக்குகிறாள். அதுபோல ஆன்மிகத்தில் குழந்தைப்பருவத்தில் உள்ள உங்களை உங்கள் மனப்பக்குவத்திற்கேற்றாற் போல சிறிது சிறிதாகப் பக்குவப்படுத்தி வருகிறேன்.

எல்லாம் தெரிந்தவன் போல உன்னை நினைத்துக் கொண்டு என்னை ஆராய்ச்சி செய்யாதே!

நடக்க ஆரம்பிக்கும் போது, தானே தனியாக நடக்க ஆரம்பித்தால் வழுக்கிவிட நேரிடும். அதுபோல எல்லாம் தெரிந்துகொண்டோம் என்று கருதிக்கொண்டு ஆன்மிகத்தில் நீ செயல்பட்டால் வழுக்கிவிழ நேரிடும். எனவே, எந்த நிலையிலும் என்னை விட்டு அகலாமல் பார்த்துக்கொள்.”

## ஆன்மிகத்துறையில் பக்குவம் தேவை:

“ஆன்மிகத்துறையில் ஈடுபடும்போது மனப்பக்குவம் தேவை. அந்த மனப்பக்குவம் வரவேண்டும் என்பதற்காகவும் மனத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும் தான் விழாக்கள்!

உங்கள் மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டிப் பத்து நிமிடங்களாவது நீங்கள் தியானம் பழகி வரவேண்டும். இவ்வாறு மனத்தைக் கட்டுப்படுத்தி வருவீர்களேயானால் மரணத்தையும் சகஜமாக நினைக்கக்கூடிய ஒரு பக்குவநிலை உங்களுக்கு ஏற்படும்.”

## ஆன்மிகச் செடியும் களைகளும்:

“ஒரு செடியை ஊன்றி வளர்க்க ஆரம்பிக்கும் போது, அந்தச் செடியின் அருகிலேயே புல், பூண்டு முதலிய களைகளும் வளர ஆரம்பித்துவிடுகின்றன. செடி வளர்ந்து வருகிற நிலையில் அதன் பலன் தெரியாது. அந்தச் செடியே மரமாகிப் பூத்துக் காய்த்துப் பலன் கொடுக்கும் போது தான் அதன் அருமை தெரிகிறது. அந்தச் செடியின் அருகில் முளைத்த களைகள், செடி வளர்ந்து மரமாகிவிட்ட பிறகு மறைகின்றன.

ஆரம்பத்தில் பசுமையாகவும், அழகாகவும் காணப்பட்ட அந்தக் களைகள் நாளடைவில் அழிந்து அருகிலிருந்த செடியின் வளர்ச்சிக்கு உரமாகிப் பயன்படுகின்றன.

அதுபோல ஆன்மிகம் என்ற செடியின் அருகில் தீய சக்திகள் என்ற களைகள் ஆரம்பத்தில் தழைத்தோங்கும். அவ்வாறு வளர்ந்து தோன்றினாலும் நாளடைவில் அவை அழிந்து போகும். அந்த மரமும் காலப்போக்கில் நல்ல பலன்களைக் கொடுக்கும். எனவே, ஆன்மிகத்தில் அவசரப்படக்கூடாது.”

**ஆன்மிக சக்தி:**

"விஞ்ஞான சக்தி மனிதகுலத்திற்கு நிலையான பயன் தராது. ஆன்மிகந்தான் நிலையான பலன் தரும். ஆன்மிகத்திற்குத் தான் சக்தி அதிகம்."

**வெற்றுத் தத்துவப் பேச்சால் பலனில்லை:**

"வெறும் தத்துவம் பேசினால் மட்டும் போதாது. தத்துவத்தில் தாதுப்பொருள் (உரம்) இருக்க வேண்டும். தத்துவத்தைக் காட்டிலும் சத்தியம் பெரிது. சத்தியத்தைப் பின்பற்றி வாழாமல் தத்துவம் பேசி, ஆன்மிகத்தில் முன்னேற முடியாது. பக்தி மிகுந்தவனுக்குத் தத்துவம் தேவையில்லை."

**புலனடக்கம்:**

"அமைதிக்காகவும், ஆன்ம வளர்ச்சிக்காகவும் ஐம்புலன்களையும் அடக்க வேண்டும். ஆன்மாவை உன்னுள் வைக்க வேண்டும்."

**குழப்பங்களைக் கட்டுப்படுத்த ஆன்மிகம் ஒன்றே வழி:**

"நாட்டில் பெருகிவரும் குழப்பங்களை ஆன்மிகம் ஒன்றால் தான் கட்டுப்படுத்த முடியும்."

**மின்சக்தியும் ஆன்மிக சக்தியும்:**

"மின்சாரம் ஒரு நீறுபூத்த நெருப்பு. தன் சக்தியை அது எப்படி உள்ளேயடக்கி வைத்துக் கொண்டிருக்கிறதோ, அதுபோல ஆன்மிகத்திலும் நீங்கள் உங்கள் சக்தியை அடக்கி வைத்துக் கொண்டு அடக்கமாகவும், அமைதியாகவும் தொண்டு புரியவேண்டும்."

**காலமும் – காலனும்:**

"காலவெள்ளம் விரைவில் போவது போலக் காலனும் விரைவில் வந்து கொண்டிருக்கிறான். வீட்டிற்குப் பாதுகாப்புத் தேவை. தனக்கும் பாதுகாப்பு தேவை. அருளும், ஒழுக்கமும் இல்லையென்றால், கொந்தளிப்புகள் ஏற்படும். அழிவுகள் கொதிக்கத் தொடங்குகின்ற போது தருமத்தாலும் ஆன்மிகத்தாலுந்தான் தணிக்க முடியும்."

**பாத்திரமும் – ஆன்மிகமும்:**

"துலக்கத் துலக்க பாத்திரம் பளபளப்பேறி பொலிவு அடைவதைப் போல, ஆன்மிகத்தில் நீ எவ்வளவுக்கெவ்வளவு



ஈடுபடுகின்றாயோ, அவ்வளவுக்கவ்வளவு உன் நிலை மேம்பாடு அடைகின்றதென்று பொருள்."

**ஆன்மிகத்தில் தொண்டு செய்யும் வாய்ப்பு:**

"ஆன்மிகத்தில் உங்களை முன்னேற வைக்கவே இப்போது உங்களுக்குத் தொண்டு செய்யும் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறேன். அவற்றையெல்லாம் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மன்றங்கள் வளர்ச்சி பெற ஒவ்வொருவரும் தொண்டாற்ற வேண்டும். மன்றங்கள் வைத்துப் பணம் சம்பாதிக்கலாம் என்ற நினைப்பு வருதல் கூடாது. தொண்டு செய்வதே சிறந்தது. யார் உள்ளத்தில் அழுக்கு உண்டு; யார் உள்ளத்தில் அழுக்கு இல்லை என்பதெல்லாம் எனக்குத் தெரியும்! நீ உன்னால் முடிந்த தொண்டுகளைச் செய்துகொண்டே வா!"

**விஞ்ஞான அறிவும்; ஆன்மிக எண்ணமும்:**

"பானையில் சோறு வேகும்போது பொங்க ஆரம்பித்தவுடன் விஞ்ஞான அறிவுடையவன் பானையை இறக்கி வைப்பான். ஆன்மிக எண்ணம் உடையவன் எரிகின்ற விறகைத் தணிய வைத்து சோறு நன்றாக வெந்தவுடன் இறக்கி வைப்பான். ஆன்மிகத்தில் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்."

**யாருக்கு என் காட்சி கிடைக்கும்?**

"ஆன்மிகத்தில் உண்மை உணர்வோடும், தொண்டுள்ளத்தோடும் ஈடுபடும் போது என் காட்சி உண்டு."

**ஆன்மிகத்தில் வேஷம் போடாதே!**

"இரவில் ராஜா வேஷம் போட்டாலும் பகலில் அவன் சாதாரண மனிதன் தானே? அதுபோல ஆன்மிகத்தில் வேஷம் போட்டாலும் அது நிலைக்காது. உண்மையான தொண்டும் பொறுப்புணர்வும் இருக்க வேண்டும். அது தான் உனக்கு நிலைக்கும்."

**வீட்டிற்குப் பாதுகாப்பு; நாட்டிற்குப் பாதுகாப்பு:**

"வீட்டின் பாதுகாப்பிற்குக் கதவும், வாயிற்படியும் தேவை. அதுபோல நாட்டின் பாதுகாப்பிற்கு ஆன்மிகம் தேவை."

**ஆன்மிகம்; அரசியல்:**

"அரசியல் ஆன்மிகத்தை விழுங்கியது முன்பு. இனி அரசியல் ஆன்மிகத்தை நாடி வரும்."

**கிராமங்களில் ஆன்மிகம்:**

“ஆன்மிகத்தைக் கிராமங்களில் வளர்க்க வேண்டும்.”

**ஆன்மிகத்தைப் புறக்கணித்த விஞ்ஞான முன்னேற்றம்:**

“தண்ணீரைச் சுடவைக்கும் போது சூடு அதிகமானால் தண்ணீர் கொதிக்க ஆரம்பிக்கிறது. பின் நீராவியாக மாறிப் பாத்திரத்தின் மேலே மூடி வைக்கப் பட்டுள்ள தட்டையும் தள்ளிவிடுகிறது. அதுபோல ஆன்மிகத்தைப் புறக்கணித்து விட்டு விஞ்ஞானத்துறையில் அதிக ஈடுபாடு காட்டினால் கொதிப்பும் கொந்தளிப்பும் அழிவுகளுந்தான் ஏற்படும்.”

**விஞ்ஞானம் – ஆன்மிகம்:**

“விஞ்ஞானம் பொய்யாகிவிடும். ஆன்மிகம் திரும்ப வரும்.”

**சகிப்புத் தன்மை:**

“ஆன்மிகத்திலும், தியானத்திலும் ஈடுபடுவதால் சகிப்புத் தன்மை உண்டாகிறது.”

**ஆன்மிகத்திலும் தொல்லைகள்:**

“செடி நடும்போது புல், பூண்டு போன்ற களைகள் தோன்றத்தான் செய்யும். ஆணிவேர் ஊன்றிச் செடி மரமான பின் களைகளால் மரம் பாதிக்கப்படுவதில்லை. அதுபோல ஆலயத்திற்கு வந்து ஆன்மிகத்தில் ஈடுபடும்போது தொல்லைகள் வரத்தான் செய்யும். செடி அழியாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.”

**தப்பிக்க வழி:**

“இனி எந்தத் துறையிலும் அழிவு உண்டு. அதிலிருந்து விடுபட விரும்புகிறவன் ஆன்மிகத்தில் ஈடுபாடு வைத்துக் கொண்டு மனக்கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ள வேண்டும்.”

**பக்தி குறைந்தால் அழிவு உண்டு:**

“ஒவ்வொருவரும் தெய்வ பக்தியையும் அருள் நெஞ்சத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்க வேண்டும். விழிப்புடன் இருக்க வேண்டும். பயபக்தியும் தங்களுக்குள் கட்டுப்பாடும் இருக்க வேண்டும். தெய்வபக்தி குறைந்தால் அழிவு உண்டாகும்.”



**ஆன்மிகத்தில் முன்னேற:**

“பானையில் சோறு இருந்தால் தான் அகப்பையில் வரும். அதுபோல உங்களுக்கு மனக்கட்டுப்பாடும் ஆன்மிகக் கட்டுப்பாடும் இருந்தால் தான் நீங்கள் ஆன்மிகத்தில் முன்னேறிவர முடியும். ஒரு நாலணா, ஒரு எட்டணா உண்டியலில் போட்டுவிட்டால் அதற்கான பலன்கள் உண்டே தவிர, அதனைக் கொண்டு உன்னை ஆன்மிகத்தில் உயர்த்தி விடுவேன் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. உன் மனக்கட்டுப்பாட்டைப் பொறுத்தே உன் ஆன்மிக முன்னேற்றம் அமையும்.”

**ஆன்மிக ஏணி:**

“ஒரு குழந்தையின் எதிரில் பிடிமானம் இல்லாத ஏணியை வைத்து இதன் மேல் ஏறு என்று சொன்னால் அக்குழந்தை எவ்வளவு கஷ்டப்படும்? அதுபோல ஆன்மிகம் என்ற ஏணியை உங்கள் முன்பு வைத்துவிட்டேன். அதில் நீங்கள் ஏறித்தான் ஆகவேண்டும்.”

**அரசியலும் ஆன்மிகமும்:**

“அரசியலில் பணம் இருந்தால் தலைவனாக முடியும். ஆன்மிகத்தில் அப்படியன்று. இங்கே நீ தருமம் செய்தால் போதும். ஆன்மிகத்துறையில் கொடுக்கும் மனப்பான்மையும் வாங்கும் மனப்பான்மையும் இருக்க வேண்டும்.”

**பட்டிதொட்டிகளில் எல்லாம்...**

“உங்கள் பக்கத்து வீடுகளில் எல்லாம் ஆன்மிகம் பரவவேண்டும். அப்படிப் பரவினால் தான் பட்டிதொட்டி எங்கும் பரவும்.”

**அரசியலும் ஆன்மிகமும்:**

“எந்தவொரு அரசியலும் ஆன்மிக மாநாடு என ஒன்று நடத்தவில்லை. நீ இதனையும் தெரிந்துகொள்ள வேண்டும்.”

**நாளைய உலகம்:**

“நாளைய உலகம் ஆன்மிக உலகம். ஆன்மிகத்தில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் அவசியம்.”

**பாதிக்கப்படாமலிருக்க ஆன்மிக ஈடுபாடு:**

“உன்னைச் சுற்றிப் பத்துப்பேர் இருந்தால் அந்தப் பத்துப்பேர் எண்ணங்களும் உன்னைச் சூழ்ந்தபடியே இருக்கும். அவர்களில்

மிருக குணமும் உண்டு. சாதுவான குணங்களும் உண்டு. அந்த எண்ணங்களால் நீ பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமானால் உன் உள்ளம் ஆன்மிகத்தில் ஈடுபடவேண்டும்.''

### கோழிக்குஞ்சுகளும் தாயும்:

"தாயைப் பிரிந்து தனியே மேய்ந்து திரியும் குஞ்சுகளை அதன் தாய்க்கோழி எப்படிக் கவனமாகக் காப்பாற்றி வருகின்றதோ அது போலவே இன்றைய உலகில் நான் ஆன்மிகத்தையும் உங்களையும் காப்பாற்றி வருகிறேன்.''

### அழிவு அதிகம்; ஆக்கம் குறைவு:

"இனி எதிர்கால வாழ்க்கையில் மனித குலத்திற்கு ஆக்கம் குறைவாகவும். அழிவுகள் அதிகமாகவும் இருக்கும். அணுசக்தியினால் ஆக்கம் குறைவாகவே இருக்கும்.

ஆன்மிகம் தெய்வபக்தி, இவற்றால் மட்டுமே ஆக்கம் அதிகமாகும். விஞ்ஞான வளர்ச்சியால் இருக்கிற அரைகுறை உயிரும் போய்விடும். தன்னைத் தானே ஒருவன் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் ஆன்மிகம் ஒன்றே வழி!''

### ஆன்மிக ஈடுபாட்டினால் வரும் பயன்:

"தண்ணீரில் மூழ்குகிற போது மூச்சடைக்கிறது. காற்றடைப்பு ஏற்படுகிறது. அதுபோல ஆன்மிகத்திலும் உங்களுக்குப் பந்த பாசங்களால் அடைப்பும் ஆபத்தும் ஏற்படுகின்றன. இளம் வயதில் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஆன்மிக ஈடுபாடு வரவில்லையென்றாலும், என்னிடம் வந்து சேர்ந்துவிட்டீர்கள். இப்போதாவது அதையுணர்ந்து ஆன்மிகத்தில் ஈடுபாடு கொள்ளுங்கள். ஆன்மிகத்தில் ஈடுபடுவதால் உங்கள் உள்ளம் சுத்தம் அடைகிறது. உள்ளத்தை அடக்குவதற்குரிய சக்தியும் ஏற்படுகிறது.''

### தெய்விகத்துறையில் ஈடுபாடு தேவை:

"இசை, நடனம், ஓவியம், சிற்பம், மருத்துவம், பொறியியல் என்று ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொருவருக்கும் ஈடுபாடு இருப்பது போல, மனிதனுக்குத் தெய்வீகத் துறையில் ஈடுபாடு தேவை. ஆன்மிகத்துறையில் உங்களுக்கு விடாமுயற்சி தேவை.''

### செடியின் வளர்ச்சியும் – ஆன்ம வளர்ச்சியும்:

"ஒரு செடியை நட்டவுடன், அது வேர்களின் மூலம் பூமியில்



உள்ள தண்ணீரை உறிஞ்சுகிறது. முதலில் அதன் இலைகளில் உள்ள நீரை உறிஞ்சிப் பயன்படுத்திய பிறகுதான் மண்ணில் உள்ள நீரை வேர் உறிஞ்சுகிறது. அதுபோலவே ஆன்மிகத் துறையில் நீங்கள் ஈடுபட்ட உடனே பயனடைய முடியாது. முதலில் துன்பங்களை அனுபவித்து, பிறகுதான் ஆன்மிகத்தில் வேர் ஊன்றிப் பயனடைய முடியும். அப்பயனை அனுபவிக்கவும் முடியும்.''

### பருந்தும் கோழிக்குஞ்சும்:

"பருந்து ஒன்று தத்தித் தத்தி மேலே பறக்கிறது. ஒரு குறிப்பிட்ட தூரம் மேலே சென்றவுடன் சிறகுகளை அடித்துக் கொள்ளாமல் வானத்தில் அப்படியே மிதக்கின்றது. அடுத்த கணம் கீழே ஒரு கோழிக்குஞ்சைப் பார்த்தவுடன், மீண்டும் அந்தக் கோழிக்குஞ்சுக்கு ஆசைப்பட்டுக் கீழே வருகிறது. தாய்கோழி தன் குஞ்சினைப் போராடிக் காப்பாற்றுகிறது. ஏமாந்த பருந்து மீண்டும் மேலே பறப்பதற்குச் சிரமப்படுகிறது.

ஆன்மிகத்திலும் நீ மெல்ல மெல்ல மேலே பறந்து போகலாம். மேலே சென்றதும். பேரானந்தத்தில் மிதந்தபடிக் கிடக்கலாம். முக்தியும் அடையலாம்.

ஆன்மிகத்தில் பல கஷ்டங்கள் உண்டு. தொல்லைகள் உண்டு. அவற்றையும் மீறிக்கொண்டு மேலே போனால் உனக்கு முக்தியும் உண்டு. அதைவிட்டு விட்டுக் கோழிக்குஞ்சுக்கு ஆசைப்படும் பருந்து போல பந்தபாசம் காரணமாக நீ அடிக்கடி கீழே இறங்கினால் மீண்டும் கஷ்டப்பட்டுத் தான் மேலே போக வேண்டும்.

தரைக்கு வந்துவிட்டு மேலே போகப் பருந்து எவ்வளவு சிரமப்படுகிறதோ அந்தளவிற்கு நீயும் மேலே போவதற்கு அதிகமாகச் சக்தியைச் செலவழிக்க வேண்டிவரும். அந்தப் பருந்து போல மேலே சென்று மிதப்பதற்கு மட்டும் முயற்சி செய். அந்தப் பருந்து போல கோழிக்குஞ்சுக்கு ஆசைப்பட்டுக் கீழே இறங்கி வராதபடிப் பார்த்துக் கொள்!''

### பாவனை செய்யாதே:

"ஆன்மிகத்திற்கு வந்துவிட்டு, செவ்வாடை அணிவது போல அணிவது, கும்பிடுவது போலக் கும்பிடுவது என்கிற பாவனைகளையெல்லாம் வைத்துக் கொள்ளாதே!

ஆன்மிகத்தில் பாவனை செய்தால் அதனுடைய பயனை நீ அனுபவித்துத்தான் ஆக வேண்டும். என்னிடம் பாவனை

பண்ணாதே! உண்மை உணர்வோடு நடந்துகொள்!

அம்மாவுக்கு இதெல்லாம் தெரியாது என்று எண்ணிக் கொள்ளாதே. நீ எங்கிருந்துகொண்டு எதைச் செய்தாலும் அம்மாவிற்கும் தெரியும்; அடிகளார்க்கும் தெரியும். உலகத்தின் எந்த மூலையில் இருந்துகொண்டு எதைச் செய்தாலும் எதைச் சொன்னாலும் அது அடிகளார்க்கும் தெரியும். அம்மாவுக்கும் தெரியும் என்பதை மறவாதே!''

**அலுத்துக் கொள்ளக்கூடாது:**

''ஏதோ அம்மாவிடம் வந்தோம் போனோம் என்றெல்லாம் இருக்கக்கூடாது. உனக்கென்ன? எனக்கென்ன என்றெல்லாம் சலித்துக்கொண்டு ஆன்மிகப் பணிகள் செய்யக்கூடாது. வீடு வாசல் இருந்தென்ன? நிலபுலம் இருந்தென்ன? என்றெல்லாம் அலுத்துக் கொள்கிறீர்கள்.

வேதனை - சோதனை, இறப்பு - பிறப்பு, பொறாமை - பொச்சரிப்பு, ஆக்கம் - அழிவு எல்லாமே உலகில் உண்டு. இவ்வளவு இருந்தும் ஆன்மிகத்திற்காகச் செலவு செய்யும் மனப்பான்மை வருவதில்லை.''

**ஆன்மிகத்திலும் பகை உண்டு:**

''அக்கம்பக்கத்தில் பழகும் போதும் பகையுண்டாகும். ஆன்மிகத்தில் ஈடுபடும்போதும் பகையுண்டு. ஆந்தை போல உன்னைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் உண்டு. ஆகையால் தன்னைத் தானே நீங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.''

**''நான்'' என்பதும் ''நாம்'' என்பதும்:**

''நான் என்பது நீங்கி நாம் என்ற மனநிலை வரவேண்டும்.''

**எல்லோரும் பயனடைய வேண்டும்:**

''ஆன்மிகம் என்பது பழுத்த மரம் போன்றது. இந்த மரத்தில் உள்ள பழங்கள் அனைத்தையும் உண்டுவிட முடியாது. இப்பழங்களில் சில பூச்சிகளால் அழியலாம். சில திருடர்களால் அழியலாம். சில பணத்திற்காகவும் விற்கப்படலாம். அதனால் ஆன்மிகத்தில் நீ மட்டும் பலன் அடையவேண்டும் என்று எண்ணக்கூடாது. எல்லோரும் பலனடையவேண்டும்.''

**சிறைச்சாலையில் உள்ள பிள்ளை:**

''ஒரு தாய் தன் மகன் திருடனாக இருந்து சிறைச்சாலைக்குச் சென்ற போதும், அவன் எப்படியாவது உணவு அருந்தவேண்டுமே



என்று ஆசைப்படுகிறாள். வேளாவேளைக்கு அவனுக்கு உணவு கிடைக்கவேண்டுமே என்று தவிக்கிறாள். கணவனும், மற்ற பிள்ளைகளும் தன் அருகிலேயே இருந்தாலும், எங்கோ சிறைச்சாலையில் உள்ள பிள்ளையிடம்தான் அவளுக்குப் பாசம் அதிகரிக்கிறது. அவன் ஏன் திருடனாக மாறினான் என்றெல்லாம் நினைத்துப் பார்ப்பதில்லை. பெற்ற மனம் பித்தாக மாறிவிடுகிறது. அந்தத் தாய் போலவே நானும் எப்படியாவது உங்களை ஆன்மிகத்தின் மூலம் மாற்றிவிட வேண்டும் என்றுதான் நினைக்கிறேன்.''

**ஆன்மிகத்தில் வரவு செலவுக் கணக்கு:**

''ஆன்மிகத்தில் ஈடுபடுவதனால் ஏற்படக்கூடிய வரவு-செலவுக் கணக்கைப் பார்க்கக் கூடாது. அப்படிப் பார்த்தால் உனக்கு வறட்டுத்தனம்தான் ஏற்படும்.''

**பந்த பாசமற்ற உறவு:**

''காய்ந்த மரச்சட்டத்தில் ஆணி அடித்துப் படத்தை மாட்டினால் படம் விழாமலிருக்கும். பச்சை மரச்சட்டத்தில் ஆணியடித்து மாட்டினால் மரச்சட்டம் காயக் காயப் படமும் நெகிழ்ந்து விடும்.

அதுபோலவே ஆன்மிகத்தில் பந்தபாசமற்ற உணர்வோடு நீங்கள் ஈடுபட்டால் அந்த ஈடுபாடு நிலைத்து நிற்கும். பந்தபாசங்களோடு ஆன்மிகத்தில் ஈடுபட்டால் உங்கள் ஆன்மிக ஈடுபாடும் வரவர விழுந்துவிடும்.''

**பசுவும் – கன்றும்:**

''கயிற்றில் கட்டப்பட்ட கன்று தாய்ப்பசுவைப் பார்த்ததும் ''அம்மா'' என்று அழைத்துத் தன் ஆவலை வெளிப்படுத்துகிறது. எவ்வளவு தொலைவிலிருந்தாலும் அந்தப் பசு ஓடிவந்து கன்றுக்குப் பால் கொடுத்து மகிழ்கிறது.

தாயை அடைந்த கன்றும் மகிழ்கிறது. கன்றை நாடிவந்த பசுவும் மகிழ்கிறது.

அதுபோல நீங்கள் பந்தபாசம் என்ற கயிற்றால் கட்டப்பட்ட நிலையில், ஆன்மிகம் என்ற கொட்டிலில் அடைபட்டு இருக்கின்றீர்கள். தொலைதூரத்தில் நான் இருந்தாலும், ஆன்மிகத்தில் ஈடுபாடு கொண்டு அம்மா என்று அழைத்தால் நானும் ஓடிவந்து உங்களை அரவணைப்பேன். அதனால் உங்களுக்கும் மகிழ்ச்சி! எனக்கும் மகிழ்ச்சி!''

**பிரசவ வேதனையும் – மகிழ்ச்சியும்:**

“கருவுற்ற தாய் ஒருத்தி எவ்வாறெல்லாம் வேதனைப்படுகிறாள்? பிரசவத்தின் போது எப்படியெல்லாம் தொல்லைகளை அனுபவிக்கிறாள்? அவளே குழந்தை பிறந்த பிறகு எவ்வளவு மட்டற்ற மகிழ்ச்சியை அடைகிறாள்?

அதுபோலத் தான் நீங்கள் ஆன்மிகம் என்ற குழந்தையைப் பெறுகிற வரையில் தொல்லைகளும், வேதனைகளும் இருக்கும்.

இன்று இல்லறத்தில் இருப்பதாலும், விஞ்ஞான காரணங்களாலும், பணத்தாலும் குழப்பங்கள், தொல்லைகள் உங்களுக்கு ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன.

ஆன்மிகம் என்ற குழந்தையைப் பெறுகிற வரையில் தான் உங்களுக்குத் தொல்லைகள். அதைப் பெற்றுவிட்டால் மகிழ்ச்சியில் நீங்கள் திளைக்கலாம்.”

**ஆன்மிகம்: தேன்கூடு:**

“ஆன்மிகம் என்பது ஒரு தேன்கூடு போன்றது. தேனீக்கள் பல இடங்களில் பறந்து சென்று தேனைச் சேகரித்து வைக்கின்றன. மனிதன் ஒரு தீப்பந்தத்தின் துணையுடன் தேனீக்களை விரட்டிவிட்டுத் தேனடையைப் பறித்துக் கொள்கிறான். கூடு கலைக்கப்பட்டாலும், தேனீக்கள் மனம் தளர்வதில்லை. மீண்டும் தேன்கூடு கட்டும் முயற்சியில் இறங்குகின்றன. அதுபோல ஆன்மிகத்திற்கும் காலந்தோறும் எதிர்ப்புகள் வந்தபடி இருக்கும். எந்த எதிர்ப்பு வந்தாலும் ஆன்மிகத்தை அழித்துவிட முடியாது.”

**பசுவும் – கன்றும்:**

“ஆன்மிகத்தில் தாய்ப்பசுவிற்கும், கன்றுக்கும் உள்ள பாசம் இருக்க வேண்டும். அந்தப் பாசம் கடலில் மிதக்கும் காகிதப் பந்து போல் இருக்கக் கூடாது.”

**ஆன்மிக முன்னேற்றம் எப்போது வரும்?**

“பச்சை மரத்தை வெட்டிக் கிணற்றில் போடும்போது, அதிலுள்ள ஈரத்தன்மை காரணமாக அது தண்ணீரில் மூழ்கிவிடும். காய்ந்த மரத்தைப் போட்டால் மூழ்குவது இல்லை. மாறாக மிதக்கிறது. அதில் உள்ள நீர்த்தன்மை வெளியேறிவிட்டதால் அது மிதக்க முடிகிறது. அதுபோலப் பந்தம், பாசம் என்ற ஈரம் உங்கள் உள்ளத்தில் நிறைந்திருப்பதால் உலகியல் வாழ்க்கையில் மூழ்கிவிடுகிறீர்கள். அதனால் ஆன்மிகத்தில் முன்னேறிவர முடிவதில்லை. பந்தம், பாசம்



என்ற உணர்ச்சிகள் விலகும்போது நீங்கள் ஆன்மிகத்தில் முன்னேறிவர முடியும்.”

**ஆன்மிக ஈடுபாடு:**

“இன்றைய நிலையில் ஒருவன் தன்னை வளர்த்துக் கொள்ள ஒரு ரூபாய் தேவையென்றால் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிப் பத்து ரூபாய் தேவைப்படுகிறது. ஆன்மிகத்தில் நீ ஈடுபாடு வைத்துக் கொள்வதன் மூலம் தன்னையும் பாதுகாத்துக் கொள்ளலாம். பிறரையும் பாதுகாக்கலாம்.”

**ஆன்மிகத்தில் அமைதி:**

“அமைதி என்றால் ஆன்மிகம். ஆன்மிகம் என்றால் ஆன்மா. ஆன்மா என்றால் அம்மா. அம்மா என்றிருந்தால் எங்கிருந்தாலும் உனக்கு எந்த ஆபத்தும் இல்லை. அந்த ஆன்மிகத்திலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இன்றைக்கு உன் தலைக்கு மேலே பாறாங்கல் இருக்கிறது. கத்தி இருக்கிறது. குண்டு இருக்கிறது.

உன்னைச் சுற்றியுள்ள நான்கு சுவர்களும் இடிந்து விழும் நிலைமை உள்ளது. நீ நடுவில் இருக்கிறாய்.

இன்றைய உலகில் இப்படி உன்னைச் சுற்றியழிக்க அழிவு காத்திருக்கிறது. அதனால் அம்மா, தெய்வம்! என்ற சிந்தனையுடன் இருந்தால் எந்தவித ஆபத்தும் உன்னை நெருங்காது. ஆன்மிகத்தால் அமைதியும் கிடைக்கும். ஆபத்தும் நீங்கும்.”

**அறிவுக்கும் ஆன்மிகத்துக்கும் துணை:**

“அளவுக்கு மீறிக் காற்றடித்தால் மரங்கள் தலைசாய்ந்து விழுந்துவிடும். அளவிற்கு மீறித் துன்பங்கள் வந்தால் உங்கள் அறிவிற்கும், ஆன்மிகத்திற்கும் சோதனை வரும். அத்தகைய நேரங்களில் ஆதிபராசக்தியைத் துணையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.”

**அணுவுக்குள் அணுவாக:**

“அவளின்றி ஓரணுவும் அசையாது. அணுவுக்குள் அணுவாக இருந்து கொண்டுதான் நான் இங்கே ஆன்மிகம் வளர்த்து வருகிறேன்.”

**ஆன்மிக ஈடுபாடு:**

“நெருப்பு, மின்சாரம், தண்ணீர் ஆகியவற்றில் கவனம்

தேவைப்படுவது போல, தருமம் செய்வதிலும், நான்கு பேருடன் பேசுகிற பொழுதும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.

வரும் காலம் பொல்லாத காலம். ஆன்மிகத்தில் தியானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

நீ ஆன்மிகத்தில் ஈடுபட்டாலும் திருஷ்டி உண்டு."

**ஆன்மிகப்பாதை:**

"கம்பிமேல் நடப்பது போல ஆன்மிகத்தில் பயபக்தியுடன் நடக்கப் பழக வேண்டும்."

**ஆன்மாவைப் பதப்படுத்த:**

"ஆன்மா பதப்படுவதற்கு ஐம்புலன்களையும் அடக்க வேண்டும். ஐம்புலன்களையும் அடக்க மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்."

**ஆன்மிக ஈடுபாடும் – சோதனைகளும்:**

"உங்கள் உள்ளம் ஆன்மிகத்தில் ஈடுபடும்போது சோதனைகள் பல வரத்தான் செய்யும். ஆன்மிகத் துறையில்தான் ஈடுபாடு வைத்துக் கொண்டிருக்கிறோம். அம்மாவிடம் அடிக்கடி போய் வந்து கொண்டிருக்கிறோம். அப்படியும் சோதனைகள் வருகிறதே என்று புலம்பாதே. என்னை விட்டு ஓடாதே. குழந்தை கோபித்துக் கொண்டு தாயை விட்டுச் சென்றாலும் மீண்டும் தாயிடம் வந்துதான் ஆகவேண்டும். நீங்கள் எங்கே சென்றாலும் என்னிடம்தான் வரவேண்டும்."

**உலக வளர்ச்சிக்கு ஆன்மிகம்:**

"விலங்குகளின் உடம்பிலும் உப்பு உண்டு. மனித உடம்பிலும் உப்பு உண்டு. தாவர வளர்ச்சிக்கு இரண்டுமே பயன்படும். நிலத்திற்கு உப்பு எவ்வாறு அவசியமோ அவ்வாறே உலக வளர்ச்சிக்கு ஆன்மிகம் அவசியம்."

**ஆன்மா வழியாக நுழைய வேண்டும்:**

"நல்ல அறிவுரைகள் வாய் வழியாக நுழையும்; செவி வழியாகவும் நுழையும். ஆன்மா வழியாகவும் உள்ளே நுழையும். வாய் வழியாகவும், செவி வழியாகவும் கேட்பதெல்லாம் உள்ளே பதிந்து விடுவதில்லை. ஆன்மா வழியாக உள்ளே நுழைந்தால் பசுமரத்தாணி போலப் பதியும். அவ்வாறு நுழைந்தால்தான் அமைதியும் கிடைக்கும்."



**ஆன்மிகத்தில் அடக்கமும் – பாதுகாப்பும்:**

"ஒரு மரம் நன்றாகப் பழுத்துப் பலன் கொடுக்கத் துவங்குகிற போதுதான் அதனை நன்றாகப் பாதுகாக்கிறீர்கள். பழம் தராத காலங்களில் மரத்தைப் பற்றிக் கவலை கொள்வதில்லை. பழம் தராத காலத்திலும் அந்த மரத்தைப் போற்றி வளர்த்தால் அது பலன் தரும்போது இரண்டு மடங்காகக் கொடுக்கும்.

அதுபோல ஆன்மிகத்தில் வளர்ந்துவிட்டோம் என்று கருதிக்கொண்டு ஆன்ம முன்னேற்றத்திற்கான செயல்களை விட்டுவிடக் கூடாது. தொடர்ந்து அடக்கத்துடன் முயற்சிகளில் ஈடுபடவேண்டும். அப்போது இரண்டு மடங்கு பலன் உண்டு."

**அறிவும் ஆன்மாவும்:**

"உடலும் உள்ளமும் தூய்மையாக இருந்தால் மட்டும் போதாது. அறிவும் ஆன்மாவும் தூய்மையாக இருக்க வேண்டும்."

**இனிவரும் உலகம்:**

"இனி வருகிற உலகம் வம்பு உலகமாக இருக்கும். அது மாறவேண்டுமானால் உலகமே ஆன்மிகத்தை நோக்கி வரவேண்டும்."

**அழுக்கு நிலை – அழுகும் நிலை:**

"ஆன்மிகம் தான் அழுக்கை அகற்றுகிறது. அழுக்கு சேரச்சேர அழுகும் நிலை ஏற்படும். அதனால் உள்ளத்துள் சேர்கிற அழுக்குகளை அகற்ற வேண்டும்."

**எங்கும் வளம் – எதிலும் வளம்:**

"இயற்கை வளம், மண் வளம், ஆகாய வளம், செயற்கை வளம், கடல் வளம், உள்ள வளம் என வளங்கள் பல உண்டு. என்ன இருந்தாலும் உணவு வளம் வேண்டும்.

செடி, கொடி, மரம், புழு, பூச்சி எல்லாவற்றிற்குமே உணவு தேவை. அந்த உணவைப் பெறுவதற்குத் தெய்வ சக்தி தேவை.

அந்தத் தெய்வசக்தியைப் பெறுவதில் தேய்மானம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

செயற்கையினால் பலன் கிடையாது. அந்தச் செயற்கையினால் வம்பு தும்புகள் தான் பெருகும்.

இயற்கை வளம் இருந்தால் மட்டும் போதாது. மனிதர்களுக்கு உள்ளத்து வளம் தேவை. அறிவு இருந்தால் போதாது. ஆன்ம வளம் தேவை."

**ஆன்மா பற்றி விளக்கம்:**

“ஆன்மா என்பது தாய்மை உணர்வு. ஆன்மிகம் என்பது தாய்மை உணர்வோடு உயிர்களிடம் அன்பு கொள்வது.

இந்தத் தாய்மை உணர்வு இருப்பதால்தான் தாய்ப்பறவை தன்னையும் காத்துக் கொண்டு தன் குஞ்சுகளையும் காப்பாற்றுகிறது.

அதனால் தான் ஆன்மாவையே அம்மா என்று சொல்கிறார்கள்.

தாய்மை உணர்வு பெண்களிடம் அதிகம் உண்டு. அது ஆண் கருவுக்குக் கிடையாது.

இது நவநாகரிகமான காலம். இருந்தாலும் பெண்கள் தங்கள் குழந்தைகளுக்குக் குழந்தைப் பருவத்திலேயே நல்ல பழக்கவழக்கங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

நாகரிகம் என்ற பெயரில் அநாகரிகம் தான் தற்போது வளர்ந்து வருகிறது. அந்த அநாகரிகம் அழிவுக்கு வழிவகுக்கும். ஆன்மிகம் அநாகரிகத்தையும் வெல்லும்.”

**மனம் என்ற கடிவாளம்:**

“போகக்கூடாத இடத்திற்குப் போக வேண்டும் என்று நினைப்பதும், செய்யக்கூடாத செயலைச் செய்யவேண்டும் என்று நினைப்பதும், உண்ணக்கூடாத உணவை உண்ண வேண்டும் என்று நினைப்பதும் ஏன்? மன உறுதி இல்லாமையே காரணம். மனிதனின் ஆன்மா, மனம் என்ற கடிவாளத்தைப் பிடித்து இழுத்தால்தான் மனக்கட்டுப்பாடு வரும்.

மனிதன் தன்னைத்தானே உருவாக்கிக் கொள்வதற்கு மனத்தில் எழும் ஆசைகளே காரணம்.”

**சிலையும் நானும்:**

“மனிதன் ஆன்ம உணர்ச்சியினால் தெய்வத்திற்கு ஓர் உருவம் கொடுத்துச் சிலையாக வடிக்கிறான். ஆன்மா தான் சிலை வடிவில் அங்கே மௌனமாகக் குடியிருக்கிறது. சிலை பேசுமா? என்று நினைக்கிறீர்கள்.

அந்தச் சிலை இருந்த இடத்தில் இருந்து கொண்டு வருகிறவர், போகிறவர்கள் எல்லோரையும் பார்த்து அவரவர்களின் உண்மைக் கதைகளை எடுத்துச் சொல்ல ஆரம்பித்தால் என்ன ஆகும்?

நானும் இங்கே அந்தச் சிலை போலத்தான் நீங்கள் செய்கிற எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு வெளியே சொல்லாமல் விழுங்கிக் கொண்டிருக்கிறேன்.”



**வேர் பிடித்து நிலைக்க வேண்டும்:**

“செடி நன்கு வேர் பிடித்து வளராமல், மேலோட்டமாக வளர்ச்சி பெற்றிருந்தால் காற்றாலும், வெள்ளத்தாலும் அழிந்து போகும்.

அந்தச் செடியின் வேர், கல் முள், எல்லாவற்றையும் தாண்டிப் பூமியில் ஆழமாக வேர்விட்டு ஊன்றி வளர்ந்திருக்குமானால் நல்ல பிடிப்புடன் நிலைத்து நிற்கும், அதுபோல மனிதனும் ஆன்மாவை அடக்கி, ஆதிபராசக்தியைப் பற்றிக்கொண்டு ஆழமாக வேர்பிடித்து வளர்ந்து நிற்க வேண்டும்.”

**ஒரே தாய்! ஒரே குலம்!**

“ஒரே தாய்! ஒரே குலம்! வெளிநாட்டில் இருப்பவர்களுக்கும், இந்த நாட்டில் இருப்பவர்களுக்கும் ஆன்மா ஒன்றுதான்.

உணவு, பாசம், பாதை எல்லாம் ஒன்று தான்.

ஆன்மிகப் பணிகளை எந்த அளவுக்கு உண்மை உணர்வோடு செய்கிறாயோ அந்த அளவுக்கு உன் ஆன்மாவும் முன்னேற்ற நிலை அடையும்.”

**மரமும் ஆன்மிகமும்:**

“மாமரக் கிளைகளில் மாங்கனி அதிகமாகிக் கிளைக்குப் பாரமாக இருந்தாலும், அந்த மாமரம் தன் கிளை முறியாமலும் தன்னிடமுள்ள கனியின் ருசி மாறாமலும் பார்த்துக் கொண்டு தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்கிறது.

அதுபோலவே ஆன்மிகத்திலும், எதிர்ப்புச் சக்திகள் எதிர்ப்படும்போது ஆன்மிகம் சுமையாகவும் தோன்றும். அந்த மாமரம் போல அவற்றைத் தாங்கிக் கொள்ளவும் வேண்டும். பக்குவப்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.”

**பட்டமும் நூலும்:**

“பட்டம் விடும்போது நூலைக் கையில் பிடித்துக் கொண்டு லாவகமாகப் பறக்கவிடுகிறார்கள். பட்டம் மேலே போகவும் வேண்டும். நூலையும் விட்டுக்கொண்டே இருக்கவேண்டும். அந்தப்பட்டம் ஓடிவிடவும் கூடாது. நூலில் சிக்கலும் விழுந்துவிடக் கூடாது.

பட்டம் விடுகிறவன் எவ்வளவு பக்குவமாக நூலையும் பட்டத்தையும் கையாளுகின்றான்...? அதுபோலவே நீங்கள்

ஆன்மிகத்தில் ஆன்மாவையும் பக்குவமாகக் கையாளவேண்டும். சிக்கல்களில் மாட்டிக்கொள்ளாமலும் முன்னேறி வரவேண்டும்.

ஒரு எல்லைக்கு மேலே போனால் நூல் அறுந்து பட்டமும் எங்கோ போய்விடுகிறது. உங்கள் ஆன்மாவும் முக்தி அடைகிற போது கண்ணுக்குப் புலப்படாமல் எங்கோ போய்ச்சேர்கிறது.''

**தாயும் – சேயும் – ஆன்மிகமும்:**

''ஒரு தாய் தன் குழந்தைக்கு எப்படிப் பால் கொடுக்கிறாள்? குழந்தையின் தலையை வருடிக் கொடுத்து அதன் கால்களை வருடிக் கொடுத்துச் சூழ்நிலையை மறந்து இன்முகத்தோடு பால் ஊட்டுகிறாள். அந்தக் குழந்தையன்பில் தன்னை மறக்கிறாள்.

குழந்தையும், தன்னை மறந்து தாயின் மடியை எட்டி எட்டி உதைத்தபடி, தாயின் காதுகளை வருடியபடி மகிழ்வோடு பாலை அருந்துகிறது.

இந்த நிலையும் ஒரு வகையில் தியான நிலைதான். இந்த நிலையில் தாய்க்கும் பால் சுரக்கிறது. குழந்தையும் பாலைச் சந்தோஷத்துடன் குடிக்கிறது.

இந்த இருபால் அன்புணர்வே ஆன்மிகத்தின் அடிப்படை.''

**எவ்வாறு ஆன்மிகம் ஊட்டுகிறேன்?**

''கோழி தன் குஞ்சுகளின் ஜீரணசக்தியறிந்து உணவூட்டுவது போல நானும் இங்கே நீங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க அளவறிந்தே ஆன்மிகத்தை ஊட்டிவருகிறேன்.''

**ஆன்மிகத்தில் பக்குவம் தேவை:**

''பால் வளமில்லாத பசுவிடம் பாலைக் கறந்தால் என்ன ஆகும்? பாலும் கிடைக்காது. கைகளும் சோர்ந்துவிடும். கால் நடுவே வைத்துள்ள பாற்சொம்பும் நழுவிவிடும். அதுபோலப் பக்குவமில்லாமல் ஆன்மிகத்தில் ஈடுபடும்பொழுது உரிய பயனும் கிடைப்பது இல்லை; மனச்சோர்வும் ஏற்படும். உன் முயற்சிகளும் நழுவிவிடும்.''

**ஆன்மிகம் என்ற பால்:**

''குழந்தையின் வயிற்றைப் பால் கொடுத்து நிரப்பினால் அதற்குச் சந்தோஷம் ஏற்படும். உங்கள் அழுக்கை நீக்கினால் தான் நானும் சந்தோஷத்தைக் கொடுக்க முடியும்.

பாசம், பொருள், பதவி, ஆசை, வீடு, படிப்பு, பணம், மகன் என்ற பசிகளோடு தான் நீங்கள் என்னிடம் வருகிறீர்கள். இந்த



பசிகளையும் ஆன்மிகம் என்ற பாலைக் கொடுத்துத் தான் நான் தணிக்க வேண்டியிருக்கிறது.''

**உடலும் உள்ளமும்:**

''தசைகள் இயங்க இயங்க உடல்நிலை நன்றாக இருக்கும். அதுபோல ஆன்மிகத்தில் ஈடுபட ஈடுபடத்தான் உங்கள் உள்ளமும் வாழ்க்கையும் நல்லமுறையில் அமையும்.''

**குடும்பப் பொறுப்பும் – தனது ஆன்ம முன்னேற்றமும்:**

''மகனே! ஆதிகாலத்தில் மனிதன் எப்பசியுமின்றி என்னிலேயே தன் மனத்தை லயிக்க வைத்துக்கொண்டு இயற்கையோடு ஒன்றி வாழ்ந்து வந்தான். ஆனால், இன்றைய நிலை அப்படியில்லை மகனே! தன்னையும் தன் குடும்பத்தாரையும் காப்பாற்றுவதற்காகப் பொருள் தேவைப்படுகிறது. அப்பொருளுக்காக அலுவலாற்றுவது, வியாபாரம் செய்வது இன்னபிறதான் தனது முக்கியக் கடமையாகிறது என்று ஒவ்வொருவனும் நினைத்துக் கொண்டிருக்கிறானே...!

தன்னையும் தனது சுற்றத்தாரையும் பொருளைத் தேடிக் கொண்டு காப்பாற்றுவதற்காக வேண்டி அவனவனுக்குப் பிறவியை நான் தரவில்லை.

மகனே! தன்னை உணர, தன் வினையை அனுபவித்துக் கழிக்க, மேலும் வினையைக் கூட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காக மனித குலத்திற்கு இப்புவியில் நான் கொடுத்த பொன்னான வாய்ப்படா மனிதப்பிறவி! அதிலும் இந்நேரம் நானே நேரில் வந்திருக்கின்றேனே? அதனை உணர்ந்து அதன்படி நடக்க வேண்டியது தானே அவனவன் கடமை?

மகனே! உனது வினையைக் கழிப்பது என்பது எளிதான செயல் என்றா நினைத்துக் கொண்டாய்?

அது அவ்வளவு சுலபமல்லடா...!

ஒருவன் வினையைக் கழித்துக் கொள்ளுகின்ற மார்க்கத்தை என்னருளால் தெரிந்து கொண்ட பின் அவனறியாமல் என்னருகே வர ஆரம்பிக்கின்றான்.

எனவே, நான் விளையாட்டுக்காகச் சோதனை தருவது போல் பாவனை செய்தால் உடனே மனம் சோர்ந்து வினையைக் கழிக்கிற வேலையை விட்டுவிட்டு, உலகியல் கடமைகளைச் செய்ய ஓடிவிடுகின்றான். ஆனால் என் ருசி கண்டவன் என்னை விட்டு நீங்க முடியுமா...? மறுபடியும் தன் அகக் கடமையாற்ற வந்துவிடுகின்றான்.

இதனிடையில் நான் அவனுக்குக் கொடுப்பது ஓய்வு என்பதைப் புரிந்து கொள் மகனே!

மகனே! இதனுடைய தாத்பரியம் போகப் போகத்தான் விளங்கும்!"

**ஆன்மிகத்தில் பக்குவம்:**

"குயவன் மண்ணில் தண்ணீரை ஊற்றிப் பிசைந்து மண்பானை செய்கிறான். அதனை நெருப்பில் வைத்துச் சூளையிட்ட பிறகு அந்த மண்பானை பக்குவப்பட்டதாகிறது. அந்த மண்பானை போன்ற பக்குவம் நாளடைவில் உங்களுக்கு வரவேண்டும்."

**கசப்பும் இனிப்பும்:**

"பிறப்பு, வளர்ச்சி, இறப்பு என்று உலகியற்கை அமைந்திருக்கிறது. அதுபோல ஆன்மிக உணர்வுகளிலும் கசப்பும், இனிப்பும் கலந்துதான் இருக்கும்.

காற்றால் அசைவு ஏற்படுவது போல உள்ளத்தில் பெருகும் ஆசைகளால் ஆன்மா அலைகிறது. அன்பால் அசைகிறது.

உடல் உறுப்புக்களாலும், உணவு வகைகளாலும் உயிர்கள் தமக்குள் வேறுபடுகின்றன. ஆனாலும் அனைத்து உயிர்களுக்கும் ஆன்மா என்பது ஒன்றுதான்."

**ஆன்மிகமும் சமுதாயமும்:**

"ஒரு செங்கல் மீது மற்றொரு செங்கல் வைத்துக் கட்டினால் தான் ஒரு வீடு உருவாகும். அதுபோல ஆன்மிகத்துறையில் ஒவ்வொருவரும் சேர்ந்து இணைந்து உழைத்தால் தான் ஒரு நல்ல சமுதாயம் உருவாகும்."

**ஆன்மிகத்திற்குப் பலன்:**

"ஆன்மிகத்தில் ஈடுபட்ட உடனேயே பலன் கிடைத்து விடாது. ஐம்புலன்களை அடக்கி முழுமையாக ஈடுபடும்போது நாளாக நாளாகத்தான் பலன்கள் கிடைக்கும்."

**ஆன்மிகமும் – ஆராய்ச்சியும்:**

"உங்கள் கண் எதிரே பயிர் வளர்கிறது. அந்தப் பயிருக்குச் சாணி, எரு, உரம் போடுகிறீர்கள். சாக்கடை நீரினாலும் பயிர்



விளைகிறது. அப்படி வளர்ந்த உணவு தானியத்தைச் சந்தைக்குக் கொண்டு வந்து விற்கிறார்கள். அந்த உணவு தானியத்தை வாங்கி உண்கிறீர்கள். அது வளர்ந்த இடம், அதற்குப் போடப்பட்ட எரு, சாணி முதலியன பற்றியெல்லாம் ஆராய்ச்சி செய்வதில்லை.

அதுபோலவே ஆன்மிகத்திலும் ஆராய்ச்சி செய்யாமல் பக்தியை வளர்த்துக் கொண்டு உங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்."

**விஞ்ஞானத்துறை; ஆன்மிகத்துறை:**

"ஆன்மிகத்துறையில் ஈடுபட்டு வரும்போது முன்னேற்றமும், பக்குவமும் வரவேண்டும். ஆரம்பத்தில் பயபக்தி இருந்தால் மட்டும் போதாது. அவை இறுதி வரையில் இருக்கவேண்டும். விஞ்ஞானத்துறையில் முன்னேறி வர, வர அழிவு உண்டு. ஆன்மிகத்துறையில் முன்னேறி வர வர அழிவு இல்லை."

**உலகமெல்லாம் மனிதனுக்குப் பொது:**

"மகனே! பறவைகள் சுதந்திரமாய் எங்கும் பறக்கின்றன! விலங்குகள் விரும்பிய காடுகளில் சுதந்திரமாய் உலவுகின்றன. மீன்கள் எந்த நாட்டுக் கடலிலும் சுதந்திரமாகத் திரிகின்றன. இவற்றை எவரும் தடைசெய்ய முடிவதில்லை. ஆனால் மனிதன் மாத்திரம் எங்கும் சென்று சுதந்திரமாக வாழ முடியவில்லை. இவைகளுக்குள்ள சுதந்திரம் கூட மனிதனுக்கு இல்லை. ஏனெனில் மனிதனுக்குள்ள "வெறி" தான் அவனுக்குத் தடை! இயற்கையும், உலகமும் அனைவருக்கும் பொது! நாடு, மொழி, இனம் மதம் என்ற எல்லைக்கோடுகள் மனிதன் போட்டுக் கொண்டவை."

**ஆன்மிகத்தில் வெற்றி பெற...**

"ஒரு வண்டி ஒழுங்காக ஓடவேண்டுமானால் சக்கரம் வேண்டும். அச்சு வேண்டும். எண்ணெய் வேண்டும். இவற்றோடு மூன்றும் பொருந்திச் செயற்படவேண்டும். அப்போதுதான் வண்டியும் ஒழுங்காக ஓடும்.

அதுபோலவே உன் எண்ணங்கள், செயல்கள், உன் மூளை மூன்றும் ஒன்றாக இருந்தால்தான் ஆன்மிகத்தில் நீ வெற்றி பெற முடியும். சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என்று முரண்பட்டு வாழக்கூடாது."

**பட்டிதொட்டி எங்கும் பரவி வருகிறது:**

"பஞ்சு வெடித்து விதைகள் எங்கும் பரவுவது போல இப்போது

தான் ஆன்மிகம் பட்டிதொட்டி எங்கும் பரவி வருகிறது. இது மேலும் வளர்ந்து உறுதிப்படவேண்டும்.''

### உன்னை நீயே புரிந்து கொள்ள வேண்டும்:

''உன்னை நீயே புரிந்து கொள்ள வேண்டும். உன் ஆன்மாவைப் புரிந்து கொள்ள வேண்டும்.''

### மனிதன் இரையாவது எதற்கு?

''மகனே! நீரில் உள்ள புழு, பூச்சிகள் மீனுக்கு இரையாகின்றன. மீன் தவளைக்கு இரையாகின்றது. தவளை பாம்புக்கு இரையாகின்றது. பாம்பு பருந்துக்கு இரையாகின்றது. பருந்து விலங்குக்கு இரையாகின்றது. விலங்கு மனிதனுக்கு இரையாகின்றது. மனிதனோ தன் மனத்துக்கு இரையாகின்றான்.''

### கல்லும் – பஞ்சும்:

''ஒரு கல் திடப்பொருளாக இருப்பதால் மேலே தூக்கி எறியும்பொழுது மறுபடியும் கீழே வந்துவிழுகிறது. ஆனால் லேசான பஞ்சு மேலே சென்று பறந்து விடுகிறது. அதுபோல ஆன்மிகத்தில் மன அழுக்கோடு ஈடுபடும்பொழுது கீழே விழவேண்டியிருக்கிறது.

மனத்தூய்மையோடு தொண்டு, தருமம் என்பனவற்றை மேற்கொண்டு ஆன்மிகத்தில் ஈடுபட்டால் மேலே பறக்கலாம்; முன்னேறலாம்.''

### ஆன்மா வளர...

''பூமியில் உற்பத்தி பெருகவேண்டுமானால் தண்ணீர் தேவை. அதுபோல உங்கள் உள்ளம் வளரவேண்டுமானால் ஆன்மிகம் தேவை. ஆன்மா வளரவேண்டுமானால் தொண்டும் பக்தியும் தேவை.''

### தெய்வத்தை அறிய...

''கண்ணாடியைக் கொண்டுதான் கண்ணாடியை அறுக்கமுடியும். தெய்வத்தன்மை உள்ளவர்களால் தான் தெய்வத்தை அறிய முடியும்.''

### ஓய்வு நேரம்:

''உங்களுக்குக் கிடைக்கிற ஓய்வுநேரத்தை ஆன்மிகப் பணிகளுக்குப் பயன்படுத்தவேண்டும்.''

### தீய எண்ணங்கள் சேரவிடாதே:

''அன்றன்று சேரும் குப்பைகளை அன்றன்றே ஒழித்துவிட்டால்



குப்பை சேராது. அதுபோல் உள்ளத்தில் அன்றன்று சேரும் தீய எண்ணங்களை அன்றன்றே ஒழித்துவிடவேண்டும். ஆன்மிகத்தில் இவ்வாறு உணர்ந்து செயல்படும்போது தான் அது உன் உள்ளத்திற்கு உரமாக மாறும்.''

### ஆன்மிக அலைகள்:

''உங்கள் மனத்தில் எப்போதும் ஆன்மிக அலைகளே எழுந்தபடி இருக்க வேண்டும். வாழ்க்கை வசதி, பந்தபாசம், குழந்தைகள் என்கிற ஆசை அலைகளே தோன்றியபடி இருப்பதால் ஆன்ம அலைகள் எடுபடுவதில்லை.''

### ஆன்மிகத்தில் தருமமும் தொண்டும்:

''தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களைக் கொண்டு வேண்டிய உருவங்களைச் செய்து கொள்ளலாம். ஆன்மிகத்தில் பலன் அடைய வேண்டுமானால் தருமம், தொண்டு ஆகியவற்றைச் செய்யவேண்டும்.''

### ஆன்ம உணர்வு:

''நல்லதையே நினைத்து நல்லதையே செய்யும்போது உங்களுக்கு ஆன்ம உணர்வு வரத்தொடங்கிவிடும். உங்கள் ஐம்புலன்களுக்குக் வேலை கொடுக்கக் கூடாது.''

### கடல் அலையும், ஆன்மாவும்:

''கடல் அலை கரைக்கு அடங்கி இருக்கவேண்டும். அதுபோல ஆன்மாவும் உடலுக்குள் அடங்கியிருக்கவேண்டும். இரண்டுமே எல்லை கடந்தால் அழிவு தான் ஏற்படும்.''

### ஆன்மிகத்தில் கிடைக்கும் வாய்ப்புகள்:

''மழை பெய்யும்போது தண்ணீரைத் தேக்கி வைத்துப் பயன்படுத்தாவிட்டால் உனக்குத் தான் நஷ்டம். ஆன்மிகத்தில் வாய்ப்புக் கிடைக்கும் போது பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் உனக்குத் தான் நஷ்டம்.''

### வாழ்க்கை என்பது என்ன?

''வாழ்க்கை என்பது ஒரு மின்னல்போல் மறையும் அனுபவம் தான் என்பதை மறவாதே!''

### ஆன்மா: ஒரு பாத்திரம்:

''ஆன்மா என்னும் பாத்திரத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.''

**மனத்தைச் சுற்றியுள்ள அழுக்குகள்:**

"ஒரு பெரிய மரத்தை வெட்ட வேண்டுமானால் அதைச் சுற்றியுள்ள மண்ணையெல்லாம் விலக்க வேண்டியுள்ளது. அதன் சல்லிவேர்களையெல்லாம் வெட்டியகற்ற வேண்டியுள்ளது. அதன் பின்பு ஆணி வேரை வெட்டியெடுக்க வேண்டியுள்ளது. அதுபோலவே ஆன்மிகத்தில் ஈடுபடும்போது உங்களைச் சுற்றியுள்ள மன அழுக்குகளையெல்லாம் நீக்கிவிட வேண்டும்."

**ஆன்மாவே எல்லாம்:**

"ஆன்மா தான் மின்சாரம்! ஆன்மா தான் விஞ்ஞானம்! எல்லாமும் ஆன்மாவால் உருவாக்கப்பட்டவைகளே! பெரிய மனிதனும் ஓர் ஆன்மாதான்! சின்ன மனிதனும் ஓர் ஆன்மா தான். எல்லாமும் ஆன்மாதான்! உன்னை உயர்த்துவதும் ஆன்மா தான்! உன்னை அழிப்பதும் ஆன்மா தான்! "நான்" என்ற ஆணவம் வரும்போது உன்னை அழிவுக்குக் கொண்டு செல்கிறது."

**ஆன்மிக அறிவு தேவை:**

"சிறிய விளக்கில் எரிவதும் தீ தான்! பெரிய விளக்கில் எரிவதும் தீ தான்! சூரியனும் ஒரு நெருப்புப் பிழம்புதாதன்! தோற்றம் தான் வேறு! வேறு! இதையெல்லாம் வேறுபடுத்தி உணர்வதற்கு ஆன்மிக அறிவு தேவை!"

**ஆன்மிக ஈடுபாடு:**

"தட்டெழுத்துப் பயிற்சி திறம்பட வந்துவிட்ட பிறகு மற்ற காரியங்களைக் கவனித்துக் கொண்டே கை தானாக அடிக்கும். அதுபோல ஆன்மிகத்தில் உனக்கு முழு ஈடுபாடு வந்துவிட்டால் மற்றவற்றைப் பற்றிக் கவலையின்றிக் கிடக்கலாம்."

**உள்ளே இருக்கும் ஆன்ம ஜோதியைப் பார்க்கலாம்:**

"வெண்ணியில் திரி போட்டுப் பற்ற வைத்தால் உடனே எரியாது. எண்ணெயில் திரிபோட்டுப் பற்ற வைத்தால் உடனே பற்றிக்கொள்ளும். வெண்ணெய் சூடுபட்டு உருகிய பிறகுதான் எரிய ஆரம்பிக்கும். உன்னிடம் படிந்துள்ள மன அழுக்குகள் நீங்கி மனம் தூய்மையடைந்து, அது மென்மையாக மாறும்போது தான் உனக்குள் இருக்கிற ஆன்ம ஜோதியை உணர முடியும்.

பாமரனுக்குத் தான் ஜோதி பக்குவம் தெரியும். ஆன்மாவையே ஜோதி வடிவமாகக் காணமுடியும்.

தீக்குச்சியிலும் சுவாலை! மெழுகுவத்தியிலும் சுவாலை!



பெட்ரோல் எரியும்போதும் சுவாலை! எல்லாம் ஒன்றுதான்! எரிபொருள் தான் வித்தியாசம்!

பூமியிலிருந்து கிடைக்கும் பொருள்களெல்லாம் பூமிக்குள்ளேயே போய்ச்சேரும்.

உணவு, பெட்ரோல், எண்ணெய் எல்லாமே உங்களுக்குப் பூமியிலிருந்து தான் கிடைக்கின்றன.

பூமியைத் தோண்டிக்கொண்டே போனால் ஒரு நாள் உணவுப் பொருளுக்குக் கூடத் தட்டுப்பாடு வரும்.

பூமியின் மேல் மட்டத்தில் எண்ணெய்பொருள் கிடைக்கிறது. படிப்படியாகக் கீழே போகப் போகக் கற்பாறை, தண்ணீர், எண்ணெய் என வேறு வேறு பொருள்கள் வருகின்றன.

அதுபோல ஆன்மிகத்திலும் நீங்கள் ஆழமாகப் போகப் போக அன்னதானம், தருமம், பிறருக்கு உதவுதல் போன்ற தருமசிந்தனைகள் மேலோங்கி வளரும். இவற்றையெல்லாம் செய்யச் செய்ய உன் ஆன்ம உணர்வு உயர்வடையும்."

**ஆன்ம வளர்ச்சி:**

"ஒரு மரம் பூமியில் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருக்கும் வேர்கள் மூலம் தண்ணீரை உறிஞ்சுகின்றது. பூமிக்கு மேலே உள்ள இலைகள் மூலம் காற்றைச் சுவாசிக்கின்றது. அதனால் அம்மரத்திற்கு வளர்ச்சி ஏற்படுகின்றது. அதுபோலவே, மனிதனின் உள்ளுணர்வும், வெளியுணர்வும் ஒன்றாக இருக்க வேண்டும். அப்போது தான் ஆன்ம வளர்ச்சி ஏற்படும்."

**உள்ளிருக்கும் ஆன்மாவுக்குப் பயப்படு!**

"மின்சாரத்தைத் தொட்டால் ஷாக் அடிக்கும் என்று பயப்படுகிறாய். நெருப்பைத் தொட்டால் சுடும் என்று பயப்படுகிறாய். இப்படியெல்லாம் வெளியுலகப் பொருள்களுக்குப் பயப்படுகிறாய். ஆனால் உன் உள்ளே இருக்கும் ஆன்மாவிற்குப் பயப்படமாட்டேன் என்கிறாய்!"

**ஆன்மாவைத் தொடாததால் தான்...**

"ஆன்மாவைத் தொடாததால் தான் இன்று எங்கும் வெட்டு, குத்து, கொலை, ரவுடித்தனம் எல்லாம் நடக்கின்றன."

**ஒழுக்கமும்: உண்மையும்:**

"ஆன்மிகத்துறையில் ஒழுக்கமும் உண்மையும் இருக்க வேண்டும். இருப்பவன் இல்லாதவனுக்குக் கொடுக்கவேண்டும்."

**ஆன்மாவைக் கண்டுபிடி!**

"நீ பிறந்து என்ன கண்டாய்? வாழ்ந்து என்ன கண்டாய்? ஆன்மாவைக் கண்டுபிடி!"

**உள்ளம்! ஆன்மா! தொண்டு!**

"மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளுக்கும் ஐம்புலன்களுக்கும் தொடர்புண்டு, அதுபோல உள்ளம், ஆன்மா, தொண்டு இவற்றிற்கும் ஒன்றோடொன்று தொடர்பு உண்டு."

**ஆன்மாவே கடவுள்!**

"உன் ஆன்மாவே கடவுள்."

**ஆன்மிகத்துறையில்:**

"ஆன்மிகத்துறையில் கலகலப்பு இருக்கவேண்டும். சலசலப்பு இருக்கக் கூடாது."

**உள்ளே இருக்கும் ஆன்மா:**

"ஒருவன் உள்ளே இருக்கிற ஆன்மா, தெளிவாகவும், கோபமில்லாமலும், அமைதியாகவும் இருக்கவேண்டும்."

**ஆன்மா ஒன்று:**

"ஒருவன் பார்க்கிற பார்வை, சிரிக்கிற சிரிப்பு, பெறுகிற கைதட்டல் என்பன பலவிதமாக இருக்கலாம். ஆனால் ஆன்மா ஒன்றாக இருக்கவேண்டும்."

**உள்ளே தோண்டிப் பார்த்தால்:**

"பூமியில் உள்ள பொருளைத் தோண்டிப் பார்க்கும்போது தான் தெரியும். அதே போல ஒருவனைத் தோண்டிப் பார்த்து ஆன்மாவை வைத்தே அவனைத் தெரிந்து கொள்ள முடியும்."

**ஆன்மிக ஈடுபாடு; தப்ப வழி:**

"இனிவரும் காலம் பொல்லாத காலம். தருமம், அதருமம் என்னும் சிந்தனைகள் இருக்காது. எந்த வம்புதும்புகளிலும் அகப்பட்டுக் கொள்ளாமல் ஆன்மிகத்தில் ஈடுபாடு கொண்டு வாழ்ந்தால் தப்பலாம்."

**மனத்தூய்மை முக்கியம்:**

"பூமியில் விதைக்கப்பட்ட நெல் முளைக்க வேண்டுமானால்



நிலத்தில் ஈரத்தன்மை இருக்கவேண்டும். அதுபோல ஆன்மிகத்தில் நீ முன்னேற வேண்டுமானால் உன் மனம் சுத்தமாக இருக்கவேண்டும்."

**நிலையான துறை:**

"உனக்கு நிலையானது ஆன்மிகத்துறை ஒன்றுதான். மற்ற எந்தத் துறையும் உனக்கு நிலையானது அல்ல."

**ஆவியும் – ஆன்மாவும்:**

"ஆவிக்கும் ஆன்மாவிற்கும் உருவம் கிடையாது. வயது கிடையாது. அழிவு கிடையாது."

**அமைதியும் நிம்மதியும்:**

"அமைதியும் நிம்மதியும் ஆன்மிகத்தில் மட்டுமே உண்டு என்பதை உலகம் புரிந்துகொள்ள வேண்டும்."

**ஆன்மிகத்தில் குறைந்த பேர் இருந்தாலும்:**

"குட்டையில் உள்ள தண்ணீரேயானாலும், குடிக்கப் பயன்படுத்த வேண்டும். மிதிக்கப் பயன்படுத்தக் கூடாது. அதுபோல ஆன்மிகத்தில் குறைந்த பேர் ஈடுபட்டாலும் அதனை நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆன்மிகத்திற்கு வந்துவிட்டுச் சண்டை சச்சரவுகளில் ஈடுபடக்கூடாது."

**உடலை ஆட்டுவிக்கும் ஆன்மா:**

"உடலுறுப்பு ஒவ்வொன்றும் அதனதன் வேலையைச் செய்கிறது. இதனைச் செய்து தான் ஆகவேண்டும் என்று உடலை ஆன்மா ஆட்டுவிக்கிறது. உடலுக்கு ஏற்ற ஆன்மாவும், ஆன்மாவிற்கு ஏற்ற உடலும் கட்டுப்பாட்டுடன் இருந்தால் தான் வைரம் பாய்ந்த மரம் போல இருக்கும்."

**ஆன்மா தான் சக்தி!**

"ஆன்மா தான் சக்தி! சக்தி தான் ஆன்மா! கோயில் சிலையை விட ஆன்மாவிற்குத் தான் சக்தி உண்டு."

**கவலையற்று இரு!**

"தன்னை ஆன்மிகத்தில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தொண்டாற்றி வருகிற ஒருவன், தன் எதிர்காலம், பிள்ளைகளின் எதிர்காலம் ஆகியவற்றைப் பற்றிக் கவலைப்படக் கூடாது."

**ஆன்மாவுக்கு அழகு:**

“உங்கள் மேனிக்கு அழகு தருவது ஆன்மா! அந்த ஆன்மாவுக்கு அழகுதருவது தொண்டு. அந்தத் தொண்டினைப் பக்குவத்தோடு செய்துவரவேண்டும்.”

**ஆன்மிகத்தில் முன்னேற முடியாது!**

“பணம்! பதவி! புகழ்! இவற்றை விரும்புகிறவன், தாய் தந்தையரை மதிக்காதவன், ஆன்மிகத்தில் முன்னேற முடியாது. பணம், பதவி, புகழ் என்பன உன்னை அழிவுப் பாதைக்குக் கொண்டு போகும்.”

**போலித்தாடி, உண்மைத்தாடி:**

“போலித்தாடிக்கும், உண்மைத்தாடிக்கும் வேற்றுமை உண்டு. தாடி வளர்ப்பவன் எல்லாம் ஆன்மிகவாதியாக முடியாது. எல்லோரிடமும் உண்மையான அன்பு இருந்தால்தான் ஆன்மிகவாதியாக முடியும். ஆன்மிகத்துறையில் வழிகாட்டியாகவும் விளங்க முடியும்.”

**ஆன்மிகக் கணக்கு:**

“உண்மையாக உழைத்தோம், உயர்ந்தோம் என்பது இல்லை. உண்மையாக உழைப்பவனெல்லாம் உயர்ந்துவிடுவதும் இல்லை. உயர்ந்தவனெல்லாம் உண்மையாக உழைத்தவன் என்பதுமில்லை. சாணியைத் தெளித்துவிட்டுச் சந்தனம் தெளித்தேன் என்று சொல்லும் உலகம் இது! எவன் சிறந்தவன் என்று வரிசைப்படுத்திக் காட்டுவது எதுவோ அதுதான் ஆன்மிகம்!”

**வயது பொருட்டல்ல!**

“ஆன்மிகத்துறைக்கு வந்துவிட்ட பிறகு வயது பற்றிய கவலை தேவையில்லை. அறுபது வயதிலும் சின்னபுத்தி உண்டு. பத்துவயதில் பெரிய புத்தியும் உண்டு.”

**மனிதனால் முடியாதது:**

“மனிதன் தன்னைச் சுற்றியுள்ள பறவைகளையும், மிருகங்களையும் கட்டுப்படுத்தலாம். ஆனால் தனக்குள்ளே இருக்கிற ஆன்மாவைக் கட்டுப்படுத்த முடியாது. மனவேகத்தால் அவனவன் மானம் தான் போகும்.”

**ஆன்மா – உயிர்:**

“அசைகின்ற ஆன்மா தான் உயிர்.”



**மனப்பக்குவம் அடையவேண்டும்:**

“நீ தான் பக்குவம் அடையவேண்டும். நல்லது கெட்டது உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். எல்லாமே அம்மா தான். அவள் தான் நல்லதும் செய்ய வைக்கிறாள். கெட்டதும் செய்ய வைக்கிறாள் என்று பேசுகிறீர்கள். நான் அரிசியைக் கொடுத்துவிட்டேன். பானையையும் கொடுத்துவிட்டேன். தீயையும் கொடுத்துவிட்டேன். நீதான் பக்குவமாகச் சோறாக்கி உண்ண வேண்டும்.

எதை எந்தப்பக்குவத்தில் சேர்த்தால் சோறு பதமாக வருமோ அதன்படிச் சமைத்துக் கொள்ள வேண்டும். அதைவிட்டுவிட்டு தீயைக் கூடுதலாகவோ, தண்ணீர் குறைவாகவோ, அரிசி கூடுதலாகவோ சேர்த்தால் சோறு எப்படிப் பதமாக இருக்கும்?

உன் ஆன்மா சுத்தமாக இருக்கவேண்டுமானால் உன் மனம் பக்குவப்பட வேண்டும்.”

**ஆன்மாவும் – ஆதிபராசக்தியும்:**

“உனக்குள் உள்ள அந்த ஆன்மா தான் ஆதிபராசக்தி! ஓம் சக்தி! பராசக்தி! என்று நீ சொல்லும் போது ஒருவித சக்தி பிறக்கும்”.

**படைப்பும் காரணமும்:**

“ஒவ்வொரு உயிரின் படைப்புக்கும் ஒரு காரணம் உண்டு.”

**உயர்ந்த நோக்கம்: குறுகிய நோக்கம்:**

“மனிதன் உயர்ந்த நோக்கத்துடன் வாழவேண்டும். குறுகிய நோக்கத்துடன் வாழ்வது கூடாது. மேலே உயர்ந்து பார்க்கும் போது, ஆகாயத்தில் உள்ள சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் எல்லாம் தெரிகின்றன. கீழே பார்க்கும் போது செடி, கொடி, தாவரங்கள் தான் தெரிகின்றன.

ஆன்மிகத்துறையில் இருக்கும் உங்கள் நோக்கம் உயர்ந்த நோக்கமாகவும், பரந்த நோக்கமாகவும் இருக்கவேண்டும்.

தன் வீடு, தன் மனைவி, தன் குடும்பம், தன் குழந்தைகள், தன் சுற்றம் என்ற பந்த பாசங்களில் சிக்கிக் கொண்டு குறுகிய வட்டத்திற்குள்ளேயே இருந்தால் ஆன்மிகத்தில் முன்னேற முடியாது.”

**உலகியல் வாழ்க்கை: ஆன்மிக வாழ்க்கை:**

“உலகப் பற்றுகளோடு வாழும் உலகியல் வாழ்க்கைக்கும் ஆன்மிக வாழ்க்கைக்கும் வேறுபாடு உண்டு. உலகியல்

வாழ்க்கையில் கிடைக்கிற அடி தாங்க முடியாததாக இருக்கும். ஆன்மிகத்தைப் பற்றிக் கொண்டு வாழ்கிறபோது உனக்கு அடி விழுந்தாலும் வலி இருக்காது. உலகியலுக்காக நீ ஓடி அலைகிறபோது உன் மூச்சு இறைக்கும். ஆன்மிக வாழ்வில் மூச்சு இறைக்காது.''

**சிறைப்பட்ட ஆன்மா:**

''ஆன்மா உடம்பில் சிறைப்பட்டுக் கொண்டிருக்கும் வரை அடியும் தொல்லையும் இருக்கவே செய்யும். அவை குறைய வேண்டுமானால் தருமம் செய்யவேண்டும்.''

**ஆன்மிக வாழ்வின் ஆரம்பத்தில்...**

''புத்தம் புதிய ஓரிடத்தில் படுத்து உறங்க முயல்கிறபோது சிலருக்குத் தூக்கம் வருவதில்லை. பழகிவிட்ட பிறகு நன்றாகத் தூக்கம் வருகிறது. அதுபோல ஆன்மிகத்துறையிலும் முதன் முதலில் கஷ்டமாகத் தெரியும். நாட்பட நாட்பட எல்லாம் பழகிவிடும்.''

**பாதியில் முடியும் வாழ்க்கைப் பயணம்:**

''எதற்காகப் பிறந்தோம்? எதற்காக வளர்ந்தோம்? என்று புரிந்து கொள்ளாமலேயே வாழ்ந்து கொண்டு வருகிறீர்கள். வந்த காரியம் முடிவதற்கு முன்னால் பாதியிலேயே போகவேண்டியுள்ளது.''

**உன் ஆன்மா பேசும்:**

''எந்தக் கோயிலுக்குப் போனாலும் அங்குள்ள கல் பேசாது. ஆனால் உன் ஆன்மா பேசும்.''

**ஆன்மாவும் தருமமும் தான் காப்பாற்றும்:**

''ஒருபக்கம் அழிவு; ஒருபக்கம் வளர்ச்சி; ஒருபக்கம் மேடு; ஒருபக்கம் பள்ளம்! எவன் வந்தும் எதையும் சரிப்படுத்த முடியாது. சமப்படுத்த முடியாது. சட்டியில் இருந்தால் தான் அகப்பையில் வரும்.

ஆன்மாவும் தருமமும் தான் ஒருவனைக் காப்பாற்றும். சூரியனைப் பிடித்துவிடலாம். சந்திரனைப் பிடித்துவிடலாம். கடலைக் கடந்துவிடலாம் என்றெல்லாம் நினைக்கிறான். ஆன்மாவைப பிடிக்க வேண்டும். அன்பையும் பாசத்தையும் பிடிக்கவேண்டும். இவற்றைப் பிடிக்காமல் அவற்றைப் பிடித்துப் பயன் இல்லை.''

**ஆன்ம வளர்ச்சிக்கு இவையும் தேவை:**

''பாசம், பந்தம், உணவு, ஆசை, உணர்வு, அடி, உதை, இன்பம்,



துன்பம் ஆகியவையும் தேவைதான். இவையில்லாமல் ஆன்ம வளர்ச்சி பெற முடியாது.

தாய்ப்பாசமும், அன்பும் ஆன்மாவிற்கு இணையானவை. ஆன்மாவிற்கு இணையானது வேறெதுவும் கிடையாது.''

**விஞ்ஞானியும் ஆன்மிகவாதியும்:**

''விஞ்ஞானி உலகை அழிக்கிறான். ஆன்மிகவாதி உலகைக் காக்கிறான்.''

**சுத்தமான ஆன்மா:**

''குளத்தில் இருந்தாலும் தாமரை இலையில் தண்ணீர் ஒட்டுவதில்லை. அதுபோல உள்ளே ஆன்மா சுத்தமாக இருந்தால் கெட்ட எண்ணங்கள் தோன்றா. செய்வினை, ஊழ்வினை இவையெல்லாம் வந்து சேராது.

மரத்தை வெட்டினால் மீண்டும் தளிர்க்கும். ஆணிவேரை அழியாமல் பாதுகாக்கவேண்டும். உன் ஆன்மா என்ற ஆணிவேரைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

**எமனிடம் போய்ச்சேரவேண்டி உள்ளது:**

''விதையை ஊன்றுவானேன்? செடி, கொடி என வளர்வானேன்? காய் காய்ப்பானேன்? பழம் பழுப்பானேன்? பலன் தருவானேன்?

வீடு பாதி - காடு பாதி, இயற்கையின் மாற்றங்கள் - ஏற்றத்தாழ்வுகள், பணத்தால் உறவு, பணத்தால் பாசம், பணத்தால் வேஷம், பணத்தால் ஆட்டம் பாட்டம்!

கடைசியில் வண்டிச்சக்கரத்திலிருந்து காற்று வெளியேறுவது போல எமனிடம் போய்ச்சேர வேண்டியிருக்கிறது.''

**உன்னதமான வாழ்க்கை:**

''மெழுகு விளக்கு, எண்ணெய் விளக்குகள், எரிந்து பிறருக்கு வெளிச்சம் கொடுத்துவிட்டு இறுதியில் அழிந்துவிடுகின்றன. அதுபோல ஆன்மிகத்துறையிலும் பிறருக்குப் பயன்பட்டு அழிகிற வாழ்க்கையே உன்னதமான வாழ்க்கை!''

**அந்தப் பொருள்தான் ஆன்மா!**

''தாயே! நான் வாழ்ந்தது போதும்! என்னைச் சீக்கிரம் அழைத்துக் கொள்! என்று வேண்டுகிறார்கள். அழைத்துக்கொள்ள ஒரு பொருள் இருப்பதாக எண்ணுகிறார்கள். அந்தப் பொருள் தான் ஆன்மா! ஆணவத்தைச் சீக்கிரம் அழைத்துக் கொள்ளலாம். நல்ல ஆன்மாவைச் சீக்கிரம் அழைக்க முடியாது.''

**வளர்ச்சி பெற்ற ஆன்மாக்களின் எண்ணிக்கை:**

“ஆலயம் வளரவில்லை. ஆன்மா தான் வளர்கிறது. ஆணவத்தைக் குறைத்து ஆன்மாவை வளர்க்கவேண்டும்.

யானை போல உருவம் இருந்து பயனில்லை. யானையின் வலிமை போல ஆன்மாவை உருவாக்க வேண்டும். மக்கள் எண்ணிக்கை பெருகினால் மட்டும் போதாது. வளர்ச்சி பெற்ற ஆன்மாக்களின் எண்ணிக்கை பெருகவேண்டும்.”

**எதையும் தாங்கும் சக்தி:**

“ஆன்மிகத்தில் ஈடுபட்டுள்ள உங்களுக்குப் பொறுமையும் தைரியமும் இருக்கவேண்டும்.

பற்றாக்குறையினால் தான் ஆசைகள் ஏற்படுகின்றன. அதன் காரணமாகவே மக்களுக்கு வலிகள் ஏற்படுகின்றன. வயிற்றுவலி, தலைவலி, புகழ்வலி என்ற பல வலிகளுக்கு ஆசையே காரணம்!

ஆசைகள் குறையக்குறைய ஆன்மா அமைதி பெறும்! எதையும் தாங்கும் சக்தி பெறும். அப்போது கல் போல நிலைத்து நிற்க முடியும்.”

**ஆன்மாவைச் சுத்தமாக வைத்துக்கொள்!**

“அன்றும் சொன்னேன்; இன்றும் சொல்கிறேன்; நாளையும் சொல்வேன்! ஆன்மாவைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.”

**குப்பையும், கோபுரமும்:**

“குப்பையில் இருந்தவனெல்லாம் குபேரனாக மாறுவான். ஆனால் அந்த வாழ்வு நிலைக்காது. ஆன்மிகத்தில் உனக்குக் கிடைக்கிற புகழ் தான் நிலையானது.”

**ஆன்மா ஆட்டுவிக்கிறபடி...**

“அழிவது அழிந்து கொண்டு தான் இருக்கும். பொறாமைக்குணம் கொண்டவன் பொறாமைப்பட்டுக் கொண்டு தான் இருப்பான். சிறைக்குச் செல்ல வேண்டியவன் சென்று கொண்டு தான் இருப்பான். அவனவனை ஆன்மா எப்படி ஆட்டுவிக்கிறதோ அதுபோலத் தான் நடக்கும்.”

**ஆன்மா காட்டிக் கொடுத்துவிடும்:**

“கண்ணாடி முன் நின்றால் அது உன் முகத்தைக் காட்டிக் கொடுத்து விடும். அதுபோல ஆன்மா ஒருவன் நல்லவனா?



கொலைகாரனா? இவன் எந்த நோக்கம் கொண்டவன் என்பதைக் காட்டிக் கொடுத்துவிடும்.”

**ஆன்மாதான் சக்தி!**

“தாய் தந்தையர் மூலம் தான் உருவம் உண்டாகிறது. அந்த உடலுக்குச் சக்தி கொடுப்பது எதுவோ அதுவே ஆன்மா! அந்த ஆன்மாதான் சக்தி! ஆன்மா இல்லையென்றால் இங்கே எந்தப் பொறுப்பும் இல்லை. மனிதனின் ஆன்மாவை விட மிருகத்தின் ஆன்மா வைரம் பாய்ந்தது.

மனிதனின் ஆன்மா பக்குவம் அடையவேண்டும். அதற்கு ஒரு நாளைக்கு 10 நிமிடமாவது தியானம் இருக்கவேண்டும். எதிலும் மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.”

**ஆணவம் கூடாது:**

“ஆன்மா ஆன்மாவாக இருக்கவேண்டும். அதில் ஆணவம் இருக்கக் கூடாது. ஆணவம் சேர்ந்தால் அநாதையாக வேண்டியிருக்கும்.”

**ஆன்ம பரிபக்குவம் ஏற்படவேண்டும்:**

“பாலை நன்றாகக் காய்ச்சிப் பக்குவமான சூட்டில் அதனோடு புளிப்புப் பொருளைச் சேர்க்கும் போது அது தயிராக மாறுகிறது. அந்தத் தயிரிலிருந்து வெண்ணெய் கிடைக்கிறது. அது தண்ணீரிலும் மிதக்கிறது.

அதுபோல மனித உடலுக்கு ஆன்மா என்ற புளிப்புப் பொருள் சேர்ந்தால் தான் மனம் பக்குவம் அடையும்.

மோரான பிறகு அது பாலாக மாற முடியாது. அதுபோல மனிதனின் ஆன்மா பக்குவம் அடைந்துவிட்டால் அவன் கெட்ட வழிக்கு மாற முடியாது.

ஆன்மா பக்குவம் அடைய வேண்டுமானால் உலகத்து உயிர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். தருமம் செய்யவேண்டும். விரதங்களை மேற்கொள்ள வேண்டும்.”

**ஆன்ம வளர்ச்சிக்கு முதல்படி!**

“ஆன்மிகத் துறையில் வந்திருக்கிற உங்களுக்குப் படிப்படியான வளர்ச்சி வரவேண்டும். அதற்கு முதல்படி ஒருவன் தன் மனத்தில் தோன்றும் எண்ணங்களைத் தானே ஆராய்ந்து உணரவேண்டும்.”

**பற்று என ஒன்று ஏன்?**

"ஆன்மா வளரவும், அறிவு வளரவும் வேண்டியே பற்று என்ற ஒன்றும் வேண்டியிருக்கிறது."

**ஆன்மா பயிர் – ஆணவம் களை:**

"ஆன்மா என்ற பயிரில் ஆணவம் என்ற களை வளரக்கூடாது. அப்படி வளர்ந்தால் ஒரு நாள் அந்தக் களையை எடுத்தே ஆகவேண்டும்."

**ஆன்மிகம்: தொப்புள்கொடி !**

"தொப்புள்கொடி என்ற குழாய் மூலமே தாயின் கருவிலுள்ள குழந்தை வளருகிறது. அதுபோல ஆன்மிகம் என்ற குழாய் மூலமே மனித இனம் வளர்ச்சி அடைகிறது."

**ஆன்ம வளர்ச்சி:**

"செடி, கொடிகள் அடர்ந்து வளர்ந்தால் தான் காடு வளரும். காடு வளர்ந்தால்தான் உலகிற்கு மழை வரும். அதுபோல உங்களிடம் ஆன்மா வளர்ந்தால் தான் உலகில் ஆன்மிகமும் வளரும்."

**ஆன்மிகத்தின் சக்தி:**

"இரும்பை ஈர்க்கும் சக்தி காந்தத்திற்கு உண்டு. அதுபோல எதையும் இழுக்கும் சக்தி ஆன்மிகத்திற்கு உண்டு."

**உடலும் ஆன்மாவும்:**

"உடம்பு தான் கோயில். உன் உள்ளேயிருக்கும் ஆன்மாதான் சிலை !"

**உங்களைப் பதப்படுத்த...**

"வெள்ளிக்குத் தங்க முலாம் பூசினாலும், செம்புக்குத் தங்க முலாம் பூசினாலும் காலப்போக்கில் வெளுத்துவிடும். நெல்லில் பதர் உண்டு. அதுபோல ஆன்மிகத்திலும் பதர்கள் உண்டு. உங்களையெல்லாம் ஆன்மிகத்தில் பதப்படுத்திக் கொண்டு வருகின்றேன்."

**நாளும் சிந்தனை செய் !**

"எதற்காக வாழ்வு? எதற்காகப் பாசம்? எதற்காகச் சுகம்? எதற்காக



மதி? எதற்காகப் பதவி? எதற்காக நினைக்கும் தன்மை? எதற்காக ஏற்றுக்கொள்ளும் தன்மை? எதற்காகத் தாய் தந்தை? எதற்காகத் தருமம்? ஆன்மா என ஒன்று இருக்கிறதா? அது ஏன் இருக்கிறது? - என்றெல்லாம் சிந்தித்துச் சிந்தித்து உண்மையை உணரவேண்டும்."

**மெய் விளையாட்டும் பொய்விளையாட்டும்:**

"ஒரு புறம் இங்கே ஆன்மிகம் வளர்கிறது. இன்னொருபுறம் அழிவுகள் வளர்ந்து வருகின்றன. இங்கு நடப்பவை தான் மெய் விளையாட்டு. அங்கு நடப்பவையெல்லாம் பொய்விளையாட்டு.

வேள்வி, வழிபாடு, இருமுடி, தியானம், தொண்டு, விரதம், பூசை, அங்கவலம், பாதயாத்திரை, முதலிய தெய்வீகம், ஆன்மிகம் தொடர்பான செயல்பாடுகள் மெய்விளையாட்டு.

ஆன்மிகம் தொடர்பான மெய்விளையாட்டில் கலந்துகொண்டால் ஆன்ம முன்னேற்றம் பெறலாம். மற்ற பொய்விளையாட்டுகளில் கலந்து கொண்டால் அழிவு தான் மிஞ்சும்."

**சித்தன் யார்?**

"ஆன்மிகத்தில் முழுப்பைத்தியம் கொண்டவனே சித்தன் ஆகிறான். நீங்களெல்லாம் அரைகுறைப் பைத்தியங்கள். நீங்கள் அப்படியும் இருப்பதில்லை. இப்படியும் இருப்பதில்லை."

**பாவனையால் பயன் கிடைக்காது:**

"பசை இருந்தால் தான் ஒரு பொருள் இன்னொரு பொருளுடன் ஒட்டும். அதுபோல உங்கள் ஆன்ம உணர்வுக்கும் ஆன்மிகத் தொண்டிற்கும் தொடர்பு இருந்தால் தான் பயன் உண்டாகும். தொண்டு செய்வது போலவும். ஆன்மிகத்தில் நாட்டம் இருப்பது போலவும் என்னிடம் பாவனை செய்வதால் பலன் இல்லை."

**ஆன்மிகவாதிகளின் போலி வேடம்:**

"வெறும் பானையை அடுப்பில் வைத்துச் சூடேற்றினால் பானை தான் வெடிக்கும். தண்ணீர் வைத்துச் சூடேற்றினால் அது கொதித்து ஆவியாகும். எதிலும் ஒரு பக்குவம் வேண்டும். கொதிநீர் பொங்கி, ஆவியாகி வெளிப்படுவது போல பொய்வேடம் போடும் ஆன்மிக வாதிகளின் வேடமும் கலைந்து போகும்."

**அன்பும் பண்பும்:**

"மரம் செடி, கொடி என்னும் இயற்கை வளம் செழித்தால் தான் நாடு செழிப்படையும். அதுபோல மக்களிடையே அன்பும்,

பண்பும் செழித்தால் தான் ஒரு நாட்டின் ஆன்மிகமும் செழிப்படையும்.''

**மனிதனாலேயே மனித இனத்துக்கு அழிவு:**

''இன்று மனிதனாலேயே மனித இனம் அழிந்து வருகிறது. மனித இனத்தில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று எவரும் இல்லை. எல்லோர்க்கும் உள்ள ஆன்மா சரிசமமாகத் தான் இருக்கிறது.''

**ஆன்மாவின் சக்தி:**

''ஆன்மாவிற்கு மட்டும் தான் உன்னை அடக்கும் சக்தி உண்டு.''

**அரசியலில் ஆன்மிகம் தேவை:**

''அரசியலில் ஆணவம் இருக்கக் கூடாது. அங்கேயும் ஆன்மிகம் தேவை. என்னதான் மரத்தின் உச்சியில் இருந்தாலும் புயற்காற்று வீசும்போது வேரோடு அழிந்து போகும்.''

**மண்ணும் விண்ணும்:**

''மண்ணுக்குள் இருப்பதும் விண்ணுக்குள் இருப்பதும் உனக்குத் தெரியாது. நீ இறந்தபிறகு மண்ணுக்குள் போய் என்ன ஆகிறாய் என்பதும் உனக்குத் தெரியாது. பிறகு விண்ணுக்குப் போய் என்ன ஆகிறாய் என்பதும் உனக்குத் தெரியாது. உன் பிறப்பும் இறப்பும் எப்படி அமைகிறது என்பதும் உனக்குத் தெரியாது.''

**அம்மாவிடம் வந்தும்:**

''அம்மாவிடம் வந்தும் ஆன்மிகத்தில் ஈடுபட்டும் சிலருக்குக் கிடைக்க வேண்டிய நல்ல பலன்கள் கிடைப்பதில்லை. வெயிலுக்காகக் குடை பிடிக்கிறாய். வெயிலைத் தடுக்கிற பக்கத்தில் குடையில் சூடேறுகிறது. மறுபக்கத்தில் சூடேறுவதில்லை. ஆன்மிகத்துறைக்கு வந்தும் சிலர் பாவம் செய்கிறீர்கள். அவ்வாறு செய்யும் பாவம், பலனை அனுபவிக்க முடியாதபடித் தடை செய்கிறது. நல்ல உள்ளத்தோடு தொண்டு செய்! கள்ள உள்ளத்தோடு நடந்து கொள்ளாதே!''

**ஆன்மாவிற்கு அவசியம்:**

''விழா, அருள், தெய்வம், மனம் என்னும் இவைகளெல்லாம் எதற்காக? உங்கள் வளர்ச்சிக்காக! உடலுக்கு உணவு அவசியம்! ஆன்ம வளர்ச்சிக்கு ஆன்மிகம் அவசியம்!''



**ஏவல், பில்லி, சூன்யம்:**

''மனிதன் ஆன்மிகத்தை விட்டு நாயாகவும், பேயாகவும் மாறி அக்கிரமங்கள் செய்யும் போது வைப்பு, சூன்யம் என்பன எல்லாம் உண்டு.''

**இருப்பவன், இல்லாதவன்:**

''இருப்பவனும் ஆன்மிகத்தில் ஈடுபட வேண்டும். இல்லாதவனும் ஈடுபட வேண்டும். ஆன்மிகத்தில் தொண்டு தான் முக்கியம். இருப்பவன் இல்லாவனுக்குக் கொடுத்து உதவ வேண்டும். இல்லாதவன் தொண்டு செய்வதன் மூலம் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.''

**பந்தபாசம் ஆன்ம முன்னேற்றத்துக்குத் தடைகள்:**

''உன் உள்ளம் வெள்ளையாக இருந்தால் நீ செய்யும் காரியமும் நன்றாக அமையும். உள்ளத்தில் கருமை இருந்தால் செய்யும் காரியத்தில் செழுமை இருக்காது.

நெஞ்சில் கோழை இருந்தால் மூச்சுவிட முடியாது. அதுபோல உள்ளத்தில் பந்தபாசம் சேரும்போது ஆன்மிகத்தில் முன்னேற்றம் இருக்காது.''

**தரும சிந்தனை:**

''ஆன்மிகத்தில் தரும சிந்தனை இருக்கவேண்டும். பிறர் நோயைத் தன்நோய் போல நினைத்து வாழவேண்டும். அந்தக்கால மக்களிடம் இத்தகைய சிந்தனை இருந்தது.''

**அந்த ஒரு ஆன்மா தான்:**

''அம்மா! அன்னை என்பதெல்லாம் என்ன? அந்த ஒரு ஆன்மா தான் (பரமாத்மா!)

**தடுமாறும் மனிதன்:**

''இன்றைய மனிதனுக்குப் பாதை, செவி, உள்ளம், அழகு, முகம் கை எனும் இவை எல்லாமே தடுமாறுகின்றன. எனவே ஒவ்வொருவனும் தானாக ஆன்மிகத்தை நாடி வந்து தான் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும்.''

**அழுக்குகள் நீங்கவே ஆன்மிகம்:**

''அழுக்குகள் சேரச் சேர அழுகல் நிலை தான் ஏற்படும். ஆன்மிகத்தில் ஈடுபட்டு அழுக்கைப் போக்கிக் கொள்ள வேண்டும். ஆன்மிகம் தான் உள்ளத்து அழுக்குகளை அகற்ற வல்லது.''

**சித்தன் ஆகலாம்:**

“ஆன்மிகத்தால் மட்டுமே ஆனந்தம் கிடைக்கும். ஒவ்வொருவனும் சிந்தனையைத் திருத்தினால் சித்தன் ஆகலாம். பணப்பைத்தியமாகவும், காமப் பைத்தியமாகவும் இருக்கக் கூடாது. ஆன்மிகப் பைத்தியமாக இருக்க வேண்டும்.”

**அநாகரிகம்:**

“அநாகரிகம் அழிவிற்கு வழி வகுக்கும். அநாகரிகத்தை ஆன்மிகம் வெல்லும்.”

**உயிர் இருப்பது எங்கே:**

“சக்திக்கும் சக்தி தேவை. அந்தச் சக்தி எந்த ரூபம் என்று உங்கள் யாருக்கும் தெரியாது. சாகும்போது கைகால் இழுக்கிறது. எல்லா உறுப்புகளும் அசைகின்றன. ஒரே ஒரு உறுப்பு மட்டும் அசையாது. அந்த இடத்தில் தான் உயிர் இருக்கிறது.”

**ஆன்ம சக்தி:**

“ஆன்மிகத்தின் சக்தியைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆன்மா தான் சக்தியாகிறது. ஒரு பொருளுக்கு உருவத்தைக் கொடுக்கும் தன்மையும் அப்பொருளை அழிக்கும் தன்மையும் அந்தச் சக்திக்கு உண்டு!”

**ஆன்மிகப் பணிகளில் ஒற்றுமை தேவை:**

“விளக்கு இருக்கிறது; எண்ணெய் இருக்கிறது; திரி இருக்கிறது; தீப்பெட்டி இருக்கிறது. எல்லாம் தனித்தனியாக ஒவ்வோரிடத்தில் இருந்தால் வெளிச்சம் வந்துவிடுமா? எல்லாவற்றையும் ஓரிடத்தில் சேர்த்து வைத்துக் கொண்டு விளைக்கை எரித்தால் தான் வெளிச்சம் வரும்.

அதுபோல நீங்கள் தனித்தனியாக இருந்து ஆன்மிகப் பணிகள் செய்வதை விட இணைந்து செய்தால் தான் ஒற்றுமை உணர்ச்சி ஏற்படும்.”

**ஆன்ம முன்னேற்றத்திற்குப் பொறுமை தேவை:**

“அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்” என்பது பழமொழி. அப்படி அடித்தால் அம்மிக்கல் தான் உடையும்.

எத்தனை சோதனைகள் உனக்கு வந்தாலும், பொறுமையைக் கடைப்பிடித்து அடிமேல் அடிவைத்து ஆன்மிகத்தில் ஈடுபட்டு என்னை நெருங்கிவர உன்னால் முடியும்.



எவ்வளவுக்கெவ்வளவு பொறுமையைக் கடைப்பிடிக்கின்றாயோ அந்த அளவிற்கு உனக்கு உள்ளத்தில் தெளிவு ஏற்படும். அந்நிலையில் அம்மாவை நீ புரிந்து கொள்ள முடியும். அப்போது தான் அம்மாவின் பாசம் உனக்குப் புரியத் தொடங்கும்.

ஒரு குழந்தை கவனக்குறைவாகவோ, வேகமாகவோ நடந்து வந்தால் தடுக்கி விழும். அடிமேல் அடிவைத்துப் பொறுமையுடன் தாயை நோக்கி நடந்து வந்தால் குழந்தை விழாது. தாயும் நெகிழ்ந்து அருகே இழுத்து வைத்து அணைத்துக் கொள்வாள்.

அந்தக் குழந்தையின் பொறுமை உனக்கு வந்துவிட்டால் அதன் பின் மந்திரம், தந்திரம், அந்த மகான், இந்த மகான் என்ற மகான்களின் வேஷங்கள் எல்லாம் தெரிந்து மறைந்துவிடும். அதன்பின் உனக்கே ஆன்மிக போதை ஏற்படும். அந்தப் போதை ஏற்பட்டுவிட்டால் நீ ஆனந்தமாக இருக்கலாம். அந்த ஆனந்தநிலை உனக்கு வர வேண்டுமானால் நீ பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.”

**நிலையான முன்னேற்றம்:**

“வாழ்க்கையில் நிலையான முன்னேற்றத்திற்கு வழி ஆன்மிகத்தில் தான் உண்டு. வறட்சியையும், தாங்கிக் கொண்டு வளர்கிற பயிர்கள் உண்டு. அதுபோல வறுமையும், ஏழ்மையும் வாட்டினாலும் தாங்கிக் கொண்டு ஆன்ம முன்னேற்றம் பெறவேண்டும்.”

**நம்மால் பிறருக்கு என்ன நன்மை:**

“உள்ளம் வளர வேண்டும். பலருக்கும் அது பயன்பட வேண்டும். மற்றவர்களால் நமக்கு என்ன நன்மை என்று பாராமல் நம்மால் பிறருக்கு என்ன நன்மை என்று பார்த்தே செயல்பட வேண்டும்.”

**ஆன்மாவிற்காகவே உடம்வு:**

“ஆன்மாவிற்காக உடம்பே தவிர, உடம்புக்காக ஆன்மா அல்ல! தருமம், தொண்டு, பக்தியை வளர்த்துக் கொண்டு ஆன்ம வளர்ச்சி பெற வேண்டும். மனம் போன போக்கில் வாழக்கூடாது. பணமே குறியாகவும் வாழக்கூடாது.”

**உனக்கு நீயே பகை:**

“உன் எண்ணமே உனக்கு எமனாக மாறும். உன் செய்கையே நாளை செய்தியாக மாறும். உன் உருவமே உன்னை உருள

வைக்கும். உனது காதே உனக்குக் கேடு விளைவிக்கும். உனது நாக்கே உனக்குச் சண்டையை உண்டாக்கிக் கொடுக்கும்.

எனவே தான் கட்டுப்பாடு தேவை... கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ள ஆன்மிகம் தேவை.

கட்டுப்பாடு குலைந்து போனதால் தான் இன்று எங்கும் கொலை! கொள்ளை! கற்பழிப்பு! என்பன பெருகிவருகின்றன. இவற்றையெல்லாம் ஆன்மிகம் ஒன்றால் தான் கட்டுப்படுத்த முடியும். இயற்கைச் சக்திகள் அனைத்தையும் ஆன்மிகம் ஒன்றால் தான் கட்டுப்படுத்த முடியும்.''

**ஆன்மா ஒன்று தான்!**

"தெய்வம் மனிதன் ஆகலாம்; மனிதன் தெய்வம் ஆகலாம். ஆன்மா ஒன்று தான்; ஆக்கப்படும் உருவங்கள் தான் வேறுவேறு!''

**ஆன்மிகமே புகலிடம்:**

"நீறுபூத்த நெருப்பின் மேல் கை வைக்கும்போது சுடாது. ஆனால் அடியில் உள்ள நெருப்பு சுடும். எரிந்து கொண்டிருக்கும் நெருப்பில் கை வைத்தால் உடனே சுடும். இன்று உலகமே நெருப்பாக மாறிவருகிறது. எங்கும் எதிலும் சுடுகிறது. ஆன்மிகம் ஒன்று தான் சிறந்த புகலிடம். ஆன்மிகத்தில் ஈடுபடுவதால் உன் ஊழ்வினைகள் குறைந்து கொண்டு வரும்.''

**அமைதிக்கு வழி:**

"சுற்றிலும் இனவெறி, மதவெறி, பணவெறி எனப் பல வெறிகள் உண்டாகி வருகின்றன. ஆன்மிகத்தைப் பற்றிக்கொண்டு கண்ணும் கருத்துமாக எச்சரிக்கையுடன் வாழவேண்டும்.''

**கவலையும் – கண்ணீரும்:**

"வெளியில் வரும் கண்ணீரை நீ துடைத்துக் கொள்ளலாம். ஆனால் உள்ளத்தில் வரும் கண்ணீரையும் கவலையையும் நான் தான் துடைக்க வேண்டும். ஆன்மிகத்தில் ஈடுபட்டிருப்பதால் தான் பலரால் தப்பிக்க முடிந்திருக்கின்றது.''

**ஆன்மிகத்திற்கு வழி:**

"அன்பு, தன்னடக்கம், நிதானம் - இவைகள் தான் ஆன்மிகத்திற்கு வழிவகுக்கும்.

**ஆன்மிகத்தில் அவசரம் கூடாது:**

"ஒரு படி அரிசியை மொத்தமாக இரண்டு கைகளால் அள்ள



முடியாது. ஒரே நேரத்தில் பத்துப்படிகளைத் தாண்ட முடியாது. ஆன்மிகத்திலும் ஒரேயடியாக முன்னேறிவிட முடியாது. படிப்படியாகத் தான் முன்னேறிவர முடியும்.''

ஆன்மிகத்தில் ஈடுபாடு கொள்ளாவிட்டால், உன்னிடம் உள்ள சக்தி உனக்கே சதிசெய்ய ஆரம்பித்துவிடும்.''

**உன்னிடம் உள்ள ஆன்மசக்தி:**

"உன் ஆன்மா அடக்கமாக இருந்தால் பலன் உண்டு. அது உன்னைவிட்டு அகன்ற பிறகு உன்னால் ஒன்றும் செய்ய முடியாது. பிறரால் எந்த உதவியும் கிடைக்காது. அவனவன் ஆன்மாவால் தான் அவனவனுக்குப் பயன் உண்டு. வெளி உதவிகள் கிடைப்பதெல்லாம் உன் ஆன்மாவைப் பொறுத்தது.

உன் ஆன்மசக்தியைப் பயன்படுத்தினாலே எல்லாம் பெறமுடியும்.''

**உன் ஆன்மா தான் கடவுள்:**

"உன் ஆன்மாவை அறிந்து கொண்டால் நீயும் கடவுள் ஆகலாம். உன் ஆன்மா தான் கடவுள். அந்த ஆன்மாவை அறியாத வனெல்லாம் தன்னைக் கடவுள் என்று கூறிக்கொள்கிறான்.''

**உங்கள் ஆன்மவளர்ச்சியைப் பொறுத்து:**

"ஒரு முட்டையில் வளர்கிற புழு எந்த இனத்தைச் சேர்ந்தது என்று முட்டையைப் பார்த்த அளவில் தெரிவதில்லை. முட்டை உடைந்து புழு வெளிப்பட்டு, வளர்ச்சி பெற்ற பிறகே அது வண்டா, குளவியா, பட்டுப்பூச்சியா, ஈயா, எறும்பா என்று தெரிந்து கொள்ள முடிகிறது.

உங்கள் உள்ளமும் முட்டையில் உள்ள புழுவைப் போன்றது. உங்கள் ஆன்ம வளர்ச்சியைக் கொண்டு தான் நீங்கள் இன்னார், இப்படிப்பட்டவர் என்று கூறமுடியும்.''

**ஆன்மாவை அடக்கி வை!**

"பால் குடித்த பிறகு தான் பசியுள்ள குழந்தையின் அழுகை அடங்கும். உன் ஆன்மாவையும் அடக்கி வைத்தால் தான் உள்ளத்திற்கு அமைதி ஏற்படும். அப்போது உனக்குத் தேவையானதெல்லாம் கிடைக்கும். உன் தேவைகளையெல்லாம் நிறைவேற்றித் தரும் சக்தி உன் ஆன்மாவிலேயே அடங்கியுள்ளது.''

**உலகத்திற்கு ஆன்மா:**

"இயற்கை வளமாக இருந்தால் தான் உங்கள் சட்டியிலும் வளம் இருக்கும். பெட்டியிலும் வளம் இருக்கும். உலகத்திற்கு இயற்கை தான் ஆன்மா!"

**ஆன்மிகத்தில் உறுதியும் நம்பிக்கையும்:**

"ஆற்றோரத்தில் வளர்ந்த ஆலமரம், ஆணிவேர் விட்டு உறுதியாக வளர்ந்திருக்குமேயானால் எவ்வளவு பெரிய வெள்ளம் வந்தாலும் உறுதியோடு நிலைத்து நிற்கும். அதுபோல ஆன்மிகத்தில் ஆழ்ந்த நம்பிக்கையும், உறுதியும் உள்ளவர்கள் நிலைத்து நிற்க முடியும். எந்தத் தீமையும் அவர்களை அசைக்க முடியாது."

**எங்கேயும் அலையாதே:**

"களிமண்ணை எடுத்து ஓர் உருவமாக்கலாம். பானையாகவும் செய்யலாம். வேறொரு பாத்திரமாவும் ஆக்கலாம். ஒரு கல்லையும் ஓர் உருவமாக்கலாம். சிலையாக்கலாம். தெய்வமாகவும் ஆக்கலாம். ஆனாலும் அந்தச் சிலைக்கு ஆன்மா கிடையாது.

விதைபோட்டால்தான் மரம் வளரும். கரு என்ற ஒன்று இருந்தால்தான் உரு என்ற வடிவம் வளரும். அனைத்துக்கும் மூலக்கருவாக இருப்பது எதுவோ அதுவே தெய்வம்.

அதுதான் தெய்வம், இதுதான் தெய்வம் என்று அங்கும் இங்கும் அலையாதே! உன் ஆன்மாதான் தெய்வம்!"

**ஆன்மாவிற்கு ஓய்வும் அமைதியும்:**

"கடலில் எழும்பும் அலைகள் ஓய்வதில்லை. உள்ளத்தில் எழும்பும் ஆசை அலைகளும் ஓய்வதில்லை. நடுக்கடலில் கடல் அலைகள் ஓய்ந்திருக்கும். அதுபோலவே மனித மனத்தில் உள்ள ஆசாபாசங்கள் என்பவற்றை அடக்கினால் மனம் அமைதியடையும். அப்போது ஆன்மாவிற்கு ஓய்வு உண்டு.

உங்கள் ஐம்புலன்களும் ஒன்றி உள்ளம் குளிரும் போது ஆன்மாவும் குளிர்ந்து அமைதி அடைகிறது."

**ஆசைகள் இருக்கிற வரை...**

"எரிகிற கொள்ளிக்கட்டையைத் தண்ணீரால் அணைத்த பிறகும் சற்றுநேரத்திற்குச் சூடு இருந்தபடியே இருக்கும். நீங்கள் என்னதான் ஆன்மிகத்தில் ஈடுபட்டிருந்தாலும் உள்ளத்தில் ஆசைகள் இருக்கிற வரை துன்பமும் தொடர்ந்து இருக்கும்."



**உங்கள் ஆன்ம உணர்வு:**

"ஒரு புத்தம் புதுக்கருவியை பேட்டரியால் இயக்குகிறபோது முதலில் நன்றாக வேலை செய்யும் அந்த பேட்டரி தேயத்தேய அந்தக் கருவியும் முன்போல இயங்க மறுக்கும்.

உங்கள் உள்ளே இருக்கிற இதயம் என்ற பேட்டரியைத் தேயாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு பார்த்துக் கொண்டால் தான் உங்கள் ஆன்மாவும் சுத்தமாக இருக்கும்.

உங்கள் மனத்தில் உள்ள சுத்தத்தைப் பொறுத்தே உங்கள் ஆன்மா சுத்தமடையும்."

**எல்லோருமே ஆன்மிகவாதியாக மாறவேண்டும்:**

"ஊருக்கு ஒரு ஆன்மிகவாதியும், வீட்டிற்கு ஒரு ஆன்மிகவாதியும் உருவானால் மட்டும் போதாது. எல்லோருமே ஆன்மிகவாதியாக மாறினால் தான் நாட்டில் அமைதி கிடைக்கும். இரண்டு மனங்களும் ஒன்றுபட்டால் தான் அமைதி கிடைக்கும்."

**ஆன்மிகத்தில் அவசரம் கூடாது:**

"ஒரு செடிக்குத் தண்ணீர் ஊற்றி, பூ பூத்துக் காய் காய்த்து, பழம், பழுக்கும் வரை காத்திருக்கிறீர்கள். அதுபோலவே ஆன்மிக உலகிலும் காத்திருக்கப் பழக வேண்டும். ஆன்மிகத்தில் அவசரம் கூடாது."

**எண்ணங்களும்: பிரதிபலிப்பும்**

"காற்றலைகள் உயர்வு தாழ்விற்கு ஏற்றபடி எதிரொலிக்கும்; அவை வெற்றிடத்தில் வேலை செய்யாது.

மலையைப் பார்த்து ஓ! என்று சப்தம் எழுப்பினால் அந்தச் சப்தமே எதிரொலிக்கும்.

ஒருவனுடைய புகைப்படம் அவனை அப்படியே பிரதிபலிக்கிறது. அதுபோலவே உங்கள் ஆன்மாவில் பதியும் எண்ணங்களே உங்களிடம் பிரதிபலிக்கின்றன.

ஒவ்வொரு ஆன்மாவிற்கும் ஒவ்வொரு நிலையுண்டு, பணத்தாலும் சொத்துக்களாலும் உங்கள் ஆன்மா பக்குவப்பட்டு விடாது. ஆன்மிகம் ஒன்றால் தான் ஆன்மாவைப் பக்குவப்படுத்த முடியும்.

ஆன்மாவினால் தான் இயற்கையை வெல்ல முடியும். அனைத்திற்கும் அழிவுண்டு. ஆன்மாவிற்கு அழிவில்லை.''

**பணத்திற்கும், ஞானத்துக்கும் தூரம் அதிகம்:**

“பணத்தால் பிறரை வேலை வாங்கலாம். அந்தப் பணத்தைக் கொண்டு அழிவையும் தேடிக்கொள்ளலாம். பணத்தால் உண்மை அறிவை வாங்க முடியாது.''

**ஆன்மிகமும் தருமமும் தான் தீர்வு:**

“ஒருபக்கம் மனிதன்; ஒருபக்கம் கொலை; ஒருபக்கம் பசி; ஒருபக்கம் செழுமை; ஒரு பக்கம் காற்று; ஒருபக்கம் அழிவு; ஒருபக்கம் வெடி; ஒருபக்கம் கூட்டம்; ஒருபக்கம் குழப்பம்; ஒருபக்கம் ஆன்மா; ஒருபக்கம் அமைதி!

இவையெல்லாம் ஏன்? என்ற வினாவைக் கேட்டுக்கொள்ள வேண்டும். இவற்றுக்குத் தீர்வு என்ன? என்று சிந்திக்கவேண்டும்.

ஆன்மிகமும், வழிபாடும், தருமங்களும் தேவை என்பது தான் விடை!

ஒருவன் மற்றொருவனுக்கு ஒரு பொருள் கொடுத்தால் தான் அன்பும் கிடைக்கும். அந்த அன்பு பெருகினால் தான் அமைதி நிலவும். ஆன்மிகத்தில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வரவேண்டும்.''

**ஆன்மிகம் எதற்கு?**

“பிச்சை எடுப்பவன் ஒருபக்கம்; பிக்பாக்கெட் அடிப்பவன் ஒருபக்கம்; காவல்துறை ஒருபக்கம்; கொலை, கொள்ளை ஒருபக்கம். இவை அனைத்தும் பெருகிக் கொண்டே போனால் என்ன ஆகும்? அவ்வாறு ஆகாமல் தடுத்து நிறுத்தவே ஆன்மிகம்!''

**ஆன்மிகம் தான் பாதுகாப்பு:**

“எந்த அரசும் எல்லோருக்கும் சேர்த்து எந்த நன்மையையும், பாதுகாப்பையும் அளித்துவிட முடியாது. உனக்கு நீதான் பாதுகாப்பு, தீய சக்திகள் பெருகிவிட்டன. தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் காலமும் நெருங்கிவிட்டது.

பத்துப்பேர் நல்லவனாக இருந்தால் நூறுபேர் கெட்டவனாக இருக்கிறார்கள். அந்த நூறுபேர் ஐந்நூறு பேரைக் கெட்டவர்களாக மாற்றுகிறார்கள். அந்த நூறுபேரை மாற்ற ஆன்மிகம் தேவைப்படுகிறது.



ஒரு கதிர் மட்டும் மூட்டையாவதில்லை. பல கதிர்கள் சேர்ந்தால் தான் மூட்டையாக முடியும். அதுபோல எல்லோரும் சேர்ந்து ஒற்றுமையாக ஆன்மிகப் பணிகளைச் செய்ய வேண்டும்.''

**துன்ப அனுபவங்களால் பக்குவம் ஏற்படுகிறது:**

“விளையாட்டுக் குழந்தைக்குச் சோறூட்ட முயன்றால் தொடக்கத்தில் உண்ண மறுக்கிறது. பாட்டுப்பாடி, சிரிக்க வைத்து விளையாட விட்டு அதற்கும் ஒரு சோர்வு ஏற்படுகிற நேரத்தில் ஊட்டினால் உணவை ஏற்றுக்கொள்கிறது. அதுபோல இன்பம், சந்தோஷம் என்றெல்லாம் வருகிறபொழுது சில உண்மைகள் புரிவதில்லை. துன்பம் கஷ்டம் என்ற அனுபவங்கள் கிடைக்கிற பொழுது தான் சில உண்மைகளை உணர்கிற பக்குவமே வருகிறது. துன்பம் ஏற்பட ஏற்படத்தான் ஆன்மா பக்குவப்படுகிறது. துன்பமும் ஓர் அனுபவமே. அந்த அனுபவத்தையும் ஒவ்வொருவனும் பெறவேண்டும்.''

**ஆவிகளும்: பூதகணங்களும்:**

“உலகத்தில் பூதகணங்கள், ஆவிகள் எல்லாம் உண்டு.''

**ஆன்மிகத்தில் ஆழமான ஈடுபாடு:**

“ஒரு செடி வளர முதலில் விதை வேண்டும். அந்த விதையை ஊன்ற மனம் வேண்டும். அந்த விதையை ஆழமாக ஊன்ற வேண்டும். அதனை ஊன்றுவதற்கு ஏற்ற பூமி வேண்டும். அது நன்கு வளர்வதற்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும். அதுபோல, ஆன்மிகத்திலும் நீங்கள் ஆழமான ஈடுபாடு வைத்துக் கொள்ள வேண்டும். எந்த அளவிற்கு ஆழமான ஈடுபாடு இருக்கிறதோ அந்த அளவிற்குத் தக்கபடி பயன் கிடைக்கும்.''

**ஆன்மிக போதை:**

“ஒரு குடிகாரன் போதையில் இருக்கும் போது அடித்தால் அவனுக்கு எந்த வலியும் தெரிவதில்லை. போதை தெளிந்தவுடன் வலி தெரிகிறது. அந்த வலியும் அவனது உடலுக்கே தவிர ஆன்மாவுக்கு அல்ல. ஆன்மிக போதை ஏற்பட்டு விட்டால் அது என்றும் தெளியாது. அந்த போதை தான் மேலானது உயர்வானது.''

**நாளைய உலகம்:**

“நாளைய உலகம் ஆன்மிக உலகம் என்று ஆரம்பத்திலிருந்தே

சொல்லி வருகிறேன். அதற்கு ஏற்ற சூழ்நிலைகளையும் வளர்ச்சிப் பணிகளையும் நீங்கள் திட்டமிட்டுச் செய்ய வேண்டும்.''

### சுயநலத்திற்காகக் கூடாது:

''உங்கள் சுயநலத்திற்காக ஆன்மிகத்தைப் போர்வையாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. உண்மை உணர்வுடன் ஆன்மிகத்தில் ஈடுபட வேண்டும். அப்போது தான் வளர்ச்சி பெற முடியும்.''

### ஆன்மாவுக்குப் பால் வேற்றுமை இல்லை:

''ஆன்மா ஆண் உருவத்திலேயும் உண்டு; பெண் உருவத்திலேயும் உண்டு. ஆன்மாவில் ஆண், பெண் வேறுபாடு இல்லை. அந்த வேறுபாடு உடம்பால் அமையும் வேறுபாடே!''

### அரசியலும் ஆன்மிகமும்:

''வெட்டு, குத்து, வேண்டுமென்றால் அரசியலுக்குப் போ! மனநிம்மதி வேண்டும், சுபிட்சம் வேண்டும், மழை வேண்டும் என்றால் ஆன்மிகத்திற்கு வா!''

### கண் திருஷ்டிக்குள்ள சக்தி:

''ஒரு மனிதனின் கண் ஒளிக்கு ஒரு வீட்டை எரிக்கும் சக்தி உண்டு. மற்றவன் வாழ்க்கையையும் எரிக்கும் சக்தி உண்டு.''

### படித்தவனும் – பாமரனும்:

''அடிமட்டத்தில் இருப்பவனுக்கும் ஆன்மிகம் உண்டு. அதிகம் படித்தவன் விளக்கொளியில் மயங்கி அழியும் விட்டில் பூச்சி போல அழிந்துபோவான்.''

### வேதனைகள் ஏன்?

''எத்தனை உருவங்களில் இருந்தாலும் உணவு என்பது ஒன்றுதான். மனிதன் எத்தனை உருவங்களில் இருந்தாலும் உள்ளம் என்பது ஒன்று தான்.

உண்ட பிறகு உடலில் தேங்கியுள்ள கழிவுகள் வெளியேறி ஆகவேண்டும். அவ்வாறே உள்ளத்தில் படிந்துள்ள கழிவுகளும் வெளியேறி ஆகவேண்டும்.

உள்ளத்தில் படிந்த கழிவுகளே உங்களுக்கு வேதனைகளாக வெளியேற்றப் படுகின்றன.''



### நான் தேடி வருவதும்: நீங்கள் தேடி வருவதும்:

''குழந்தைக்குப் பசி எடுக்கிற போது தாயே தேடி வந்து உணவை ஊட்டுகிறாள். வளர்ந்த பிறகு குழந்தை தான் உணவுக்காகத் தாயிடம் ஓடி வரும். அதுபோல நீங்கள் என்னை நெருங்காத போது நான் உங்களைத் தேடி வருவேன். நீங்கள் நெருங்கும் போது நான் உங்களை நாடி வரமாட்டேன்.''

### மாயையை வெல்ல:

''தொலைவில் உள்ள கானல் நீரைக்கண்டு உண்மையான நீர் என்று ஓடி ஏமாறுகிறாய். சூரிய ஒளியில் பிரகாசிக்கும் ஒரு கண்ணாடிக் கல்லைப் பார்த்து வைரம் என்று நம்பி ஏமாறுகிறாய்.

மாயை காரணமாக என்னை விட்டுவிட்டு வேறிடங்களுக்குச் சென்று ஏமாறுகிறாய்.

வெறும் தோற்றத்தைக் கண்டு நம்பி ஏமாறாமல் என்னையே பற்றிக் கொண்டிருப்பவன் மாயையை வெல்வான். பொய்த் தோற்றம் கண்டு ஏமாறமாட்டான். உண்மையான வைரத்தை அடைவான்.''

### பழமும் – பள்ளமும்:

''மரத்தில் பழம் பழுத்துத் தொங்குகிறது. பழுத்த பழத்தைக் கல்லால் அடிக்கிறார்கள். பழம் அடிபட்டும் கீழே விழவில்லை. என்றாலும் பழத்திற்குக் காயம் ஏற்படுகிறது. பள்ளம் விழுகிறது. அது உனக்கும் பயன்படுவதில்லை. சிலநாள் கழித்துப் பழமும் கெட்டுப் போய்க் கொட்டைக்கும் ஆபத்து ஏற்படுகிறது.

அதுபோல ஆன்மிகத்தில் மனிதன் தன் உள்ளத்தில் மன அழுக்குகளால் பள்ளம் ஏற்படாதபடிப் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் அவனுக்கும் பயன்; மற்றவர்க்கும் பயன்.''

### ஆன்மிகம் என்ற மலைமேல் ஏறி வரும்போது...

''ஆன்மிகம் என்கிற மலைமேல் ஏறி வருகிறபோது பந்தம், பாசம் என்கிற முட்கள் படர்ந்திருக்கும். அவை குத்தும். எனவே, பந்த பாசங்களை அப்புறப்படுத்திவிட்டு ''அம்மா'' என்கிற கயிற்றைப் பிடித்துக் கொண்டு ஏறிவரவேண்டும். ஐயோ கால் சுளுக்குமே என்ற சந்தேகம் வரக்கூடாது. அம்மாவின் அருள் கிடைக்கும் என்ற ஒரே சிந்தனையோடு மேலே ஏறிவர வேண்டும்.''

### அலைவரிசைகளை அடிக்கடி மாற்றக்கூடாது:

''வானொலிப் பெட்டியில் ஒரு அலைவரிசை சரியாக

வரவில்லையென்றால் - ஒலியைக் கேட்க முடியவில்லையென்றால் - அடுத்த அலைவரிசைக்கு மாற்றிக் கொள்கிறீர்கள். அதுபோல ஒரு தெய்வத்திடம் முழுமையாக நம்பிக்கை வைக்காமல் அடுத்த ஒரு தெய்வத்திடம் ஓடுகிறீர்கள்.

ஆன்மிகம் என்ற வானொலிப் பெட்டியில் அலைவரிசைகளை அடிக்கடி மாற்றக் கூடாது.

ஒருபுறம் மேல்மருவத்தூருக்கு என்று வருவது. இன்னொரு புறம் திருப்பதி, ஐயப்பன், நாடிசோதிடம், ஜாதகம் என்றும் சினிமா, அரசியல் என்றும் அலைவரிசைகளுக்கு மாறக்கூடாது.''

## அகங்காரம் ஆபத்து:

“பறவைகளின் எச்சத்தினால் விழுந்த ஆலம் விதைகள் பூமியிலும் வளர்ந்து செடியாகின்றன. கோபுரத்தின் மீதும் விழுந்து செடியாகின்றன. கோபுரத்தில் அந்தச் செடி வளர்வதற்கு ஈரப்பசையும், மழையும் காரணமாகின்றன.

பூமியில் வளரும் செடியை விட நான் உயர்ந்தவன் என்று கோபுரத்துச் செடி நினைக்கலாமா...?

ஆன்மிகத்துறைக்கு வந்தவிட்டதால் கிடைக்கிற மதிப்பு, மரியாதைகளை வைத்து ஒருவன் தான் உயர்ந்த நிலைக்கு வந்துவிட்டதாக எண்ணிக் கொள்ளக் கூடாது.

கோபுரத்தில் ஒரு விரிசல் ஏற்படுவதைக் கண்டவுடனே அந்தச் செடி வேரோடு பறித்து எறியப்படுகிறது. அதுபோல ஆன்மிகத்தில் அகங்காரம் தலைக்கேறியவர்கள் தூக்கி எறியப்படுகிறார்கள்.''

## ஆன்மா ஒன்றுதான்:

“இன்றைய மனிதகுலத்தில் ஒவ்வொரு சாதியும் ஒவ்வொரு தெய்வத்தை வைத்து வணங்கி வருகிறது. என்றாலும் ஆன்மா என்பது ஒன்றுதான்.''

## ஆன்மிகப் பாதை:

“நீ செல்கிற பாதை நல்லதாக இருந்தால் உன் பார்வையும் நல்லதாக இருக்கும். வாழ்க்கையில் நீ தேர்ந்தெடுக்கும் பாதை தீமையானது என்றால் உனக்கு ஆபத்துகளும் தொடரும்.

உன்னைச் சுற்றியிருப்பவர்கள் உன் காலைப் பிடிப்பது போல் காலை வாரிவிடுவார்கள். உன் கழுத்தைப் பிடிப்பது போல் நடித்து உன் கண்ணையே குத்துவார்கள்.



நீ ஆன்மிகப் பாதையினைத் தேர்ந்தெடுத்து வாழத் தொடங்கினால் அத்தகைய ஆபத்துக்கள் குறைவு.''

## ஆன்மிகம் என்ற பாதுகாப்பு:

“ஒரு வீட்டிற்குப் பாதுகாப்பு கருதி வாயிற்படியையும், கதவையும் அமைத்துக் கொள்கிறீர்கள். அதுபோல உங்கள் வாழ்க்கைக்குப் பாதுகாப்பாக ஆன்மிகத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே பிறர் துன்பத்தையும் தன் துன்பமாக நினைத்து உதவுகிற மனப்பான்மை முதலில் வரவேண்டும்.''

## பாவத்தின் சம்பளம்:

“நீ செய்யும் பாவம் பணமாகவும், கொலையாகவும் மாறுகிறது.''

## உடலை ஆட்டுவிக்கும் ஆன்மா:

“உடலுறுப்பு ஒவ்வொன்றும் அதனதன் வேலையைச் செய்கிறது. இதனைச் செய்துதான் ஆகவேண்டும் என்று உடலை ஆன்மா ஆட்டுவிக்கிறது.

உடலுக்கேற்ற ஆன்மாவும், ஆன்மாவிற்கேற்ற உடலும் கட்டுப்பாட்டுடன் இருந்தால் தான் வைரம் பாய்ந்த மரம்போல் இருக்கும்.''

## துருப்பிடிக்காமல் பார்த்துக்கொள்:

“கண்ணில் ஒரு துரும்பு விழுந்தாலும் இரும்பு துருப்பிடித்தாலும் என்ன ஆகும்? ஆன்மிகத்தில் நீங்கள் துருப்பிடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.''

## உலகியல் வாழ்க்கை: ஆன்மிக வாழ்க்கை:

“உலகியல் வாழ்க்கை வரம்புமீறிப் போய்க் கொண்டிருக்கிறது. ஆன்மிக வாழ்க்கையோ வரம்புக்குட்பட்டது.''

## ஆன்மாவின் கதிர்வீச்சுதான்...

“சூரியன், சந்திரன், நட்சத்திரம் இவை அனைத்திற்கும் பெயர் நீங்கள் வைத்த பெயர்களே! எல்லாக் கிரகங்களின் கதிர்வீச்சும் ஆன்மாவின் கதிர்வீச்சுதான்!''

## அழிவுதான் முடிவு:

“ஆன்மித்தில் ஈடுபடாமல் பாவத்திற்கு மேல் பாவம் செய்துகொண்டே போனால் அழிவுதான் ஏற்படும்.''

**இறுதிவரை முக்கியத்துவம்:**

"உங்கள் படிப்பு; பணம்; உத்தியோகம்; இவற்றுக்கெல்லாம் ஒரு காலத்தில் முக்கியத்துவம் இல்லாமல் போய்விடும். உங்கள் ஆன்மிக ஈடுபாட்டிற்கு மட்டும் எப்போதும் முக்கியத்துவம் உண்டு."

**எல்லாம் நானே!**

"கொடுப்பதும் நான் தான்; பறிப்பதும் நான் தான். இனிப்பும் நானே! கசப்பும் நானே! நல்லதும் நானே! கெட்டதும் நானே!

ஆன்ம பரிபக்குவம் ஏற்பட்டால் தான் இது புரியும்.

என்னிடம் நம்பிக்கை வைத்தவர்கள் வீண் போவதில்லை."

**ஆன்மிகத்தில் உடும்புப்பிடி:**

"ஆன்மிகத்துக்கு வந்துவிட்ட பிறகு இருப்பதை வைத்து முன்னேற வேண்டும். இல்லாததைத் தேடி அலையக்கூடாது. உங்களுக்கெல்லாம் ஆன்மிகத்தில் அதிகமான பிடிப்பு இருக்க வேண்டும். அந்தப்பிடி உடும்புப்பிடியாக இருக்கவேண்டும்."

**இயந்திர இயக்கமும் – மனித இயக்கமும்:**

"ஓர் இயந்திரம் இயங்க வேண்டுமானால் சக்தி தேவை. மனிதர்களாகிய நீங்கள் இயங்கவும் சக்தி தேவை. உன் இதயம் இயங்குவதே என் சக்தியால் தான்!

இயந்திரம் ஓடும்போது சூடாகிறது. அதனை இயக்குகிற எண்ணெயும் சூடாகிறது. அதுபோல உன் உடல் இயங்கும் போது உடல் சூடாகிறது. உடலின் இயக்கத்தைப் பொறுத்து ஆன்மாவும் சுத்தமாகிறது."

**ஆன்மா பூப்போன்றது:**

"நீரிலும் பூ உண்டு; நெருப்பிலும் பூ உண்டு; ரோஜாவிலும் பூ உண்டு; மனிதனிடமும் பூ உண்டு. அந்தப் பூதான் ஆன்மா! ஆன்மா பூப்போன்றது. உங்கள் எல்லோருடைய ஆன்மாவும் என்னிடமே உள்ளது. அதற்கு நானே பொறுப்பு. எல்லாவற்றையும் விட ஆன்மா உயர்ந்தது. ஆன்மாவின் உயர்ந்த பொருளை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்."

**ஆன்மா தூய்மை அடைய...**

'நெருப்பிலிட்ட பொருள்கள் தூய்மையடைவது போல, ஆன்மிகப் பணிகள் செய்யச் செய்ய உன் ஆன்மாவைச் சுற்றிப் படர்ந்திருக்கும் அழுக்குகள் நீங்கித் தூய்மையாகும்."



**நெருப்பும் ஆன்மாவும்:**

"நெருப்பு உண்டாவதே ஒரு சக்தியால் தான்! நீ இயங்குவதும் ஒரு சக்தியால் தான். உன்னை இயக்குகிற சக்தி அம்மா தான்! உன் உள்ளம் சுத்தமாக இருந்தால் உன் உள்ளே இருக்கிற ஆன்மாவும் சுத்தமாக இருக்கும்."

**ஆன்ம வலிமை:**

"ஆன்ம வலிமை இருந்தால் உங்களுக்கு எந்த வலியும் தெரியாது."

**மரம்: மனிதன்:**

"மரத்திலிருந்து தான் இலை, பூ, காய், கனி என்பன தோன்றுகின்றன. அதுபோலவே மனிதன் உள்ளத்திலிருந்து தான் விருப்பு, வெறுப்பு, நல்லது, கெட்டது என்ற எண்ணங்கள் தோன்றுகின்றன."

**மனிதன் மிருகமாகிவிடுவான்:**

"ஆன்மிகத் தொண்டும் வழிபாடும், ஆன்ம வளர்ச்சியும் இல்லாவிட்டால் மனிதன் மிருகமாக மாறிவிடுவான்."

**நீ ஒரு விளையாட்டுப் பொருள்:**

"இந்த உலக அரங்கில் நீ ஒரு விளையாட்டுப் பொருள் என்பதை மறந்துவிடக் கூடாது."

**புகழாசை கூடாது:**

"ஆன்மிகத்தில் இருப்பவன் தன்னைப் புகழவேண்டும் என்பதற்காக எந்த ஒரு காரியத்தையும் செய்யக்கூடாது. இயற்கை எந்தவித எதிர்பார்ப்பும் இன்றித் தன் கடமையைச் செய்கிறது. அதுபோலவே ஓர் ஆன்மிகவாதியும் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இன்றி ஆன்மிகப் பணி செய்யவேண்டும்."

**ஆராய்ச்சி தேவையற்றது:**

"ஆன்மிகத்திற்கு வந்துவிட்ட பிறகு மனம் திருந்தி வாழ்வதற்கே முயலவேண்டும். அதை விட்டுவிட்டு எதற்கெடுத்தாலும் கேள்வி மேல் கேள்வி கேட்டு ஆராய்ச்சி செய்வது தேவையற்றது. அதனால் உனக்குக் காலம் தான் வீணாகும்."

**மறைமுகத் தொண்டு: வெளிவேஷத் தொண்டு:**

"ஆன்மிகத்தில் மறைமுகமாகத் தொண்டு செய்வது தான் நிலைத்த பயன் கொடுக்கிறது."

## அம்மாவிடம் வந்தும் வேதனை தீரவில்லையே...

“அம்மாவிடம் வந்தும் கூட வேதனையை அனுபவிக்க வேண்டி இருக்கிறதே என்று நினைக்கிறீர்கள்.

உன் சுற்றுச் சூழலைக் கவனித்துப் பார்! உண்மை விளங்கும்.

மனித இனத்தில் அசுத்தமும் துர்நாற்றமும் பெருகி வருகின்றன. எண்ணங்களில் சுத்தமில்லை. செயல்களில் சுத்தமில்லை. இப்படிப்பட்ட உலகத்தில் வேதனைகள் அப்படியே தான் இருக்கும். எனவே, நீ மற்றவர்களால் பாதிக்கப்படுவாய். அதனால் தான் நீ மட்டும் ஆன்மிகத்தில் ஈடுபட்டால் போதாது. உன்னால் நான்கு பேர் ஆன்மிகவாதியாக மாறவேண்டும்.

நாடெங்கும் ஆன்மிக உணர்வு பெருகவேண்டும் என்று சொல்லி வருகின்றேன். உன்னை வைத்து உலகம் திருந்த வேண்டும். நீங்கள் கண்ணும் கருத்துமாக ஒருமனதாகச் செயல்பட்டால் முன்னேற்றம் காணலாம். ஏதோ கடமைக்காகச் செய்தால் பலன் இருக்காது.

முன்பெல்லாம் பத்து பேருக்கு ஒருவன் புத்தி சொல்பவனாகவும், தரும சிந்தனை உள்ளவனாகவும் இருந்தான். ஆனால் இக்காலத்திலோ அதர்மமும் அக்கிரமும் செய்பவர்களே பெருகிவருகிறார்கள்.”

## ஆடையில்லாதவன் அரைமனிதனா?

“ஆடையில்லாதவன் அரை மனிதன் என்பார்கள். ஆடையில்லாதவன் தான் முழு மனிதன்!”

## ஆன்மா உடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்:

“ஆடி - ஓடி - பாடிக் கடைசியில் தெய்வத்தை அடைந்து சிலை அழகைப் பார்த்து, ஆடை அணிகலன்கள் பூட்டி மகிழ்ந்து, கற்பூரம் ஏற்றித் தேங்காய் உடைத்தால் மட்டும் போதாது. உள்ளத்தை உடைத்து, ஆன்மா உடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.”

## ஆன்மிகமும் ஒரு கருவே!

“கறுப்புக்குடை பிடித்துக் கொண்டு சூரிய ஒளியில் நடக்கும்போது, உடம்பின் மேல் சூரிய வெப்பம் படுவதில்லை. ஆனால் வெள்ளை உடையணிந்து கொண்டு, சிவப்புக்குடை பிடித்துக் கொண்டு நடக்கும்போது வெப்பமும் தெரியும். உடம்பும் சிவந்து போகும்.



கருவும் கறுப்பு நிறம் உடையது. ஆனால் அது சூரிய ஒளியால் அழிவது இல்லை. அதுபோல ஆன்மிகமும் ஒரு கருவே!

செவ்வாடை அணிந்து ஆன்மிகத்தில் ஈடுபடும்போது எந்த ஒரு சக்தியாலும், எதிர்ப்பாலும் இந்த ஆன்மிகக் கருவை அழிக்க முடியாது.”

## ஆன்மா சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது:

“ஒரு தாய் கண்ணாடி போட்டுக் கொண்டு புத்தகத்தைப் புரட்டினால், அதைப் பார்க்கிற குழந்தையும் கண்ணாடி மாட்டிக் கொண்டு புத்தகத்தைப் புரட்டுகிறது. அதுபோல நீ என்ன செய்தாலும் உன் ஆன்மா உள்ளிருந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. அந்த ஆன்மாவின் நிழல் மேல் இருந்தபடி நானும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன். ஆன்மா என்பது ஓர் இயற்கைச் சக்தி!”

## கரையேற வேண்டுமானால்...

“உயிர் வாழ்க்கை என்ற கடலிலிருந்து கரையேற வேண்டுமானால் ஆன்மிகம் வேண்டும். அந்த ஆன்மிகத்திற்கு அமைதி வேண்டும். ஏதோ வந்தோம் போனோம் என்று இருக்கக் கூடாது. ஆன்மிகத்தைப பிடித்துக் கொண்டால் தான் வாழ்க்கையில் முன்னேற முடியும். உடம்பில் எலும்பு என்ற ஒன்று இருந்தாலும் அதன் இயக்கத்திற்குத் தசை என்ற ஒன்று தேவை. அதுபோல வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஆன்மிகம் தேவை!”

## தொல்லை வந்தாலும்...

“சூரியனுக்கென்று ஓர் இடம் இருப்பதுபோல, கடலிலும் மேடு பள்ளம் என்று அமைந்திருப்பது போல, ஆகாயத்திற்கும் ஓர் எல்லை இருப்பது போல, நீங்களும் ஆன்மிகம் என்ற எல்லைக்குள்ளேயே இருக்க வேண்டும்.

தொல்லை காரணமாக ஆன்மிகம் என்ற எல்லையை விட்டு ஓடிவிடக்கூடாது.”

## ஆன்மிகப் பணிகள் தொடர்ந்து செய்யவேண்டும். ஏன்?

“நான்கு பேர் நல்லவர்களாக மாறிக்கொண்டு வருகிறபோதே நாற்பதுபேர் கெட்டவர்களாக மாறிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே,

ஆன்மிகப் பணிகளைத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கவேண்டும்.''

**அரசியலும் ஆன்மிகமும்:**

"உடைப்பதும் அழிப்பதும் தான் இன்றைய அரசியல். எதையும் உடைக்காமல், கேள்வி கேட்டுப் பதிலை உணர்த்துவது தான் ஆன்மிகம். உள்ளிருந்து உரிய பதிலைக் கொடுப்பது எதுவோ அதுவே ஆன்மிகம்!''

**ஆன்மிக உணர்வை இயக்குவதற்கும்:**

"ஓர் ஆணியை முடுக்குவதற்கும், ஒரு கருவி தேவைப்படுகிறது. அந்தக் கருவியை இயக்க ஒரு சக்தி தேவைப்படுகிறது. அதுபோல ஆன்மிக உணர்வை இயக்க தருமம், தொண்டு என்பன தேவை.''

**தெய்வத்திற்குச் சமம்:**

"எவன் ஒருவன் தனக்காக வாழாமல் பிறர்க்காகப் பாசம் இல்லாமலும், பற்றில்லாமலும் வாழ்கிறானோ அவன் தெய்வத்திற்குச் சமம்.''

**தெய்வ சக்தி உண்டாக...**

"தொண்டு செய்து கொண்டே வருவதோடு உங்கள் உள்ளத்தையும் ஒருமுகப்படுத்தினால் தெய்வசக்தி உண்டாகும். அது அழியாது.''

**தெய்வக்காட்சி:**

"எந்த ரூபத்தில் தெய்வத்தை நினைக்கிறாயோ அதே ரூபத்தில் தெய்வம் உனக்குக் காட்சி கொடுக்கும்.''

**ஆன்மாவில் அழுக்கு சேரக்கூடாது:**

"உள்ளுக்குள் பொறாமைக்குணம் இருக்கக்கூடாது. பாசம் இருக்கலாம். அது பாவமாக மாறிவிடக் கூடாது. சிரிப்பு இருக்கலாம் அது வஞ்சகச் சிரிப்பாக இருக்கக் கூடாது. எல்லாவற்றுக்கும் காரணமாக இருப்பது ஆன்மாதான். அந்த ஆன்மாவில் அழுக்கு சேராதபடிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.''

**உடல்: உயிர்: ஆன்மா:**

"ஈசலுக்காகப் புற்று அமைந்திருப்பது போல உயிருக்காக உடலும், உடலுக்காக ஆன்மாவும் அமைந்திருக்கின்றன.''



**ஆன்மா என்ற சக்தி:**

"பெட்ரோல், டீசல், பாட்டரி என ஏதோ ஒரு சக்தி இயந்திரங்களை இயக்குவது போல ஆன்மா என்கிற சக்தி உங்களை இயக்குகிறது.''

**ஆன்மா தான்:**

"அடக்கமாக இருப்பதும் ஆன்மாதான். நல்லதைச் செய்வதும் ஆன்மாதான். பொறாமை கோபம் என்ற குணங்களைத் தூண்டிவிடுவதும் ஆன்மாதான். மனத்தைக் கட்டுப்படுத்தி ஆன்மாவைப் பதப்படுத்த வேண்டும்.''

**அடக்கி ஆள்வது ஆன்மா தான்:**

"ஆன்மிகத்தில் அமைதியும் நிம்மதியும் இருக்க வேண்டும். பொறாமையும் பொச்சரிப்பும் இருக்கக் கூடாது. ஒருவரைப் பற்றி மற்றவர் கோள் சொல்வதும், புறம் பேசுவதும் கூடாது. இத்தகைய தகாத பழக்கங்களை வைத்துக் கொண்டு ஆன்மிகத்தில் ஈடுபட்டும் எனக்கு அமைதியும், நிம்மதியும் கிடைக்கவில்லையே என்று வருந்துவதில் பயனில்லை.

மனத்தை அடக்கி ஆளவேண்டும். மனத்தையும் அவயவங்களையும் அடக்கி ஆள்வது ஆன்மா தான் என்றாலும் மனத்தை அடக்கி ஆன்மாவைப் பக்குவ நிலைக்குக் கொண்டுவர வேண்டும்.''

**ஆன்மா பழுது பட்டால்...**

"பந்தம், பாசம், பணம் என்றெல்லாம் உங்களை ஆடவைப்பது ஆன்மா தான். வண்டி பழுது பட்டு விட்டால் பழுது பார்த்து ஓட வைக்கலாம். ஆனால் மனிதனின் ஆன்மா என்ற இயந்திரம் பழுதுபட்டுவிட்டால் ஒன்றும் செய்ய இயலாது.''

**மொழிகளும் ஆன்மாவும்:**

"பொருட்களின் பெயர்கள் மொழிக்கு மொழி மாறுபடும். ஆனால் ஆன்மா என்பது எல்லோருக்கும் ஒன்று. அதை எந்த மொழியிலும் மாற்ற முடியாது.''

**வயது உடலுக்கே: ஆன்மாவுக்கு அல்ல:**

"எழுபது வயது; எண்பது வயது; தொண்ணூறு வயது என உடலுக்கு வயதாகுமே தவிர, ஆன்மாவுக்கு வயது கிடையாது.''

**ஆன்மாவிற்கு நோய் வந்தால்...**

"உடம்பில் உள்ள எலும்பு, நரம்பு இரத்த ஓட்டம் என

எல்லாவற்றிற்கும் நோய் வந்தால் தாங்கிக் கொள்ளலாம். ஆனால் ஆன்மாவிற்கு நோய் வந்தால் தாங்க முடியாது. அதற்கு மருந்தும் கிடையாது.

உன் ஆன்மா தான் ஆதிபராசக்தி! உன் ஆன்மா இறுதியில் காற்றோடு காற்றாய்ப் பிரிந்து விடுகிறது. தூசு பறக்க வேண்டுமானால் காற்று தேவை. உடம்பிலிருந்து ஆன்மா பிரியவும் காற்று தேவை.

பிறப்பு - இறப்பு - எடுப்பது - கொடுப்பது எல்லாமே நான் தான்."

**அடிப்படை ஆன்மா தான்:**

"கண்ணினால் பார்வையும், பார்வையால் ஒளியும் கிடைக்கிறது. காதினால் ஒலியைக் கேட்க முடிகிறது. நாவினாலும் தொண்டையினாலும் பேச்சு கிடைக்கிறது. கை கால்களால் செயல்பட முடிகிறது.

எல்லா அறிவும் ஒன்றுபட்டுச் செயல்படும்போதுதான் உள்ளம் நல்லதை எண்ணி நல்லதைச் செய்ய முடியும்.

எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருப்பது ஆன்மா தான்."

**ஆன்மா பிரிவது எப்போது?**

"ஆன்மா எப்பொழுது நினைக்கிறதோ அப்பொழுதுதான் உன்னை விட்டுப் போகும்."

**ஆன்மாவைக் கட்டுப் படுத்து:**

"ஒரு இயந்திரம் எப்படி ஒரு குறிப்பிட்ட மின் வேகத்திற்குக் கட்டுப் படுகிறதோ, அதுபோல ஆன்மாவையும் ஒரு கட்டுப்பாட்டோடு வைத்துக் கொள்ள வேண்டும்."

**ஆன்மாவும் இரத்த ஓட்டமும்:**

"உன் உள்ளே இருக்கும் ஆன்மாவும், உள்ளே ஓடும் இரத்த ஓட்டமும் ஒரே சீராக இருக்க வேண்டும். அதற்கு ஆன்மிகம் தான் சுலபமான வழி."

**உனது பொறுப்பு:**

"உன் உள்ளே இருக்கும் ஆன்மா என்னுடையதுதான் என்றாலும் அதை நீ உன்னுடையதாக நினைத்து இயக்கிப் பதப்படுத்த வேண்டும்.



உன் எண்ணத்தையும், பார்வையையும் கட்டுப்படுத்த வேண்டும். அந்தப் பொறுப்பு உன்னுடையது."

**ஆன்மாவே உறுதுணை:**

"ஆன்மா தான் உடலை இயக்குகிறது. அதுதான் உணவில் ஆசையைத் தூண்டுகிறது. அதுவே உணவில் ஆசை, மற்றவற்றில் ஆசைகளை ஏற்படுத்துகிறது. இவ்வளவுதான் அளவு! என்று சொல்வதும் ஆன்மா தான். பிற உயிர்களைச் சிரிக்க வைப்பதும், பாடவைப்பதும், ஆட வைப்பதும் ஆன்மா தான். உங்கள் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் உறுதுணையாக இருப்பதும் ஆன்மா தான்!"

**ஆன்மாவில் படியும் அழுக்குகள்:**

"கண்ணாடியில் தூசு படிந்து விட்டால் அடிக்கடித் துடைத்துச் சுத்தப்படுத்திப் பயன்படுத்துகிறீர்கள். அதுபோல ஆன்மாவிலும் ஆசை, அகந்தை, பொறாமை, கோபம் முதலிய அழுக்குகள் படிகின்றன. அந்த அழுக்குகள் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆன்மாவை ஒரு நிலைப்படுத்திப் பக்குவப் படுத்த வேண்டும். ஆன்மா என்ற சக்தி உடலை விட்டுப் போய் விட்டால் எதுவும் இல்லை."

**ஆன்மாதான் அம்மா!**

"உங்கள் உள்ளே இருக்கும் ஆன்மா தான் அம்மா! அம்மா தான் ஆன்மா!"

**ஆன்மாவில் அழுக்கு அதிகம் படிகிறபோது:**

"அழுக்குத் துணிகளை மூட்டையாகக் கட்டிக் கழுதைமீது வண்ணான் சுமத்துகிறான். அது சுமக்காவிட்டால் - முரண்டு பிடித்தால் சூடு போட்டுச் சுமக்க வைப்பான். அவன் சூடுபோட்டுப் பணிய வைப்பது போல உங்கள் ஆன்மாவில் அழுக்குகள் அதிகம் சேர்கிறபோது அதற்கேற்றபடி அடிகொடுக்கிறேன். உங்களைப் பண்படுத்துகிறேன். பக்குவப் படுத்துகிறேன்."

**ஆன்மிக சக்தியாக மாறும்:**

"தெய்வ சக்தி மனித சக்தியாக மாறி, அந்த மனித சக்தி விஞ்ஞான சக்தியாக வளர்ச்சி பெற்றதையே இதுவரை உலகம் கண்டு வந்தது. அது மீண்டும் ஆன்மிக சக்தியாக மாறும்."

**ஆன்மாவின் இயல்பு:**

"விட்டில் வைத்து வளர்க்கும் பறவைகளுக்கும்;

விலங்குகளுக்கும் எவ்வளவு சிறந்த உணவைக் கொடுத்தாலும், வெளியே சென்று இரை தேடி உண்ணவே விரும்பும். அதுபோல உன் ஆன்மாவை எவ்வளவு பக்குவப் படுத்தினாலும் உனக்குக் கட்டுப்படாமல் தடுமாறும்; பாவத்தைத் தேடும்.''

**உடல்: உள்ளம்: ஆன்மா:**

''உள்ளம் சீராக இருந்தால் உடலும் சீராக இருக்கும். இல்லாவிடில் உடம்பு பெருத்தும் சிறுத்தும் உடலமைப்பே மாறிவிடும். அதுபோல ஆன்மாவைச் சீராக வைத்திருந்தால் பக்குவம் அடையலாம்.''

**ஆசைகள் ஒழிவதில்லை:**

''உள்ளே ஆன்மாவும் உள்ளத்தே உணர்வும் இருக்கிறவரை ஆசைகள் ஒழிவதில்லை,''

**ஆன்மாவை உணர வேண்டுமானால்...**

''மனிதர்களுக்குக் காண், காது, மூக்கு, பல் என அழகான உறுப்புகள் அமைந்திருந்தாலும் ஒரு புகைப்படம் எடுத்து அந்தப் படத்தைப் பார்த்துத்தான் ரசிக்க முடிகிறது.

அதுபோல உன் உள்ளே ஆன்மா என ஒன்று இருந்தாலும், உள்ளத்திலிருந்து வெளிப்படும் உணர்வுகளால்தான் அதனை உணர முடியும்.

கல்லுக்குள் ஈரம் இருப்பதுபோல, உங்கள் உள்ளத்திற்குள் வளர்ச்சி இருக்க வேண்டும். உழைக்க வேண்டும், மற்றவர்கட்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் வரவேண்டும். மற்றவனைக் கெடுக்க வேண்டும் என்ற எண்ணம் வரக்கூடாது.''

**ஆன்மா தூய்மையை இழக்கும் போது...**

''ஒரு சிலையை உருவாக்குபவனுக்கும் ஆன்மா இருக்கின்றது. அந்தச் சிலையைத் திருடிச் செல்பவனுக்கும் ஆன்மா இருக்கிறது.

தாயிடம் பாசம் வைப்பவனுக்கும் ஆன்மா இருக்கிறது. பணத்திற்காகத் தாயைக் கொலை செய்பவனுக்கும் ஆன்மா இருக்கிறது.

ஆன்மா தூய்மையை இழக்கும் போது அது அழிவைக் கொடுக்கிறது. எந்தப் பகுதியில் ஆன்மிகம் இல்லையோ அங்கே அழிவுகள் தான் தலை தூக்கும்.''



**உனக்குச் சொந்தம்: எனக்குச் சொந்தம்:**

''ஆக்கப்பட்ட பொருள் எல்லாம் உனக்குச் சொந்தம் என்றால், உன் உயிரும் ஆன்மாவும் எனக்குச் சொந்தம்.''

**என்றும் மாறாது:**

''உலகம் மாறினாலும் இயற்கை மாறாது. உன் உள்ளம் மாறினாலும் ஆன்மா மாறாது.''

**ஆன்ம முன்னேற்றத்துக்குப் பந்தபாசம் தடை:**

''ஆரம்பத்தில் படித்துப் பட்டம் பெறுகிறான். ஒரு வேலையில் அமர்கிறான். குடும்பத்தைக் காப்பாற்ற சம்பாதிக்கிறான். பிள்ளைகள் வளர்ந்து ஆளாகி நல்ல நிலை அடைந்த பிறகும் பேரன், பேத்தி என்ற பாசம் விடுவதில்லை. அந்தப் பந்த பாசங்களே ஒருவர் ஆன்ம முன்னேற்றத்துக்குத் தடையாக அமைந்து விடுகின்றன.''

**சமநோக்கு வேண்டும்:**

''இன்பம் என்பதால் அதிக மகிழ்ச்சி அடையாதே! கசப்பு என்பதால் முகம் சுளிக்காதே! அழாமலும், சிரித்துக் துள்ளாமலும் விருப்பு வெறுப்பற்ற வாழ்க்கைக்குப் பக்குவப் படுத்திக் கொள்!''

**ஆன்மிக ஈடுபாடு:**

''வாழ்க்கையில் இம்மியளவு ஆன்மிகத்தைவிட்டு அகன்றாலும் சறுக்கி விழுவாய். அடிமட்டத்திற்கு வந்து விடுவாய். என்பதைப் புரிந்து கொண்டு ஆன்மிக ஈடுபாட்டை வளர்த்துக் கொள்.

மதிப்பிற்காகவும், கௌரவத்திற்காகவும் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டு ஆடம்பர வாழ்க்கை வாழ விரும்பினால் பின்னால் மதியிழந்து, மதிப்பும் இழந்து அல்லல்பட நேரும்.''

**படிப்பும் – பொருளும்:**

''நீ படித்த படிப்பும், பொருளும் கூட வராது. பண்பும், பராசக்தியின் பாசமும் தான் கூட வரும்.''

**அம்மாவும் – ஆத்மாவும்:**

''இந்த அம்மாவும் உன் ஆத்மாவும் ஒன்றுதான்''

**இடைத்தரகர்கள்:**

''ஆன்மிகத்திற்கு நடுவில் பித்தலாட்டம் செய்கின்ற தரகர்கள் தேவையில்லை.''

**மரமும் – மனிதனும்:**

"மரம் சாய்ந்து விட்டால் பயனுண்டு. மனிதன் சாய்ந்து விட்டால் பயனில்லை."

**தெய்வ விக்கிரகம்:**

"பொம்மையை (விக்கிரகம்) வைத்துக் கொண்டு பித்தலாட்டம் நடத்தக் கூடாது. அந்தப் பிம்பத்தை (சிலையை) வைத்துக் கொண்டு இந்தப் பிம்பத்தை (தெய்வத்தை) ஏமாற்றக் கூடாது."

**அன்றும் – இன்றும் – என்றும்:**

"நீங்கள் சும்மா இருந்தாலும் இல்லாவிட்டாலும் தெய்வத்தைப் பற்றியும், ஆன்மிகத்தைப் பற்றியும் பேசினாலும் பேசாவிட்டாலும், தருமம் செய்தாலும், செய்யாமல் போனாலும் அன்றும், இன்றும், என்றும் ஆதிபராசக்தியும் உண்டு. ஆன்மிகமும் உண்டு."

**ஆன்மாவிற்கு உருவமும் – பெயரும் இல்லை:**

"இயற்கைப் பொருள்களுக்கும், உருவங்கட்கும் நீங்கள்தான் பெயர் வைத்துக் கொண்டீர்கள். ஆண், பெண் என்ற பெயர்களெல்லாம். நீங்களாக வைத்துக் கொண்டவை. இயற்கையின் உருவத்திற்கு யார் பெயர் வைத்தது?"

ஆன்மாவிற்கு உருவமும் இல்லை, பெயரும் இல்லை."

**ஆன்மிகம் என்ற நெய்:**

"நோய் வராமல் இருக்க வேண்டும் என்றால் உள்ளத்தில் ஆன்மிகம் என்ற நெய்யை ஊற்ற வேண்டும்."

**வளர்ச்சியும் – முன்னேற்றமும்:**

"வாழ்க்கையில் வளர்ச்சி பெற வேண்டும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்றெல்லாம் அலைகிறீர்கள். உணவுக் கட்டுப்பாடு, மனக்கட்டுப்பாடு, ஆன்மக் கட்டுப்பாடு உங்களிடம் வளர்ந்தால் தான் நீங்கள் வளர்ச்சி பெற முடியும்; முன்னேற்றம் அடைய முடியும்."

**நல்லது – கெட்டது தெரிய...**

"ஆன்மிகத்தில் அழுத்தமான ஈடுபாடு வைத்திருந்தால்தான் உனக்கு நல்லது கெட்டது தெரியும்."

**ஆன்மா தான் சக்தி:**

"கோயிலுக்கும் சக்தி வேண்டும்; கோயில் சிலைக்கும் சக்தி



வேண்டும். உன் ஆன்மா தான் அந்தச் சக்தி!"

**மன அமைதிக்கு:**

"ஆன்மிகத் துறையில் கிடைக்கும் அமைதி வேறு எந்தத் துறையிலும் கிடைக்காது."

**ஆன்மிகமே தகுந்த மாத்திரை:**

"மன வளம் இருந்தால் தான் வாழ்க்கையில் நல்லது நடக்கும். வெறும் மாத்திரை சாப்பிட்டு ஆரோக்கியமாக வாழ்ந்து விட முடியாது. ஏற்ற மாத்திரை ஆன்மிகம் தான்!

**ஆன்மாவில் குளிர்ச்சி ஏற்று:**

"கண்ணுக்குக் கண்ணாடி போடுகிறார்கள். சிலர் கண்ணுக்குள்ளேயே கண்ணாடி பொருத்திக் கொள்கிறார்கள். சிலர் குளிர்ச்சிக்காகக் கண்ணாடி அணிகிறார்கள். அந்தக் குளிர்ச்சியை ஆன்மாவிற்குக் கொடுத்துப் பார்! அதன் பயன் தெரியும்."

**ஆணவத்தை அழிக்கவும் ஆன்மிகம் தேவை:**

"இன்று நாட்டில் கட்டுக்கோப்பு குலைந்து வருகிறது. தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்ற நிலைமை உருவாகி வருகிறது. ஆன்மிகத்தை வைத்துத்தான் அவனவன் ஆணவத்தை அழிக்க முடியும்."

**ஆன்மிகத்திலும் பதம் வேவை:**

"சேறு, தண்ணீர், ஈரப்பதம் என்ற மூன்றும் பதமாக இருந்தால்தான் அது பூமி! இல்லாவிட்டால் இந்த பூமி வெப்பம் மிகுந்ததாக மாறிவிடும். பூமிக்கு எப்படிப் பதம் தேவையோ அதுபோல ஆன்மிகத்திலும் பதம் வேண்டும்."

**ஆன்மா உள்ள வரையில்...**

"ஆன்மா என்ற ஒன்று இருக்கிறவரையில் உனக்குக் கடமை என்ற ஒன்றும், கஷ்டம் என்ற ஒன்றும் இருந்து கொண்டுதான் இருக்கும்."

**மனிதனும் – மிருகமும்:**

"மிருகங்கள் ஒரு எல்லைக்குக் கட்டுப்பட்டு இருக்கின்றன. மனிதன்தான் எதிலும் கட்டுப்பாடு இல்லாமல் வாழ்கிறான். யார் எப்படி இருந்தாலும் ஆன்மா என்னுடையது தான்."

**ஆசையும் அழிவும்:**

"எல்லா ஆன்மாக்களும் எனக்குள் அடக்கம். ஆணவம் இருந்தால் ஆசை இருக்கும்; ஆசை இருந்தால் அழிவும் இருக்கும்."

**அடிமட்டத்திலிருந்து ஆன்மிகம்:**

"பூமிக்கு அதிக செல்வாக்கும் மகிமையும் உண்டு.

சூரியனும் சந்திரனும் பூமியை நோக்கித்தான் ஒளி வீசுகின்றன.

மழையும் பூமியை நோக்கித்தான் பெய்கிறது.

பூமி அடிமட்டத்தில் இருந்தாலும் அதற்கு மகிமை உண்டு.

அதுபோல அடிமட்டத்திலிருந்து ஆன்மிகம் வளர்ந்தால் தான் அது உண்மையான ஆன்மிகமாக இருக்கும்."

**ஆட்டிப் படைப்பது எது?**

"ஆன்மிகத்தில் ஈடுபடும்போதும் கஷ்டங்கள் வரும். இன்று மனித இனம் மிருக இனமாக மாறி வருகிறது. மனிதர்களை நீங்கள் தான் நல்லவர்கள், கெட்டவர்கள் என்று பிரித்துப் பெயர் வைக்கிறீர்கள். அவர்களை ஆட்டிப் படைப்பது ஆன்மா தான்.!

**ஆன்மாவும் உடலும்:**

"ஆன்மாவுக்காக உடலா? உடலுக்காக ஆன்மாவா? என்றெல்லாம் நினைக்கத் தோன்றும். ஆன்மாவிற்காகவே உடம்பு என்று நினைத்தால் நல்லது நடக்கும். உடம்புக்காகத்தான் ஆன்மா என்று நினைத்தால் தீயதுதான் நடக்கும்."

**உயிரும் ஆன்மாவும்:**

"உயிரும் ஆன்மாவும் சேர்ந்த உடல் என ஒன்று இருந்தால்தான் உலகத்தில் வாழ்க்கை என்ற விளையாட்டை விளையாட முடியும்."

**நல்ல உள்ளமும் – நல்ல செயலும்:**

"நல்ல உள்ளமும் நல்ல செயலும் இருந்தால் சீக்கிரம் என்னை அடையலாம்."

**ஆன்ம வளர்ச்சிக்குத் தடைகள்:**

"பந்தம்! பாசம்! பற்று! ஆகியவற்றைத் துறந்துவிட வேண்டும். மனத்தைத் திறந்துவிட வேண்டும்.



**ஆன்மிகம்: உயிர் வாழ்வுக்குப் பாதுகாப்பு:**

"சுவர், வாசல், கதவு என்பன ஒரு வீட்டிற்குப் பாதுகாப்பாக அமைவது போல, உங்கள் வாழ்க்கைக்கு ஆன்மிகம் தான் பாதுகாப்பாக அமையும்."

**தாவர வளர்ச்சி: மனித வளர்ச்சி:**

"விதை - வேர் - கிளை என்னும் சிலவற்றின் மூலம் தாவர இனம் வளர்ச்சி அடைகிறது. அதுபோல மனிதன் ஆன்மா என்ற ஒன்றின் மூலம் தான் வளச்சி அடைய முடியும்."

**சேறும் – சோறும்:**

"சேறு மட்டும் சோறாக மாறி விடாது. சேற்றைக் குழைக்க வேண்டும் அதில் விதைக்க வேண்டும். பயிர் செய்ய வேண்டும். விளைந்த பிறகு அரிசியாக்க வேண்டும். அரிசியில் தண்ணீரை ஊற்றி வேக வைக்க வேண்டும். அது பக்குவமாக வெந்தால்தான் சோறு ஆகும். அதுபோல ஆன்மிகத்தில் தருமம், தொண்டு, தியானம், வழிபாடு செய்தால்தான் ஆன்மிகப் பயனை அடைய முடியும்."

**சலிப்பும் – சோர்வும்:**

"ஆன்மிகம் என்னும் கனி கனிந்து வருகிற காலத்தில் சலிப்பும் சோர்வும் ஏற்பட்டு என் அருளை இழந்து விடாதே!"

**அடிமட்டத்தில் ஆன்மிகம்:**

"ஒரு கட்டிடம் எவ்வளவு உயர்ந்து இருந்தாலும், அடித்தளம் வலுவாக இருந்ததால் தான் அது உறுதியோடு நிலைத்து நிற்கும். அதுபோல இன்றைய நிலையில் ஆன்மிகம் வலுவாக நிலைத்து நிற்க வேண்டுமானால் அடி மட்டத்தில் இருப்பவனை ஆன்மித்தின் பக்கம் கொண்டு வரவேண்டும். அதற்காகவே பாமர மக்களையும், ஏழை எளிய மக்களையும் அழைத்துக் கொண்டு வருமாறு சொல்கிறேன்."

**ஆன்மாவும் உடம்பும்:**

"காலம் காட்டும் கருவியில் உள்ள பாட்டரி செல் (Battery cell) இல்லாவிட்டால் அது செயல்படாது. அதுபோல ஆன்மா இல்லா விட்டால் உடல் செயல்படாது."

**ஆன்மாவும் – ஆசையும்:**

"உங்கள் உள்ளத்தில் இருக்கும் ஆசைகளை ஆன்மா அழிக்க

வேண்டும். ஆனால் இப்போதோ ஆசைகள் ஆன்மாவை அழிக்கின்றன.''

**எல்லாமே ஆன்மாதான்!**

''உனக்குள் இருக்கிற ஆன்மாதான் எல்லாமே! ஆன்மாவைச் சரியாகப் பக்குவமாக்கிக் கொண்டால் எல்லாமே சரியாக இருக்கும்''

**வேதனையும் வேண்டும்:**

''ஒரு குழந்தை எப்போதும் சிரித்துக் கொண்டே இருந்தால் அதன் தேவையை யாரும் அறிந்து கொள்ள மாட்டார்கள். அது அவ்வப்போது பசி எடுத்து அழுதால்தான் அதற்கு உணவு கிடைக்கும். அதுபோல வாழ்க்கையிலும் அழுதால்தான் பலன் கிடைக்கும்; வேதனைதான் சாதனைக்கு வழி வகுக்கும்.''

**ஆன்மா அகலும் போது...**

''ஓர் ஆலயத்தில் தெய்வம் இருக்கிறதோ... இல்லையோ... அது பற்றிக்கூடக் கவலை இல்லை. ஆனால் மனிதனுக்கு ஆன்மா இருக்கிறபடி இருந்தால் போதுமானது.

ஒரு பலூனில் அடைபட்டுள்ள காற்று உன்னை அறியாமலே கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறுவது போல உன் ஆன்மாவும் கொஞ்சம் கொஞ்சமாக உன்னை விட்டுப் போகும்.''

**ஆன்மாவைப் பக்குவமாக வைத்துக்கொள்:**

''உனக்குள் இருக்கிற ஆன்மாதான் எல்லாமே! ஆன்மாவைச் சரியாகப் பக்குவமாக்கிக் கொண்டால் எல்லாமே சரியாக இருக்கும்.''

**எட்டாத பொருளை எட்டிப் பிடிக்க...**

''உன் கைக்கு எட்டாத ஒரு பொருளை எட்டிப் பிடித்து எடுக்க எப்படியெல்லாம் முயல்கிறாய்? அப்போது உன் மனமும் புலன்களும் ஒருமுகப்பட்டு அதனை எடுக்கத் துணைபுரிகின்றன.''

ஒரு சாதாரண பொருளை எட்டி எடுக்கவே அவ்வளவு எச்சரிக்கை உணர்வு தேவைப்படுகிறது.

எட்டாப் பொருளாக இருக்கும் தாயான என்னை எட்டிப் பிடிக்க உன்னால் சுலபத்தில் முடியாது.

உன் ஐம்புலன்களையும் அடக்கி, மனத்தை ஒருமுகப்படுத்தி முயற்சி செய்தால் தான் அம்மாவை அடைய முடியும்.''



**வெள்ளை மனம்:**

''மனத்தில் அழுக்கு இருந்தால் சிந்திக்கத் தோன்றாது. வெள்ளை மனம் இருந்தால்தான் சிந்திக்கத் தோன்றும். வெள்ளை மனம் இருந்தால் பிறரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் தோன்றாது.''

**ஆன்மிகத்திலும் சல சலப்புகள்:**

''சாக்கடையிலும் புல் முளைக்கிறது. சேற்றிலும் புல் முளைக்கிறது. அதுபோல ஆன்மிகத்துறையிலும் புல் முளைக்கிறது.

ஆன்மிகத்தில் வளர்ச்சி இருக்கும் போது கூடவே சலசலப்பும் இருக்கத்தான் செய்யும். இந்தச் சலசலப்புகளைக் கண்டு ஆன்மிகத்தை விட்டு ஒதுங்கிக் கொள்ளக் கூடாது. அதனால் உனக்குத்தான் இழப்பு என்பதை மறந்து விடாதே.''

**நான் கை கொடுத்தால்தான்:**

''ஒரு குழந்தை நடக்க ஆரம்பிக்கிற போது, தாய் கைகொடுத்துப் பழக்கினால் தான் அது நடக்கவே ஆரம்பிக்கும். அதுபோலத் தாயான நானும் கை கொடுத்தால்தான் இங்கே வாழவே முடியும்.

அதை மறந்து விட்டு அந்த நாடி; இந்த நாடி என அலையாதே; நீ எந்த நாடியை நோக்கிப் போனாலும் கடைசியாக என்னை நாடித்தான் வரவேண்டும்.''

உன்னுள் ஆன்மா என்ற ஒன்று உள்ளவரையில் உனக்கு உலகியல் கடமைகள் இருந்து கொண்டுதான் இருக்கும். அது குறித்த கஷ்டங்களும் இருந்துகொண்டுதான் இருக்கும்.

விளைபொருள் முதிர்ந்து பக்குவப்பட வேண்டும். அப்போதுதான் சுவை இருக்கும். அதுபோல உனக்கு முதிர்ந்த அறிவும், அனுபவமும் பாசமும், பக்தியும், தொண்டும் வேண்டும். அப்போதுதான் உனக்குப் பயன் கிடைக்கும்.

**ஆன்ம சக்தி:**

''மனிதர்களுடைய உள்ளத்தின் வேகம்தான் அழிவை ஏற்படுத்துகிறது. அந்த வேகத்தால்தான் மனிதன் தடம் புரள்கிறான். அந்த வேகத்தைக் கட்டுப்படுத்தும் சக்தி ஆன்மிகத்திற்கு உண்டு. அந்தச் சக்தி பெருக வேண்டுமானால் ஒவ்வொருவரும் சமூகத் தொண்டு செய்ய வேண்டும்.''

## ஆன்மிக அறிவு:

“ஆன்மிக அறிவு வளர வேண்டும் அது வளர்ந்தால்தான் நாட்டில் அமைதி கிடைக்கும். வாழ்வெல்லாம் வாழ்வல்ல! தாழ்வெல்லாம் தாழ்வல்ல! வாழ்வையும் தாழ்வையும் சமமாக எடுத்துக் கொண்டு வாழ்பவன் தான் மனிதன்.”

## அழுக்குள்ள மனம்:

“உன் உள்ளத்தில் அழுக்கு இருக்கும் வரை நான் புகமாட்டேன்.”

## நேர்மையும் ஆன்மிகமும் தான் அவசியம்:

“மனம் திருந்தி வாழாமல் எந்தக் கல்லைக் கும்பிட்டும் பயனில்லை. அழுது அழுது கண்ணீர் வற்றி விட்டது; கேட்டுக் கேட்டு காது புளித்து விட்டது. குமுறிக் குமுறி அழுது நெஞ்சு கனத்து விட்டது. பார்த்துப் பார்த்துக் கண் பூத்து விட்டது. பேசிப் பேசி வாய் வலித்து விட்டது. அடிவாங்கி வாங்கி உடம்பும் உறுதியாகி விட்டது துன்பங்களை அனுபவித்து அனுபவித்துப் பழகிப் போய் விட்டது என்றெல்லாம் புலம்பிப் பயனில்லை.

நேர்மையும் ஆன்மிகமும் தான் அவசியம். பிறர்மேல் பொறாமைப் பட்டுப் பயனில்லை.”

## நெஞ்சில் ஒரு முள்!

“நெஞ்சில் ஒரு முள் தைத்திருந்தால் சரியாகச் சாப்பிடவும் முடியாது. அது உறுத்திக் கொண்டே இருக்கும். அதுபோல மனத்தில் ஒரு தீய எண்ணம் புகுந்துவிட்டால் அது மனத்தை உறுத்திக் கொண்டே இருக்கும். ஆன்மிகத்தால்தான் அதைச் சரி செய்ய முடியும்.”

## ஆன்மாதான் கருவி:

“என் வீட்டிற்கு எல்லை இது! உன் வீட்டிற்கு எல்லை அது! என்று வீட்டிற்கு எல்லைகளை வகுத்துக் கொள்கிற நீங்கள், உங்களுக்கென ஒரு எல்லைக்குள் அடங்குவது இல்லை.

ஆசைக்கு எல்லை, வாழ்விற்கு எல்லை என எல்லை வகுத்துக்கொண்டு வாழ்வதில்லை.

உங்கள் ஆக்கத்திற்கும் ஆன்மா தான் கருவி; அழிவிற்கும் ஆன்மாதான் கருவி”



## ஆன்மாவைத் தட்டிக் கொடுத்து...

“பசி வந்தாலே அடுத்தவனைப் பார்த்துப் பொறாமைப்படும் குணம் வந்து விடும். அதையொட்டிப் பல தீய விளைவுகளும் வந்து விடும். அடிக்கடி ஆன்மாவைத் தட்டிக் கொடுத்துச் சரி செய்ய வேண்டும்”

## நல்லது செய்ய வேண்டுமானால்...

“கிணற்றில் ஊற்று இருந்தால் தான் நீர் சுரக்கும். அதுபோல ஆன்மிக உணர்வு இருந்தால்தான் நல்லது செய்ய முடியும்.”

## முன்னேற வேண்டுமானால்...

“சந்திர மண்டிலம், சூரிய மண்டிலம், வாயு மண்டிலம், ஏழு உலகம், ஏழு கடல் என எது எது எங்கு இருந்தாலும் மனிதனுக்கு ஆன்மிகம் இருந்தால்தான் முன்னேற முடியும்.”

## உடல்: ஆன்மா:

“உணவிற்கும் தண்ணீருக்கும் தொடர்பு இருப்பதுபோல, உடலுக்கும் ஆன்மாவிற்கும் தொடர்பு உண்டு.

அகம், புறம், அக்கம் பக்கம் ஒற்றுமையாக இருந்தால்தான் வாழ்க்கை நன்றாக அமையும்.

ஏதோ பிறந்தோம், ஏதோ வளர்ந்தோம், என்று வாழ்ந்தால் வாழ்க்கை நன்றாக அமையாது.

கடலில் அழுத்தம் இருந்தால்தான் கொந்தளிப்பு ஏற்படும். அதுபோல ஆன்மிகம் என்ற அழுத்தம் இருந்தால்தான் நல்ல எண்ணங்கள் வெளிப்படும். அதையொட்டிப் பலன் கொடுக்கும்.”

## ஆன்மாவும் காற்றும்:

“வாய், பற்கள், நாக்கு என இவையாவும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்திருப்பது போல ஆன்மாவும் காற்றும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்தே இருக்கும்”

ஆன்மாதான் அமைதி கொடுக்கும். அதற்குத் தெய்வ வழிபாடு அவசியம்.”

## அரிசி: ஆன்மா:

“நெல்லின் தோல் உரிந்தால் தான் அரிசி கிடைக்கும்.

உணவிற்கும் பயன்படும். அதுபோல உள்ளத்திலிருந்து ஆன்மா வெளிப்பட்டால்தான் மற்றவர்களுக்கும் பயன் கிடைக்கும்.''

**அகங்காரத்தை அடக்க...**

"உடலில் உள்ள அங்கங்களை அடக்கினால் தான் உள்ளத்தில் உள்ள அகங்காரத்தை அடக்க முடியும்''

**ஆன்மாவும் – உடலும்:**

"கடிகாரத்தை இயக்கும் சாவிபோல ஆன்மா உடலை இயக்குகிறது.''

**ஆன்ம சுத்தம்:**

"அவனவன் ஆன்மாவை அவனவனும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்தவனைப் பார்த்துப் பொறமைப் படக் கூடாது.''

**அளவோடு இருந்தால்...**

"எதிலும் அளவோடு இருந்தால் நல்லது.

எந்தக் காரணத்தைக் கொண்டும் அதிகமாக ஆசைப்படக் கூடாது.

மழை அதிமாகப் பெய்தால் அழிவுதான் ஏற்படும். அளவுக்கு மீறினால் அழிவுதான் ஏற்படும்.

பொருளைப் படைத்தால் மட்டும் போதாது காப்பாற்றவும் வேண்டும்.

உணவு, உடை, இருப்பிடம் என இவை இருந்தாலே போதும் என்ற எண்ணம் இருக்க வேண்டும்.

அளவுக்கு அதிகமாகப் பணம் சேர்த்து என்ன செய்யப் போகிறாய்? எவ்வளவுக்கெவ்வளவு வசதி வாய்ப்புகள் பெருகுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு பிரச்சனைகளும் பெருகும்.

அளவுக்கு மீறி ஆசைப்பட்டுப் பெரியதாக வீட்டைக் கட்டிவிட்டு, வெள்ளை அடிக்கக் காசு இல்லையே என்று புலம்புவதில் பயன் என்ன?

உழைத்துப் பிழைப்பதற்கு ஆன்மா வழி செய்து கொடுத்தால் அதுவே போதும் என்று இருக்க வேண்டும்.''



**ஆன்மா: உள்ளம்:**

"ஆன்மா என்ற விதையை உங்கள் உள்ளம் என்ற நிலத்தில் விதைத்துப் பயிர் செய்ய வேண்டும். நல்ல நிலத்தில் நெல்லை விதைத்தால் தான் அது பலன் கொடுக்கும். அதுபோல நல்ல உள்ளத்தில் ஆன்மா என்ற விதையை விதைத்தால் தான் அது தெய்வ நிலையை அடையும்''

**நிலையான ஆன்ம வளர்ச்சி:**

"முற்றாத காயைக் கூடப் பழுக்க வைக்க முடியும். ஆனால் அதில் ருசி இருக்காது.

முற்றிய காய் தானாகப் பழுத்தால் அதில் ருசி இருக்கும்.

அதுபோல மனத்தூய்மை, நேர்மை இல்லாமல் ஆன்மிகத்துறையில் ஈடுபட்டால் ஆன்ம வளர்ச்சி கிடைக்காது.

மனத்தூய்மை, நேர்மையான வழிகளில் மனத்தைப் பக்குவப் படுத்திக் கொண்டால் ஆன்ம வளர்ச்சி பெற முடியும்.

அத்தகைய வளர்ச்சியே நிலையான ஆன்ம வளர்ச்சி!''

**கெட்ட எண்ணங்களை விடு!**

"பானையில் வைத்த நெல்தான் விதைக்கும் போது விதையாக மாறுகிறது.

உன் மனத்தில் உள்ள எண்ணத்திற்கு ஏற்பவே உனக்கு நல்லதும் கெட்டதும் நடக்கிறது.

வாழை, தென்னை, பனை போன்ற மரங்கள் வளர வளர அவற்றின் கிளைகளையும், ஓலைகளையும் அவ்வப்போது வெட்டிக் கழித்துக் கொண்டே வந்தால்தான் மரமும் வளரும். நல்ல பலனும் கொடுக்கும்.

அதுபோல ஆன்மிகத்தில் ஈடுபட ஈடுபட உன்னிடம் உள்ள கெட்ட எண்ணங்களை வெட்டி விட்டபடி இருந்தால்தான் நல்ல பலன்கள் கிட்டும்.''

**ஆன்ம சிந்தனை:**

"ஒருவனுக்கு ஆன்ம சிந்தனையும், தரும சிந்தனையும் இருக்குமானால் அவனது எளிமைத் தோற்றமும் இனிமைத் தோற்றமாகத் தெரியும். அவனுக்கு வலி ஏற்பட்டாலும் அதை அவன் வலிமையோடு தாங்குவது தெரியும்.''

**போலி ஆன்மிக வாதிகள்:**

“நாட்டில் இன்று போலி ஆன்மிக வாதிகள் பெருகிவிட்டார்கள். குடுகுடுப்பைக்காரன் சொல்லும் சொல்லையெல்லாம் நம்பி மக்கள் ஏமாறுகிறார்கள்.

சூரிய ஒளியினால் எப்படிச் சாயம் வெளுக்கிறதோ அப்படியே போலிகளின் சாயமும் ஒரு நாள் வெளுத்துப் போகும்.”

**உயிர்களின் தோற்றமும்: வளர்ச்சியும்:**

“அழுக்கிலும் உயிர்கள் தோன்றும். அணுக்களிலும் உயிர்கள் தோன்றும் ஆனாலும் ஆன்மிகத்தினால்தான் சிறந்த வளர்ச்சி உண்டாகும்.”

பெண் உயிர்தான் முதல் உற்பத்தி!

**ஆன்மிகம் இல்லையென்றால்...**

“ஆன்மிகம் இல்லையென்றால் உலகமெங்கும் வெட்டு, குத்து, அழிவுகள்தான் ஓங்கும்.”

**அரசியல் துறைக்கும்:**

“அரசியலுக்கும் ஆன்மிக உணர்வு வேண்டும்.”

**ஆன்மிகத்தால் மட்டுமே:**

“உடலுக்குச் சக்தி! உள்ளத்திற்கு உற்சாகம்! உலகுக்கு அமைதி! - இவை கிடைப்பது ஆன்மிகத்தால் மட்டுமே!

**மனசாட்சிக்கு மதிப்பு அளிக்கவில்லையேல்...**

“பறவைக்கும் கறவைக்கும் உள்ள குணம் கூட உங்களுக்கு இல்லை.

யாரும் யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை என்றாலும் மனசாட்சிக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

அந்த மனசாட்சிக்கு மதிப்பு அளித்து வாழாவிட்டால் தொழிற்சாலைகளும் சரியாக இயங்காது. வாழ வருமானமும் கிடைக்காது. பூமிக்கு ஏற்ற விதை அமையாது. நாவிற்கு ஏற்ற பேச்சு அமையாது. எண்ணத்திற்கு ஏற்ற செயல் அமையாது.

எந்தப் பாதுகாப்பு இருந்தாலும் அழிவுதான் தேடி வரும்.”



**முக்தி அடைவது எளிதல்ல:**

“தனது தசை, தனது ஆன்மா தனக்கு உதவாது என்று நினைக்கிறவன் எவனோ அவன்தான் முக்தி அடைய முடியும். அந்தக் கட்டத்தை அடைவது சிரமம்.”

**ஆன்மாவிற்கு அழிவில்லை:**

“உங்களில் சிலர் சென்ற பிறவி பற்றியும். இந்தப் பிறவி பற்றியுமே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

உங்கள் உடலை அழித்து மண்ணிட்டு மூடினாலும் உங்கள் ஆன்மாவை அழிக்க முடியாது. உங்கள் உடல் காற்றில் இயங்கும் தன்மை உடையது.”

**குறுகிய காலப் பயிர்: நீண்ட காலப் பயிர்:**

“உங்கள் கையில் இருக்கும்வரை நெல்; அதனை நிலத்தில் விதைக்கிறபோது விதை; ஒவ்வொரு பொருளையும் அந்தந்த நிலைக்கு ஏற்பப் பயன்படுத்திப் பயன்களை அனுபவித்து வருகிறீர்கள்.

குறுகிய காலப் பயிரைச் செய்தால் குறுகிய பயன் தான் கிட்டும். நீண்டகாலப் பயிர் செய்தால் அதிகப் பயன் கிட்டும்.

ஆன்மிகத்திற்கு வந்துவிட்ட நீங்கள், நீண்டகாலப் பயனை அடைவதில் கருத்தாக இருக்க வேண்டும்.

பிறவியை அறுத்துக் கொண்டு முக்தியைப் பெறும் நீண்டகாலப் பயனில் கருத்தாக இருக்க வேண்டும்.”

**ஆன்மா அழிவிற்கும் வழி வகுக்கும்:**

“உங்கள் ஆன்மாவே உங்களுக்கு அழிவையும் தேடித்தரும். ஆதலின் ஆன்மாவைச் சுத்தப் படுத்திக் கொள்! ஆன்மாவைச் சுத்தப் படுத்தத்தான் ஆன்மிகம் தேவைப்படுகிறது.”

**ஆன்மிக வாதியும் – சாதாரண மனிதனும்:**

“பொறுமையாகவும் நிதானமாகவும் சிந்திக்கிற ஒரு நல்ல ஆன்மிக வாதியால் நல்லது கெட்டதைப் பிரித்து அறிய முடியும். கோபம், அவசர புத்தி கொண்ட ஒரு சாதாரண மனிதனால் நல்லது, கெட்டது, அறிய முடியாது. அதனால் நிதானம் இழந்து தவறு செய்கிறான்.”

## ஆன்மாவிற்காகவே...

“ஆன்மாவிற்காக உடம்பா? உடம்பிற்காக ஆன்மாவா?

ஆன்மாவுக்காகவே உடம்பு உருவம், பந்தம், பாசம், ஆசை எல்லாம் கொடுத்திருக்கிறேன்.”

## ஆன்மிக அறிவு:

“உலக அறிவு மட்டும் போதாது. ஆன்மிக அறிவும் வேண்டும். எதையும் ஆன்மிகக் கண்ணோட்டத்துடன் பார்ப்பதே ஆன்மிக அறிவு. அந்த ஆன்மிக அறிவு இல்லாவிட்டால் சூனியக்காரனும், கடத்தல் காரனும் எல்லோரும் உன் வீட்டைத் தேடி வந்து விடுவார்கள்.”

## ஆன்மிக உணர்வோடு இணைய வேண்டியவை:

“ஒரு செடியை ஏனோ தானோ என்று நட்டு வைத்தால் பயன் கிடைக்காது. வேண்டிய ஆழத்தில் நட வேண்டும்; தண்ணீர் ஊற்ற வேண்டும்; உரம் வைக்க வேண்டும்; ஆடு மாடு மேயாதவாறு வேலியிட்டுப் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் அந்தச் செடியும் வளரும்; உங்களுக்குப் பயனும் கொடுக்கும்.”

அதுபோல ஆன்மிகத்தில் ஈடுபட்டுள்ள உங்களுக்கு பக்தியும் வேண்டும். பிறரிடம் அன்பும் வேண்டும், தொண்டும் வேண்டும்.

பக்தி, அன்பு, தொண்டு என்ற மூன்றும் இணைந்து செயல்பட்டால்தான் ஆன்மிகத்தில் முழுமையான பயன் கிடைக்கும்.”

## ஆன்மிகத்தைப் புரிந்துகொள்ள முடியாது:

“கப்பலில் பயணம் செய்யும்போது நடுக்கடலில் அலைகள் தெரிவதில்லை.

விமானத்தில் பயணம் செய்யும் போது குறிப்பிட்ட தூரம் மேலே போன பிறகு மேகக் கூட்டம் தெரிவதில்லை.

அதுபோல ஆன்மிகத்தில் மேலே வரவரத்தான் ஆன்மிகம் என்ன என்பது தெரியும். அதுவரை ஆன்மிகம் என்றால் என்ன என்று அறிந்து கொள்ள முடியாது.

முக்தி அடைந்த பிறகுதான் அதனைப் புரிந்து கொள்ளவே முடியும்.”

## பொறுமை தேவை:

“இன்றைய மக்களுக்கு அரசியல் சினிமா என்ற இரண்டிலும்



தான் அதிகமான நாட்டம் இருக்கிறது. ஆன்மிகம் தான் முக்கியம் என்பது தெரிவதில்லை.

ஆன்மிகத்தில் பொறுமையாக இருந்தால் வாழ்க்கையில் பெருமை அடையலாம்.”

## சாக்கடையாக மாற்றாதே:

“ஆறு சாக்கடையாக மாறும் சாக்கடை ஆறாக மாறாது. ஆன்மிகத்தைச் சாக்கடையாக மாற்றக் கூடாது.”

## கம்பிமேல் நடப்பது போல...

“அழிவுகள் வரக் காத்துக் கொண்டிருக்கின்றன. ஆன்மிகம் தான் உங்களுக்கு அமைதியைக் கொடுக்கும்.

கம்பி மீது நடப்பவன் கொம்பை வைத்துக்கொண்டு சரிசெய்து நடப்பது போல, ஆன்மிகம் என்ற கொம்பை வைத்துக் கொண்டு வாழ்க்கையைச் சரிசெய்து சொள்ள வேண்டும்.”

## வெளித் தோற்றத்தை வைத்து எடை போடக் கூடாது:

“வெளித் தோற்றத்தை வைத்து ஆன்மிகத்தில் ஒருவனை எடைபோட முடியாது. ஒருவனது உள் மனத்தை வைத்துத்தான் எடை போட முடியும்; எடை போட வேண்டும்.

மாம்பழம் வெளியே பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் உள்ளே வண்டு வாழ்ந்து கொண்டிருகிறது.”

வெளித்தோற்றத்துக்குப் பக்தன் போலவும், ஆன்மிக வாதி போலவும் தோன்றலாம் ஆனால் உள்ளே அழுக்கு இருக்கிறது.

பூ பூத்துக் காய் காய்த்துக் கரு உருவாகும் போதே வண்டும் அதில் முட்டையிட ஆரம்பித்து விடுகிறது.

இயற்கையின் ஆற்றல் அந்தப் புழுவின் வளர்ச்சிக்கு ஏதுவாக அமைகிறது. அதுபோல ஒருவர் வெளித் தோற்றத்தை வைத்து ஆன்மிகத்தில் எடைபோடக்கூடாது. உள் தோற்றத்தை வைத்தே எடை போட வேண்டும்.”

## எப்படி அமைய வேண்டும்?

“ஒருவன் உயிர் ஆன்ம உயிராகவும், குணம் ஆன்ம குணமாகவும், அழகு ஆன்ம அழகாகவும் அறிவு ஆன்மிக அறிவாகவும் அமைந்தால் எல்லாமே சிறப்பாக அமையும்.

ஆனால் குணம் ஆணவ குணமாக இருக்கிறது; அழகு அநாகரிக அழகாக இருக்கிறது. அறிவு விஞ்ஞான அறிவாக இருக்கிறது.

இவ்வாறு அமைந்தால் அழிவுதான் உண்டாகும்.''

**கல்லும் – பஞ்சும்:**

“ஒரு கல் திடப்பொருளாக இருப்பதனால் மேலே தூக்கி எறியும் பொழுது மறுபடியும் கீழே விழுகிறது. ஆனால் லேசான பஞ்சு மேலே பறந்து விடுகிறது.

அதுபோல ஆன்மிகத்தில் மன அழுக்கோடு ஈடுபடும்போது கீழே விழ வேண்டி இருக்கிறது.

மனத்தூய்மையோடு, தொண்டு, தருமம், பக்தி என்பவற்றை மேற்கொண்டு ஆன்மிகத்தில் ஈடுபட்டால் மேலே பறக்கலாம் முன்னேறலாம்.''

**ஒழுக்கம்: உண்மை: தருமம்:**

“ஆன்மிகத் துறையில் ஒழுக்கமும் உண்மையும் இருக்க வேண்டும். இருப்பவன் இல்லாதவனுக்குக் கொடுக்க வேண்டும்.''

**ஆன்மிகமும் அமைதியும்:**

“ஆன்மிகம் ஆன்மிகம் என்றிருந்தால்அமைதி கிடைக்கும். நீ ஒழுக்கமாக இருந்தால் இயற்கையும் ஒழுக்கமாக இருக்கும்.''

**பணமா? மனமா?**

“மரங்கள் அறம் செய்யக் கூடியவை. மனிதனுக்கு அந்தத் தன்மை இல்லை. பணமா? மனமா? என்ற நிலை இருக்கிறது.

பணம் பிணத்திற்குச் சமம். மனமும் குணமும் இருந்தால்தான் எதையும் சாதிக்க முடியும்.

பணத்தினால் புகழ் சம்பாதிக்கலாம். அந்தப் புகழ் புழுவுக்குச் சமானம். புழு எப்போதும் நெளிந்துகொண்டே இருக்கும். புகழாசை கொண்டவன் மனமும் அமைதியின்றி நெளிந்துகொண்டே இருக்கும்.''

**பணமும் – மனமும்:**

“எலும்பும் சதையும் இருந்தால்தான் உடல்! பணமும் மனமும் இருந்தால்தான் வாழ்க்கை!

நல்ல ஆன்மா! தெய்வ பக்தி! தொண்டு மனம்! இவை



வாழ்க்கையில் இருக்க வேண்டும்.''

**ஐம்பொறிகள்: ஐம்புலன்கள்:**

“மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளும் ஐம்புலன்களோடு தொடர்புடையவை. அதுபோல ஆன்மா, தொண்டு, பக்தி, தருமம், தியானம், உள்ளம் இவற்றிற்கு ஒன்றோடு ஒன்று தொடர்பு உண்டு.''

**ஆன்மா: ஆன்மிகம்:**

“ஆன்மாதான் தெய்வம்! ஆன்மிகத்தில் கலகலப்பு இருக்க வேண்டும். சலசலப்பு இருக்கக் கூடாது.''

“ஒருவன் உள்ளே இருக்கிற ஆன்மா தெளிவாகவும் அமைதியாகவும், கோபமில்லாமலும், இருக்க வேண்டும்.''

**தெய்வமும் – மனிதனும்:**

“தெய்வம் யாரையும் நம்பாது; மனிதன் தான் தெய்வத்தை நம்ப வேண்டும்.''

**ஆன்மாவில் ஒருமுகப்பட்ட பார்வை:**

“ஒருவன் பார்க்கிற பார்வை; சிரிக்கிற சிரிப்பு, பெறுகிற கை தட்டல் என்பவை பலவிதமாக இருக்கலாம். ஆனால் ஆன்மா ஒன்றாக இருக்க வேண்டும்.''

**ஆன்மாவை வைத்து...**

“பூமியைத் தோண்டிப் பார்க்கும் போது தான் அதன் உள்ளே உள்ள பொருள் தெரியும். அதேபோல ஒருவனைத் தோண்டிப் பார்த்து அவன் ஆன்மாவை வைத்தே அவனைத் தெரிந்து கொள்ள முடியும்.''

**அம்மாவை உணர்ந்தவன்:**

“கண்ணாடி! வைரம்! - இந்த இரண்டையும் எதிரே வைத்தால் வைரத்தைப் பற்றித் தெரிந்தவன் தான் வைரத்தை எடுக்க முடியும். அவனுக்குத்தான் அதன் அருமையும் தெரியும்.

அதுபோல ஆன்மிக அறிவுள்ளவனும், ஆன்மிக நாட்டம் உள்ளவனும் தான் அம்மாவை உணர முடியும்.''

**ஆன்மா ஒரு பாத்திரம்:**

“ஆன்மா என்பது ஒரு பாத்திரத்தைப் போன்றது. அதை எப்போதும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அழுக்கு மனமும், அழுக்கான எண்ணங்களும் சேர்ந்தால் ஆன்மாவிலும் அழுக்கு படியும். எனவே அவ்வப்போது ஆன்மாவைச் சுத்தப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.”

**ஆன்மாவே எல்லாம்:**

“ஆன்மாதான் மின்சாரம்! ஆன்மாதான் விஞ்ஞானம்! எல்லாமும் ஆன்மாவால் உருவாக்கப் பட்டவைகளே!

பெரிய மனிதனும் ஆன்மா தான்! சின்ன மனிதனும் ஆன்மா தான்!

எல்லாமும் ஆன்மாதான்!

உன்னை உயர்த்துவதும் ஆன்மாதான்! உன்னை அழிப்பதும் ஆன்மாதான்!

நான் என்ற ஆணவம், நான் என்ற எண்ணம் வரும் போது உன்னை அழிவுக்குக் கொண்டு செல்கிறது.”

**ஆன்மிக அறிவு தேவை:**

“சிறிய விளக்கில் எரிவதும் தீ தான்! பெரிய விளக்கில் எரிவதும் தீ தான்! சூரியனும் ஒரு நெருப்புப் பிழம்புதான்! தோற்றம் தான் வேறு வேறு! இதையெல்லாம் வேறுபடுத்தி உணர ஆன்மிக அறிவு தேவை!”

**மனத்தில் அழுக்கை வைத்துக் கொண்டு...**

“மனத்தில் அழுக்கை வைத்துக் கொண்டு நீ புதுப்புது இயக்கங்களுக்குப் போனாலும், புதுப்புது சாமியார்களிடம் போனாலும் உன் மன அழுக்கு நீங்கிவிடாது.

பழுதடைந்த பழைய கடிகாரத்தில் புதிய செல் (Cell) போட்டாலும் ஓடாது. அதுபோல உன் மனத்தில் அழுக்கை வைத்துக் கொண்டு எங்கே அலைந்தாலு ஆன்ம வளர்ச்சி கிடைத்து விடாது.

உன் மனம் ஆன்மிக உணர்வுடன் செயல்பட வேண்டும். ஆன்மிக உணர்வுடன் தெய்வத்தை வழிபட வேண்டும். அப்போதுதான் பயன் கிடைக்கும். ஆன்ம வளர்ச்சியும் ஏற்படும்.

சிறிய பாம்பு! பெரிய பாம்பு! இரண்டிற்கும் விஷம் ஒன்றுதான்!”



**அருள் – பொருள்:**

“அருளை அருளாகத்தான் புரிந்து கொள்ள வேண்டும். பொருளைப் பொருளாகப் புரிந்து கொள்ளக் கூடாது.”

**வித்தும் – விளைவும்:**

“ஒரு விதையின் உள்ளே அது செடியாகவோ, மரமாகவோ வளர்வதற்கான உயிர்த்தன்மை அடங்கிக் கிடக்கிறது. ஆனாலும், அந்த விதையை நிலத்தில் நட்டுத் தண்ணீர் ஊற்றி, வளர்க்கிற போதுதான் அது செடியாகி, மரமாகி பூ பூத்துக் காய் காய்த்துக் கனியாகிறது.

அதுபோல மனிதப் பிறப்பிலும் கரு உண்டாகி, வளர்ந்து வெளி உலகத்திற்கு வரும்போது தான் உயிர் வளர்ச்சி வெளிப்படத் தெரிகிறது.”

**புகைப்படக் கருவியும் – மனமும்:**

“ஒரு புகைப்படக் கருவி ஒளியின் மூலமாக எவ்வாறு ஓர் உருவத்தைக் பதிவு செய்து கொள்கிறதோ, அதுபோல உங்கள் மனத்தில் எப்பொழுதும் நல்லதையே பதிவு செய்து கொள்ள வேண்டும்.”

**எல்லாம் வல்லது ஆன்மிகம்:**

“ஒன்றை வெல்ல - ஒன்றிலிருந்து அள்ள - ஒன்றைக் கொடுக்க ஆன்மிகத்தினால் தான் முடியும். ஆன்மிகத்தில் உண்மை உணர்வுடன் இருக்க வேண்டும். நீங்கள் ஊமையாக இருந்து கொண்டால் அதுவும் ஊமையாக மாறிவிடும்.”

**ஆன்ம பலம்:**

“ஆன்மிகம் என்பது பச்சை மண்பாண்டம் போன்றது. அதில் தண்ணீர் நிரம்பினால் நிற்காது. ஆனால் உனக்கு ஆன்ம பலம் இருந்தால் தண்ணீர் கசியாமல் நிற்க வைக்க முடியும்.”

**படித்தவன் ஆன்மிகம் – பாமரன் ஆன்மிகம்:**

“மண்பானையை வெயிலில் வைத்துத் தீயில் சுட்டு அடுப்பில் வைத்தாலும், அப்பானை நடுவில் ஒரு சிறிய ஓட்டை இருந்தால் தண்ணீர் கசியும். நெருப்பு எரிவதுபோல இருந்தாலும் ஓட்டைப் பானையில் சூடும் ஏறாது; அரிசியும் வேகாது.

படித்தவன் ஆன்மிகம் ஓட்டைக்குடம் போன்றது. பாமர மக்களுடைய ஆன்மிகம் அறிவில்லாத ஆன்மிகம் என்றாலும் ஓட்டை இல்லாத குடம் போன்றது.''

## தெய்வத்திற்குச் சமம்:

''எவன் ஒருவன் தனக்காக வாழாமல், பிறருக்காகப் பாசமில்லாமலும், பற்று இல்லாமலும் வாழ்கிறானோ அவன் தெய்வத்திற்குச் சமம் ஆவான்.''

## ஆன்மிக அறிவு:

''வழியில் சிங்கம், புலி இருந்தாலும் ஆன்மிக அறிவுள்ளவன், அம்மா இருக்கிறாள் என்ற தைரியத்தில் தாண்டிப் போய்விடுவான்.

ஆன்ம பரிபக்குவம் இல்லாதவனோ, பயத்தால் அதனை உசுப்பி விட்டுத் தன் அழிவைத் தானே தேடிக்கொள்வான்.''

## ஆன்ம பரிபக்குவம்:

''வைரம் பாய்ந்த ஆன்ம பரிபக்குவம் உள்ளவன் வெட்டினாலும், குத்தினாலும் வலி தெரியவில்லை என்பான். அந்த ஆன்ம பரிபக்குவம் இல்லாதவன் வலி தெரிவதை உணர்வான். உன் ஆன்மா வைரம் பாய்ந்ததாக மாறவேண்டும்.''

''மரத்தில் ஏறும்போது ஏறிவிடுகிறாய் மேலே இருந்து கீழே பார்த்தால் பயமாக உள்ளது; இறங்கத் தெரியாமல் மனம் நடுங்குகிறது.

சிறிய மரமாக இருக்கும்போதே ஏறிப் பழகியிருந்தால் பயம் தெரியாது.

அதுபோல ஆன்மிகத்தில் முதலிலிருந்தே பழகி விட்டால்படிப்படியாக ஆன்ம பரிபக்குவம் வந்து விடும்.''

## தெய்வ சக்தி உண்டாக...

''தொண்டு செய்து கொண்டே வருவதோடு உங்கள் உள்ளத்தையும் ஒருமுகப்படுத்தினால் தெய்வ சக்தி உண்டாகும். அவ்வாறு கிடைக்கும் தெய்வசக்தி அழியாது. நான் என்ற ஆணவம் வரும் போது தான் அந்தத் தெய்வ சக்தி விலகி விடும்.''

## உன்னை அரிக்கும் பூச்சி:

''தாவரத்தையும் பூச்சி அரிக்கிறது. 'நான்' என்ற பூச்சி உன்னையும் அரிக்கிறது.''



## மனத் தூய்மை:

''உன் மனம் மட்டும் தூய்மையாக இருந்து விட்டால் எந்த வினையும் உன்னை நெருங்காது. எந்தச் சூனியமும் கிடையாது.''

## பாவம் நெருங்காது:

''மற்றவர்களிடமெல்லாம் நீ உண்மையான பாசம் காட்டினால் நீ பாவம் செய்ய முடியாது''

## ஆன்மிகம்: விஷ முறிவு:

''புல் எப்படி மிருகங்கட்கு விஷ முறிவாக ஆகிறதோ, அதே போல உங்கள் உள்ளத்தில் உள்ள விஷங்கட்கு ஆன்மிகம் தான் விஷ முறிவு என்ற சிறந்த மருந்து.''

## உள்ளிருக்கும் ஆன்ம ஜோதியைப் பார்க்கலாம்:

''வெண்ணெயில் திரிபோட்டுப் பற்ற வைத்தால் உடனே எரியாது. எண்ணெயில் திரிபோட்டுப் பற்ற வைத்தால் உடனே பற்றிக் கொள்ளும். வெண்ணெய் சூடு பட்டு உருகிய பின்னர்தான் எரிய ஆரம்பிக்கும்.

உன்னிடம் படிந்துள்ள மன அழுக்குகள் நீங்கி, மனம் தூய்மை அடைந்து, அது மென்மையாக மாறும் போது தான் உனக்குள் இருக்கிற ஆன்ம ஜோதியை உணர முடியும். ஆன்மாவையே ஜோதி வடிவமாகக் காண முடியும். பாமரனுக்குத்தான் ஜோதிப் பக்குவம் தெரியும்.''

## ஆன்மிகத்தில் ஆழமாகப் போகப் போக...

''பூமியைத் தோண்டத் தோண்ட பல பொருள்கள் வெளிப்படுகின்றன. தண்ணீர், எண்ணெய், பெட்ரோல், கற்பாறை, இரும்பு, தங்கம், வைரம், என வேறு வேறு பொருள்கள் வெளி வருகின்றன.

அதுபோல ஆன்மிகத்திலும் நீங்கள் ஆழமாகப் போகப் போக உங்கள் ஆன்மிக உணர்வு உயர்வடைந்து கொண்டே செல்லும் அவ்வாறு ஆன்மிக உணர்வு உயர்வடைவதற்காகவே அன்னதானம், தொண்டு, தருமம், பிறருக்கு உதவி செய்தல் போன்றவற்றை வலியுறுத்துகிறேன். இவற்றால் உங்களுக்குத் தரும சிந்தனை மேலோங்கி வளரும். நீங்களும் ஆன்மிகத்தில் உயர்ந்து வளர்வீர்கள்.''

**அரசியலும் – ஆன்மிகமும்:**

“ஆரம்பத்தில் ஒருவன் ஒரு கட்சியில் ஈடுபடும் போது தீவிரமாக ஈடுபடுகிறான். தலைவன் உருவத்தையோ, கட்சிக் கொடியையோ, சின்னத்தையோ கையில் பச்சை குத்திக் கொள்கிறான். நாளா வட்டத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுக் கட்சியை விட்டு விலகுகிறான். கட்சியை விட்டு விலகினாலும் கையில் குத்திக் கொண்ட பச்சை அழிவதில்லை. அதற்காகக் கையை வெட்டவா முடியும்?

ஆரம்பத்தில் என் ஆலயத்துக்கு ஆர்வமாக வந்தீர்கள். வந்ததற்கு ஒரு பயன் தருகிறேன். அடுத்த ஒன்று நடக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள். நினைத்தது நடக்கவில்லை என்று வேறு ஒரு ஆலயம், வேறு ஒரு தெய்வம், வேறு ஒரு சாமியார் என்று ஓடுகிறீர்கள்.

உங்களை அறியாமல் செய்த பாவத்தால்தான் உங்களுக்கு கஷ்டங்கள் வருகின்றன. வேறு இடம் செல்வதால் மட்டும் அந்தக் கஷ்டங்கள் நீங்குவதுமில்லை. அவ்வாறு வேறிடம் செல்வதால் எந்தப் பயனும் ஏற்படுவதில்லை. இது உங்களுக்குப் புரிவதும் இல்லை.

வினைப்பயனை உரிய காலம் வரை அனுபவித்தே கழிக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியவில்லை.”

**உள்ளிருந்தே பதில் கிடைக்கும்:**

“உன்னுடைய ஆன்மாவைத் தட்டி எழுப்பிக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தால் அதற்கான பதில் உன் உள்ளிருந்தே கிடைக்கும். நான் யார்? எங்கிருந்து வந்தேன்? என்ன செய்ய வேண்டும்? என்று ஆன்மாவைத் தட்டிக் கேட்டுக் கொண்டிருந்தால் பதில் கிடைக்கும். ஆனால் நீ நினைக்கிற நேரத்தில் கிடைக்காது. அதற்கான முயற்சியை நீ செய்து கொண்டே இருக்க வேண்டும். உன் புலன்களையும் மனத்தையும் அடக்கி ஒருநிலைப்படுத்த வேண்டும். உன் மனம் ஒரு முகப்பட்டுக் குவிய வேண்டும்.”

**கதிரும் பதரும்:**

“பத்துக் கதிர் முற்றி அவற்றில் இரண்டு கதிர் பதராகி விட்டது என்பதால் அந்த இரண்டு கதிர்களுக்காகத் தனியாகத் தண்ணீர் பாய்ச்ச முடியாது; தனியாக உரம் வைக்க முடியாது.”

நான் இன்று உங்களிடம் வந்திருக்கிற இந்தக் காலத்திலேயே நீங்கள் கதிராக முற்றிப் பயனடைய வேண்டும். பதராகி விடாமல்



பார்த்துக் கொள்ள வேண்டும். வினையும் விளைவும் உங்களிடம் தான் உள்ளது.

**நான் நினைத்தால் தான்...**

“இறப்பு என்பது இளமை, முதுமை பார்த்து வருவதில்லை. எப்போதும் இளமையாக இருப்பதற்கு மருந்து இல்லை. பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம், வாழ்ந்தது போதும். இனிப் போய்விடுவோம் என்று நீங்கள் நினைத்தாலும் முடியாது. நான் நினைத்துத் தேதி வைத்தால் தான் போக முடியும்.”

**மாடும் மனிதனும்:**

“மாட்டுக்கும் மனிதனுக்கும் ஒரு குணம் உண்டு. ஒரு இடம் பச்சையாக இருந்தால் மாட்டுக்கும் பிடிக்காது; மனிதனுக்கும் பிடிக்காது. தருமம் செய்தாலும் பிடிக்காது; செய்யாவிட்டலும் பிடிக்காது. தொண்டு செய்தாலும் பிடிக்காது; செய்யா விட்டாலும் பிடிக்காது, மனித இனம் நிரந்தர புத்தி இல்லாதது.”

**ஆன்மாதான் செங்கோல்! திறவு கோல்!**

“ஆன்மாவைச் சுத்தமாக வைத்துக்கொள்! அதற்கு உன் மனத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்! மனத்தின் அழுக்கு ஆன்மா விலும் படியும்.

ஆன்மாதான் உனக்கு இம்மைக்குச் செங்கோல்! ஆன்மாதான் உன் மறுமைக்குத் திறவுகோல்!

**நல்ல மனமும் – ஆன்மாவும்:**

“நன்றாக விளைகிற ஒரு நிலத்தில் தான் விதையை விதைக்க முடியும். பூமிப் பரப்பெல்லாம் ஒரே மாதிரியாக இருந்தாலும் அங்கங்கே மண்ணின் தன்மையில் மாறுபாடு உண்டு. விதைக்கும் தன்மையிலும் மாறுபாடு உண்டு. நல்ல மனம் என்கிற நிலத்தில் ஆன்மா என்கிற விதையை விதைத்தால் பலன் உண்டு.”

**உன் ஆன்மாவை ஏமாற்ற முடியாது:**

“இயல்பாக இருக்கும் போது ஒரு பேச்சு பேசுகிறான். கூட்டத்தில் ஒரு பேச்சு பேசுகிறான்; வேஷம் போடும் போது ஒரு பேச்சுப் பேசுகிறான்.

பாஷையை மாற்றலாம் பாதையை மாற்றலாம். தோற்றத்தை மாற்றி நடிக்கலாம் ஆனால் உனக்குள்ளே இருக்கும் ஆன்மாவை மட்டும் உன்னால் மாற்ற முடியாது. அதை ஏமாற்றவும் முடியாது.”

**தெய்வமான மிருகங்கள்; மிருகங்களான மனிதர்கள்:**

"குரங்கு, புலி, சிங்கம், மாடு, எலி போன்ற மிருகங்களெல்லாம் கூட மனிதனுடைய வழிபாட்டிற்கு உரியவை ஆகிவிட்டன. இன்னொரு புறம் மனிதனோ மிருகமாகிவிட்டான். அனைத்து உயிர்களும் தெய்வ இனம்போல வாழ வேண்டும். அவ்வாறு வாழக் கற்றுக் கொடுப்பதுதான் ஆன்மிகம்."

**ஆன்மாவும் – மனமும்:**

"ஆன்மா எதை எதைச் செய்யச் சொல்கிறதோ அவை மனத்திற்கு பிடிப்பதில்லை.

உங்கள் உள்ளிருக்கும் ஆன்மாவிற்கு எதிராவே உங்கள் மனம் செயல்படுகிறது. ஆகட்டும் பார்ப்போம் என்று நினைத்துக் கொண்டு செயல்படுகிறீர்கள். அவ்வாறு நினைத்து வாழ்ந்தால் படிப்படியாக ஆன்மிகத்திலிருந்து அகற்றப்படுவீர்கள்.

ஆன்மிகத்திற்கு எதிராக ஆடுகிறவன்; ஓடுகிறவன், சிரித்துத் துள்ளுகிறவன் எல்லாம் ஒரு நாள் அடங்கி விடுவான்."

**தன் முயற்சி தேவை:**

"தென்னை, வாழை, பனை போன்ற மரங்கள் தம்மைத் தாமே வளர்த்துக் கொள்கின்றன. அதுபோல மனிதனும் தன்னைத் தானே வளர்த்துக் கொள்ள வேண்டும்."

**விலை கொடுத்து வாங்க முடியாது:**

"பணத்தைக் கொடுத்தும் சொத்தைக் கொடுத்தும் ஆன்மிகத்தை விலைக்கு வாங்க முடியாது."

**எதற்கும் பக்குவம் தேவை:**

"பாகு எடுப்பதற்கும், காபி போடுவதற்கும், குழம்பு வைப்பதற்கும், முகத்திற்குப் பவுடர் போடுவதற்கும், சிகை அலங்காரம் செய்து கொள்வதற்கும் மற்றும் எல்லாவற்றுக்கும் பக்குவம் தேவைப்படுகிறது. அதுபோலவே ஆன்மிகத் துறையிலும் உங்களுக்குப் பக்குவம் தேவை."

**ஒன்று சேர்ப்பதுதான் ஆன்மிகம்:**

"வளையில் இருக்கும் எலி, புற்றிலிருக்கும் பாம்பு; புதரில் இருக்கும் புலி வீட்டின் மூலையில் முடங்கியிருக்கும் பூனை ஆகிய எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்ப்பதுதான் ஆன்மிகம்."



**எடைபோட முடியாது:**

"ஒரு புத்தகத்தை எடை போடலாம். அதில் உள்ள கருத்தை எடை போட முடியாது. உடம்பை எடைபோடலாம்; ஆன்மாவை எடைபோட முடியாது."

**ஆன்மிகம் இல்லையென்றால்...**

"ஆன்மிகம் இல்லையென்றால் உலகமெங்கும் வெட்டு குத்து அழிவுகள்தான் ஓங்கும்"

**ஆன்மிகத்தில் அவசரம் கூடாது:**

"ஆன்மிகத் துறையில் நிதானமாகச் செயல்பட்டால்தான் ஒரு சீரான முன்னேற்றத்தை அடைய முடியும். துவைத்த துணியை முள்ளில் போட்டால் மெதுவாக எடுத்துவிடலாம். பூனைக்காஞ்சான் செடி மேல் பட்டு விட்டால் அந்தத் துணி பட்ட இடமெல்லாம் அரிப்பு ஏற்படும். செம்மண்ணில் பட்டால் கறை ஏற்படும். ஆகவே எதிலும் நிதானம் தேவை."

**மனிதனின் எண்ணமும் – செயலும்:**

"நாக்கில் சனி இருக்கிறது; கையில் உணவு இருக்கிறது; எள்ளில் எண்ணெய் இருக்கிறது; பழத்தில் விதை இருக்கிறது. விதையில் மரம், செடி, கொடி இருக்கிறது. உள்ளத்தில் ஆன்மா இருக்கிறது. அந்த ஆன்மாவில் பந்த பாசம் இருக்கிறது.

இப்படி ஒன்றுக்குள் ஒன்று என எல்லாம் இருக்கிறது.

அதே போல மனிதனின் எண்ணமும் செயலும் ஒன்றாக நிலைத்து நிற்க வேண்டும்."

**என்றும் நிலையானவை:**

"தருமம், ஆன்மிகம், இயற்கை இவை மூன்றும் என்றும் நிலையானவை."

**காலம் கனிய வேண்டும்:**

"ஒரு செடியையோ, விதையையோ நட்டு வைத்துவிட்டு உடனே பலனை எதிர்பார்க்கக் கூடாது. செடி வளர்ந்து மரமாகிப் பூ பூத்துக் காய் காய்த்துக் கனி வந்த பிறகுதான் அதன் பலனை அனுபவிக்க முடியும். அதுபோலத்தான் ஆன்மிகத் துறையிலும். ஆன்மிகத்தில் ஈடுபட்ட உடனேயே பலன் கிடைக்கும் என்று நினைக்கக் கூடாது.

மரம் பக்குவப்பட்டுப் பலன் தருவது போல, நீங்களும் பொறுமையுடன் பக்குவப்படும் போது கட்டாயம் பலன் கிடைக்கும்"

**ஆன்மாவும் – அடிமைத் தன்மையும்:**

"ஒரு தாய்க்கு அவள் பிள்ளை அடிமையாகலாம்.

ஒரு பிள்ளைக்குத் தாய் அடிமையாகலாம்.

அதுபோல உன் ஆன்மாவிற்கு நீ அடிமையே தவிர. உனக்கு ஆன்மா அடிமை அல்ல.

உன் ஆன்மா சொல்வதை நீ செய்ய வேண்டுமே தவிர நீ சொல்வதை ஆன்மா செய்யக் கூடாது."

**பயம் கொள்ளத் தேவையில்லை:**

"தாயின் மடியில் இருக்கும் வரை குழந்தைக்கு எந்த ஆபத்தும் இல்லை. அதுபோல ஆன்மிகத்தில் உறுதியான ஈடுபாடு இருக்கும் வரை எந்தப் பயமும் கொள்ளத் தேவையில்லை."

**ஆன்மிகத்தின் சக்தி:**

"ஆன்மிகம் ஒன்றுதான் எளிமையும் வலிமையும் கொண்டது. எனவே மக்களுக்குத் தொண்டு செய்து வர வேண்டும்."

**ஆன்மிகத்தில் ஈடுபடுவதால்...**

"உணவுக்கும் தண்ணீருக்கும் மக்கள் ஏங்கும் காலம் வரும். ஆன்மிகத்தில் ஈடுபட்டால் குண நலமும், நல்ல குலத்தில் பிறந்தவர்கள் என்ற குலப்பெயரும், நிறை குடமான வாழ்வும் உண்டாகும்."

**நான் சொல்கிறபடி யாரும் நடப்பதில்லை:**

"ஆரம்பத்திலிருந்து நான் சொல்கிறபடி ஆன்மிகத்தில் ஈடுபாடு கொண்டு வாழ்ந்திருந்தால் நன்றாகவே வளர்ந்திருப்பீர்கள்.

ஆன்மிகத்தில் முன்னேறி விட்டோம் என்று நினைத்துக் கரை ஏறுவதற்குள் வழுக்கி விழுந்து விடுகிறீர்கள்.

நீங்கள் ஆன்மிகத்தில் முழுமையாக வளர்வதற்குள் உங்களை விட்டு நான் போய்விடுவேன்."

**ஆன்மா என ஒன்று உண்டா?**

"ஆன்மா என்கிற ஒன்று உண்டா இல்லையா? என்று படித்தவன் சந்தேகப்படுகிறான். ஆன்மா என்ற ஒன்றைக் காட்ட முடியுமா? என்றும் கேட்கிறான்.

தண்ணீரே குடிக்காத ஒரு செடியையோ, ஒரு மிருகத்தையோ, ஒரு மனிதனையோ காட்டு.

நான் உங்களுக்கு ஆன்மாவைக் காட்டுகிறேன்."



**ஓடிக் கொண்டிருக்கும் மனித வாழ்க்கை:**

"உறவு, ஊக்கம், பந்தம், பாசம், மதிப்பு, ஆசை, புகழ், மாலை, மரியாதை, பொன்னாடை ஏச்சு, பேச்சு, அவன் என்ன பெரியவன்? இவன் என்ன பெரியவன்? பெரியது என்ன? சிறியது என்ன? அந்த உறவு அப்படி; இந்த உறவு இப்படி; அவன் சாதி அப்படி; இவன் சாதி இப்படி.

- என்ற வேறுபாடுகளிலும் முரண்பாடுகளிலும் காலம் கழித்தபடி மனிதவாழ்வு ஓடிக் கொண்டிருக்கிறது.

எத்தனை வேறுபாடுகளும், முரண்பாடுகளும இருந்தாலும் ஆன்மா என்பது ஒன்று தான். அதனை எண்ணி எல்லோரும் ஒன்றுபட வேண்டும். வேறுபாடுகள் இருக்கக் கூடாது."

**மன வேகத்தைக் கட்டுப்படுத்து!**

"தண்ணீரையும் உணவையும் உட்கொண்டாலும், உடம்புக்கு இயங்கும் சக்தி தேவைப்படுகிறது. உங்கள் மனம் எது எதற்கோ அலைகிறது. சொத்து சேர்த்து வைக்கவும் அலைகிறது இவ்வாறு கண்டதற்கு அலையாதபடி அந்த மன வேகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். வேண்டாத எண்ணங்களோடு வாழ்கிறீர்கள். இப்படித்தான் வாழ வேண்டும் என்று திட்டமிட்டு வாழ முயன்றாலும் முடிவதில்லை, ஆசைப்படுவது அழகுப் பொருளேயானாலும் அதற்கும் அழிவு உண்டு. எனவே உங்கள் மன வேகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்."

**ஆன்மாவும் – உயிரும்:**

"கடலின் அலைக்கும் கடலின் கரைக்கும் உறவு உண்டு. ஆன்மாவிற்கும் உயிருக்கும் உறவு உண்டு.

ஆன்மாவும் உயிரும் சேர்ந்தது தான் சக்தி!

புடம் போட்ட தங்கமானாலும் செப்பும் கலந்தால்தான் நீ விரும்பும் ஆபரணத்தைச் செய்ய முடியும்."

**தூண்டுவது ஆன்மாதான்!**

"அதர்மம் என்றும் நீடிக்காது; தர்மம் தான் நிலைத்து நிற்கும். அதுவே ஒருவன் வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

ஒருவனைத் தருமம் செய்யச் சொல்வதும் அவன் ஆன்மாதான்; திருடச் சொல்லித் தூண்டுவதும் அவன் ஆன்மாதான்.

இல்லறம் நல்லறமாவது அவரவர் ஆன்மாவிடம் தான் உள்ளது."

**போதையை நாடி:**

"போதைப் பொருள்களை நாடிப் போகிற காலம் இது!"

மற்ற போதைகள் உன்னை அழிக்கும்; ஆன்மிகம் என்ற போதை உன்னை வளர்க்கும். மற்ற போதைகளில் தன்னை மறக்கும் தன்மை உண்டு என்றாலும் அது பயன் தராது. ஆன்மிகத்திலும் தியானத்திலும் தன்னை மறக்கும் தன்மை உண்டு. இவற்றில் சிறந்த பயனும் உண்டு. உயர்ந்த அனுபவமும் உண்டு. இந்த போதையை விட்டு மற்ற போதைகளுக்கு அலையக் கூடாது.

**ஆன்மிகவாதிகள்:**

"சாத்துக்குடிப் பழம், ஆரஞ்சுப்பழம், கிச்சிலி மூன்றும் பார்ப்பதற்கு ஒரே மாதிரி இருக்கும். இருந்தாலும் அவற்றின் ருசியும் பயனும் வேறுபடும்.

அதுபோல மனிதர்கள் எல்லாம் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாக இருந்தாலும் மனிதர்களில் பல ரகம் உண்டு.

ஆன்மிகவாதிகள் போலத் தோன்றுபவர்கள் எல்லாம் உண்மையான ஆன்மிகவாதியாக இருக்க மாட்டார்கள். அவர்களுள் துருப்பிடித்த ஆணி போன்றவர்கள் உண்டு."

**ஆன்மிகம்:**

"எளிதாக அறிந்து கொள்வதும், எளிதாக வாங்கக் கூடியதும் ஆன்மிகம் ஒன்று தான்."

**மனம் எப்படி இருக்க வேண்டும்:**

"உன் மனம் குரங்குபோல ஆணவம் பிடித்து அலையக் கூடாது. ஆடக் கூடாது. வைரம் போல உறுதியாக இருக்கக் வேண்டும்."

**ஆன்மிகத்தின் தேவை:**

"பிச்சை ஒரு பக்கம்; பிட் பாக்கெட் ஒரு பக்கம்; கொலை ஒரு பக்கம்; காவல்துறை ஒரு பக்கம்; இவை அனைத்தும் பெருகிக் கொண்டே போனால் என்ன ஆகும்? இவை பெருகிக் கொண்டு போகாமல் தடுத்து நிறுத்தவே ஆன்மிகம்!"

**உன் கையே உன்னைக் குத்தும்:**

"ஆன்மிகத்தில் ஈடுபாடு வைத்துக் கொண்டு, பக்தியும் தொண்டும் வளர்த்துக் கொண்டு தியானம், மௌனம், தருமம், ஒழுக்கம் என்று வாழவில்லையேல் உன் கையே உன்னைக் குத்தும்;



உன் கையே உன்னைக் கொல்லும். உன்னை மருந்து சாப்பிடவும் வைக்கும்; உன்னை அழிக்கவும் செய்யும்."

**பயிர்ப் பாதுகாப்பும்; ஆன்மிகப் பாதுகாப்பும்:**

"சேற்றைக் குழப்பி, நாற்று நட்டு களை எடுத்து, பயிர் வைத்து, அந்தப் பயிர் விளைச்சலை உன் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு வரும் வரையில் எப்படியெல்லாம் பாதுகாக்கிறாயோ, அப்படியே ஆன்மிகத்திலும் உன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிப் பல காரியங்களைச் செய்து கொள்ள வேண்டும்.

தொண்டு செய்வது; வழிபாடு செய்வது; தான தருமம் செய்வது; அபிடேகம் செய்வது; கலச விளக்கு வேள்விப் பூசை செய்வது; மௌனம் இருப்பது போன்ற பணிகளால் உனக்குப் பயனும் கிடைக்கும், பாதுகாப்பும் கிடைக்கும்"

களைகளால் பயிர் அழிய வாய்ப்பு உண்டு. ஆனால் ஆன்மிக ஈடுபாட்டுடன் நீ செய்யும் தருமத்தின் பயனை யாராலும் அழிக்க முடியாது."

**ஆன்மிகத்துறையில் ஏமாற்றுகிறவன்:**

"ஆன்மிகத் துறையில் தெய்வத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு பிறரை ஏமாற்றுகிறவன், தான் ஏமாறுகின்றானே தவிர, தெய்வம் ஏமாறுவதில்லை."

**ஆன்ம அழகு:**

"உடல் அழகு போதாது. ஆன்ம அழகு தான் முக்கியம். ஆன்மா ஒன்று சேர்ந்தால் தெய்வம் ஆகலாம்."

**ஆன்மாவில் அழுக்கு:**

"பித்தளையிலும் அழுக்கு சேரும், ஆன்மாவிலும் அழுக்கு சேரும்.

பித்தளையில் அழுக்குச் சேர்ந்தால் பாத்திரத்தில் பொத்தல் ஏற்படும்.

ஆன்மாவில் அழுக்கு சேர்ந்தால் உனக்கு அழிவுதான் வரும்.

ஆன்மாவில் அழுக்கு சேராமல் பார்த்துக் கொள்."

**இருபது பேரில் இருவருக்கு மட்டுமே அருள்!**

"ஆதிபராசக்தி என்பது ஒரு பழுத்த மரம். இம்மரத்தின் பழங்களையும் பயன்களையும் எல்லோரும் அனுபவிக்க முடியும்.

ஆனாலும் இருபது பேர்களில் இரண்டு பேர்க்கு மட்டும் தான் அருள் கிடைக்கும்.

மற்றவர்கள் ஆணவம் காரணமாகப் பழத்தின் சுவையையும், பலனையும் அனுபவிக்கும் வாய்ப்பை இழப்பவர்கள்.

நம் ஊரில் இல்லாத நிலமா? நம் ஊரில் இல்லாத சொத்தா? என்று கூறி ஒரு கிளையை வெட்டிக் கொண்டுபோய்த் தன் ஊரில் நடுகின்றான். அவனது ஆணவப் பேச்சால் அம் மரத்தின் கிளை பட்டுப்போய் விடுகிறது. தாய் மரம் கிளையை இழந்தாலும், அதன் ஆணிவேர் அழிவதில்லை.

அதுபோல ஆதிபராசக்தியை நீ வழிபடாவிட்டால் நஷ்டம் எனக்கல்ல!

தாகம் எடுத்தவன் தானே தண்ணீர் குடிக்க வேண்டும்? அப்போதுதானே அவன் தாகம் அடங்கும்?

அதுபோல அருள்தாகம் கொண்டவன் மற்றவர்களைப் பற்றிப் பொருட்படுத்தாமல், வந்தோமா... தொண்டு செய்தோமா... தான தருமம் செய்தோமா... என அவற்றில் குறியாக இருக்க வேண்டும்.

அத்தகையவர்களுக்கே அமைதியும் நிம்மதியும் கிடைக்கும். அருளும் கிடைக்கும்.''

**உனக்குச் சொந்தமும் எனக்குச் சொந்தமும்:**

''ஆக்கப்பட்ட பொருளெல்லாம் உனக்குச் சொந்தம் என்றால் உன் உயிரும் ஆன்மாவும் எனக்குச் சொந்தம்.''

**என்றும் மாறாதது:**

''உலகம் மாறினாலும், இயற்கை மாறாது. உள்ளம் மாறினாலும் ஆன்மா மாறாது.''

**தொண்டு நிலையானது:**

''மனிதனுக்குப் பிறப்பு, வளர்ப்பு, சிறப்பு என மாறி மாறி வந்தாலும் அவன் செய்யும் ஆன்மிகத் தொண்டுதான் நிலையானது.''

**ஆன்மிகத்திற்குத் தேவை:**

''விதை உண்டாக விதைதான் தேவை. மனிதன் உருவாக ஆண், பெண் என்னும் இருபால் தேவை. ஆன்மிகத்திற்குத் தருமமும் தொண்டும் தேவை.''



**உன் ஆன்மா படும் வேதனை:**

''இயற்கையாகவும், சுதந்திரமாகவும், வாழ்வதை விட்டு விட்டுப் பொறியில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் ஒரு எலி, தான் தான் அந்தத் தவிப்பை உணர முடியும். பொறியில் அகப்பட்ட எலி தவிக்கிற தவிப்பு உனக்கு விளையாட்டாக இருக்கலாம். வேதனை அந்த எலிக்குத்தான்.

அதுபோல, ஐம்பொறிகளையும் ஐம்புலன்களையும் அடக்காமல் நீ தவறு செய்தால் உன் ஆன்மா தான் அந்த வேதனையை உணர முடியும்''

**மனிதனும் ஆன்மாவும்:**

''காந்தத்தை வைத்துப் பல பொருள்களை இயக்குவது போல, மனிதன் உயிரினாலும், ஆன்மாவினாலும் தொடு உணர்ச்சியைப் பெறுகிறான். உணர்வுகளிலும் அவன் உடலில் அசைவு ஏற்படுகிறது. அவன் உழைக்கவும், நடமாடவும் உணவு அவசியம். அதுபோலப் பூமிக்கும் உணவு அவசியம். ஆகவே அது தனக்குத் தேவையான தண்ணீரையும் சத்துப் பொருள்களையும் தேக்கி வைத்துக் கொள்கிறது.''

**ஆன்மிகத்தில் உண்மையான ஈடுபாடு...**

''தொலைவில் தெரியும் கானல்நீர் ஒரு பொய்த் தோற்றமே. உண்மையில் அங்கே நீர் இல்லை. உன் கண்ணும், மனமும், மூளையும் பழுது படுவதால்தான் அது கானல் நீராகத் தோன்றுகிறது. அதுபோல ஆன்மிகத்தில் உண்மையான ஈடுபாடு இல்லையென்றால் உனக்கு ஆன்மிகமும் கானல் நீராகத்தான் காட்சி அளிக்கும்.''

**கஷ்டங்களுக்கு இடையிலும் ஆன்மிக ஈடுபாடு தேவை:**

''பிறந்தாலும் கஷ்டம்; இறந்தாலும் கஷ்டம்; தெய்வத்தை வழிபட்டாலும் கஷ்டம்; வழிபடாவிட்டாலும் கஷ்டம்.

வாழ்க்கையில் இனிப்பும் உண்டு; கசப்பும் உண்டு; உவர்ப்பும் உண்டு; துவர்ப்பும் உண்டு; ஆனாலும் மனிதன் தெய்வத்தைப் பற்றிக் கொண்டு ஆன்மிகத்தில் ஈடுபடுவது சிறந்தது.

பணம், பணம் என்று இருந்தால் மட்டும் போதாது. பணத்தோடு பக்தியும் வேண்டும். சக்தியும் துணை இருக்க வேண்டும். அந்தச் சக்திதான் ஆதிபராசக்தி!''

**ஆன்மிகம் என்ற வரம்பு:**

"இன்று நல்லவனெல்லாம் கள்ளனாக மாறி வருகிறான். கள்ளன் எல்லாம் கொலைகாரனாகவும், கடத்தல்காரனாகவும் மாறி வருகிறான்.

தண்ணீருக்குப் பாத்தி கட்டி வரப்பு அமைப்பது போல, ஒவ்வொருவரும் ஆன்மிகம் என்ற வரம்பிற்குள் இருந்தால்தான் ஆன்மாவுக்கு அமைதி கிடைக்கும். அத்துடன் சகிப்புத் தன்மையும் வேண்டும்."

**துருப் பிடித்த ஆணி! மதம் பிடித்த மனிதன்!**

"துருப்பிடித்த ஆணி காலில் குத்திக் கொண்டால் காலைக் காப்பாற்றுவது கூட கஷ்டம். ஒருவனுக்குத் துருப்பிடித்த ஆணியாலும் அழிவுண்டு. மதம் பிடித்த மனிதனாலும் அழிவுண்டு. ஆணிக்கு எண்ணெய் தடவினால் துரு ஏறாது.

அந்தத் துருவும் நான் தான்! ஆணியும் நான் தான்! எண்ணெயும் நான் தான்! மதம் பிடிக்க வைப்பதும் நான் தான். ஆணியால் குத்த வைப்பதும் நான் தான்!

**நீ யார்? என்பது உனக்கே தெரியாது:**

"நிலத்தைச் சேடை ஓட்டிச் சேறாக்கிச் சேற்றை அழுக வைத்து, உரமிட்டுப் பக்குவப் படுத்தி விதைத்தாலும் என்ன விதை என்பது நிலத்திற்குத் தெரியாது.

அதுபோல ஆன்மிகத்தில் நீ ஈடுபட்டிருந்தாலும், நீ யார் என்பது உனக்கே உன்னைத் தெரியாது. அவ்வாறு இருக்கும்போது நீ உன்னைப் பற்றியே புரிந்து கொள்ளாமல் அவன் அப்படி! இவன் இப்படி! என்று மற்றவனைப் பற்றிப் பேசக் கூடாது."

**எல்லை மீறும் போது...**

"கடலில் அலைகள் இருந்தாலும் அது கரையைக் கடப்பதில்லை. புயலாக மாறும்போது அது எல்லை மீறுகிறது. அழிவையும் உண்டாக்குகிறது.

அதுபோல உங்கள் ஆன்மா ஒரு எல்லைக்குள் கட்டுப்பட்டிருக்கும் போது எந்த ஆபத்தும் ஏற்படுவதில்லை. அது எல்லையைக் கடக்கும் போதுதான் ஆபத்து ஏற்படுகிறது."



**சிலையும் தெய்வமும்:**

"கலைப்பொருளாக உருவான ஒரு கோயில் சிலைதான் தெய்வமாக மாறுகிறது. அதுபோல உன்னுள்ளே இருக்கும் ஆன்மாவைப் புரிந்து கொண்டால் நீயும் தெய்வமாக மாறலாம். ஆன்மிகத்தில் முன்னேறலாம்."

**உள்ளம் பொங்கக் கூடாது:**

"கடல் பொங்குவது போல உன் உள்ளம் பொங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மின் அழுத்தம் அதிகமானால் மின்சார பல்பு வெடித்து விடும்.

செல்வம், புகழ், கல்வி, பதவி ஆகியவற்றால் நான் வளர்ந்து விட்டேன் என்று ஆணவம் தலைக்கேறினால் அது உன் ஆன்ம வளர்ச்சியைப் பாதிக்கும்"

**பாதுகாப்புடன் வாழ...**

"தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள ஆன்மிகம் தேவை. உன்னை உயர்த்துவதும், அழிப்பதும் உன்னுடைய ஆன்மா தான்! உன் உள்ளம் உடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்."

**கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே:**

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே தெய்வ பக்தியும் ஆன்மாவும் இருந்து கொண்டுதான் இருக்கின்றன."

**மனிதனும் தெய்வமாகலாம்:**

"புழுதியைச் சேடையாக்கி என்னதான் விதை விதைத்தாலும், பயிரோடு களையும் செழித்து வளரத்தான் செய்யும். அதுபோல மனிதனிடம் பொறாமை, பொச்சரிப்பு கர்வம் என்னும் கெட்ட குணங்கள் வளர்ந்து அவனை அழிக்கத்தான் செய்யும். இத்தகைய குணங்கள் வளராதபடி எவன் ஒருவன் தன்னைக் காத்துக் கொள்கிறானோ அத்தகைய மனிதன்தான் தெய்வமாகிறான்."

**எண்ணமும்—வாழ்வும்:**

"விதையொன்று போட்டால் செடி ஒன்று முளைக்காது. எலுமிச்சை மரத்தில் எலுமிச்சை பழம் தான் வரும். தென்னை மரத்தில் தேங்காய்தான் காய்க்கும். அதுபோல உன் எண்ணங்களுக்குத் தக்கபடிதான் உன் வாழ்வில் நல்லதும் கெட்டதும் நடக்கும்."

## எப்படி இருக்கலாம்! எப்படி இருக்கக் கூடாது!

"நீங்கள் ஒவ்வொருவரும் நல்ல ஆன்மாவாக இருக்க வேண்டும். அகங்காரம் பிடித்த ஆன்மாவாக இருக்கக் கூடாது.

அலங்காரம் இருக்கலாம். அது அலங்கோலமாக இருக்கக் கூடாது.

நல்ல உள்ளம் இருக்க வேண்டும். பொறாமை உள்ளமாக இருக்கக் கூடாது.

பேச்சு இருக்கலாம் வாயாடித்தனம் இருக்கக் கூடாது.

சிரிப்பு இருக்கலாம் அதில் கள்ளத்தனம் இருக்கக் கூடாது.

நல்ல நடை இருக்க வேண்டும் கெட்ட நடத்தை இருக்கக் கூடாது."

## அடிப்படையில் நல்ல குணங்கள்:

"அன்பு, பண்பு, பாசம், இரக்கம் என்ற இந்தக் குணங்கள் உங்களிடையே அடிப்படைக் குணங்களாக அமைந்திருக்குமானால், நீங்கள் பள்ளத்தில் விழுந்தாலும் (துன்பத்தில்) சமாளித்துக் கொண்டு எழுந்துவிட முடியும்.

வம்பு, துன்பு, போட்டி, பொறாமை, பொச்சரிப்பு போன்ற கெட்ட குணங்களே உங்கள் அடிப்படைக் குணங்களாக அமைந்திருக்குமானால், பள்ளத்தில் விழுந்தாலும் எழுந்திருக்க முடியாது."

## ஆன்ம முன்னேற்றத்துக்கான வாய்ப்புகள்:

"தொண்டு செய்வது, மன அமைதியோடு இருப்பது, பொறாமையை அகற்றிக் கொள்வது, போதையை ஒழிப்பது, உழைப்பால் உயர்வது இன்ன பிற ஆன்ம முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளையெல்லாம இங்கு நான் உருவாக்கிக் கொடுத்திருக்கிறேன். புத்தியோடு பயன்படுத்திக் கொண்டு கரையேறி வருவது உங்கள் பொறுப்பு"

## அவ்வப்போது சரிப்படுத்திக் கொள்ள...

"மிருகங்கள் புல்வெளியில் புரண்டு உடம்பில் உள்ள அழுக்கைப் போக்கிக் கொள்கின்றன.

தண்ணீரிலேயே வாழும் மீன் பகல் நேரத்தில் கரையோரமாக ஒதுங்கி வெப்பத்தைப் பெற்றுக்கொள்கிறது.



வெயிலில் காயும் மரங்கள் மழைக் காலத்தில் குளிர்ச்சியைப் பெற்றுக் கொள்கின்றன.

இயற்கைப் பொருள்கள் யாவும் அவ்வப்போது தேவைகளைப் பெற்றுச் சரி செய்து கொள்கின்றன.

அதுபோல மனிதர்களாகிய நீங்களும் உலகியல் விஷயங்களிலேயே மூழ்கிவிடாமல், ஆன்ம வளர்ச்சிக்கான தேவைகளைப் பெற்று உங்களை அவ்வப்போது சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மனிதன் நல்ல முறையில் வாழ ஆன்மா தேவைப்படுகிறது."

## ஆன்மிக வலிமை:

"ஐம்பூதங்களை அடக்கும் வலிமை ஆன்மிகத்திற்கு உண்டு"

## உலக மக்கள் இயல்பு:

"உன்னிடம் பசை இருந்தால் உன் பின்னால் பத்துபேர் ஓடி வருவார்கள். பசை விட்டுப் போனால் யாரும் உன் பின்னால் வரமாட்டார்கள்."

## பொறாமை உணர்ச்சி:

"பொறாமை உணர்ச்சி அரசியலிலும் உண்டு; விஞ்ஞானத் துறையிலும் உண்டு; அது ஆன்மிகத்திலும் உண்டு. எல்லாத் துறைகளிலுமே பொறாமை உணர்ச்சி உண்டு.

பொறாமை நிறைந்த உள்ளத்தில் சாந்தியும் சமாதானமும் ஏற்படாது.

உயிரை ஒட்டியே ஒருவனுக்கு உயர்வும் வளர்ச்சியும் உண்டாகும். உள்ளத்தில் அழுக்கு சேராமல் பார்த்துக் கொண்டால் உயிருக்கு உயர்வும் வளர்ச்சியும் உண்டாகும்."

## பரம்பரையைக் காப்பாற்றிக் கொள்:

"உன் ஆன்மாவை நல்ல முறையில் வைத்துக் கொண்டு உன் பரம்பரையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்."

## மனம் என்ற பாத்திரம்:

"நெல்லின் விதை விதைத்து, அது முளைத்து வளர்ந்தாலும், அதன் மணி(கதிர்) பிடிக்கும் போது தான் அந்த நெல்லின் தரம் தெரியும்.

அதுபோல உன் மனத்தில் எழும் எண்ணங்களை வைத்துத் தான் உன்னுடைய தரத்தை அறிய முடியும்.

மனம் ஒரு பாத்திரம் போன்றது. அது என்றும் தூய்மையாக இருக்க வேண்டுமானால் அவ்வப்போது துலக்கி வைக்க வேண்டும். துலக்காவிட்டால் துரு ஏறி விடும். அதனைத் தூய்மையாக வைத்துக் கொள்ளவே வழிபாடு; தொண்டு; தியானம் எல்லாம்!"

**உடல் அழுக்கு; மன அழுக்கு:**

"சேறு சேர்ந்து பல நாட்கள் மக்கினால் அதிலிருந்து புழு உண்டாகும்.

உடம்பில் புறையோடிப் புண் ஏற்பட்டாலும் புழு உண்டாகும்.

உடலில் அழுக்குச் சேர்ந்தால் எப்படிப் புழு உண்டாகிறதோ அதுபோல மனத்தில் அழுக்குச் சேர்ந்தாலும் தீமை உண்டாகும். மனத்தில் அழுக்குச் சேராமல் எச்சரிக்கையாகப் பார்த்துக்கொள்."

**மனித வாழ்க்கை:**

"குளம் என்றால் அதில் தண்ணீர் மட்டும் இருப்பதில்லை. அதில் பாசியும் இருக்கும். செடி கொடிகளும் இருக்கும். மீனும் இருக்கும். பறவைகளும் வந்து போகும்.

அதுபோலத்தான் வாழ்க்கையும்! வாழ்க்கை என்பது இன்பம் மட்டுமே நிறைந்ததாக இருப்பதில்லை. போட்டி, பொறாமை, பொச்சரிப்பு, ஏமாற்று, எல்லாமும் இருக்கும். இதற்கெல்லாம் கலங்காமல் பக்தி, தொண்டு, பாசம், சகிப்புத் தன்மை ஆகியவற்றைக் கைவிடாமல் பிடித்துக் கொள்ள வேண்டும்."

**எது மாறினாலும்:**

"காலங்கள் மாறலாம்; வருடங்கள் மாறலாம்; வாழ்க்கை முறை மாறலாம்; ஆனால் தைரியம், தருமம், ஆன்மா, பக்தி என்பவை மாறக் கூடாது."

**ஆன்மாவும் – இரத்த ஓட்டமும்:**

"உள்ளே இருக்கும் ஆன்மாவும் உள்ளே ஓடும் இரத்த ஓட்டமும் ஒரே சீராக இருக்க வேண்டும். அதற்கு ஆன்மிகம் தான் சுலபமான வழி!"

**ஆலயமும் – ஆன்மிகமும்:**

"குழந்தை உருவான பிறகுதான் பால் சுரக்கும் தன்மை தாய்க்கு ஏற்படுகிறது. அதுபோல என் ஆலயத்திற்கு வந்தால் ஆன்மிகம் என்ற பால் உங்களிடம் சுரக்க வேண்டும்.



யார் வாழ்ந்தால் என்ன? யார் கெட்டால் என்ன? நான் மட்டும் நன்றாக வாழ்ந்தால் போதும் என்று நினைக்கக் கூடாது எல்லோரும் நன்றாக வாழ வேண்டும். எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் வர வேண்டும்."

**பிறருக்காக வாழ்:**

"தனக்காக வாழ விரும்பாமல் பிறருக்காக வாழ வேண்டும்.

பொன்னுக்கும், பொருளுக்கும், புகழுக்கும் ஆசைப்படுவதால் வருவதே வேதனை!

ஆன்மா என்பது அனைவர்க்கும் ஒன்றுதான்! உனக்காக மற்றவர்கள்! மற்றவர்களுக்காக நீ! என்று வாழ வேண்டும்.

உன் ஆன்மா நிலையாக இருந்தால் அனைத்தும் நிலையாக இருக்கும்."

**ஆன்மா என்னுடையது என்றாலும்...**

"உன்னுள்ளே இருக்கும் ஆன்மா என்னுடையது தான் என்றாலும், அதை நீ உன்னுடையதாக நினைத்து இயக்கிப் பதப்படுத்த வேண்டும்.

உன் எண்ணத்தையும், உன் பார்வையையும் கட்டுப்படுத்த வேண்டும். அந்தப் பொறுப்பு உன்னுடையது."

**வளர வேண்டிய குணங்கள்:**

"ஆன்மிகத் துறையில் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். தாயன்பால் தான் எதையும் சாதிக்க முடியும். கட்டுப்பாடு, பாசம், அன்பு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஆகியவை உங்களிடம் வளர வேண்டும்."

**பூவும் நாரும்:**

"பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெறும் என்பார்கள். பூதான் ஆன்மா! நார் தான் நீ!

நீ செய்கின்ற நல்ல செயல்களே உனக்குப் புகழைக் கொடுக்கும். புகழுக்காக அலையாதே! நல்ல செயல்களைச் செய்து கொண்டே போ!"

**ஆன்மாவை ஏமாற்ற முடியாது:**

"நேர்மையற்றவர்களெல்லாம் பொது வாழ்வில் பேரும் புகழும் பெற்று வாழ்கிறார்களே... என்று நினைக்கிறீர்கள்.

அழாமலே கண் துடைப்பது போலவும், சளி பிடிக்காமலே மூக்கைத் துடைப்பது போலவும், பேசாமலே வாய் அசைப்பது போலவும் பாவனை செய்தால் போதும். அப்படிப் பட்டவனுக்கு இன்று பேர், புகழ், பொருள் என அனைத்தும் கிடைக்கும்.

அப்படிப் பட்டவர்கள் ஊரை ஏமாற்றலாம்; உலகை ஏமாற்றலாம்; என்னை ஏமாற்ற முடியாது. உள்ளே இருக்கிற ஆன்மாவை ஏமாற்ற முடியாது.''

**பக்குவம் தேவை:**

''பருவத்தில் மழை பெய்தாலும், பூமியைப் பக்குவப்படுத்தி, விதை விதைத்தால் தான் பயிர் வளரும். அதுபோல உன் மனம் பக்குவப்பட்டால்தான் ஆன்ம வளர்ச்சி கிடைக்கும்.''

**ஆன்மாவும் : கண்ணாடியும்:**

''கண்ணாடியில் தூசு படிந்து விட்டால் அடிக்கடி துடைத்துச் சுத்தம் செய்து பயன் படுத்துவது போல, ஆன்மாவையும் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆசை, பந்த பாசம், பொறாமை, பொச்சரிப்பு முதலிய அழுக்குகள் ஆன்மாவில் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆன்மாவை ஒரு நிலைப்படுத்திப் பக்குவப்படுத்த வேண்டும்.''

ஆன்மா என்ற சக்தி உடலை விட்டுப் போய்விட்டால் எதுவும் இல்லை.''

**மனம் என்பது:**

''மனம் என்பது ஒரு தெருக்கூத்து. மனிதன் ஆறுபோல இருக்க வேண்டும். சேறு போல ஆகிவிடக் கூடாது.''

**செல்லாத உடம்பு:**

''செல்லாத காசிலும் செப்பு உண்டு என்று சொன்னேன். செல்லாத உடலிலும் நல்ல ஆன்மா இருக்கிறது.''

**உடல்: உள்ளம்: ஆன்மா:**

''உள்ளம் சீராக இருந்தால் உடலும் சீராக இருக்கும். இல்லாவிடில் பெருத்தும் சிறுத்தும் உடலமைப்பே மாறிவிடும்.

அதுபோல ஆன்மாவைச் சீராக வைத்திருந்தால் பக்குவம் அடையலாம். இல்லையேல் தடுமாற்றங்கள் ஏற்படும்.''

**இயல்பாகவே நல்ல உள்ளம்:**

''மரத்தில் பழுக்கிற பழம் இயல்பாகப் பழுத்தால் சுவையாக



இருக்கும். அதை விட்டு மருந்து போட்டுப் பழுக்க வைத்தால் சுவையாக இருக்காது. அதுபோல உங்கள் உள்ளம் இயல்பாகவே நல்ல உள்ளமாக இருக்க வேண்டும். கள்ள உள்ளமாக இருக்கக் கூடாது.''

**அடிபட, அடிபட...**

''வைரத்தைப் பட்டை தீட்டினால்தான் பளபளக்கும். தங்கத்தையும் சூடு செய்தால்தான் பளபளக்கும். அதுபோல ஆன்மிகத்தில் அடிபட, அடிபடத்தான் பலன் கிடைக்கும்.

நல்லது கெட்டது, கசப்பு இனிப்பு சேர்ந்து வாழ்ந்தால்தான் நல்ல மனிதனாக வாழ முடியும்.''

**உள்ளத்தைப் பக்குவப் படுத்து:**

''கடல் நீர் உப்பாகவே இருந்தாலும் அதனைச் சமையலுக்குப் பயன்படுத்த முடியாது. உப்பளங்களில் கடல் நீரைப் பாய்ச்சிப் பக்குவப் படுத்தி உப்பாக எடுத்த பிறகே சமையலுக்குப் பயன்படுத்தலாம். அதுபோல உங்கள் உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொண்டு வந்தால் தான் ஆன்மிகத்தில் முன்னேற முடியும்.''

**ஆன்மாவில் அழுக்கு சேரக்கூடாது:**

''உள்ளுக்குள் பொறாமைக் குணம் இருக்கக் கூடாது. பாசம் இருக்கலாம் அது பாவமாக மாறிவிடக் கூடாது. சிரிப்பு இருக்கலாம். அது வஞ்சகச் சிரிப்பாக இருக்கக் கூடாது. எல்லாவற்றுக்கும் காரணமாக இருப்பது ஆன்மா தான். அந்த ஆன்மாவில் அழுக்கு சேராதபடிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.''

உன் ஆன்மா நடு நிலையாக நின்று உன்னை வழி நடத்தும்படி வாழ வேண்டும்.''

**வேதனையும் – சோதனையும்:**

''ஆன்மிகத் துறையில் வேதனையும் உண்டு; சோதனையும் உண்டு. ஆனால் சோர்ந்து விடக் கூடாது. தயங்கி நின்று விடக் கூடாது. அந்தச் சோதனைகளைக் கடப்பது தான் உனது சாதனை.''

**ஆன்மிகத்தின் மகிமை தெரிவதில்லை:**

''ஆற்றில் பலவகை மீன்கள் வாழ்கின்றன. அதில் வெள்ளம் வந்து அடித்துக்கொண்டு போகும் பொழுது வழியிலேயே மனிதர்கள் அவற்றைப் பிடித்துச் கொள்கிறார்கள்; தின்று விடுகிறார்கள்.

குளத்து மீனுக்குக் குளத்தில் இருக்கும் வரை குளத்தின் மகிமை தெரிவதில்லை. குளத்தை விட்டு வெளியே தரைக்கு வந்தவுடன் அழிந்து போகிறது.

அதுபோல ஆன்மிகத்தில் இருக்கும் வரை அதன் மகிமை தெரிவதில்லை. அதை விட்டு வெளியே வந்த பிறகுதான் அதன் மகிமை புரியும்.''

**ஆன்மிகத்தின் சக்தி:**

''இயற்கையான தண்ணீர்தான் சிறந்தது. பனிக்கட்டித் தண்ணீர் உடலுக்குச் சிறந்த தல்ல.

நீ எந்தத் துறையில் ஈடுபட்டாலும் ஆன்மிகத் துறை ஒன்று தான் உனக்குச் சிறந்த வழி காட்ட முடியும்.

அழிவுகளைக் கட்டுப்படுத்தும் சக்தி ஆன்மிகத் துறைக்கு மட்டுமே உண்டு.

எவ்வளவுக் கெவ்வளவு மனித குலம் ஆன்மிகத்தைப் புறக்கணிக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அழிவுகளும் தொடர்ந்தபடி இருக்கும்.''

**ஆன்மா என்ற சக்தி:**

''பெட்ரோல், டீசல், பாட்டரி என ஏதோ ஒரு சக்தி இயந்திரங்களை இயக்குவது போல ஆன்மா என்ற சக்தி உங்களை இயக்குகிறது.''

**ஆன்மிகத் துறையில் உண்மையான ஈடுபாடு!**

''ஆன்மிகத் துறையில் ஈடுபட்டுள்ள உங்களிடையே நல்ல எண்ணங்களே ஓங்கி வளர வேண்டும். அவ்வாறு வளர்ந்தால் உங்கட்கு அமைதியும், நிம்மதியும் கிடைக்கும். உங்களிடையே போட்டியும் பொறாமையும் ஓங்கியிருந்தால் அமைதியும் கிடைக்காது. நிம்மதியும் கிடைக்காது.

இயற்கை யாருக்கும் சொந்தமல்ல. நீ பெற்ற பிள்ளையே உனக்குச் சொந்த மல்ல. அப்படியிருக்கும்போது உங்களிடையே போட்டிகள் ஏன்? பொறாமைகள் ஏன்?''

**பக்குவம் அடைய வேண்டும்:**

''இனிப்பு செய்வதற்கு இளகிய பக்குவப்பட்ட பாகு வேண்டும். அது முறிந்து விட்டால் மறுபடியும் பாகு கிடைக்காது. அதுபோல



உன் உடம்பு வளர்ந்து வயது ஏறிய பிறகு மீண்டும் நீ குழந்தையாக முடியாது.

எனவே படிப்படியாகப் பக்குவ நிலைக்கு நீங்கள் வரவேண்டும்.

ஆன்மிகத்தில் பக்குவம் அடைந்து கொண்டே வந்தால் உங்களுக்குச் சக்தி கூடும்.

பார்க்கிற பார்வை, பேசுகிற பேச்சு, கேட்கிற விஷயம் எல்லாவற்றிலுமே பக்குவம் வேண்டும்.

தன்னை அறியாமலே கூட பயம் ஏற்படும்.''

**வரும் காலம் வம்புக் காலம்:**

''வரும் காலம் வம்புக் காலம் ஆன்மிக ஈடுபாடு கொண்டு வாழ்ந்தால் தப்பிக்கலாம். குளவி புழுவைக் கொட்டிக் கொட்டிப் பூச்சியாக மாற்றுவது போல, உங்கள் ஆன்மாவைத் தட்டித் தட்டிப் பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும்.

எதுவும் உன் கூட வரப்போவதில்லை. நீ செய்யும் தொண்டும் தருமமும்தான் உனக்குக் கடைசி வரை கூட வரும்.

எந்தப் படிப்பும் சிறந்ததில்லை. அனுபவப்படிப்புதான் சிறந்தது.''

**அளவான பந்தபாசம்:**

''குழந்தையாகப் பிறந்து வளர்ந்த உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றில் ஈடுபாடு இருக்கும். பந்த பாசம் இருக்கும் அவை அளவோடு இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும், அளவுக்கு மீறினால் தொல்லைப்பட வேண்டி இருக்கும்.

பலூனில் ஓரளவிற்குத்தான் காற்றை அடைக்க முடியும். அளவுக்கு மீறினால் வெடித்து விடும்.

வண்டியும் ஓரளவிற்குத்தான் ஓடும். பிறகு பழுதடைந்து விடும்.

வாழ்க்கையும் அதுபோன்றது தான். எனவே பந்தம், பாசம், ஈடுபாடு அதிகமானால் தொல்லைப்பட வேண்டி வரும்.''

**ஆன்மாவைப் பதப்படுத்த வேண்டும்:**

''அடக்கமாக இருப்பதும் ஆன்மா தான்; நல்லதைச் சொல்வதும் ஆன்மாதான். பொறாமை, கோபம் என்ற குணங்களைத் தூண்டுவதும் ஆன்மாதான். மனத்தைக் கட்டுப்படுத்தி ஆன்மாவைப் பதப்படுத்த வேண்டும்.''

**உள்மனம்:**

“ஒரு பாத்திரத்தின் மேலே இருக்கும் தண்ணீர் சற்று வெதுவெதுப்பாக இருக்கும். கீழே இருக்கும் தண்ணீர் குளிர்ச்சியாக இருக்கும். அதுபோல உன் உள்மனம் குளிர்ச்சியாக இருக்க வேண்டும். அதில் வேகம் இருக்கக் கூடாது.”

**ஆத்மாவை வணங்குபவன்:**

“வெறும் புற்றுதானே...? வெறும் சிலைதானே...? என்றெல்லாம் நினைக்கின்றனர். கல் எடுத்து உருக் கொடுத்தவன் சிலையை வணங்கமாட்டான். அதனால் அவனும் வளரமாட்டான். தன் படத்தைத் தானே வணங்குபவன் உத்தமன். தன் ஆத்மாவை வணங்குபவன் சிறந்தவன்.

எந்தப் பொருள் உங்களுக்கு வாழ்வு கொடுக்க உபயோகப்படுகிறதோ அத்தகைய பொருள்களை வணங்க வேண்டும்.”

**உன் பேட்டரி ஆன்மாதான்:**

“கடிகாரம் ஓட பேட்டரி (Battery) தேவை பேட்டரிக்கு என்ன சக்தி இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உன் பேட்டரி ஆன்மா தான்.”

**உள்ளம்! எண்ணம்! பார்வை!**

“உன் உள்ளம், உன் எண்ணம், உன் பார்வை ஆகிய மூன்றும் ஒழுங்காக இருக்க வேண்டும்”

**ஓடிக் கொண்டிருக்கும் வாழ்க்கைச் சக்கரம்:**

“பறவை ஆரம்பத்தில் முட்டையிட்டுக் குஞ்சு பொறித்துப் பறவையாகி மீண்டும் முட்டையிட ஆரம்பிக்கிறது.

அதுபோல மனித இனமும் கருவாகி, உருவாகி, மகனாகி, மகளாகி, மனைவியாகி, கணவனாகி, தாயாகி, தந்தையாகி, பாட்டியாகி, பாட்டனாகி இப்படியே மனித வாழ்க்கைச் சக்கரம் ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்த இடைவெளிக் காலத்தில் மனிதன் நல்ல மனமும், நல்ல குணமும் பெற்று நல்லது கெட்டது தெரிந்து வாழ வேண்டும்.

மிருகக் குணம், பிசாசுக்குணம் இல்லாமல் வாழ்வது சிறந்தது.”

**உலகம் கலகலப்பாக மாற...**

“இன்றைய உலகம் சலசலப்பாகவும் சஞ்சலமாகவும் இருந்து



கொண்டிருக்கிறது. சல சலப்பு இருக்கக் கூடாது. கலகலப்பு இருக்க வேண்டும். கலகலப்பாக உலகம் மாறவேண்டுமானால் உலக மக்கள் ஆன்மிகத்தில் ஈடுபட வேண்டும்.”

**அவ்வப்போது கிடைக்கிற வாய்ப்புகள்:**

“அவ்வப்போது சாப்பிடுகின்ற உணவுக்கும். சுவாசிக்கிற காற்றுக்கும்தான் பலன் உண்டு.

அதுபோல ஆன்மிகத்தில் அவ்வப்போது கிடைக்கின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டால்தான் அந்தந்த நேரத்திற்குப் பலன் கிடைக்கும்.”

**ஆன்மிகப் பார்வை; ஆணவப்பார்வை:**

“இன்றைய நாகரிகம் அநாகரிகமாக மாறி விட்டது. ஆன்மிகப் பார்வை இருந்தால்தான் தன்னைத் தானே புரிந்து கொள்ள முடியும். ஆணவப்பார்வை இருந்தால் புரிந்து கொள்ள முடியாது.”

**ஆன்மா:**

“உன்னை உனக்குப் புரிய வைப்பது ஆன்மா.”

**தொண்டும் தருமமும்:**

“ஆடி ஓடி அலைந்துவிட்டுக் கடைசியில் அமைதியைப் பெறுகிறாய்.

ஆக்குவதும், ஆட்டுவிப்பதும், ஆளாக்குவதும் ஆன்மாதான்.

இனிப்பும் கசப்பும் இருந்தால் தான் உடலுக்கு நல்லது. தொண்டும் தருமமும் இருந்தால்தான் ஆன்மிகத்திற்கு நல்லது.”

**ஆன்மிகத்தின் சக்தி:**

“பொல்லாத காலத்தைப் பொன்னான காலமாக மாற்றும் சக்தி ஆன்மிகத்திற்குத்தான் உண்டு.”

**வேஷமும் – விஷமமும்:**

“மனது வைத்தால் பசியோடும் வாழலாம்; பசியில்லாமலும் வாழலாம்.

வேஷத்தைக் கலைத்து விடலாம் விஷமத்தைக் கலைக்க முடியாது. விஷமத்தைக் கலைக்க ஆன்மிகத்தால் தான் முடியும்.”

**சித்தன்:**

“சிந்திப்பவனெல்லாம் சித்தனாக முடியாது. மனத்தைக்

கட்டுப்படுத்த வேண்டும். ஆசையைக் கட்டுப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் பொறாமை அதிகமாகும்.

**என்ன செய்கிறேன்?**

“நல்ல உள்ளத்தை உயரவும் கள்ள உள்ளத்தைக் கரையவும் செய்கின்றேன்.”

**உன் வினை தீர வேண்டுமானால்...**

“நான் சொல்வதைக் கடைப்பிடிக்க வைப்பதும் நான்தான். கடைப்பிடிக்க வைக்காமல் செய்வதும் நான்தான்.

உன் வினை தீர வேண்டுமானால், நான் சொல்வதை முழுமையாகப் புரிந்து கொண்டு. அதன்படி நடக்கும் விடா முயற்சி உன்னிடம் வேண்டும்.”

**ஆன்மாவின் இயல்பு:**

“இறந்த பிறகு நல்ல ஆன்மாக்களுக்குத் தகுந்த உடல் கிடைக்கவில்லை என்றால் அலைந்து கொண்டிருக்கும்.”

கூடு விட்டுக் கூடு பாய்வதுதான் ஆன்மாவின் வேலை.”

**ஆன்மிகம் தான் ஆணிவேர்:**

“ஆன்மா பழக்கப் பட்டதைத்தான் செய்யும். அனைவரும் கடைசியில் ஆன்மிகத்திற்குத்தான் வரவேண்டும். ஆன்மிகம்தான் ஆணிவேராக அமையும்.”

**என்றும் ஓயாத அலைகள்:**

“காற்றால் கடலில் அலைகள் ஏற்படுகின்றன. எண்ணத்தால் மனத்தில் அலைகள் ஏற்படுகின்றன. உள்ளத்தில் ஏற்படுகின்ற இந்த அலைகளும், கடலில் ஏற்படுகின்ற அலைகளும் என்றும் ஓய்வதில்லை.”

ஆன்மாவில் ஏற்படுகின்ற பொறாமை உணர்வையும், ஆசைகளையும் அடக்க வேண்டும்.”

**மனமும் – உணர்வும்:**

“ஒரு பூவைப் பார்ப்பதால் ஏற்படுகிற உணர்வு கண்ணின் தன்மையைப் பொறுத்ததா? எண்ணத்தின் தன்மையைப் பொறுத்ததா? எல்லா உணர்வுகளும் மனத்தைப் பொறுத்தே அமைகின்றன.”



**ஆசை என்ற வேர்:**

“உலகில் உள்ள உயிர்கள் வளர்வதிலும், வாழ்வதிலும் ஆசைக்குப் பங்கு உண்டு. ஆசை என்ற வேர்தான் அழிவை ஏற்படுத்துகின்றது.”

**உன் எண்ணங்களைப் பொறுத்து:**

“கருப்பு நிறத்தில் உள்ள வைரம் பட்டை தீட்டத் தீட்டப் பிரகாசமாக ஒளியைக் கொடுக்கிறது. அதே வைரம் மனிதனைச் சாகடிக்கவும் செய்கிறது. அவனுடைய கௌரவத்தை உயர்த்தவும் செய்கிறது. அதுபோல மனிதனின் உள்ளம் அவனை உயர்த்தவும் செய்யும்; அழிக்கவும் செய்யும்.”

கறுப்பு வைரத்தைப் பட்டை தீட்டுவது போல மனிதனின் உள்ளத்தில் உள்ள அழுக்கைத் தருமத்தால் பட்டை தீட்ட வேண்டும்.”

**எந்த இனத்தில் பிறந்தாலும்...**

“சாக்கடை நீரில் தென்னை வாழை போன்ற மரங்களைப் பயிர் செய்தாலும், தென்னையிலிருந்து கிடைக்கும் இளநீரில் சாக்கடை நீரின் மணம் வீசுவதில்லை. வாழைப் பழத்தில் சாக்கடை நாற்றம் அடிப்பதில்லை. அதுபோல உணர்வுகளைப் பொறுத்தே வாழ்க்கை அமைகிறது. நல்லவன் கெட்டவனாக மாறமாட்டான்; கெட்டவன் நல்லவனாக மாறுவது கடினம்.”

**சீவனும்–சிவனும்**

“நல்ல சீவன் சிவனாக மாறும்.”

**வாழ்வின் குறிக்கோள்:**

“உன் பரம்பரைக்கும் பரம்பொருளின் அருள் அவசியம் வேண்டும்.

இந்த வாழ்க்கை எதுவரை...? என்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

உண்மைப் பொருள் எது? பொய்யான பொருள் எது? நினைத்துப் பார்க்க வேண்டும்.

எதற்காக வந்தோம் என்பதை உன்னை அறியாமலேயே உன்னை உணர வைத்துப் புரிய வைக்கிறேன். ஆனால் நீயோ மறுபடியும் கீழேயே வந்து விடுகிறாய்.”

**அமைதியைத் தேடி...**

"அமைதியை நாடி அங்கும் இங்கும் ஓடுகிறாய். அது கிடைக்காமல் தவிக்கிறாய். மனத்தைச் சிதறவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உன் உணர்வில் அழுக்கும் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படிப் பார்த்துக் கொண்டால் அழிவு இல்லை."

**எண்ணமும் உடல்நலமும்**

"எண்ணங்கள் சரியாக இருந்தால் உடம்பும் நலமாக இருக்கும் எண்ணங்கள் சரியில்லையேல் உடம்பும் சரியில்லாமல் போகும். நல்ல எண்ணங்களே இருந்தால் நோய் வர வாய்ப்பில்லை."

எண்ணங்கள் நன்றாக இருந்தால் மட்டுமே ஆன்மிகத் துறையில் முன்னேற முடியும்."

**நல்ல ஆன்மா இருக்கும் இடத்தில்:**

"நல்ல புல்தரை இருக்கும் இடத்தில் நெருஞ்சி முள் இருக்காது. அதுபோல நல்ல ஆன்மா இருக்குமிடத்தில் அழிவு இருக்காது.

தீய எண்ணங்கள் நெருஞ்சிமுள் போன்றவை. அவை அன்பு, பண்பு, பாசத்தை அழித்து விடும்."

**எண்ணமும் ஏற்றமும்:**

"மனித மனத்தில் நல்ல எண்ணங்கள் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் அவை கற்பகத் தருபோல உங்களுக்கு எல்லா நன்மைகளையும் கொடுக்கும்.

தீபத்தில் எண்ணெய் ஊற்றித் திரிபோட்டு ஏற்றினால் வெளிச்சம் தருவது போல, உங்கள் உடலுக்கும் ஏற்ற உணவும், மனத்தில் நல்ல எண்ணங்களும் இருந்தால் வாழ்க்கையும் நன்றாக அமையும்."

**ஆன்மாவும் – ஆன்மிகமும்:**

"ஆன்மாவை மிகைப்படுத்தும் போதுதான் ஆன்மிகம் வெளிப்படுகிறது."

**உயிரோட்டம்: காற்றோட்டம்:**

"உயிரோட்டம் தான் காற்றோட்டம்; காற்றோட்டம் தான் உயிரோட்டம்."

**உன்னுள் இருக்கும் ஆன்மா:**

"உன்னை ஆக்குவதும் ஆட்டுவிப்பதும், ஆளாக்குவதும், ஆன்மாதான்.



வேண்டும் என்பதை வேண்டாம் என்றும், வேண்டாம் என்பதை வேண்டும் என்றும் நினைக்க வைப்பதும் ஆன்மாதான். ஆன்மாவின் பிடிவாத குணம் தான் ஒருவனைத் துன்பத்தில் அகப்பட வைக்கிறது."

**பொறாமைக் குணம்:**

"மனிதனுக்கு அவனது பொறாமைக் குணமே அழிவைத் தேடித் தருகிறது. தன்னை அறியாமலேயே ஒருவனுக்குப் பொறாமை ஏற்படுகிறது."

**ஆன்மிகம் வளரும்:**

"கல்லைத் தூக்கி மேலே வைத்தாலும் அதையும் தள்ளிக்கொண்டு செடி வளரும். அதுபோல எவ்வளவு இடையூறுகள் வந்தாலும் ஆன்மிகம் வளரும்."

**ஜீவனும் – ஜீவனமும்:**

"ஜீவன் என ஒன்று இருக்கிறது. அந்த ஜீவனுக்கு ஜீவனமும் தேவையாக இருக்கிறது. அன்பு, பண்பு, இவற்றால் நல்ல முன்னேற்றத்தை அடைய முயற்சிக்க வேண்டும்.

கோபமும், வேகமும் உண்டானால் ஜீவனுக்கு அழிவைத்தான் உண்டாக்கும்."

**ஒரு செடியும் – நீயும்:**

"ஒரு செடி தனக்காகவும் தன் வளர்ச்சிக்காகவுமே வளர்கிறது. அந்தச் செடி ஒரு சமயம் உனக்கும் தேவைப்படுகிறது. உன் நலனுக்காக அந்தச் செடியை நீ பயன்படுத்திக் கொள்கிறாய்.

அதுபோல நீயும் உனக்காகத்தான் வாழ்கிறாய் வளர்கிறாய். ஆனாலும் அந்தச் செடி போல நீயும் பிறருக்குப் பயன்பட வேண்டும்."

**குதிரையும் – கடிவாளமும்:**

"குதிரைக்குக் கடிவாளம் இல்லையேல் தறிகெட்டு ஓடும். அதுபோல ஆன்மிகமும் தருமமும் இல்லையென்றால் வாழ்க்கையும் தறிகெட்டுப் போகும்."

**உயிரின் குணம்:**

"உன்னையும் அறியாமல் மனம் நடுங்குகின்றது; தடுமாறுகிறது. அதுதான் உன் உயிர் ஆகும்."

**உள்ளத்து அழுக்கை நீக்க என்ன வழி?**

“உன்னுடைய உடல் அழுக்கு, உன் வீட்டார் உடல் அழுக்கெல்லாம் வீட்டில் தேங்கிவிடக் கூடாது என்பதற்காகச் சாக்கடையில் கலக்க விடுகிறாய். அது ஓடையில் கலந்து, ஆற்றில் கலந்து, கடைசியில் கடலில் போய்ச் சேர்ந்து விடுகிறது.

உன் உள்ளத்தில் சேர்கிற அழுக்கை எப்படி நீக்கிக் கொள்வது?

தருமம், தொண்டு, அபிடேகம், ஆராதனை, வழிபாடு, தியானம் என்று செய்துதான் அவற்றைப் போக்கிக் கொள்ள வேண்டும்.”

**நான் எனது என்ற பற்று:**

“என் நிலம், என் வீடு, எனது சொத்து என்று இருக்கக் கூடாது. நம்முடையது என்று இருக்க வேண்டும்.”

**உயிர் உங்களை ஏமாற்றுகிறது:**

“கானல் நீரைக் கண்டு ஏமாறுவது போல வாழ்க்கையில் ஏமாறுகிறீர்கள். இக்கரைக்கு அக்கரை பச்சை என்று நினைக்கிறீர்கள்.

உள்ளத்தில் உள்ள உயிர் உங்களை இப்படியெல்லாம் ஏமாற்றுகிறது. கோபத்தையும் வேகத்தையும் ஏற்படுத்துகிறது. புரிந்து கொண்டு வாழ வேண்டும்.”

**உள்ளம் உருகினால் தான் உயர்வு:**

“உலோகத்தை உருக்கினால்தான் வேண்டிய உருவத்தில் பொருள்களைச் செய்ய முடியும். அதுபோல உருக்கமான உள்ளம் தான் ஒருவனுக்கு உயர்வைக் கொடுக்கும்.”

**எதிலும் அளவாக இருக்க வேண்டும்:**

“மனிதர்கட்கிடையே அன்பு, பண்பு, பாசம் என்ற உணர்வுகள் இருந்தால் தான் வாழ்க்கையில் பலன் கிடைக்கும்.

பாகு அதிகமாக இருந்தால் பலகாரம் சரிவராது. அதுபோல பாசம் அதிகமானால் துன்பமும் அதிகமாகும்.

சூடும் ஓரளவிற்குத்தான் இருக்க வேண்டும். மனித உடலிலும் சூடு அதிகமானால் உள்ளம் சேறாகி இரையாகி விடும்.”

**அற அறிவு:**

“ஆறறிவு ஆழ்ந்த அறிவாக இருக்க வேண்டும். அற அறிவும் தேவை. காட்டாறு போல அந்த அறிவு இருக்கக் கூடாது.”



**எண்ணாத எண்ணங்களால்..**

“சில விதைகள் விதைப்பதால் முளைக்கும்; சில விதைகள் விதைக்காமலே முளைக்கும். அதுபோல எண்ணாத எண்ணங்களால் எதிர்பாராதவை நடக்கும். ஆன்மாவிற்குத் தெய்வத் தன்மை வேண்டும்.”

**எதிலும் சீராக இருக்க வேண்டும்:**

“சீரான உணவு, சீரான பேச்சு, சீரான செவி, சீரான உள்ளம் என இருந்தால் எந்தப் பிரச்சனையும் இல்லை.”

**இந்த யுகம்:**

“இந்த யுகம் ஆன்மிக யுகம்”

**அழியாத சொத்து:**

“நீ தேடி வைத்திருக்கிற சொத்துக்கு அழிவு உண்டு. ஆன்மிகமும் தருமமும் தான் அழியாத சொத்து.”

**நல்ல உயிர்:**

“உயிர் பண்பாடு உள்ள நல்ல உயிராக விளங்க வேண்டும்”

**பந்த பாசங்கள்:**

“பந்த பாசம் என்பன ஆன்ம முன்னேற்றதுக்கு தடைகள். ஆனாலும் உலகியல் வாழ்க்கையில் அவை வேண்டியிருக்கின்றன. அவை அளவோடு இருக்க வேண்டும். பாசத்தை முற்றாக விலக்கி விடவும் முடியாது. அவ்வாறு விலக்கினால் பாவமாக மாறும். உள்ளத்தை விலக்கினால் உதிரிப் பூக்கள் ஆகிவிடும்.”

**கழிவுப் பொருள்கள்:**

“பூமியில் உயிர் உற்பத்தி ஆகிறது. உடம்பில் கழிவுப் பொருள் உற்பத்தியாகிறது. கழிவுப் பொருள்கள் வெளியேற வில்லையேல் உடல் ஆரோக்கியமாக இருக்காது. உள்ளத்தில் உற்சாகம் இருக்காது. மனத்தில் நிம்மதி இருக்காது. அதனால் மனத்தில் எரிச்சல் உண்டாகும்.

உடம்பில் உள்ள கழிவுப் பொருள்களை வெளியேற்றினால் உடம்பு சுத்தமாகும்.

மனத்தில் உள்ள அழுக்குகளை நீக்கினால் ஆன்மா சுத்தமாகும்.”

**உன்னிடமே எல்லாம் உள்ளது:**

“இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடத்திற்கு ஏன் போகிறாய்?

உன்னிடமே எல்லாம் உள்ளது.”

**உங்கள் மனப்போக்கு:**

“நான் தெளிவான நீரைக் கொடுக்க நினைக்கிறேன். நீங்களோ கலங்கிய குட்டையில் தண்ணீர் குடிக்க நினைக்கிறீர்கள்.

உங்களுக்கு ஆன்மிகம் என்ற நீரை மண்பானையில் கொட்டுகிறேன். அது ஒரு பக்கம் ஓட்டை வழியே போய்க் கொண்டு இருக்கிறது.”

ஆன்மிகத்தில் பொறுமையாக இருந்தால்தான் தெளிவு பிறக்கும்.”

**ஆசையும் ஆன்மாவும்:**

“ஆசை ஆன்மாவைப் பக்குவப் படுத்துவது இலலை. ஆசையை ஆன்மா அடக்க வேண்டும்.”

**என் பொறுமையும் உங்கள் அவசரமும்:**

“ஒரு காய் தானாகக் கனிந்தால் அதற்கு ருசி அதிகம். அது விதையானால் மற்றவர்களுக்கும் பயன்படும். அந்தக் கனியைத் தடி கொண்டு பழுக்க வைத்தால் ருசியும் இருக்காது. மற்றவர்களுக்குப் பயனும் கிடைக்காது.

எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

நான் பொறுமையாகப் பலன் கொடுக்க நினைக்கிறேன். நீங்களோ அவசரப் படுகிறீர்கள்.”

**காகிதப் படிப்பும் – அனுபவப் படிப்பும்:**

“உயிர் என்ற ஒன்று இருப்பதால் தான் பலரையும் உயர்த்திப் போற்றுகிறார்கள். படித்தவன், படிக்காதவன் என்று பாகுபடுத்துகிறார்கள். படித்தவனைவிடப் படிக்காதவன் எவ்வளவோமேல். காகிதப் படிப்பறிவை விட ஆழமான அனுபவப் படிப்பே உயர்ந்தது.”

**ஆன்மிக ஈடுபாடு:**

“ஆன்மிகத்தில் ஈடுபடும் போது தெய்வ நம்பிக்கையும் குடும்பப் பாசமும் தேவை.”



**நல்லவர்களும் – கெட்டவர்களும்:**

“உன் விரல்களிலேயே வித்தியாசம் இருப்பது போல, உன்னைச் சுற்றி வாழ்பவர்களிலேயும் வித்தியாசம் இருக்கத்தான் செய்யும்.

உன்னைச் சுற்றி நல்லவர்களும் இருப்பார்கள். கெட்டவர்களும் இருப்பார்கள். ஆயினும் எல்லோரும் சேர்ந்து வாழ்ந்தால் தான் நன்மை ஏற்படும்.”

**வாழ்த்துக்கு மயங்காதே:**

“உன்னிடம் பொருள் இருந்தால் சோம்பேறிகூட உன்னை வாழ்த்துவான். ஆனாலும் நம்பி விடக் கூடாது.”

**எது தேவை என்பது எனக்குத் தெரியும்:**

“பூமியில் மற்ற கனிமப் பொருள்களுடன் தங்கம் கலந்திருக்கிறது. அதை வெட்டியெடுத்துத் தங்கத்தைப் பிரித்து எடுக்கிறார்கள். அதன் பின் அழுக்கை அகற்றி உருக்கி எடுத்துப் பலவித உருவங்களில் ஆபரணம் செய்கிறார்கள்.

அதுபோலவே உனக்கு எதுதேவையோ அதனை நான் செய்து கொடுக்கிறேன்.”

**நான் நினைத்தால் மட்டுமே...**

“உயிர் போய்விட வேண்டும் என்று நீ நினைத்தால் மட்டும் முடியாது. நான் நினைத்தால் தான் எதையும் செய்ய முடியும்.”

**பழமொழிகளின் சிறப்பு:**

“பழமொழிகள் வாழ்க்கைப் பாதைக்கு வழி வகுக்கும்.”

**அகங்காரம் ஓங்கினால்...**

“நீ இறங்கி வரும் போது நான் செய்வேன். நீ ஏறிப் போனால் நான் செய்ய மாட்டேன்.”

**வயது பற்றிய கவலை:**

“உன் வயதைப் பற்றிக் கவலைப் படக் கூடாது. நல்ல உள்ளம் இருந்தால் போதும். அது வயதைக் காட்டாது.”

**சீராக இருக்க வேண்டும்:**

“அன்பு, பண்பு, பாசம் இருக்க வேண்டும். அவை மணியில் கோத்தது போலச் சீராக இருக்க வேண்டும்.”

## உள்ளத்தில் கள்ளத் தனம்:

"உள்ளத்தில் கள்ளத்தனம் இருக்கக் கூடாது. நல்ல செயல்கள் செய்வதற்குத் தரும சிந்தனை தேவை. அதர்மத்திற்குத் தரும சிந்தனை தேவையில்லை."

## ஆன்மாவை வைத்து...

"லென்சை (Lens) வைத்துச் சூரிய ஒளியைக் குவிய வைத்துப் பஞ்சை எரிக்கலாம். அதுபோல ஆன்மா என்ற லென்சை வைத்துப பலரைத் திருத்தலாம்."

## தெய்வ நம்பிக்கை:

"தெய்வ நம்பிக்கை என்பது உயிர் உன்னிடம் இருக்கும் நம்பிக்கை."

## மனிதனுடைய நோக்கம் நிறைவேறுவதில்லையே ஏன்?

"பெருமைக்கு அலைவது, அடுத்தவன் வளர்ச்சி கண்டு பொறாமை கொள்வது, பந்த பாசம் அதிகமாய் இருப்பது. இவையெல்லாம் கானல் நீர் போன்றவை. இந்தக் குணங்கள் மிகுந்து இருப்பதால் தான் மனிதனுடைய நோக்கங்கள் எல்லாம் நிறைவேறுவது இல்லை."

## உன் ஆன்மாவே தெய்வம்:

"ஒரு குடும்பம் என்பதும் ஆலயத்திற்குச் சமம். அதில் வாழும் ஆண், பெண் எல்லோரும் தெய்வங்கள் தான்.

தாயின் மடியில் இருந்து கொண்டே தாயைத் தேடுகிறாய்.

உன் ஆன்மாவை உள்ளே வைத்துக்கொண்டே தெய்வத்தைத் தேடுகிறாய்.

உன் ஆன்மாவே தெய்வம்!"

## எத்தனை கோயிலுக்குப் போனாலும்...

"நீ எத்தனை கோயிலுக்குப் போனாலும் உன் ஆன்மா சுத்தமாக இருக்க வேண்டும். அதுவே முக்கியம்.

தீய எண்ணங்கள் என்ற தூசுகள் படியாமல் ஆன்மா சுத்தமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்."



## ஆன்மா சிதறாமல் இருக்க...

"ஒரு பக்கம் நெருப்பு! ஒரு பக்கம் பெட்ரோல்! நடுவிலே பஞ்சு! பஞ்சு பற்றாமல் இருக்க வேண்டுமானால் அது நெருப்பின் பக்கம் சாயாமல் இருக்க வேண்டும். அதுபோல உங்கள் ஆன்மாவும் சிதறாமல் ஒரே சீராக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் தீமைகளிலிருந்து தப்பிக்க முடியும்."

## மனிதர்களின் இயல்பு:

"அழுகிற குழந்தைக்குத் தேவையானதைக் கொடுத்தால்தான் சிரிக்கும். அதுபோலக் கேட்பதைக் கொடுத்தால்தான் தெய்வத்தையும் வாழ்த்துவார்கள்.

எது உனக்கு நல்லது என்று நான் நினைக்கிறேனோ, அதையே உனக்குக் கொடுப்பேன்.

உனக்கு எது நல்லது என்று உனக்குத் தெரியாது. எனக்குத்தான் தெரியும்."

## மனிதர்கள் பல ரகம்:

"ஒரு சில இசை சிலருக்குப் பிடிக்கும்; சிலருக்குப் பிடிக்காது. ஆன்மிகமும் சிலருக்குப் பிடிக்கும்; சிலருக்குப் பிடிக்காது."

## புரிய வைப்பது ஆன்மா!

"ஒரு கட்டத்தில் தாய் குழந்தையை அழைத்துச் செல்வாள். இன்னொரு கட்டத்தில் தாயைக் குழந்தை அழைத்துக் செல்லும். தாயின் தன்மையையும்; குழந்தையின் தன்மையையும் புரிய வைப்பதும் ஆன்மா தான்!"

## நான் என்ற ஆணவம்:

"நான் என்ற சொல்தான் உன்னை அழிக்கிறது."

## பாவனை கூடாது:

"எனக்கு அப்போது புத்தி கெட்டு விட்டது என்று நீயே சொல்கிறாய். ஆதலால் ஆன்மிகத்தில் பாவனை கூடாது."

## ஆன்மாவும் – மனமும்:

"காற்று என்பது ஒன்றுதான்! மழை பெய்யும் போது அது குளிர்ந்த காற்றாக வீசுகிறது. பாலை வனத்தில் அது மணல் காற்றாக

வீசுகிறது. அதுபோல ஆன்மா என்பது ஒன்றுதான். ஆனால் உன் மனம் தான் பலவிதமாகச் செயல்படுகிறது.''

**மனத்தின் சக்தி:**

“மனத்தை உங்களால் கட்டுப்படுத்த முடியாது. அது எந்த விதத்திலாவது கிளறி விட்டு விடும்.''

**மனத்தைச் சுத்தப்படுத்து:**

“நீ உடுத்திய துணியைச் சுத்தம் செய்கிறாய். உன்னுடைய கழிவே உனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் மனத்தில் உள்ள அசுத்தங்களைப் பற்றிக் கவலைப்பட மாட்டேன் என்கிறாய். உன் மனத்தில் உள்ள கழிவுகளையும் அகற்றிச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.''

**பயனுள்ள வாழ்வு:**

“அவன் வாழ்ந்தபோது அவனால் பலரும் வாழ்ந்தார்கள் என்று புகழ்ந்து சொல்லும் நிலை உனக்கு வரவேண்டும். அதுதான் பயனுள்ள வாழ்வு.''

**ஆன்மிகத் துறையின் தனிச் சிறப்பு:**

“எல்லாத் துறையையும் கடந்து விடலாம். ஆன்மிகத் துறையைக் கடக்க முடியாது.''

**இயற்கையும் – ஆன்மாவும்:**

“உயிர்கள் வாழ்கின்ற இடம்தான் உலகம். உலகம் இருக்கும் வரை உயிர்களும் வாழும்.

இயற்கை, உயிர்களை மாற்றி மாற்றிக் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

அதுபோல ஆன்மா என்ற ஒன்று இருக்கும் வரை தெய்வ பக்தியும் இருந்து கொண்டிருக்கும்.''

**எது வாழ்க்கை?**

“மற்றவர்களுக்காகத் தான் வாழ்ந்து பிறகு தனக்காக வாழ்வது தான் வாழ்க்கை.!''

**உயிர் ஒன்று; செயல்களில்தான் வேறுபாடு!**

“மனிதர்களுக்குப் பல்வரிசை, வாயின் அளவு, உருவ அமைப்பு எல்லோருக்கும் ஒன்றாக இருப்பதில்லை. அதுபோல எல்லோருக்கும்



உயிர் ஒன்றாக இருந்தாலும் செய்யும் செயல் ஒன்றுபோல இருப்பதில்லை. நல்லது கெட்டது என்று செயல்கள் வேறுபடுகின்றன.''

**மரமும் – மனிதர்களும்:**

“ஒரு மரம் பழுத்துப் பலன் தரும் நிலையில் இருக்கும் போது யாரும் அதை வெட்ட மாட்டார்கள். ஆனால் அது வேர்ப்புழுவால் தாக்கப்பட்டுப் பட்ட மரமாகிவிட்டால் அதனை வேரோடு சாய்த்து விடுவார்கள்.

அதுபோல உன் மனத்தில் அன்பு, பாசம், பண்பு, தருமம் ஆகிய நல்ல குணங்களே நிறைந்திருந்தால் உன்னை யாராலும் சாய்க்க முடியாது.

தீய எண்ணம் என்ற வேர்ப்புழு புகுந்தால் போதும். உன்னை யாரும் எளிதாகச் சாய்த்துவிட முடியும்.''

**மனிதனை மயக்கும் போதைகள்:**

“பட்டம், படிப்பு, பதவி, உயர்வு என்பன அனைத்துமே போதைகள். இந்தப் போதை மயக்கம் உள்ளவனிடம் சென்று அவனைப் பற்றி விசாரித்தால் தான் நன்றாக இருப்பதாகவே சொல்வான் அவனைப் பற்றிய உண்மை மற்றவர்களுக்குத் தான் தெரியும்.''

**ஆன்மிக வாழ்க்கையில் ஒரு உண்மை:**

“ஆன்மிக வாழ்க்கையில் புரியாமலும், தெரியாமலும் நல்ல எண்ணங்களோடு நடந்து கொண்டால் கூட நல்லதுதான். அதனால் அவனுக்கு நல்லது நடக்கும். தெரிந்தே தவறு செய்பவனுக்குப் பலன் கிடைப்பது இல்லை.''

**ஆன்மிக வாழ்வில் அழுக்கு சேராமல் இருக்க...**

“துவைக்கா விட்டால் துணியில் அழுக்கு சேர்கிறது. குளிக்காது விட்டால் உடம்பில் அழுக்கு சேர்கிறது.

ஆன்மிகத்தில் தெய்வ நினைப்பு தொண்டு, தருமம், இவை இருந்தால் அழுக்கு சேராது.''

**பொறாமைக் குணம்:**

“உன் கண்ணே உனக்குப் பொறாமையை ஏற்படுத்தும். உன் பிள்ளையும் பெண்ணும்கூட உன் மீது பொறாமையாக இருப்பார்கள். அவர்கள் மீதும் உனக்குப் பொறாமை வரலாம். பொறாமை இருக்கக் கூடாது. போற்றுதல் இருக்க வேண்டும்.''

**மதம்: மார்க்கம்:**

"மதம் தேவையில்லை; மார்க்கம் தான் தேவை."

**மனமும் – உயிரும்:**

"வாயுவின் வேகத்தைவிட மனவேகம் அதிகம். மணலில் நீரோடை ஓடுவது போல, உடலில் உயிரோட்டம் ஓடுகின்றது."

**வீண் பேச்சு:**

"மற்றவர்களைப் பற்றி வீண் பேச்சு பேசி நேரத்தைச் செலவிடுவதை விட, உன் குடும்ப வளர்ச்சிக்குச் செலவிட்டால் குடும்பம் நன்றாக இருக்கும்."

**நல்லவனிடமும் கள்ளம்:**

"நல்லவன் என்று மற்றவர்களால் சொல்லப்படுபவனிடமும் கள்ளத்தனம் இருக்கும்."

**மன உளைச்சல் வராமல் இருக்க...**

"மன உளைச்சல் வராமல் இருக்க நல்ல எண்ணம், நல்ல செயல் நல்ல உள்ளம் இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அமைவது கடினம்."

**அடிக்கடி சிந்தித்துப் பார்:**

"உயிர்கள் தன்னை ஏன் வளர்த்துக் கொள்கின்றன? அழகு என்பது என்ன? அழிவு என்பது என்ன? உலகம் என்றால் என்ன? உயிர் என்றால் என்ன? என அடிக்கடி சிந்தித்துப் பார்க்க வேண்டும்."

**பயிரும் களையும்:**

"ஆன்மிகம் என்ற பயிரை நடும்போது கூடவே களைகளும் வளரத்தான் செய்யும்.

நீ என்னிடம் வரும்போது நீ நினைத்ததைச் செய்து கொடுத்தால் என்னிடம சக்தி இருக்கிறது என்கிறாய்.

நான் செய்து கொடுக்காவிட்டால் என்னிடம் சக்தி இல்லை என்று நினைக்கிறாய் அப்படி எண்ணும்போதே உன் மனத்தில் களை வளர்ந்து விடுகிறது.

பயிரை நட்டவர்கள், பருவம் வந்தவுடன் எப்படி அதில் உள்ள களைகளை எடுக்கிறார்களோ அதே போல உன் மனத்தில் உள்ள களைகளையும் நீ எடுக்க வேண்டும்.



நெல்-நெல் தான்; விதை - விதை தான்; களை - களை தான்.

நெல்லை நட்டால் நெல்லை அறுவடை செய்யலாம். உன் மனத்தில் களையை நட்டால் எதை அறுவடை செய்வது?

**ஆன்மா பதில் சொல்லும்:**

"எனக்கு ஏன் இந்தச் சோதனை? என்று நினைக்கக் கூடாது. மனக் கட்டுப்பாடு தேவை. ஆன்மாவைத் தட்டிக் கேட்க வேண்டும். மனக் கட்டுப்பாட்டுடனிருந்து ஆன்மாவைத் தட்டிக் கேட்டால் ஆன்மா பதில் சொல்லும்."

**தீய அணுக்கள்:**

"உள்ளத்தில் அழுக்குகள் சேராதபடிப் பார்த்துக் கொள்ள வேண்டும். சாக்கடை நீரில் அழுக்குகள் அதிகம். அந்தச் சாக்கடையிலும் ஓர் உயிர் வாழும். ஆனால் மனிதனுடைய உள்ளத்தில் தீய அணுக்கள் இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால் அவை மனிதனை உருக்குலைத்து விடும்."

**தீய எண்ணத்தின் வலிமை:**

'ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் போதும்' என்பது பழமெழி. பாலைக் கெடுக்க ஒரு குடம் விஷம் தேவையில்லை; ஒரு துளி விஷம் போதும். அதுபோல நல்ல எண்ணங்களின் நடுவில் தீய எண்ணம் ஒன்று தோன்றினாலே போதும். அதுவே அழிவை ஏற்படுத்தி விடும். பல தீய எண்ணங்கள் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை."

**வெளியே தெரிந்துவிடும்:**

"வெள்ளையில் உள்ள ஒரு வெள்ளைப் புள்ளி தெரியாது. அதில் ஒரு கறுப்புப் புள்ளி இருந்தால் பளிச் சென்று தெரிந்துவிடும். அதுபோல ஒருவனிடம் எவ்வளவுதான் அதிகமான நல்லெண்ணங்கள் இருந்தாலும் தீய எண்ணம் ஒன்று இருந்தால் போதும். அதுதான் பளிச்சென்று வெளியில் தெரியும்."

**தேவையற்ற ஆராய்ச்சி:**

"தெய்வம் உண்டா? பேய் பிசாசுகள் என உண்டா? ஏவல் பில்லி சூனியம் என்பன உண்டா? என்றெல்லாம் ஆராய்ச்சி செய்வதை விட, மனிதன் தன் எண்ணங்களைத் தூய்மையாக்கிக் கொண்டு அவற்றை ஒரு முகப்படுத்தி வந்தால் பயன் உண்டு."

**ஆணவம்:**

“ஆணவம் உன்னை அநாதை ஆக்கிவிடும். அன்பான வார்த்தை தான் உனக்கு உயர்வு தரும்.”

**உறுதியான ஆன்மிக நாட்டம் இருப்பதில்லை:**

“பூக்கள் காலை, மாலை, இரவு எனப் பூக்கின்றன. சூரியன், சந்திரனைப் பார்த்துப் பூக்கும் பூக்களும் உள்ளன. மலர்கள் பூக்கும் போது ஆரம்பத்தில் இருக்கும் வாசனை நேரம் போகப் போக இருப்பதில்லை. அதுபோலவே ஆன்மிகத்திலும் ஆரம்பத்தில் உள்ள நாட்டம் இறுதி வரை இருப்பதில்லை.”

**அறியாமையால் வரும் அழுக்கு:**

“அறியாமையால் உள்ளத்தில் அழுக்கு சேராமல் பார்த்துக் கொள்.”

**தெய்வ குணம்:**

“நலல குணம்தான் தெய்வ குணம்! உனக்கு நல்ல குணம் இல்லாமல் போனாலும் பாதகம் இல்லை. கெட்ட குணம் இல்லாமல் பார்த்துக் கொள்.”

**ஆன்ம வெளிப்பாடு:**

“பாலைப் பக்குவப்படுத்தி நெய்யை உண்டாக்கிக் கொள்வதைப் போல, உங்கள் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி ஆன்மிகத்தை வெளிக் கொணர வேண்டும் கடுமையான உழைப்பால் பயன் உண்டு. கடுமையான கோபத்தால் பயன் இல்லை.”

**தீய எண்ணத்தின் வலிமை:**

“நல்ல கலவை போட்டு உறுதியாக அமைத்த காங்க்ரீட் (Concrete) கட்டிடங்களில் கூட எப்படியோ விழுந்த ஒரு விதை முளைத்து வளர்ந்து அந்தக் கட்டிடத்தின் வலிமையைக் குலைத்து விடுகிறது.

அதுபோல என்னதான் உன் மனம் நல்லதாக இருந்தாலும் எப்படியோ ஒரு விஷ வித்துப் போல ஒரு தீய எண்ணம் புகுந்து கொண்டாலே போதும். அது உன்னை ஆன்மிகத்தில் முன்னேற முடியாதபடிச் செய்து விடும்.

ஆகவே அவ்வப்போது மனத்தைச் சுத்தப்படுத்திக்



கொள்வதுடன், தீய எண்ணங்கள் வராமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பூக்களெல்லாம் காய்த்து விடுவதில்லை; பிஞ்செல்லாம் பழமாகி விடுவதில்லை; பழமாவதெல்லாம் விதையாகி விடுவதில்லை.

உன் கதையும் அதுபோலத்தான்!

**பலவகையிலும் பயனுள்ள வாழ்க்கை:**

“தேங்காய் பூசைக்கும் பயன்படும். திருஷ்டி கழிக்கவும் பயன்படும்; உணவுப் பொருளாகவும் பயன்படும். அதுபோல மனிதனும் பல வகையில் பயன்படுமாறு வாழ வேண்டும். பக்தி, தருமம், தொண்டு, வழிபாடு, மனித நேயம் எனப் பலவகையில் பயனுள்ள வாழ்க்கை வாழ வேண்டும்.”

**நான் என்பது தலை தூக்கும் போது...**

“நான் இருக்குமிடத்தை விட்டு விட்டு இல்லாத இடமெல்லாம் தேடுகிறாய். நான் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்து விட்டதாக நினைத்துக் கொண்டு, நான் கண்டு பிடித்து விட்டேன் என்று நீ நினைக்கும் போது அச்சமயத்தில் நான் அங்கே இருக்கமாட்டேன்.”

**வெளி இயக்கம்; உள் இயக்கம்**

“விஞ்ஞானத்தாலும், மருத்துவத்தாலும், கல்வியாலும் ஏற்படுகின்ற பயன்களை விட, உன் உள்ளே இருக்கின்ற உன் உயிர், உன் உள்ளம், உன் ஆன்மா இவற்றின் இயக்கங்களால் வருகின்ற பயனே மிகுதி.”

**எது உண்மையான வளர்ச்சி?**

“பணத்தாலும், பகட்டாலும் வளர முடியாது. ஆன்மிகத்தாலும், தெய்வ சிந்தனையாலும் வளர்வதே உண்மையான வளர்ச்சி.”

**வரவர மாமியார்...**

“இங்கே முதலில் தொண்டனாக வருபவன் பக்தன் ஆகின்றான். பக்தன் என்பதால் அவனுக்குப் பதவி கிடைக்கின்றது. பதவி வந்ததும் ஆணவம் தலைக்கு ஏறுகிறது. ஆணவம் வந்ததும் பாவத்தைச் சம்பாதித்துக் கொள்கிறான். மீண்டும் சாதாரணத் தொண்டன் என்ற நிலைக்கு இறங்கி விடுகின்றான். இதுதான் நீங்கள் கண்ட ஆன்மிகம்!”

**ஆன்மிகமும் தெய்வ சக்தியும்:**

“இன்றைய அழிவுகளை ஆன்மிகமும் தெய்வ சக்தியும் மாற்ற

முடியும். மனிதனுக்கு அந்தக் கால மண் வீட்டில் இருந்த அமைதி இந்தக் கால மாடி வீட்டில் இல்லை.''

**நிலையான அமைதியும் – நிலையான இன்பமும்:**

''பசிக்காகச் சாப்பிடுகிறாய். ஆயினும் பசி முற்றாகத் தீர்வதில்லை.

தாகத்திற்காகத் தண்ணீர் குடிக்கிறாய். ஆயினும் முற்றாகத் தாகம் தணிவதில்லை.

அழகு படுத்திக் கொள்வதற்காக அழகு சாதனங்களைப் பயன் படுத்துகிறாய். அந்த அழகு நீடித்திருப்பதில்லை.

மீண்டும் பசி! மீண்டும் தாகம்! மீண்டும் அழகு சாதனங்கள் என்றே வாழ்கிறாய்.

எப்படிப் பார்த்தாலும் ஆன்மிகம் ஒன்று மட்டுமே நிலையான அமைதி தரும்; நிலையான இன்பம் தரும்.''

**ஜோதி:**

''ஜோதி என்பது உள்ளத்தை ஒரு முகப்படுத்துவது.''

**ஆன்மா:**

''உன்னை உனக்குப் புரிய வைப்பது ஆன்மா தான்!''

**உன் உருவமும் வடிவமும் நிரந்தரமானது அல்ல:**

''பலவகை உருவங்களில் பலூன் தயார் செய்து, அவற்றில் காற்றடைத்துப் பறக்க விடுகிறார்கள். காற்று அடைத்த பிறகு பலூன்களில் உள்ள உருவங்கள் தெளிவாகத் தெரிகின்றன. அது வெடித்து விட்டால் அதில் உள்ள காற்று வெளியேறிக் காற்றோடு காற்றாகக் கலந்து போகின்றது.

அதுபோல உங்கள் உடம்பிலும் காற்று அடைபட்டு இருக்கும் வரை உருவங்கள் தெரிகின்றன.

உடம்பிலிருந்து உயிர்க் காற்று பிரிந்து விட்டால் உங்கள் உருவங்களும் வடிவங்களும் மறைந்து போகும். உயிரும் காற்றோடு காற்றாக மறைந்து போகும்.

உன் உருவமும் வடிவமும் நிரந்தரமானவை அல்ல.''

**தருமமும் தொண்டும்:**

''தண்ணீர் நன்றாகக் கொதித்து. அதில் அரிசி போட்டால் அந்த அரிசி நன்றாக வேகும். ஆன்மிகத்தில் தருமமும் தொண்டும் செய்தால்தான் அருளைப் பெற முடியும்.''



**பதம் பார்த்து நடந்தாலும்...**

''விதையிலும் விஷம் உண்டு; பார்த்துப் பார்த்துப் பதப்படுத்தும் பொருளிலும் தெரியாமல் கல் வந்து சேரும். அந்தக் கல் வந்தது தெரியாமல் வந்து சேர்ந்திருக்கும். அதுபோல ஆன்மிகத்தில் பதம் பார்த்து நடந்தாலும் தவறி விடுவார்கள்.''

**உன்மேலேயே உனக்கு நம்பிக்கை:**

''வற்றாத ஜீவ நதிகளிலேயே தண்ணீர் இல்லாமல் போய்விட்டால் பயிர் வளர்வது எப்படி?

உன் மேலேயே உனக்கு நம்பிக்கை இல்லாமல் போனால் ஆன்மிகத்தை வளர்ப்பது எப்படி?''

**ஆன்மித்தில் முழுமை அடைவது...**

''ஆன்மிகத்தில் முழுமை அடைவது என்பது கடினமான முயற்சி! அது சிட்டுக்குருவி பாம்பை விழுங்க முயற்சி செய்வதற்குச் சமம்.''

சிட்டுக் குருவியால் தானியத்தை விழுங்க முடியுமே தவிர, பாம்பை விழுங்க முடியாது. அவ்வாறு பாம்பை விழுங்க முயன்றால் பாம்பு சிட்டுக் குருவியை விழுங்கி விடும்.''

மனிதன் பிறந்தோம் வளர்ந்தோம் என்று தன் பாதையில் வாழ்க்கையை நெறிப் படுத்திக் கொண்டு செல்ல வேண்டும்.

அவன் தெய்வ நிலையை அடைய முயற்சி செய்யும் போது, ஆணவம் அவனைச் சூழ்ந்து கொள்ளும். அந்நிலையில் நிலையான பயனை அடைய முடியாமல் தடுத்து விடும்.

கால் பாகம் பக்தி; முக்கால் பாகம் ஆணவம் என்ற நிலையில் போலியான நிலைக்குள் உன்னை ஆட்படுத்திக் கொண்டால் பாம்பு சிட்டுக் குருவியை விழுங்குகிற நிலையை அடைய நேரிடும்.

உன் ஆணவமே உன்னை அழித்து விடும்.''

**காகிதப் படிப்பும் அனுபவப் படிப்பும்:**

''உயிர் என்ற ஒன்று இருப்பதால்தான் பலரையும் உயர்த்திப் போற்றுகிறார்கள். படித்தவன், படிக்காதவன் என்று பாகுபடுத்துகிறார்கள். படித்தவனைவிடப் படிக்காதவன் எவ்வளவோ மேல்; காகிதப் படிப்பறிவை விட, ஆழமான அனுபவப் படிப்பே உயர்ந்தது.''

**ஒரு காட்டாறு நதியாவது போல...**

காட்டாற்று வெள்ளம் ஆரம்பத்தில் வரையறை இல்லாமல் வேகத்தோடு புறப்பட்டு வருகிறது. பின் வேகம் தணிந்து, தெளிந்து நதியாக மாறுகிறது.

அவ்வாறு நதியாக ஓடுகிற சமயத்தில் தன்னைத் தானே ஆழப்படுத்திக் கொள்கிறது. அதே சமயம் தனக்கெனக் கரைகளையும் அமைத்துக் கொள்கிறது.

ஆரம்பத்தில் உங்கள் ஆன்மாவும் காட்டாற்று வெள்ளம் போல அலைபாயும். பின்னர் நதிபோல நிதானமும் தெளிவும் அடையும். அந்நிலையில் அந்த நதி தனக்குத் தானே ஆழப்படுத்திக் கொள்வது போல உங்களை நீங்களே பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும்.''

**உன் வாழ்க்கையைக் கெடுப்பது:**

''விஷத்தன்மை உயிரைக் குடிக்கும். அதுபோல மனித மனத்தில் உள்ள விஷத் தன்மை அவன் வாழ்க்கையையே கெடுக்கும்.''

**இன்றைய ஆன்மிகத்திற்கு உயிர்நாடி:**

''வாழ்வதற்கு வீடு அவசியம். வீட்டிற்கு வாயிற்படி அவசியம்; வாயிற்படிக்குக் கதவு அவசியம். அந்தக் கதவு வீட்டிற்குப் பாதுகாப்பாக அமைகிறது.

அதுபோல ஆன்மிகத்திற்கு, அருள்வாக்கு, தொண்டு, தருமம் போன்றவை உயிர் நாடியாக அமைகின்றன.''

**ஆன்மிகம் அவசியம் ஏன்?**

''எதற்கு பக்தி? எதற்கு ஆன்மிகம்? எதற்கு அருள்வாக்கு? என்றெல்லாம் நினைக்கிறீர்கள்.

உள்ளத்தில் அமைதியும், அதில் நல்லெண்ணங்கள் ஏற்படவும் ஆன்மிகம் அவசியம்.

**நான்குபேர் சேர்ந்தால் தான்:**

''ஓட்டைப்பானையில் சோறு சமைக்க முடியாது.

ஒருவர் மட்டுமே ஆன்மிகத்தை வளர்த்துவிட முடியாது. நான்குபேர் சேர்ந்தால் தான் ஆன்மிகம் வளரும்.''

**பொய்யால் வேதனைதான் வரும்:**

''மெய் மெய்தான்; பொய் பொய்தான். பொய் பேசினால் வேதனைதான். உள்ளத்தில் தூய்மை வேண்டும்.''



**பொறாமை ஏன் வருகிறது?**

''உள்ளத்தில் பொறாமை ஏன் அதிகமாகிறது? எல்லாம் ஒரு சாண் வயிற்றுக்காகத்தான்! இருக்கின்ற காலத்தில் அமைதி வேண்டும். நிம்மதி கிடைக்க வேண்டும். பொறாமையால் இவற்றை அடைய முடியாது. இருப்பதைக் கொண்டு திருப்தி அடைய வேண்டும்.''

**தீய எண்ணங்களின் சக்தி:**

''நெருப்பு தன்னை அடைந்த பொருள்களை அழித்து விடும். அதுபோல தீய எண்ணங்கள், தீய செயல்கள் என்ற நெருப்பு நல்ல உள்ளத்தையும் அழித்து விடும்.''

**பக்குவமாக வளர வழிகள்:**

''இளமைப் பருவத்தில் யோகப் பயிற்சிகளை வளைந்து செய்ய முடியும்.

குறிப்பிட்ட வயதிற்கு மேல் அவ்வாறு செய்ய முடியாது. அதுபோல ஒரு செடியை வளர்க்கிற போதே தரையைத் தொடும் அளவிற்கு வளைக்கலாம். அந்தச் செடி வளர்ந்து மரமாகி விட்டால் வளைக்க முடியாது.

அதுபோலவே ஆன்மிகத்தில் வளரும்போதே சகிப்புத் தன்மை, தருமம், தொண்டு, எனப் பக்குவமாக வளரவேண்டும்.

மனிதன் பறவைகளையும், மிருகங்களையும் பழக்கி வளர்க்கிறான். ஆனால் மனிதனை யாரும் அவ்வாறு பழக்கி வளர்ப்பதில்லை.''

**ஆழமாகப் பதிந்த எண்ணம்:**

''ஒரு தூணை ஆழமாகத் தோண்டி நட்டு விட்ட பிறகு அதனை எளிதில் அசைக்க முடியாது. அதுபோல ஒரு எண்ணம் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டால் அதனை எளிதில் மாற்ற முடியாது.

மனிதனிடம் உணர்ச்சியும், வேகமும் அதிகரித்தால் அழிவுதான் வரும்.''

**மனநிலைக்கும் பக்குவத்துக்கும் தக்கபடி...**

''கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு எனத் திசைகள் முக்கியமாக நான்கு என இருந்தாலும் வடகிழக்குப் பருவக்காற்று. தென்மேற்குப் பருவக்காற்றுகளால் மழை வருகிறது என்கிறார்கள்.

எந்த அளவு காற்று வீசுகிறதோ அந்த அளவுக்கு மழை பெய்யும்.

அதுபோல அவரவர் மனநிலைக்கும் பக்குவத்துக்கும் ஏற்றவாறுதான் ஆன்மிகத்தில் பலன்களும் கிடைக்கும்.''

**நினைத்துப்பார்:**

''நாம் பிறந்து வளர்ந்து இதுவரை யாருக்கு என்னென்ன நன்மை செய்தோம் என்று அடிக்கடி நினைத்துப் பார்க்கும் பழக்கம் ஒவ்வொருவருக்கும் வர வேண்டும்.''

**ஆன்மிகம் என்ற கடிவாளம்:**

''நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களுக்குள் தோன்றும் ஆற்றல்கள் எல்லாம் ஒரு கட்டுப்பாட்டிற்குள் இருந்தால் தான் அவற்றால் பயன்பெற முடியும்.

அதுபோல ஒருவனுக்கு அதிகமான அறிவு, படிப்பு வசதிகள் எவ்வளவு இருந்தாலும் ஆன்மிகம் என்ற வழிகாட்டுதலும், கடிவாளமும் இருந்தால்தான் வாழ்க்கையில் பலன் கிடைக்கும்.''

**மனித இனம் – விலங்கினம்:**

''பந்தம், பாசம், உறவு முறை போன்றவை மனித இனத்திலும் உண்டு விலங்கினத்திலும் உண்டு. ஆனால் விலங்கினத்தில் இருக்கும் பாசம் மனித இனத்திற்கு இல்லை.

**கருப்பொருள் என ஒன்று உண்டு:**

''அருள் என்றால் என்ன? பொருள் என்றால் என்ன? வழிபாடு என்றால் என்ன? - என்றெல்லாம் தெரிந்து கொள்ள நினைக்கிறீர்கள். இவை எல்லாவற்றுக்குமே அடிப்படையான கருப்பொருள் உண்டு.''

**யாரையும் தாழ்வாக நினைக்காதே!**

''மற்றவர்களால் நீ உயர்த்தவும் படலாம்; பாதிக்கவும் படலாம். ஆனாலும் மற்றவர்களைத் தாழ்வாக நீ நினைக்கக் கூடாது.''

**அடிப்படையில் நல்ல எண்ணம் தேவை:**

''உலகில் அழிவுகள் அதிகமாகும் என்று சொல்கிறீர்களே இதற்கு விடிவு இல்லையா? என்ற கேட்கலாம்.

விதை நன்றாக இருந்தால்தான் மீண்டும் முளைத்து நல்ல விதையாக மாறும். அதுபோல ஒருவனுக்கு அடிப்படையில் நல்லெண்ணம் இருந்தால் தான் நல்ல முறையில் வாழ முடியும்.

மனிதன் மிருகமாக மாறும்போது அவன் செயலே அவனை அழிக்கிறது.''



**ஈவு இரக்கம் தேவை:**

''குளிர் காலமானாலும், வெயில் காலமானாலும் சூரிய ஒளி எப்போதும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கும். ஈரப்பசையும், காற்றின் இயல்பும் தான் சூரிய ஒளியின் தன்மையை மாற்றுகின்றன.''

உள்ளத்தில் ஈவு, இரக்கம் இல்லாதபோது உள்ளம் காடாகி விடுகிறது.''

**இயற்கை தரும் வளம்: ஆன்மிகம் தரும் வளம்:**

''பூமியிலிருந்து பித்தளை, செம்பு, தாமிரம், தங்கம், வைரம் போன்ற கனிமப் பொருள்கள் கிடைக்கின்றன. மேகத்தின் மூலம் மழை கிடைக்கிறது.

அதுபோல ஆன்மிகம் வளர வளர உன் குடும்பமும் வளரும். உன் பரம்பரையும் வளர்ச்சி அடையும்.''

**மனிதனுக்குக் கவசம்:**

''மனிதனுக்குக் கவசமாக இருப்பது தொண்டும், தருமமும் தான்.

இதை மறந்து இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடத்தை தேடக்கூடாது.''

**நாகரிகம் – அநாகரிகம்:**

''நாகரிகம் என்ற பெயரில் அநாகரிகம் பெருகும்பேது அழிவுகள் ஏற்படும்.''

**ஆன்மிகத்தில் உயர்நிலை அடைய...**

''ஒரு செடியை நடும் போது இது எப்போது வளர்ந்து; எப்போது பூத்து; எப்போது காய்த்து எப்போது பலன் கொடுக்கப் போகிறது என்று நினைப்பது இயல்பு.

ஆன்மிகத்தில் நல்ல எண்ணம் இருந்தால் தென்னை, பனை போல உயர்ந்த நிலைக்கு வரலாம்.''

**நல்ல எண்ணங்களால் வளர்க்கப்படும் செயல்கள்:**

''எரியும் அகல் விளக்கில் தண்ணீர் பட்டால் சட, சட என்ற சத்தம் வரும். விளக்கும் சரியாக எரியாது.

அதே அகல் விளக்கில் தண்ணீரில் விளைந்த பருத்தியினால் செய்த திரி.

தண்ணீரில் விளைந்த எண்ணெய் வித்துக்களிலிருந்து கிடைக்கும் எண்ணெய்.

தண்ணீரில் விளைந்த மரத்திலிருந்து செய்யப்படும் தீக்குச்சி ஆகியவற்றால் ஏற்றப்படும் விளக்கு நன்றாக எரியும்.

அதுபோல தீய எண்ணம் இல்லாது நல்ல எண்ணங்களால் வளர்க்கப் பட்ட செயல்களால் பலன் உண்டு.''

**விளக்கும் சிட்டமும்:**

''விளக்கில் நல்ல திரியும் எண்ணெயும் இல்லாவிட்டால் சிட்டம் கட்ட ஆரம்பிக்கும். சிட்டத்தைத் தட்டி எரிய விட்டாலும் மறுபடியும் சிட்டம் கட்டும்.

அதுபோல மனத்தில் தீய எண்ணம் என்ற சிட்டம் கட்டாமல் இருக்க நல்ல எண்ணம் தேவை.''

**தெய்வத்தை நினைத்து அழுவது:**

''இறந்தவர் முன் ஒப்பாரி வைத்து அழுகிறார்கள். நாடகத்தில் சோகக் காட்சி வந்தால் அழுகிறார்கள். தெய்வத்தை நினைத்தும் அழுகிறார்கள். தெய்வத்தை நினைத்து அழுகிற அழுகைதான் சிறந்தது.''

**உலகில் கெட்டுப் போகாத பொருள்:**

''இந்த உலகில் எல்லாப் பொருளும் ஒரு சமயம் வந்தால் கெட்டு விடும். போகும் வரை கெடாமல் இருப்பது உயிர் மட்டுமே.''

**ஆன்மாவிற்குப் பலன்:**

''ஆணவமும் அவமானமும் வராமல் பார்த்துக் கொண்டால் ஆன்மாவிற்குப் பலன் உண்டு.''

**தெய்வமும் – இயற்கையும்:**

''மனிதன் தெய்வம் ஆகலாம் ஆனால் இயற்கையைப் போலச் செயல்பட முடியாது.''

**அடுத்தவர்களின் குறை:**

''அடுத்தவர்களின் குறைகளையே நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்காமல், உன் மனத்தை ஒரு நிலைப்படுத்தப் பழக வேண்டும்.''

**புலம்பல்கள் – புலன்கள்:**

''புலம்பல்களுக்கு வழி கொடுக்காமல் புலன்களுக்கு வழி கொடுத்தால் வளர்ச்சி உண்டு.''



**கண்ணீரும் தண்ணீரும்:**

''வாழ்க்கையில் தண்ணீரும் தேவை தான்! கண்ணீரும் தேவை தான்!''

**வாழ்க்கை ஒரு விளையாட்டு:**

''உயிரும் ஆன்மாவும் சேர்ந்த உடல் என ஒன்று இருந்தால்தான் வாழ்க்கை என்ற விளையாட்டை விளையாட முடியும்.''

**ஆன்மா என்ற ஒன்றின் மூலம்:**

''விதை - வேர் - கிளை என்னும் இவற்றின் மூலம் தாவர இனம் வளர்ச்சி அடைகிறது. ஆனால் மனிதன் ஆன்மா என்ற ஒன்றின் மூலம் தான் வளர்ச்சி அடைய முடியும்.''

**என்னுள் அடக்கம்:**

''எல்லா ஆன்மாவும் என்னுள் அடக்கம்! ஆணவம் இருந்தால் ஆசை இருக்கும். ஆசை இருந்தால் அழிவும் இருக்கும்.''

**உயிர் ஆட்டிப் படைக்கும்:**

''நான் வந்த கடமை முடிந்து விட்டது. இனி அம்மாவிடம் போய்விட வேண்டும். என்று நீ நினைத்தால் மட்டும் போதாது. உன் உயிர் உள்ள வரை அது உன்னை ஆட்டிப் படைக்கும்.''

**திரு உள்ளம் – திருட்டு உள்ளம்:**

''உள்ளம் திரு உள்ளமாக இருக்க வேண்டும். திருட்டு உள்ளமாக இருக்கக் கூடாது.''

**ஆன்ம முன்னேற்றம் பெற...**

''உள்ளத்தில் போட்டி பொறாமை உணர்வுகளைக் களைந்தால் தான் ஆனமிகத்தில் முன்னேற்றம் அடையலாம்.''

**அருளும் – காலமும்:**

''காலம் பொன் போன்றது என்கிறோம். அருளும் பொன் போன்றது தான்.''

**ஆன்மிக ஈடுபாட்டால் தப்பி வருகிறீர்கள்:**

''அழுக்குச் சேரச் சேர ஓரிடத்தில் புழுக்கள் வளர்வது போல, உள்ளத்தில் அழுக்குச் சேரச் சேர தீய எண்ணங்கள் வளர்கின்றன. ஆன்மிகத் துறையில் ஈடுபட்டு வருவதால் ஏதோ தப்பி வருகிறீர்கள்.''

**உன் உயிர் நினைக்கிறபடி..**

“உன் உயிர் உனக்குக் கொடுக்கும் தேதிப்படிதான் நீயும் செயல்பட முடியும்.”

**ஆன்மாவின் பொறுப்பு:**

“ஒருவருக்கு எந்தவிதத் துன்பம் வந்தாலும், அதிலிருந்து காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பு உள்ளத்தில் உள்ள ஆன்மாவுக்கு உரியது.”

**உள்ளமும் – உருவமும்:**

“உள்ளத்தின் அழகு உருவத்தில் தெரியும். ஆனால் உருவத்தில் உள்ள அழகு உள்ளத்தில் தெரியாது.”

**இயற்கையும்: ஆன்மிகமும்:**

“இயற்கை பூ பூத்துக் காய் காய்த்துப் பழமும் கொடுக்கத்தான் செய்யும். அதுபோலத்தான் ஆன்மிகமும்! உன்னுடைய ஆன்மிக ஈடுபாடு, தொண்டு, தருமத்துக்கேற்ப அது தன் கடமையைச் செய்யும். பலனும் கொடுக்கும்.”

**தேய்மானம் உனக்கும் உண்டு:**

“இளவயதில் ஆடுகிற ஆட்டம் என்ன? ஓடுகிற ஓட்டம் என்ன! பாடுகிற பாட்டு என்ன?

முதுமை வந்ததும் ஆட்டமெல்லாம் அடங்கி விடுகின்றது. உனக்குப் பயன் படும் பொருள்களில் மட்டும் தேய்மானம் இல்லை. உனக்கும் தேய்மானம் உண்டு.

உன் உள்ளத்தில் உள்ள அழுக்குகளை நினைத்துப் பார்! உன்னைப் பற்றி உனக்கே தெரியும்.”

**எவனையும் அலட்சியப் படுத்தாதே:**

“பிறரைக் குறை சொல்கிற பழக்கம் கூடாது. யாரையும் அலட்சியப் படுத்தக் கூடாது. சிறு துளியும் பெரு வெள்ளமாக மாறும். சிறிய உளியும் மலையை உடைக்கும். சிறிய உருவமும் பெரிய உருவத்தை அழிக்கும். இவனால் என்ன ஆகும்? என்று எவனையும் அலட்சியப்படுத்தாதே!”

**பொறாமை இல்லையென்றால்...**

“ஒருவனிடம் பொறாமைக் குணம் இல்லையென்றால், அனைத்துச் சிக்கலுக்கும் விடைகாண முடியும்.”



**ஆன்மிகம் நல்லவர்களிடம் இருந்தால்:**

“ஒரு குழந்தை தன் தாயின் முகம் பார்த்துப் பழகும்போதே தாயின் பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்கிறது. அதுபோல ஆன்மிகம் நல்லவர்களிடம் இருந்தால் அவர்களைப் பார்த்து மற்றவர்கட்கும் ஆன்மிகத்துறையில் ஈடுபாடு உண்டாகும். அதனால் நன்மையும் உண்டாகும்.”

**சுறு சுறுப்பு:**

“ஆன்மிகத்தில் எப்போதும் சுறு சுறுப்பாக இருக்க வேண்டும்.”

**தியானம்: தொண்டு: தருமம்**

“எத்தனை விஞ்ஞானம் வளர்ந்தென்ன?

எத்தனை பெரியவர்களிடம் போனால் தான் என்ன?

எத்தனை ஆலயம் சுற்றினால் தான் என்ன?

எத்தனை நல்ல காரியம்செய்தால் தான் என்ன?

துன்பம் என்று வரும்போது கோயிற்சிலை உடனே கை கொடுத்துக் காப்பாற்றி விடுவதில்லை.

அவற்றுக்குப் பதிலாகத் தியானம், தொண்டு, தருமம், இவற்றை மேற்கொண்டு வாழ்வது சிறப்பு: இவை சிறந்த பலன் தரும்.

**பக்குவம் அவசியம்:**

“சமையலில் பக்குவம் அவசியம். அதுபோல ஆன்ம வளர்ச்சி அடைவதற்கும் பக்குவம் அவசியம்.”

**சோளமும் – கரும்பும்:**

“சோளம், கரும்பு போன்ற பயிர்கள் ஆரம்பத்தில் ஒரே மாதிரியாகத்தான் தோன்றும். சோளமா? கரும்பா? என்று தெரியாது. கதிர் வெளிவர ஆரம்பித்த பிறகுதான் அது சோளமா கரும்பா என்று தெரியும்.

நிலத்தில் பயிரும் களையும் ஒன்றுபோலவே வளரும். பயிர் எது? களை எது? என்று சீக்கிரத்தில் கண்டு பிடிக்க முடியாது. கதிர் வரும் போதுதான் பயிர் எது? களை எது? என்று கண்டு பிடிக்க முடியும்.

அதுபோல ஆன்மிகத்தில் ஈடுபடும்போது எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் காணப்படுவார்கள்.

ஆன்மிகத்தில் ஈடுபட, ஈடுபட அவரவர் சுயரூபம், குணாதிசயங்களும் வெளிப்பட ஆரம்பிக்கும்.''

**தெளிந்த மனத்திலேதான் தெளிவான சிந்தனை:**

''உங்கள் உள்ளம் பால் போலவும் பகல் போலவும் இருக்க வேண்டும். இதயம் இரவு போல இருக்கக் கூடாது. இரவில் எவ்வளவு ஒளி விளக்குகள் ஏற்றினாலும் பகல் போல ஆகாது.

மனத்தை ஒருமுகப் படுத்த வேண்டும்.

தெளிந்த மனத்தில்தான் தெளிவான சிந்தனைகள் தோன்றும்.''

**உன் ஆன்மாவே தெய்வம்:**

''அதுதான் தெய்வம்! இதுதான் தெய்வம்! என்று அங்கும் இங்கும் அலையாதே! உன் ஆன்மாதான் தெய்வம்.''

**ஆன்மிக ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிகமான சோதனைகள் வருவது ஏன்?**

''நல்ல மாணவன் ஒருவன் தவறு செய்யும்போதுதான் ஆசிரியர் அவனைக் கண்டித்துத் திருத்துவார். உபயோகம் இல்லாத மாணவனைத் திருத்துவதால் பயனில்லை என்று கைவிட்டு விடுவார். அதுபோல ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகம் இருப்பவர்களுக்குத்தான் அதிகமான சோதனை வரும்.

திருந்தாத மாணவன் பள்ளியை விட்டு வெளியேறி அடி உதை படும்போதுதான் ஆசிரியரின் பெருமையை உணருவான். அதுபோல ஆன்மிக ஈடுபாடு இல்லாதவர்கள் அடியும் உதையும் பட்டுத்தான் திருந்துவார்கள்.

நல்ல மாணவர்களுக்கு ஆசிரியரின் துணை உண்டு; பரிவு உண்டு. அதுபோல ஆன்மிக ஈடுபாடு கொண்டவர்களுக்குச் சோதனை மேல் சோதனை வந்தாலும் தெய்வ அருள் உண்டு. நிழல் உண்டு.''

**தெய்வ சக்தி நினைத்தாலும் காப்பாற்ற முடியாது:**

''மற்றவனை அழிக்க வேண்டிக் காழ்ப்புணர்ச்சியோடு மந்திர ஜெபம் செய்பவர்கள், பொய், பித்தலாட்டத்துடன் யாகம் செய்பவர்கள் இவர்களைத் தெய்வ சக்தி நினைத்தால்கூடக் காப்பாற்ற முடியாது.''

**மற்றவர்கள் உங்களிடம் பாசமாக இருக்க...**

''ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கு உணவும் தேவை; தாயின்



பாசமும் தேவை. பருவம் வந்த பெண்ணுக்கும் பாசம் தேவை. உங்களிடம் வேலை செய்யும் வேலையாட்களின் உணவுத் தேவைகளையும், பிற தேவைகளையும் நீங்கள் கவனித்துக் கொண்டால் உங்களிடம் பாசமாக இருப்பார்கள்.

வயலில் வளர்ச்சி இருந்தால்தான் வயிற்றுக்கு உணவு கிடைக்கும். உங்கள் கண்களில் குளிர்ச்சி இருந்தால்தான் மற்றவர்களின் பாசம் உங்களுக்குக் கிடைக்கும்.''

**ஆசை அலைகளை அடக்க... மௌனம்:**

''ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஆசைகள் அலை அலையாக உள்ளன. அவற்றைக் கட்டுப் படுத்திக் கொள்ள வேண்டும். அலைகள் ஓய்ந்தால் மௌனமாகும். மனத்தில் ஆசை அலைகள் அடங்குவதற்கு மௌனம் தேவை.

மௌனம் இருப்பது உன் மன அமைதிக்காக!

**பச்சை மரம்; காய்ந்த மரம்:**

''ஒரு பச்சை மரத்தை வெட்டிக் கிணற்றில் போட்டால் உள்ளே மூழ்கி விடுகிறது.

ஒரு காய்ந்த மரத்தை வெட்டி அந்தக் கிணற்றில் போட்டால் மிதக்கிறது. ஏன்?

பச்சை மரத்தில் உள்ள ஈரத்தன்மையின் காரணமாக அது உள்ளே மூழ்கி விடுகிறது.

காய்ந்த மரத்தில் ஈரத்தன்மை இல்லை. கனம் இல்லை. அதனால் மிதக்கிறது.

பாசம், பந்தம் என்ற உணர்வுகள் இருக்கிறவரையில் ஆன்மிகத்தில் மிதக்க முடியாது. அந்த உணர்வுகள் அகன்றால்தான் மிதக்க முடியும். ஆன்மிகத்தில் முன்னேறவும் முடியும்.''

**ஆன்மிகத்தில் ஏற்றமும் – இறக்கமும்:**

''உயிருடன் இருக்கும்போது உடல் தண்ணீரில் விழுந்தால் மேலே வருகிறது. இறந்தபின் கீழே சென்று பிறகுப் பிணமாக மேலே மிதக்கிறது.

பச்சை மரக்கட்டை தண்ணீரில் அமிழ்ந்து விடும். காய்ந்த மரப்பட்டை மிதக்கும்.

புவி ஈர்ப்பு விசையால் மேலே சென்ற பொருள் கீழே விழுகிறது.

காற்றழுத்தம் குறையக் குறைய ஈரத்தன்மை அதிகரித்து மேகமாக மாறி மழையாகப் பொழிகிறது.

இயற்கையில் இவ்வாறு பல மாற்றங்கள் மாறி மாறி வருவது போல ஆன்மிகத்திலும் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படும். ஐம்புலன்களையும், அடக்கி அதனை வெற்றி கொள்ள வேண்டும்.''

**ஆன்மிகம் கலவாத வாழ்க்கை:**

''கண்ணாடியின் பின்புறம் பாதரசம் பூசப்பட்டிருந்தால்தான் உன் முகத்தைக் கண்ணாடியில் பார்க்க முடியும். அதுபோல உன் வாழ்க்கையில் ஆன்மிகம் கலந்து இருந்தால்தான் சிறப்பு. ஆன்மிகம் கலவாத வாழ்க்கை பாதரசம் இல்லாத கண்ணாடி போன்றது.'

**பாலும் – பாத்திரமும்:**

''பாத்திரத்தில் பாலை ஊற்றிக் காய்ச்சுகிறபோது, பாலும் தேய்கிறது, பாத்திரமும் தேய்கிறது. வயதாக வயதாக உங்கள் பந்த பாசத்தில் தேய்மானம் இருக்க வேண்டும். அந்தத் தேய்மானம் இருந்தால்தான் ஆன்ம வளர்ச்சி!''

**அடிமட்டமும், மேல்மட்டமும்:**

''ஒரு குடிசையும், ஒரு கட்டிடமும் தீப்பற்றி எரிந்தால், உடனே ஓடிச் சென்று குடிசையைப் பிரித்துத் தீயை அணைத்து விடலாம். கட்டிடத்தில் பரவிய தீயை உடனே அணைத்துவிட முடியாது. தீயணைக்கும் எந்திரத்தை வரவழைத்துத்தான் தீயை அணைக்க முடியும்.

அடிமட்டத்துப் பக்தர்களை உருவாக்குவது எளிது. ஏன்? இவர்களிடம் பாவம் குறைவு. மேல்மட்டத்துப் பக்தர்களை உருவாக்குவது கடினம். இவர்களிடம் பாவம் மிகுதி.''

**அமைதியான வாழ்வு:**

''அபிடேகம், ஆராதனை என்பன எல்லாம் உள்ளத்தின் அமைதிக்காகச் செய்யப்படுவன. நிலையான அமைதி ஆன்மிகத்தால் மட்டுமே கிடைக்கும். புரிந்தும், தெரிந்தும் அமைதியான வாழ்வுக்கு முயல வேண்டும்.''

**பலதரப்பட்ட மனிதர்களை வைத்து...**

''பல சுரங்களைச் சேர்த்து இசை அமைப்பது போல, பல வகையான குணம் உள்ளவர்களை வைத்து, ஆன்மிகம் என்ற இனிய இசையை இங்கே இசைத்து வருகிறேன்.''



**ஆன்மா அலை மோதுகிறது:**

''மனிதன் பேசுகிற பேச்சு காற்றலைகளுக்கு ஏற்றவாறு, போய்ச் சேர வேண்டிய தூரத்திற்கேற்ப எதிரொலிக்கிறது.

அதுபோல, மனிதனுடைய எண்ணங்களும், செயல்களும் அவனுடைய ஆன்மாவிற்கு ஏற்றாற்போலப் பிரதிபலிக்கின்றன.

ஒருவன் மருத்துவனாகவும், ஒருவன் நல்லவனாகவும், ஒருவன் கள்ளனாகவும், ஒருவன் கொலைகாரனாகவும், ஒருவன் பாசம் மிக்கவனாகவும், இப்படி எல்லாத் துறைகளிலும் ஆன்மா அலை மோதுகிறது.''

**அடுத்தவன் குறைகளையே பேசிக்கொண்டு இருக்காதே!**

''தன் குறைகளை மறைத்துக் கொண்டு, மற்றவர்களின் குறைகளையே பேசுவதில் பயனில்லை. அத்தகைய பேச்சினால் ஒருவன் முன்னேற முடியாது.

ஓட்டைக் கப்பலில் செல்பவன் கரையேற முடியாது. பிறர் குறைகளையே பேசித் திரிபவன் ஆன்மிகத்தில் கரையேற முடியாது.''

**கற்ற கல்வியாலும் – சேர்த்த பணத்தாலு முடியாது:**

''நீ கற்ற கல்வியாலோ, நீ சேர்த்து வைத்துள்ள பணத்தாலோ நீ நினைப்பதைச் சாதித்துவிட முடியாது. ஆன்மிகத்தில் நீ வளர்ந்தால்தான் நீ நினைக்கும் எதையும் சாதிக்க முடியும்.''

**ஆன்மிகத்தில் பதமும் பக்குவமும் பெறுவது எவ்வாறு?**

''மரம், செடி, கொடிகள் இவற்றில் உள்ள இலைகள், பறித்தவுடன் உரமாவது இல்லை. அவற்றைப் பள்ளத்தில் போட்டுப் பல நாள் மக்கிப் பக்குவப்பட்ட பிறகே உரமாகிறது. தழை உரம் என்று பெயர் பெறுகிறது. அதுபோல ஆன்மிகத்தில் ஈடுபட்டவுடனேயே பக்குவம் வந்து விடாது. பந்த பாசங்களை விட்டு, தான தருமம் செய்து, மற்றவர்களுக்குத் தொண்டு செய்து, உள்ளம் தெளிந்து பக்குவப் பட்ட பிறகே பதமாகலாம்.''

# 6. பெண்கள்

### பெண் பிறவி பாவமல்ல:

“பெண் பிறவி என்பது பாவமல்ல! பெண் சிருஷ்டியிலே தான் பராசக்தி தத்துவமே அடங்கியுள்ளது.”

### மாதவிலக்கு ஒரு தடை அல்ல!

“மகனே! இந்த விலக்கம் என்பது பசு முதல் பறவையினம் ஈறாகப் பெண்ணுடம்பு எடுத்த எல்லா உயிர்களுக்கும் உண்டு. இயற்கையின் கூறாகிய உடம்புக்குரிய இயல்பான சில குணங்களில் பெண் உடம்புக்கு என்று ஏற்பட்டது இது! இதற்கு ஏன் பெரிய ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும்? இனி என் கோயில்களிலும் மகளிர் சாதாரண காலங்களைப் போலவே விலக்கான நாட்களிலும் வந்து வழிபடலாம். அவர்களுக்கு வீட்டு விலக்கு என்று கூறப்படும் நாட்கள் எனக்கு விலக்கு அல்ல! எனவே, எல்லா நாட்களிலும் என் சந்நிதிக்கு வந்து வழிபட மகளிருக்கு உரிமை உண்டு. இதனை அனைவருக்கும் விளம்பரப்படுத்திக் கூறிவிடுங்கள்!”

### 2001 நாட்களுக்கு முன்பு:

“2001 நாட்களுக்கு முன்பு நான் இங்கே பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது போல ஆங்காங்கே கொடுக்கப்பட்டிருந்தால் இன்றைக்குள்ள இந்த நிலைமைகள் எல்லாம் வந்திருக்காது.”

(15.2.1990 அன்று அன்னை கூறியது)

### பெண்ணுக்குத்தான் சக்தி அதிகம்:

“ஆண்களைவிடப் பெண்களுக்கு ஏழுசக்திகள் அதிகம். அவற்றுள் ஆண்களிடம் இல்லாத தைரிய சக்தி பெண்களிடம் உண்டு. பெண் சக்தி இல்லாமல் ஆண் சக்தி இல்லை.”



### தாய்ப்பாலின் மகத்துவம்:

“தாய்ப்பால் கொடுத்து வளர்ப்பதனாலேயே குழந்தைகளுக்குப் பெற்றோர்களிடம் பாசம் உண்டாகிறது. அப்பாசத்தின் மூலம் அறிவு வளர்கிறது. தாய்ப்பால் நோயினை வளர விடுவதில்லை.”

### விழாக்களில் முக்கியத்துவம்:

“இனி வரவிருக்கிற தைப்பூசம், ஆடிப்பூரம், சக்தி மாலை, இருமுடி ஆகியவற்றில் பெண்களுக்கு முக்கியத்துவம் உண்டு. வீட்டிலிருந்து புறப்பட்டு வரும்போது வீண் பேச்சு, வீண் விதண்டாவாதங்கள் பேசிக்கொண்டு வருதல் கூடாது.”

### பெற்றோர் முன்னேற்றத்திற்கு...

“சமூகத்தில் பெண்கள் முன்னேற்றத்திற்காக வழி வகுக்கவேண்டும். இங்கு நடைபெறும் அனைத்துப் பணிகளிலும் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஆண்கள் பக்கபலமாக இருந்து துணைபுரிய வேண்டும்.”

### உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்ற...

“எவ்வளவுக்கெவ்வளவு பெண்கள் ஆன்மிகத்தில் ஈடுபடுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு உலகம் அழிவுகளிலிருந்து காப்பாற்றப்படுகிறது என்பதை மறக்கக்கூடாது.

பெண்களை வெறும் விளையாட்டுக் கருவிகளாகவோ, போதைப் பொருளாகவோ கருதக்கூடாது. அவர்களைத் தெய்வமாகவும் தாயாகவும் கருது. வெளிநாட்டிலுள்ள பசுவும், கன்றும் கூட “அம்மா” என்றுதான் கத்துகின்றன. அம்மா என்ற அந்தச் சொல் தாய்ப்பாசத்தைக் குறிக்கும்!”

### பெண்களை உயர்வுபடுத்து:

“பெண்களைப் பொம்மையாகவும், கைப்பாவையாகவும் இயந்திரமாகவும், உணவு சமைப்பவளாகவும் நினைக்கிறார்கள். பெண்களை மேன்மை உள்ளவர்களாக உண்மையானவர்களாக நல்ல கருத்துள்ளவர்களாக, பொறுப்புள்ளவர்களாகக் கருத வேண்டும்.”

### வழிபாட்டு முறைகளைச் சொல்லிக்கொடு:

“மற்ற மாநிலங்களில் ஆன்மிகம் பரவியிருந்தாலும், கோயில்கள் நிறைந்திருந்தாலும் கஷ்டம் வரத்தான் செய்கிறது. மடாதிபதிகளுக்கும் சிரமம் உண்டு. சாமியார்களுக்கும் கஷ்டகாலம் உண்டு. ஆகையால் முறையான நல்ல வழிபாடு தேவை.

பெண்கள் முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகளையெல்லாம் இங்கே செய்யவேண்டும். பெண்களுக்கு வழிபாட்டு முறைகளையெல்லாம் இங்கே சொல்லித்தர வேண்டும்.''

**பெண்கள் மேம்பாட்டுக்காக...**

''இங்கே ஆதிபராசக்தி அறநிலை மூலமாகக் கல்வி நிறுவனப் பணிகளையெல்லாம் முடித்துவிட்டு, அடுத்தபடிச் சிறுதொழில்களை ஆரம்பித்துப் பெண்களுக்கு வேலைவாய்ப்புகளை அளிக்க வேண்டும்.''

**ஆதிகாலத்தில் பெண்கள்:**

''ஆதிகாலத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் இருந்தது. ஆனாலும் ஆன்மிகத்தில் முக்கியத்துவம் இருந்ததில்லை. பெண்களுக்கும் ஆன்மிகத்தில் ஈடுபாடு இருந்ததில்லை. நான் அதனை இன்று மாற்றிக்கொண்டு வருகிறேன். பெண்கள் இதனைப் புரிந்து கொண்டு ஆன்மிகத்தில் ஈடுபாடு வைத்துக் கொண்டு கரையேறி வரவேண்டும்.''

**வீட்டுப் பொறுப்பு; ஆன்மிகப் பொறுப்பு:**

''மகளிர் தங்கள் வீட்டுப் பொறுப்புகளுடன் நின்றுவிடாமல், இங்கே ஆன்மிகப் பணிகள், ஆலயத் திருப்பணிகளில் பொறுப்பேற்றுச் செய்யவேண்டும்.''

**பட்டுப்புடவை கூடாது:**

''பெண்கள் கலச வேள்விப்பூசை, கருவறையில் தீபாராதனை முதலிய பணிகளில் இருக்கும்போது பட்டுப்புடவை, நைலக்ஸ் புடவைகளை அணிந்து கொண்டிருக்கக் கூடாது. பருத்தி நூல் புடவைகள் அணிந்து கொண்டுதான் பாதுகாப்புடன் பணிசெய்ய வேண்டும்.''

**பெண்கள் மயமாக்க வேண்டும்:**

''ஆதிபராசக்தி கல்வி, மருத்துவ நிறுவனங்களைப் பெண்கள் மயமாக்க வேண்டும்.''

**பெண்களுக்குக் கட்டுப்பாடு:**

''பெண்கள் தங்களுக்குள் காழ்ப்புணர்ச்சி இல்லாமல், ஒழுக்க நெறியோடும், கட்டுப்பாட்டோடும் செயல்படவேண்டும்.''



**பெண்களை ஆடவர் எவ்வாறு மதிக்க வேண்டும்?**

''பெண்களைச் சாக்கடையாகவும், பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் கருவியாகவும் நினைக்கக்கூடாது. அவர்களைக் காக்கும் கருவியாகவும், ஆக்கும் கருவியாகவும், கற்புக்கு இலக்கணமாகவும் கருதவேண்டும்.''

**பெண்களும் – உலக அமைப்பும்:**

''உலக அமைப்பே பெண்களை மையமாகக் கொண்டது. பெண்கள் கரு உரு தன்மை கொண்டவர்கள். வெளியிலிருந்து வண்டு வந்து பூவில் அமர்ந்து மகரந்தச் சேர்க்கை நடைபெற்றாலும் கருவுக்குத் தேவையான கருப்பை பூவில் தான் உண்டு. ஆதலால் உலகம் பெண்களையே அடிப்படையாகக் கொண்டது.''

**நாளைய உலகில்:**

''நாளைய உலகில் தங்கத்திற்கு மதிப்பில்லை. பெண்களுக்குத்தான் மதிப்பு.''

**பெண்களுக்கு ஏன் முக்கியத்துவம்?**

''ஓர் ஆணின் உடலில் பெண் அணுக்கள் அதிகம் உண்டு. ஆனால் ஒரு பெண்ணின் உடலில் ஒருசில ஆண் அணுக்களே உண்டு. ஆண்களும், பெண்களும் ஒற்றுமையான வாழ்விற்குச் செயற்பட வேண்டும்.

எதிர்காலத்தில் அரசியல், சாதி வெறியோடு மாறக்கூடிய நிலைமை வந்துகொண்டிருக்கிறது. அவ்வாறு மாறக்கூடாது என்பதற்காகவே ஒரே தாய்! ஒரே குலம்! என்ற மந்திரத்தை உங்களுக்கு வழங்கினேன். பெண்குலத்தை வைத்தே அவர்களை ஆன்மிகப் பணிகளில் ஈடுபட வைத்தே ஆன்மிகம் வளர்க்கிறேன்.''

**நாளைய உலகம் சக்தி உலகம்:**

''நாளைய உலகம் சக்தி உலகம். அடிமைத்தனம் மாறிப் பெண்கள் அறிவாளிகளாகவும், ஆன்மிகத் துறையில் சுதந்திரப் பறவைகளாகவும் மாறவேண்டும் என்பதற்காகவே பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறேன்.''

**பெண்களுக்குத் திறமை உண்டு:**

''ஆன்மிகத்தின் உச்சியை அடையும் திறமை பெண்களுக்கு உண்டு. பறவைகளுக்கும் விலங்கினங்களுக்கும் அடிமைத் தன்மை என்பது இல்லை. எல்லாமே சரி சமம். மனித குலத்தில் பெண்கள்

அடிமைகள் அல்ல. ஐந்தறிவு உயிர், ஆறறிவு உயிர் என்றெல்லாம் பாகுபாடு கிடையாது. ஆறறிவு பெற்ற உயிர்களுக்கும் அறியாமை உண்டு. சோம்பேறித்தனமும், சுயநலமும் அவற்றுக்கு அதிகம்.''

**சக்தி ரூபம் எடுத்து வந்துள்ளேன்:**

''பெண்களை விடத் தாமே உயர்ந்தவர்கள் என்ற அகங்காரம் ஆண்களிடமிருந்து அகலவேண்டும். பெண்கள் சமுதாயத்தை உயர்த்த வேண்டியே நான் சக்தி ரூபம் எடுத்து வந்துள்ளேன்.''

**பெண்களும் – மன ஒருமைப்பாடும்:**

''ஒருவனின் எண்ணங்களுக்கு ஏற்றாற்போலவே அவனுடைய வெளித்தோற்றமும் அமையும். வெளித்தோற்றத்திற்கு ஏற்றாற்போலவே உள்ளமும் அமையும்.

சிவப்பு, மஞ்சள், பச்சை என்று நிறங்களில் மாறுபாடு இருப்பது போல - இது கரை போட்டது; இது பூ போட்டது என்று சேலைகளில் பல மாறுபாடுகள் இருப்பது போல அவரவர் எண்ணங்களிலும், மனத்திலும் மாறுபாடு உண்டு. ஆதலின் பெண்கள் தங்களிடம் உள்ள மாறுபாடுகளையும், வேறுபாடுகளையும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் ஒற்றுமையுடன் ஆன்மிகத்துறையில் ஈடுபடுவதுடன், ஒருமுகப்பட்ட மனத்துடன் பக்தி, தியானம் மேற்கொண்டு ஆன்ம முன்னேற்றம் பெறவேண்டும்.''

**பெண்கள் தவறும்; ஆண்கள் தவறும்:**

''பெண்கள் தவறு செய்துவிட்டால் வெளியில் தெரிந்துவிடும். ஆண்கள் தவறு செய்தால் வெளியில் தெரிவதில்லை. பெண்கள் மலர்களைப் போன்றவர்கள். அந்த மலர்கள் மலர்ந்து காயாகிக் கனியாக வேண்டும். அவை கருகிவிடக் கூடாது.''

**இல்லறம் தடையன்று:**

''இல்லறத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கும் உபதேசம் அளித்து ஞானியாக்கும் நிலைமை இங்கே உண்டு.''

**நாளைய உலகில் பெண்கள்:**

''நாளையை உலகத்தில் என்ன நடக்கும் என்று உங்களால் சொல்ல முடியாது. விஞ்ஞானத்தால் அழிவு தான் உண்டாகும்.

குழந்தைப் பருவத்தில் எதையும் புரிந்துகொள்ளும் தன்மை இல்லை. அதற்கான மனப்பக்குவம் இல்லை. அதே குழந்தை தாய்மைப் பருவத்திற்கு வந்தவுடன் பக்குவமும், எதையும் புரிந்து கொள்ளும் தன்மையும் உண்டாகும்.



பின்னால் நடக்கப்போகும் நிலைமைகளை நீங்களெல்லாம் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் உங்களிடம் ஆன்மிகம், தியானம், மௌனம் போன்றவைகளை வற்புறுத்துகின்றேன்.''

**தாய்ப்பாலை இரவலாகக் கொடுத்த காலம்:**

''அந்தக் காலத்தில் தாய்ப்பால் இல்லாத குழந்தைகளுக்குப் பக்கத்து வீட்டில் இரவலாகப் பால் கேட்டால் தாய்ப்பாலையே இரவலாகக் கொடுத்தது உண்டு.

இப்போது பசும்பாலையும் எருமைப்பாலையும் இரவலாகக் கொடுக்கிறார்கள். அதனால் தான் இன்று குழந்தைகளிடமும் பாச உணர்வு இல்லாமல் போகின்றது.

அதன் காரணமாகத் தான் காம உணர்வு அதிகமாகிவிட்டது. அதனால் காலமும் காலனாக மாறிவிட்டது.''

**பெண்களைத் தெய்வமாகக் கருது:**

''பெண்களைத் தெய்வமாக எண்ணாமல், அவர்களை விபச்சாரப் பொருளாகவும், அழகுப் பொருளாகவும் நினைக்கிறார்கள். இவ்வாறு நினைப்பது தவறு. அந்நினைப்பால் தீமைகள் தான் வளரும்.''

**பூமி தாய்க்குச் சமம்:**

''பெண்களுக்கு இங்கே முக்கியத்துவம் கொடுக்கிறேன். ஏன்? பெண்களைச் சிலர் வேடிக்கைப் பொருளாகக் கருதிக்கொண்டு பேசிவருகிறார்கள். பெண்களைப் பூமாதேவிக்குச் சமம் என்று கூறுவார்கள். ஆன்மிகத்துறையில் இருப்பினும் சரி! வீடாக இருப்பினும் சரி! பெண்கள் பூமாதேவிக்குச் சமமானவர்கள் தான். உலகம், நாடு, வீடு என்பவனற்றின் உயர்வு பெண்களின் உயர்வை அடித்தளமாகக் கொண்டது!''

**பெண்களும் சிலந்திப்பூச்சியும்:**

''பெண்கள் சிலந்திப் பூச்சியைப் போன்றவர்கள், பாசம் உள்ளவர்கள், ஆதலின் அவர்ளுக்கு ஓய்வு தேவை. அமைதி தேவை.''

**பெண்களும் – வேள்வியும்:**

''இங்கு நடைபெறுகிற வேள்விமுறைகளைப் பெண்கள்

கற்றுக்கொள்ள வேண்டும். சக்கரங்கள் அமைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்."

### பேய், பூதம் என்று பாடியவர்கள்:

"பெண்களைப் பேய்கள் என்றும், பூதம் என்றும், புலி என்றும் பாடியவர்கள் பொறாமை காரணமாகவே பாடினார்கள்."

### அழகு: உள்ளத்து அழகு:

"பொலிவு உடல் உறுப்புகளில் இருந்தால் மட்டும் போதாது. அந்தப் பொலிவு உள்ளத்திலும் இருக்க வேண்டும்."

### ஆடவர் சமுதாயம் கைவிட்டவை பல...

"ஆடவர் சமுதாயம் பலவற்றைக் கைவிட்டுவிட்டது. பெண்கள் சமுதாயம் வளர்ந்து ஓரளவு கட்டுப்பாட்டுடன் இருப்பதால் தான் பெண்களுக்கு முக்கியத்துவம் தருகிறேன். எந்த மாவட்டமானாலும் ஆன்மிகப் பணிகளில் பெண்கள் தான் முக்கியத்துவம் பெறவேண்டும்."

### பத்திரிகைப் பொறுப்பு:

"இங்கே (சித்தர் பீடம்) அனைத்தும் பெண்களே பொறுப்பு ஏற்றுச் செய்யவேண்டும். "சக்தி ஒளி" வெளியீட்டுப் பொறுப்பையும் பெண்கள் ஏற்றுச் செய்ய வேண்டும். அதில் குழந்தை வளர்ப்பு, ஆன்மிகத்தில் மகளிர் பங்கு முதலியன பற்றியும் வெளியிடவேண்டும்."

### பிடி அரிசியும், அன்னதானமும்:

"ஆடிப்பூர விழாவின் போது, பெண்கள் பிடி அரிசி போட்டுத் தருமம் செய்ய வேண்டும். இலை போட்டு அன்னம் பரிமாற வேண்டும்."

### புலவர்கள் என்போர்...

"எங்கே உற்பத்தி ஆனோம் என்பதை மறந்து புலவர்கள் எனப்படும் சிலர் பெண்களைத் தரக்குறைவாகப் பேசுகிறார்கள்.

இந்தத் தாய் உள்ளத்திற்கு ஆண்மையை மட்டம் தட்டும் எண்ணம் இல்லை. ஆனால் பெண்களைத் தரக்குறைவாகப் பேசும் தன்மை ஆண்களுக்கு உள்ளது."



### பெண்களின் சக்தி:

"பெண்களின் மூளைக்குச் சக்தி அதிகம் உண்டு. இயற்கையான கூந்தலினால் அந்தச் சக்தி பாதுகாக்கப்படுகிறது. ஆண்கள் முடி வெட்டிக் கொள்வதால் அவர்களின் அறிவுக்கூர்மைக்கும் வலிமைக்கும் வெட்டு வீழ்கிறது."

### பெண்களின் பலம்:

"பெண்களுக்கு அறிவும் திறமையும் அதிகம் உண்டு. ஏழு யானை பலம் உண்டு. கருவை ஆண்களுக்குக் கொடுக்கவில்லை. கருவைச் சுமக்கும் பெண்களாகிய உங்களுக்கே நான் அந்த பலத்தை இயற்கையிலேயே கொடுத்திருக்கிறேன்."

### முதலில் பெண் தெய்வத்துக்குச் செய்!

"எந்தவிதமான மங்கல காரியத்தைத் தொடங்கினாலும், அபிடேகம் செய்ய நினைத்தாலும், முதலில் பெண் தெய்வத்திற்கு அபிடேகம் செய்துவிட்டுத் தான் ஆண் தெய்வத்திற்கு அபிடேகம் செய்யவேண்டும். பெண்களின் கருவில் உற்பத்தியாகித் தான் நீங்கள் பிறக்கிறீர்கள்."

### பட்டிதொட்டி எங்கும்:

"பட்டிதொட்டி எங்கும் ஆன்மிகம் பரவவேண்டுமானால் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்."

### இல்லறத்தில் துறவு:

"இல்லறத்தில் துறவு உண்டு. அத்தகைய பெண்கள் துறவியானால் மகாசக்தி உண்டு."

### பெண்களுக்கு நகை மோகம் கூடாது:

"சிறுதுளிப் பொன்னாலும் ஆபத்து உண்டு. பெண்களுக்கு நகை மோகம் கூடாது. கௌரவத்திற்காக மனிதன் பொன்னும் பொருளும் தேடுகிறான். இவ்வாறு தேடக்கூடிய பொன்னாலும் பொருளாலும் அவனுக்கே அழிவு உண்டு."

### பெண்களை நிமிர்த்தினால் தான்:

"பெண்களை நிமிர்த்தினால்தான் உலகம் நிமிரும். ஆண்களை நிமிர்த்த முடியாது.

1008, 108 படித்தோம்; அபிடேக ஆராதனை செய்தோம்; ஆனாலும் நம் மகன் திருந்தவில்லையே... என்று நினைக்கக் கூடாது. தன் பிள்ளைகளைத் திருத்துவதற்கும் மனக்கட்டுப்பாடு தேவை.

கணவனும் மனைவியும் தவறு செய்துவிட்டுத் தங்களைத் திருத்திக் கொள்ளாமல் தங்கள் பிள்ளைகளைத் திருத்திவிட முடியாது.

ஆகிற செலவினங்களைப் பற்றிக் கவலைப்படாமல், இங்கே உங்கள் பிள்ளைகளையும் என் சந்நிதிக்கு அழைத்து வரவேண்டும். அவர்களையும் ஆன்மிக நெறியில் ஈடுபடுத்த வேண்டும்.

கல்லும் மண்ணும் தின்றாலும் தன் பிள்ளை தன் பிள்ளை தான்.''

**மருமகளை மகளாகவே கருது:**

''மாமனார், மாமியார் இருவரும் வீட்டுக்கு வருகிற ஒரு பெண்ணின் சீர்வரிசைப் பொருட்களைத் தான் பார்க்கிறார்கள். பேசுகிறார்கள். வருகிறவளின் குணத்தைப் பார்ப்பதில்லை. மருமகளை மகளாகவே கருதவேண்டும்.

பொருள் சேரச்சேர அன்பு வளராது. களைகள், கவலைகள் பொறாமைகள் தான் வளரும். இவை என்றைக்குமே உங்களுக்கு ஆபத்தானவை.''

**பெண்கள் வழிபாடு செய்வதால்...**

''தற்போது பெண்கள் வழிபாடு செய்வதால் தான் கனிவளமும், செழிப்பும் உள்ளன.''

**அறநிலை மூலம்:**

''இந்த மருவத்தூரில் ஒரு கல்லை உடைத்து, ஒரு சிலையைச் செய்து, அதற்குச் சக்தி கொடுத்து, கவர்ச்சி கொடுத்துச் சித்தாடல் செய்து நான் ஆன்மிகம் வளர்ப்பது போல, இங்கே நீங்கள் பெண்கள் அறநிலை ஒன்றை அமைத்து, அதன் மூலம் பல கல்வி நிலையங்கள், நிறுவனங்கள், தொழிற்சாலைகள் அமைக்க வேண்டும். அவர்கள் மேம்பாட்டுக்காகப் பல திட்டங்கள் தீட்டிச் செயற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் அருளும், பொருளும் கொடுப்பேன்.''

**பெண் தொண்டர்களுக்கு:**

''ஆன்மிக மாநாடுகள், சித்தர்பீடத்து விழாக்கள் நடைபெறுகிற காலங்களில் நீங்கள் என் சந்நிதிக்கு வராத பெண்களிடம் சென்று மஞ்சள், குங்குமம் கொடுத்து அழைப்பிதழ் கொடுத்து



அவர்களையும் அழைத்து வந்தால் உங்களுக்குப் பலன் உண்டு. அவர்களுக்கும் பலன் உண்டு.''

**உலகத்திற்குத் தெரியப்படுத்த:**

''பெண்களுக்கும் அர்ச்சனை செய்யத் தெரியும். அலங்காரம் செய்யத் தெரியும். வேள்விகள் செய்யத் தெரியும். கும்பாபிடேகம் செய்யத் தெரியும் என்பதை உலகத்திற்குத் தெரிய வைப்பதற்கே இங்கே உங்களுக்கெல்லாம் வாய்ப்புத் தருகிறேன். இவற்றையெல்லாம் நீங்கள் பயன்படுத்திக் கொண்டு ஆன்ம முன்னேற்றம் பெற்று உயரவேண்டும்.''

**ஏன் இவ்வளவு பிரச்சனை?**

''மனிதன் மனிதனாகவும், பெண்களைப் பெண்களாகவும் சக்தியைச் சக்தியாகவும் நினைக்க மறுப்பதால் தான் உலகத்தில் இவ்வளவு பிரச்சனைகள். அவ்வாறு நினைத்தால் பிரச்சனைகள் வராது.''

**தான தருமமும் தாலி பாக்கியமும்:**

''தான தருமங்கள் பெருகினால் தான் நாட்டில் செழுமை கிடைக்கும். தான தருமங்கள் செய்தால் தான் தாலி பாக்கியமும் கிடைக்கும்.''

**பெண்மையில் ஆண்மை:**

''பெண்களுக்கு ஆண் தன்மையும் உண்டு. ஆண் தன்மை பாசத்தை அழித்துவிடுகிறது. பெண்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதால் அந்த ஆண் தன்மை அழிந்துவிடுகிறது. அதனால் தான் வீட்டில் உணவு இருந்தாலும் இல்லாவிட்டாலும் தன் கணவன், தன் குழந்தைகள் என்று அவர்களுக்குக் கொடுத்துவிட்டுத் தான் பட்டினி கிடக்கின்ற பக்குவம் பெண்களுக்கு உண்டாகிறது.''

**மனக்கட்டுப்பாடு தேவை:**

''பெண்களுக்கு மனக்கட்டுப்பாடு தேவை. மன அழுக்குகளை அவ்வப்போது அகற்றிக் கொள்ள வேண்டும். பகல் 12.00 மணிக்குத் தினமும் தவறாமல் தியானம் செய்ய வேண்டும். பெண்களுக்குத் தியானம் முக்கியம்.''

**பிறந்த வீடும் புகுந்த வீடும்:**

"ஒரு பெண் தன் தாய்வீட்டிற்குச் சென்று ஒரு பத்துநாட்கள் தன் விருப்பம் போல் தங்கியிருக்கிற போது கிடைக்கின்ற மன நிறைவு புகுந்த வீட்டில் கிடைப்பதில்லை. அதுபோல என் சந்நிதியில் ஏற்றப்படுகின்ற அகண்டத்தின் நிறைவு மன்றங்களில் ஏற்றப்படும் அகண்டத்தில் இல்லை. ஒரு பெண் தன் தாய்வீட்டிற்குச் செல்ல விரும்புவாளே தவிர, ஒரு தாய் தன் பெண் வீட்டிற்குச் செல்வதில்லை."

**பெண்களும் நவராத்திரியும்:**

"பெண்களின் உலக வாழ்க்கைக்கும் ஆன்மிக வளர்ச்சிக்கும் நவராத்திரி விழா ஒரு முக்கியமான விழாவாகும்."

**பெண்களும் குடும்பமும்:**

"உங்களின் பிள்ளைகளின் வளர்ச்சிப் பருவம் மாறும்போது அவர்களின் போக்கிலும் மாறுதல் வரும். அவை தொல்லையாகவும் மாறும். பிள்ளைகளைப் பெற்றெடுத்து வளர்க்கிற போது கொஞ்சுகிறீர்கள். அவ்வாறு மடியில் வைத்துக் கொஞ்சிய அப்பிள்ளைகளே தாய் தகப்பனுக்குப் பிரச்சனையாக மாறுகின்றனர். அதனால் குடும்பத்தில் குழப்பங்கள் வருகின்றன. அக்குழப்பம் குளவி போல் கொட்ட ஆரம்பிக்கின்றது. பிள்ளைகளால் பிரிவினை உண்டு; பிணி உண்டு; பிணைப்பும் உண்டு.

இப்படி ஓடிக்கொண்டிருக்கிற வாழ்க்கையில் நீங்கள் அமைதி பெற வேண்டியே குடும்பத்தினரோடு உங்களை ஆன்மிகத்தில் ஈடுபடச் சொல்கிறேன். உங்கள் பிள்ளைகளோடு அடிக்கடி இங்கே வந்து போகச் சொல்கிறேன். உங்கள் பிள்ளைகளையும் ஆன்மிகத்தில் ஈடுபட வைக்கிறேன்."

**ஆன்ம முன்னேற்றமே முன்னேற்றம்:**

"எத்தனை நாகரிகங்கள் வளர்ந்தாலும் எத்தனை நகரங்கள் தோன்றினாலும் இனி முன்னேற்றம் வந்துவிடாது. ஆன்மிகத்தால் மட்டும்தான் முன்னேற முடியும். ஆன்மிகத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் உண்டு. இனி எங்கே படுப்பது? என்று திணறுகிற அளவுக்கு மக்கள் தொகை பெருகும்."

**பிள்ளைகளை வளர்ப்பது எப்படி?**

"ஒரு செடியைத் தன் பார்வையில் வைத்து வளர்த்தால் தான் அது செழுமையாக வளரும். அதுபோல உங்கள் பிள்ளைகளையும்



உங்கள் பார்வையில் வைத்துக் கொண்டு வளர்த்தால் தான் ஒழுங்காக வளரும்."

**பெண்களின் பொறுப்பு:**

"பெண்களுக்கு இன்னும் மனஉறுதியும் கட்டுப்பாடும் வேண்டும். தன் மகனுக்குப் பால் புகட்டுவதும், புத்தி புகட்டுவதும் தாயிடம் தான் உள்ளது. ஒரு மகனை மகானாக மாற்றுவதும், பார்ப்பவர்களைப் பாராட்ட வைப்பதும் பெற்ற தாயிடம் உள்ளது. உங்கள் குடும்பத்தில் உள்ள பிள்ளைகளை நன்றாக வளர்க்க வேண்டும். இல்லையெனில் தாயினுடைய தாலியையே மகன் அறுக்கும் நிலைமை ஏற்படும்."

**பெண்கள் கருவறைப் பணி:**

"நாளைய உலகம் ஆன்மிக உலகம். மகளிருக்கு நல்ல உயர்வு உண்டாகும். இனி வருகிற பக்தர்கள் அதிகம். அவர்களை ஒழுங்காக வரிசைப்படுத்தித் தரிசிக்க வைப்பது உங்கள் பொறுப்பு. அபிடேக ஆராதனை, கலசவிளக்கு, வேள்விப்பூசை ஆகியவற்றைச் செய்யும்போது பெண்கள் பொறுப்பேற்றுச் செய்யவேண்டும். இந்த வழிபாடுகளிலெல்லாம் சிறுவர் சிறுமியரை நீங்கள் ஈடுபடுத்த வேண்டும்."

**எதிர்காலத்தில் பெண்கள் பொறுப்பு:**

"எதிர்காலத்தில் மகளிர் வளர்ச்சிக்காக ஒவ்வொரு மன்றத்திலிருந்தும் 20 அல்லது 50 அல்லது 100, 200 மகளிரை இங்கே வரவழைத்து இங்குள்ள வழிபாட்டு முறை, அலங்காரம் செய்யும் முறை, யாகங்கள் செய்யும் முறை, தியானப் பயிற்சி, கால்கோள் விழா நடத்தும் முறை, காதணி விழா, வளைகாப்பு ஆகியவற்றை நடத்துகின்ற முறைகளைக் கற்றுத் தரவேண்டும். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இங்கே சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்படிப் பயிற்சி பெற வருகின்ற பெண்களுக்குத் தேவையான இடவசதி, உணவு வசதிகளையும் இங்கே செய்து கொடு. உலகத்தில் தருமம் தழைக்கவும் சமுதாயத்தில் பெண்கள் முக்கியத்துவம் பெறவும் இவ்வழிபாட்டு முறைகளை வாரவழிபாட்டு மன்றங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்."

**அழிவுகள் தடுக்கப்படும்:**

"ஆன்மிகத்தில் பெண்கள் அதிகம் ஈடுபடுவதால் உலகம் அழிவுகளிலிருந்து காப்பாற்றப்படுகிறது."

**குடும்பக் கவலை வேண்டாம்:**

“செடி வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான் என்பது பழமொழி. நீ என்னதான் செடியைப் பாதுகாத்தாலும் நான் பார்த்துத் தண்ணீர், காற்று, வெப்பம் தராவிட்டால் செடி தழைக்குமா? உன் குடும்பம், உன் குழந்தை என்ற கவலைகளையெல்லாம் என்னிடம் விட்டுவிடு! ஆன்மிகத்தில் ஈடுபாடு வைத்துக் கொண்டு அம்மாவுக்குத் தொண்டு செய். தெரிந்ததைப் புரிந்து கொள்! புரிந்ததைத் தெரிந்து கொள்!”

**பாதிப்பு யாருக்கு?**

“குரங்கு எப்படி இடம்விட்டு இடம் தாவுகின்றதோ அது போல ஆண் எங்கு வேண்டுமானாலும் தாவி ஓடுவான். ஆனால் பெண்கள் மலர் போன்றவர்கள். வண்டு என்ன செய்கிறது? மலருக்கு மலர் பறந்து சென்று தேனை உறிஞ்சி விடுகிறது. கசங்குவது மலர் தானே? பாதிப்பு யாருக்கு? பெண்களுக்குத் தானே சிவப்பு விளக்கு? அனாதை இல்லம்? ஆணுக்கில்லையே!

பெண்கள் இளகிய மனம் படைத்தவர்கள். பலவீனமானவர்கள். எதையும் நம்புகின்றவர்கள் என்று உங்களை ஏமாற்றுகிறான். தியானம் பழகி வந்தால் நீ ஏமாறமாட்டாய்.”

**பெண்கள் யுகம்:**

“பெண்களுக்கு பலம் உண்டு. அறிவும் உண்டு. அறிவார்ந்த ஒரு சமுதாயத்தை நீங்கள் உருவாக்க வேண்டும். காலம், நேரம் தெரிந்து பயன்படுத்திப் பெண்கள் சமுதாயம் பலமிக்க சமுதாயமாகவும் அறிவுள்ள இனமாகவும் வளருமாறு பெண்கள் யுகத்தை வடிவமைக்க வேண்டும்.”

**ஆன்மிக உணர்வு:**

“நீ ஆன்மிக உணர்வோடு இருக்கும்போது ஆணின் மனநிலையைப் புரிந்து கொண்டு அவனைத் தவிர்க்கலாம்.’

**பெண்களும் பக்தியும்:**

“பெண்கள் பக்கம் பக்தி குறையக்கூடாது. பெண்களிடம் பக்தியை வளர்த்தால் குடும்பத்திலும் பக்தி வளர்கிறது.”

**பெண் சிசுக்களை அழிக்கிறார்கள்:**

“இன்று பெண் சிசுக்களைக் கருவிலேயே அழிக்கிறார்கள். எதிர் காலத்தில் ஆண் சிசுக்களையே அழிக்கும் அளவுக்குக் காலம் மாறலாம். அவனவன் செய்யும் பாவம் அவனவனையே திருப்பித் தாக்கப் போகிறது.”



**நாட்டு முன்னேற்றம்: பெண்கள் முன்னேற்றம்:**

“எந்த நாடு பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறதோ, அவர்களைத் தெய்வ நிலையில் வைத்து வழிபடுகிறதோ, தாய்ப்பாசத்துக்கு மதிப்புக் கொடுக்கிறதோ - அந்த நாடே செழிப்பாக இருக்கும். இல்லையேல் அந்த நாடே அழியும். அதனால் தான் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறேன்.

மகாபாரதம் மண்ணுக்கு ஏற்பட்டது. ராமாயணம் பெண்ணுக்கு ஏற்பட்டது.”

**பெண்களுக்கு ஆசிரமங்கள்:**

“பெண்களுக்கான ஆசிரம அமைப்புகளும் இங்கே எதிர்காலத்தில் உண்டு.”

**ஆன்மிக உணர்வு:**

“பெண்களாகிய உங்களிடம் எப்படியெப்படி ஆன்மிக உணர்வை வளர்க்க வேண்டுமோ அப்படியெல்லாம் உங்களை வளர்த்து வருகிறேன். அதனால் பெண்களாகிய நீங்கள் ஆன்மிக உணர்வு உள்ளவர்களாகத் திகழவேண்டும்.”

**உலகமே வியக்கத்தக்க அளவு:**

“மாதர் சங்கத்திற்குப் போகிறீர்கள். மந்திர தந்திரத்திற்கென்று செலவு செய்கிறீர்கள். அவற்றுக்கெல்லாம் இது ஏன்? எதற்கு? என்று கேள்வி கேட்காமல் செலவு செய்கிறீர்கள். ஆனால் தான தருமம் செய்யவேண்டுமானால் ஏன் எதற்கு என்று கேள்வி கேட்டுச் செலவு செய்கிறீர்கள்.’

**தாய்ப்பாசம்:**

“தவறு செய்கின்ற பிள்ளையின் மேல் தாய்க்குக் கோபம் வரும். அந்தக் கோபத்திலும் பாதியளவு பாசம் இருக்கும்.”

**பெண்கள் சிந்தனைக்கு:**

“எதற்காகப் பெண்களைப் படைத்தாள்? எதற்காக ஆன்மிகம்? தாய் என்றால் குழந்தை என ஒன்று எதற்கு? குரு என்றால் உபதேசம் என்ற ஒன்று எதற்கு?

- என்பதையெல்லாம் நீங்கள் சிந்தித்துப் புரிந்து கொள்ள வேண்டும்.”

**சாபமிட்டால் பலிக்கும்:**

"பெண்கள் சாபமிட்டால் பலிக்கும் என்பதை உணர்த்த பெண்கள் சிலருக்கு அந்தச் சக்தியை அளிப்பேன்."

**ஆணிலே பெண்: பெண்ணிலே ஆண்:**

"பெண்களிடத்திலே ஆண் பாவனை உண்டு. அதுபோல ஆண்களிடத்திலே பெண் பாவனை உண்டு."

**பெண்களை உயர்வுபடுத்து:**

"பெண்களைப் பொம்மையாகவும், கைப்பாவையாகவும் இயந்திரமாகவும் உணவு சமைப்பவளாகவுமே நினைக்கிறார்கள். பெண்களை மேன்மை உள்ளவர்களாகவும் உண்மையான வர்களாகவும் நல்ல கருத்துள்ளவர்களாகவும் பொறுப்புள்ள வர்களாகவும் கருத வேண்டும்."

**தாயும் குழந்தையும்:**

"எரியும் அடுப்பு! அருகே குழந்தையை வைத்துக் கொண்டு தாய் சமையல் வேலை செய்கிறாள். குழந்தையை அடுப்படியில் விட்டுவிட்டு மற்றவேலைகளையும் கவனிக்கிறாள். அடுப்பருகே உள்ள குழந்தை எரிகட்டையை எடுக்கிறது. அதனைப் பார்த்துவிட்ட தாய் கையில் கொள்ளிக்கட்டையோடு உள்ள குழந்தையை அப்படியே அவசரத்தோடு தூக்கிக் கொள்கிறாள். அப்படி குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொள்கிறபோது தாயின் கையில் சூடு படுகின்றது. சூடு தாங்காமல் குழந்தையை விட்டுவிடுகிறாள்.

அறிவுள்ள தாயோ குழந்தையின் கையில் உள்ள கொள்ளிக் கட்டையை முதலில் வாங்கித் தனியே வைத்துவிட்டுக் குழந்தையைத் தூக்கிக் கொள்வாள். கையில் சூடு வைத்துக்கொள்ள மாட்டாள். அறிவுள்ள தாய் எச்சரிக்கையோடு தன்னையும் காத்துக் கொண்டு குழந்தையையும் காத்துக் கொள்கிறாள். அறிவற்ற தாய் தன்னையும் காத்துக் கொள்ளத் தெரியாது. குழந்தையையும் காத்துக்கொள்ளத் தெரியாது சூடுபட்டுக் கொள்கிறாள்.

சூடுபட்டால் தான் உண்மை தெரிகிறது. காலமும் அனுபவங்களைக் கொடுத்துத் தான் ஒவ்வொரு உண்மையையும் புரிய வைக்கிறது."



**துணியின் அளவும் – உள்ளத்தின் அளவும்:**

"பெண்கள் ஆறு கஜம், எட்டு கஜம் என்று துணியின் அளவை மட்டும் உயர்த்திக் கொண்டே போனால் போதாது. ஆன்மிகத்தில் அந்தக் கஜங்கள் உயர்ந்து கொண்டே போகவேண்டும். அப்படி உயர்ந்து வந்தால் பலன் உண்டு."

**பெண்களும் – தாய்ப்பாலும்:**

"தாய்ப்பால் குடித்து வளர்ந்த குழந்தைகள் ஒற்றுமையாக இருந்தன. வேற்றுப்பால் குடிக்கும் குழந்தைகள் இன்று வேற்றுமையாக இருக்கின்றன. பாசமில்லாமலும், உடல் நோயாலும் வாடுகின்றன!

குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதையே வேம்பாக நினைப்பவர்களுக்கு வேதனை தான் மிஞ்சும்.

பாசமற்றுக் குழந்தைகளைப் பெற்றுவிட்ட வெளிநாட்டுப் பெண்கள், இங்குள்ள பெண்களைப் பார்த்துக் கற்றுக்கொள்ளத் துவங்கி உள்ளார்கள். ஆனால் நீங்களோ அவர்களைப் பார்த்துக் கற்றுக்கொள்ள நினைக்கிறீர்கள்."

**மனிதகுலம் செய்த தவறு:**

"பெண்களுக்கு ஆரம்பகாலத்தில் முக்கியத்துவம் கொடுத்திருக்க வேண்டும். பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றால் இங்கே நிம்மதி, அமைதி, வருவாய், ஊதியம் ஆகியவை கிடைக்காது."

**பெண்களும், ஆன்மிகமும்:**

"கோயில் சிலை ஒன்று பழுதடைந்துவிட்டால் அதனை மாற்றி அமைக்கிறார்கள். மனிதர்கள் கொடுக்கிற முக்கியத்துவத்தைப் பொறுத்து அந்தச் சிலைக்கும் சக்தி உண்டாகிறது. 12 வருடம், 6 வருடம், ஒரு வருடம் என அவ்வப்போது சிலைக்கு உருவேற்றுவதால் அந்தச் சிலைக்கும் சக்தி ஏற்றப்படுகிறது.

பொன்னோடு செம்பையும் சேர்த்து நகை செய்ய முடிகிறது. அந்தப் பொன்னில் வைரத்தைப் பதிக்கும் போது அதன் மதிப்பு இன்னும் கூடுகிறது.

அதுபோல ஆன்மிகத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் தான் ஆன்மிகம் சிறப்படையும். அதனால் தான் இங்கே பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறேன்."

## ஆன்மிகம் பற்றிப் பேசு:

“பத்துப் பெண்களும் பத்து குழந்தைகளும் ஒரு இடத்தில் கூடியிருந்தால் அங்கே ஆன்மிகம் பற்றிப் பேசு.”

## பெண்களும் ஆன்மிகமும்:

“பெண்களுக்குத் தான் குடும்பத்தை வளர்க்கிற பொறுப்பும், பாரமும் உண்டு. அதனால் தான் பெண்களை வைத்து ஆன்மிகம் வளர்க்கிறேன்.”

## கண்ணாடிக் கல்லும் வைரமும்:

“தொலைவிலிருந்து பார்க்கும் போது கண்ணாடிக் கல்லும் வைரமாக மின்னும். அருகில் சென்று பார்த்த பிறகுதான் அது கண்ணாடிக் கல் என்று தெரியும். அதுபோல “நான்” என்ற எண்ணம் கொண்டோர் கண்ணாடிக் கல்லுக்குச் சமமாவர். அறியாதவருக்கு வேண்டுமானால் அவர்கள் வைரம் போல மின்னலாம். உண்மையில் அத்தகையவர்கள் கண்ணாடிக் கற்களே!

அத்தகைய கண்ணாடிக் கற்களாகப் பெண்களும் ஆகிவிடக்கூடாது என்பதற்காகவே பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறேன். வைரம் போன்ற உறுதியான உள்ளம் வரவேண்டும் என்பதற்காகவே அவர்களுக்குச் சிறப்பு அளிக்கிறேன்.”

## பெண்கள் கடமை:

“ஒரு பெண் பத்துப்பேரையாவது ஆன்மிகத்தில் ஈடுபடுத்த வேண்டும். அவ்வாறு பத்துப்பேரைத் திருப்ப முடியாமல் போனாலும் ஒருவரையாவது திருத்த முயலவேண்டும்.”

## பெண்களின் ஈடுபாட்டால்...

“பெண்கள் ஆன்மிகத்தில் ஈடுபாடு வைத்துக்கொண்டு தொண்டு செய்து வருவதால் தான் அவர்களின் பிள்ளைகளும் காப்பாற்றப்படுகிறார்கள்.”

## அருள்வாக்கு சொல்ல ஆரம்பித்ததிலிருந்து...

“பெண்கள் சமுதாயத்தை அழிக்கக் காத்திருக்கிறார்கள். எப்போது இங்கே அருள்வாக்குச் சொல்ல ஆரம்பித்தேனோ அப்போதிலிருந்துதான் பெண்களுக்கு எல்லாத் துறையிலும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள்.”



## பெண்கள் வழிபாடும் நாட்டு முன்னேற்றமும்:

“ஆணுக்குள்ள தைரியம் பெண்ணுக்கும் உண்டு. பெண்களின் பெருமையை இப்போது தான் வெளிப்படையாகப் பேசவே ஆரம்பித்திருக்கிறார்கள். பெண்களின் வழிபாட்டால் தான் நாடு முன்னேறும்.”

## பெண்களும் – மேல்மருவத்தூரும்:

“ஒரு பெண் தன் வீட்டிற்கு எப்படி விளக்கேற்றி வைக்கிறாளோ - தன் குழந்தைகளை எப்படி வளர்க்கிறாளோ - அதுபோல நீங்களும் இந்த ஆலயத்தை வளர்க்க வேண்டும்.”

## தாய்மைக்குத்தான் மதிப்பு:

“காளையைத் தேடி கன்று செல்வதில்லை; பசுவைத் தேடித்தான் செல்கிறது. அம்மா! என்ற தாய்மைக்குத்தான் மதிப்பு. அதனால் தான் ஆன்மிகத்தில் பெண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறேன்.”

## பொறாமையால் வரும் அழுக்கு:

“அவளுக்கு இருப்பது போல நகைகள், புடவைகள் நமக்கு இல்லையே என்று பொறாமைப் படுகிறபோது, உன் அழுக்குடன், பிறருடைய அழுக்குகளும் உன்னுடன் ஒட்டிக் கொள்கின்றன!”

## ஒரு பெண்ணும் – பராசக்தியும்:

“ஒரு குழந்தை மகளாகின்றாள்; பெண்ணாகின்றாள்; மனைவியாகின்றாள்; தாயாகின்றாள்; பாட்டியாகின்றாள்; பக்தை ஆகின்றாள். இறுதியில் பராசக்தி ஆகின்றாள்.”

## குழந்தை வளர்க்கும் முறை:

“குழந்தைகளுக்கு உணவு ஊட்டுகிறபோது, அக்கம்பக்கத்தில் உள்ள பொம்மைகளையும், உருவங்களையும் காட்டி ஊட்டினால் மட்டும் போதாது. அறிவு, அனுபவம், நல்ல பழக்க வழக்கங்கள் என்பனவற்றையும் ஊட்டி வளர்க்க வேண்டும்.”

## இல்லத்திற்குத் தெய்வம் பெண்:

“ஒரு இல்லத்திற்குத் தெய்வமாகப் பெண்களை வைத்திருக்கிறேன். இல்லத்தில் தொய்வும் கோபமும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லத்திற்குக் காளைகளாக

ஆண்களை வைத்திருக்கிறேன். அவர்கள் களைகளாக மாறிவிடக்கூடாது.

பூக்காத மரத்தினால் என்ன பயன் கிடைக்கும்? ஆகவே, ஆண்கள் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் தான் வீடு, கிராமம், நகரம், உலகம் அனைத்தும் நலம் பெறும்.''

### பெண்களுக்கு முக்கியத்துவம் ஏன்?

''மனித இனம் உற்பத்தி ஆவதே பெண் இனத்தால் தான். அதனால் தான் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறேன்.''

### ஒரு தாயின் பெருமை:

''ஒரு குழந்தையை வயிற்றிலே சுமந்து கொண்டு, அதற்கு உணவு கொடுக்காமலே காப்பாற்றுவதுடன், அது பிறந்தவுடன் பருவம் அறிந்து உணவு கொடுத்துக் காப்பாற்றக் கூடிய தன்மை ஒரு தாய்க்குத் தான் உண்டு.''

### பெண்கள்: ஆணிவேர்

''ஆணிவேரால் தான் செடிக்கு மரியாதை. உலகத்துக்கு ஆணி வேர் போன்றவர்கள் பெண்கள்.''

### பிள்ளை வளர்ப்பு:

''உழைப்பைச் சொல்லிக் கொடுத்துப் பிள்ளைகளை வளர்க்க வேண்டும். ஊதாரித்தனமாக வளர்க்கக் கூடாது.''

### மதிப்பு:

''பெண்கள் படித்தால் மட்டும் போதாது. ஒரு தொழிலும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். பெண்கள் பத்து ரூபாயாவது சம்பாதித்தால் தான் இன்று மதிப்பு.''

### சக்தி யுகம்:

''இப்பொழுது சக்தி யுகம் : எல்லாமே பெண்கள் தான். அதனால் தான் நான் பெண்களை வைத்தே ஆன்மிகம் வளர்க்கிறேன். பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறேன். அவர்களை வைத்தே மனித இனத்தையும் காத்து வருகிறேன். அவர்களைக் கொண்டே குடும்பங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறேன். பெண்களைக் கொண்டே சக்தி யுகத்தை வடிவமைக்கிறேன்.

வீட்டில் விளக்கேற்றி வைப்பவளும் பெண் தான். இங்கே



தொண்டு செய்வதன் மூலம் நாட்டில் விளக்கேற்றி வைப்பவளும் பெண் தான்!''

### பெண்கள் ஜாக்கிரதையாக வாழ வேண்டும்:

''நினைப்பது நடந்தேயாக வேண்டும் என்று கருதுகிற பெண்கள் உண்டு.

குடும்பம் என்ற கூட்டுக்குள் அமைதியாக வாழ விரும்பும் பெண்கள் உண்டு.

விவாகரத்தைப் பற்றிக் கவலைப்படாத பெண்கள் உண்டு.

எவ்வளவு தான் பொறுத்துக் கொண்டு போவது என்று குமுறுகின்ற பெண்கள் உண்டு.

எங்கள் பொறுமைக்கும் ஓர் எல்லை கிடையாதா? என்று சீறுகின்ற பெண்கள் உண்டு.

இன்றுள்ள அரசியல் சமுதாய அமைப்பில் பெண்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஆன்மிகத்தில் ஈடுபட்டுப் பாதுகாப்பு தேடிக் கொள்ள வேண்டும்.

அழிவுகள் வரக் காத்திருக்கின்றன.''

### கருவறையில் பெண்கள்:

''கருவில் தான் ஒரு கரு உருவாகிறது. கருமையில்தான் மேகம் உருவாகிறது. மழை பெய்கிறது. அப்படிப் பட்ட கருவைச் சுமக்கும் பெண்கள் கோயில் கருவறைக்குள் செல்வது தவறல்ல.''

### குடும்பமும் ஓர் ஆசிரமம்:

''ஒரு பெண் குடும்பம் என்ற எல்லைக்குள் இருந்து கொண்டே கணவனையும், குழந்தைகளையும் இயக்குகிறாள். குடும்பத்தில் அவ்வப்போது வெளிப்படும் சண்டை சச்சரவுகளை வெளியில் தெரியாமல் காக்கிறாள். இல்லறத்தையே பெரிதும் போற்றி வாழ்கிறாள். ஆகவே அதுவே அவளுக்குச் சிறந்த ஆசிரமம் ஆகும். அதுவே ஆலயம் ஆகும். அங்கிருந்து கொண்டே அவள் ஆன்மிகத்தையும் வளர்க்கிறாள்.

### இல்லறமல்லது நல்லறம் இல்லை:

''இல்லறத்திலிருந்து தான் நல்லறத்தைச் செய்ய முடியும். நல்லறத்திலிருந்து இல்லறத்துக்கு வர முடியாது.''

**பெண் உயிர்தான் முதல் உற்பத்தி:**

“அழுக்கிலும் உயிர்கள் தோன்றும். அணுக்களிலும் உயிர்கள் தோன்றும். ஆனாலும் ஆன்மிகத்தினால்தான் சிறந்த வளர்ச்சி உண்டாகும்.

பெண் உயிர்தான் முதல் உற்பத்தி.”

**பெண்ணின் பெருமை:**

“மனிதர்களில் ஆண், பெண் என்று உருவ வேறுபாடு இருந்தாலும். உள்ளமும் ஆன்மாவும் பெண்களிடம் உயர்ந்து இருக்கிறது.”

**படிப்பும் திறமையும்:**

“பெண்களுக்குப் படிப்பும் திறமையும் இருக்க வேண்டும்.”

**பாசமும் அன்பும்:**

“ஆன்மா எப்போதும் ஒரே சீராக இருக்க வேண்டும். உன் சகோதரியிடம் பாசம் செலுத்துவது போல, உன் கணவனின் சகோதரியிடமும் பாசமாக இருக்க வேண்டும்.”

**பிள்ளை வளர்ப்பு:**

“உங்கள் பிள்ளைகள் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், ஆன்மிகத்திற்கு நெருங்கி வரவில்லையென்றால் எதிர் காலத்தில் போதை மருந்துகட்கு அடிமையாக நேரிடும். அது கருதியே குடும்பம் குடும்பமாக ஆன்மிகத்தில் ஈடுபட வைக்கிறேன்.”

**பெண்களுக்குத் தான் தகுதி:**

“பெண்ணிடம் ஆன்மிகத்தை ஒப்படைத்தால் தான் அது வளரும்.

தாய்மை, பந்தம், பாசம் இவற்றால் தான் ஆன்மிகம் வளர முடியும்.

ஆண்களிடம் ஆன்மிகத்தை ஒப்படைத்தால் வளராது.”

**பெண்களை உயர்வு செய்:**

“பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பெண்ணினத்தை அன்னையாகவும், ஆதிபராசக்தியாகவும் நினைக்க வேண்டும்.

ஆன்மிகத்தில் மற்றவர்க்கு வழிகாட்டியாக விளங்க வேண்டும்.

நல்லதையே நினைக்க வேண்டும்.”



**நாடு முன்னேற...**

“பெண்களின் வழிபாட்டால் தான் நாடு முன்னேறும்.”

**பெண்ணின் பெருமை:**

“பாசத்தில் தாய்ப்பாசம் தான் சிறந்தது. பெண்களுக்குத்தான் பால் சுரப்பி உண்டு. பெண்கள் தான் தருமத்திலும் பாசத்திலும் சிறந்து விளங்குகிறார்கள். இனவிருத்தி செய்வது மட்டும் தான் ஆண்களின் வேலை.”

**வேப்பிலைக்காரி:**

“பெண்களை வேப்பிலைக்காரி என்று கிண்டல் செய்கிறார்கள். அந்த வேப்பிலையால் தான் வியாதிகள் தீர்கின்றன. வினைகளும் தீர்கின்றன.”

**மன உறுதி வேண்டும்:**

“பெண்கள் தாய் ஸ்தானத்தில் இருக்க வேண்டும். அதே சமயம் இரும்பு போல மன உறுதி வேண்டும்.”

**பெண்மைக்கு உயர்வு ஏன்?**

“தாய்ப்பாசம் கொண்டிருக்கும் காரணத்தால் தான் பெண்கள் உயர்ந்தவர்கள் ஆகிவிடுகிறார்கள்.”

**வலிமை உண்டு:**

“பெண்கள் உருவத்தால் எளியவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு வலிமை உண்டு. அதே சமயம் தமக்கு அழகு, திறமை, படிப்பு இருக்கிறது என்பதற்காக மற்றவர்களை ஏளனமாக நினைக்கக் கூடாது.”

**தாய்மையைப் போற்று:**

“சமுதாயத்தில் சமத்துவம் ஏற்பட வேண்டுமானால் தாய்க்குலத்தை மதிக்க வேண்டும். அவ்வாறு மதிக்கும் போது தான் வளர்ச்சி ஏற்படும். இன்று வளர்ந்து விட்ட பிறகு பெற்ற தாயை மதிப்பதில்லை.”

**தாய்ப்பாசம்:**

“தாயிடம் வளரும் குழந்தைக்குத் தாய்ப்பாலும், தாய்ப்பாசம் என்ற உணர்வும் கூடக் கிடைக்கின்றன. தாய் இறந்துவிட்டால் செயற்கைப் பால் கிடைக்கும். ஆனால் தாய்ப்பாசம் கிடைக்காது.”

## பிள்ளை வளர்ப்பு

"உங்கள் பிள்ளைகளை ஒழுக்கத்தோடும் நல்லெண்ணங்களை ஊட்டியும் வளர்க்க வேண்டும்."

இப்போது பால் குடித்த பிள்ளைகள் பத்து வயதிலேயே போதைப் பொருள்களை நாடுகின்றனர். முப்பது வயதில் போதைக்கு அடிமையாகின்றனர்.

ஆன்மிக உணர்வுகளை ஊட்டி வளர்க்காததுதான் இதற்குக் காரணம்."

## பெண்களுக்கு...

"இந்தக் காலத்தில் ஆண்கள் மட்டுமின்றிப் பெண்களும் போதைக்கு அடிமைகளாக மாறி வருகிறார்கள். அதனை விட்டு ஆன்மிகத்தில் ஈடுபட்டு முன்னேறி வர வேண்டும்.

பெண்ணாகப் பிறந்து வளர்ந்து திருமணமாகிப் பிள்ளைகளைப் பெற்று, ஒரு கட்டுக் கோப்பான வாழ்க்கை வாழவில்லையென்றால் எதிர் காலத்தில் மானம், மரியாதை என்ன விலை? என்று கேட்கிற நிலைமைகள் வரும்.

ஆன்மிகமும் தருமமும் நிறைந்த வாழ்க்கை வேண்டும்.

நாகரிகம் என்ற பெயரில் இன்று அநாகரிகங்களே மேலோங்கி உள்ளன.

கேட்கிற விஷயம், பார்க்கிற பார்வை. பேசுகிற பேச்சு எல்லாமே அநாகரிகமாக மாறிவிட்டன."

## உள்ளத்திற்கு மூலாம் பூசு:

"வீடு வாசல், நகை என்ற ஆசையெல்லாம் எதற்கு? அதைவிட்டு உள்ளத்திற்கு முலாம் பூச வேண்டும் அழகிற்காக, நகை அணியலாம் பிறர் நம்மைக் கவனிக்க வேண்டும் என்பதற்காக நகை போடக் கூடாது. நகை போடுவானேன்? நகைப்பிற்கு ஆளாவானேன்!"

## குழந்தை வளர்ப்பு:

"குழந்தைக்குப் பாலோடு ஆன்மிக உணர்வையும் ஊட்டி வளர்க்க வேண்டும்."

## பசுவும் எருதும்: பெண்களும் ஆண்களும்:

"பசுமாட்டைப் பெண்களுக்கு ஒப்பிடலாம். பசுமாட்டை எவ்வாறு கட்டிப் போட்டு அடக்கிப் பால் கறக்கிறார்களோ அதுபோலப்



பெண்களைப் பந்தம், பாசம் ஆகியவற்றால் கட்டி வைத்துக் குடும்பத்தில் அடக்கி வைக்கிறார்கள். அந்தப் பசு மாட்டிற்கு விருப்பும், வெறுப்பும் இருப்பது போல, பெண்களுக்கும் விருப்பும் வெறுப்பும் இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்."

## முக்கியத்துவம் கொடு:

"பெண்களுக்கும் கூட்டு வழிபாட்டிற்கும் முக்கியத்துவம் கொடு."

## பெண்களுக்கு உயர்வு கொடு:

"மனைவியை இல்லத்தரசி என்று சொல்வதில் ஆழ்ந்த பொருள் உண்டு. பெண்களுக்கு உயர்ந்த ஸ்தானம் அளிக்கப்பட வேண்டும்.

இந்தக் கோயில் விழாக்கள் அனைத்தையும் உங்கள் வீட்டு விசேஷமாகப் பொறுப்பெடுத்து நடத்த வேண்டும்."

## தாய்மைக்கு முக்கியத்துவம் கொடு!

"மனிதர்களிடம் பக்தி, அன்பு, பண்பு, பாசம் மட்டும் இருந்தால் போதாது. தாய்ப்பாசம் இருக்க வேண்டும். தாய்மைக்கு முக்கியத்துவம் கொடு. தாய்மை முக்கியத்துவம் வாய்ந்தது.

தாய்ப்பாலைக் குடிக்காத குழந்தை நல்ல வளர்ச்சியை அடைய முடியாது."

## பெண்மையும் – ஆண்மையும்:

"உலகில் ஆண்பாதி, பெண்பாதி என்றாலும் பெண்மையில் கால்பாகம் ஆண்மை உண்டு; ஆண்மையில் கால்பாகம் பெண்மை உண்டு."

## அழகும் – பாதுகாப்பும்:

"அழகுக்காக நகையை அணிந்து கொண்டால் மட்டும் போதாது. பாதுகாக்கவும் தெரிய வேண்டும்."

# 7. தொண்டு நெறி

## மெய்சிலிர்க்கத் தொண்டாற்று! பொய்சிலிர்க்க வாழாதே:

“அன்று விபூதி அளித்து ஆலயம் கட்டினார்கள். இன்று ஆலயம் வளர உன் தொண்டுதான் வேண்டுமடா மகனே!

அம்மா உன்னிடம் பணிகளைத் தான் எதிர்பார்க்கிறாள். பொன்னோ பொருளோ அல்ல!”

## வண்டியும் சாரதியும்:

“வண்டியை ஓட்டும் சாரதியைப் பொறுத்து வண்டி ஓடுகின்றது. தொண்டர்களாகிய நீங்கள் சாரதிகள். உங்களின் உள்ளுணர்வே நான். குதிரைகள் பக்தர்கள்! சாரதிகள் முரட்டுத்தனமாகக் குதிரைகளிடம் நடந்துகொண்டால் மட்டும் குதிரைகள் ஓடிவிடாது. சில முரண்டுபிடிக்கும். சில உடனே சுறுசுறுப்பாக ஓடும்.”

## தொண்டனும் அடக்கமும்:

“ஆலயமணி தலைகவிழ்ந்து உள்ளது. அதன் நாதமோ தொலைதூரம் கேட்கிறது. அந்த ஆலயமணி போல இரு! அடக்கமாக இரு!”

## தொண்டர்களுக்கு:

“எல்லாப் பாவங்களையும்கூட நான் மன்னித்துவிடுவேன். ஆனால், என்னாலும் மன்னிக்க முடியாத பாவம் ஒன்றுண்டு. அது என்ன தெரியுமா? நான் என்ற அகங்காரம். அதுதான் பெரிய பாவம்! அந்த அகம்பாவத்தை அழித்துவிடுவேன்.”

## அடக்கமான தொண்டு: வேடம் போடும் தொண்டு:

“கண்ணாடியின் பின்புறம் பாதரசம் இருந்தால் தான் மகனே உன் முகம் தெரியும். அந்தப் பாதரசம் என் அருள்; கண்ணாடி நிழலில் இருந்தால் பின்புறம் உள்ள பாதரசம் நீண்டநாள்



நிலைக்கும். வெயிலில் கண்ணாடியை வைத்தால் பாதரசம் நீண்டநாள் நிலைக்காது.”

## ஆத்திகனை விட நாத்திகன் மேலானவன்:

“ஆத்திகம் பேசிக்கொண்டு பேர், புகழ், சுயநலம் என்பவற்றிற்காக அலைபவனைவிட பொதுநலம் கருதி அடக்கமாக உழைக்கின்ற நாத்திகன் மேலானவன்.”

## தொண்டினால் ஆன்மாவைச் சார்ந்த அழுக்குகள் நீங்கும்:

“கடல்! கடலருகே கற்பாறை! அந்தக் கடலைச் சமுத்திரம் என்பார்கள் மகனே! அந்தக் கடல்நீர் பஞ்சபூதங்களில் ஒன்று. அதனைத் தெய்வம் என்றும் சொல்வது உண்டு. அந்தக் கடல்நீரின் அலைகள், அந்தக் கற்பாறை மேல் படிந்துள்ள கறைகளைப் போக்குகின்றன. காலப்போக்கில் பெரிய அலைகள் எழுந்து என்ன ஆகிறது பார்! கடல்நீரில் அந்தக் கற்பாறை மூழ்கிப் போகின்றது. அந்தக் கற்பாறை போன்றது உன் தொண்டு. அலைகள் வீச வீச உன் ஆன்ம அழுக்கு நீங்குகிறது. இறுதியில் நீரில் மூழ்குகிற கற்பாறை போல் நீங்களும் என் அருளில் மூழ்கிவிடுவீர்கள்.”

## தொண்டனுக்கும் பக்தனுக்கும் சோதனைகள் கொடுப்பது ஏன்?

“இனிப்பும் வேண்டும்; துவர்ப்பும் வேண்டும். துவர்ப்புக்கு ஒரு மாறுதல் உண்டு. நல்லதும் வேண்டும். தீயதும் வேண்டும்.

குழந்தைக்கு இனிப்பே கொடுத்தால் என்ன ஆகும்? மேலேயும் போகும்; கீழேயும் போகும் (வாந்தி பேதி). வரம்புக்குட்பட்ட இன்பமும் வேண்டும். துன்பமும் வேண்டும். இப்படி ஒன்றோடொன்று உரசும்போது இறுதியில் உனக்குப் பற்றற்ற நிலை வருமடா மகனே! அதனால் தானடா உனக்குத் தாய் சோதனை வைக்கிறாள்!”

## மன்றங்களும் – தொண்டும்:

“மன்றங்களில் தருமங்களும் தொண்டுகளும் தொடர்ந்தபடி நடக்கவேண்டும். மருத்துவ முகாம்கள் நடத்திக் குழந்தைகளுக்குக் கக்குவான், இளம்பிள்ளை வாதம், மூளைக்காய்ச்சல் ஆகியவற்றிற்குத் தடுப்பூசி போட ஏற்பாடு செய்.”

## மன்றத் தொண்டர்களுக்கு:

“மன்றத் தொண்டர்கள் ஒழுங்காகவும், ஒழுக்கமாகவும், கட்டுப்பாடாகவும், வழிகாட்டியாகவும் விளங்க வேண்டும். ஆடம்பரத்தைத் தவிர்க்க வேண்டும். ஏமாற்றுபவர்களிடம்

ஏமாறாமலிருக்க வேண்டும். ஏதோ வந்தோம், போனோம் என்றில்லாமல் செய்கிற தொண்டுகளைத் திருத்தமாகச் செய்யவேண்டும். ஒவ்வொரு மன்றத் தொண்டர்களும் தங்களருகில் உள்ள மன்றங்களின் சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பணியாற்றி உதவியும், ஒத்துழைப்பும் கொடுக்கவேண்டும். செவ்வாடைத் தொண்டர்கள் ஒரு குடும்பம் போல அம்மா சொல்கிற பணிகளில் ஈடுபடவேண்டும். ஆன்மிக உணர்வோடு சமுதாயத் தொண்டுகள் செய்ய வேண்டும்.''

**பாவமூட்டைகளைச் சுமக்காதே!**

''பொன், பொருள், பந்தம் என்ற மூட்டைகளைச் சுமக்காமல் பொறுப்புணர்வோடு தொண்டு செய்யவேண்டும்.''

**தொண்டர்களுக்கு வளர்ச்சி:**

''ஆன்மிகத்தில் கசப்பும் உண்டு. எதிர்ப்பும் உண்டு. இவற்றைப் பொருட்படுத்தாமல் ஆன்மிக ஈடுபாட்டுடன் தொண்டு செய்பவர்களுக்கு வளர்ச்சி உண்டு.''

**செவ்வாடைத் தொண்டர்களுக்கு:**

''இங்கே உள்ளே இருப்பவர்கள் வெளியே போகலாம். வெளியே இருப்பவர்கள் உள்ளே வரலாம். கொடுக்கிற வாய்ப்பைச் செவ்வாடைத் தொண்டர்கள் ஒழுங்காகப் பயன்படுத்திக் கொண்டு பணிசெய்ய வேண்டும்.''

**தொண்டும் – தொழிலும்:**

''தொண்டு தொண்டாக இருக்கவேண்டும். தொழிலாக இருக்கக் கூடாது.''

**சிறிய தொண்டிற்கும் சக்தியுண்டு:**

''சின்னஞ்சிறிய உளி பெரிய பெரிய மலைகளைப் பிளக்கிறது. சிறிய அணுகுண்டு பெரிய பெரிய காரியங்களைச் செய்கிறது. நீ செய்யும் சின்னஞ்சிறிய தொண்டுக்கும் அணுகுண்டிற்குள்ள சக்தியுண்டு.''

**ஆன்மிகத் தொண்டுகளில் ஈடுபாடு:**

''பலதரப்பட்ட தண்ணீர் நதியாக மாறிக் கடலில் சேர்கிறது. அப்போது எல்லாமே உப்புத்தன்மையாக மாறுகிறது. பூமியிலுள்ள தண்ணீரோ இனிப்பு, கசப்பு, உவர்ப்பு, துவர்ப்பு உடைய தன்மைகளாக மாறுகிறது. ஆன்மிகத்தில் ஈடுபட்டுத் தொண்டு செய்யும்போது உங்கள் மனம் ஒருமைப்படுகிறது.''



**எப்படித் தொண்டு செய்ய வேண்டும்?**

''தூய உணர்வோடும், பயபக்தியோடும், தனி உரிமை கோராமலும், தாழ்வு மனப்பான்மை இல்லாமலும் தொண்டு செய்ய வேண்டும்.''

**உழைக்கும் மனப்பான்மை தேவை!**

''சோம்பேறிக் கூட்டமாக வசதியோடு வாழ நினைக்காதே! கடும் உழைப்பிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அடிகளாரையும், வியர்வை சிந்த வைத்துத்தான் நான் ஆன்மிகம் வளர்க்கிறேன்.''

**தூற்றலுக்குச் செவி சாய்க்காதே!**

''ஒரு தாயின் ஐந்து பிள்ளைகளும் ஒரே குணம் உடையவர்களாக இருப்பதில்லை. பிறர் தூற்றுதல்களுக்குச் செவி சாய்க்காதே! இனிப்பு என்றிருந்தால் கசப்பு என்ற ஒன்றும் உண்டு.''

**இனிவரும் நாட்களிலாவது...**

''கடந்து சென்ற நாட்கள் பொன்னான நாட்கள். அவற்றையெல்லாம் வீணாக்கிவிட்டீர்கள். இனிவரும் நாட்களையாவது பயன்படுத்திக் கொள்ளுங்கள்.''

**உங்கள் தொண்டே பக்தி:**

''இங்குத் தொண்டு புரிவதே பக்தியாகும்.''

**தொண்டு மனப்பான்மை:**

''ஏற்றத்தாழ்வு இல்லாமலும் தாழ்வு மனப்பான்மை கொள்ளாமலும் தொண்டு செய்ய வேண்டும்.''

**வயதாகிவிட்டதே என்று கருதாதே!**

''2000 வருடங்கள், 1000 வருடங்கள் வாழ்ந்த யோகிகள் உண்டு. வயதாகிவிட்டதே என்று கருதவேண்டாம்.''

**பிறர் நலம் கருது:**

''தன்னலம் கருதாமல் பிறர் நலம் கருதியே தொண்டு செய்ய வேண்டும்.''

**எதிர்ப்பும் தேவை:**

''கசப்பு இருந்தால்தான் இனிப்பின் அருமை தெரியும். எதிர்ப்பு இருந்தால் தான் வளர்ச்சி இருக்கும். எனவே, எதிர்ப்பு கண்டு சோர்வடையாதே!''

**நீ செய்வது அனைத்தும் தெரியும்:**

“நாம் செய்கிற தொண்டு நம் அம்மாவிற்குத் தெரியவில்லையே! நம் அடிகளார்க்குத் தெரியவில்லையே! என்றெல்லாம் நினைக்க வேண்டாம். நீ எங்கிருந்துகொண்டு என்ன தொண்டு செய்தாலும் அம்மாவிற்குத் தெரியும். அடிகளாருக்கும் தெரியும். பாலில் தண்ணீரைக் கலந்தாலும், தண்ணீரில் பாலைக் கலந்தாலும் தெரியும்.”

**முற்பிறவித் தொடர்பு:**

“சென்ற பிறவியில் நீங்கள் செய்த தொண்டு, தருமம், தன்னலம் கருதாமல் பிறர் நலங்கருதி செய்த ஆன்மிகத் தொண்டுகள் - இவைகள் விடுபடாமல் இருப்பதற்காகவே இந்தப் பிறவியில் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்தில் உங்களை ஈடுபட வைத்திருக்கிறேன்.”

**செவ்வாடைத் தொண்டர்களுக்கு:**

“செவ்வாடை அணிந்த தொண்டர்கள் உள்ளத்தூய்மையோடு நல்லுணர்வுடன் செயல்படவேண்டும்.”

**காத்திருக்கிறார்கள்:**

“பணத்தையும் கொடுத்துத் தொண்டு செய்வதற்குப் பலர் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.”

**பலகோடி பக்தர்களுக்காக...**

“அம்மாவுக்காகவும் அடிகளாருக்காகவும் தொண்டு செய்கின்றோம் என்று நினைக்கக்கூடாது. பலகோடி பக்தர்களுக்காக தொண்டு செய்கிறோம் என்று நினைக்கவேண்டும்.”

**ஆதிபராசக்தி தொண்டனுக்கு:**

“அரசியல் உன்னை நோக்கி வரும்; நீ அரசியலைத் தேடிப் போகாதே!”

**காழ்ப்பு கொள்ளக்கூடாது:**

“யாரிடத்திலும் காழ்ப்புணர்ச்சி கூடாது. காழ்ப்புணர்ச்சி உன் கைக்குக் காப்பாக (விலங்கு) அமையும்.”

**ஏழையும் தெய்வமும்:**

“ஏழைக்குச் செய்யும் தொண்டு தெய்வத்திற்குச் செய்யும் தொண்டாகும்.”



**தொண்டனுக்கும் துன்பம் உண்டு:**

“ஆதிபராசக்தி இயக்கத்தில் தொண்டில் ஈடுபட்டவருக்கும் துன்பம் வருகிறதே ஏன் என்று நினைக்கலாம். அவரவர் நிழல் அவரவர்களை விடாது.”

**ஆன்மிகத்தில் தொண்டும் உழைப்பும்:**

“ஆன்மிகத்தில் தொண்டும் உழைப்பும் தேவை. தொண்டு செய்யும் போது பலன் பூஜ்யம் போலத் தான் தோன்றும். பூஜ்யத்திற்குப் பிறகு ஒன்று, இரண்டு என்று கூடிக்கொண்டே போவது போலப் பலன்களும் கூடிக்கொண்டே வரும்.”

**தொண்டனைப் பாதுகாப்பது ஏன்?**

“தன் பிள்ளை திருடனாக இருந்தாலும் தாய் அவனை ஒதுக்குவதில்லை. அவனுக்குப் பாலும் பழமும் கொடுத்து வளர்க்கத்தான் செய்கிறாள். அதுபோல நீங்கள் தவறுகள் செய்தாலும் உங்களை நான் பாதுகாத்துக் கொண்டு தான் வருகிறேன்.”

**தெய்வத்திற்குத் தொண்டு:**

“பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், ஆதரவற்ற மனிதர்களுக்கும் தொண்டு செய்வது தெய்வத்திற்குத் தொண்டு செய்வதற்குச் சமம்!”

**அரசாளும் வாய்ப்பு யாருக்கு?**

“அறம் வளர்த்துத் தொண்டு செய்தால் அரசாளும் வாய்ப்பு உண்டு.”

**“நான்” நீங்கி “நாம்” ஆக வேண்டும்:**

“ஆணவத்தை அழித்துவிட்டு நீங்கள் செயற்பட வேண்டும். ‘நான்’ என்பது நீங்கி ‘நாம்’ என்று ஆகவேண்டும்.”

**தியானமும் இணைத்துக் கொள்:**

“இங்கே வருகிற பக்தர்களும் தொண்டர்களும் அர்ச்சனை, அலங்காரம் செய்துவிட்டுப் போவதோடு இங்கே அரைமணிநேரம், கால்மணி நேரம் தியானம் கடைப்பிடிக்க வேண்டும். அப்படிச் செய்தால் இங்கே வந்து செல்வதற்கான பயனை அடைய முடியும்.”

**குப்பை அள்ளுவதற்கும்:**

"இங்கே (மருவத்தூர்) குப்பை அள்ளியெடுத்துப் போடுவதற்கும் தவம் செய்திருக்க வேண்டும்."

**மன்றங்கள் மூலமாக:**

"ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றங்கள் மூலமாகச் சிறுசிறு தொழில்கள் தொடங்க ஏற்பாடு செய்யவேண்டும். அவற்றின் மூலமாக ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்கள் உழைத்துப் பிழைக்க வழி செய்யவேண்டும்."

**பணமும் சொத்தும்:**

"பணத்தால் பாவங்களும் சொத்து சேர்ப்பதனால் கவலைகளும் தான் உண்டாகும். தொண்டினால் தான் வளர்ச்சியுண்டாகும்."

**நாடு செழிக்க:**

"தன் குடும்பம், தன் பிள்ளை என்று நினைப்பது போல மற்றவர்களையும் நினை! நாடு செழிக்கும்! அடுத்தவன் உனக்கு என்ன செய்தான் என்று நினைக்காதே! அடுத்தவனுக்கு நீ என்ன செய்தாய் என்று நினை!"

**உள்ளத்தூய்மையோடு செய்:**

"உள்ளத்தூய்மையோடு என் பணியைச் செய்! குளித்தால் உடம்பில் உள்ள அழுக்கு மட்டுந்தான் நீங்கும். மன அழுக்குகள் போகாது. அந்த மன அழுக்குகள் நீங்கி உள்ளத்தூய்மை பெறுவதற்கு ஆன்மிக ஈடுபாடு மிகச்சிறந்தது."

**தொண்டின் மூலம் குடும்ப வளர்ச்சி:**

"அன்னதானம், ஆடைதானம் மற்றும் பல தொண்டுகளை எனக்காகச் செய்வதில்லை. அவை உன் ஊழ்வினை குறையவும், உன் மனஅமைதிக்காகவும் செய்யப்படுவன. என்னையே அடைக்கலமாகக் கருதி வந்துவிட்ட பிறகு உன் குடும்பத்தின் செல்வம், கல்வி, குழந்தைகளின் எதிர்காலம் ஆகிய அனைத்தும் என் பொறுப்பு. நீ செய்துவரும் தொண்டுகளை வைத்து உன் குடும்பத்திலும் படிப்படியான வளர்ச்சியைக் கொடுத்துக்கொண்டு வருகிறேன்."

**மனநிறைவோடு தொண்டு செய்:**

"ஆன்மிகப் பணிகளை மனநிறைவோடு செய்! நம்மால் எதுவும் கொடுக்க முடியவில்லையே என்ற கவலை வேண்டாம். எல்லோரும்



என் பிள்ளைகள் தான். ஐந்துபேரிடம் பத்து பைசா வாங்கிக் கொண்டு வந்து என்னிடம் செலுத்தும்போது; அதை வைத்துத் தானதருமம் செய்யும்போது; கொடுத்தவனுக்கும் அருள் பாலிக்கிறேன். உனக்கும் அருள்பாலிக்கிறேன். இதனால் ஐந்து பேரை ஆன்மிகத்தில் ஈர்க்கின்ற சிறப்பு உனக்குச் சேர்கிறது."

**பிச்சை எடுத்தாவது:**

"ஒவ்வொரு வீடாகச் சென்று அன்னதானத்திற்கு அரிசி வாங்கி வந்து அன்னதானம் செய்! பிச்சையெடுத்தாவது ஆன்மிகத்தை வளர்க்கப் பார்!"

**தொண்டு செய்வது யாருக்கு...**

"அந்தக்காலத்தில் அடியார்க்குத் தொண்டு செய்தது போல, நீ அன்னைக்கோ, அடிகளார்க்கோ தொண்டு செய்யவில்லை. உன்னுடைய ஊழ்வினை தீரவும் உன் குடும்பம் சிறப்படையவும் வேண்டியே தொண்டு செய்கிறாய்!"

**தொண்டும் தியானமும்:**

"தியானம் செய்கிறோம் என்று அமர்ந்து தூங்காமல் ஒரு தொண்டில் மனத்தை ஈடுபடுத்திச் செய்வதும், அந்தப் பணியிலேயே கவனமாக எந்நேரமும் இருப்பதுங்கூடத் தியானந்தான். உணவு பரிமாறும்போதும், 1008, 108 படிக்கும் போதும் வேறு சிந்தனையின்றி மனம் எப்படி ஒடுங்குகிறதோ, அதைப் போலவே ஒரு தொண்டில் கவனமாக ஈடுபடும் போதும் தியானப்பலன் உண்டு."

**உங்கள் பேரன் பேத்திகளுக்கும் அருள்:**

"நீங்கள் செய்யும் தொண்டுகளை வைத்து உங்கள் பேரன் பேத்திகளுக்கும் என் அருளைக் கொடுப்பேன்."

**நழுவ விடாதே!**

"ஒரு தாய் எவ்வாறு தன் குழந்தைக்கு அன்போடு நீராட்டி உணவை ஊட்டுகிறாளோ அதுபோல உங்களுக்கு ஒவ்வொன்றையும் நான் சொல்லிக் கொடுத்து வருகிறேன். அதை அறிந்து பணிசெய்து அருள்பெறுவது உன்னிடம் உள்ளது. வந்த வாய்ப்பை நழுவவிடாதே!"

**ஆன்மிக மாநாடுகளின் போது:**

"ஆன்மிக மாநாடுகளின் போது ஆண்களும், பெண்களும் ஒவ்வொரு வீடாகச் சென்று அவர்களை அழைக்க வேண்டும்.

உனக்கு அருகில் உள்ளோர், உற்றார் உறவினரையெல்லாம் அழைத்துவர வேண்டும். அடுத்த வீட்டுக்காரன் நன்றாக இருந்தால் தான் உனக்கு நிம்மதி மகனே! பக்கத்து வீட்டுக்காரன் பரிதவிக்க நீ வீட்டில் வானொலி கேட்டுக்கொண்டு இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. அது தவறடா மகனே! அவனையும் நீ ஆன்மிகத்திற்கு இழுத்துப் பயன்பெறச் செய்யும் கருவியாக வேண்டும். பக்கத்து வீட்டுக்காரன் நன்றாக இருந்தால் தான் நாமும் நலம் பெறுவோம் என்னும் தத்துவம் புரிந்து நடக்க வேண்டும் மகனே!"

### அரசியலும் ஆன்மிகமும்:

"அருகில் உள்ளவர்களையும் ஆன்மிக ஊர்வலத்தில் அழைத்து வருவது தேர்தலில் நிற்க அல்ல மகனே! உங்களுக்குப் பின்னாலே தான் அரசியலே தவிர, அரசியலுக்குப் பின்னாலே ஆன்மிகம் அல்லடா மகனே!

அந்த ஊர்வலங்களில் கலந்துகொள்ளும் போது சூரியனைக் கண்ட பனிபோலவும், மழையைக் கண்ட பயிர் போலவும், வாட்டம் நீங்கி வளர்ச்சி பெறுவீர்கள் மகனே!"

### மாவட்டத் தலைவர்களுக்கு:

"மூன்று மாதத்திற்கொரு முறை மாவட்டங்களில் என்னென்ன சமூகப்பணிகள் நடைபெற்றன; மகளிர் அணி, இளைஞர் அணி, கிராமங்களில் என்னென்ன பணி செய்தன என்பதெல்லாம் சக்தி ஒளியில் எழுதி வெளிப்படுத்த வேண்டும். குடிதண்ணீர் வசதி செய்தல், சோம்பேறித்தனமாகப் பிச்சையெடுப்பதைத் திருத்தல், ஏழை எளியவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல், உழவுத் தொழிலில் உதவி செய்தல், பஞ்சமா பாதகச் செயல்களைச் செய்யாமல் பாதுகாத்தல் போன்ற சமூகத் தொண்டுகளில் நீங்களெல்லாம் ஈடுபடவேண்டும்."

### தெய்வத்தை அடைய...

"சமூகத் தொண்டுகள் செய்தால் தான் தெய்வத்தை அடையமுடியும் என்பதை மனித ரூபத்தில் காட்ட வேண்டும்."

### ரத்த தானம்:

"ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மையம் அமைத்து, ரத்ததானம் செய்யும் ஏற்பாட்டை அமைத்து, அதை ஒரு பெரிய தொண்டாகச் செய்யவேண்டும். அடுத்து கண்தானம் செய்யும் வாய்ப்பினை



ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கண் சிகிச்சை முகாம்கள் அமைத்துக் கண்ணாடிகள் வழங்க வேண்டும். இளைஞர் அணி மையம் அமைத்துச் செயற்படவேண்டும். என்னையே முழுதும் நம்பி இறங்கு! நீ அசைவாக இரு! நான் அருளாக இருப்பேன்!"

### ஆன்மிகத்தில் ஈடுபட்டும்...

"ஆன்மிகத்தில் ஈடுபட்டும் நிம்மதி இல்லையே! ஆலயத்திற்கு வருகிறோம். அம்மாவை வழிபடுகிறோம். ஆனாலும் கடன்தொல்லை தீரவில்லையே? பிரச்சனை தீரவில்லையே? என்றெல்லாம் நினைக்கக் கூடாது. அவற்றையெல்லாம் மறந்து ஆன்மிகப் பணிகளில் ஈடுபடவேண்டும். யார் யாருக்கு எதை, எப்படி, எப்போது செய்ய வேண்டும் என்பதெல்லாம் அம்மாவுக்குத் தெரியும். எதற்கும் நேரம் காலம் ஒன்று உண்டு. ஆன்மிகத்தில் ஈடுபடுவோர்களைக் கைவிட மாட்டேன். எப்படியும் காப்பாற்றுவேன்!"

### தொண்டு செய்யும் வாய்ப்புகள்:

"உங்களையெல்லாம் ஆன்மிகத்தில் முன்னேற வைக்கவே இப்போது தொண்டு செய்யும் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறேன். அவற்றை எல்லாம் நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மன்றங்கள் வளர்ச்சி பெற ஒவ்வொருவரும் தொண்டாற்ற வேண்டும். மன்றங்களை வைத்துப் பணம் சம்பாதிக்கலாம் என்ற நினைப்பு வருதல் கூடாது. தொண்டு செய்வதே சிறந்தது. யார் உள்ளத்தில் அழுக்கு உண்டு; யார் உள்ளத்தில் இல்லை என்பதெல்லாம் எனக்குத் தெரியும். நீ உன்னால் முடிந்த தொண்டுகளைச் செய்துகொண்டே வா!"

### ஆன்மிக ஈடுபாட்டுடன் கூடிய தொண்டு:

"தீயில் எந்தப் பொருளைப் போட்டாலும் அது கருப்பாகி விடும். அதே பொருளை ஒரு பாத்திரத்தில் இட்டு வைத்துத் தீயிட்டால் நிறம் மாறாது. அதுபோலவே ஆன்மிக ஈடுபாடும். ஆன்மிக உணர்வுமின்றி வாழ்ந்தால் உன் எண்ணங்கள் மாறும். ஆனால் ஆன்மிக ஈடுபாடும், ஆன்மிக உணர்வும் கொண்டு உயர்ந்த எண்ணங்களை வளர்த்துக்கொண்டு வாழ்ந்தால் நீ கருகமாட்டாய்... உன் எண்ணங்களைப் பொறுத்தே உயர்வுகளும், பலன்களும் அமையும்."

### சிறிய தொண்டு:

"மரத்தில் குறைவான அளவில் பழம் கிடைத்தாலும், அது ருசி மிக்கதாக இருக்கும். அதுபோல நீங்கள் உண்மை உணர்வோடும்.

உள்ளன்போடும் செய்யும் தொண்டு சிறிதாக இருந்தாலும் பயன் மிகுதியாக இருக்கும்.

பேருக்கும் புகழுக்கும் ஆசைப் பட்டுத் தொண்டு செய்யக் கூடாது.''

**செடிகளும் – தொண்டர்களும்:**

''மண்ணில் பலவகைச் செடிகள் உண்டு. அவற்றுள் விஷச் செடிகளும் உண்டு. செவ்வாடை, மஞ்சளாடை அணிந்து கொண்டால் மட்டும் போதாது. நல்ல உள்ளம் இருக்க வேண்டும். கள்ள உள்ளம் இருக்கக் கூடாது. ஆசையும் ஆணவமும் அழிவிற்கே வழி வகுக்கும். புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்.''

**கடிரையேற ஒருவழி:**

''தொண்டு இல்லையென்றால் நீங்கள் கரையேற முடியாது.''

**மனத்தைச் சுத்தப் படுத்திக் கொள்ளவே தொண்டு நெறி:**

''ஆற்றுப் படுகையில் தண்ணீர் தெளிவாக இருக்கும். ஆனால் ஏரியின் அடியில் களிமண் இருப்பதால் அதில் உள்ள தண்ணீரில் அழுக்கு இருக்கும்.''

உங்கள் மனம் ஆற்று நீர் போல சுத்தமாக இருக்க வேண்டும். தெளிவாக இருக்க வேண்டும்.

தூர் வாருவதன் மூலம் ஏரியைச் சுத்தப்படுத்துவது போல, தொண்டு செய்து உங்கள் மனத்தைச் சுத்தப் படுத்திக் கொள்ளவேண்டும்.''

**சிறிய தொண்டு:**

''துருப்பிடித்த ஆணி கூட ஒரு சமயத்தில் பயன்படும். அதுபோல ஆன்மிகத்தில் நீ செய்யும் சிறிய தொண்டுக்கும் பயன் உண்டு.''

**மனித வாழ்வை மேம்படுத்துவது:**

''பரந்த வெளி - நிறைந்த மனம் - சிறந்த தொண்டு; இவைதான் மனிதனின் வாழ்க்கையை மேம்படுத்தும்.

குறைந்த தொண்டு. குறுகிய மனம் இருந்தால் அவை அழிவைத் தேடித் தரும். வாழ்க்கையில் குழப்பம் தான் ஏற்படும்.

**பொதுநல உணர்வு வேண்டும்:**

''என்னிடம் வந்து கேட்பவர்கள் எனக்கு அது வேண்டும், நான் அப்படி இருக்க வேண்டும்; இப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம்



கேட்கிறார்களே தவிர, எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும். நாடெல்லாம் நல்ல மழை பெய்ய வேண்டும் என்ற பொது நல உணர்வோடு யாரும் கேட்பதில்லை.

காகிதங்களில் தான் பொது நல உணர்வு இருக்கிறது. மனத்தில் பொது நல உணர்வு இல்லை. இது காகித உலகமாக இருக்கிறது.''

**உண்மையான தொண்டு: பொய்யான தொண்டு:**

''தொண்டு செய்யாவிட்டால் துண்டு விழும். உண்மையான தொண்டு வெளிச்சத்திற்கு வரும். பொய்யான தொண்டு வெளிச்சத்திற்கு வராது.''

**பணம் – பிணம்:**

''பணத்திற்குச் செய்யும் தொண்டு பிணத்திற்குச் சமம். பக்திக்குச் செய்யும் தொண்டுதான் உண்மையான தொண்டு.''

**தொண்டின் பெருமை:**

''கூட்டாகச் சேர்ந்து பிறர்க்கு நீங்கள் தொண்டு செய்தால் தொழிலுக்கு வழி உண்டு. உணவிற்கு வழி உண்டு; உயர்விற்கு வழி உண்டு; உண்மைக்கு வழி உண்டு.''

**கணவன் – மனைவி:**

''கணவன் - மனைவி இருவரும் இணைந்து பொதுத் தொண்டில் ஈடுபடுவது கடினம் தான். ஆயினும் அவ்வாறு ஈடு பட்டால் பலன் உண்டு.''

**கௌரவம் பார்க்காதே:**

''அம்மாவுக்குத் தொண்டு செய்யும் போது கௌரவம் பார்க்கக் கூடாது. அப்படிப் பார்த்தால் பலன் கிட்டாது.''

**அருளும் – பொருளும்:**

''என்னிடம் அருளை வேண்டி வருகிறீர்கள் பலருக்கு நான் அருளோடு பொருளும் கொடுக்கிறேன். பத்துப் பேர் முதலாளியாகவும் மாறுகிறீர்கள். உடனே கர்வமும் வந்து விடுகிறது. பொருள் வந்ததும் அருள் நழுவிக் கொள்கிறது.''

**ஆசை! ஆணவம்!**

''ஆசைக்கும் ஆணவத்துக்கும் இடம் கொடுக்கக் கூடாது.''

**பிறர்க்குப் பயன்படுமாறு:**

“தேவையற்றது என்று தூக்கி எறியும் ஒரு பொருள் கூட, வேறு ஒரு சமயம் எதற்காவது பயன்படும். அப்படியிருக்கும் போது உன் ஆன்மா பிறர்க்குப் பயன்பட வேண்டும். பிறரும் பயன்பட வாழ வேண்டும்.”

**அமைதி கிடைக்க...**

“வாழ்க்கையில் அமைதி கிடைக்க வேண்டும் என்று நினைத்தால் தொண்டு செய்ய வேண்டும்.”

**வைரமுடைய உள்ளம்:**

“உங்கள் உள்ளம் வைரம்போல் உறுதியாக இருக்க வேண்டும். அதில் சரிவோ நசிவோ இருக்கக் கூடாது. அந்த அளவு ஒரு நிலைப்படுத்த வேண்டும்.”

தாமரையிலையில் தண்ணீர் தத்தளிப்பது போல மனம் தத்தளிக்கக் கூடாது. ஆன்மிகத்தில் ஒரே நிலையில் இருக்க வேண்டும்.

செய்கிற தொண்டும் உண்மையாக இருக்க வேண்டும்.”

**புத்தகப் படிப்பால் பயனில்லை:**

“காகிதத்தைப் புரட்டாதே கருத்தைப் புரட்டு.”

**பொறுமை முக்கியம்:**

“இங்கே பொறுமைதான் உனக்குப் பெருமை தரும். சிறுமையினால் பெருமை தேடிக் கொள்ளக் கூடாது. எளிமைதான் வலிமை தரும்.

எனவே, இங்குப் பணி செய்யும் போது ஒவ்வொன்றிலும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.”

**எப்படித் தொண்டு செய்ய வேண்டும்:**

“தீயதைப் பார்க்காமல், தீயதைக் கேட்காமல், தீயதைப் பேசாமல் தொண்டு செய்ய வேண்டும்.”

**ஒரே குணம்! ஒரே செயல்!**

“ஆன்மிகப் பணிகள், சமுதாயப் பணிகள் ஆகியவற்றை ஒரே குணம்! ஒரே செயல்! என்ற நோக்கம் வைத்துச் செயல்பட வேண்டும்.”



**தூங்கா விளக்கு:**

“தொண்டு என்பது தூங்கா விளக்கு!”

**தொண்டும் – குண்டும்:**

“மனிதனுடைய எண்ணங்கள் நன்மையை விட்டுத் தீமையின் பக்கம் சிதறும் போது வெடி குண்டு சிதறுகிறது.

நல்லனவற்றுக்கு ஊக்கமும் உழைப்பும் தேவை. தொண்டுகள் பெருகப் பெருகக் குண்டுகள் குறையும்.”

**நிலையான உழைப்பு:**

“உடல் வளர்ச்சிபெற உணவு தேவை! அந்த உணவு கிடைக்க உழைப்பு தேவை.

உணவிற்காக உழைக்கும் உழைப்பு; உடல் வளர்ச்சிக்காக உழைக்கும் உழைப்பு; புகழுக்காக உழைக்கும் உழைப்பு; பெயருக்காக உழைக்கும் உழைப்பு; இந்த உழைப்புகளில் எதுவும் நிலையானது அல்ல.

ஆன்மிகத்திற்காக உழைக்கும் உழைப்புதான் நிலையானது. மற்றவர்களுக்குச் செய்யும் தொண்டு என்ற உழைப்புதான் உனக்கு நிலையானது.”

**தொண்டும் – வளர்ச்சியும்:**

“தத்துவப் பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பதால் மட்டும் துன்பங்களிலிருந்து நிவர்த்தியும், வளர்ச்சியும் கிடைத்து விடாது. ஆன்மிகத்தில் ஈடுபாடு வைத்துக் கொண்டு தொண்டு செய்து வந்தால் வளர்ச்சி பெறலாம்.”

**எடுத்துக் காட்டாய் இரு!**

“அன்போடு தொண்டு செய்! நீ சொல்லி மற்றவர்கள் செய்ய வேண்டும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்காதே! நீயே முதலில் இறங்கிச் செயல்படத் தொடங்கு.

ஆன்மிகத்திற்கு வந்துவிட்டால் தொண்டு செய்வதுதான் உன் கடமை.”

**ஆன்ம வளர்ச்சி பெற...**

“நீங்கள் பந்தம், பாசம் ஆகியவற்றை விலக்கிக் கொண்டு இங்கு வந்து தொண்டு செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் போது ஆன்ம வளர்ச்சி ஏற்படும்.”

## பிறர் மதிப்பை எதிர்பார்க்காதே!

“பிறர் மதிக்க வேண்டும்; பிறர் போற்ற வேண்டும் என்று எதிர்பார்த்து எதையும் செய்யாதே! உண்மை உணர்வுடனும் உள்ளன்புடனும் எந்தப் பணியையும் செய். பிறர் போற்றினாலும், போற்றாவிட்டாலும் உன் ஆன்மா உள்ளிருந்து வாழ்த்தும்.”

## உங்கள் ஆன்மாவே வழி நடத்தும்:

“பறவைகளும், மிருகங்களும் தங்களுக்கு அழிவு வரும் என்பதை உள்ளுணர்வால் தெரிந்து கொண்டு இருப்பிடத்தை மாற்றிக் கொண்டு பாதுகாப்பு தேடிக் கொள்கின்றன.

அதுபோல ஆன்மிகத்தில் ஈடுபாடு வைத்துக் கொண்டு தொண்டு செய்து வந்தால் உங்களுடைய ஆன்மாவே நல்லது கெட்டது சொல்லி உங்களை வழி நடந்தும்.”

## பரம்பரைக்கு உதவும்:

“ஒருவன் நட்டு வைத்து வளர்ந்த மரம் அவன் பரம்பரைக்கும் உதவும். அதுபோல நீங்கள் ஆன்மிகத்தில் ஈடுபாடு வைத்துக் கொண்டு தொண்டு செய்தால் உங்கள் பரம்பரை வளரும். ஆதலால் ஆன்மிகத்திற்கு உழைக்க வேண்டும்.

வயிற்றுக்காக நீங்கள் உழைக்கும் உழைப்பு ஜீரணத்திற்கு மட்டும் தான் உதவும். உங்கள் பரம்பரைக்கு உதவாது.”

## உன் குலம் வளரவும் ஆன்மிகம் தேவை:

“உன் உடம்பு ஒரு நாள் ஓய்ந்து தான் ஆக வேண்டும். அதுபோல ஒவ்வொருவரும் ஒரு நாள் ஆன்மிகத்தை நாடி வந்தே தீர வேண்டும்.

காற்றுள்ள போதே தூற்றிக்கொள்! வாய்ப்புள்ள போதே என்னைப் பற்றிக் கொள். தொண்டு செய்து தான் என்னைப் பற்றிக் கொள்ள முடியும்.

நீயும் உன் குடும்பமும் மட்டுமின்றி உனது குலம் வளரவும் ஆன்மிகம் தேவை.”

## சிறு சிறு தொண்டுக்கும்...

“செல்லாத காசிலும் செப்பு உண்டு என அன்றே சொன்னேன். அலுமினியக் காசிற்கும் பேரீச்சம் பழம் கிடைக்கும். நீ செய்யும் சிறு சிறு தொண்டுக்கும் பலன் கிடைக்கும்.”



## தொண்டு:

“நகையைப் பறிப்பதும் பணம் பறிப்பதும் தான் இப்போது நாட்டில் சித்தாடல்களாக இருக்கின்றன. ஆதிபராசக்திக்குத் தொண்டு செய்வது என்று வாழ்ந்தால் வாழ்க்கை பற்றிய பயமில்லை. ஞானம், தியானம், யோகம் இவற்றையும் கூடவே வளர்த்துக் கொள்ள வேண்டும்.”

## பரம்பரைக்கும் அருள்:

“பரம்பொருளின் அருள் உனக்கு மட்டுமின்றி உன் பரம்பரைக்கும் அவசியம் வேண்டும்.

உன் வாழ்க்கை எதுவரையில்... என்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

உண்மைப் பொருள் எது? அழியும் பொருள் எது? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அழியும் பொருளெல்லாம் உண்மைப் பொருள் அல்ல!

அழியாத பொருள் ஒன்றே உண்மைப் பொருள்.

எதற்காக இந்த உலகத்திற்கு வந்தோம் என்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

எதற்காக வந்தோம் என்பதை உன்னை அறியாமலேயே உன்னை வளர வைத்துப் புரிய வைக்கிறேன். நீயோ மறுபடியும் மறுபடியும் கீழே விழுகிறாய்.

உயிர் உன்னைவிட்டுப் போகிறவரை அழியாதது ஆன்மித் தொண்டுதான்!”

## தொண்டு அவசியம்:

“ஆன்ம வளர்ச்சிக்கும் ஆன்ம முன்னேற்றத்துக்கும் தொண்டு அவசியம்.”

# 8. செவ்வாடைத் தொண்டர்களுக்கு

### செவ்வாடைத் தத்துவம்:

“உடலின் ரத்தம் ஒன்று; உஷ்ணம் ஒன்று; உப்பு ஒன்று; காற்று ஒன்று; தண்ணீர் ஒன்று; மனித இனமும் ஒன்று; அதனை உணர்த்தவே செவ்வாடை!”

### செவ்வாடை எதற்கு?

“செவ்வாடை அணிந்தால் தொண்டு செய்யவேண்டும். தொண்டு செய்வதற்காகவே அந்தச் செவ்வாடை!”

### செவ்வாடைத் தொண்டனுக்கு:

“செவ்வாடைக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் மதிப்பு உண்டு; உண்மைத் தொண்டனுக்கு என்றும் என் அருள் உண்டு!”

### செவ்வாடை மகிமை:

“செவ்வாடைக்குச் செம்மை உண்டு. செவ்வாடைக்கு மகிமையுண்டு. ஆகவே செவ்வாடை அணிபவர்கள் அவற்றைச் சிதறடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.”

### செவ்வாடையும் ஆன்மிகமும்:

“செவ்வாடையென்றால் ஆன்மிகம்; ஆன்மிகம் என்றால் ஆதிபராசக்தி மன்றங்கள் என்ற நிலை வருதல் வேண்டும். இம்மன்றங்கள் தமிழ்நாட்டையே மாற்றவேண்டும். மன்றத்தில் உள்ளவர்கள் ஒழுங்காகவும், கட்டுப்பாடாகவும், வழிகாட்டியாகவும் விளங்க வேண்டும்.”

### செவ்வாடையின் மகத்துவம்:

“நீங்கள் செவ்வாடை அணிவதால் மனம் தூய்மை ஆவதற்கு வழியுண்டு. அருவருப்பான எண்ணங்கள் தோன்றாமல் இருக்க வழியுண்டு. கறுப்பு உடையில் சூரிய ஒளி எவ்வாறு நுழைவதில்லையோ அவ்வாறே செவ்வாடை அணிந்த உங்களை



பில்லி, சூனியம், ஏவல், வைப்பு, மந்திரம், தந்திரம் ஆகிய தீயசக்திகள் நெருங்க முடியாது. உன் பக்தியும் தூய்மையாக இருப்பது முக்கியம்! செவ்வாடையணிந்து கொண்டு வழிபாடு செய்வது முக்கியம்! செவ்வாடையணிந்து கொண்டு தியானம் செய்தால் ஓர் ஈர்ப்புத் தன்மை ஏற்படும். தெய்வ அருள் கிட்டும்.”

### செவ்வாடைத் தொண்டர்களுக்கு:

“வாரா வாரம் இங்கே தொண்டர்கள் சிலர் வருகிறீர்கள். இங்கே வந்து நாம் செய்த பணிகள் என்னென்ன? மற்றவர்களுக்கு இங்கே நாம் செய்த உதவிகள் என்னென்ன? என்பதையெல்லாம் உங்களுக்குள் நீங்களே நினைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும், மேலும் உங்கள் தொண்டுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.”

### செவ்வாடைக்கு மதிப்புக் கொடு:

“சுத்தமான ஆடைகளையும், பட்டாடைகளையும் உடுத்தியிருக்கிற போது கறைபட்டுவிடக் கூடாதே என்பதற்காகப் பயபக்தியோடு உட்கார்ந்திருக்கிறீர்கள். அதுபோலவே, ஆன்மிகத்தில் கறைபடியாமல் நீங்கள் சுத்தமாக இருக்கவேண்டும் என்பதற்காகவே செவ்வாடை கொடுத்திருக்கிறேன். செவ்வாடை உடுத்தும்பொழுது பயபக்தியுடன் இருக்க வேண்டும். ஆலயத்திற்கு வரும்பொழுது மட்டுமில்லாமல் வீட்டிலும் செவ்வாடை உடுத்தும்பொழுது பயபக்தியுடன் இருக்க வேண்டும்.”

### திட்டமிட்டுப் பணி செய்யுங்கள்:

“தாய் ஒருத்தி தன் குழந்தையை எப்படி எப்படி வளர்க்க வேண்டும் என்று ஆராய்ந்து திட்டமிட்டு வளர்க்கின்றாளோ அது போல நீங்களும் ஆன்மிகப் பணிகளை எவ்வாறெல்லாம் சிறப்பாகச் செய்யலாம் என்று ஆராய்ந்து திட்டமிட்டுச் செய்ய வேண்டும்.”

### எங்கிருந்து தொடங்குவது?

“இன்று கட்சிகளாலும், அரசாங்கத்தாலும், சமுதாயத்தாலும் புறக்கணிக்கப்பட்டு உணவிற்கும், உடைக்கும் வழியின்றிச் சாலையோரத்தில் இருக்க இடமின்றித் தவிக்கிறதே ஒரு கூட்டம்! அவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். உங்கள் தொண்டு இங்கிருந்து தான் ஆரம்பமாகவேண்டும்.”

**தெய்வநிலை:**

“அனைத்தையும் கைவிட்டு என்னைச் சரணாகதி அடைந்த பிறகே தெய்வநிலை உனக்கு உண்டாகும். உடலால் தொண்டு செய்து ஓய்வடையும் போது என் காட்சி கிடைக்கும்.”

**எனக்கு மனநிறைவு தருவது எது?**

“ஒவ்வொருவரும் இங்கே உற்சாகமாகப் பணிசெய்ய வேண்டும். ஆடம்பரமும், அழகுப் பொருட்களும் எனக்கு மனநிறைவை அளித்துவிடாது. நீங்கள் செய்கிற தொண்டு தான் எனக்குச் சிறந்தது.”

**மன அமைதிக்கு வழி:**

“உடல் வலிமை குறைந்து சோர்வு அடையும் போது தான் உள்ளம் தூய்மை அடைகிறது. அதுபோல உடலுக்கு வேலை கொடுத்துத் தொண்டு செய்யும் போது உள்ளத்திற்கு அமைதி ஏற்படுகிறது.”

**புதுமையாக – புதிராக:**

“நீங்கள் எதைச் செய்தாலும் புதுமையாகவும், புதிராகவும் செய்ய வேண்டும்.”

**பொதுநல உணர்வு தேவை:**

“சுயநல உணர்வு கூடாது. பொதுநல உணர்வு வேண்டும். உள்ளத் தூய்மையோடும், உள்ளன்போடும் ஆன்மிகத்தில் ஈடுபடவேண்டும்.”

**உங்களைப் பார்த்து உலகம் வரும்:**

“இங்கு விழாக்களுக்கு வருகிற பக்தர்களை உபசரித்து வரவேற்க வேண்டும். அன்புக் கட்டளையிட்டுப் பணிபுரிய வேண்டும். உங்களைப் பார்த்து ஊரும் வரும்; உலகமும் இங்கு வரும். உங்களைப் பார்த்து மற்றவர்களும் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்கேற்றவாறு உங்கள் பக்தியும் தொண்டும் அமையவேண்டும்.”

**உங்கள் பொறுப்பு:**

“மக்களிடையே இப்போது ஆன்மிகமும் பக்தியும் ஊட்டிப் பயிரை வளர்த்து உங்களிடம் கொடுக்கிறேன். செவ்வாடைத் தொண்டர்களை விட பாமர மக்கள் இப்போது அதிகமாக வருவதைப் பார்த்துக் கொண்டீர்கள் அல்லவா? பயிரை வளர்த்து உங்களிடம் கொடுத்து விட்டேன். பயிரில் களை வளராமல் பார்த்துக் கொள்வதும், ஆடு



மாடுகள் மேயவிடாமல் பார்த்துக் கொள்வதும் இனி செவ்வாடைத் தொண்டர்கள் பொறுப்பு!”

**தொண்டும் மனத்தூய்மையும்:**

“மகனே! துணியிலே மட்டும் அழுக்கில்லை! மனத்திலேயும் உண்டு. துணியிலே உள்ள அழுக்கு துவைக்கத் துவைக்க சிறிது சிறிதாகத் தான் போகும். ஆனால், துணியும் கிழிந்துவிடாதபடிப் பார்த்துக் கொள்ள வேண்டும். தொண்டு செய்து கொண்டே வா! தொண்டு செய்யச் செய்யத்தான் மன அழுக்கு நீங்கும். ஆனால் பக்தியிலிருந்து விலகி விடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். குறைகளை உணர்ந்து வருந்துவது கூட ஒரு படி வளர்ச்சிதான் மகனே!”

**தொண்டுகளுக்குத் தான் மதிப்பு:**

“தலைவன் என்ற சொல்லின் பின்னால் உள்ள “வன்” என்பதை எடுத்துவிடு! தலைதான் வரும். உடம்பிற்குத் தலை தான் பிரதானம். தலை போனால் என்ன பெயர்? முண்டம்! தொண்டு செய்தால் தலை! தொண்டு இல்லையேல் முண்டம்! இங்கிருப்பவன் முடிச்சுப் போட்டுத் தலைவனாக இருக்கலாம் என்று நினைக்கிறான். தலைவன் பின்னால் பத்துபேர் வருகிறானா? தொண்டன் பின்னால் பத்து பேர் வருகிறானா? என்று இங்கு பார்! இங்கே தொண்டுக்குத்தான் மதிப்பு!”

**காலத்தை வீணாக்காதே!**

“காலம் என்பது கரு வளர்வது போன்றது. ஆன்மிகத்திற்கு வந்துவிட்ட நீங்கள் ஏதோ வந்தோம்; போனோம் என்றில்லாமல் காலத்தை வீணடிக்காமல் கொடுக்கிற வாய்ப்பையும், கிடைக்கிற வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டு கரையேறுவதற்கு முயலவேண்டும்.”

**நேரம் வரும்போது...**

“சூழ்ச்சி செய்பவர்கள் வீழ்ச்சியை அடைவார்கள். ஒரே நம்பிக்கை! ஒரே குறிக்கோள்! இருக்க வேண்டும். குறிக்கோளுக்கும் பொருளுக்கும் என்னைத் தேடி அலையாதே! நேரம் வரும்போது நானே உன்னைத்தேடி வருவேன்!”

**கருவறைத் தொண்டர்களுக்கு:**

“மன்றத்தினர் கருவறைப்பணி செய்யும்போது, தரிசனம் பெற வருகிற பக்தர்களுக்கு இனிப்பு, புஷ்பம், வேப்பிலை, தீர்த்தம், விபூதி

கலந்து கொடுக்க வேண்டும். எப்போதும் போல சந்தனம், குங்குமம் கொடுக்கவேண்டும். வேப்பிலையில் உள்ள கசப்பு நோய் தீர்க்கும்.''

## ஆன்மிகத்தில் இனவெறி – பணவெறி:

"ஆன்மிகத்துறையிலும் இனவெறி, பணவெறி இருக்கும். அதைப்பற்றி என் பக்தர்களும், தொண்டர்களும் கவலைப்படாமல் கொடுக்கிற வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தொண்டு செய்து ஆன்மிகத்தில் முன்னேறி வரவேண்டும்!''

## தொண்டு செய்துகொண்டே இரு:

"ஆதிபராசக்தி கோயிலுக்கு வந்தோமே இன்னும் திருமணம் ஆகவில்லையே! எந்தப் பலனும் கிடைக்கவில்லையே என்று கருதிக்கொள்ளக் கூடாது. காலம் கனியும்போது எல்லாமே கூடும். அவ்வாறு கனிவதற்கு உன் மனத்தைக் கட்டுப்படுத்தி வேறெங்கும் சுற்றாமல் இங்கிருந்து தொண்டு செய்ய வேண்டும்.''

## என்னிடம் வந்தும் ஏமாந்து போகாதே!

"ஆல், அரசு, வேம்பு போன்ற விதைகள் காற்று, தண்ணீர், பறவைகள், விலங்குகள் இவற்றின் மூலம் பரவிச் செடியாக முளைக்கின்றன. அவற்றுடன் காளான்களும் முளைக்கின்றன. நாளடைவில் அக்காளான்கள் அழிந்து அந்தச் செடிகளுக்கே உரமாக அமைகின்றன.

அந்தச் செடி நாளடைவில் வளர்ந்து மரமாகிப் பூ பூத்து, காய் காய்த்துக் கனி கொடுக்கும் காலத்தில் அந்தக் கனியைத் தின்பதற்குப் பறவைகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கின்றன. இந்தச் சண்டையால் அப்பறவைகள் அப்பழத்தைத் தின்ன முடியாமல் தவறவிட்டு விடுகின்றன. அந்த வேளையில் மரத்தின் அடியிலிருக்கும் அமைதியான நொண்டிப் பறவை கீழே விழுந்த பழத்தை உண்டு மகிழ்கிறது.

அதுபோல, நான் ஆன்மிகம் என்ற விதையை விதைத்திருக்கிறேன். அது செடியாகிற காலத்தில் பல எதிர்ப்புகள் தோன்றும். அந்த எதிர்ப்புக் காளான்களே ஆன்மிகம் என்ற மரத்திற்கு உரமாக அமையும். இந்த மரத்திலிருந்து பூ பூத்துக் காய் காய்த்துக் கனியாகும் காலத்தில் உங்களுக்குள் சண்டை, சச்சரவு போட்டுக் கொண்டு இருந்தீர்களேயானால் எங்கேயோ அமைதியாக உட்கார்ந்துகொண்டு என்னை நினைத்துத் தொண்டு செய்யும் ஒருவன் தான் அதன் முழுப்பலனையும் அடைய முடியும். அதன் பிறகு வருத்தப்பட்டுப் பயனில்லை.



பறவைகளின் சண்டையால் மரத்திற்கு எந்த அழிவும் இல்லை. அதுபோல உங்களுக்குள் சண்டை சச்சரவு ஏற்பட்டால் நஷ்டம் உங்களுக்குத் தானே தவிர ஆன்மிகத்திற்கு அல்ல! ஆகையால் ஆன்மிக உணர்வுடன் சலசலப்பு இல்லாமல் கருத்து வேற்றுமையில்லாமல் தொண்டு செய்யுங்கள். யார் யாரோ அம்மாவிடம் வந்து பலன் அடைகின்றார்களே என்று வருந்திப் புலம்புவதில் பயனில்லை. உங்களுக்குள் ஒற்றுமை இல்லையேல் நஷ்டம் உங்களுக்குத்தான்.''

## தொண்டுள்ளம் இயல்பாகவே வரவேண்டும்:

"மனக்கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். எனக்காகவோ, வெளி உலகத்துக்காகவோ தொண்டு செய்யக் கூடாது. தொண்டுள்ளம் இயல்பாக வருதல் வேண்டும். இயற்கை மாறாதது. செயற்கை மாறிவிடும்.''

## அனுபவம் பெறவேண்டும்:

"அம்மாவின் சந்நிதிக்கு வருகிறோமே! சொத்து, சுகம் கிடைக்கவில்லையே? கஷ்டங்கள் நீங்கவில்லையே? என்று உங்களில் சிலர் நினைக்கிறீர்கள். கஷ்டப்படப் படத்தான், அடி படப்படத்தான் அனுபவம் கிடைக்கும். அனுபவங்கள் மூலந்தான் எந்த உண்மையையும் அறிய முடியும், தியானத்திற்கும், ஆன்மிகப் பணிகளுக்கும் நீங்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.''

## உண்மையுடனும் உள்ளுணர்வுடனும் தொண்டு செய்:

"எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து அனைவரும் ஒன்றாக இங்கே வந்து என்னிடம் சேர்ந்திருக்கிறீர்கள். இங்கே வந்து ஆன்மிகப் பணிகளில் ஈடுபடும் போது, வீடு, வசதி இவைபற்றி நினைக்கக் கூடாது. உண்மை உணர்வுடனும், உள்ளுணர்வுடனும் தொண்டு செய்ய வேண்டும்.''

## தொண்டு செய்து தப்பலாம்:

"அழிவு எந்த ரூபத்திலும் வரும். ஆசை காரணமாக வரும்; தண்ணீர் காரணமாக வரும்; உணவு காரணமாக வரும். எனவே, ஆன்மிகத்தில் ஈடுபாடு வைத்துக் கொண்டு தொண்டாற்றி வந்தால் நீ தப்பிக்கலாம்.''

## உலகப்போக்கு:

"மரம் ஒன்று பழுத்திருந்தால் அதன்மேல் பலருடைய பார்வை இருக்கத்தான் செய்யும். பயிர் வளரும்போது களையும்

தோன்றத்தான் செய்யும். அவ்வாறே ஆன்மிகத்தில் உங்களைப் பார்த்துப் பொறாமையும், எதிர்ப்பும், பகையும் வரத்தான் செய்யும். நீங்கள் தான் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.''

**மன அமைதிக்கு வழி:**

"ஆன்மித்தில் தஞ்சம் அடைந்தால் தான் அமைதி கிடைக்கும் அந்த ஆன்மிகத்தில் தியானத்தாலும் தொண்டினாலுந்தான் அமைதி கிடைக்கும்.''

தரும சிந்தனை - ஆன்மிக உணர்வு - உழைப்பு - தொண்டு - இவற்றைப் போற்றி ஈடுபடவேண்டும். தனக்கு என்ற சுயநல மனப்பான்மை இருக்கக் கூடாது.''

**ஊட்டிவிட முடியாது:**

"பறவைகளுக்குச் சிறகைப் படைத்துத் தான் கொடுக்கலாம். ஆட்டி வைத்துப் பறக்கச் செய்ய முடியாது. அந்த முயற்சி பறவையினுடையது. உங்களுக்கு உணவைத் தான் கொடுக்க முடியும். ஊட்டிவிட முடியாது. கொடுக்கிற வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.''

**தொண்டின் பயன்:**

"தன் வீடு, தன் மகன், தன் மகள், தன் பேரன், தன் பணம், தன் பதவி, தன் வியாபாரம், தன் வாகனம், தனக்கு மந்திரி பதவி என இவற்றையே நினைத்துக் கொண்டு இங்கே வரக்கூடாது. இங்கே வந்து ஆன்மிகத் தொண்டு செய்ய வேண்டும். ஆன்மிகத் தொண்டு செய்து அதனால் கிடைக்கிற பலன்களை யாரும் கவர்ந்து கொள்ள முடியாது. அவற்றை அழிக்கவும் முடியாது.''

**அலட்சியப் போக்குடன் தொண்டு செய்தால்:**

"நம் விட்டு மரந்தானே? நமது மரத்தில் தானே பழம் பழுத்துக் கிடக்கிறது! இது நமக்குத் தானே சொந்தம்? என்றெல்லாம் அலட்சியத்தோடு இருந்தால் உங்களுக்குத்தான் இழப்பு! பழத்தை மற்ற பறவைகள் கொத்திக்கொண்டு போய்விடலாம். மற்றவர்கள் பறித்துக் கொண்டும் போய்விடலாம். நம் அடிகளார் தானே... எப்படியும் அருளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற அலட்சியப் போக்குடன் தொண்டு செய்தால் பலன் இல்லை.''

**ஆலமரமும் – முருங்கை மரமும்:**

"ஆலமரத்தைப் பற்றிக்கொண்டு ஏறுகிறவனுக்கு ஒன்றும் ஆகாது. அதனைவிட்டு விட்டு முருங்கை மரத்தில் ஏறினால்



முறிந்துவிழ வாய்ப்புண்டு. நீ பற்றிக் கொண்டிருப்பது ஆலமரம். இதன் கிளை ஒடியாது. என்னை விட்டு நீ முருங்கை மரத்தைப் பற்றினால் கிளையும் ஒடியும்; எலும்பும் முறியும். எதனைப் பற்றிக் கொள்ள வேண்டுமோ அதனையே பற்றிக் கொண்டால் நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படத் தேவையில்லை.''

**படகும் பாவனையும்:**

"ஒரு படகில் இரண்டு பக்கமும் உட்கார்ந்திருப்பவர்கள் நான்கு நான்கு பேர் துடுப்புப் போட்டுத் தள்ளினால் தான் படகு வேகமாகச் செல்லும்; கரையும் சேரும். துடுப்பினை வைத்துக் கொண்டு தள்ளுவது போல பாவனை செய்தால் படகு வேகமாகவும் செல்லாது; கரையும் சேராது. அதுபோல ஆன்மிகத்திற்கு வந்துவிட்ட நீங்கள் உண்மை உணர்வுடனும், உள்ளன்போடும் தொண்டு செய்தால் கரை சேரலாம். தொண்டு செய்வது போல பாவனை செய்தால் நீங்கள் முன்னேறவும் முடியாது. கரை சேரவும் முடியாது.

உங்கள் பூர்வ புண்ணியக் கணக்கை வைத்து உங்களுக்குச் சில பொறுப்புகள் அளிக்கிறேன். அவற்றைப் பொறுப்போடு செய்யாமல் பாவனை பண்ணினால் பாவந்தான் மிஞ்சும்.''

**ஏணியும் – தோணியும்:**

"ஏணி மற்றவனை உயர்த்தும். தான் உயராது. தோணி. மற்றவரைக் கரை சேர்க்கும். தானாகக் கரை கடக்காது. ஆன்மிகம் அப்படிப்பட்டதல்ல. இதில் நீயும் உயரலாம். மற்றவனையும் உயர்த்தலாம். நீயும் கரையேறலாம். மற்றவனையும் கரை சேர்க்கலாம்.''

**சிலர் வெளியே; பலர் உள்ளே:**

"அம்மா கோவிலுக்கு வந்தோமே! நமக்குப் பணம் சேரவில்லையே? சொத்து சேரவில்லையே? என்றெல்லாம் நினைக்கக் கூடாது. அப்படி நினைத்துக் கொண்டு உங்களில் ஒன்பது பேர் வெளியே போனால் 90 பேர் உள்ளே நுழையக் காத்திருக்கிறார்கள். வருங்காலத்தில் தன்னைத் தானே தலையில் அடித்துக் கொள்கிற நிலை ஏற்படும். "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என்ற மனப்பான்மை வரவேண்டும்.''

**அடிகளாரின் தொண்டன்:**

"அடிகளாரின் தொண்டன் எப்படி இருப்பான் தெரியுமா? அடிகளாரின் தொண்டன் உழைத்து உண்பான். ஊரார் பொருளுக்கு ஆசைப்பட மாட்டான். ஊண் உறக்கமின்றிச் சித்தர் பீடத்தைப்

பற்றியும் அடிகளாரின் அவதார நோக்கம் பற்றியும் பட்டிதொட்டியெங்கும், பார்க்கும் இடம் எங்கும், போவோர் வருவோர் அனைவரிடத்தும் சொல்லிக் கொண்டே இருப்பான். மகனே! அவன் அடிகளாரையும், அம்மாவையும் எந்த நேரத்திலேயும் வேறுபடுத்திப் பார்க்க மாட்டான்! நான் அவனைப் படாதபாடு படுத்துவேன். ஆனால் பார் மகனே! அவனுக்குச் சந்தேகம் என்ற ஒன்று மட்டும் வருவதில்லை. மகனே! என்னுடைய உண்மையான தொண்டன் பட்டம், பதவி, புகழ், பவிசுக்கு என்றுமே ஆசைப்பட மாட்டான். அவனுக்குத் தொழில் தொண்டு மகனே!

மகனே! அவனுடைய தொழிலே தொண்டு என்றால் அதை வியாபாரம் பண்ணுவான்; அம்மா பேரைச் சொல்லிக் காசாக்கி அவனுடைய காலி வயிற்றை நிரப்பிக் கொள்வான் என்று பொருளல்ல.

அடிகளாரின் தொண்டன் நாணயமானவனாய் இருப்பான். நன்னடத்தையைக் கொண்டிருப்பான். அல்லும் பகலும் ஆன்மிக முன்னேற்றத்தைப் பற்றியே அயராது சிந்தித்துக் கொண்டிருப்பான். அவன் உழைத்துச் சாப்பிடுவான். ஒரு ரூபாய் சம்பாதித்தால் அதிலிருந்து பத்துக் காசை ஆன்மிகத்திற்காகச் செலவிடுவான். மகனே! அவன் யாருக்கும் வால் பிடிக்க மாட்டான். வஞ்சக எண்ணங்களை நெஞ்சிலே சுமக்க மாட்டான். வீண் பொழுதைக் கழிக்க மாட்டான். விளையாட்டுக்காகக் கூடப் பொய் கூறமாட்டான். கபடு, சூது, வாது அவனை நெருங்கமாட்டா!

அவன் தனது பெற்றோரை, குடும்பத்தாரை, சுற்றத்தாரை மதித்து நடப்பான், மகனே! அவன் ஒருவனுக்காக அவனுடைய அகங்காரமில்லாத தொண்டினுக்காக - அவனைச் சார்ந்த அனைவரையும் காப்பாற்றுவேன்.''

## தொண்டு ஒன்றுதான் வழி:

“உலகமெங்கும் இப்போது அக்கிரமம் தலைவிரித்தாடுகிறது. எங்குப் பார்த்தாலும் விபத்துக்கள்! சாவுகள்! ஆன்மிகத்திற்கும் அமைதிக்கும் இடந்தேட வேண்டியிருக்கிறது. திருடுகளும், பாவங்களும் பெருகிக் கொண்டிருக்கின்றன. இந்த ஆலய எல்லைக்குள்ளேயே திருடுகள் நடக்கின்றன. எத்தனை ஆசாபாசங்களோடும் ஆபாச எண்ணங்களோடும் என் சந்நிதியை மிதிக்கின்றனர்? ஏற்கனவே மூன்று நான்கு மடங்காகப் பெருகிவிட்டது. மகனே! ஆன்மிகம், சமாதானம் இவைதான் இவற்றுக்கு மாற்றுவழி மகனே! இவைகளிலிருந்து விடுபட ஒரேவழிதான் இருக்கிறது மகனே! அதுதானடா தொண்டு! ஒவ்வொருவனும் தொண்டனாக



மாறவேண்டும். தன்னையும், தன் குடும்பத்தையும் மட்டும் மாற்றிவிட்டால் போதாது. அவனவன் அக்கம்பக்கத்து வீட்டுக்காரனையும் அயலானையும் மாற்ற வேண்டும்.''

## கருவறைப் பணியும்: கழிவறைப் பணியும்:

“மகனே! கருவறைப் பணியும், கழிவறைப் பணியும் ஒன்றுதானடா! ஆனால், அவற்றில் ஒரு சிறு வித்தியாசம்! கருவறைப் பணி செய்யும் போது நீ என்னருகே இருக்கிறாய்! ஆனால் மகனே! நீ கழிவறைப் பணி செய்யும் போது நான் உன்னருகில் இருக்கிறேனடா!''

## பக்தி – பண்பு – தொண்டு:

“ஒருவனுக்குப் பக்தி வளர வளரப் பண்பு வளரும். பண்பு வளர வளரத் தொண்டு வளரும். மாறாகப் பக்தி குறைந்தால் பண்பு குறையும். பண்பு குறைந்தால் தொண்டும் குறையும்.''

## என்னைவிட்டு ஓடாதே!

“உனக்கு இங்கேயே அருளும் உண்டு; பொருளும் உண்டு. அங்கும் இங்கும் ஓடாதே! உன் நிழல் எங்குச் சென்றாலும் தொடரும்!''

## உண்மைத் தொண்டு:

“ஒருபுறம் உணவு இருக்கிறது. இன்னொரு புறம் பசியும் இருக்கிறது. உண்மை உணர்வுடன் தொண்டு செய்யும் போது இரண்டுமே மறைந்து போய்விடும்.''

## பலன்களை உன் சந்ததிக்குச் சேர்த்துவிடு!

“அம்மா உனக்கு என்ன செய்தது என்று நினைக்காதே! இங்கே அம்மாவிற்காகவும், ஆன்மிகத்திற்காகவும் செய்கிற ஒவ்வொரு தொண்டிற்காகவும் பலன் உண்டு. அந்தப் பலன்களை எல்லாம் உன் சந்ததிக்குச் சேர்த்துவிடு!''

## நொண்டிப் பிள்ளையைக் காப்பாற்றுவது போல...

“நொண்டிப் பிள்ளைகளை வைத்து ஒரு தாய் கஷ்டப்பட்டுக் காப்பாற்றுவது போல, நொண்டிகளான உங்களை ஆன்மிகத்தில் ஈடுபட வைத்து உங்களை நான் காப்பாற்றிக் கொண்டு வருகிறேன்.''

## நீ உன்னைத் தயார்ப்படுத்திக் கொள்!

“தருமம் செய்யக்கூடிய ஆன்மிகவாதியும் என்னிடம் வருவான்.

அக்கிரமம் செய்யும் அயோக்கியனும் என்னிடம் வருவான். அடிதடியை உண்டாக்குகின்ற அரசியல்வாதிகளும் என்னிடம் வருவார்கள். அவனவனுக்கும் சோதனைக்காலம் நெருங்குகிறது. ஆன்மிகம் துளிர்விடத் தொடங்கியிருக்கிறது. காலப்போக்கில் ஆன்மிகம் மலரப்போகிறது. என்னிடம் வந்து சேர்ந்துவிட்ட நீங்கள் உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்காகவே தியானம்! அந்தத் தியானத்தின் மூலமாக உங்களுக்கு மனக்கட்டுப்பாடு தேவை!"

### உள்ளத்தெளிவு:

"உள்ளத்தெளிவோடு ஆன்மிகப் பணிகள் செய்ய உங்களுக்கு வாய்ப்பளிக்கிறனே். வேலைக்காரி ஒருத்தி ஏதோ கடமைக்காகப் பணி செய்து பாத்திரம் தேய்த்தால் பாத்திரமும் சுத்தமாவதில்லை. உள்ளத்திற்கும் தெளிவு ஏற்படுவதில்லை. அன்போடும், உள்ளத் தெளிவோடும் அவள் பணி செய்யும்போது அவளுக்கு அமைதியும், உள்ளத்தெளிவும் ஏற்படும். அந்தத் தெளிவு உள்ளவர்களுக்கு ஆன்ம முன்னேற்றத்திற்கு வாய்ப்பு உண்டு."

### தொண்டர்களுக்கு வரக்கூடாதவை:

"கௌரவம், சொத்து, பணம் என்ற எண்ணங்கள் இருக்கக்கூடாது."

### பணமும், சொத்தும்:

"பணத்தினால் பாவமும், சொத்து சேர்ப்பதனால் கவலையும் உண்டாகும். எனவே, பணத்திற்கும் சொத்திற்கும் அலையாதே!"

### ஆன்மிகத்தினால் வரும் உயர்வு:

"வீணாகிப் போகிற தண்ணீரை வீணாகாமல் ஏரி, குளம், கிணறு என்று அமைத்துத் தண்ணீரைச் சேமித்து வைத்துப் பயனடைகிறீர்கள். இயற்கைச் சக்தியால் உங்களுக்குப் பயன் கிடைக்கிறது. அதுபோலவே உங்களிடம் உள்ள சக்திகளை வீணாக்கி விடாமல் பக்தி, தொண்டு, வழிபாடு, மௌனம், தியானம், தருமம் என்ற முறையில் சேகரித்துக் கொண்டு வந்தால் உயர்வடைவீர்கள். ஆன்மிகத்தால் ஒருவனுக்கு உயர்வு உண்டே தவிர தாழ்வில்லை.

இயற்கையில் கிடைக்கக்கூடிய வெள்ளி, தங்கம் போன்றவைகளின் மதிப்பு அதிகரித்துக் கொண்டே போவதுபோல, ஆன்மிகத்தில் ஈடுபடுவதால் உங்களுக்கு மதிப்பும் அதிகரித்துக் கொண்டே போகும். அந்த மதிப்புதான் உங்களுக்குப் பலன் கொடுக்கும், செயற்கை முறைகளால் அழிவுகளேயுண்டாகும்."



### புரிந்துகொள்:

"எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த உங்களையெல்லாம் ஒன்று சேர்த்து எப்படி ஆன்மிகத்தில் ஈடுபடுத்துகிறேன் என்பதைப் புரிந்துகொள்."

### குடும்பத்தோடு சந்நிதிக்கு வா:

"குழந்தையாகப் பிறந்து வளர்ந்து இப்படித்தான் இருக்கவேண்டும் என்று எண்ணி எப்படி எப்படியோ வளர்ந்துவிட்ட உங்களையெல்லாம் ஆன்மிக நெறியில் ஈர்த்து வைத்திருக்கிறேன். ஆன்மிகத் தத்துவங்களைப் பின்பற்றி நீங்கள் வளர்வதற்காக வழிவகையும் செய்துவருகிறேன். நீங்கள் அம்மாவின் சந்நிதிக்கு வரும்போது குடும்பத்தோடு வரவேண்டும். எல்லா நிகழ்ச்சிகளிலும் பங்குபெற வேண்டும். உண்மை உணர்வுடன் தொண்டு செய்யவேண்டும்."

### மாடுகளும் நீங்களும்:

"மாட்டை அவிழ்த்து வெளியில் விட்டால் அது மறுபடியும் தான் இருந்த இடத்திற்கே திரும்பி வந்து சேர்ந்துவிடுகிறது. நானும் உங்களுக்கு வாராவாரம் என்ன கூறினாலும் அதே நிலையில் தான் இருக்கிறீர்கள்; சென்ற பாதையிலேயே செல்வது போல உங்கள் மனம் செல்கின்றது. அதே நிலைக்கு வந்துவிடுகிறது. உயரமாட்டேன் என்கிறது."

### முக்கியக் குறிக்கோள்:

"களை முளைக்கிறதே என்பதற்காகப் பயிர் நடாமலிருக்க முடியுமா? பெற்ற குழந்தைகள் இறந்துவிடுகின்றனவே என்பதற்காகக் குழந்தைகள் பெற்றுக்கொள்ளாமல் இருக்க முடியுமா? அதுபோலச் சலிப்பு, சலசலப்பு முதலியன இருந்தாலும் அமைதியைக் கருத்தாகக் கொண்டு ஆன்மிகப் பணிகளைச் செவ்வனே செய்து ஆன்மிகத்துறையில் மேன்மை அடைவதுதான் உங்களுடைய முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும்."

### சிறந்த தொண்டே முக்திக்கு வழி:

"பல பெண்கள் அம்மாவுக்குத் தொண்டு செய்யக் காத்திருக்கிறார்கள். சிறந்த தொண்டே முக்திக்கு வழி!"

### பழைய வாழ்க்கைச் சக்கரம்: புதிய வாழ்க்கைச் சக்கரம்:

"சொத்து சேர்ப்பது - குழந்தை பெறுவது - வேண்டாத விஷயங்களைப் பற்றிப் பேசிக்கழிப்பது - சாப்பிடுவது - தூங்குவது

என்று இப்படி உங்கள் வாழ்க்கைச் சக்கரம் சுழன்று கொண்டிருந்தது. அதை இப்போது மாற்றி வருகிறேன்.

உங்களை ஆன்மித்தில் ஈடுபாடு கொள்ள வைக்கிறேன். அபிடேகம், ஆராதனை, கூட்டுவழிபாடு, மன்றப் பணிகள், மன்றத்தில் தொண்டுகள், பொதுப்பணிகளில் ஈடுபடுதல் என்று தற்போது அந்த வாழ்க்கைச் சக்கரத்தைப் புது சக்கரமாகச் சுழல வைத்துள்ளேன். பெண்கள் இப்போது ஆன்மிகத்தில் அதிகமாக ஈடுபாடு கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.''

**"சக்தி ஒளி" வாங்கி ஏழைகளுக்கு கொடு:**

"சக்தி ஒளி'' படித்தால் உன் உள்ளத்திற்கும் ஒளியுண்டு. ஆகவே, சக்தி ஒளி வாங்கிப் பத்து ஏழைகளுக்குப் படிக்கக் கொடு!''

**வெளிவேஷம் தேவையில்லை:**

"வாடுகிற நேரத்தில் வாடியும், பாடுகிற நேரத்தில் பாடியும், அழுகிற நேரத்தில் அழுதும் உங்களிடத்தில் ஆன்மிகத்தை வளர்த்து வருகிறேன். வெளிவேஷம் தேவையில்லை. மனத்தையும் காமத்தையும் கட்டுப்படுத்தத்தான் தியானப் பயிற்சி அளிக்கிறேன்.''

**புறங்கூறித் திரிவதால் பாவமூட்டை:**

"ஒருவரைப் பற்றிப் புறம் சொல்லும்போது சொல்பவனை விடக் கேட்பவனுக்கத் தான் பாவம். அதைக் கேட்ட இவன் மற்றவனிடம் சொல்லும் போது இவனுக்கே இரண்டு மடங்கு பாவம் அதிகரிக்கும். இப்படிப்பட்டவன் வாழ்க்கையில் முன்னேறி வர முடியாது. அவன் இவன் பாவத்தையும் சேர்த்துப் பெரிய பாவமூட்டையாகச் சுமக்க நேரிடும். பிறர் குற்றத்தைக் கண்டும் காணாமல் செல்ல வேண்டும். பாவ மூட்டை பெரிதானால் சுமந்து கொண்டு நடக்க முடியாது.''

**அடிகளார் நிழல்:**

"நல்ல கருத்துக்களைப் புரிந்து கொண்டு அடிகளாரின் ஆன்மிக நிழலை ஒவ்வொருவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தியானத்தை இன்னும் அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும்.''

**அடக்கத்துடன் பணி செய்:**

"நெற்கதிர்கள் முதிர்ந்தால் எவ்வாறு தலைசாயுமோ அந்தநிலையில் அடக்கத்துடன் ஆன்மிகத்தில் பணியாற்று! கதிரில் பதர்களும் உண்டு. இருந்தாலும் நெற்கதிர்கள் தலை சாய்ந்து இருப்பது போலப் பணிவுடன் செயல்படு!''



**அழைப்புக்குத் காத்திராதே:**

"எனக்கு அழைப்பு வரவில்லையே என்று யாரும் குறைபட்டுக் கொள்ளக் கூடாது. உன் செவிக்கு எட்டிவிட்டால் அங்கே உன் தொண்டு காத்திருக்கிறது என்று பொருள். அழைப்பை எதிர்பாராமல் நீ ஓடிச் சென்று தொண்டு செய்தால் அதற்குரிய பலனை நான் தருவேன் மகனே!''

**தெய்வத்தை அடைய...**

"சமூகத்தொண்டு செய்தால் தான் தெய்வத்தை அடைய முடியும் என்பதை உணர்த்த வேண்டும்.''

**உழைப்பும் – தண்ணீரும்:**

"தண்ணீர் இருந்தால் தான் குடிக்க முடியும். உழைப்பு இருந்தால் தான் முன்னேற முடியும்.''

**உபதேசம் செய்யும் முன்பாக:**

"ஊருக்கு உபதேசம் செய்வதற்கு முன்பாக உன் உள்ளத்திற்கு உபதேசம் செய்துகொள்!''

**ஏமாறாதே! ஏமாற்றாதே!**

"என் பெயரையும், அடிகளார் பெயரையும், மற்ற தெய்வங்களின் பெயர்களையும் சொல்லிக் கொண்டு என் பக்தர்களையும் பொதுமக்களையும் சிலர் ஏமாற்றி வருகின்றனர். அவ்வாறு ஏமாற்றுபவனால் அவனது குடும்பமே அதற்குரிய விளைவுகளை அனுபவித்தாக வேண்டும். பணம் கொடுத்தவனே இவர்களைத் திருப்பி அடிப்பான்.''

**நாளைய உலகம்:**

"நாளைய உலகம் ஆன்மிக உலகம் என்று கூறிவருகின்றேன். மகன் மகானாகியுள்ள இந்த நேரத்தில் கொடுக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, ஆன்மிகப் பணிகள், தியானம் பழகுதல், இங்கே சுற்றுப்புறச் சுகாதாரம் - இவற்றைக் கடைப்பிடித்துப் பயன்படுத்திக் கொள்!''

**பாவனையால் பாவம் தான் மிஞ்சும்:**

"தொண்டு செய்வது போலப் பாவனை பண்ணாதே! பாவனை செய்தால் பாவம் தான் மிஞ்சும்.''

**பச்சை மரம் – காய்ந்த மரம்:**

“செவ்வாடை அணிந்துவிட்டால் மட்டும் போதாது. பத்து வருடமாகத் தான் வருகிறோம். அம்மா நமக்கு எதையும் தெளிவாக எடுத்துச் சொல்ல மாட்டேன் என்கிறாளே என்று புலம்பாதே! நீ பச்சைமரம் போல மனம் கொண்டவனாக இருந்தால் எனது அருள் என்ற ஆணி பதியும். நீ பந்தபாசத்துடன் கூடிய காய்ந்த மரம் போல வருகிறாய். என் அருள் என்ற ஆணி எப்படி உன் மனத்தில் பதியும்?”

**நெருக்கமாக உள்ள தொண்டன்: வந்து போகிற பக்தன்:**

“கையில் பணமில்லை; அம்மாவுக்கும் மனமில்லை; தொழில் இல்லை; வருமானம் இல்லை; பத்துவருடமாக வருகிறேன். நேற்று வந்தவனுக்கெல்லாம் இந்த அம்மா அள்ளிக் கொடுக்கிறாள். இந்த அம்மா கருமி! கருணை இல்லாதவள்! ஓரவஞ்சனைக்காரி! என்று வாயளவில் என்னைத் திட்டித் தீர்க்கிறான்.

நேற்று வந்தவனுக்கு அவன் கேட்கிறபடிக் கொடுத்து அனுப்பி வைத்து விடுகிறேன். இவனையோ உடன் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

இவனுக்கு என் சக்தியை எப்படி ஏற்றுகிறேன் என்பதெல்லாம் இவனுக்குத் தெரியாது.

பறவைகளுக்கும், கன்றுகளுக்கும் தாயின் அருகில் இருக்கும் போதுதான் அதன் அன்பு - பாசம் தெரியும். தாய் அருகில் இல்லாத போதுதான் ஏக்கம் வரும்.

என்னுடன் இருப்பவர்கள் தாயன்பு என்ற நிழலில் வளர்கிறவர்கள். என்னிடம் வாங்கிக் கொண்டு விலகிப் போகிறவர்கள் இந்த அன்புக்கு ஏங்கித் தவிக்கிறவர்கள்.”

**பாவ மூட்டைகள்:**

“பொன் - பொருள் - பந்தபாசம் என்ற பாவமூட்டைகளைச் சுமக்காமல் பொறுப்புணர்வோடு தொண்டு செய்.”

**உங்கள் தொண்டு வீண் போகாது:**

“எனக்கு நீங்கள் செய்யும் தொண்டு எதுவும் வீண் போகாது மகனே! யார் யாரெல்லாம் குடும்பத்தை விட்டுத் தொழிலை விட்டுத் தொண்டு செய்கிறீர்கள்; எல்லாம் அறிவேன் மகனே! நீங்கள் செய்யும் தொண்டுகளும் இந்தத் தாய்க்குத் தெரியும்; உங்கள் தொல்லைகளும் தாய்க்குத் தெரியும் மகனே!”



**செல்லாத காசிலும் செப்பு உண்டு:**

“எல்லோரையும் சேர்த்துக் கொண்டு தொண்டாற்று! இவனால் என்ன ஆகும் என்று எவனையும் நினைக்காதே! செல்லாத காசிலேயும் செப்பு உண்டு மகனே!”

**நெல்மணியும் அடக்கமும்:**

“விளைந்த நெல்மணி போல் தலைவணங்கி வாழடா மகனே!”

**தூற்றுபவனைப் பற்றி:**

“தாயே! உன்னைக் கண்டபடித் தூற்றுகிறானே, திட்டுகிறானே, அவன் குடலைப் பிடுங்கக் கூடாதா என்று சிலர் நினைக்கலாம். குரைக்கிற நாய் குரைத்தபடியே இறந்து போகும்.”

**கட்டுப்பாட்டுடன் தொண்டு:**

“ஊசல் போன்று ஆடாமல், பாசம், பந்தம், மதம் என்று அலையாமல், நிலையான கட்டுப்பாட்டுடன் இருந்து தொண்டாற்ற வேண்டும்.”

**தலையாட்டிக் கொண்டு கேட்டால் மட்டும் போதாது:**

“இங்கே நான் கூறுவனவற்றைத் தலையாட்டிக் கேட்டுக் கொண்டால் மட்டும் போதாது. ஒவ்வொருவரும் பொறுப்பெடுத்துக் கொண்டு தொண்டு செய்யவேண்டும்.”

**ஆராய்ச்சி நடக்கிறது:**

“ஆதிபராசக்தியின் சக்தி என்ன? ஆதிபராசக்தி யார்? சித்தர்கள் என்பவர்கள் யார்? என்பதைப் பற்றிச் சென்னையில் நடந்த ஆன்மிக மாநாட்டுக்குப் பிறகு வெளிநாட்டான் ஆராய்ச்சி செய்யத் தொடங்கி விட்டான்.”

**உழைப்பும் – உயர்வும்:**

“உழைப்பில் தான் உயர்வு இருக்கிறது. உழைப்பின் பெருமையை உணர வேண்டும். உழைப்பால் தான் எல்லாம் நடக்கும். வேப்பிலையை உருவிப்போட்டே கட்டிடங்களைக் கட்டிக் கொள்வேன். ஆனால் உழைப்பால் கட்டப்படும் கட்டிடத்துக்குத் தான் மதிப்பு உண்டு!”

**அக்கிரமங்கள் செய்வதும் தெரியும்:**

“செவ்வாடையில் இருந்து கொண்டே சிலர் அக்கிரமங்களைச் செய்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும்!”

**தருமம் செய்ய வை!**

“மற்றவன் கையைப் பிடித்து இழுத்தாவது தருமம் செய்ய வை!”

**சக்தி ஒளி சந்தா:**

“ஒவ்வொருவரும் சக்தி ஒளிக்கு ஆயுள் சந்தாதாரராக இருக்க வேண்டும்.”

**அரசியலும் – ஆன்மிகமும்:**

“அரசியலில் தொண்டர்களை விலைகொடுத்து வாங்கும் நிலை உண்டு. ஆனால் ஆன்மிகத்தில் தானே விலைகொடுத்துச் சேர்கிற தொண்டர்கள் உண்டு. அதுதான் ஆன்மிகத்தின் பெருமை!”

**அடிகளார் பொதுச்சொத்து:**

“அம்மாவும் அடிகளாரும் செவ்வாடைத் தொண்டர்களாகிய உங்களுக்கு மட்டும் சொந்தம் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது. அவர்கள் எல்லோருக்கும் சொந்தம்!”

**செவ்வாடையிலும் பொறாமை:**

“செவ்வாடைகளுக்கு இடையே பொறாமை அதிகமாகிக் கொண்டு வருகிறது. பொறாமையினால் பாதிக்கப்படப் போவது நீ தான் என்பதை மறவாதே!”

**திருந்தாத தொண்டர்களுக்கு:**

“இதுவரை உங்களை அடிப்பது போல அடித்தேன். அழுவது போல அழுதீர்கள். கொடுப்பது போலக் கொடுத்து வந்தேன். சாப்பிடுவது போலச் சாப்பிட்டு வந்தீர்கள். அந்த நிலைமை மாறிவிட்டது. இனி அடிக்கிற அடிதான் உண்மையான அடி! அடித்துத் தான் திருத்தியாக வேண்டிய நிலை வந்துவிட்டது!”

**செவ்வாடையிலும் போலிகள் உண்டு:**

“அடிகளாரை மையமாக வைத்துச் செவ்வாடையில் ஏமாற்றுபவர்கள் உண்டு. செவ்வாடை அணிந்த அனைவரும் தூய்மையானவர்கள் அல்லர். அவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பலாம். என் பிடியிலிருந்து தப்பமுடியாது.”

**அடிகளாரைப் புரிந்துகொள்ளாத தொண்டர்கள்:**

“அடிகளாரின் பெருமையை இன்னும் கூடப் புரிந்து கொள்ளாத செவ்வாடைத் தொண்டர்கள் உண்டு!”



**பணத்தை வைத்து எடைபோடாதே!**

“எந்தப்புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாது. எந்த ஆத்மாவை எந்த உடம்பில் வைத்துப் பிறக்க வைத்துள்ளேன் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியாது. பணத்தை வைத்து பக்தியை எடை போடாதே! ஏழை என்று எவனையும் அவமதிக்காதே!”

**துன்பங்கள் ஏன்?**

“குளிக்கும்போது உடல் சுத்தமாகி, பின் மீண்டும் அழுக்கு சேர்வது போல, துன்பங்களும் மறுபடியும் வந்துகொண்டே இருக்கும். அம்மாவிடம் வந்தோமே; இருந்தும் தொல்லை இருக்கிறதே என்று செவ்வாடைத் தொண்டர்கள் நினைக்கக் கூடாது!”

**உன்னை நீயே புரிந்து கொள்வாய்:**

“ஊமை, குருடு, செவிடு ஆகியோருக்கு ஐம்புலன்களில் ஒவ்வொன்று குறைவு! இருந்தும் அவர்கள் தங்கள் குறைகளை மறந்து உலகத்திற்கு ஏற்றவாறு தங்களை வளர்த்துக் கொள்கிறார்கள் அல்லவா? ஐம்புலன்களும் ஒழுங்காக அமையப்பெற்ற நீங்கள் அவற்றை அடக்கப் பழகவேண்டும். அவ்வாறு அடக்கிப் பழகிவந்தால் உன்னை நீயே புரிந்துகொள்வாய்!”

**செவ்வாடைக்கூட்டம்:**

“தருமத்திற்கும் தொண்டிற்கும் பெயர் பெற்ற கூட்டம் செவ்வாடைக் கூட்டம் என்ற பெயரை உங்களுக்கு வாங்கிக் கொடுத்துவிட்டேன். அதனைக் காப்பாற்றிக் கொள்வது செவ்வாடைக் கூட்டத்தின் கடமை!”

**உங்களை வளர்த்து ஆளாக்க...**

“ஒரு தாய் தன்னுடைய குழந்தையைக் கட்டுப்பாடாகவும், ஒழுக்கத்தோடும் வளர்ப்பது போல உங்கள் தாயாகிய நானும் உங்களை ஒழுக்கத்தோடும் கட்டுப்பாட்டோடும் வளர்த்து ஆளாக்க வேண்டும் என்பதற்காகவே உங்களையெல்லாம் ஆன்மிகத்தில் ஈடுபடுத்தி வருகிறேன்.

ஒருவரை இன்னார் பிள்ளை என்று உலகம் சொல்வது போல, ‘இவர்களெல்லாம் ஆதிபராசக்தியின் பிள்ளைகள்’ என்று உலகம் சொல்லவேண்டும். அவ்வாறு சொல்லும்படி நீங்கள் நடந்துகொள்ள வேண்டும்.”

**தன்னால்தான் ஆன்மிகம் வளர்கிறது என்று நினைக்காதே!**

"கண்ணாடியில் மட்டும் தான் பிம்பம் தெரியும் என்பது இல்லை. தண்ணீரிலும் பிம்பம் தெரியும். தண்ணீரில் சூரிய ஒளி பட்டாலும் அதன் முழுமையான உருவம் தெரிவதில்லை. நிலவின் உருவம் தண்ணீரில் தெரியும் போது கையால் நீரை அசைத்தால் நிலவும் அசைவது போலத் தோன்றும். தன்னால் நிலவே அசைகிறது என்று நினைக்க முடியுமா?

அதுபோலத் தன்னால் தான் ஆன்மிகம் வளர்கிறது என்று நீங்கள் நினைத்துக் கொள்ளக் கூடாது."

**தொண்டு செய்வதால்...**

"தொண்டு செய்துகொண்டே வந்தால் மனம் தூய்மையடைந்து கொண்டே வரும். இன்றேல் துண்டு துண்டாகப் போய்விடும்."

**செவ்வாடையாலே செவ்வாடைக்குத் திருஷ்டி!**

"ஒரு குழந்தைக்குத் தாயின் கண்ணே முதலில் திருஷ்டியாக அமைகிறது. அதுபோலச் செவ்வாடை பக்தனின் திருஷ்டியே முதல் திருஷ்டியாக ஆகிறது!"

**மேலான மனிதன்:**

"சாதாரண ஈ கண்ட கண்ட பொருளில் மொய்க்கும். தேனீயோ இனிப்புள்ள பூவில் மட்டுமே மொய்க்கும்.

சாதாரண ஈ போன்றவன் மனிதன். பலவித எண்ணப்போக்கு உடையவன். காந்தம் கண்ட பொருளை ஈர்க்காது. துருப்பிடிக்காத இரும்பை மட்டுமே ஈர்க்கும்.

உன்னதமான பொருள்களை ஈர்ப்பவனே உயர்ந்தவன்.

உலகில் பலரக அரசியல் உண்டு. பலவிதப் பதவிகள் உண்டு. இவற்றால் ஈர்க்கப்படாமல் ஆன்மிகத்தால் ஈர்க்கப்படுபவனே மேலானவன்."

**செவ்வாடைத் தொண்டனுக்கு:**

"பன்றிக்குட்டி போல் இருக்காதே! கன்றுக்குட்டி போல் இரு! நரிக்குட்டி போல் இருக்காதே! நாய்க்குட்டி போல் இரு! பொல்லாதவனாக இருக்காதே! நல்லவனாக இரு!"

**செவ்வாடைத் தொண்டன்: இலக்கணம்:**

"எல்லோரும் செவ்வாடை அணிய முடியாது. எல்லோரும் சீடன்



ஆகிவிட முடியாது. வைரம் பாய்ந்த இதயம் இருந்தால்தான் செவ்வாடைத் தொண்டர்களாக முடியும்."

**நல்லவனாக மாற்று:**

"செவ்வாடை அணிந்து கொண்டால் மட்டும் போதாது. பத்துப்பேரை நல்லவனாக மாற்றும் அளவு உன் தொண்டு அமையவேண்டும்.

தண்டு இருந்தால் தான் செடிக்கு வளர்ச்சி இருக்கும். உன் தொண்டு ஒரு செடியின் தண்டுக்குச் சமம்."

**என்னிடம் விளையாடாதே!**

"ஆலயத்தை வைத்துப் பணம் பறிக்கும் திருவிளையாட்டெல்லாம் வேண்டாம். என்னிடம் உன் விளையாட்டை வைத்துக் கொண்டு, விளைவுகளை அனுபவிக்கிறபோது அம்மாவை நிந்திக்காதே! நான் ஒதுக்கினால் ஒதுக்கியதுதான்!"

**ஊனக்கண்! ஞானக்கண்!**

"உன் ஊனக்கண்கள் ஞானக் கண்களாக மாறவேண்டும்."

**எடுத்துக்காட்டாக இரு!**

"நீ ஆன்மிகத்தில் ஈடுபடும் போது, என் பக்தன் உன்னையும் தெய்வமாக நினைக்கிறான். அதனால் நீ முதலில் பயபக்தியோடும், அன்போடும், பாசத்தோடும் நடந்துகொள்ள வேண்டும். அப்படி நடந்து கொண்டால்தான் உனக்கும் பயன் கிடைக்கும். மற்றவர்களுக்கும் பயன் கிடைக்கும்."

**சிறிய தொண்டுக்கும் பலன் உண்டு:**

"சிறுதுளி பெருவெள்ளம் ஆகிறது. சிறிய உளி பெரிய மலையை உடைக்கிறது. சிறு துரும்பும் பல் குத்த உதவுகிறது. அதுபோல நீ செய்யும் சிறிய தொண்டுக்கும் பலன் உண்டு."

**தொண்டும் – பலனும்:**

"சிறுதுளி பெருவெள்ளம் ஆகிறது. அந்தப் பெருவெள்ளம் இறுதியில் கடலில் சங்கமம் ஆகிறது. அதுபோல நீ செய்யும் சிறிய தொண்டுக்கும் பெரும்பலன் உண்டு. கடலில் கலந்த நீரைப் பிரிக்க முடியாதது போல, நீ செய்த தொண்டின் பலனையும் மற்றவர்கள் கவர்ந்து கொள்ள முடியாது. அந்தப் பலன் உன்னையே அடையும்."

## உயர்ந்த ஆத்மா:

"மெழுகுவத்தி உருகி ஒளிகொடுத்துத் தன்னையே அழித்துக் கொள்வது போல, மற்றவர்களுக்குத் தொண்டு செய்து அவர்களுக்கு நன்மை புரிந்து, தன்னையே அழித்துக் கொள்பவன் எவனோ அவனே உயர்ந்த ஆத்மா!

அத்தகைய உயர்நிலையை அடைவதற்குச் செவ்வாடைத் தொண்டன் விரும்ப வேண்டும்!"

## நாடு காடாக மாறிவருகிறது:

"இந்த நாடு காடாக மாறிவருகிறது. நாடு நாடாக மாற வேண்டுமானால் போலித்தனம் இல்லாமல் ஆன்மிகத்தை வளர்க்க வேண்டும். போலித்தனம் இல்லாத தொண்டுகள் வளரவேண்டும்."

## பக்தி குறைந்து கொண்டு வருகிறது:

"ஆரம்பத்தில் என்னிடம் வந்தபோது இருந்த பக்தி இன்றில்லை. கால், அரை, முக்கால், ஒன்று எனப் பக்தி வளர்ந்து கொண்டே போகவேண்டும்.

ஆனால், உங்களுக்கோ, ஒன்று, முக்கால், அரை, கால் எனக் குறைந்து கொண்டே வருகிறது.

இந்நிலையைத் தவிர்க்க வேண்டுமானால் பிறர்க்குக் கெடுதல் செய்வதை விட்டு நல்லதையே செய்துகொண்டு வரவேண்டும்."

## இயற்கையை ஒட்டியே மனித வாழ்வு:

"மனிதன் தன்னைச் சுற்றியுள்ள பறவை, விலங்குகள், மரம், செடி, கொடி ஆகிய இயற்கைப் பொருள்கள் அனைத்துமே வளமாக இருந்தால்தான் வாழ முடியும்.

மனிதன் எவ்வளவுதான் முன்னேறியிருந்தாலும் தண்ணீர், பூமி, ஆகாயம் ஆகிய இவற்றைச் சார்ந்தே வாழவேண்டும்.

நாளை என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. நீர், நெருப்பு, போதைப் பொருள் இவற்றால் அழிவு உண்டு."

## வசதிக்காகச் செவ்வாடை அணியாதே:

"கரைபடாமல் இருக்கவேண்டும். அழுக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்பதற்காகச் செவ்வாடை அணியக்கூடாது. உள்ளத்தில் உள்ள கரையை அகற்றுவதற்காகச் செவ்வாடை அணியவேண்டும்."



## தொண்டில் வலிமை:

"தொண்டு செய்யச் செய்யத்தான் உன் ஆன்மா வைரம் பாய்ந்து உறுதிபெறும்."

## உன்னைச் சுற்றி வளரும் தீமைகள்:

"உன்னைச் சுற்றி எவ்வளவு தீமைகள் பெருகி வருகின்றன? கண்ணால் பார்க்கிற தீமைகள் - காதால் கேட்கிற தீமைகள் - புத்தகங்களில் படிக்கிற தீமைகள்.

இத்தகைய தீமைகள் அனைத்தும் உனக்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் உன்னை ஆன்மிகத்தில் ஈடுபடச் சொல்கிறேன்."

## உடலும் உள்ளமும்:

"உடல் பெருகக் கூடாது. உள்ளம் பெருக வேண்டும். தலை பெருகக் கூடாது. அறிவு பெருக வேண்டும். உடலால் பெரிய மனிதனாக இல்லாமல், உள்ளத்தால் பெரிய மனிதனாக இருக்கவேண்டும்."

## நீங்கள் வளர்த்த ஆன்மிகம்:

"செடியை வைத்துவிட்டால் தண்ணீர் ஊற்றி வளர்த்தே ஆகவேண்டும். நீங்கள் வைத்த ஆன்மிகத்தை வளர்த்தே ஆகவேண்டும்."

## வேஷம் போடும் ஆன்மிகம்:

"உன்னுடைய ஆன்மாவை வைத்து இங்கே நான் ஆன்மிகம் வளர்க்கிறேன். நீ உண்மை உணர்வோடு ஆன்மிகத்தில் ஈடுபடவேண்டும். வேஷம் போடும் ஆன்மிகம் நீண்டநாள் நிலைக்காது."

## ஆன்மிகம் வளர வளர...

"இங்கே நாம் நட்டு வைத்த ஆன்மிகம் என்ற செடி நன்றாக வளர்ந்து, காய் காய்த்து அதன் பலன் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். அதற்காகவே மருத்துவத் தொண்டு! கல்வித் தொண்டு! தொண்டு நிறுவனங்கள்.

இவற்றின் வளர்ச்சிக்கு நீங்கள் அன்புடனும், பாசத்துடனும், ஆர்வத்துடனும் தொண்டு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தெய்வ சக்தி கூடும். அடுத்த பிறவி இருக்காது.

ஆனால், ஒரு பொருளை அடைந்து விட்ட பிறகு ஆர்வம் குன்றி விடுகிறது. தொய்வு ஏற்பட்டு விடுகிறது. அதனால் பயனும் குறைந்து விடுகிறது.

ஆலயத்திற்கு வரும் போது ஏதோ வந்தோம் போனோம் என்றில்லாமல் தொடர்ந்து தொண்டு செய்து வர வேண்டும்.

அன்பு விதைக்க வேண்டிய இடத்தில் வம்பு கூடாது. அடுத்தவர்களைக் குறை சொல்லக் கூடாது.''

## செவ்வாடை அணிபவர் எல்லாம்...

''எவ்வளவு விதையைத் தூவினாலும் அவ்வளவு விதையும் முளைப்பது இல்லை. ஓரளவே முளைக்கின்றன. அதுபோல செவ்வாடை அணிபவர் எத்தனை பேரானாலும் அத்தனை பேரும் செவ்வாடைத் தொண்டர்களாக ஆகிவிட முடியாது.''

## செவ்வாடைத் தொண்டர்களுக்கு:

''ஆரம்பத்தில் உங்களிடம் நல்ல தொண்டு இருந்தது; பக்தி இருந்தது. இப்போது குறைந்து விட்டது.

நெல் நிரம்பிய சால் போல ஆன்மிகத்தில் உங்களையெல்லாம் வைத்திருந்தேன். சால் நழுவி உடைவது போல தூய்மையான எண்ணம் இல்லாததால் நீங்கள் நழுவி உடைகிறீர்கள்.

உங்கள் எண்ணங்கள் நழுவி விட்டன. உங்களிடம் இருந்த பக்தியும் சிதறி விட்டது.

பத்து வருடங்களுக்கு முன்பு நீங்கள் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் வந்தீர்கள். உள் நோக்கம் இல்லாமல் வந்தீர்கள். அப்பொழுது நீங்கள் கேட்டதையெல்லாம் கொடுத்தேன்.

நீங்கள் ஒரு உள் நோக்கத்தை வைத்துக் கொண்டு செயல்படும் போது நீங்கள் கேட்பது எப்படிக் கிடைக்கும்?

இத்தனை வருடமாக நீங்கள் ஆன்மிகத்தில் இருந்தபோதிலும் இன்னும் நீங்கள் மாறவில்லை.'' (1997-ஆம் ஆண்டு கூறியது)

## என்னிடம் விட்டு விடு:

''உனக்கு வருகிற வேதனை, சோதனைகள் - எது வேண்டும்? எது வேண்டாம்? என்பதையெல்லாம் என்னிடம் விட்டு விடு! பக்தியோடு தொண்டு செய்து கொண்டே வா!''

## பழுமரமும் – பறவைகளும்:

''பழத்தில் மரங்கள் பழுத்திருக்கின்றன. மரமும் பழமும்



சண்டைபோட்டுக் கொள்வதில்லை. அப் பழங்களை அனுபவிக்க வருகின்ற பறவைகளிடையே தான் சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. அந்தப் பழமாகவும் மரமாகவும் நான் இருக்கிறேன்.

என்னிடம் வரும் நீங்கள் பலனை அனுபவிக்க வேண்டுமே தவிர, பறவைகள் போலச் சண்டையிட்டுக் கொள்ளக் கூடாது.''

## சிவப்பு நிறம்:

''ஆபத்து பற்றி எச்சரிக்கை செய்யும் தன்மை - ஒரு பய உணர்ச்சியை உண்டாக்கும் தன்மை - ஒரு மரியாதையை உண்டாக்கும் தன்மை - சிவப்பு நிறத்துக்கு உண்டு.''

## செவ்வாடை அணிந்தால்...

''செவ்வாடை அணிந்தவர்களுக்குச் சேவை மனப்பான்மையும் செவிலித்தாய் மனப்பான்மையும் வேண்டும்.''

# 9. விஞ்ஞான முன்னேற்றம்

**இயற்கையும் – விஞ்ஞானமும்:**

“இயற்கையினால் வளர்ச்சியுண்டு. விஞ்ஞானத்தினால் அழிவு உண்டு. தன் கையே தன்னைக் குத்திக் கொள்ளும்.”

**சிவப்பு அணுக்கள்:**

“நிறங்களில் பச்சை, சிவப்பு, வெள்ளை என்பன உண்டு. சிவப்பில் அணுக்கள் அதிகம். அந்த அணுக்கள் குறைகிற போது ஆபத்து உண்டு. சிவப்பு ஆபத்தையும் அபாயத்தையும் குறிக்கும்.”

**மனிதனும் – விஞ்ஞானமும்:**

“மனிதனாலும் விஞ்ஞானத்தாலும் எதையும் கட்டுப்படுத்த முடியாது.”

**மருந்தும் – மருத்துவனும்:**

“ஒரு மருந்துச் செடிக்கும் நோய் உண்டு; ஒரு மருத்துவனுக்கும் நோய் உண்டு. பிறப்பு, இறப்பு எல்லார்க்கும் உண்டு.”

**பற்றாக்குறை உண்டு:**

“எவ்வளவுதான் உழைத்தாலும், எவ்வளவுதான் விஞ்ஞான முன்னேற்றம் பெருகினாலும் பற்றாக்குறை உண்டு. வெளிநாடுகளிலும் பற்றாக்குறை இருக்கிறது.”

**புதுப்புது நோய்கள்:**

“விஞ்ஞானத்தின் மூலம் எவ்வளவுக்கெவ்வளவு புதுப்புது மருந்துகள் கண்டுபிடித்தாலும், புதுப்புது அறுவை சிகிச்சை முறைகள் பெருகினாலும், நோய்களும் பெருகும்; அழிவுகளும் பெருகும்.”

**அநாதைகளாக மாற்றிவிட்டன:**

“இன்றைய விஞ்ஞானமும், ஆடம்பரமும், நாகரிகமும் மனிதனை அநாதையாகவும், அநாகரிகமாகவும் மாற்றிவிட்டன.”



**உன் பகுத்தறிவுக்கு எட்டாதவை:**

“சக்தி எந்த ரூபம்? தருமம் எந்த ரூபம் என்பது உங்களுக்குத் தெரியாது.”

**ஆதிமனிதன்:**

“ஆதியில் மனிதன் காய்கறிகளைப் பச்சையாகவே சாப்பிட்டான். அப்போது எந்த நோயும் வரவில்லை. விஞ்ஞானத்தால் வேகவைத்தும் சுடவைத்தும் உண்பதற்குக் கற்றுக்கொண்ட பிறகுதான் எல்லா நோய்களும் உண்டாகின்றன.”

**எண்ணங்களும் நோய்களும்:**

“உன் எண்ணங்கள் எவ்வளவுக்கெவ்வளவு சுத்தமாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு நோய்கள் வர வாய்ப்பில்லை!”

**இயற்கை, படைப்பு எதற்காக?**

“தாய்ப்பாசந்தான் மிகவும் சிறந்தது. தாயாகிய நான் உங்களுக்காகத்தான் இயற்கையைப் படைத்திருக்கின்றேன். உங்களுக்காகத்தான் வாய்ப்பு அளிக்கின்றேன்.”

**தெய்வ அருளால் மட்டுமே கிடைக்கும்:**

“மழை, சூரிய ஒளி, உணவு போன்றவற்றை நான் கொடுத்தால் தான் கிடைக்கும்.”

**விஞ்ஞானியின் அழிவு:**

“விஞ்ஞானி விஞ்ஞானத்தாலேயே அழிவான்.”

**மனிதனும் – மிருகமும்:**

“மிருகங்களுக்கு ஆன்மிகம் இல்லை. தெய்வத்தை அறிந்து கொள்கின்றவன் மனிதன் ஒருவன் தான்.”

**வெளிநாட்டான் சுயநலம்:**

“வெளிநாடுகளில் சட்டம், சமத்துவம் என்றெல்லாம் பேசுகிறான். ஏழை, பணக்காரன் வித்தியாசம் இருக்கக் கூடாது என்று பேசுகிறான். அப்படிப்பட்ட சமத்துவ எண்ணம் உடையவன் ஏன் துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும், ஏவுகணைகளையும் தயாரிக்கின்றான்? சமத்துவம் என்ற சாயத்தைப் பூசிக்கொண்டு தன் பிழைப்பைத் தான் தேடிக்கொள்கிறான். எந்த வகையில் அவன் முன்னேறியவன்?”

**விஞ்ஞானத்தால் பாதுகாப்பு கிடைக்காது:**

“உணவு உற்பத்திக்காக விஞ்ஞானத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட மின்சாரம் இன்று உயிர்களையே அழிக்கிறது. புதுப்புது கருவிகளைக் கண்டுபிடிக்கும் விஞ்ஞானம் புதுப்புது வியாதிகளை உற்பத்தி செய்துகொண்டு வருகிறது. உற்பத்தி உற்பத்தியாக இருக்கவேண்டும். அழிவாக இருக்கக் கூடாது. தண்ணீரிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட மின்சாரம் தண்ணீரையே அழிக்கிறது. ஆன்மிகம் ஒன்றுதான் இயற்கையானது. குழந்தை ஒழுங்காகவும், ஒழுக்கமாகவும் வளரவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். ஒழுக்கந்தவறி விட்டால் அந்தக் குழந்தைளையே அழித்துவிடுகிறது. அதுபோலத்தான் இன்றைய விஞ்ஞான முன்னேற்றம்! ஆன்மிக உணர்வும், இயற்கைப் பாதுகாப்பும்தான் பாதுகாப்பு!”

**நாளைய உலகிற்கு:**

“தெய்வ வழிபாடு, ஆன்மிக வழிபாடு, கல்வி, மருத்துவம், தியானம், மௌனம், மனக்கட்டுப்பாடு ஆகியவை நாளைய உலகிற்கு வழிவகுக்கும்.”

**படிப்பால் பயன் என்ன?**

“இன்றைய படிப்பு, ஆடம்பரத்தையும், நவநாகரிகத்தையும் வளர்த்து வருகிறது. மனத்தை வளர்க்கவில்லை. பண்பை வளர்க்கவில்லை.”

**விஞ்ஞான சக்தி! ஆன்மிக சக்தி!**

“விஞ்ஞான சக்தி மனித குலத்திற்கு நிலையான பயன் தராது. ஆன்மிகத்திற்குத்தான் சக்தி அதிகம். அடிகளாருக்கு மாபெரும் ஆன்ம சக்தி உண்டு.”

**இயற்கையும் – செயற்கையும்:**

“எந்த உணவையும் வேகவைத்துச் சாப்பிடுவதால்தான் உடலையும் வேகவைக்க வேண்டியுள்ளது. இயற்கைக்கு மருத்துவன் தேவையில்லை. செயற்கைக்கு மருத்துவன் தேவை.”

**சக்தியை உணரமுடியம்; பார்க்க முடியாது:**

“ஒரே சக்தி ஆக்கத்திற்கும் பயன்படுகிறது. அழிவிற்கும் பயன்படுகிறது. மின்சக்தி பயிர் உற்பத்திக்கும் ஆடை உற்பத்திக்கும் பயன்படுகிறது. அதே சக்தி அணுகுண்டு தயாரிக்கவும் பயன்படுகிறது. எல்லா இயக்கத்திற்கும் சக்தி தேவை.



எல்லாவற்றிற்கும் மேலான ஒரு சக்தி இருக்கிறது. அதனை உணரமுடியுமே தவிர பார்க்க முடியாது. ஒரு பொருளின் தன்மையை உணரும் போதுதான் உங்களால் அந்தப் பொருளை அறிந்துகொள்ள முடியும், பார்ப்பதால் மட்டும் அறியமுடியாது. காற்று, தண்ணீர், உணவு முதலியவற்றைப் பார்த்து அறிய முடியாது. அனுபவித்து உணர்ந்துதான் அவற்றின் தன்மைகளை அறிய முடியும்.”

**வெல்ல முடியாத சக்தி!**

“ மழையை வெல்லலாம்; புயலை வெல்லலாம்; ஆனால் தீயை வெல்ல முடியாது. அந்தத் தீ தான் ஆதிபராசக்தி!”

**காற்றும் – புயலும்:**

“காற்றினால் உயிர் வளர்ச்சியுண்டு. அந்தக் காற்றே புயலாக மாறினால் அழிவும் உண்டு.”

**விஞ்ஞான முன்னேற்றத்தால்...**

“விஞ்ஞான முன்னேற்றத்தால் குறுகிய மனப்பான்மையும், சோம்பேறித் தனமும் தீய எண்ணங்களும், ஆடம்பரச் செலவினங்களுமே உண்டாகும். மனநிம்மதி உண்டாகாது. விஞ்ஞான முன்னேற்றத்தால் இன்று ஒற்றுமை குலைந்து வருகிறது. துப்பாக்கியைக் கொண்டு கொலை, கொள்ளை நடத்துவதோடு மட்டுமல்லாமல் தன்னைத் தானே திருடனாக மாற்றிக் கொள்கிறான்.”

**இயற்கையும் – மனிதனும்:**

“இயற்கை தனக்காக வாழ்வதில்லை. ஆனால் மனிதனோ இயற்கைப் பொருள்களையும், ஆடு, மாடு போன்ற உயிரினங்களையும், தனக்காகப் பயன்படுத்திக் கொள்கிறான். பிறருக்காக வாழமாட்டேன் என்கிறான். இயற்கைப் பொருள்களிடம் உள்ள அந்தப் பண்பாடு மனிதனிடமில்லை.”

**செயற்கைகளால் அழிவுண்டு:**

“இயற்கைக்கு அப்பாற்பட்ட செயற்கைகளினால் அழிவுகள் உண்டு.”

**விஞ்ஞானத்தால் அழிவு உண்டு:**

“விஞ்ஞானத்தால் அழிவு உண்டு. கப்பல், ஆகாயம், நடைபாதை அனைத்திலும் அழிவு உண்டு.”

**பனியும், மழையும், நோயும்:**

"பனியாலும், மழையாலுந்தான் நோய் உண்டாகிறது. இப்பொழுது பனி சுத்தமாக இருப்பதில்லை. தொழிற்சாலைகளாலும், வாகனங்களாலும் தூசு அடைந்துவிடுகிறது. அதனால் உடலுக்குக் கேடு விளைகிறது."

**மருத்துவர்கள் பற்றி:**

"கண்டவர்களிடமெல்லாம் கையைக் காட்டி மருந்து வாங்கிச் சாப்பிடக் கூடாது."

**உடல் வளர்ச்சிக்கு:**

"ஆன்மிகம், கல்வி, தருமம், அறநிலை, அறநெறி இவற்றால் தான் உலகம் வளரும், அடி, தடி, வெடிகுண்டு என்ற நிலைமை தான் இப்போதுள்ளது."

**உன் எண்ணங்களுக்கும் சக்தி உண்டு:**

"ஆணி துருப்பிடித்து விட்டால் அதனைத் தூக்கி எறியவேண்டிய இடத்தில் எறிந்துவிட வேண்டும். அவ்வாறு எறியவில்லையேல் உங்கள் காலிலேயே தைத்துக் கொண்டு துன்பம் கொடுக்கும். அதுபோல உங்கள் மனத்தில் ஏற்படக்கூடிய தீய எண்ணங்களை உடனுக்குடன் மனத்தை விட்டு நீக்கிவிட வேண்டும். அவ்வாறு நீக்கிக் கொள்ளாமற் போனால் அந்தத் தீய எண்ணங்களே உங்களை அழித்துவிடும். உங்கள் எண்ணங்களுக்கும் சக்தியுண்டு."

**இயற்கைக்கு மதிப்பில்லை:**

"உலகத்தில் உள்ள இயற்கைத் தன்மைகளெல்லாம் செயற்கைத் தனங்களாக மாறிவிட்டதன் காரணமாக இன்று இயற்கைக்கு மதிப்பில்லாமற் போய்விட்டது. செயற்கை சேறாக மாறிவிட்டது."

**விஞ்ஞானத்திற்கு வீழ்ச்சி:**

"அறிவிற்கு அப்பாற்பட்ட அதிசயங்கள் ஆன்மிகத் துறையில் ஏற்படும். விஞ்ஞானத்தால் வீழ்ச்சி தான் உண்டாகும்."

**மனிதன் எப்படி உயர்ந்தவன்?**

"மனிதனுக்குத் தான் துப்பாக்கி; மனிதனுக்குத் தான் நோய்; மனிதனுக்குத் தான் காவல். இந்த நிலையில் மனிதன் எப்படி உயர்ந்தவன்?"



**ஆன்மிகம் – இயற்கை தொடர்பு:**

"ஆன்மிகம் வளர்ந்தால் தான் இயற்கையும் இங்கே வளம் பொழியும். இயற்கை பொய்த்துவிட்டால் எல்லாமும் பொய்த்துவிடும்."

**விஞ்ஞானம் – மெய்ஞ்ஞானம்:**

"விஞ்ஞானத்தால் அஞ்ஞானந்தான் உண்டாகும். ஆன்மிகத்தால் தான் மெய்ஞ்ஞானம் உண்டாகும்."

**இயற்கையைக் கட்டுப்படுத்த முடியாது:**

"மழை, இயற்கை இவற்றை அடக்க முடியாது. எந்தக் கட்டுப்பாடும் அவற்றை ஒன்றும் செய்ய முடியாது!"

**இயற்கை வளம்; செயற்கை வளம்:**

"இயற்கை வளத்தால் நீங்கள் வளரமுடியும். செயற்கை வளத்தால் வளர முடியாது. செயற்கை சேறு போன்றது."

**ஆக்கமும் – அழிவும்:**

"மனிதன் ஆக்கப்பூர்வத்திற்காக விஞ்ஞானத்தைக் கண்டுபிடித்தான். ஆனால் அவன் கண்டுபிடித்த விஞ்ஞானம் அவனுக்கே அழிவைத் தேடிக் கொடுக்கிறது. பாதுகாப்பிற்காகக் கண்டுபிடித்த துப்பாக்கி இன்று அவனுக்கே அழிவைத் தேடிக் கொடுக்கின்றது."

**தொழில்துறை நிர்வாகத்துறைகளில் தருமநெறி:**

"தனக்குத்தானே என்ற சுயநலம் இருக்கக் கூடாது. சோம்பேறித்தனம் இருக்கக் கூடாது. தொழில், நிர்வாகம் இவற்றில் தருமநெறி இருக்க வேண்டும்."

**யாருக்குக் காலம்?**

"இனி தரும நெறியைக் காப்பவர்களுக்குத்தான் காலம். அக்கிரமம், ஆணவம் கொண்டவர்களுக்குக் காலமில்லை."

**அணுசக்தியும், ஆன்மிக சக்தியும்:**

"அணுசக்தியினால் தெய்வசக்தியையும், ஆன்மிக சக்தியையும் விஞ்சிவிட முடியாது. அணுசக்தியினால் அவற்றை ஒன்றும் செய்துவிட முடியாது. பாமர மக்களை அழிக்கத்தான் அணு ஆயுதங்களைக் கண்டு பிடித்தானே தவிர காட்டில் உள்ள விலங்குகளை அழிக்க அல்ல!"

**இயற்கையும் – செயற்கையும்:**

“அகல்விளக்கு ஏற்றிய காலத்தில் கண்களுக்கு இத்தனை கெடுதல் இல்லாமல் இருந்தது. அவை விஞ்ஞான வளர்ச்சியினால் மெர்க்குரி விளக்குகளாக மாறியபோது எத்தனை மூக்குக் கண்ணாடிகள் தேவைப்படுகின்றன பார்!”

**எங்கே அழிவு?**

“அக்கிரமும், விஞ்ஞானமும் நிறைந்துள்ள இடத்தில் அழிவு உண்டு.”

**எப்படி உயரவேண்டும்?**

“ஒவ்வொருவரும் உழைப்பாலும், தியானத்தாலுந்தான் உயர வேண்டும்.”

**அரசியலும் – அதிகாரமும்:**

“அரசியலும் அதிகாரமும் வழிநடத்த முடியாது. இவற்றால் அழிவு தான் ஏற்படும். தருமந்தான் வழிநடத்தும். வியர்வை சிந்தி உழைப்பதால் கிடைக்கும் பலன்தான் சிறந்தது.”

**அருளும் – ஒழுக்கமும்:**

“அருளும் ஒழுக்கமும் இல்லையென்றால், கொந்தளிப்புகள் ஏற்படும். அழிவுகள் கொதிக்கத் தொடங்கும் போது தருமத்தாலும், ஆன்மிகத் தாலுந்தான் தணிக்க முடியும்.”

**எது முன்னேற்றம்:**

“ஒரு விதையைப் பாதுகாப்பான ஓரிடத்தில் நட்டுப் பாதுகாத்து வந்தால் தான் அது செடியாகி, மரமாகி உனக்குப் பலன் கொடுக்கும். அதே விதையைப் புறம்போக்கு நிலத்தில் நட்டால் பாதுகாப்பின்றி அழிந்து போகும். அதுபோல மனக்கட்டுப்பாட்டுடனும், ஒழுக்கத்துடனும் வாழ்ந்தால்தான் வாழ்க்கையில் முன்னேறி வர முடியும். ஒழுக்கந்தவறி வாழ்பவன் வாழ்க்கையில் முன்னேறி வர முடியாது. அவனை முன்னேறியவன் என்று தவறாக நினைத்துக் கொள்ளாதே! அவனது முன்னேற்றத்தையும் உண்மையான முன்னேற்றமாகக் கொள்ளாதே! எது முன்னேற்றம் தெரியுமா? மனத்தையடக்கி, புலனையடக்கி என்றைக்கு என்னை நாடி வந்து என் திருவடி நிழலில் கலக்கிறாயோ அதுதான் முன்னேற்றம். மற்ற முன்னேற்றங்கள் முன்னேற்றமேயல்ல.”

**தெய்வ அருள் இல்லாமல் நடக்காது:**

“எந்த வரி போட்டலும், எந்தச் சட்டத்தைத் திருத்தினாலும் வருகிற



ஆபத்துக்களைத் தடுக்க முடியாது. இறைக்கிற கிணறு தான் சுரக்கும். சுரக்கிற கிணறு தான் இறைக்கும். அதற்கும் இயற்கையின் துணை வேண்டும். மழை வேண்டும். இந்த இரண்டும் கிடைக்கத் தெய்வ அருள் வேண்டும்.”

**ஆக்க சக்தி! அழிவு சக்தி:**

“ஒரு சக்தி ஆக்கத்திற்குப் பயன் பட்டாலும் ஒரு சக்தி அழிவிற்குப் பயன்படத்தான் செய்யும். எந்தச்சக்தி எந்த ரூபத்திற்கு மாறும் என்று உங்களால் சொல்ல முடியாது. ஒரு மாவுப் பொருள் பலவிதமான பலகாரங்களாகச் செய்யப் பயன்படுவது போல ஒரு சக்தி பலவிதங்களில் பயன்படும்.”

**மனித உடம்பில் சிவப்பணுக்கள்:**

“இன்றைய உலகில் மனித உடம்பில் உள்ள சிவப்பணுக்களின் வலிமை குறைந்து வருகிறது.”

**இயற்கையோடு மோதினால்...**

“மனிதன் தான் கண்ட விஞ்ஞானத்தினால் குழந்தைகளைச் செயற்கை முறையில் பிறக்க வைக்கிறான். அதனால் கூடவே எய்ட்ஸ் என்ற நோயையும் இயற்கை உண்டாக்குகிறது.

இயற்கையோடு மோதினால் எதிர்விளைவுகளே வந்துசேரும்.”

**கணவன் – மனைவி உறவுகள்:**

“தன் மனைவியிடமே கணவன் திருடுகிற காலம் இது! இருவர்க்கும் ஒரே எண்ணம் இருப்பதில்லை. இருசாராரும் ஆன்மிகத்தில் ஈடுபட்டால் தான் குடும்பத்தில் அமைதி கிடைக்கும்.

கணவன் ஆண்மைக்கும், ஆணவத்திற்கும் இடம் கொடுத்தால் குடும்பத்தில் அழிவு தான் ஏற்படும்.”

ஆன்மா என்பது அமைதிக் கூடாக இருக்க வேண்டும்.”

**விஞ்ஞானத்தினால் அழிவுகளே உண்டாகும்:**

“சந்திரமண்டலம் போகிறேன்; சூரியமண்டலம் போகிறேன் என்று மனிதன் கூறுகிறான். எந்த மண்டலம் போயும் எதையும் சாதிக்க முடியாது. விஞ்ஞானத்தால் அழிவுகளே உண்டாகும்.”

**ஆன்மிகத்துறை: விஞ்ஞானத்துறை:**

“ஆன்மிகத்துறையாக இருந்தாலும், விஞ்ஞானத்துறையாக

இருந்தாலும் இரண்டிலும் விஷத்தன்மையும், போலித்தனமும் கலந்து தான் இருக்கும். புரிந்து கொண்டு எச்சரிக்கையாக வாழ்வது அவரவர் பொறுப்பு.''

### ஏற்றுமதி யாருக்கு?:

''பிறர் ஏற்கக்கூடிய பொருளை ஏற்றுமதி செய்வது தான் ஏற்றுமதி. மனிதர்களுக்குத் தான் ஏற்றுமதி தேவைப்படுகிறது. பறவைகளும், விலங்குகளும் ஏற்றுமதியை நம்பி வாழ்வதில்லை. உணவுப் பற்றாக்குறை ஏற்படும் போது ஓரிடம் விட்டு ஓரிடம் பெயர்ந்து உணவுப் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்கின்றன.''

அறிவுள்ள மனிதர்களிடையே தான் உணவுப் பற்றாக்குறை, ஏற்றுமதி போன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன.''

### விஞ்ஞானத்தால் கொடுக்க முடியாது:

''ஆகாயத்தில் சூரியன், சந்திரன். நட்சத்திரங்கள் எல்லாம் இருக்கின்றன. சூரியனில் உள்ள வெளிச்சத்தையும், சந்திரனில் உள்ள குளுமையையும், விஞ்ஞானத்தால் கொடுக்க முடியாது.''

### அழிந்துவரும் மனித இனம்:

''பறவையினங்களும், விலங்கினங்களும், சுற்றுப்புறச் சூழல்களால் இன்று அழிந்து கொண்டு வருவது போலவே, மனித இனமும் அழிகிற நிலை உருவாகிக் கொண்டு வருகிறது.

பெற்ற குழந்தைகளைப் பாலூட்டிச் சீராட்டி வளர்ப்பதோடு அவர்களுக்குப் பாசத்தையும் ஊட்டி வளர்க்க வேண்டும்.''

### அன்றும் இன்றும்:

''அந்தக் காலத்தில் அடுப்பைச் சுற்றிச் சாணம் தெளித்துக் கோலம் போட்டு அடுப்பேற்றிச் சமைத்துவந்தார்கள். அது ஒரு வேள்விக்குச் சமமாக இருந்தது. இன்றோ "**Gas**''ஐப் பற்ற வைக்கிறீர்கள். எல்லாமே **Gas** ஆக மாறிவிட்டது. அப்போது இருந்த அமைதி இப்போது இல்லை.

எவ்வளவுக் கெவ்வளவு விஞ்ஞானத்தை அணுகுகிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு அழிவு தான் ஏற்படும்.''

### விஞ்ஞானம் – மெய்ஞ்ஞானம்:

''விஞ்ஞானம் விபரீத விளைவுகளை ஏற்படுத்தும். மெய்ஞ்ஞானம் தான் உங்கள் அஞ்ஞானத்தைப் போக்கும்''



### ஒரு பங்கு வளர்ச்சி; மூன்று பங்கு அழிவு:

''விஞ்ஞானத்தால் ஒரு பங்கு வளர்ச்சி ஏற்பட்டால் மூன்று பங்கு அழிவும் ஏற்படும். இயற்கைச் சூழ்நிலையில் தான் வளர்ச்சி ஏற்படும்.''

### விஞ்ஞான வளர்ச்சியின் முடிவு:

''இயற்கையையொட்டி வாழக்கற்றுக் கொள்ள வேண்டும். சுகாதாரக் கேடுகள் அதிகரித்து வரும். நகரங்கள், நரகங்களாக மாறிவருகின்றன.''

### விஞ்ஞானமும் – ஆன்மிகமும்:

''இயற்கை நினைத்தால்தான் இங்கே எந்த விஞ்ஞானமும் வளர முடியும். பார்வைக்கு விஞ்ஞானம் அழகுதான். ஆனால் எந்த ஆதாயமும் இல்லை. ஆனால் ஆன்மிகம் இல்லையென்றால் எந்த ஆதாரமும் இல்லை.''

### விண்வெளி ஆராய்ச்சி:

''விஞ்ஞானத் துறைகளில் அதிகமான பொருட்செலவு செய்வதால் உனக்கும் நஷ்டம். நாட்டிற்கும் நஷ்டம். விண்வெளி ஆராய்ச்சிகளால் வீண் செலவு ஆகுமே தவிர, வேறு ஒரு பயனும் விளையப் போவது இல்லை. விண்வெளி என்பது வெறும் வெட்டவெளிதானே தவிர அங்கு வேறு எதுவும் கிடையாது.''

### அதிகமான செலவு:

''விஞ்ஞானத்தைச் சார்ந்து வாழ விரும்பினால் ஒரு ரூபாய்க்குப் பத்து ரூபாய் செலவு செய்து வாழ வேண்டிய நிலைமைதான் ஏற்படும்.''

### ஏற்ற மாத்திரை:

''மனவளம் இருந்தால்தான் வாழ்க்கையில் நல்லது நடக்கும். வெறும் மாத்திரை சாப்பிட்டு ஆரோக்கியமாக வாழ்ந்துவிட முடியாது. மாத்திரை ஏமாத்திரை ஆகும். ஏற்ற மாத்திரை ஆன்மிகமே!''

### சோம்பேறித்தனம்:

''விஞ்ஞான நாகரிகம் சோம்பலை வளர்த்துக் கொண்டு வருகிறது. சோம்பேறித் தனமான வாழ்க்கை முறையை வளர்த்துக் கொள்ளக் கூடாது. சோம்பலும் சோர்வும் சோற்றுக்கு வழியில்லாமல் செய்து விடும்.''

**உங்கள் அழிவுக்கு நீங்களே காரணம்:**

“நீயே மின்சாரம் கண்டுபிடித்தாய். விஞ்ஞான வசதிகளைக் கண்டு பிடித்தாய். அவற்றால் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று நினைக்கிறாய். அவற்றின் மூலம் நீயே உன் அழிவைத் தேடிக் கொள்கிறாய்.”

**அன்று பத்தியம்: இன்று கத்தி:**

“விஞ்ஞானம் என்ற பெயரில் தனக்குத் தானே கல்லைப் போட்டுக் கொள்கிறீர்கள். முன்பெல்லாம் பிறப்பிற்குப் (பிரசவத்துக்கு) பத்தியம் தேவைப்பட்டது. இப்போது பிறப்பிற்குக் கத்தி தேவைப்டுகிறது.”

**அறிவும் – அழிவும்:**

“அறிவோடு அழிவும் நெருங்கி வருகிறது.”

**உழவன்: வண்டி ஓட்டி:**

“உழுகிறவன் வண்டி ஓட்டுவான். வண்டி ஓட்டுபவன் உழுகிற காலம் வரும்.”

**சூரிய வம்சம்: சந்திர வம்சம்:**

“அந்தக் காலத்தில் பூமியை ஆண்ட மன்னர்கள் நான் சூரிய வம்சம், அவன் சந்திர வம்சம் என்று சொல்லிக் கொண்டு தங்களுக்குள் அடித்துக் கொண்டு மடிந்து போனார்கள்.

அது போதாது என்று இப்போது விண்வெளி ஆராய்ச்சி என்ற பெயரில் சூரிய மண்டலத்திற்கும் சந்திர மண்டலத்திற்கும் போகிறேன் என்று போகிறான்.

இவர்களும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளப் போகிறார்கள்.

**புதுப்புது வியாதி:**

“இனி மக்களுக்கு வரும் வியாதிகள் புதிது புதிதாக இருக்கும்.”

**உழைக்காமலே ஊதியம்:**

“நான் உழைக்க மாட்டேன். ஆனாலும் எனக்குரிய ஊதியத்தைக் கொடுத்துவிடு! என்று அவனவனும் கேட்கிற நிலை உருவாகி வருகிறது. அடுப்புக்கும் துடுப்புக்கும் வேலையில்லாமல் போய்விட்டது.”



**விஞ்ஞானமும் வளர்ச்சியும்:**

“விஞ்ஞானத்தால் மட்டும் நீங்கள் வளர்ந்து விட முடியாது. விஞ்ஞானம் வளர வளர நோய்களும் அதிகம் வளரும்.”

**எதிர் வரும் காலம்:**

“இன்று நல்லவனெல்லாம் கள்ளனாக மாறி வருகிறான். வருங்காலத்தில் இந்த உலகத்தில் இருப்பது போதும்; கொடுத்தது போதும் நமக்குப் பொன் பொருள் வேண்டாம், மண் பாண்டமே போதும் என்று நினைக்கக் கூடிய நிலைமை வரும். பணம் பிணத்துக்குச் சமம்; மனம் கழுகிற்குச் சமம்.”

**ஆன்ம வளர்ச்சி: விஞ்ஞான வளர்ச்சி:**

“ஆன்ம வளர்ச்சி குறையாமல் கட்டுக் கோப்பாக இருக்க வேண்டும். விஞ்ஞான வளர்ச்சி வீணான விளைவுகளையே உண்டாக்கும். ஆதலின் ஐம்புலன்களைக் கட்டுப்படுத்த வேண்டும்.”

**இயற்கையும் – செயற்கையும்:**

“இயற்கையில் உள்ள சூரியன் தன் கடமைளைச் செய்கிறது. ஆயினும் அதுவும் ஒரு நாள் மறைக்கப் படுகிறது. ஆனாலும் அந்த இயற்கையினால் எந்த எதிர்விளைவும் பாதிப்பும் ஏற்படாது.

விஞ்ஞானத்தால் பாதிப்பும் எதிர்விளைவுகளும் ஏற்படும்.”

**எல்லாத் துறைகளிலும் அழிவு:**

“இயற்கைக்குச் சக்தி உண்டு. நீங்கள் உற்பத்தி செய்கின்ற மின்சார உற்பத்தி; எரி வாயு உற்பத்தி, பூச்சி மருந்துகள் ஆகியவை அளவுக்கு மீறி உற்பத்தியாகும் போது அழிவைத்தான் உண்டாக்கும்.”

எல்லாத் துறைகளிலும் அழிவு உண்டு. வெட்டு, குத்து, கொலை ஆகியவற்றையே விளையாட்டாக நினைக்கும் ஒரு காலம் வரலாம்.”

**விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்:**

“கல்லும் கற்கண்டும் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாக இருந்தாலும் இரண்டிற்கும் வித்தியாசம் உள்ளது.

கல் போன்றது விஞ்ஞானம்; கற்கண்டு போன்றது மெய்ஞ்ஞானம்.

விஞ்ஞானத்தினால் எதிர் விளைவுகள் உண்டு. மெய்ஞ்ஞானத்தினால் எதிர் விளைவுகள் உண்டாகாது.”

**சோம்பேறித்தனம்:**

"மின்சாரத்தை மூலப் பொருளாக வைத்துக் கொண்டு சோம்பேறித்தனமாக வாழக் கூடாது."

**விஞ்ஞான வசதிகட்கு ஆசைப்பட்டு...**

"அடுப்பில் மண்பாண்டம் வைத்துத் தண்ணீர் ஊற்றிக் கொதிக்க வைத்துப் பிறகு திட்டமாக அரிசி போட்டுத் திட்டமாக எரிய விட்டால் சோறும் திட்டமாக வேகும்.

அடுப்பை அதிகமாக எரிய விட்டால் என்ன ஆகும்? சோறு பொங்கி வழிந்து அடுப்பையே அணைத்து விடும்.

அதுபோல விஞ்ஞான வசதிகளுக்கு ஆசைப்பட்டுச் சீக்கிரம் பலனடைய வேண்டுமென்று நினைத்துச் செயல்பட்டால் அழிவிலே தான் கொண்டு போய் விடும்.

இயற்கை இயற்கை தான்! தெய்வம் தெய்வம் தான்! ஆன்மா ஆன்மா தான்!"

**பற்றாக்குறை நீடிக்கும்:**

"படிப்புப் பெருகி என்ன முன்னேற்றம் கண்டீர்கள்?

ஆக்கத்திற்காகக் கண்டு பிடித்த அனைத்தும் அழிவு வேலைக்கே பயன்படுகின்றன.

தொழிற்சாலைகள் பெருகியும் பற்றாக்குறை நீங்கவில்லை. எதிர் காலத்திலும் இந்தப் பற்றாக்குறை நீடிக்கும்.

என்ன படிப்பு பெருகினாலும் என்ன தொழில் வளர்ந்தாலும் எல்லாம் ஒரு சாண் வயிற்றுக்காகவே!"

**சோப்பால் பயனில்லை:**

"சோப்பை அதிகம் பயன்படுத்தினால் சொறி சிரங்குதான் அதிகமாகும். தண்ணீர் ஊற்றி நன்கு தேய்த்துக் குளித்தால் தான் அழுக்கு போகும்.

மேலுக்குச் சோப்பு போடுவது போல மேலோட்டமாக வாழ நினைக்கக் கூடாது. உழைத்து உயர வேண்டும்."

**வேதனையும் – சோதனையும்:**

"விஞ்ஞானத்தால் வேதனைகளும் சோதனைகளும் உண்டு. விஞ்ஞானத்தால் எதையும் படைக்கலாம். ஆனால் நல்ல குணத்தைப் படைக்க முடியாது. விஞ்ஞானத்தாலேயே பல அழிவுகள் உண்டு.



நீங்கள் செய்யும் தெய்வ வழிபாடுதான் உங்கள் வாழ்க்கை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். ஆன்மிகம் ஒன்றே அமைதிக்கு வழி வகுக்கும்.

அரசியல் அடிதடிகளை மட்டுமே உண்டாக்கும். ஆன்மிகம் ஆனந்தத்தையும் கொடுக்கும். அமைதியையும் கொடுக்கும்.

இனி அரசியல் அநாதை ஆகி விடும்.

சமுதாயத்தில் தொண்டு மனப்பான்மை இல்லையேல் குண்டுதான் கிடைக்கும்."

**எண்ணங்களும் – பிரச்சனைகளும்:**

"தூய்மையான பசும்பால் அருந்தினால் மனிதர்களும், குழந்தைகளும் ஆரோக்கியமாக இருக்க முடியும். அந்தப் பாலையே காபியாகவும்; டீயாகவும் மாற்றி அருந்தும்போது உடம்பின் ஆரோக்கியம் கெடுகிறது. இரத்தமும் கெடுகிறது.

அதுபோல மனிதன் தூய்மையான எண்ணங்களோடு இருக்கும்வரை பிரச்சினை இல்லை. பாலுடன் காபித்தூள், டீ தூள் கலப்படம் ஆவது போல தீய எண்ணங்கள் கலப்படம் ஆகும்போதுதான் பிரச்சனைகள் உருவாகின்றன."

**உலகம் போகிற போக்கு:**

"இன்றைய உலகத்தில் 100-க்கு 110 பங்கு பொறாமை அதிகமாகிவிட்டது. இனி உழைப்பவனையும் உழைக்கவிடமாட்டான். பிழைப்பவனையும் பிழைக்கவிட மாட்டான்.

இனி வரும் காலங்களில் கடன் கொடுப்பதும் கஷ்டம், வாங்குவதும் கஷ்டம்."

**தீய சக்திகள் பெருகிவிட்டன!**

"இனி எந்த அரசாங்கமும் எந்த நன்மையும், பாதுகாப்பும் அளித்து விட முடியாது. உனக்குப் பாதுகாப்பு நீயே தான். தீய சக்திகள் பெருகிவிட்டன. தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் காலம் நெருங்கி விட்டது. தகாதவனெல்லாம் தகாத வேலைகள் செய்து கொண்டிருக்கிறார்கள்."

**இயற்கைக்கு ஈடு இணை கிடையாது:**

"இன்று விஞ்ஞான வளர்ச்சியால் மின்சார அடுப்பில் சமைத்துச் சாப்பிடுகிறாய். மின்சார சுடுகாட்டிற்குப் போகும் அளவிற்கு வளர்ந்திருக்கிறாய். மரணம் என்ற இயற்கையை உன்னால் வெல்ல

முடியாது. நீ செயற்கையாக எதைக் கண்டு பிடித்தாலும் இயற்கைக்கு ஈடு இணை கிடையாது.''

**பல ரூபங்களில் நோய் வரும்:**

''விஞ்ஞான அறிவும் முன்னேற்றமும் பெருகப் பெருகப் பல ரூபங்களில் நோய்களும் பெருகும்.''

**விஞ்ஞானம் வளர்ந்தாலும்...**

''மனிதர்களிடம் தீ வினைகளும் தீய எண்ணங்களும் செயல்படும் வரை, விஞ்ஞானத்தால் பலன் இல்லை, அன்பு, பண்பு, பாசம் இருந்தால் எதிலும் பலன் கிடைக்கும்.''

**எதிர் காலத்தில்...**

''தேடுவதைத் தேடிக் கொண்டே இருக்க வேண்டும்; வேண்டுவதை வேண்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

உணவு இருக்கும்; பசி இருக்காது. பசி இருக்கும்; உணவு கிடைக்காது.

சொல்வதற்கு ஆள் இருக்கும். கேட்பதற்கு ஆள் இருக்காது. சொல்வதற்குப் பயனும் இருக்காது.

எல்லா அழிவுகளும் ஏற்பட்டுப் புதிய வாழ்க்கை முறை அமையும்.''

**தேவையும் – உழைப்பும்:**

''உலகில் மக்கள் தொகை பெருகப் பெருகத் தேவைகள் அதிகமாகின்றன. தேவைக்கேற்ற உழைப்பு தேவை. உழைப்பு குறைவதால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. பசி வந்தால் பத்தும் பறந்துவிடும் என்கிறார்கள். பத்தும் பறந்தால் என்ன ஆகும்?''

**மனிதன் உயர்ந்தவனா?**

''ஊர்வன, பறப்பனவாகிய உயிர்களுக்கு இயற்கையின் சீற்றமும் அழிவும் முன் கூட்டியே தெரிந்து பாதுகாப்பு தேடிக் கொள்கின்றன. ஆறறிவு பெற்றதாகக் கூறப்படும் மனிதனுக்குத் தெரியவில்லை. விஞ்ஞானத்தால் அழிவு உண்டு.''

**விஞ்ஞானத்தால் தடுக்க முடியாது:**

''பூமத்திய ரேகையை வைத்து விஞ்ஞானத்தில் என்னதான் ஆராய்ச்சி செய்தாலும், உலகத்தில் உள்ள போரையும், அழிவுகளையும், இழப்புகளையும் தடுக்க முடியாது.''



**என்ன கண்டு பிடித்தாலும்...**

''குழந்தை பிறப்பதும் மழை பெய்வதும் எப்போது என்று யார்க்கும் தெரியாது என்பார்கள்.

அந்தக் காலத்தில் காற்று தூய்மையாக இருந்தது. நல்ல மழை பொழிந்தது. இப்போதோ புகை மண்டலமே அதிகரித்து விட்டதால் நல்ல மழை பெய்வதில்லை.

விஞ்ஞானத்தின் மூலமாக என்ன பொருள்களைக் கண்டுபிடித்தாலும் காப்பற்றிக் கொள்ள முடியாது.

பணம், பொருள் எதுவும் வேண்டாம். எப்படியாவது உயிரைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்ற நிலை வந்து விட்டது.''

**உயர்வும் – அழிவும்:**

''இன்றைய உலகம் விஞ்ஞானத்தால் எவ்வளவுக் கெவ்வளவு உயர்ந்து வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அழிவுகளையும் சந்திக்கிறது.''

**எண்ணங்களும் – இயற்கையும்:**

''நினைப்பவை எல்லாம் நல்லதாக நினைக்க வேண்டும். அவ்வாறு நினைக்கா விட்டால் அழிவுதான். பழையபடி மாட்டு வண்டி கூடாரம் போன்ற நிலைமைகள் தான் ஏற்படும்.

படித்துப் பட்டம் வாங்கி என்ன பயன்? அதே மிருகத்தன்மைதான் உள்ளது.

என்ன படித்தாலும் உங்கள் எண்ணம் சமன்பாடு உடையதாக இருந்தால்தான் இயற்கையும் சமன்பாடு உடையதாக இருக்கும்.''

**விஞ்ஞானம் வளர்த்த தீமை:**

''விஞ்ஞானம் வளர வளர உண்மையும் ஒழுக்கமும் குறைந்து விட்டன.''

**விஞ்ஞான வளர்ச்சி: பிரச்சனைகள்:**

''மிருகங்கள் தமக்கு உணவு கிடைத்தால் ஒரு வாரம் வைத்துச் சாப்பிடுகின்றன. அவை தினமும் குளிப்பது இல்லை. மனிதன் தினமும் குளிக்கிறான். மூன்று வேளையும் உண்கிறான். அதே உணவையும் வெவ்வேறு வகையில் தயாரித்து உண்கிறான்.

விஞ்ஞானம் புதுப்புதுப் பொருள்களைக் கண்டு பிடித்து மனிதனது தேவைகளைப் பெருக்கி விட்டது. ஆசைகளையும் வளர்த்து விட்டிருக்கிறது.

மனிதனுக்குத் தேவைகள் பெருகப் பெருக ஆசைகள் பெருகுகின்றன. ஆசைகள் பெருகப் பெருகப் பிரச்சனைகள் அதிகரிக்கின்றன. மிருகங்களின் வாழ்வில் இத்தகைய பிரச்சனைகள் இல்லை.''

**எந்த விஞ்ஞானமும்...**

''எந்த விஞ்ஞானமும் உன்னைக் காப்பாற்றாது. ஆன்மிகம் தான் உன்னைக் காப்பாற்றும்.''

**ஆன்மாவும் – ஆசைகளும்**

''உங்கள் உள்ளத்தே இருக்கும் ஆசைகளை ஆன்மா அழிக்க வேண்டும். ஆனால் இப்போதோ ஆசைகள் ஆன்மாவை அழிக்கின்றன.

ஆசைகள் ஆன்மாவைப் பக்குவப்படுத்துவது இல்லை. ஆசையை ஆன்மா அடக்க வேண்டும்.''

**விஞ்ஞானம் வளர்ந்திருந்தாலும்...**

''ஒரு பொருளிலிருந்துதான் சக்தி கிடைக்கின்றது. உன் உடம்பிலும் சக்தி செல்களாக(Cells) செயல்படுகின்றது.

மனித இதயத்தையே மாற்றுகிற அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கலாம். ஆனாலும் உங்கள் உடலில் செல்கள் செயல்படுவதையொட்டியே உங்கள் மனம் வெளியில் செயல்படுகின்றது.''





# 10. புலனடக்கம் - கட்டுப்பாடு

**புலனடக்கம்:**

''ஐந்து விரல்களும் ஒன்றுபோல இருப்பதில்லை; ஐம்புலன்களையும் ஒன்றாகக் கட்டுப்படுத்த முடியாது. கட்டுப்படுத்த முடியாத அந்த ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும். அதற்காக நீங்கள் முயற்சியாவது செய்ய வேண்டும்.''

**சல்லடை எண்ணங்கள்:**

''உள்ளத்தில் சல்லடை எண்ணங்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உள்ளத்தில் தொய்வு இருக்கக் கூடாது.''

**கசப்பும் – இனிப்பும்:**

''பிறப்பு, வளர்ச்சி, இறப்பு என்று உலகியற்கை அமைந்திருப்பது போல, ஆன்மிக உணர்வுகளிலும் கசப்பும் இனிப்பும் கலந்து தான் இருக்கும்.

காற்றால் அசைவுநிலை ஏற்படுவது போல உள்ளத்தில் பெருகும் அன்பால் ஆன்மா அசைகிறது.

உடல் உறுப்புகளாலும், உணவு வகைகளாலும் உயிர்கள் தமக்குள் வேறுபடுகின்றன. ஆயினும் அனைத்து உயிர்கட்கும் ஆன்மா ஒன்று தான்.''

**நோய்களுக்கும் – துன்பத்திற்கும் காரணம்:**

''சிறுசிற கற்கள் சேர்ந்து இறுதியில் பெரிய மலை ஆகின்றது. சிறுசிறு பாவங்கள் சேர்ந்து இறுதியில் பெரிய சுமை ஆகிறது. தலையில் நீர் சேர்வதால் வலி ஏற்படுகிறது. அந்த நீர் வியர்வையாக வெளியேறிய பிறகு உடல் கலகலப்பாகிறது. அதுபோல உள்ளத்தில் அழுக்குகள் சேர்ந்து சுமையாக மாறாதபடிப் பார்த்துக்கொள்ள வேண்டும். உள்ளத்தில் சேர்ந்த அழுக்குகள் நோயாகவும், துன்பமாகவும் வெளிப்படுகின்றன.''

**மனிதன் எதற்கு அடிமை?**

“மனிதன் பணத்திற்கு அடிமையாகக் கூடாது. தருமத்திற்கும், உடல் உழைப்பிற்கும் தான் அடிமையாக இருக்க வேண்டும்.”

**கட்டுப்பாடு தேவை:**

“உள்ளம், உடல், உணவு ஆகியவற்றில் ஒவ்வொருவருக்கும் கட்டுப்பாடு இருக்க வேண்டும். உணவில் கட்டுப்பாடு இருந்தால் உன் உடல் கட்டுப்பாட்டுடன் இருக்கும்; தியானக் கட்டுப்பாடு இருந்தால் உன் உள்ளம் கட்டுப்பாட்டுடன் இருக்கும்.”

**துடுப்பு இல்லாத படகுகள்:**

“நீங்களெல்லாம் துடுப்பு இல்லாத படகுகள், உங்களைக் கரைசேர்க்க வேண்டியது என் பொறுப்பு.”

**பக்குவம் வேண்டும்:**

“உடல் கட்டுப்பாட்டிற்கும் பக்குவம் வேண்டும். ஆசைக்கும் பக்குவம் வேண்டும். ஒருவரை நம்புவதற்கும் பக்குவம் வேண்டும்.”

**ஆன்மபலம் பெற:**

“ஆன்ம பலம் பெற உணவைக் கட்டுப்படுத்து! மனத்தைக் கட்டுப்படுத்து! விரதம் இரு! பாதயாத்திரை மேற்கொள்! இங்கே எந்த மாத்திரையும் வேலை செய்யாது மகனே! சக்தி மாத்திரை தான் வேலை செய்யும்.”

**நோயற்ற வாழ்வுக்கு:**

“உன் உள்ளம் சுத்தமாக இருந்தால் நோய் இருக்காது.”

**எனக்குத் தெரியாது என்று எண்ணிவிடாதே:**

“நான் அறியமாட்டேன் என்று உன்னையே நீ ஏமாற்றிக் கொள்ளாதே! என் அருள் உனக்குக் காலம் காலமாக இருக்க வேண்டும். ஒரு மூன்று நிமிஷ சந்தோஷத்துக்காக உன்னை இழந்துவிடாதே!”

**எண்ணமும் அழிவும்:**

“மனிதனுக்குத் தகாத பல எண்ணங்கள் தோன்றுகிறபோது கூடவே அழிவும் தோன்றும்.”

**பந்தபாசத்தால் அழிவு:**

“மனித இனத்தில் குழந்தைகளைப் பந்த பாசத்தோடு



வளர்க்கிறார்கள். ஆனால் பறவையினமும் விலங்கினமும் குறிப்பிட்ட காலம் வரை தான் பந்த பாசத்தோடு வளர்கின்றன. குஞ்சுக்குச் சிறகு முளைத்துத் தானே இரைதேடிக் கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்கின்றவரையில் தான் பாசத்துடன் வளர்க்கின்றன. தன்னுடைய ஆக்கத்திற்காகத் தான் இப்படிக் குழந்தைகளும் குஞ்சுகளும் வளர்க்கப்படுகின்றன. ஆயினும் ஒரு காலத்தில் அவை அழிந்தே தீரும். ஆகவே மிதமிஞ்சிய பற்று கவலைகளைப் பெருக்கும்.”

**உள்ளம் என்ற பாத்திரத்துக்குத் தக்கபடி:**

“ஆற்றில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது. பெரிய குடத்தை எடுத்து வருபவன் அதில் தண்ணீர் எடுத்துக் கொள்கிறான். சிறிய குடத்தை எடுத்து வருபவன் அதற்குத் தக்கபடி தண்ணீர் முகந்து செல்கிறான். மண் செப்பை எடுத்து வருபவன் அதற்குத் தக்கபடி தண்ணீர் முகந்து செல்கிறான். எதையுமே எடுத்து வராதவன் கையாலாவது அள்ளிக் குடிக்கலாம் என்று அள்ளிக் குடிக்கிறான். உங்கள் உள்ளம் எனும் பாத்திரம் எப்படியோ அப்படியே அந்த அளவுக்குத் தக்கபடி உங்களுக்குப் பலன்களும் கிடைக்கும். எனவே பொறாமை அழுக்கு ஆகியவற்றைத் தவிர்த்துக் கொண்டு வா!”

**புலனடக்கமும் – அதன் சக்தியும்:**

“உன்னுடைய ஐம்புலன்களை அடக்கினால் பஞ்சபூதங்களையும் அடக்கலாம். பஞ்சமா பாதகங்களையும் அடக்கலாம்.”

**மருந்து இல்லை:**

“எந்த வலிக்கும் மருந்து கொடுக்கலாம். ஆனால் உன் உள்ளத்தில் உள்ள அழுக்குக்கும், உன் மனநிலைக்கும் மருந்து கிடையாது. மனக்கட்டுப்பாடு இருந்தால் மார்க்கம் உண்டு. உணவுக்கட்டுப்பாடு தேவை. மனக்கட்டுப்பாடு இருந்தால் என் அருள் உண்டு; பொருள் உண்டு!”

**தன் எண்ணமே பகை:**

“தன் கண்ணே தனக்கு ஊறு விளைவிக்கும். அவனவன் எண்ணங்களே அவனவனுக்கு எமனாக மாறும்.”

**தன்னை மறந்த நிலை:**

“தன்னை மறந்த நிலை அடையவேண்டும் என்பதற்காகப் போதைப் பொருட்களை உட்கொள்கிறார்கள். அவற்றை உணவிலும் சேர்த்துக் கொள்கிறார்கள். இத்தகைய முறைகளினால் தன்னை

மறந்த நிலை உண்டாகும். ஆயினும் அவை சிறந்தவை அல்ல; புலன்களை அடக்குவதால் ஏற்படக்கூடிய தன்னை மறக்கும் நிலையே மேலானது. அதனால் நிலைத்த பயன் உண்டு.''

### எது உனக்குப் பாதுகாப்பு?

''இனி எந்தத் துறையிலும் அழிவு உண்டு. அதிலிருந்து விடுபட விரும்புகிறவன் ஆன்மிகத்தில் ஈடுபாடு வைத்துக் கொண்டு மனக்கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ள வேண்டும்.''

### தன்னை மீறும் நிலை:

''குடிக்கிறவன் தன்னை மீறிக் குடிக்கிறான். அதனால் அழிகிறான். தன்னை மீறுகின்ற நிலைமை எல்லாவற்றிலும் உண்டு. ஆன்மிகத்திலும் தன்னை மீறிய நிலை உண்டு. அது பயனுள்ள நிலையாகும்.''

### கண் திருஷ்டியும் பொறாமையும்:

''மனிதர்கள் எல்லோர்க்கும் கண் திருஷ்டி உண்டு. பொறாமை பொச்சரிப்பு உண்டு. உலக நடைமுறையில் இவற்றை அனுபவித்துத் தான் ஆகவேண்டும். வழியில் பாம்பு வருகிறது என்றால் அதன்மேல் கால் வைக்கக்கூடாது. அதைப்பார்த்து ஒதுங்கித்தான் செல்லவேண்டும். அதுபோலப் பொறாமை, பகைமை கண்ட இடங்களில் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும்.''

### நீண்ட ஆயுளுக்கு வழி:

''மனக்கட்டுப்பாடு - உள்ளக்கட்டுப்பாடு - எண்ணக் கட்டுப்பாடு ஆகியவை இருக்குமானால் பத்து வருடம் வாழ்கிற ஒருவன் கூடுதலாக முப்பது வருடம் வாழலாம்.''

### தீயதைக் கேட்பதும் பாவம்:

''தீமையான ஒன்றைச் சொல்வதும் பாவம். அதனைக் கேட்பதும் பாவம்! இவை குருவிக்கூட்டைக் கலைப்பதற்குச் சமம்.''

அடிகளார் பற்றியும், என்னப் பற்றியும் எவன் தூற்றினாலும் ஒரு காதினால் வாங்கி மறு காதினால் விட்டுவிடு!''

### ஆன்மிகத்துறையில்:

''ஆன்மிகத்துறையில் ஈடுபாடு கொண்டுள்ள ஒவ்வொருவர்க்கும் அமைதி, தியானம், மனக்கட்டுப்பாடு, ஐம்புலக்கட்டுப்பாடு அமைந்திருத்தல் வேண்டும். பொறுமை பொறாமையாக மாறக்கூடாது. உள்ளன்புடனும் ஒரே எண்ணத்துடனும் செயல்பட வேண்டும்.''



### கடவுள் பெயரைச் சொல்லிக்கொண்டு:

''இறைவன் பெயரைச் சொல்லிக் கொண்டு தவறு செய்தால் இறைக்கு இரையாக வேண்டியதுதான்.''

### எதிலும் கட்டுப்பாடு தேவை:

''காது, மூக்கு, கண் எதற்காகப் படைக்கப்பட்டுள்ளனவோ அதற்காகவே அவற்றைப் பயன்படுத்த வேண்டும். அழிவிற்காக அவற்றைப் பயன்படுத்தக் கூடாது. எல்லவாற்றையும் அடிக்கடி கடிவாளம் இட்டுப் பூட்டிவைக்க வேண்டும். பணம் சம்பாதிப்பதிலும், தொழில் செய்வதிலும், மதிப்பைத் தேடுவதிலுமே கவனம் செலுத்தக் கூடாது.''

### கோபமும் – குழப்பமும்:

''கோபம் வரும்போது குழப்பமும் சேர்ந்து வரும். கோபமும் குழப்பமும் இரண்டும் சேரும்போது ஒருவன் குணமே மாறும்.''

### மண்வளம்; மழைவளம்; மனவளம்:

''மலையாகவும், கட்டாந்தரையாகவும் காணப்படுகின்ற பூமி, மழை பெய்தவுடன் பச்சைப் பசேல் என்று ஆகிறது. செடி உற்சாகமாக வளர்கிறது. செடியாகவும் மரமாகவும் செழிப்பாகவும் வளர்கிறது. மறுபடியும் கோடை வருகிறபோது வறண்டு விடுகிறது.

மரம், செடி, கொடிகள் செழிப்பாக வளர்வதற்கு மண்வளமும் தேவை. மழைவளமும் தேவை.

மனித இனம் செழிப்பாக வளர்வதற்கு மன வளம் தேவை.

செடி, கொடி வளர்ச்சிக்கு வேர், சீதோஷ்ண நிலை சாதகமாக அமையவேண்டும். அதுபோலவே மனிதனுக்குப் பொன், பொருள், சொத்து இருந்தாலும் ஐம்புலன்களை அடக்குகிற மனவளம் சாதகமாக அமையவேண்டும்.''

### ஊழ்வினைக் கொடுமை குறைய...

''சென்ற பிறப்பின் ஊழ்வினையைத் தான் நீ இப்பொழுது அனுபவிக்கிறாய். உன் மனத்தைக் கட்டுப்படுத்தி வந்தால் ஊழ்வினைக் கொடுமை குறையும்.''

### ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தினால்:

''ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி வாழ்வதற்கு நீங்கள் முயல வேண்டும். நீங்கள் ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தும் வலிமை பெற்றால் உங்கட்கு ஐம்பூதங்களும் கட்டுப்படும்.''

**மனமும் – பணமும்:**

“மனத்தையும் பணத்தையும் ஒரே அளவில் சீராக வைத்துக்கொள்ளவேண்டும்.”

**வெளியேற்றப்படும் கழிவுகள்:**

“மனிதர்களிடம் உள்ள கழிவுப் பொருள்கள் வெளியேறியே ஆகவேண்டும். பெண்களுக்கு மாதப்போக்கு என்ற கழிவு வெளியேறுகிறது. அந்தக் கழிவினால் கரு உருவாகிறது. அதுபோல ஆன்மிகத்தில் ஈடுபடும்போது உள்ளத்தில் படிந்துள்ள கழிவுகளும் வெளியேறியே ஆகவேண்டும்.”

**கட்டுப்பாடும் – வேகமும் – மௌனமும்:**

“இயற்கையில் எந்தப் பொருளைக் கட்டுப்படுத்தினாலும் அதனால் வேகம் அதிகரிக்கும். ஓடிவரும் தண்ணீரைக் கட்டுப்படுத்துகிற போது வேகம் அதிகரிக்கிறது. பேச்சுரிமையைக் கட்டுப்படுத்துகிற போது கோபம் வருகிறது. அரசாங்கம் குடும்பத்தைக் கட்டுப்படுத்துகிற போது காம உணர்ச்சி அதிகமாகிறது. எனவே, வேகத்தைக் கட்டுப்படுத்த மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.”

**பிரச்சனைகள் தீர மௌனம்:**

“வாழ்க்கையில் பிரச்சனைகள் உண்டு. பிரச்சனைகளுக்கு மௌனத்தால் தான் தீர்வு காண வேண்டும். ஆக்குவதும் நானே! அழிப்பதும் நானே! உங்கள் வாழ்க்கையில் கட்டுப்பாடுகள் தேவை! கட்டுப்பாடுகள் இல்லாமல் வாழ்ந்துவிட்டதால் தான் பிரச்சனைகள்! எனவே உங்கள் கடமையைத் தவறாமல் செய்துகொண்டே வரவேண்டும்.”

**எதற்கும் பக்குவம் வேண்டும்:**

“கோழி முட்டையிடும் போது பக்குவப்படாமல் முட்டையிடுமானால் அது தோல் முட்டையாகத் தான் இருக்கும்.

ஒரு தாய் குறைப்பிரசவத்தோடு குழந்தை பெற்றால் அது வளர்ச்சியடையாத குழந்தையாகத் தான் இருக்கும்.

பானை செய்யும் குயவனுக்கும் பக்குவமான சூழ்நிலை தேவை! அந்தப் பானை செய்வதற்கும் ஈரப்பதம், காற்று, சூரிய வெப்பம் போன்றவை தேவை. பக்குவம் இல்லையென்றால் அது முழுப்பானையாக உருவாக முடியாது.

ஆகவே எல்லாவற்றிற்கும் பக்குவம் தேவை. அதுபோல



ஆன்மிகத்துறையில் ஈடுபடும் போது மனப்பக்குவம் தேவை. உங்கள் மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டிப் பத்து நிமிடங்களாவது நீங்கள் தியானம் பழகிவரவேண்டும். இவ்வாறு மனத்தைக் கட்டுப்படுத்தி வருவீர்களேயானால் மரணத்தையும் சகஜமாக நினைக்கக்கூடிய பக்குவ நிலை உங்களுக்கு ஏற்படும்.”

**குழப்பமும் எதிர்ப்பும் வருகிறபோது:**

“எப்போதெல்லாம் உன் மனம் குழம்புகிறதோ - எப்போதெல்லாம் உனக்கு எதிர்ப்பு வருகிறதோ - அப்போதெல்லாம் பத்து நிமிடம் மௌனத்தைக் கடைப்பிடி.”

**உன்னிடம் அருளை நிரப்ப வேண்டுமானால்:**

“ஐம்புலன்களை அடக்கி, உங்கள் மனம் என்கிற பாத்திரத்தைக் காலியாக வைத்திருந்தால் தான் நான் அருள் என்கிற தண்ணீரை அதில் ஊற்றி நிரப்ப முடியும். அதில் ஆசாபாசம் என்பவைகளே நிறைந்திருந்தால் அருள்நீருக்கு இடம் இருக்காது!”

**மனக்கட்டுப்பாடு:**

“மனக்கட்டுப்பாடுடன் இருக்கும்போது கடமை உணர்வு ஏற்படும். கடமை உணர்வு ஏற்படும்போது தான் பொறுப்பு உண்டாகும்.”

**போகும் பாதை:**

“உன் உள்ளத்தை அடக்கும் சக்தி உனக்கு வரவேண்டும். நீ போகும் பாதை நல்ல பாதையாக இருக்க வேண்டும்.”

**குழந்தைகளிடத்தும் ஆன்மிகம்:**

“குழந்தைகளிடத்தும் ஆன்மிக பரப்ப வேண்டும். உள்ளத்தில் அன்பு இருக்க வேண்டும். அழுக்கு கூடாது. மனத்தில் ஏற்படும் கொடூரம், பாவம், பொறாமை இவையெல்லாம் அழுக்குகள்!”

**உள்ளத்தில் இருள்:**

“காரில் தூய்மையான பெட்ரோலை ஊற்றினாலும் கருப்புப் புகை வெளியேறுவது போல, உங்கள் உள்ளத்தை எவ்வளவு தூய்மைப் படுத்தினாலும் அதில் உள்ள இருள் அகல்வதில்லை.”

**மன அழுக்குப் போக ஆன்மிகம் தான் மருந்து:**

“இறைக்கிற ஊற்றுத்தான் சுரக்கும். சுரக்கிற நீர் நல்ல நீராக

இருந்தால் தான் இறைக்கிற நீரும் நல்ல நீராக இருக்கும். சுரப்பது சாக்கடை நீராக இருந்தால் இறைப்பதும் சாக்கடை நீராகவே இருக்கும்.

அதுபோல மனத்தில் எந்த எண்ணங்கள் தோன்றுகின்றனவோ, அந்த எண்ணங்கள் தான் செயலிலும் வெளிப்படும். மனத்தில் அழுக்கு இருந்தால் வெளியிலும் அந்த அழுக்குதான் வெளிப்படும்.

இந்த மன அழுக்கிற்கு மருந்து கிடையாது. ஆன்மிகத்தில் ஈடுபாடு வைத்துக் கொண்டு மௌனம், தியானம், வழிபாடு, தொண்டு முதலியவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம்தான் மன அழுக்குகளை நீக்கிக் கொள்ளமுடியும்.

அசுத்தமான நீரில் வளர்ந்த மல்லிகைச் செடி, மணம் மிக்க மல்லிகைப் பூக்களைத் தருவது போல, உங்களிடம் உள்ள மன அழுக்குகள் பாவ மூட்டைகள் ஆன்மிகத்தில் ஈடுபடுவதன் மூலம் தூய்மை அடைகின்றன.''

**உள்ளக்கட்டுப்பாடு:**

''பாலைக் காய்ச்சக் காய்ச்சத்தான் ஆடை நன்றாகப் படியும் அதுபோல உள்ளத்தைக் கட்டுப்படுத்தக் கட்டுப்படுத்தத்தான் ஆன்மிக உணர்வு ஏற்படும்.''

**பித்தனைப் பாத்திரமும் – பொலிவும்:**

''பித்தளைப் பாத்திரம் புதிதாக இருந்தாலும் நாளாக நாளாகப் பாசி பிடித்துத் துளை விழ ஆரம்பித்து விடும். அதுபோல ஆன்மிகத்துறையில் ஈடுபட்டுள்ள நீங்கள் பொலிவுற்று விளங்க வேண்டியே அமைதி, தியானம், கல்வி ஆகியவற்றைப் புகட்டுகிறேன். ஆன்மிகத்தில் ஈடுபட ஈடுபடத்தான் பலன் கிடைக்கும்.''

**நல்லனவே செய்க!**

''மக்கள் எதைச் செய்தாலும் நல்லதையே செய்ய வேண்டும்! நல்லதையே நாடவேண்டும்; நல்லதையே பாதுகாக்க வேண்டும்.''

**நான் என்ற இறுமாப்பு:**

''நான் என்ற இறுமாப்பு இருந்தால் அழிவு உண்டு. நான் நான் என்ற அந்த ஒலி நாம் நாம் என்ற கீதமாகி இனிதே ஒலிக்க வேண்டும்.''

**மனக்கட்டுப்பாடும் – மன அமைதியும்:**

''வயிற்றுவலி வந்துவிட்டதே என்று மருந்து சாப்பிடுகிறாய். அது குணமாகவில்லையென்றால் மறுபடியும் அது எதனால் வந்தது என்று



பரிசோதனை செய்து பார்த்துக் கொண்டு வேறு ஒரு மாற்று மருந்து சாப்பிடுகிறாய். அதுபோல மனமானது அமைதியைத் தேடுகிறது. அது கிடைக்காவிட்டால் மீண்டும் முயற்சி செய்! உன் மனத்தைக் கட்டுக் கோப்புடன் வைத்துக் கொண்டால் உனக்கு அமைதி கிடைக்கும்.''

**புலனடக்கம் பாதுகாப்பு:**

''ஒவ்வொருவனும் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் தன்னுடைய ஐம்புலன்களை அடக்கப் பழகவேண்டும்.''

**இயற்கையையே கட்டுப்படுத்தலாம்:**

''நீங்கள் ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தும் வல்லமை பெற்றால் உங்களுக்கு இயற்கையும் கட்டுப்படுகிறது.''

**மன ஒருமையின் ஆற்றல்:**

''சிதறி உள்ள பொருள்களையெல்லாம் தனித்தனியே பரண் மேலே தூக்கிப் போடுவதைக் காட்டிலும், அந்தப் பொருள்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து மூட்டையாகக் கட்டி மேலே தூக்கிப் போடுவது எளிது. அதுபோல மனத்தைச் சிதறவிடாமல் ஒருமைப்படுத்திக் கட்டுப்படுத்தி வைத்திருந்தால் நீங்கள் நல்வழி அடைவதற்கு ஏதுவாகும்.''

**பெண்ணாசை, பொன்னாசை:**

''பெண்ணாசை, பொன்னாசை இவற்றை வளரவிடாமல் தவிர்த்துக் கொண்டு மனத்தைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்கப் பழகவேண்டும்.''

**உள்ளம் என்ற பாத்திரம்:**

''துலக்கத் துலக்கப் பாத்திரம் வெளுப்பது போல, உள்ளத்தைக் கட்டுப்படுத்தக் கட்டுப்படுத்த உங்கள் உள்ளம் தூய்மை அடையும்.''

**கட்டுப்பாடு மீறினால் அழிவுகள் பெருகும்:**

''கடல் ஒரு கட்டுப்பாட்டிற்குள்ளே அடங்கியிருக்கிறது. நதியும் இரண்டு கரைகட்குள் அடங்கி ஓடுகிறது. சூரிய சந்திரனும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் அடங்கித் தம் கடமையாற்றுகின்றன. இவையெல்லாம் கட்டுப்பாட்டைமீறினால் என்ன ஆகும்?

புழு பூச்சிகளிலிருந்து மனிதன் வரை கட்டுப்பாட்டிற்குள்

அடங்கியிருக்க வேண்டும். மனிதனின் உள்ளம் ஊமையாக மாறக்கூடாது. புறக்கண் அகக்கண்ணாக மாறவேண்டும்.''

### மனத்தின் சக்தி:

“தீயை நீரால் அழிக்க முடியும். அத்தீயை நீரிலிருந்து ஆக்கவும் முடியும்; தீ நீர் இரண்டையும் காற்றால் அழிக்க முடியும் இம் மூன்றையும் மனத்தால் கட்டுப்படுத்த முடியும்.''

### ஐம்புலன்கள்! ஐம்பூதங்கள்!

“இன்றைய மக்களுக்குக் காது கெடுதலாய், கண் பாவமாய், நாக்கு சனியாக விளங்குகிறது. ஐந்து புலன்களும், ஐம்பூதங்களுக்குச் சமம். அவற்றை அடக்க நல்ல உள்ளம் தேவை.''

### புலனடக்கம்:

“அமைதிக்காகவும், ஆன்ம வளர்ச்சிக்காகவும் தான் ஐம்புலன்களை அடக்க வேண்டும்.''

### ஆன்மிகத்தில் ஒற்றுமை:

“ஒரு கிராமத்தில் எத்தனை கட்சி இருந்தாலும் ஒற்றுமை இருக்க வேண்டும். திருமணம், இறப்பு போன்ற நிகழ்ச்சிகளில் மனவேற்றுமை இருந்தாலும் அவற்றை வெளிக்காட்டாமல் ஒற்றுமையாகச் செயற்படுவது போலவே ஆன்மிகத்திலும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.''

### மௌன விரதம்:

“தினந்தினம் மூன்று வேளை நன்றாகச் சாப்பிட்டுக் கொண்டு மௌனமும் இருந்தால் பயன் கிடைக்கும் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. நினைக்கிற போது மௌனம் இருப்போம் என்று கருதி மௌனம் இருப்பதிலும் பயனில்லை. உன்னுடைய கடைசி மௌனமும் என்னிடமே. எனினும் நீ மௌனம் இருக்கும் போது தான் நான் உன்னைச் சீண்டிவிட்டுச் சோதிப்பேன்.''

### மழையும் – தாவரமும்:

“பருவத்தில் மழை கிடைக்காத போது, மரம், செடி, கொடிகள் ஒரு வருடம் காத்திருந்து, அடுத்த மழை வரும்போது துளிர்விட்டு தங்களைக் காப்பாற்றிக் கொள்கின்றன. அதுபோல ஆன்மிகத்தில் ஈடுபட்டுள்ள மனிதனும் துன்பம் வரும்போது சகித்துக் கொண்டு தொடர்ந்து ஆன்மிகத்தில் ஈடுபட வேண்டும். இந்தப் பிறவியில் துன்பத்தை அனுபவித்தாலும் அடுத்த பிறவியில் பயன் உண்டாகும்.''



### உங்கள் வேதனைகள் – காரணங்கள்:

“மனிதர்கள் உண்கின்ற உணவு எத்தனை உருவங்களில் இருந்தலும் உணவு என்பது ஒன்றுதான். மனிதர்கள் எத்தனை உருவங்களில் இருந்தாலும் உள்ளம் என்பது என்னவோ ஒன்றுதான். உணவை உண்டபிறகு உடலில் உள்ள கழிவுகள் வெளியேறியே ஆகவேண்டும். அப்போதுதான் உடல் நல்ல சீராக இருக்கும். அதுபோலவே உங்கள் உள்ளத்தில் படிந்துள்ள கழிவுகளும் வெளியேறியே ஆகவேண்டும். அப்போது தான் உங்கள் ஆன்மா சீராக இருக்கும். உங்கள் உள்ளத்தில் படிந்துவிட்ட கழிவுகளே உங்களுக்கு வேதனைகளாக வெளியேற்றப்படுகின்றன.''

### சேர்ந்து வாழவேண்டும்:

“அறிவு, அறியாமை, கூன், குருடு என்று மனிதர்களில் பலவிதம் இருக்கத்தான் செய்யும். பறவைகள் ஒன்று சேர்ந்து வாழ்வது போல மனிதனும் ஒன்றுசேர்ந்து வாழ வேண்டும்.''

### பொறிபுலன் அடக்கம்:

“உங்கள் ஐம்பொறிகளும் ஐம்புலன்களும் அடக்கத்தோடு செயல் பட்டால் தான் ஐம்பூதங்களும் அடக்கத்தோடு செயல்படும். நீங்கள் எல்லை மீறினால் பஞ்சபூதங்களும் எல்லை மீறும்.''

### மனித வாழ்வில் கட்டுக்கோப்பு தேவை:

“உழவன் என்ன செய்கிறான்? பாத்தி கட்டி விதை தூவுகிறான். நாற்றங்காலில் முளைத்த நாற்றுகளைப் பறித்து நிலத்தில் நடுகின்றான். நாற்றங்காலில் பயிர் கட்டுக்கோப்புடன் வளர்கிறது. வளர்ந்த நாற்றுகளை நிலத்தில் நட்ட பிறகு அவை நன்றாக வளர்வதுடன் கூடவே களைகளும் தோன்றுகின்றன.

மனித வாழ்விலும் களைகள் தோன்றுகின்றன. பதினாறு வயது முதல் முப்பத்திரண்டு வயது வரை ஒருவன் உள்ளத்தில் அதிகம் களைகள் தோன்றுகின்றன. அவை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கின்றன.

பாத்தியில் எப்படிப் பயிர் கட்டுக் கோப்பாக வளர்கிறதோ அதுபோல மனித வாழ்க்கையிலும் கட்டுக்கோப்பு தேவை.

களைகளை அவ்வப்போது பறித்து எறிவது போல, உள்ளத்துள் தோன்றுகிற களைகளையும் அவ்வப்போது பறித்து எறிந்திட வேண்டும்.

ஆசை, ஆன்மா, தாய்ப்பாசம், பிறர்க்கு உதவும் தன்மை, கவர்ச்சி, வளர்ச்சி என்ற அனைத்துமே ஒரு கட்டுக்கோப்பிற்குள் வளர வேண்டும். அப்படி வளர்ந்தால் வாழ்க்கையில் பலன்கள் உண்டு.''

**மனத்தை அலைபாய விடாதே:**

''இலவம் பஞ்சு ஓட்டுக்குள் இருப்பது. அதைப் பக்குவமாக எடுத்துப் பயன்படுத்தினால் தலையணையாகவோ, மெத்தையாகவோ செய்யலாம். காற்றில் விட்டுவிட்டால் பயன்படாமல் போகும்.

அதுபோல உன் மனத்தை அலைபாய விடாமல் ஒருநிலைப்படுத்திப் பக்குவத்துக்குக் கொண்டுவர வேண்டும். அப்போது தான் நீ நல்ல காரியங்களை வெற்றி பெறச் செய்ய முடியும். இல்லையேல் உன் மனம் தீய செயல்களில் ஈடுபட ஆரம்பித்துவிடும்.''

**மனம் சிதறக்கூடாது:**

''கண்ணாடியிலும் உருவத்தைப் பார்க்கலாம். கண்ணுக்குள்ளும் உருவத்தைப் பார்க்கலாம். கண்ணாடி என்ற மனம் சிதறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பகை, பொறாமை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.''

**ஒரு நாடு சிறப்படைய:**

''ஆக்கப்பூர்வமாக வளர வேண்டிய இந்த நாடு வெடிகுண்டு நாடாக மாறிவிட்டது.

கிணற்றில் தண்ணீர் இருந்தால் தான் இறைக்க முடியும், தரையில் பள்ளம் தோண்டி, ஒரு செடியை நட்டு, அதற்கு நீர் பாய்ச்சி, உரமும் இட்டால் தான் செடியும் நன்கு வளரும். செடிக்கு வேலியும் இட்டுப் பாதுகாத்தால் தான் செடியின் பயனை அனுபவிக்க முடியும்.

அதுபோல நாட்டுமக்களிடையே கட்டுப்பாடும், ஒழுக்கமும், ஆன்மிக உணர்வும் இருந்தால் தான் ஒரு நாடு வளரும். அதன் எதிர்காலமும் சிறப்பாக இருக்கும். இவை இல்லையேல் நாட்டில் அமைதி குலையும்.''

**ஒருவனைக் கட்டுப்படுத்தும் சக்தி:**

''உலகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும், பெற்ற தாய் தந்தையரைப் பாதுகாக்கும் பொறுப்பும் இன்று யாருக்கும் இல்லை. அவரவரும் தாய் தந்தையாகிற போது தான் அன்பு, பாசம், பொறுப்பு எல்லாம் தெரியும்.



உழைப்பு, அன்பு, பாசம் என்பவை தான் ஒருவனைக் கட்டுப்படுத்தும்.''

**இறக்கும் போதும் – இருக்கும் போதும்:**

''ஒருவன் இறந்த பிறகு அவன் உடம்பில் உள்ள கொழுப்பே அவன் எரிவதற்குப் பயன்பட்டுச் சாம்பலாகிறது. இறப்பிற்கு அதிகச் செலவு தேவைப்படுவதில்லை. ஆனால் இருக்கும் போது, செலவிற்குப் போதுமான பணம் கிடைப்பது இல்லை.''

**மனித வாழ்க்கைக்கு:**

''மனித வாழ்வின் உயர்வுக்கும், தாழ்வுக்கும், ஐம்புலன்களுமே பொறுப்பு. கடலில் உள்ள மீன்களே கடலைத் தின்ன ஆரம்பித்தால் என்ன ஆகும்? அதுபோல ஐம்புலன்களின் வெறிகட்கு ஆட்பட்டால் ஆன்மா என்ன ஆகும்? என்று சிந்திக்க வேண்டும்.''

**மனக்கட்டுப்பாட்டின் வலிமை:**

''குச்சிகள் பலவற்றை ஒன்று சேர்த்துக் கட்டிய விறகுக் கட்டையை உடைக்க முடியாது. அதுபோலப் புலன்களை ஒன்று சேர்த்து மனக்கட்டுப்பாட்டுடன் இருந்தால் யாராலும் உன்னை அசைக்க முடியாது.''

**வாரம் ஒரு நாள்:**

''வாரத்துக்கு ஒரு நாள் உணவுக்கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும்.''

**எல்லாத் துறைகளிலும் கட்டுப்பாடு:**

''வாழ்வின் எல்லாத் துறைகளிலும் கட்டுப்பாடு தேவை. ஆன்மிகத்தில் கட்டுப்பாடு மிகவும் தேவை. உடம்பில் ஓடும் இரத்த ஓட்டமும் பக்குவமாக ஓடினால்தான் நல்லது. இல்லையென்றால் கொப்புளங்கள் தோன்றிவிடும்.''

**ஒரு பக்கம் பெட்ரோல்; ஒரு பக்கம் நெருப்பு:**

''உலகத்தில் ஒரு பக்கம் பெட்ரோல்; ஒரு பக்கம் நெருப்பு இருக்கிறது. இரண்டிற்கும் நடுவே நீங்கள் இருக்கிறீர்கள்.

இந்த நிலையில் புலன்களை அடக்கி ஆன்மிகத்தை நடுவில் செலுத்த வேண்டும். இல்லையென்றால் அழிவுகள் தான் ஏற்படும்.''

**புலனடக்கம்:**

''ஐம்புலன்களை அடக்க வேண்டும் அன்பு, பண்பு, பாசம்

ஆகியவற்றை எங்கெங்கு வைக்க வேண்டுமோ அங்கங்கே வைக்க வேண்டும். பொறாமை, பொச்சரிப்பு ஆகியவற்றை அடக்கி ஆள வேண்டும்.''

**ஏவல், பில்லி, சூனியம்:**

''மனக்கட்டுப்பாடு, உணவுக் கட்டுப்பாடு, ஆன்மக் கட்டுப்பாடு இயற்கைக் கட்டுப்பாடு என்ற கட்டுப்பாடுகளை வளர்த்துக் கொண்டால் உங்களை ஏவல், பில்லி, சூனியம், மந்திரம், மாயம் எதுவும் ஒன்றும் செய்ய முடியாது.''

**ஆசைக்கும் ஓர் அளவு உண்டு:**

''இருப்பதை வைத்துக் கொண்டு திருப்தியாக வாழ வேண்டும்.

பத்துபேர் ஏறுகிற ஒரு படகில் நூறுபேர் ஏறினால் என்னவாகும்? அது போலத்தான் ஆசைகளும்.

பணத்தாசைதான் பிணத்தாசையாக மாறுகிறது.

வயது, எண்ணம், பணம் என இவையனைத்தும் ஓர் அளவு வைத்துக் கொண்டு, இவ்வளவு தான் என்று ஓர் வரம்பு வைத்துக் கொண்டு வாழ வேண்டும்.''

**என் காட்சி உண்டு:**

''ஒரு வளையத்தினுள் மிருகம் தன் உறுப்புகளை எவ்வாறு ஒடுக்கிக் கொள்கிறதோ அதுபோல ஒருவன் தன் ஐம்புலன்களையும் அடக்கினால் என் காட்சி உண்டு; கருணை உண்டு; அமைதி உண்டு.''

**உனக்கு நீயே காப்பு:**

''உன்னை நீயே காப்பாற்றிக் கொள்ள வேண்டும். எழுத்து, பேச்சு, அனுபவம் எவற்றாலும் என்ன சொன்னாலும் எடுபடாது.

ஐம்புலன்களை அடக்காமல் அலங்காரம், அபிடேகம், அர்ச்சனை இவற்றால் மட்டும் பெரிய பயன் எதுவும் இல்லை.

உள்ளம் தருமத்திற்கு வழிகாட்ட வேண்டும். உள்ளத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். உழைப்பு உடலில் இருக்க வேண்டும். உடல் உறுப்பில் ஒன்று பழுது பட்டாலும் துன்பம் உண்டாகும்.''

**பறவையினம் – விலங்கினம் – மனித இனம்:**

''பறவையினமும், விலங்கினமும் தமக்கென அமைந்த வாழ்க்கையில் முறைப்படி வாழ்கின்றன.



மனித இனம் மட்டும் அவ்வாறு வாழ்வதில்லை.

காதினால் இதைத்தான் கேட்க வேண்டும்; கண்ணினால் இதைத்தான் பார்க்க வேண்டும்; மனதினால் இதைத்தான் நினைக்க வேண்டும்; வாயால் இதைத்தான் பேசவேண்டும் என்ற கட்டுப்பாடில்லாமல் வாழ்கிறது.''

**அழிவுக்குக் காரணம்:**

''மனிதனின் அழிவுக்கு ஆசை தான் முதல் காரணம். மனக்கட்டுப்பாடும் உணவுக் கட்டுப்பாடும் தேவை.''

**பொறாமை உணர்வு:**

''உள்ளத்திலிருந்து பெருகுகிற உணர்வுகள் ஒடுங்க வேண்டும். அந்த ஒடுக்கம் ஆன்ம வளர்ச்சிக்கு அவசியம். அந்த உணர்வுகளில் பொறாமை உணர்வும் ஒன்று. பொறாமை உணர்வு இருக்கக் கூடாது.''

**நாவடக்கம் தேவை:**

''அரிசி சோறு ஆகலாம். சோறு அரிசியாக முடியாது. நீ சொன்ன சொல்லைத் திரும்பப்பெற முடியாது. எது பேசினாலும் எச்சரிக்கையுடன் பேச வேண்டும்.''

**கட்டுப்பாடு இல்லாத மனித இனம்:**

''பறவைகளும் விலங்கினங்களும் உணவிலும், உடல் உறவிலும் தமக்கெனக் கட்டுப்பாடு வைத்திருக்கின்றன. மனிதனுக்குத் தான் எந்தக் கட்டுப்பாடும் இல்லை.''

**ஆங்காரம் அடக்க...**

''உடலில் உள்ள அங்கங்களை அடக்கினால்தான் உள்ளத்தில் உள்ள ஆங்காரத்தை அடக்க முடியும்.''

**எளிமை: இனிமை:**

''எளிமை தான் இனிமை; இனிமைதான் எளிமை.''

**உடல் சீராக இயங்க...**

''மின்சாரம் சீராகப் பாய்ந்தால்தான் எந்த இயந்திரமும் சீராக இயங்கும். மின் ஓட்டத்தில் தாழ்வு ஏற்பட்டால் இயந்திரம் இயங்காது. அதுபோல சீரான உணவு, உடலுக்குக் கிடைத்தால்தான் உடலின் இயக்கமும் சீராக இருக்கும்.''

**தேவைப்படுவதையெல்லாம் கொடுத்து விட்டால்...**

"உனக்குத் தேவையானதையெல்லாம் கொடுத்துவிட்டால் வாழ்க்கையில் அத்துடன் திருப்தி அடைந்து விடுவாய். அடுத்த பிறவி பற்றிச் சிந்திக்க மாட்டாய். இனி மறுபிறவி வேண்டாம் என்று நினைக்கவும் மாட்டாய்."

**உணவுக் கட்டுப்பாடு:**

"வாரத்தில் மூன்று நாள் வாழைப்பழம் சாப்பிடு. மூன்று நாள் களியைச் சாப்பிடு. 16-இல் எப்படி இருந்தாய் 50-இல் எப்படி இருக்கிறாய் என்று எண்ணிப்பார்! பழமும் களியும் சாப்பிட்டால் இரத்த அழுத்தம் குறையும்.

லட்சம் லட்சமாய் சம்பாதிக்க வேண்டும் என்று அலைகிறாய். பின் லட்சம் லட்சமாய் மருத்துவர்களிடம் போய்ச் செலவு செய்கிறாய்."

**ஐம்புலன்களை அடக்கி வாழ்ந்தால்...**

"ஐம்புலன்களை மனிதன் அடக்கி வாழ்ந்தால் வேதனை இல்லை. ஒன்பது நாள் கட்டுப்பாட்டுடன் இருந்துவிட்டுப் பத்தாவது நாள் கட்டவிழ்த்து விட்டுச் சிந்தனை வேறிடத்திற்குச் சென்று விடுவதால் தான் வேதனை அதிகமாகிறது."

**உள்ளமும் – உடலும்:**

"உள்ளம் கட்டுப்பாட்டோடு இருந்தால் தான் உடலும் ஆரோக்கியமாக இருக்க முடியும்."

**உனக்குள்ளேயே பஞ்ச பூதங்கள்:**

"உன் உடலுக்குள்ளே இருக்கிற பஞ்ச பூதங்களையும் அடக்க வேண்டும். நாவிற்குக் கூட ருசியைத் தேடலாம். ஆனால் உடலுக்கு ருசியைத் தேடத் கூடாது."

**உள்ளக் கட்டுப்பாடு அவசியம்:**

"இன்று மனிதன் மிருகமாகி வருகிறான். எல்லாத் துறைகளிலும் அழிவு உண்டு. அழிவிலிருந்து விடுபட வேண்டு மென்றால் உள்ளக் கட்டுப்பாடு அவசியம்."

**ஆடையால் மதிப்பு இல்லை:**

"நீ எவ்வளவு விலை உயர்ந்த ஆடையை அணிந்தாலும் பயனில்லை; உன் உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும்."



**சித்தன்:**

"சிந்திப்பவனெல்லாம் சித்தனாக முடியாது. மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆசையைக் கட்டுப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் பொறாமை அதிகமாகும்."

**கட்டுப்பாடு இல்லாத மனிதன்:**

"கடல், பூமி ஆகிய இவற்றுக்குக் கூடக் கட்டுப்பாடு இருக்கிறது. மனிதனிடம் தான் கட்டுப்பாடு இல்லை."

**உள்ளக் கட்டுப்பாடு:**

"அழுகிற குழந்தையைத் தாலாட்டுப்பாடித் தூங்க வைப்பதுபோல உள்ளத்தைக் கட்டுப்படுத்தித் தூங்கச் செய்ய வேண்டும்."

**மௌனம் இரு:**

"உங்கள் உள்ளத்தைக் கட்டுப்படுத்திச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டுமானால் மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்."

**தீய எண்ணமும – தீய செயலும்:**

"தீய எண்ணங்களையும் தீய செயல்களையும் வளரவிடக் கூடாது. கேட்கிற வார்த்தைகள் நல்ல வார்த்தைகளாக இருக்க வேண்டும். அவ்வாறிருந்தால் வளர முடியும்."

**வாழ்க்கைக்குப் பொருள் என்ன?**

"உன் ஐம்புலன்களை ஒரு முகப்படுத்தி உள்நோக்கிச் செலுத்தினால் இந்த வாழ்க்கையின் நோக்கம் என்ன? பொருள் என்ன? என்பது உனக்குத் தெரியும்."

**கட்டுப்பாடில்லாமல் வாழ்ந்துவிட்டு...**

"உணவையும் கட்டுப்படுத்தி உண்ண வேண்டும். மனத்தையும் கட்டுப்படுத்தி வாழ வேண்டும். எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ வேண்டும். அப்படியெல்லாம் வாழ்வதை விட்டுச் சோதிடம் பார்த்தும் குறை தீரவில்லை, கோயிலுக்குப் போயும் குறை தீரவில்லை என வருந்திப் புலம்புவதில் பயனில்லை."

**அவனவன் எண்ணங்கள்:**

"உன் உடலில் உள்ள அழுக்கு உனக்கே பிடிப்பதில்லை.

உன் மனத்தில் சேரும் அழுக்கை நீக்கிக் கொள்ள முயற்சிப்பது இல்லை.

போதை ஒருவனை ஆட்டுவித்து அழிப்பது போல, அவனவன் எண்ணங்களே அவனவனை ஆட்டுவித்து அழிக்கின்றன.''

**உயிரில் தூசுபடியாமல்...**

"உயிரைப் பக்குவமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அது தன் தன்மையிலிருந்து ஏறாமலும், இறங்காமலும், அதில் தூசு படியாமலும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.''

**மனம் முதிர்ச்சி பெற...**

"மரத்தில் நன்றாகப் பழுத்த பழத்தின் முதிர்ந்த விதை விழுந்து இன விருத்தி செய்யும். அதுபோல மனிதனுக்கும் பொறுமையும் மனக்கட்டுப்பாடும் இருந்தால் மனம் முதிர்ச்சி பெறும். ஆதலின் பொறுமையும் மனக்கட்டுப்பாடும் அவசியம்.''

**கட்டுப்பாடும் – தட்டுப்பாடும்**

"கட்டுப்பாடு இல்லாத தன்மையே கட்டுப்பாட்டை இழக்க வைத்து விட்டது. கட்டுப்பாடு இல்லாத மனோ நிலையே தட்டுப்பாட்டை உண்டாக்கும். தெய்வம் இருக்கிறது என்று நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு நிமிடம் நினைத்துப் பார்க்காவிட்டால் கூட அழிவு வரலாம்.''

**எதற்கும் வரம்பு தேவை**

"சட்டம், ஒழுங்கு, கண்ணீர், தண்ணீர்; என எல்லாவற்றுக்கும் ஓர் வரம்பு அவசியம். அந்த வரம்பு இல்லையென்றால் கொலை, களவு, அராஜகப் போக்குகள் அதிகமாகிவிடும்.''

**மன அடக்கத்திற்கு வழி**

"ஒரு வண்டி ஒழுங்காக ஓடவேண்டும் என்றால் சக்கரம் வேண்டும். அச்சு வேண்டும்; எண்ணெய் வேண்டும். அதுபோல உன் மனம் அடக்கமாக ஓட வேண்டுமானால உன் எண்ணங்கள், உன் செயல்கள், மூளை மூன்றும் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும்.''

மனம் அடங்க வேண்டும், அடங்கவேண்டும் என்ற வேட்கை முதலில் வேண்டும். எண்ணங்களுக்குக் கடிவாளம் இட்டால், மூளை செயல்களுக்குக் கடிவாளம் இடும். மனமும் அடங்கும். பணம் சம்பாதிப்பதிலும், தொழில் செய்வதிலும், பிறர் புகழ்ச்சியைத் தேடுவதிலும் ஒரு நிதானம் வேண்டும். இவை மட்டுமே வாழ்க்கை என நினைக்கக் கூடாது.

ஆசைகளும், பொறாமையும் தான்தோன்றிகள்! அவை தோன்றத்தான் செய்யும். அவற்றை அடக்கி ஒரு கட்டுக் கோப்புக்குள் வைத்து, தெய்வ சிந்தனை, வழிபாடு, உழைப்பு, தியானம், மௌனம் போன்றவற்றை வாழ்க்கையில் பெருக்க வேண்டும். பிறர் போற்றுதலுக்கும், கைதட்டலுக்கும், தேவைக்கு மீறிய பொருளுக்கும் ஆசைப்படும் எண்ணங்களை ஒடுக்க வேண்டும். பிறகு மன அடக்கம் தானே வரும்.''



**ஆன்மிகம் என்ற கடிவாளம்:**

"நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகாயம் என்னும் ஐம்பூதங்களுக்குள் தோன்றும் ஆற்றல்கள் எல்லாம் ஒரு கட்டுப்பாட்டிற்குள் இருந்தால்தான் அவற்றால் பயன் பெற முடியும்.''

அதுபோல ஒருவனுக்கு அதிகமான அறிவு, படிப்பு, வசதிகள் எவ்வளவு இருந்தாலும் ஆன்மிகம் என்ற வழிகாட்டுதலும். கடிவாளமும் இருந்தால்தான் வாழ்க்கையில் பயன் கிடைக்கும்.''

**மனிதன் மிருகமாகும் போது...**

"மனிதன் மிருகமாக மாறும்போது அவன் செயலே அவனை அழிக்கிறது.''

**பொறாமை ஏன் வருகிறது?**

"உள்ளத்தில் பொறாமை ஏன் அதிகமாகிறது? எல்லாம் ஒரு சாண் வயிற்றுக்காகத்தான். இருக்கின்ற காலத்தில் அமைதி வேண்டும். நிம்மதி வேண்டும். பொறாமையால் இவற்றை அடைய முடியாது, இருப்பதைக் கொண்டு திருப்தி அடைய வேண்டும்.''

**அறிவும் – கண்களும்:**

"அறிவும் கண்களும் நல்ல முறையில் செயல்பட வேண்டும், எது நல்லது? எது கெட்டது? என்று தெரிந்து மனக்கட்டுப்பாட்டோடு நடந்து கொள்ள வேண்டும்.''

**பொறுமையும் – சகிப்புத்தன்மையும்:**

"உள்ளத்தில் சகிப்புத் தன்மை இருக்க வேண்டும். அதற்குப் பொறுமையைக் கடைப் பிடிக்க வேண்டும்.''

**சில்லறை வேஷம்: சில்லறை தோஷம்:**

"ஐம்புலன்களையும் அடக்க வேண்டும். சில்லறை வேஷம்; சில்லறை தோஷம் இருக்கக் கூடாது.''

**மன நோயாளி:**

"சதா சிந்தனை, சதா பேச்சு, சதா செயல் என்றே ஒருவன் இருந்தால் அவன் மனநோயாளியாக மாறிவிட நேரும்."

**சீரான சிந்தனைகள் இல்லாவிட்டால்...**

"உலையில் வைத்த தண்ணீர் கொதிக்கும் போது சமைக்கிற பொருளை அதில் போட வேண்டும். அவ்வாறு செய்ய வில்லையென்றால் தண்ணீர் வற்றிப்போய்ப் பாத்திரமே வெடிக்க நேரும்.

அதுபோல மனத்தில் சீரான சிந்தனைகள் இல்லாவிட்டால் ஆபத்து தான் உண்டாகும்."





# 11. இன்றைய உலகின் நிலை

**இன்றைய நாடு:**

"இன்று நாட்டில் ஆன்மிக உணர்வு குறைந்துவிட்டது. தீய சக்திகளின் ஆதிக்கம் பெருகிக் கொண்டு வருகிறது. அதனால் தான் அராஜகப்போக்கு, குழப்பம், கொலை, கொள்ளை, கலவரம் முதலான தீமைகள் சமுதாயத்தில் பெருகிவிட்டன. ஆன்மிக உணர்வு பெருகவில்லையேல் மேலும் பல அழிவுகள் உண்டு. ஆன்மிகம் இல்லையேல் உலகமே இல்லை மகனே! உலகமே அழிந்து போகும் நிலைக்கு வந்துவிடும் மகனே! ஆன்மிக உணர்வு பெருகித் தெய்வ நம்பிக்கையும், தெய்வ பக்தியும் பெருகினால் தான் நன்மை ஏற்படும் மகனே!"

**சட்டமும் – சாட்டையும்:**

"சட்டம் சாட்டையாக மாறி உள்ளது. சட்டத்தைச் சாட்டையாகப் பயன்படுத்துகிறார்கள்."

**ஓடி ஓடிச் சம்பாதிப்பவன்:**

"பணவெறி கொண்டு ஓடி ஓடிச் சம்பாதிப்பவன் அழுக்கு மூட்டைகளைத் தான் சுமக்கிறான். உறக்கத்தால் அவதிப்படுகிறான். மெத்தை இருந்தும் நித்திரை இல்லை. மாத்திரை இல்லாமல் அவனால் நித்திரை செய்ய முடியாது.

ஆன்மிகம் ஒன்றே நிம்மதிக்கு வழி! இயற்கை! அம்மா! இறை நம்பிக்கை! இவையே அமைதிக்கு வழி!"

**மேல்மட்டம் – நடுமட்டம் – அடிமட்டம்:**

"பணம் - பிணம் என்று கருதாமல் பணம் பணம் என்று அலைகிறவன் ஆகாய விமானம், கப்பல் கார் முதலியவற்றில் பறக்கிறான். அத்தகையவனை நடுமட்ட வர்க்கமும் கீழ்மட்ட வர்க்கமும் போற்றுகின்றன.

ஆனால், கீழ்மட்டத்தில் இருப்பவன் உண்மையான உழைப்பால் உயரும்போது அவனை மேல்மட்ட வர்க்கமும், நடுமட்ட வர்க்கமும்,

கீழ்மட்ட வர்க்கமும் வாழ்த்துவதில்லை. மாறாக அவனை ஏசுகின்றன. அடிமட்டத்தையும். நடுமட்டத்தையும் திருத்த முடியாது.

ஒரு எலும்பிற்கு நான்கு நாய்கள் சண்டை போட்டுக் கொள்வது போல அடித்துக் கொள்கிறார்கள்.

உலகத்தின் அடிமட்டத்தை ஆன்மிகத்தால் தான் திருத்த முடியும்.''

**அன்புக்கும் கண்ணீர்! வம்புக்கும் கண்ணீர்:**

''அன்புக்கும் கண்ணீர் வரும்; வம்புக்கும் கண்ணீர் வரும். உலகில் நல்லதும் உண்டு; கெட்டதும் உண்டு. கண்ணீருக்கும் தண்ணீர் இல்லை என்ற நிலை ஏற்படும். உழைப்பால் உயரவேண்டும் என்ற எண்ணம் இப்பொழுது இல்லை. அன்புக்குக் கண்ணீர் வருவதில்லை. வம்புக்குத் தான் கண்ணீர் வருகிறது.''

**பாலும் – குணமும்:**

''பசும்பால், எருமைப்பால் இவற்றைக் குடித்தால் அந்தந்தப் பாலுக்கு ஏற்ற குணம் தான் அமையும். அந்தந்தக் குணத்துக்குத் தக்கபடியே எண்ணங்கள் மாறுபடும். எறிந்த பொருள் திரும்ப நம்மிடமே வருவது போலப் புதிய யுகத்திலிருந்து மறுபடியும் பழைய யுகத்திற்குத் தான் போய்க்கொண்டிருக்கிறார்கள்.''

''இது கலியுகம்! சீக்கிரம் காலியாகும் உலகம்! தற்கொலை உலகம்! முன்பெல்லாம் ஊசி போட்டல் இறந்து விடுவார்கள். இனி மூக்கின் அருகில் மருந்தைச் சுண்டினாலே அழிவு ஏற்படும். மூச்சும் அடங்கும்.''

**அரசியலே காரணம்:**

''உலகம் சோம்பேறி ஆவதற்கு அரசியலே காரணம்!''

**ஆன்மிகத்தால் தான் கட்டுப்படுத்த முடியும்:**

''நாட்டில் அக்கிரமங்கள், அடிதடி, குத்துவெட்டு, கொள்ளை, குழப்பம் இருக்கும். ஆன்மிகத்தால் தான் இவற்றைக் கட்டுப்படுத்த முடியும். ஆன்மித்தில் ஈடுபாடு உள்ளவனுக்குத்தான் எதிர்காலத்தில் பாதுகாப்பு.''

**ஆன்மிக உணர்வு குறைந்துபோனால்:**

''ஆன்மிக உணர்வு குறைந்து போனதால் ஒரு சில இடங்களில் மட்டும் மழை! ஒரு சில இடங்களில் காய்ச்சல்! இயற்கையின் சீற்றம்!



சூழ்நிலை சீற்றம்! பூமி சீற்றம்! சூரியன் சீற்றம்! காமசீற்றம் முதலியன எல்லாம் இனி இருக்கும்.''

**அரசியலில்:**

''அரசியலில் அடி, உதை, அழிவு, பழிவாங்கும் மனப்பான்மை பெருகும். அரசியலை அரசியலே அடித்துக் கொள்ளும்!''

**படித்தவனும் – பட்டிக்காட்டானும்:**

''படிப்பால் பண்பு வளரவேண்டும். இன்று படித்தவனோ பட்டிக்காட்டானைவிடப் பட்டிக்காட்டானாக நடந்து கொள்கிறான்.

**மாறிவரும் உலகம்:**

''வரவர உலகமும், மக்கள் தொழிலும், எண்ணங்களும் ஆன்மிமும் மாறிக்கொண்டே வருகின்றன.

களிப்பு உலகமாக இருக்க வேண்டிய இந்த யுகம் கலியுகமாகவும்(சனியுகமாகவும்) சலிப்பு உலகமாகவும் மாறிவிட்டது. பெண்கள் ஆன்மிகத்தில் ஈடுபடும் போது கனி உலகமாகவும், கண் உலகமாகவும், கடமை உலகமாகவும் மாறும்.''

**வளம் குறைகிறது:**

''இன்று பூமியின் இயற்கை வளம் குறைந்து வருகிறது.''

**இன்றைய உலகம்:**

''இன்றைய உலகம் பண்பில்லாத உலகமாகவும், பாசமில்லத உலகமாகவும் இருக்கிறது.''

**பொறாமையினால் அழிவு:**

''பலூனில் நிறையக் காற்றை ஊதினால் வெடித்துவிடும். அதுபோல மனத்தில் நிறைய பொறாமை சேர்ந்தால் அது உன்னையே அழித்துவிடும்.''

**சோம்பல் குடிகொண்டு விட்டது:**

''இன்று சோம்பேறித்தனம் அதிகமாகிவிட்டது. சுற்றிப்பசுமையாக இருந்தால் பல மாடுகள் சேர்ந்து அழிக்கும். அதுபோல யாராவது செல்வாக்காக இருந்தால் மற்றவர்கள் ஒன்று சேர்ந்து அழிக்க முனைவார்கள்.''

**பொல்லாத காலம் இது:**

''இன்றுள்ள காலம் பொல்லாதது! உங்கள் பிள்ளைகளை

நீங்கள் தான் கண்ணும் கருத்துமாகவும் பாதுகாப்பாகவும் வளர்க்க வேண்டும். தன் கண்ணே தன்னை நம்பாத காலம் இது! போக்குவரத்தில் கவனமாக இருக்க வேண்டும்.''

**அமைதிக்காலம்! அழிவுக்காலம்!**

''ஆன்மிக உணர்வு நிறைந்துள்ள காலம் அமைதிக்காலமாக விளங்கும். ஆணவ உணர்வு நிறைந்துள்ள காலம் அழிவுக்காலமாக இருக்கும்.''

**உலகத்தில் ஏன் இத்தனை அலங்கோலம்?**

''உள்ளத்தில் தூய்மை இருக்க வேண்டும். அது இல்லாது போனதால் தான் எங்கும் கொலை, கொள்ளை, அழிவு, ஏமாற்றிப் பிழைக்கும் புத்தி பெருகி வருகிறது.''

**எங்கும் கலப்படம்; எதிலும் கலப்படம்:**

''பிறப்பில் - வளர்ப்பில் - பேச்சில் கலப்படம் உண்டு. கசப்பு - இனிப்பு; மெய் - பொய் என்னும் எல்லாவற்றிலும் கலப்படம் உண்டு.

விஞ்ஞானம், இயந்திரம், எண்ணெய் ஆகியவற்றில் கலப்படம் உண்டு. இந்தக் கலப்படமெல்லாம் அழிவிற்கே வழி வகுக்கும். ஆக்க சக்திக்கு ஆன்மிகமே வழிவகுக்கும்.''

**பழங்காலம்:**

''ஆதிகாலத்திலும் ஆதிபராசக்தியை மக்கள் வழிபட்டார்கள். அப்பொழுது நேர்மையும், உழைப்பும் இருந்தன. மக்கள் இயற்கையாகக் கிடைக்கும் இலை, கிழங்கு, கனிகளை உண்டு வாழ்ந்தார்கள். காலப்போக்கில் விஞ்ஞான அறிவால் காய்கனிகளை வேக வைத்துச் சாப்பிட்டார்கள். இப்போது நேர்மையும் இல்லை! உழைப்பும் இல்லை!''

**கானல் வாழ்க்கை:**

''இன்றைய மக்களின் வாழ்க்கை கானல் வாழ்க்கையாக மாறி வருகிறது!''

**ஆடுகிற ஆட்டம் என்ன? பாடுகிற பாட்டு என்ன?**

''பிறப்பைப் பற்றி நினைக்கும் மனிதன் இறப்பைப் பற்றி நினைக்க மறுக்கிறான். அதற்குள் இவன் ஆடுகிற ஆட்டம் என்ன? பாடுகிற பாட்டு என்ன? போர்வை என்ன? பொன்னாடை என்ன? அதிகாரம் என்ன? எல்லாம் முடிந்த பிறகு என்ன ஆட்டம் என்று எவனுக்கும்



தெரிவதில்லை. இருந்த நிலையும், இருக்கிற நிலையும், இனி இருக்கப் போகும் நிலைமையும் ஒவ்வொருவனும் நினைத்துப் பார்க்க வேண்டும்.''

**அன்றைய குடிசை வாழ்வும்: இன்றைய மாளிகை வாழ்வும்**

''அன்றைக்குக் குடிசையில் வாழ்ந்தபோது மனிதன் குனிந்த வாசியாக அடக்கமாக - தலை சாய்ந்த நெற்கதிர் போல் வாழ்ந்தான். ஆனால் இன்று மாடி வீடு கட்டி வாழ ஆரம்பித்தவுடன் பணம், காசு, வசதி என்று இரவு பகல் தூக்கமில்லாமல் அலைகின்றான். நல்ல நிலத்தை உழுது பயிர் வைத்தால் நல்ல விளைச்சல் கொடுக்கும். நல்ல எண்ணங்கள் தான் நல்ல வாழ்க்கையைக் கொடுக்கும்.''

**சட்டதிட்டம் இல்லாத இன்றைய உலகம்:**

''இன்றைய நிலையில் சட்டதிட்டம் என்ற எதுவுமே இல்லை. இருக்கிறவற்றுக்கும் மதிப்பில்லை. பயிருக்கு வேலி என்ற நிலைமைக்கு மாறாக வேலிக்கே வேலி போடவேண்டிய காலம் இது.''

**சென்ற காலம் – வருங்காலம்:**

''சென்ற காலம் பொற்காலம்; வரும்காலம் பொல்லாத காலம்.''

**காலவெள்ளம் – காமவெள்ளம்:**

''தற்போது கால வெள்ளம் காம வெள்ளமாக மாறிவருகிறது.''

**நாளைய உலகம்:**

''நாளைய உலகில் விளையாட்டே வினையாக மாறும்.''

**இன்றைய அழிவுகட்குக் காரணம்:**

''நடைமுறை வாழ்வில் ஒழுக்கமும், கட்டுப்பாடும் தேவை, பொய்யும் பித்தலாட்டமும் பெருகினால் அழிவும் பெருகும். இன்றைய அழிவுகளுக்கு இவையே முக்கிய காரணம்.''

**நான் வகுத்துக் கொடுக்கும் திட்டங்கள்:**

''எவனுடைய பேச்சும் இங்கு எடுபடாது என்ற நிலை வந்துவிட்டது. நாட்டின் செழிப்புக்காக நான் வகுத்துக் கொடுக்கும் திட்டங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். மன்றங்கள், கூட்டுவழிபாடு, தியானம், சமுதாயத் தொண்டுகள், நாட்டுநலம் கருதிய வேள்விகள், ஆன்மிக மாநாடுகள் - இவற்றின் நோக்கங்களை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.''

**தெய்வ சக்தியால் தான் பாதுகாப்பு:**

“மனிதன் தன்னைத் துப்பாக்கியாலும், படைபலத்தாலும் காப்பாற்றிக் கொள்ள முடியாது. தெய்வ சக்தி தான் நம்மைக் காப்பாற்ற முடியும் என்கிற மனநிலை எப்போதும் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் உங்கள் “மானநிலை” யும் காப்பாற்றப்படும்.”

**கஞ்சியும் – உடல் நலமும்:**

“அந்தக் கலத்தில் கஞ்சி குடித்து வந்ததால்தான் நோய்நொடியின்றி வாழ்ந்தார்கள். இன்று கஞ்சா குடித்து உடல் நலம் கெட்டு அழிகிறார்கள்.”

**தன் கையே தனக்கு உதவி:**

“எல்லாத்துறைகளிலும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். உங்களைச் சுற்றியுள்ள உலகத்தையும் அரசாங்கத்தையும் நம்பிப் பயனில்லை. தன் கையே தனக்கு உதவி.”

**அரசியலும் – விஞ்ஞானமும்:**

“யாரையும் எந்த அரசியலாலும் காப்பாற்ற முடியாது. விஞ்ஞானத்தால் வேறு வழி ஒன்றைக் கண்டு பிடிக்க முயலலாம். ஆயினும் வேரே இல்லாமல் போய்விடும்.”

**வைரமும் – கண்ணாடியும்:**

“ஒரு வைரத்தைக் கொண்டு பல கண்ணாடிகள் அறுக்கலாம். ஆனால், கண்ணாடியிலிருந்து வைரத்தைப் பெற முடியாது. இந்தக் கண்ணாடி போன்றது உலகம். இந்தக் கண்ணாடி உலகம் காளான் உலகமாக மாறிவருகிறது. தானே அழிந்து வருகிறது. இதனைக் காப்பாற்ற முடியாது.”

**அரசியலும் விஞ்ஞானமும்:**

“அரசியலாலும், விஞ்ஞானத்தாலும் ஆன்மிகத்தை அழிக்க நினைக்கலாம். ஆனாலும் அழிக்க முடியாது. விஞ்ஞானத்தால் வீண் விரயங்கள் தான் எற்படும்.”

**இன்றைய அரசியல்:**

“பத்துப்பேர் ஏறிச் செல்லக்கூடிய படகில் நூறுபேர் ஏறினால் என்னவாகும்? படகு கவிழும். மூழ்கவும் நேரும். இது தான் இன்றைய அரசியல்.”



**மனிதனும் – மிருகமும்:**

“ஆரம்ப காலத்தில் மனிதனும் மிருகமும் ஒன்றாகவே வாழ்ந்தார்கள். அப்போது செழுமை இருந்தது. ஆனால் நாளடைவில் மனிதன் மிருகமாகிவிட்டான். மிருகம் தன் தன்மையிலிருந்து மாறவில்லை. தனக்கு இயற்கையாக எது கிடைக்கிறதோ அதனை மட்டும் உட்கொண்டு எதுவுமே கிடைக்காத காலத்தில் விரதத்தை மேற்கொண்டு இயற்கையோடு ஒட்டி அது வாழ்கிறது. ஆனால் மனிதனோ ஆசாபாசங்கட்கு அடிமையாகிச் செயற்கையோடு இணைந்து வாழ்கிறான்.”

**விஞ்ஞான முன்னேற்றம்:**

“விஞ்ஞான முன்னேற்றத்தின் துணைகொண்டு முன்னேறிவிடலாம் என்று நினைக்கக் கூடாது. மருத்துவத்தில் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் நல்ல முறையில் வாழ்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். எந்த நேரத்திலும் அது ஆபத்தில் தான் முடியும்.”

**அரசியல் அடிதடிகள்:**

“அவனை அடிக்கலாம் என்று இவன் நினைக்கிறான். இவனை அடிக்கலாம் என்று அவன் நினைக்கிறான். நான் அடிக்கத் தொடங்கினால் இந்த இருவருமே இருக்கமாட்டார்கள்.”

**அழிவுப்பாதையை நோக்கி...**

“உலகம் அழிவுப்பாதையை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது. ஆன்மிகம் ஒன்றால்தான் இந்த அழிவைக் கட்டுப்படுத்த முடியும்.”

**கலியுகம்:**

“கலியுகம் என்றால் சனியுகம் என்று பொருள். கலியுகம் காதல்யுகமாக மாறிவிட்டது.”

**மனிதன் என்ற கூண்டுக்குள்ளே...**

“ஒரு புலி! ஒரு சிங்கம்! ஒரு பசு! ஒரு ஆடு! ஆகிய குணங்கள் மனிதக் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடக்கின்றன!”

**தன் கையே தனக்கு விஷம் கொடுக்கும்:**

“நாட்டில் கொந்தளிப்பு உண்டு. தன் கையே தனக்குத் துரோகத்தையும் அழிவையும் செய்யும். தன் கையே தனக்கு விஷம் கொடுக்கும்.”

**வேலையும் – சோறும்:**

"வேலை செய்தால் சோர்வு ஏற்படும். ஆனால் சோறு கிடைக்கும். சோம்பேறித்தனமாக வாழ்ந்தால் சோறும் கிடைக்காது. சோதனையும் ஏற்படும்."

**தருமம்; அரசியல்:**

"தருமத்திற்குட்பட்ட அரசியலுக்குத் துணையிருப்பேன்."

**அக்கிரமத்தால் அழிவு உண்டு:**

"உலகத்தில் 100-க்கு 99 பங்கு அக்கிரமம் உண்டு. அதனால் அழிவும் உண்டு. விளையாட்டுப் பேச்சும் ஒருவனுக்கு அழிவை உண்டாக்கும்."

**சட்டமும் – நீதியும்:**

"சட்டம் சாயம் பூசிக் கொண்டிருக்கிறது. அது வெகுவிரைவில் வெளுத்துவிடும். நீதியே நிலைத்து நிற்கும்."

**மதங்களுக்குள் ஒற்றுமை இல்லாவிட்டால்:**

"மதம் பிடிக்காமல் உண்மை உணர்வுடன் உழைக்க வேண்டும். வருங்காலம் பொன்னான காலம். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்! மதங்களுக்குள் ஒற்றுமை இல்லையேல் அதர்மங்களே தலை தூக்கும்."

**அக்கிரமும்; விஞ்ஞானமும்:**

"அக்கிரமும் விஞ்ஞானமும் உள்ள இடத்தில் எந்த உருவத்திலும் அழிவு வரலாம்! உலகம் அழிகிறது. நான் அணைத்துக் கொண்டு செல்கிறேன்."

**விஞ்ஞான சாதனங்கள்:**

"விஞ்ஞானி இன்று ஆக்கத்திற்கென்று எதை எதைக் கண்டு பிடிக்கிறானோ அது அழிவில் சென்று முடியப் போவதை நீங்கள் காணப்போகிறீர்கள்."

**அரசியல்வாதியும் – ஆன்மிக வாதியும்:**

"சாக்கடையில் உள்ளவனுக்கு நல்ல வாசனையின் அருமை தெரியாது. அதனால் அவன் சாக்கடையிலிருந்து வெளியேற முயற்சிக்க மாட்டான். அரசியல் சாக்கடையில் ஊறிக்கிடக்கிற அரசியல்வாதி அரசியலை விட்டு ஆன்மிகத்தை விரும்ப மாட்டான். நல்ல வாசனையை உணர்ந்தவன் சாக்கடை வாசனையை விரும்ப



மாட்டான். ஆன்மிக வாதியோ இரண்டு வாசனையையும் சமமாக நினைத்துக் கொள்வான்."

**மனமும் – பணமும்:**

"பணம்! மனம்! மனத்தில் பணம் இருக்கிறது! பணத்தில் மனம் இருக்கிறது! இது தான் மகனே! இன்றைய சமுதாயம்!"

**விஞ்ஞான முன்னேற்றம்:**

"விஞ்ஞானத்துறையில் பல இயந்திரங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. ஆனாலும் என்ன? கையேந்திப் பிச்சை எடுக்க வேண்டித்தானே இருக்கிறது?"

**இன்றைய மக்களின் போக்கு:**

"இப்படித்தான் வாழவேண்டும் என்ற நிலை மாறி எப்படியும் வாழலாம் என்ற நிலை ஏற்பட்டு வருகிறது. இனி மனிதனாலும் விஞ்ஞானத்தாலும் எதையுமே கட்டுப்படுத்திவிட முடியாது."

**கொலைக்கு மூலகாரணம்:**

"என் பொருள் உன் பொருளாக மாறும்போது கொலையாக மாறுகிறது. எதையும் கண்டு கொண்டால் காலனாக மாறும்."

**சில்லறையும் – கல்லறையும்:**

"சில்லறை புத்தி கல்லறையாக மாறும்."

**உலகம் காடாக மாறிவருகிறது:**

"உலகத்தில் பாரம் ஏறிவருகிறது. போலிவேடம் அதிகரிக்கிறது. ஒரு நிமிடம் ஒரு வினாடி என்று உலகம் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. உலகம் காடாக மாறிவருகிறது. எண்ணமும் செயலும் மாறிவருகின்றன."

**உலகில் அழிவு உண்டு:**

"அண்டம் உண்டு. ஆகாயம் உண்டு அம்மா! அப்பா! என்ற அலறல் உண்டு. ஓம் என்ற ஓங்காரம் உண்டு! ஊதாரித்தனம் உண்டு. குய்யோமுறையோ என்ற கூக்குரல் உண்டு. நனவு உண்டு. கனவு உண்டு. உள்ளத்தாலும் உடலாலும் அழிவு உண்டு."

**வேலியும் – பயிரும்:**

"வேலியே பயிரை மேயும் என்று முன்பெல்லாம் கூறுவார்கள். இப்போது பயிரே வேலியை மேய்கிறது."

**உலக வளர்ச்சிக்கு:**

“ஆன்மிகம், கல்வி, தருமம், அறநிலை, அறநெறி இவற்றால் தான் உலகம் வளரும். அவை இல்லாது போனதால் தான் அடி, உதை, குத்து, வெட்டு, வெடிகுண்டு என்ற நிலைமைகள் பெருகிவருகின்றன.”

**இனப் பெருக்கத்தின் விளைவு:**

“ஒரு குடும்பத்தில் பத்துக் குழந்தைகள் இருந்தால் அந்தக் குடும்பத்தில் உணவு, உடை, வசதிகட்காகவும், நிம்மதிக்காகவும், குழந்தைகள் ஒன்றை ஒன்று அடித்துக் கொள்கின்றன. வீட்டில் உள்ள இந்த நிலைமை தான் நாட்டிலும் உள்ளது. இனப்பெருக்கம் அதிகமாகும் போது இப்படிப்பட்ட நிலை ஏற்படும்.”

**இறப்பு விகிதம்:**

“மனிதன் காட்டிலும், குகையிலும் வாழ்ந்து கொண்டிருந்த போது இறப்பு விகிதம் குறைவாக இருந்தது. பாதுகாப்போடு வாழும் இந்தக் காலத்தில்தான் இறப்பு விகிதம் அதிகமாக உள்ளது.”

**மலட்டுத் தன்மை:**

“மலட்டுத் தன்மை ஆணுக்கும் உண்டு. பெண்ணுக்கும் உண்டு. ஆனாலும் உலகம் பெண் மலடு எனக்கூறிப் பெண்களை மட்டுமே குற்றம் சாட்டுகிறது.”

**அரசியலில்...**

“தலைவன் தொண்டனை மதிக்க மாட்டான். தொண்டனும் தலைவனை மதிக்க மாட்டான்.”

**அதிவேக நாகரிகம்:**

“இறந்த பிறகு எலும்புக்கூடாவது மிஞ்சும். இப்போது மின்சாரச் சுடுகாட்டில் அதுகூடக் கிடைப்பது இல்லை. இந்தப்பக்கம் உன் தகப்பனைக் கொடுத்தால் அந்தப் பக்கம் சாம்பலைக் கொடுக்கிறார்கள்.”

**நல்லது எப்படி நடக்கும்?**

“ஐந்துபேர், பத்துபேர் மட்டும் நல்லவர்களாக இருந்து பத்துலட்சம் பேர் கெட்டவர்களாக இருந்தால் உலகம் எப்படி நல்லதாக இருக்கும்?”



**வளர்ந்துவரும் வெறிகள்:**

இன வெறி, மதவெறி, பணவெறி, பதவி வெறி ஆகிய வெறிகள் இன்று பெருகிவருகின்றன.”

**பாதுகாப்பற்ற வாழ்க்கை:**

“அந்தக் காலத்தில் வீடு தான் உனக்குப் பாதுகாப்பாக இருந்தது. இந்தக் காலத்தில் துப்பாக்கி தான் உனக்குப் பாதுகாப்பு.”

**அழிவிற்கு அறிகுறிகள்:**

“உலகம் ஒரே உருண்டையாக இருந்தாலும், பக்கத்து நாட்டுடன் சண்டை, பக்கத்து மாநிலத்துடன் சண்டை எனச் சண்டைகள் தொடர்கின்றன. நகைக்காகச் சண்டை, பணத்துக்காகச் சண்டை என எங்கும் சண்டைகள்!

இவையெல்லாம் மனிதனுடைய பொறாமைக் குணத்தால் ஏற்படுபவை.

எந்தத் துறையிலும் வளர்ச்சி என்று இருந்தால் எதிர்ப்பு என ஒன்று இருக்கும். இவையெல்லாம் அழிவிற்கு அறிகுறிகள்!

யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே! என்பதற்கு ஏற்றபடிப் பின்னால் வரப்போகும் அழிவிற்கு அறிகுறிகள்.

பொறுமை இருந்தால் அழிவு உண்டாகாது. பொறாமை இருந்தால் அழிவு உண்டாகும்.”

**கடத்தல்காரன் பேராசை:**

“ஆசை அதிகமாகி அளவிற்கு மேல் சம்பாதித்து வைத்துக் கொண்டு, அதனைப் பாதுகாக்கக் கருதி, தங்கத்தையும், வைரத்தையும் மூட்டை கட்டிக் கடலில் ஒளித்து வைத்து, வலை வீசியும், தூண்டில் போட்டும் தேடிப்பார்க்கிறான்.”

ஆசைக்கும் ஓர் அளவு இருக்க வேண்டும்.”

**ஏமாறாதே:**

“ஏமாற்றும் மருந்துகளையும் போலிகளையும் கண்டு ஏமாறாதே!

குழந்தையிலிருந்து கிழவன் வரை மருந்து சாப்பிட்டே பிழைக்கின்றான்.

உங்களுக்கு என்றைக்கும் ஏற்ற மருந்து அம்மா என்ற மருந்து ஒன்றுதான்.”

**அக்கிரமும் உக்கிரமும்:**

“இன்று நாட்டில் அக்கிரமமும், உக்கிரமும் தலைவிரித்து ஆடுகின்றன.

பூகம்பம், ரயில் விபத்து, விமான விபத்து, வெடி விபத்து என்றெல்லாம் விபத்துக்கள் பெருகிவருகின்றன.

ஆணவம் தலைவிரித்து ஆடுவதனால் அழிவுகளும் தலைவிரித்து ஆடுகின்றன.

இந்நிலை நீடித்தால் அமைதி கிடைக்காது.”

**ஒரு புள்ளி கூட வளரவில்லை:**

“இங்கே ஆரம்ப காலந்தொட்டு வருகிறீர்கள். ஆனாலும் ஒரு புள்ளியளவு கூட வளர்ச்சி பெறவில்லை. நான் சொல்வதையெல்லாம் காதோடு வாங்கிக் காற்றோடு விட்டுவிடுகிறீர்கள்.

திருமணம்! அரசியல்! பதவி! பணம்! வியாபாரம்! என்றே வருகிறீர்கள்!”

**இதுதான் உலகியல்:**

“பணவசதி படைத்தவன், நல்ல உணவு வசதியிருப்பவன், அதிக சொத்து வைத்திருப்பவன் - இவர்கள் என்ன ஏமாற்றுவேலை செய்தாலும் வெளியே தெரிவதில்லை. அதையே சாதாரணமானவன் செய்தால் வெட்டவெளிச்சமாகி விடுகிறது. இதுதான் உலகியல்!”

**இன்றைய மக்கள்:**

“உழைத்து உயரவேண்டும் என்ற எண்ணம் இன்றில்லை. ஆன்மிகம் வளர்ந்தால் தான் அமைதி கிடைக்கும் என்ற எண்ணமும் மக்களிடையே இல்லை. அமைதியும் நிம்மதியும் ஆன்மிகத்தில் மட்டுமே உண்டு என்பதை உலகம் புரிந்துகொள்ள வேண்டும்.”

**உடைமைகள் குவிவதால் திருட்டு:**

“அதிகமாக நகை சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். அதிகமாக உணவுப் பொருளைச் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அதிகமாகப் பணத்தைச் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவரவரும் இறங்கினால் திருட்டுக்குத்தான் வழி வகுக்கும். அதை விடுத்துத் தானம், தருமம் செய்ய வேண்டும்.”



**வருங்காலம் பொல்லாத காலம்:**

“இனி வருகின்ற காலம் பொல்லாத காலம், கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.”

தாய்ப்பால் குடித்து வளரும் வழக்கம் மாறிவிட்டது. நல்லவர்கள் கள்ளர்களாகவும், கள்ளர்கள் நல்லவர்களாகவும் தெரியும் காலம் இது!”

**பண்டமாற்றம்; பணமாற்றம்:**

“பண்ட மாற்று இருந்து வந்த காலத்தை விட நகை மாற்றமும், பணமாற்றமும் வந்த பிறகு தான் வெட்டு குத்து மலிந்து வருகிறது.”

**கவர்ச்சியில் மயங்கும் உலகம்:**

“இன்றைய மக்கள், சினிமா, தொலைக்காட்சி, ஆடல், பாடல் என்ற கவர்ச்சிகளால் மயங்கிக் கானல் நீரை நோக்கி ஓடுகிறார்கள். கானல் நீர் தாகம் தணிக்காது. தரையில் நின்று நடனமாடினால் அடிபட்டுத் தப்பிக்கலாம். மரத்தின் மீது ஏறி நின்று நடனமாடினால் என்ன ஆவது?”

**படித்தவன் பரிதாப நிலை!**

“இன்று படித்தவனே அக்கிரமம் செய்கிறான். பாதை தவறி பாதாளத்தில் விழுகிறான்.”

**கூட்டங்களால் உண்டாகும் உணர்ச்சி:**

“ஒற்றுமை உணர்ச்சி ஏற்படுவதற்காகக் கூடுகிற கூட்டமாக இருந்தால் கூட்டம் நல்லது. ஆனால் இன்றோ கூட்டம் குழப்பங்களையும் கொலைகளையும் உருவாக்கி வருகிறது.”

**நிதியும் – நீதியும்:**

“நிதி கொடுத்து நீதியை விலைக்கு வாங்கிவிடலாம். என்னிடமிருந்து தப்ப முடியாது.”

**வருங்காலம் பொல்லாத காலம்:**

“எப்படி எப்படி ஏமாற்றலாம்? எப்படி எப்படி வேஷம் போடலாம்? எப்படி எப்படி நடிக்கலாம்? என்ற எண்ணங்கள்தான் மேலோங்கி வருகின்றன. மனித எண்ணங்களும் சுத்தமில்லை. செய்கைகளும் சுத்தமில்லை.

இதனால் வருங்காலத்தில் எழுதுகிற பேனாவே கத்தியாக மாறும். விரல்களே துப்பாக்கியாக மாறும். விஷயம் விஷமாக மாறும்.

ஆன்மிகம் பரவினால் தான் இவற்றைக் கட்டுப்படுத்த முடியும். எந்தத் துறையிலும் அமைதி கிடையாது. இயற்கைச் சீற்றத்தினால் அழிவு உண்டு.''

**கடத்தலும் கத்திக்குத்தும்:**

''ஒரு காலத்தில் அப்படி வாழ்ந்தோம்; இப்படி வாழ்ந்தோம்; ஆடினோம்; பாடினோம்; விஞ்ஞானத்தைக் கண்டுபிடித்தோம் என்று வாழ்கின்ற இந்தக் காலத்தில் கொலையும் பட்டப்பகலில் தான் நடைபெறுகிறது.

இவற்றையெல்லாம் தடுக்க ஆன்மாவைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

கவர்ச்சியினால்தான் கடத்தலும், கத்திக்குத்துகளும் நடக்கின்றன.''

**உலக நியதி:**

''கொடுத்தது கிடைக்காது. நினைப்பது நடக்காது என்பதுதான் இந்த உலக நியதி. இதைப் புரிந்து கொண்டு ஆன்மா உன்னை விட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வெள்ளை உள்ளம் வேண்டும். கள்ள உள்ளம் கூடாது.''

**உண்மையான மனிதன்:**

''கொலைவெறி, குடிவெறி, பணவெறி, காமவெறி போன்ற வெறிகள் இல்லாதவனே உண்மையான மனிதன்.''

**இன்றைய மனிதனுக்கு அழிவு :**

''இன்றைய மனிதனுக்குத் தான் வாழ்ந்துவரும் சூழ்நிலைகளைப் பொறுத்தும், தான் செய்யும் செயல்களைப் பொறுத்தும், விஞ்ஞான முன்னேற்றத்தின் விளைவுகளைப் பொறுத்தும், பணமோகத்தாலும், போதைப் பொருள்களாலும் அழிவு உண்டு.''

**அந்தக் காலம்: இந்தக் காலம்:**

''ஆதிகாலத்தில் கோட்டை கட்டி நாடாண்ட மன்னர்கள், போர் என்று வந்துவிட்டால் பொதுமக்களுக்குச் சேதாரம் இல்லாமல் பார்த்துக் கொண்டார்கள்.

கோட்டையைப் பிடித்துவிட்டால், நாட்டையே பிடித்துவிட்டதாக ஒப்புக் கொண்டார்கள்.

இன்றைக்கு விஞ்ஞானத்தால் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள்



மூலம் நாட்டிற்கும், மக்களுக்கும், உற்பத்திப் பொருள்களுக்கும் சேதாரம் விளைவிக்கப்படுகிறது. விஞ்ஞானத்தைக் கண்டுபிடித்தவனுக்கே அழிவு வருகிறது.

அன்றிருந்த பொதுநல உணர்வு இன்றில்லை. இன்றுள்ள அழிவுப் போக்குகளை ஆன்மிகத்தால் மட்டுமே கட்டுப்படுத்த முடியும்.''

**கட்டுப்பாடும் – தட்டுப்பாடும:**

''உலகத்தில் கட்டுப்பாடு இருந்தால் தட்டுப்பாடு வராது. தட்டுப்பாடு இருந்தால் கட்டுப்பாடு வராது.''

**உழைப்பும் – ஊதியமும்:**

''ஊதியத்திற்கேற்ற உழைப்பும் இல்லை; உழைப்பிற்கேற்ற ஊதியமும் இல்லை. இதுவே இன்றைய நிலை.''

**படித்தவனெல்லாம் மேதையல்ல...**

''இன்றைய மனிதர்களுக்குப் போதைப் பொருளே உணவாகிவிட்டது. படித்தவனெல்லாம் மேதையல்ல.''

**கொடிகளும்! கொலைகளும்!**

''குடி உயரக் கோல் உயரும் என்பது அந்தக் காலப் பழமொழி! இன்றோ கொடி உயரக் கொலை உயர்கிறது.''

**ஏமாற்றுகிற காலம் இது!**

''ஆன்மிகவாதி திருடனாகவும், திருடன் ஆன்மிகவாதியாகவும் உள்ள காலம் இது!

பிச்சைக்காரனும் ஏமாற்றிப் பிழைக்கிறான். போலிவேஷக்காரனும் ஏமாற்றிப் பிழைக்கிறான். ஏமாற்றிப் பிழைப்பதில் இருவரும் ஒன்று.

மனத்தில் உள்ளதை மறைத்துப் பேசப் பைத்தியக்காரனுக்குத் தெரியாது. ஆன்மிகவாதிக்கும் தெரியாது. அந்த வகையில் பைத்தியக்காரனும் ஆன்மிகவாதியும் ஒன்று.''

**பிள்ளைகளை வளர்ப்பதில் கட்டுப்பாடு தேவை:**

''பட்டியை விட்டு ஆடு நீங்கினால் நரிக்குச் சொந்தமாகிவிடும். உங்கள் பிள்ளைகளைக் கட்டுப்பாட்டுன் வளர்க்காமல் போனால் வழி தவறிப் போய்விடுவார்கள். அதன்பின் அவர்கள் உங்களுக்குச் சொந்தம் அல்லர்.''

**வேலிகளே பயிரை மேய்கின்றன:**

"வேலியே பயிரை மேய்கின்றது. நெருஞ்சி முள் குத்தினால் பரவாயில்லை. காரமுள் குத்தினால் என்ன ஆகும் என்று வேலிகட்குத் தெரியவில்லை.

தன் வீட்டு வாசற்படி தன்னையே இடிக்கும். தன் வீட்டு மின்சாரமே தன்னைத் தாக்கும்.

எப்படி ஏமாற்றலாம் என்றுதான் நினைக்கிறார்கள். வருபவர்கள் எல்லாம் ராஜாவாக வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

தெய்வம் ஒன்று இருக்கிறது என்ற அச்சம் இன்று எவனிடமும் இல்லை.

சட்டத்தின் பிடியிலிருந்து தப்பலாம். இந்தச் சக்தியின் பிடியிலிருந்து எவனும் தப்பமுடியாது."

**பணமும் – பாவமும்:**

"ஒருவனுக்கு எவ்வளவுதான் பணவசதி இருந்தாலும் அவன் செய்த பாவத்தின் தொடர்பினால் ஊனமுள்ள பிள்ளைகள் பிறக்கின்றன."

**இவ்வளவு பிரச்சனைகள் ஏன்?**

"ஆதிமனிதனுக்கு ஆடையில்லை; வீடு, வாசல் இல்லை. ஆதலின் அவனுக்குப் பிரச்சனைகளும் இல்லை. இப்பொழுதோ நாகரிக மனிதனாக இருக்கிறான். எல்லாவற்றையும் அனுபவிக்க எண்ணுகிறான். அதனால் பிரச்சனைகளும் அதிகமாகி வருகின்றன."

**படிப்பறிவும் போலி நாகரிகமும்:**

"படிப்பறிவாலும் போலி நாகரிகத்தாலும் இன்றைக்கு மனித உறவுகள் சீர்குலைந்துகொண்டு வருகின்றன.

தன்னிடம் வேலை செய்கிற வேலைக்காரன் நோயுற்றால் அவனுக்கு ஊசிபோடுவது தனக்குக் கௌரவக்குறைவு என்று மருத்துவன் நினைக்கிறான். அரசாங்க மருத்துவமனைக்குப் போ எனக்கூறி விரட்டுகிறான்.

இப்படிப்பட்ட மருத்துவனே முதுமைப் பருவத்தில் தன்னிடம் வேலைக்காரன் நன்றியாக இல்லையே என்று கவலைப்படுகிறான்.

அவனை மனிதாபிமானத்தோடு நடத்தாமல் அவனிடம் நன்றியை எதிர்பார்ப்பது எப்படி முடியும்?



என் சந்நிதிக்கு வருகிற முதலாளியும் ஒன்று. அவனது வண்டி ஓட்டியும் ஒன்று. ஆனாலும், என் சந்நிதியிலேயே அவனை அந்நியமாக நடத்துகிறான்."

**ஏற்றத்தாழ்வுகள்:**

"ஏற்றத்தாழ்வுகள் உன் கைவிரல்களிலேயும் இருக்கின்றன. சிறிய விரல்களும் இணைந்தால் தான் ஒரு பொருளை எடுக்க முடியும். தூக்க முடியும்; வைக்க முடியும்.

அவை ஒற்றுமையாக இணைந்து பயன் தருவது போல எல்லா மனிதர்களும் இணைந்து வாழ்ந்தால் தான் நாடும் உயரமுடியும். உலகமும் உயர முடியும்.

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு சக்தி இருக்கிறது. அது ஒன்றுபட்டுச் செயலாற்றினால் தான் பெரிய காரியங்களை நடத்த முடியும்."

**நாணயம் இல்லை:**

"இன்றைய மனிதனுக்கு எதிலும் நாணயம் இல்லை. ஒருவனை ஒருவன் அடித்துக் கொள்கிறான். உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும். அகத்தில் ஆணவம் இருக்கக் கூடாது. அன்பு இருக்க வேண்டும். ஆணவம் ஓங்கினால் அடிதடிதான் வளரும்."

**படிப்பால் மட்டும் பயனில்லை:**

"பள்ளியில் நீங்கள் படித்த படிப்பெல்லாம் நடைமுறை வாழ்வுக்கு ஒத்துவருவதில்லை. படித்தால் மட்டும் போதாது. பண்பாடு வளரவேண்டும்; உள்ளம் உயரவேண்டும்.

தெய்வ வழிபாடு, தருமம், வீடு, வாழ்க்கை என்ற அமைப்புகளெல்லாம் மனித உயிர்களுக்கு மட்டும்தான்."

**இன்றைய நடைமுறை வாழ்க்கை: அழுகல் வாழ்க்கை:**

"நிலத்தில் அதிகமான ஈரம் இருக்கிற போது விதை விதைத்தால் முளைக்காமல் அழுகிப் போகும். அதுபோல உலகில் நடைமுறை வாழ்வும் அழுகலாகத்தான் இருக்கும்."

**இன்றைய உலகம்:**

"உலகம் உருண்டை வடிவம் உடையது. ஒரு வீடும் உலகமும் ஒன்றுதான்.

ஆன்மிகம், வீடு எல்லாத்துறைகளிலும் சீர்கேடுகள் உள்ளன.

எப்படி வேண்டுமானாலும் வாழலாம்; எப்படி வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம்; அடுத்தவனைக் கொலையும் செய்யலாம் என்ற நிலைமை உருவாகிவிட்டது.

ஆன்மிகத்தில் நான்கு பேர் நல்லவர்களாக இருந்தால் நாற்பது பேர் அயோக்கியர்களாக இருக்கிறார்கள்.

பக்தி ஒருபக்கம் என்றால் பாவனை ஒருபக்கமாக இருக்கிறது.

கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலத்தை ஒவ்வொருவரும் நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும்.''

**ஆசாபாசம் காரணமாகவே ஆட்டம் பாட்டம்!**

''எப்படி ஏமாற்றலாம்? யாரை ஏமாற்றலாம்? எப்போது ஏமாற்றலாம்? என்ற நிலைமை தான் இப்போது உள்ளது.

இருப்பது போதும் என்று நினைக்க வேண்டும். ஆசாபாசங்கள் காரணமாகவே நீங்கள் ஆடிப்பாட வேண்டியுள்ளது.

**இன்றைய அவலம்:**

''நாடே கொந்தளிப்பில் உள்ளது. இன்றைய கால நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். பத்து ரூபாய்க்குப் பழரசத்தைக் கொடுப்பதற்குப் பதிலாக விஷத்தைக் கொடுக்கும் காலம் இது!

பாலில் தண்ணீர் கலப்பதும், பாலில் போதைப் பொருள் கலப்பதும், பொடி தூவிப் பணத்தைப் பறிப்பதும், அது தருகிறேன், இது தருகிறேன் என்று ஆசைவார்த்தை காட்டுவதும் நடக்கின்றன.

மனிதனுடைய எண்ணம் எதுவோ அதுவே இன்றைக்கு அறிவு என்று சொல்லப்படுகிறது. தீமையிலிருந்து விலக்கி நல்லனவற்றில் செலுத்துவது அறிவு. இன்று அறிவுக்கு அர்த்தம் வேறாக இருக்கிறது.''

**எல்லாம் கெட்டு ஆன்மிகத்திற்கு வருகிறான்:**

''சிறு வயதில் விளையாட்டுப் புத்தியுடனும், பக்குவம் இல்லாமலும் இருக்கிறான்.

வளர வளர பக்குவம் அடைந்து, அறிவு வளர்ச்சியும் அடைகிறான். ஆனால் அந்த அறிவைத் தகாத வழியில் செலுத்துகிறான்.

பாலில் தண்ணீர் கலப்பது; கஞ்சா, போதை, குடி போன்ற காரியங்களில் அறிவைச் செலவிடுகின்றான். மகனுக்கும், மகளுக்கும், மனைவிக்கும் ஊற்றிக் கொடுக்கின்றான். அதனால்



உறவுமுறைகள் கூடத் தெரியாமல் நடந்து கொள்கிறான். நெருப்பு எது? மின்சாரம் எது? என்ற வித்தியாசம் தெரிவதில்லை. பந்தபாசம் தெரிவதில்லை.

பதவி, ஆசை, கௌரவம் என்ற போதைகளால் தாய், தகப்பன் கூடத் தெரிவதில்லை.

கடைசியில் எல்லாம் கெட்டு ஆன்மிகத்திற்கு வருகிறான்.''

**இன்றைய மக்கள்!**

''இன்றைய மக்கள் தனக்காகவும், தங்கத்திற்காகவும், பணத்திற்காகவும் உருகுகிறார்களே தவிர மற்றவர்களுக்காக உருகுவதில்லை.''

**நாகரிகம் என்ற பெயரால்...**

''இன்றைய மனிதன் நாகரிகம் என்ற பெயரால் அழிந்து கொண்டு வருகிறான். எதையும் திருத்த முடியாது என்ற நிலைமை வந்து கொண்டிருக்கிறது.

எந்த நிர்வாகமும் நிர்வாகமாக இருக்காது. ஆன்மிகம் என்ற அடிப்படையில் அமைகிற நிர்வாகம் தான் நிலைத்து வளரமுடியும்.

எமன் உங்களை நாடி வருவதற்கு மாறாக நீங்கள் எமனை நாடிப் போகிற நிலைமைகள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன.''

**நாட்டில் பற்றாக்குறை ஏன்?**

''மனிதர்களிடையே உள்ள தீய எண்ணங்களால் தான் நாட்டில் பற்றாக்குறை ஏற்படுகிறது.

நல்ல எண்ணங்களோடு செயல்பட்டால் பற்றாக்குறை வராது. கெட்ட எண்ணத்தோடு செயல்பட்டால் பற்றாக்குறை வரத்தான் செய்யும்.

நல்ல எண்ணங்களோடு செயல்படுகிற போது தீவினைகள் வருவதில்லை. கெட்ட எண்ணத்தோடு செயல்படுகிறபோது தீவினைகள் பெருகுகின்றன.''

**ஆசைகளால் ஆபத்து:**

''ஆசை என்பது நெருப்பு போன்றது. வேகின்ற பாகு போன்றது.

அந்த நெருப்பிலும் பாகிலும் விழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.''

**பிரச்சனைகள் ஏன்?**

''ஒரு குழந்தை குழந்தையாகவும், ஒரு கணவன் கணவனாகவும்,

ஒரு மனைவி மனைவியாகவும், ஒரு சகோதரன் சகோதரனாகவும், ஒரு சகோதரி சகோதரியாகவும், ஒரு மகன் மகனாகவும் முறைப்படி நடந்து கொண்டாலே நீங்கள் எல்லோரும் நல்ல முறையில் வாழலாம். அவ்வாறு வாழாமல் இருப்பதால் தான் இவ்வளவு பிரச்சனைகள்!

உங்கள் எண்ணமெல்லாம் கலப்படமாக உள்ளது. எண்ணங்களில் தூய்மை இல்லை. இன்னும் எவனும் திருந்தவில்லை.''

**பாரம் ஏறி வருகிறது:**

''இன்றைய உலகில் போலிவேடம் அதிகரித்து வருகிறது. ஆதலால் உலகின் பாரமும் ஏறிவருகிறது.''

**ஆணவம் இருக்கும் வரை:**

''உங்கள் உள்ளத்திலும் எண்ணத்திலும் ஆணவம் என்ற ஒன்று இருக்கிற வரை உங்கள் உள்ளத்திற்கு அமைதி கிடைக்காது.

பொருள்! அருள்! அமைதி! இவை வேண்டுமென்றால் அம்மா வேண்டும்!''

**பாமரனும் படித்தவனும்:**

''பாமர மக்களும் ஆன்மா உள்ளவர்களே! அவர்கள் புரிந்து கொண்ட ஒன்றைப் புரியாதது போலச் செய்ய மாட்டார்கள். புரியாமல் தவறு செய்பவர்கள் அவர்கள்.

ஆனால் படித்தவர்களோ புரிந்து கொண்டே புரியாதது போல நடிப்பார்கள். அத்துடன் எல்லாம் புரிந்து கொண்டவர்கள் போலவும் நடிப்பவர்கள்.''

**பணக்காரர்களுக்கு:**

''உனக்குப் பணம் இருந்துவிட்டால் மட்டும் போதாது. உன்னைச் சுற்றியிருப்பவர்களின் எண்ணங்கள் எப்படி இருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.''

**அரசியலும் பாமர மக்களும்:**

''இன்றைய அரசியல் முறையிலிருந்து பாமர மக்கள் தப்பிக்க என்ன வழி? என்று நீங்கள் ஆராய வேண்டும்.''

**இன்றைய உலகில் மனிதன்:**

''இன்றைய மனிதன் உலகில் தத்தளித்துக் கொண்டிருக்கிறான்.



உணவுக் கட்டுப்பாடு தேவை. கண்களைப் பத்து நிமிடம் மூடி மனத்திற்கு ஓய்வு தரவேண்டும். தியானம், மௌனம் இருக்க வேண்டும்.

போட்டி பொறாமைகள் சாவுக்கே வழிவிடுகின்றன.''

**சூழ்நிலை காரணமாக:**

''நேற்றுவரை குழந்தையாக இருந்தபோது அன்பாக இருந்த பிள்ளை, இன்று வளர வளரக் கெட்ட பிள்ளையாக மாறுகிறான். அழுக்குடன், கிருமி சேரும் போது நோயாக மாறுகிறது. அதுபோலக் கெட்ட சூழ்நிலையில் வளரும் பிள்ளைகளுடன் நல்ல சூழ்நிலையில் வளரும் பிள்ளைகள் சேரும்போது கெட்ட குணங்கள் உண்டாகின்றன.''

**அடிதடிகள் ஏன்?**

''ஆடு மாடுகளுக்கும் உள்ளம் உண்டு. கிடைத்ததைக் கொண்டு வாழ்கின்றன. மனிதனுக்கு மட்டும் எது கிடைத்தாலும் திருப்தி வருவதில்லை. அதனால் தான் கூச்சலும் அடிதடியும் ஏற்படுகின்றன.''

**எவன் மனிதன்?**

''வாழ்க்கையில் அல்லல்பட்டும், இறப்பைப் பற்றித் தெரிந்திருந்தும் ஏழைகளுக்காக இருப்போம் எனவும், நல்லதற்காக இருப்போம் எனவும், தருமத்திற்காக இருப்போம் எனவும், அதருமத்தை அழிப்பதற்காக இறப்போம் எனவும் நினைப்பன் எவனோ அவன் தான் மனிதன்.''

**கொடுமையிலும் கொடுமை:**

''துப்பாக்கியைக் காட்டிப் பணத்தையும் உயிரையும் பறிப்பது கொடுமையிலும் கொடுமை. நாகரிகம் பெருகிவரும் நாடுகளில் இந்தக் கொடுமைகள் தான் வளர்ந்து வருகின்றன.

**இன்றைய மக்களின் மனப்பான்மை:**

''உழைக்காமல் பிழைக்க வேண்டும். ஏமாற்றியாவது பிழைக்க வேண்டும். திருடியாவது பிழைக்க வேண்டும். கொலை செய்தாவது நன்றாக வாழ வேண்டும் என்ற மனப்பான்மை மக்களிடம் பெருகி வருகிறது. இம்மனநிலை மாறி மக்கள் திருந்த வேண்டும். அதுவரை எங்கும் எவனும் நிம்மதியாக இருக்க முடியாது.''

**சந்தேகப்படும் காலம்:**

''நல்லவன் ஒருவன் எதையாவது நல்ல உள்ளத்துடன் கொடுத்தால் கூடச் சந்தேகத்துடன் பார்க்க வேண்டிய காலமாக

இது மாறிவிட்டது. சோம்பேறித் தனம் அதிகமாகி விட்டது. உழைப்பிற்கும் உயர்விற்கும் வழி சொல்ல வேண்டும்.''

**எதற்கும் பயனில்லாத மனிதன்:**

''குளத்தில் உள்ள தண்ணீரின் உயரத்தைப் பொறுத்துத் தாமரையின் உயரமும் இருக்கும். அதுபோல மனிதனுடைய தரத்திற்குத் தக்கபடி அவனவன் நிலை இருக்கிறது.

அவ்வப்போது இவன் தன் நிலையை மாற்றிக் கொள்ளவும் செய்கிறான். குட்டையில் ஊறிய மட்டையாவது நாராகப் பயன்படுகிறது. இன்றைய மனிதன் அதற்கும் பயனில்லை.''

**உன் திறமை என்று எண்ணாதே!**

''ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. அதுவே உன்னை இயக்குகிறது. அவ்வாறிருக்க உன் திறமையால் வளர்வதாகவும் உயர்வதாகவும் நினைத்துக் கொள்ளாதே!''

**உழைப்புக்கும் – விவசாயத்துக்கும்:**

''இன்றுள்ள சூழ்நிலையில் உழைப்புக்கும் விவசாயத்துக்கும் முக்கியத்துவம் கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் மீண்டும் இவற்றுக்கு முக்கியத்துவம் உண்டு.''

**அரசியல் உலகம்:**

''இனி அரசியல் அரசியலாக இருக்காது. அரசியல் உலகம் கொள்ளையர்களின் உலகமாகவும், கொலைகாரர்களின் உலகமாகவும் மாறும். சட்டம் சட்டமாக இருக்காது. மக்கள்தான் சிந்தித்து மாற்றுவழி தேடவேண்டும்.''

**பரம்பரையை எண்ணி...**

''இருப்பவன் இல்லாதவனைப் பார்த்து ஏங்குகிறான். இல்லாதவன் இருப்பவனைப் பார்த்து ஏங்குகிறான். ஏன் பிறந்தோம்! ஏன் வளர்ந்தோம்? என்றெல்லாம் சஞ்சலப் பட்டுக் கொள்ளாமல் தன் பரம்பரையை நினைத்து வாழ வேண்டும்.''

**சட்டங்களும் – அதிகாரங்களும் – அரசாங்கங்களும்:**

''சட்டங்களும், அதிகாரங்களும், அரசாங்கங்களும் இருந்தால் மட்டும் போதாது. மக்களிடம் உழைக்கின்ற மனப்பான்மை பெருக வேண்டும். உழைக்காமல் உயர முடியாது.''



**வெளித் தோற்றத்தை வைத்து...**

''அவன் உருவம் சிறியது, இவன் உருவம் பெரியது, அவன் கறுப்பு, இவன் சிவப்பு, அவன் அப்படி இவன் இப்படி என்று அவனவன் வெளித்தோற்றத்தை வைத்து எடை போடக் கூடாது. அவனவன் உள்ளத்தில் உள்ள அழுக்கை வைத்து எடை போட வேண்டும்.''

**எது எது எப்படி இருக்க வேண்டும்:**

''கரும்பில் இனிப்பு இருக்க வேண்டும்; அதில் விஷம் இருக்கக் கூடாது.

மனிதனுக்குப் பசி இருக்க வேண்டும், பிணி இருக்கக் கூடாது.

உடம்பு என ஒன்று இருக்க வேண்டும், அதில் தீய எண்ணம் இருக்கக் கூடாது.

கண் இருக்க வேண்டும், அதன் பார்வை நன்றாக இருக்க வேண்டும்.

காது இருக்க வேண்டும், அது நல்லதையே கேட்க வேண்டும்.

நாக்கு இருக்க வேண்டும், அது நல்லதையே பேச வேண்டும்.

ஒருவனுக்குச் சக்தி இருக்க வேண்டும், உள்ளத்தில் சதி இருக்கக் கூடாது.

ஒருவன் பின்னால் கூட்டம் இருக்கலாம். அதை வைத்துக் குழப்பம் உண்டாக்கக் கூடாது.''

**நடிப்பவனை எழுப்ப முடியாது:**

''குடிகாரனைக் கூட அவனுடைய நல்ல குணத்தைக் கண்டு பிடித்து அதை வைத்து அவனைத் திருத்தி விடலாம். ஆனால் தூங்குபவனைப் போல நடிப்பவனை எழுப்பவே முடியாது.''

**நிலையாமை உணர்வு தேவை:**

''ஒருவன் பிறந்து வளர்ந்து, சொத்து சேர்த்துப் புகழ் அடையும் காலத்தில், உற்றாரும் உறவினரும் அவனைப் புகழ்ந்து பேசுவார்கள்.

வளர்த்த புகழ், சேர்த்த சொத்து, இவற்றையெல்லாம் விட்டு விட்டு, ஆன்மா உடலை விட்டுப் பிரிந்து போன பின்பு மணிக் கணக்கில் காத்திருக்க மாட்டார்கள்.

சவத்தை எப்போது எடுப்பார்கள்? என்றுதான் கேட்பார்கள்.

வாழ்க்கையின் நிலையாமையை எண்ணிப் புரிந்து கொண்டும். உணர்ந்து கொண்டும் வாழ வேண்டும்.''

**எதிர் வரும் காலங்களில்...**

"இனிப் பசியும் வறுமையும் அதிகமாகும்; தண்ணீர் கஷ்டமும் வரும்.''

**மக்களே காரணம்!**

"இன்றைய அரசியல் அச்சு இல்லாத வண்டி போல ஓடிக்கொண்டிருக்கிறது. மக்கள் உள்ளத்தில் அழுக்கு ஏற்பட்டால் அரசியலிலும் நாற்றம் அடிக்கத்தான் செய்யும்.''

**சோம்பேறிகளின் கூட்டம்:**

"அனைத்துத் துறைகளிலும் பற்றாக் குறை உண்டு. இன்று உழைப்பில்லை; உலகம் சோம்பேறிகளின் கூட்டமாக மாறி வருகிறது. தானும் செயல்பட மாட்டான்; மற்றவர்களையும் செயல்பட விடமாட்டான்''.

**நீ திருந்து:**

"மற்றவர்களைத் திருத்த வேண்டாம் நீ திருந்தினால் போதும்.''

**இந்தக் காலம் பொல்லாத காலம்:**

"வாயிற் கதவுகள் இல்லாமல் கூட ஒரு காலத்தே வீடுகள் இருந்தன. அது அந்தக் காலம்.

இன்றோ ஆலயத்திற்கும் உண்டியலுக்கும் கூடப் பெரிய பூட்டாகப் போட வேண்டியிருக்கிறது இது இந்தக்காலம்.

இந்தக் காலம் பொறாமையும் பொச்சரிப்பும் அதிகமாகிவிட்ட காலம்; பொல்லாத காலம்.''

**எது இருந்தும்...**

"உலகத்தில் தங்கம் இருக்கிறது விற்பனை இல்லை. பூமி இருக்கிறது உழைப்பு இல்லை. தண்ணீர் இருக்கிறது உணவிற்கு வழியில்லை. பணம் இருக்கிறது குணம் இல்லை.''

**படிக்காதவன்:**

"படிக்காதவனிடமும் திறமை உண்டு. அவனை ஏளனமாக நினைக்கக் கூடாது.''



**போலிச் சாமியார்கள்;**

"சாமியார்கள் வேடம் போட்டு உலகக்தை ஏமாற்றினாலும், ஒரு நாள் வேஷம் கலையும். அவ்வாறு கலையும் போது பொறியில் அகப்பட்ட எலியைப் போலத் தவிக்க நேரிடும்.''

**முப்பது வயதிலேயே சலிப்பு:**

"வாழ்க்கையில் 50 வயதிலும் 80 வயதிலும் ஒருவனுக்குச் சலிப்பு வருவது இயற்கை. இன்றோ 30 வயதிலேயே சலிப்பு தட்டுகிறது. காரணம் ஒரே எண்ணம் ஒரே செயல் இல்லை.''

**இன்றைய மனிதன்:**

"எத்தகைய அழிவுகளெல்லாம் வரப்போகின்றன என்று அறியாமல் இன்றைய மனிதன் விளையாடிக் கொண்டிருக்கின்றான்.

உயிர் வாழ்க்கைக்கு மழை அவசியம்.

எந்த ஒரு விஞ்ஞானத்தாலும் தண்ணீரைக் கண்டு பிடிக்க முடியாது.''

**சோம்பலும் – சாம்பலும்:**

"மக்கள் சோம்பேறிக் கூட்டமாக இருந்தால் சாம்பலாக வேண்டியது தான். உழைக்காமலே பணம் வேண்டும், புகழ் வேண்டும் என்று மனிதன் அலைகிறான். உழைப்பில்லாமல் உயர்வு இல்லை.''

**குடும்பக் கட்டுப்பாடு:**

"மனக் கட்டுப்பாடு இருந்தால் குடும்பக்கட்டுப்பாடு தேவையில்லை.''

**உன்னைச் சுற்றியுள்ள ஆபத்துகள்:**

"நீ வசிக்கும் பூமியில் ஒரு பக்கம் பூகம்பம்! ஒரு பக்கம் வெள்ளம் என்ற அழிவுகள் சூழ்ந்திருக்கின்றன. இந்த அழிவுகட்கிடையேயும் தருமம் செய்வதில் தான் உன் வளர்ச்சி அடங்கியிருக்கிறது.

ஒவ்வொருவனும் முடிந்தவரை தருமம் செய்ய வேண்டும். இல்லையென்றால் அதருமம் தலை தூக்கும்.

தொண்டு செய்யவில்லையென்றால் துண்டு துண்டாக வேண்டி வரும்.

அன்பு இல்லையென்றால் வம்புகள் பெருகும். உலகம் புரிந்து கொண்டு நடக்க வேண்டும்.

அறுபது வயது ஆறு வயதாக முடியாது. நூறு வயது ஒரு வயதாக முடியாது.

உங்கள் வாழ்க்கை ஒரு இயந்திரம் போல ஓடிக் கொண்டிருக்கிறது.''

**ஆடை அலங்காரங்கள்:**

"உயிர் என்ற ஒன்று இல்லாவிட்டால் உடம்புக்கு அசைவு கிடையாது. அப்படிப்பட்ட உடலுக்கு ஆடை அலங்காரம் என்று முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்.''

**வெளி வேஷம் கூடாது:**

"பூசலும், வேஷமும் ஒருவனிடம் இருக்கக் கூடாது. இது நடுங்கி ஒடுங்கி வேஷம் போடுகிற காலமாக இருக்கிறது.''

தருமம் என்ற பெயரில் கெட்டவனும் நல்லவனாகப் பார்க்கிறான். உணர்ச்சி வசப்பட்டால் அவனவன் வேஷம் கலைந்து விடும்.''

**பழகும் மனிதர்கள்:**

"ஒருவன் உள்ளே இருக்கும் அழுக்குகளைத் தெரிந்து கொள்ளாமலும், நல்லவனா, கெட்டவனா என்ற பாகுபாடு அறிந்து கொள்ளாமலும் இன்றைய மக்கள் பழகுகிறார்கள்.''

**கிடைக்கும் போது அருமை தெரிவதில்லை:**

"மழை, உணவு, காற்று, ஒளி என்னும் இவைகள் கிடைத்துக் கொண்டே இருக்கும் போது அவற்றின் அருமை தெரியவில்லை. உங்களுக்கு இவை கிடைக்காமல் போகும் போதுதான் அவற்றின் அருமை தெரியும்.''

**நான் பொறுப்பு அல்ல:**

"திருடனை அம்மா ஏன் பிடிக்கக் கூடாது என்று நினைக்கிறீர்கள். திருடனுக்கு நீயே கைகொடுத்துத் தூக்கி விட்டு விட்டு அம்மாவைக் குறை சொல்வதில் பயனில்லை.''

**எத்தனை அறிவாளிகள் தோன்றியும்...**

"எத்தனை அறிவாளிகள் தோன்றியும் யாரையும் திருத்திய பாடில்லை.''

**சாமர்த்தியமாக அபகரிப்பான்:**

"நீ சும்மா இருக்கும் போது உனக்குத் தேவையானவற்றைச் சொல்லி, அவனுக்குத் தேவையானவற்றைப் பறித்துக் கொள்வான்.''



**நல்லவனிடமும் கள்ளத்தனம்:**

"நல்லவன் என்று மற்றவர்களால் சொல்லப்படுபவனிடமும் கள்ளத்தனம் இருக்கும்.''

**பெண்கட்குப் பாதுகாப்பு இல்லை:**

"பெண்களுக்கும் அரசியலுக்கும் பாதுகாப்பு இல்லை. வீட்டிலிருக்கும் பெண்களுக்கும் பாதுகாப்பு இல்லை.

**கூட்டமாகச் சேர்ந்து கொண்டு சொன்னால்...**

"200 பேர் சேர்ந்து கொண்டு சொன்னால் கெட்டதையும் நல்லதாக ஏற்றுக் கொள்கிறார்கள். நல்லது ஒன்றை இரண்டுபேர் எடுத்துச் சொன்னால் அதை எவரும் கேட்பதில்லை. கூட்டமாகச் சேர்ந்து கொண்டு சொல்கிற கெட்டது எடுபடுகிறது. அந்தக் காலத்தில் தவறுகள் எனக் கருதப்பட்டவை இந்தக் காலத்தில் சரி என்று ஆகிவிட்டன.''

**வெளித் தோற்றம் அகத் தோற்றம்:**

"ஒரு பசுவை விலைக்கு வாங்குகிறவர்கள் அதன் மடியைப் பார்த்து வாங்குகிறார்களே தவிர, அதன் பருவத்தைப் பார்த்து வாங்குவதில்லை. அதுபோல மனிதனுடைய வெளித் தோற்றத்தைப் பார்த்து மதிக்கிறார்களே தவிர உள்ளத்தைப் பார்ப்பது இல்லை.''

**நல்லது கெட்டது தெரியாத உலகம்:**

"அந்தக் காலத்தில் மக்களுக்கு நல்லது கெட்டது தெரிந்தது. இந்தக்கால மக்களுக்கு நல்லது கெட்டது தெரியவில்லை. ஆன்மிகத்தைப் பரப்பாததே இதற்குக் காரணம். ஆதலால் மக்களிடம் ஆன்மித்தைப் பரப்ப வேண்டும். பத்துபேர்க்குச் சக்தி மாலை போடு! அகண்டத்தில் எண்ணெய் ஊற்றச் சொல்! என்று உனக்கு நான் சொல்வதெல்லாம் ஆன்மிகம் பரப்புவதற்காகவே.''

**எப்படி வாழ வேண்டும்?**

"பட்டறிவு, பகுத்தறிவு, பக்தியறிவு என்ற மூன்றின் துணை கொண்டு வாழ வேண்டும். பகுத்தறிவு பேசிக் கொண்டு போதையிலும் கஞ்சாவிலும் வாழக் கூடாது. அடிகளார் காலத்தில் வாழ்கிறேன் என்ற நினைவோடு வாழவேண்டும்.''

**மனத்தைப் பக்குவப்படுத்து:**

"விலங்கினத்திற்கும், பறவை இனத்திற்கும் தனித்தனிக் குரல் வளம் உண்டு. அதைப் பயன்படுத்தி அவற்றை ஏமாற்றாதே! உன்

கடமையை நீ செய்! பக்தி என்று இரு! கத்தி என்று இருக்காதே. உன் கடமையை நீ ஒழுங்காகச் செய்! மனத்தைப் பக்குவப் படுத்திக் கொண்டு வாழப் பழகு!

**இறப்பு விகிதம்:**

"ஏதோ கடல்! ஏதோ சூரியன்! ஏதோ நட்சத்திரம்! என்று ஒன்றும் புரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

மனிதன் காட்டிலும் குகையிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் போது இறப்பு விகிதம் குறைவாக இருந்தது. பாதுகாப்போடு வாழும் இந்தக் காலத்தில் தான் இறப்பு விகிதம் அதிகமாக உள்ளது."

**மனித நேயம் குறைந்து விட்டது:**

"மக்கள் தொகை அதிகமாகி விட்டது; மனித நேயம் குறைந்து விட்டது. அதனால் மனித காயம் அதிகமாகிவிட்டது."

**படித்தவன்: படிக்காதவன்:**

"படித்தவன் எல்லாம் அனுபவித்தவன் திருந்த மாட்டான்; படிக்காதவன் எதையும் அனுபவிக்காதவன் திருந்தி விடுவான்."

**வளர்ந்து வரும் வெறிகள்:**

"இனவெறி, மதவெறி, பணவெறி, பதவிவெறி! ஆகிய வெறிகள் இன்று பெருகி வருகின்றன."

**பாதுகாப்பற்ற வாழ்க்கை:**

"அந்தக் காலத்தில் வீடுதான் உனக்குப் பாதுகாப்பிற்காக இருந்தது. இந்தக் காலத்தில் துப்பாக்கிதான் பாதுகாப்பு."

**உனக்கே அழிவு தேடுகிறாய்:**

"விஞ்ஞானத்தின் மூலம் துப்பாக்கியை உற்பத்தி செய்து உனக்கே நீ அழிவைத் தேடிக் கொள்கிறாய்."

**அழிவுகளும் அக்கிரமங்களும் அதிகமாவது ஏன்?**

"ஐந்துபேர், பத்துபேர் மட்டும் நல்லவர்களாக இருந்து, 10 லட்சம் பேர் கெட்டவர்களாக இருந்தால் உலகம் எப்படி நல்லதாக இருக்கும்?"

**யானை வரும் முன்னே! மணி ஓசை வரும் பின்னே!**

"உலகம் ஒரே உருண்டையாக இருந்தலும் பக்கத்து நாட்டுடன்



சண்டை! பக்கத்து மாநிலத்துடன் சண்டை! எனச் சச்சரவுகள் தொடர்கின்றன.

நகைக்காகச் சண்டை பணத்துக்காகச் சண்டை! என எங்கும் சண்டைகள்!

- இவையெல்லாம் மனிதனுடைய பொறாமைக் குணத்தால் ஏற்படுபவை.

எந்தக் துறையிலும் வளர்ச்சி என ஒன்று இருந்தால் எதிர்ப்பு என ஒன்றும் இருக்கும். இவையெல்லாம் அழிவிற்கான அறிகுறிகள்.

யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே! என்பதற்கு ஏற்றபடி இந்தச் சண்டைகள் எல்லாம் பின்னால் வரப்போகும் அழிவிற்கு அறிகுறிகள்."

**உறவினர்கள் பங்குபோட வருவார்கள்:**

"இனி உழைப்பு இருக்காது; ஆனால் உன் சொத்தில் பங்குபோட உன் உறவினர்கள் வருவார்கள்."

**தடியெடுத்தவன் தண்டல்காரன்:**

"இன்று நாட்டில் கட்டுக்கோப்பு குலைந்து வருகிறது. அதனால் தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற நிலை உருவாகி வருகிறது. ஆன்மிகத்தை வைத்துத்தான் அவனவன் ஆணவத்தை அழிக்க முடியும்."

**மனித உறவுகள்:**

"இன்றைய மக்களிடம் உதட்டளவுதான் பழக்கமும் உறவும் அமைந்திருக்கின்றன. அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று வாயளவில் சொல்வார்கள் செயலளவில் இருக்காது. இத்தகைய நிலையில்தான் மனித உறவுகள் இருக்கின்றன."

**அரசியல் துறை:**

"இன்றைய அரசியல் துறை அநாதை ஆகிவிட்டது."

**இரக்கமில்லாத சமுதாயம்:**

"அந்தக் காலத்தில் பக்கத்து வீட்டில் யாராவது இறந்துவிட்டால் துக்கம் விசாரித்து விட்டு, அழுதுவிட்டு வருவார்கள். ஆனால், இப்பொழுதோ அக்கம் பக்கத்தில் உள்ளவர்களைப் பற்றிக் கவலைப் படுவதே இல்லை. அந்த அளவு இரக்கமில்லாத சமுதாயமாக இருக்கிறது."

**அரசியலும் – மதமும்:**

“இன்றைய அரசியல் வாதிகளுக்கும் மதவாதிகளுக்கும் மதம் பிடித்து விட்டது. சட்டத்தில் ஓட்டைகள் விழுந்து விட்டன. அவனை அடித்து இவனும், இவனை அடித்து அவனும் தலைவனாகி வருகிறான்.”

**நாடு போகிற போக்கு:**

“எந்தெந்த நேரத்தில் எந்தெந்த ஆபத்து வரும் என்று சொல்ல முடியாது. சொத்து, சுகம், படிப்பறிவு, பட்டறிவு எவையும் கூட வராது.”

**தண்ணீருக்கும் விலை:**

“மரத்தின் பலனை அனுபவிக்கிறீர்கள். அந்த மரத்திற்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும் என்ற உணர்வு வருவதில்லை. பசுவின் பாலை விற்றுப் பிழைக்க எண்ணுகிறீர்கள். அதற்கு வேண்டிய தீனி வைக்க வேண்டும் என்ற மனம் வருவதில்லை.

இன்று பசும்பாலைவிடச் சுத்தமான தண்ணீர் அதிக விலைக்கு விற்கப்படுகிறது.”

**பிள்ளை வளர்ப்பு:**

“நாளை என்ன நடக்கும் என்று தெரியாது. உங்கள் பிள்ளைகளுக்கு ஒழுக்கமும் பக்தியும் ஊட்டி வளர்க்க வேண்டும்.

அந்தக் காலத்தில் வீட்டில் என்ன இருக்கிறது என்று மனைவிக்கு மட்டும்தான் தெரியும். கணவனுக்குத் தெரியாது.

இந்தக் காலத்தில் பிள்ளைகளைக் கவனிக்காமல் கணவனும் மனைவியும் சேர்ந்து குடிக்கிறார்கள்.

பெரியம்மா, சின்னம்மா, வேலைக்கார அம்மா - இவர்களால் பிள்ளைகளை வளர்க்க முடியாது. பெற்ற அம்மாவால்தான் பாசத்துடன் பிள்ளைகளை வளர்க்க முடியும்.”

**எப்படி உயிர் வாழப் போகிறீர்கள்?**

“இப்பொழுது கால்பங்கு சுத்தமான தண்ணீர்தான் உங்களுக்குக் கிடைக்கிறது. முக்கால் பங்கு அசுத்தமே பரவியுள்ளது. இந்நிலைமை தொடர்ந்தால் எப்படி உயிர்வாழப் போகிறீர்கள்?”

**உழைப்பும் – பிழைப்பும்:**

“உழைக்காமலும் இருக்க முடியாது. பிழைக்காமலும் இருக்க முடியாது. உழைத்துப் பிழைக்க வேண்டும்.”



**பணக்காரர்களுக்கு:**

“நான் பணக்காரன் என்று எவனும் இங்கே பெருமைப் பட்டுக் கொள்ளக் கூடாது. ஒளி இல்லை என்றால் உன் நிழல் கூட உன்னை விட்டு ஒதுங்கிவிடும். உன் செல்வம் எதற்கும் உதவாது. எந்த நேரத்தில் உன் ஆன்மா இதைச் செய்! என்று கட்டளையிடுகிறதோ அந்த நேரத்திலேயே அந்த நல்ல காரியத்தைச் செய்து விடுவது நல்லது.”

**இன்றைய அரசியல்:**

“இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் நிலையான அமைதி, நிலையான வாழ்வு, நிலையான உறக்கம் கிடைக்காது. எதற்கெடுத்தாலும் பயம் ஏற்படும். எவனையும் பிழைக்க விடமாட்டான்.”

**உண்மையும் போலியும்:**

“வைரக் கல்லைவிடக் கண்ணாடிக் கல் பளபளப்பாக இருக்கும். இங்கே உண்மையைவிடப் போலிகளுக்குத்தான் மதிப்பும் மரியாதையும் அதிகம். அவற்றைக் கண்டு மயங்காமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.”

**மாறிவரும் கலாச்சாரம்:**

“சமுதாயத்தில் அன்பும், பண்பும் இணைந்திருக்க வேண்டும். அவ்வாறு வாழாத போது தான் பிரச்சனைகள் வருகின்றன. பிரச்சனைகள் வரும்போது பிரிவினைகள் ஏற்படுகின்றன. இன்றைய மனிதனின் கலாச்சாரம் கள்ளும் சாராயமுமாக மாறிவிட்டது.”

**எம்மதமும் சம்மதம்:**

“இப்பொழுது எங்கே பார்த்தாலும் மதவெறி, மதவாதம், சாதி வெறி, சாதிக் கலவரம் வெடிகுண்டு, அடிதடி எல்லாம் பெருகி வருவதைப் பார்க்கிறீர்கள். அதனால்தான் ஆரம்ப காலத்திலிருந்து எம் மதமும் சம்மதம் என்ற தத்துவத்தை உங்களிடம் பதிய வைத்து இங்கே நான் ஆன்மிகம் வளர்த்துக் கொண்டு வருகிறேன்.”

**உழைக்காமலே உயர்வு:**

“இன்று மக்களில் 99 சதவீதம் உழைக்காமலே சாப்பிட வேண்டும்; வளர்ச்சி அடைய வேண்டும் என்று நினைக்கிறார்கள் இந்த மனப்பான்மை பெருகினல் எதிர் காலத்தில் எல்லாத் துறைகளிலும் பிரச்சனை ஏற்படும்.”

**இனிவரும் அரசியல்:**

"இனி வரும் அரசியல் எந்தச் சட்டத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் அடங்காமல் போகும்."

**எப்படியும் சாகப் போகிறோம் எதைச் செய்தால் என்ன?**

"இன்றைய மனிதன் எதற்கும் பயப்படாத உளுத்துப் போகும் மரக்கட்டையாக மாறிக் கொண்டு வருகிறான். எப்படியும் சாகத்தான் போகிறோம். எதைச் செய்தால் என்ன? எப்படிச் செய்தால் என்ன? என்று தீய காரியங்களில் ஈடுபடுகிறான்.

அவனவன் வினை அவனவனை நிழல் போலத் தொடரும் என்பதை மறந்து விடக் கூடாது."

**நல்ல எண்ணமும் நற்செயலும்**

"வயிற்றை நிரப்ப வேண்டும் என்பதற்காகத் தண்ணீரைக் குடித்தும் நிரப்பலாம்; சாராயத்தைக் குடித்தும் நிரப்பலாம். எதைக் கொண்டு நிரப்பினால் நன்மை என்ற அறிவுத் தெளிவு வேண்டும்.

எந்தச் செயலாக இருப்பினும் அது நற்செயலாக இருக்க வேண்டும். நல்ல எண்ணத்தோடு கூடியதாக இருக்க வேண்டும்."

**அரசியல்வாதி – உழைப்பாளி**

"அரசியல்வாதிகளால் உலகத்திற்குப் பயனில்லை. உழைப்பவனே பிழைப்பான்."

**சூழ்ச்சிகள் மிக்க உலகம்:**

"இந்தப் பூனையும் பால் குடிக்குமா? இந்தப் புலியும் ஆடு பிடிக்குமா? இந்தக் கரடியும் தேன் குடிக்குமா? என்று நினைக்கிற அளவுக்கு இன்றைய உலகம் சூழ்ச்சிகள் நிறைந்த உலகமாக இருக்கிறது."

**நாற்பது வயதில்:**

"நாற்பது வயதில் தான் நாலும் தேவை என்ற எண்ணம் உண்டாகும். ஆயினும் இது தான் வாழ்க்கை; இதனை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும் என்ற மனப்பான்மை வந்துவிட வேண்டும்."

**இன்றைய படிப்பு:**

"அந்தக் காலப் படிப்பு நடைமுறை வாழ்விற்கு ஏற்றதாக இருந்தது. இன்றைய படிப்பு அதுபோல இல்லை."



**நச்சுக் கருத்துகள் பரவி விட்டன:**

"காட்டாற்று வெள்ளம் பெருகினால் மக்கள் வெள்ளம் அழிந்துவிடும். அதுபோல நாட்டில் தீமை பெருகினால் நன்மை அழிந்துவிடும். விஷ விதைகள் பரவுவதுபோல இன்று நச்சுக் கருத்துக்கள் பரவி விட்டன. அதனால் கெடுதிகளும் பரவி வருகின்றன."

**மென்மையான உள்ளங்கள் வெடிக்கக் கூடாது:**

"பஞ்சுக்காய் வெடித்தால் சிதறிப் போய்விடும்; யாருக்கும் பயன்படாமல் போய்விடும் அதுபோல நாட்டில் மென்மையான உள்ளங்கள் வெடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்."

**திருடனாக மாறாதே:**

"திருடனைத் திருத்தப்பார்! நீ திருடனாக மாறாதே."

**அவனவனே பொறுப்பு:**

"அவனவன் காலத்தை அவனவனே வகுத்துக் கொள்கிறான்."

**வறுமையும் தீமையும்:**

"வறுமையும் தீமையும் அழிந்து விட்டால் இங்கே எந்தப் பிரச்சனையும் இல்லை."

**40 வயதுக்குப் பிறகு:**

"40 வயதுக்குப் பிறகுதான் தருமம் என்பது என்ன? என்று சிந்திக்க ஆரம்பிக்கிறீர்கள்."

**ஆசைகள்:**

"பண ஆசை, பதவி ஆசை, இருக்கக் கூடாது. அதற்குப் பதில் பக்தியிலும் தொண்டிலும் ஆசை இருக்க வேண்டும்."

**மூளையும் – மூலப் பொருளும்:**

"மண், கல், தண்ணீர், மரம், காற்று, சூரியன், சந்திரன், பழம், குழந்தை, மனிதன், அருள்வாக்கு, ஆதிபராசக்தி கோயில் - என்ற இவையெல்லாம் என்ன? ஏன்? எதற்கு? என்று நீங்களெல்லாம் கேள்வி கேட்க நான் இங்கே பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

இவற்றையெல்லாம் கேட்டு, உங்கள் உடலும், உள்ளமும், சேர்ந்து வளர வேண்டும். பண்பட வேண்டும். ஆனால் நாட்டில் நடப்பது என்ன?

இவனை அவன் பழி வாங்குவதும் அவன் இவனைப் பழி வாங்குவதும் தான் நடந்து கொண்டு வருகிறது.

நாட்டிலும் குழப்பம்! வீட்டிலும் குழப்பம்! தெருத் திண்ணையைக் கூட வாடகைக்கு விட்டுப் பணமாக்குகிற காலமாகிவிட்டது.

எதைக் கொண்டு நிலத்தைப் பண்படுத்தலாம் என்று சிந்திப்பதை விட்டு விட்டு, எதைக் கொண்டு அழிக்கலாம் என்று வழிதேடுகிறீர்கள். பேரையும் புகழையும் விரும்புகிறவர்கள் தான் அதிகம்.''

மூளையை மூலப் பொருளாகப் பயன்படுத்தாமல், அதைக் குப்பையில் போட்டுவிட்டுச் சட்டத்தையும், சாராயத்தையும் மூலப் பொருளாகப் பயன் படுத்துகிறார்கள்.''

**கிராமத்து நாயும் – நகரத்து நாயும்:**

"கிராமத்தில் வசிக்கிற நாய் எல்லோருடைய வீட்டிலும் போடுகிற உணவைச் சாப்பிட்டு விட்டு, எல்லோருக்கும் நன்றியுடனும் விசுவாசத்துடனும் நடந்து கொள்கிறது. அத்துடன் அந்தக் கிராமத்திற்கே பாதுகாப்பாகவும் இருக்கிறது. அறிமுகம் இல்லாதவர்கள் ஊரில் நுழைந்தாலும், திருடர்கள் வந்தாலும் குரைத்து ஊரைக் காப்பாற்றுகிறது.

நகரத்தில் வாழும் உயர்ந்த சாதி நாய், தன்னை வளர்த்தவன் வீட்டிற்கு வரும் எல்லோரையும் பார்த்துக் குரைக்கிறது. திருடனையும் பார்த்துக் குரைக்கிறது.

நாய்க்குள்ள இந்த வேறுபாடு மனிதர்களிடமும் இருக்கிறது.

மனிதன் பொது நல வாதியாக இல்லாமல் சுய நலத்துடன் வாழ்கிறான். இந்நிலையில், நாய்மாதிரிக் குரைக்காதே! என்று நாயைக் கேவலமாக ஒப்பிட்டுப் பேசுகிறான்.

இன்று மனிதனைவிட நாய்தான் நன்றியுடன், பாசமும் கொண்ட ஜீவனாக இருக்கிறது.''

**மனித இனம் நாகரிகம் பெற்ற இனமா?**

"இன வெறி, மதவெறி, பணவெறி, பதவி வெறி, காம வெறி, போதை வெறி என்னும் இந்த வெறிகள்தான் உலகத்தில் மலிந்து வருகின்றன.



இந்நிலையில் மனித இனம் எவ்வாறு நாகரிகம் பெற்ற இனமாகும்?

**போலி ஆன்மிக வாதிகள்:**

"நாட்டில் போலி ஆன்மிகவாதிகள் பெருகி விட்டார்கள். குடுகுடுப்பைக்காரன் சொல்லும் சொல்லையெல்லாம் நம்பி மக்கள் ஏமாறுகிறார்கள். சூரிய ஒளியால் எப்படிச் சாயம் வெளுக்கிறதோ அப்படியே போலிகளின் சாயம் ஒரு நாள் வெளுத்துப் போகும்.''

**என் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு:**

"குழந்தை வம்பு செய்யும்; அடம் பிடிக்கும்; அழும். தாய் உடனே அடிப்பதில்லை. பொறுமையைக் கடைப்பிடிக்கிறாள். அந்தப் பொறுமைக்கும் எல்லை உண்டு. எல்லை மீறும்போது தாய் குழந்தையை அடிக்கிறாள்.

அதே போல நானும் நீங்கள் செய்யும் தவறுகளைப் பொறுத்தபடி இருக்கிறேன். என் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு.''

**அறிவுக் கூர்மை:**

"கூர்மையான அறிவு இருந்தால் மட்டும் போதாது. அந்த அறிவுக் கூர்மை தரும நெறிக்கும் பயன்பட வேண்டும். அதர்ம நெறிக்குப் பயன்படக் கூடாது.''

**பக்குவம் தேவை:**

"எந்தப் பிரச்சனை வந்தாலும் பொறுத்துக் கொள்கிற மனப் பக்குவம் வரவேண்டும். அந்தப் பக்குவம் ஆன்மிகத்தில் ஈடுபட்டால்தான் கிடைக்கும்.''

**கிராமங்கட்குப் போ!**

"எந்த நாட்டில் உழைப்பு குறைகிறதோ அந்த நாட்டிற்கு அழிவு தொடங்குகிறது என்று பொருள்.

உழைக்கிற ஒருவனையும் ஏன் உழைக்கிறாய்? என்று கேட்கும் காலம் இது!

அதிசயங்களை மிஞ்சும் அளவிற்கு அதிசயங்கள் நடக்கும். நடக்கக் கூடாத தெல்லாம் நடக்கும்.

அதனால்தான் கிராமங்களுக்கு போ! பட்டி தொட்டி எங்கும் ஆன்மிகம் பரப்பு! வழிபாடு செய்! என்றெல்லாம் சொல்கிறேன்.''

## நேற்று – இன்று – நாளை:

“நேற்றைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். இன்று பற்றியும் நாளை பற்றியும் தான் கவலைப்பட வேண்டும்.”

## ஆன்மிக அடிப்படை:

“உங்கள் உயிர் ஆன்ம உயிராக இருக்க வேண்டும் குணம் ஆன்ம குணமாக மாற வேண்டும். அழகு ஆன்ம அழகாக இருக்க வேண்டும். அவ்வாறு அமைந்தால்தான் சிறப்பாக இருக்கும்.

ஆனால் குணம் ஆணவ குணமாக இருக்கிறது. அழகு அநாகரிக அழகுடன் இருக்கிறது. அறிவு விஞ்ஞான அறிவாக இருக்கிறது.

இவ்வாறு அமைந்தால் அழிவுதான் உண்டாகும்.”

## விஷமங்கள் அதிகமானால்...

“பயிர்த் தொழிலை நம்பியே கிராமங்கள் வாழ்கின்றன. மழை பெய்தால்தான் கிராமங்கள் செழிக்கும். விஷமங்கள் அதிக மானால் அழிவுகளும் அதிகமாகும்.”

## கொலைகாரனுக்கும் – கொள்ளைக்காரனுக்கும்:

“கொள்ளையடிப்பவனையும், கொலைகாரனையும் தேடிக் கொண்டு போய்ப் பணத்தைக் கப்பமாகக் கொட்டிக் கொடுக்கும் காலமாக இந்தக் காலம் மாறி விட்டது.”

## அடுத்தவன் கதை:

“அடுத்தவன் கதையைப் பேசிக் கொண்டிருந்தால் அவன் வளர்ந்து விடுவான் நீ அழிந்து விடுவாய்.

உங்களிடம் களையும் வளரக் கூடாது. கடன்களும் வளரக் கூடாது.”

## சோம்பேறிகளின் காலம்:

“இனி வரும் காலம் உழைக்காமல் பிழைக்கும் சோம்பேறிகளின் காலமாகும்.

பொருள் போய் விட்டதே! நோய் வந்து விட்டதே! என்று பணக்காரன் அழுவான்.

மழை பெய்யவில்லையே! தண்ணீர் இல்லையே! கடவுளே! உனக்குக் கருணை இல்லையா? என்று ஏழையும் அழுவான்.”



## இளைஞர் சமுதாயம் சீரழிந்து வருகிறது:

“பாழாய்ப் போன இந்தப் பிள்ளைகளைப் பெற்றுவிட்டோமே என்று சலித்துக் கொள்கிறார்கள். ஆனாலும் பாசம் விடுவதில்லை. தந்தையைவிடத் தாய்க்குத்தான் பிள்ளைப் பாசம் அதிகமாக இருக்கிறது.

உன் பிழைப்பும் உன் உழைப்பும் தான் உன்னைக் காப்பாற்றும். உன் பிள்ளைகள் உன்னைக் காப்பாற்ற மாட்டார்கள். அந்த அளவிற்கு இளைஞர் சமுதாயம் சீரழிந்து வருகிறது.

## பணத்திற்கே அதிக மதிப்பு:

“ஏழை தம் வயிற்றுப் பிழைப்பிற்கு எப்படியாவது உழைத்துப் பிழைக்க வேண்டும் என்று நினைக்கின்றான். வசதியுள்ளவனோ தனக்குப் பேரும் புகழும் கிடைக்க வேண்டும் என்று பாடுபடுகிறான்.

இன்று பணத்திற்கு அதிக மதிப்பு கொடுக்கப் படுகிறது. உண்மைக்கும் உழைப்புக்கும் மதிப்பில்லாமல் போய் விட்டது. அதனால் நல்லவனும் கள்ளனாக மாறி வருகிறான்.”

## பேய்க்குணம்:

“சொந்த பந்தங்களோடு வாழ்ந்தோம். பாசமாக வாழ்ந்தோம். ஒழுக்கமாக வாழ்ந்தோம் என்ற நிலை இனி வரும் காலங்களில் இருக்காது.

இப்போது அன்பு பற்றிப் பேசுவது கிடையாது. ஆன்மா பற்றிப் பேசுவது கிடையாது.

தனியாக இருந்தாலும், மற்றவர்களோடு சேர்ந்திருந்தாலும், அடுத்தவனைப் பற்றி நினைப்பதும், பேசுவது மாகத்தான் இருக்கிறது.

இந்தப் பேய்க் குணம் நீங்க வேண்டும்.”

## இன்றும் உண்டு:

“ஏவல், பில்லி, சூனியம், மாந்திரிகம் என்பன இன்றும் உலகத்தில் உண்டு.”

## நாற்பது வயதிற்குள்:

“நாற்பது வயதிற்குள் உங்கள் பொல்லாத குணங்களையெல்லாம் கட்டுப் படுத்திக் கொள்ள வேண்டும்.”

எத்தனை வயது வாழ்ந்தோம் என்பது பெரிதல்ல! எத்தனை பேருக்கு உபயோகமாக வாழ்ந்தோம் என்று நினை!

உன் உள்ளத்தில் நல்ல மாற்றம் ஏற்பட வேண்டும். இல்லையென்றால் உன் வாழ்வே ஏமாற்றமாகிவிடும்.''

**அனைவரும் உழைக்க வேண்டும்:**

“பத்துப் பேர் சேர்ந்து வேலை செய்தால் அமைதி கிடைக்கும். பத்து பேரில் ஒருவன் மட்டுமே வேலை செய்து ஒன்பது பேர் சும்மா இருந்தால் போட்டி, பொறாமை, பூசல், வெட்டு குத்துதான் ஏற்படும்.''

**எப்படியாவது பிழைக்க வேண்டும் என்று வாழ்ந்தால்...**

“எப்படி வேண்டுமானாலும் ஒருவன் பிழைக்கலாம். ஆனால் பிழைப்பு பிழையாக மாறக் கூடாது. பிழையாக மாறினால் எதற்கும் பயன்படாது. நல்ல நோக்கம் இல்லாத பிழைப்பு பிழைப்பாகாது. அதனால் குடும்பம் சரிந்து விடும்.''

**மெய்யும் – பொய்யும்:**

“மெய்க்கு வழி கொடுக்க வேண்டும். பொய்க்கு வழி கொடுக்கக் கூடாது. இன்றைய உலகம் பொய்க்கு வழிகளை உண்டாக்கிக் கொடுக்கிறது.''

**தீய எண்ணங்களால் அழிவு:**

“எந்த அளவிற்குத் தீய எண்ணங்களும், தீய வழக்கங்களும் நாட்டில் வளர்கின்றனவோ, அந்த அளவிற்கு அழிவுகளும் வளர்ந்து கொண்டே வரும்.''

**இன்றைய மனிதன்:**

“உன் பசி, உன் பதவி, உன் புகழ், உன் உயர்வு - இவற்றை மற்றவன் ஏற்றுக் கொள்ள மாட்டான். அவற்றை அழிக்கத்தான் செய்வான்.''

**சொன்னபடி நடப்பதில்லை:**

“கல்வெட்டுகளையும், புத்தகங்களையும் படித்துவிட்டு, எங்கள் முன்னோர்கள் அதைச் சொன்னார்கள், இதைச் சொன்னார்கள் என்றெல்லாம் கூறுகிறீர்கள். அந்த முன்னோர் சொன்னபடி யாரும் நடப்பதில்லை.''

**மற்றவர் தூற்றுதலுக்கு இடம் கொடுக்காதே!**

“ஏதோ மண்ணில் பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்கிறோம் என்று இருக்கக் கூடாது. உன்னால் நான்கு பேர் பயன்பட வேண்டும். அத்துடன் மற்றவர் தூற்றுதலுக்கு இடம் கொடுக்கக் கூடாது.''



**சுய நலப் போக்கு கூடாது:**

“பூமி, ஆகாயம், மேகம், தண்ணீர் இவையாவும் தனது வசதிக்காக மட்டுமே என்று நினைத்துக் கொள்ளக் கூடாது.''

**கூட்டும் – கூட்டமும்:**

“உணவில் வைக்கப்படும் கூட்டு பயன்படும்; கூட்டம் எதற்கும் பயன்படாது.''

**நல்லவன் என்ற புகழ்:**

“நல்லவன் என்ற பெயர் ஒருவனுக்குத் தானாக வரவேண்டும். எப்படியாவது சமுதாயத்தில் உயர்ந்து தன்னைத் காப்பாற்றிக் கொள்பவன் நல்லவன் அல்ல.''

**நாட்டுத் தலைவன்:**

“வழி நடத்தும் தலைவன் நல்ல பாத்திரமாக இருக்க வேண்டும். சமைக்கும் பாத்திரம் சரியில்லையென்றால் எத்தனை பொருள் போட்டுச் சமைத்தாலும நன்றாக இருக்காது.''

**பணமும் – உழைப்பும்:**

“பணத்தைப் பெருக்கி வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? ஒரு பூகம்பம் வந்தால் உன் பணம் என்ன செய்யும்? பணத்தில் அதிகப் பற்று வைக்காமல் உழைக்கும் தன்மை வளர வேண்டும்.''

**இடத்துக்குத் தக்கபடி...**

“உலகில் தருமம் என்பதும், அதருமம் என்பதும் இருக்கும் இடத்தைப் பொறுத்து அமைகின்றன.

நல்லது என்பதும், கெட்டது என்பதும் அவரவர் மனத்தைப் பொறுத்து அமைகின்றன.

புன்னை மரம் நல்லதொரு நதிக்கரையின் ஓரத்தில் இருந்தால் நல்ல வாசம் கிட்டும். அதுவே சாக்கடை ஓரத்தில் இருந்தால் அதன் வாசனை எட்டாது.

அதுபோலத் தான் தருமம், அதருமம், நல்லது, கெட்டது என்பன இருக்கும் இடத்தைப் பொறுத்து அமையும்.''

**வேலையும் – படிப்பும்:**

“வேலைக்காகப் படிப்பா? படிப்பிற்காக வேலையா?

பொய் மெய்யாகிறது; மெய் பொய்யாகிறது.

உண்மை ஊமையாகிறது; ஊமை உண்மையாகிறது.

**பணம்: மனம்: மதம்:**

“பணம்! மனம்! மதம் இவை ஒழிந்தால் தான் மனிதன் மனிதனாக இருப்பான்.”

**ஒரு கோயிலும் – நீதி மன்றமும்:**

“ஒரு கோயிலும், நீதி மன்றமும் சமம். ஒரு கோயில் அர்ச்சகன் தூய்மையானவனாக இருக்க வேண்டும். வற்புறுத்தி வசூல் செய்பவனாக இருக்கக் கூடாது. மனசாட்சி உள்ளவனாகவும், தெய்வீக அம்சம் உடையவனாகவும் அவன் இருக்க வேண்டும்.

ஒரு நீதி மன்றத்தின் நடுநாயகமாக விளங்கும் நீதிபதியும் தூய்மையானவனாகவும், லஞ்சம் வாங்காதவனாகவும், மன சாட்சி உள்ளவனாகவும், தெய்வ நம்பிக்கை உடையவனாகவும் இருக்க வேண்டும்.

கொலைகாரர்களும், கொள்ளைக் காரர்களும் கோயிலுக்கும் வருவார்கள் நீதி மன்றத்துக்கும் வருவார்கள்.

எனவே, அர்ச்சகர்களுக்கும் நீதிபதிகளுக்கும் பொறுப்பு மிகுதி.”

**ஜன நாயகம் அழிந்து வருகிறது:**

“நாட்டில் ஜன நாயகம் அழிந்து வருகிறது. அதனால் சலசலப்புகள் அதிகரித்து வருகின்றன. தெய்வத் தொண்டால்தான் மனிதனுக்கு அமைதி கிடைக்கும்.

எந்த இடத்தில் உட்கார்ந்தாலும் அமைதி கிடைக்காது.

உங்கள் உள்ளம் தெளிந்த நீரோடைபோலச் செயல்பட வேண்டும்.”

**போதைப் பொருளுக்கு மதிப்பு:**

“விளையும் தானியத்திற்கு இன்று மதிப்பு இல்லை; ஆனால் போதைப் பொருளுக்கு மதிப்பு இருக்கிறது.”

**கலியுகம் – சனியுகம்:**

“கலியுகம் சனியுகமாக மாறிவிடக் கூடாது. சக்தியுகமாக மாற வேண்டும்.”



**வயதும்: பழக்க வழக்கங்களும்:**

“மனிதனுக்கு வயதுக்கேற்ற பழக்க வழக்கங்கள் தேவை.”

**கட்டுப்பாடும் – தட்டுப்பாடும்:**

“நீங்கள் குடும்பக் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தாலும் உலகில் தட்டுப்பாடு இருக்கத்தான் செய்யும்.”

**பற்றாக்குறை மிகுந்த உலகம்:**

“இன்று உலகில் எங்குப் பார்த்தாலும் பற்றாக்குறை உள்ளது. ஆனாலும், வாழ்க்கையில் நம்பிக்கையும், நாணயமும் அவசியம்.”

**யோகாசனம்:**

“யோகாசனம் உடலுக்குத்தான் பயன் தரும். வாழ்க்கைக்குப் பயன் தராது. இன்றைய உலகில் உழைப்பினால்தான் வாழ்க்கைக்குப் பயன் உண்டாகும்.”

**உழைப்பும் – பிழைப்பும்:**

“ஒருவன் உழைக்க அவன் உழைப்பில் மற்றவன் பிழைக்கக் கூடாது. எல்லோருக்கும் உழைப்பு அவசியம்.

**நாணயம்:**

“நாணயம் என்பது செய்கின்ற உலோகத்திலோ, அச்சடிக்கின்ற காகிதத்திலோ மட்டும் இல்லை. சொல்கின்ற சொல்லில் தான் உள்ளது.”

**இன்றைய அரசியல்:**

“இன்றைய அரசியல் கந்தலாக மாறி வருகிறது. நூல் பிரிகிறது. இன்னும் துணி கிழியவில்லை.”

**உழைப்பு:**

“சேற்றைக் குழப்பினால்தான் சோற்றுக்கு வழி கிடைக்கும்.”

**உடலும் – உணவும்:**

“உடல் அசைந்தால்தான் உணவுக்கு வழி கிடைக்கும்.”

# 12. தான - தருமங்கள்

### பாவமும் – புண்ணியமும்:

"ஒருவன் ஒன்பது பாவங்கள் செய்து ஒரு புண்ணியம் செய்திருந்தால் அந்த ஒரு புண்ணியத்தை வைத்து அவனுக்குச் சில நன்மைகளைச் செய்கிறேன். அவன் செய்த ஒன்பது பாவங்களையே எண்ணுவது மனித நிலை. அவன் செய்த ஒரு புண்ணியத்தை எண்ணுவது தெய்வ நிலை மகனே!"

### ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றங்கள்:

"ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றங்கள் ஆன்மிகம், பக்தியை வளர்ப்பதோடு தான தருமங்களையும் செய்து கொண்டே வரவேண்டும்."

### ஆசையினால் அழிவு:

"பணம் பணம் என்று அலையக்கூடாது. பணம் பிணத்துக்குச் சமம். சேர்த்து வைத்த பணத்தைத் தான, தருமங்கள் போன்ற நியாயமான வழிகளில் செலவிட வேண்டும். இறுக்கிப் பிடித்துச் சேர்க்க நினைத்தால் அது உனக்குக் கடன்களாகவும் நோய்களாகவும் பெருகி உன்னையே அழித்துவிடும்."

### ஆடிப்பூரத்தின் போது:

"ஆடிப்பூரத்தின் போது அன்னதானம், கஞ்சி வார்த்தல் செய்ய நினைப்பவர்கள் என் உத்தரவு பெற்று இவற்றைச் செய்பவர்கள் ஆகியோர் இந்த விழாவின் போது மருவத்தூர் எல்லையில் தாமே குடும்பத்தோடு வந்து வேலையாட்களை வைக்காமல் குடும்பத்தாரே ஈரச்செவ்வாடையுடன் உணவு தயாரித்து, அந்த ஈரஉடையுடன் வேப்பிலையைப் பாவாடை போல் அணிந்தபடி ஆலயத்தை வலம் வந்து தானம் செய்வது சிறப்பு."

### சின்னஞ்சிறிய விதை! சின்னஞ்சிறிய தருமம்:

"ஒரு சின்னஞ்சிறு விதை செடியாகி, மரமாகிப் பூக்கிறது. காய்க்கிறது. பழம் கொடுக்கிறது. அதுபோல நீ செய்யும் ஒரு பைசா



தருமம் மரம் போல வளரும் தன்மை உடையது. அந்தத் தருமத்திற்கு எந்தக் காலத்துக்கும் அழிவு இல்லை. அதர்மத்தால் சேரும் பணம் மரம் ஆகாது. அதற்கு அழிவு உண்டு."

### பொன்னும் – பொருளும்:

"பொன்னும் பொருளும் பிணத்துக்குச் சமம். அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காதே! தர்மம் செய்! அதுதான் உன்னைப் பிறவி தோறும் காப்பாற்றும். அதே சமயம் தருமம் செய்து சோம்பேறிகளை வளர்க்கும் இயக்கமாக ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்தை மாற்றிவிடாதே! உழைத்துப் பிழைக்க எண்ணும் ஏழைக்கு உபகரணங்கள் வாங்கிக் கொடு! அதன் மூலம் அவனுக்குப் பிழைத்து வாழ உதவி செய்! உழைத்து வாழ்வதற்குக் கற்றுக்கொடு!"

### தருமத்திற்குப் பெருமை உண்டு!

"தருமத்திற்குப் பெருமை உண்டு. அந்தத் தருமத்திலும் பொறாமை உண்டு. ஒரு வேப்பிலையை உருவிப் போட்டே இங்கே கட்டிடங்களை எழுப்பி விடுவேன். அவை நிலையல்ல. உழைப்பாலும், தொண்டாலும், தான தருமங்கள் மூலமாகவும் எழுப்பப்படும் கட்டிடங்கள் தான் நிலைக்கும். அவற்றுக்குத் தான் மதிப்பும் அதிகம்!"

### எல்லோரையும் தருமம் செய்யச் சொல்கிறேன்!

"இங்கு வரும் பக்தர்களிடம் கருங்கல் கொடு! ஜல்லி கொடு! செங்கல் கொடு! மணல் கொண்டு வா! என்றெல்லாம் கொண்டு வரச் சொல்கிறேன். அவரவர்களையும் தருமம் செய்யச் சொல்கிறேன். ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லாரையும் தருமம் செய்ய வைக்கிறேன். அதன் மூலம் பலன் பெற வைக்கிறேன். காலங்காலமாக இந்தச் சந்நிதி நிலைத்து நிற்க வேண்டும். காலம் காலமாக உன் சந்ததியும் பலன் பெற வேண்டும். அதற்காகவே அம்மா உங்கள் எல்லோரையும் தருமம் செய்யத் தூண்டுகிறேன் என்பதைப் புரிந்து கொள்ளடா மகனே!"

### அன்னதானம்! ஆடைதானம்!

"அன்னதானம்! ஆடைதானம் வழங்குகிற போது ஆண்களுக்கு ஆண்கள் வழங்க வேண்டும்! பெண்களுக்குப் பெண்கள் வழங்க வேண்டும்."

**பலர் தயாராக உள்ளார்கள்:**

“பணத்தைக் கொடுத்து இங்கே தொண்டும் செய்வதற்குப் பலர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது உனக்குக் கிடைக்கிற வாய்ப்பையும், கொடுக்கிற வாய்ப்பையும் நழுவ விடாதே!”

**எதிர்காலத்தில்...**

“எதிர்காலத்தில் தரும ஸ்தாபனங்கள் பலவற்றை அமைத்துக் கொடுப்பேன்!”

**உங்களால் முடியாது...**

“எனக்கு ஆலயம் கட்டவோ, அந்த ஆலய வளர்ச்சிக்கு வழி வகுக்கவோ உங்களால் முடியாது. என் இடமோ சுடுகாடு, அதனால் தான் வீட்டில் பிறப்பை வைத்தேன். வெளியில் இறப்பை வைத்தேன்.

மண்ணைப் பிசைந்து உங்களிடம் ஒப்படைத்துவிட்டேன். அதனைக் குரங்காக உருவம் கொடுப்பதும், தெய்வமாக உருவம் கொடுப்பதும் உங்களிடம் தான் உள்ளது. நான் கூறவேண்டிய கருத்துக்களைக் கூறிவிட்டேன். அவற்றை ஏற்று நடத்த வேண்டியது உங்கள் பொறுப்பு.”

**அழிவுகள் பெருகுவது ஏன்?**

“தருமம் அழிகிற போது அதர்மம் தலைதூக்கும்; அதர்மம் தலைதூக்கும் போது அழிவும் தலைதூக்கும். அதர்மம் என்னிடமிருந்து தப்பிக்க முடியாது. இயற்கை தான் சக்தி. ஆடுவதும் நானே! ஆட்டு விப்பதும் நானே! ஓடுவதும் நானே! உடைவதும் நானே! விளைநிலமும் நானே! களர்நிலமும் நானே!”

**சொத்தும் சுகமும்:**

“சொத்து சேரச் சேர சுகமில்லாமல் போகும். தருமம் அதர்மமாக மாறும்.”

**தரும ஸ்தாபனங்கள்:**

“தரும ஸ்தாபனங்கள் வியாபார ஸ்தாபனங்களாக மாறக்கூடாது. தருமத்திற்காகக் கொடுக்கப்படும் பணத்தைத் தரும காரியங்களுக்கே பயன்படுத்த வேண்டும்.”

**புண்ணியப் பலன் எப்போது கிடைக்கும்?**

“வசதி அதிகமாக இருந்தாலும் நினைத்தபோதெல்லாம் சாப்பிட முடியாது. சாப்பிடவும் கூடாது. பசி எடுக்கும் போதுதான் சாப்பிடலாம்.



சாப்பிடவும் வேண்டும். அதுபோல நீ செய்த புண்ணியங்களின் பலன் நீ நினைத்தவுடன் கிடைத்துவிடாது. தக்கசமயம் வரும்போது தான் கிடைக்கும்.”

**எது முன்னேறிய நாடு?**

“இந்த நாடானாலும் எந்த நாடானாலும் பசியும் உண்டு. பட்டாளமும் உண்டு. இருக்கும் நாடானாலும் இல்லாத நாடானாலும் அங்கே சண்டைகள் உண்டு; சச்சரவுகள் உண்டு.”

**பணக்காரர்களுக்கு...**

“உன் கையில் உள்ள பொருளை நீயாக மனம் வைத்தால் தான் பங்கிட்டுக் கொடுக்க முடியும். மற்றவர்களுக்குக் கொடுக்காமல் நீயே வைத்துக் கொண்டால் அதுதான் பாவம்.”

**போதும் என்ற மனம்:**

“போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. மனம் போன போக்கில் போகக்கூடாது.”

**எல்லோர்க்கும் எல்லாம் என்பது முடியாது:**

“எல்லோர்க்கும் எல்லாவற்றையும் அள்ளிக் கொடுத்துவிட முடியாதடா மகனே! அவனவன் பாவ புண்ணியக் கணக்கென்று ஒன்று உண்டடா மகனே! அந்தப் பாவ புண்ணியத்துக்குத் தக்கபடி தான் அளந்து கொடுக்க வேண்டி இருக்கிறதடா மகனே!”

**அன்னதானம் – புண்ணியப் பலன்:**

“சிலரை அன்னதானம் செய்! என்கிறேன். ஏன்? எந்தச் சில ஆன்மாக்களுக்கு இவன் துன்பம் செய்தானோ - இவனால் பாதிக்கப்பட்ட அந்த ஆன்மாக்களையே இவனிடம் கொண்டு வந்து சேர்க்கிறேன். ஆயிரம் பேர்க்கு இவன் சோறு போட்டால் அந்த ஆயிரம் பேரில் இவனால் பாதிக்கப்பட்ட ஆன்மாக்களும் பயன் அடைகின்றன. இப்படிப் புண்ணியப் பயன் அடையுமாறு செய்கிறேன்.”

**மற்றவர்களால் புயல்:**

“சமுதாயத்தில் ஒன்பது பேர் தீயவர்கள்; ஒருவன் நல்லவன். அந்த ஒருவனால் மழை பெய்கிறது. மற்றவர்களால் புயல் அடிக்கின்றது; அழிவு வருகிறது.”

**அன்னதானம்:**

“அன்னதானம் சித்தர்களுக்கு உவப்பு. அந்த அன்னதானம் தான் இந்த ஆதிபராசக்திக்கு உவப்பு!”

**தருமங்கள் பெருகினால்...**

"குளிர் மேகம் வருவதால் மழை பெய்யும்; அவ்வாறே தருமங்களைச் செய்து கொண்டே வந்தால் அதர்மங்கள் அழியும்."

**தருமத்தால் வாழ்வு சிறப்படையும்:**

"ஒரு செடியை ஓரிடத்திலிருந்து பெயர்த்தெடுத்து, மற்றோரிடத்தில் நடும்போது வேர் பிடித்து நன்றாகத் துளிர்விடுவது போல - இறைக்க இறைக்கக் கிணறு சுரப்பது போல -

நல்ல உள்ளத்தோடு தருமம் செய்யும்போது, வாழ்க்கையில் மேலும் மேலும் சிறப்படைய உங்களுக்கு வாய்ப்புகள் ஏற்படும்."

**தர்மத்தால் அதர்மம் அழியும்:**

"அதர்மத்தினால் உண்டாகும் பணத்தை வைத்துக் கொண்டு தர்மம் செய்தாலும் அதர்மம் அழிகிறது."

**ஒரு விபச்சாரி தருமம் செய்தாலும்:**

"ஒரு விபச்சாரி தருமம் செய்தாலும் அதனை நான் ஏற்றுக் கொள்கிறேன்."

**தருமத்தால் அமைதி:**

"ஏழை எளியவர்களுக்கு உணவு கொடுப்பதால் தருமம் உண்டு. அதனால் அமைதி உண்டு."

**ஒரு பைசா தருமத்திற்கும்:**

"நீங்கள் ஒரு பைசா தருமம் செய்தாலும் அதற்குப் பலன் உண்டு."

**நீ இறக்கும்போது...**

"மிகுதியான சொத்துக்களைச் சேர்த்துக் கொள்ள விரும்பிச் சேர்த்து வைத்தால் அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்.

நகைகளைச் சேமித்துப் பூட்டி வைத்தால் திருடன் திருடிக் கொள்வான்.

வாரிசு இல்லாமல் இறந்தால் பங்காளி உன் சொத்துக்களை எடுத்துக் கொள்கிறான்.

கடைசியில் நீ இறக்கும் போது உன்னுடன் எதுவும் வருவதில்லை."



**அந்தக் காலத்தில் தரும நெறி:**

"ஆரம்பகாலத்தில் தருமம் செய்தனர். தவறாமல் மழை பெய்தது. அந்தக் காலத்தில் தங்களிடத்தில் விளைந்த கத்தரிக்காய், வெண்டைக்காய், வேர்க்கடலை போன்ற பொருள்களையும் அவற்றுடன் பணத்தையும் எறிந்தார்கள். மயானக் கொள்ளை என்ற பெயரால் விழாக்கள் ஏராளமாக நடந்தன. அப்போது பணம் எறியப்படும் பொருளாக இருந்தது."

**பொன் பொருளால் உயிருக்கு ஆபத்து:**

"சிறுதுளி பொன்னாலும் ஆபத்து உண்டு. கௌரவத்திற்காக மனிதன் பொன்னும் பொருளும் தேடுகிறான். இவ்வாறு தேடக்கூடிய பொன்னாலும், பொருளாலுமே அவனுக்கு அழிவு உண்டு."

**பொற்காலமும்... புண்ணான காலமும்:**

"பொற்காலம் எப்படியிருக்கும் என்பது உங்களுக்குத் தெரியாது. இப்போது இருக்கும் காலம் புண்ணான காலம். தொடர்ந்து தருமங்கள் செய்யப்படுமானால் இந்தப் புண்ணான காலமும் பொற்காலமாக மாறும்."

**ஊதாரிச் செவும் – நல்ல செலவும்:**

"கிடைத்த செல்வத்தை ஊதாரித்தனமாகச் செலவு செய்யாமல் நல்ல காரியங்களுக்குச் செலவு செய்தால் நல்ல பலன்களும் உங்களுக்குக் கிடைக்கும்."

**தரும சிந்தனைக்குத் தக்கபடி நாட்டின் வளம்:**

"இங்கே மழை வேண்டும் என்றாலும், வெயில் வேண்டுமென்றாலும் தரும சிந்தனை பெருகவேண்டும். பொய், பித்தலாட்டம், குறுக்கு வழியில் சம்பாதிப்பவர்களுக்கு அழிவு உண்டு."

**அவரவர்க்கு அளந்தபடி!**

"ஒவ்வொருவர்க்கும் அவரவர்க்கு அளந்தபடி தான் கிடைக்கும். சொத்தும் சுகமும் அப்படியே! ஆன்மிகத்துக்கு வந்து விட்டவன் எதைப் பற்றியும் கவலைப்படக்கூடாது. பற்ற வேண்டிய என்னையே பற்றிக் கொண்ட பிறகு நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படக் கூடாது."

**இயற்கை வளம்: தரும சிந்தனை: தொடர்புண்டு:**

"கிணற்றுத் தண்ணீர் இறைத்தால் தான் சுரக்கும். சுரக்கிற கிணற்றில் இறைக்க முடியும். அதுபோலத் தரும சிந்தனை இருந்தால்

தான் இங்கே உங்களுக்கு எல்லா நலன்களும் வளங்களும் உண்டாகும். தருமம் செய்யாவிடில் இயற்கை தன் கடமையை மறந்து சீற்றம் அடையும். இயற்கை தன்னுடைய கடமையை மறந்தாலும் காலன் தன்னுடைய கடமையை மறக்க மாட்டான்.''

**தருமம் செய்யப் பழகு! பழக்கு!**

''நீ மற்றவர்களுக்குத் தருமம் செய்வதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களையும் தருமம் செய்யப் பழக்கி வைக்க வேண்டும். நீ தொண்டு செய்வதோடு மற்றவர்களையும் தொண்டு செய்வதில் ஈடுபடுத்த வேண்டும். அப்போது தான் 4 பேர், 8 பேர் ஆகி, 8 பேர் 16 பேர்கள் ஆகித் தருமம் செய்வதும் தொண்டு செய்வதும் பெருகிக் கொண்டு போகும். காசு கொடுத்து உன் வசதிகளைப் பெருக்கிக் கொள்கிறாய். அதுபோல காசு கொடுத்தாவது மற்றவர்களை ஆன்மிகத்தில் ஈடுபடுத்து. அது உனக்கு நிலையான வசதிகளை உருவாக்கிக் கொடுக்கும்.''

**தண்ணீருக்கும் விலை!**

''தண்ணீர் விலை ஏறிக்கொண்டே போகிறது. கண்ணீருக்கும் தண்ணீர் இல்லை என்ற நிலை ஏற்படும். உழைப்பால் உயரவேண்டும் என்ற எண்ணம் இப்பொழுது இல்லை.''

**அரசியல் பற்றி...**

''அரசியலைப் பற்றிக் கவலைப்படாதே! எந்த அரசியலிலும் தர்மம் இருக்காது. அட்டூழியம் தான் இருக்கும்.''

**மழைக்கும் – தர்மத்துக்கும் தொடர்பு:**

''மழை வேண்டுமானால் தர்மம் செய்யவேண்டும்.''

**முதியோர் செய்த தருமம்:**

''தருமநெறி தழைத்தோங்கினால் ஆன்மிகம் என்ற பயிர் என்றும் அழியாது. உங்கள் முதியோர் செய்த தருமம் இன்னும் நிலைத்து இருக்கின்றது. தருமம் செய்தவர்களின் பெயர் நிலைத்திருக்கும். கொள்ளையடிப்பவன் பெயர் நிலைத்திருப்பதில்லை.''

**எது காப்பாற்றும்?**

''நீங்கள் செய்யும் தருமம் தான் உங்கள் முன்னேற்றத்துக்கு சாட்சியாகவும், சாதகமாகவும் அமையும்.''



**உனக்குரிய புண்ணியத்தைத் தேடு:**

''ஏதோ பெரியவர்கள் சேர்த்து வைத்துச் சென்றுவிட்டார்கள். அதனை அனுபவிக்கலாம் என்று நினைத்துத் திவாலாகிவிடக் கூடாது. உன் முயற்சியாலும் உழைக்க வேண்டும். உன் முன்னோர் செய்த புண்ணியத்தில் மட்டும் வாழ நினைக்காதே! உனக்கான புண்ணியத்தையும் சம்பாதித்துக் கொள்!''

**பரஸ்பர உதவி:**

''ஒரு கிராமத்தில் பொருள் இல்லாமல் கஷ்டப்படுகிறவனுக்கு அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் பொருள் கொடுத்து உதவி செய்ய வேண்டும். அப்படிப் பொருள் கொடுத்து உதவியிருந்தால் அவன் திருடும் பழக்கத்தை மேற்கொள்ள மாட்டான். நல்லவனையும் சோம்பேறி ஆக்குவது திருட்டு! நல்லவன் அழிய மாட்டான். சோம்பேறி அழிவான்!''

**தருமநெறி தான் குழப்பங்கள் தீர வழி!**

''அயோக்கியனை ஆன்மிகத்தில் ஈடுபடுத்துவது கடினம். சோம்பேறியையும், திருடனையும் மாற்ற வேண்டுமானால் தருமம் செய்ய வேண்டும். தரும நெறியை விட்டுவிட்டு எந்த நெறியை இங்கே வற்புறுத்தினாலும் எடுபடாது. நாட்டிலுள்ள குழப்பங்களைக் கட்டுப்படுத்த தருமங்கள் செழிப்பது தான் சிறந்த வழி!''

**வறுமையிலும் ஆன்மிகம்:**

''தரித்திரத்திலும் ஆன்மிகம் தேவை!''

**பொருளாசை:**

''கீழே இருக்கிறவன் மேலே வரலாம். மேலே இருக்கிறவன் கீழே வர ஆசைப்பட மாட்டான். பொருள் சேரச்சேர அன்பு வளராது. களைகள், கவலைகள், பொருள்கள், பொறாமைகள் என்றைக்குமே உங்களுக்கு ஆபத்தானவை.''

**இயற்கையும் மனிதனும்:**

''இயற்கை தனக்காக வாழ்வதில்லை. மனிதன் மட்டுமே தனக்காக வாழ்கிறான். இதனால் இயற்கைப் பொருள்களையும் மற்ற உயிரினங்களையும் தனக்காகவே பயன்படுத்திக் கொள்கிறான். பிறருக்காக வாழ மாட்டேன் என்கிறான்.

சூரியன், சந்திரன், நெருப்பு, காற்று, மழை, மரங்கள் எனும் இந்த இயற்கைப் பொருள்கள் தமக்காக வாழ்வதில்லை. இவற்றிடம் உள்ள இந்தப் பண்பாடு மனிதனிடம் இல்லை.''

**உன் கருமத்தைக் குறைக்கிறேன்:**

"இருப்பவனிடமிருந்து வாங்கி இல்லாதவனுக்குக் கொடுக்கச் சொல்கிறேன். கொடுப்பவனுக்கும் கர்மத்தைக் குறைக்கிறேன். கருவியாகப் பணிபுரியும் உன் கருமத்தையும் குறைக்கிறேன். நீ கருவியாக இருக்க வேண்டும். கரியாக ஆகிவிடக்கூடாது."

**தரும சிந்தை வளரவேண்டும்:**

"ஒவ்வொருவர் உள்ளத்திலும் தரும சிந்தை வளரவேண்டும். தருமம் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் இருக்க வேண்டும். இந்த இடத்தை (மேல்மருவத்தூர்) அறக்கூடமாக, அறச்சாலையாக மாற்ற வேண்டும். கடன் வாங்கியாவது தருமம் செய்!"

**மாறிவரும் யுக தர்மங்கள்:**

"யுகந்தோறும் தருமங்கள் மாறிக்கொண்டு வருகின்றன. கலியுகத்துக்குத் தக்கபடி உங்களை ஆன்மிகத்துக்கு மாற்றிவருகிறேன். இந்த யுகத்துக்குத் தக்கபடி உங்களுக்கு அருள்வாக்கு அளித்து வருகிறேன். எதிர்காலத்தில் என் அருள்வாக்குகள் தான் உங்களுக்கு வேதம்!"

**தான தருமங்களால் மழை உண்டு: சுபிட்சம் உண்டு:**

"அடுத்த வேளைச் சோற்றுக்கே அரிசி இல்லை. தருமம் செய்யச் சொல்கிறாயே தாயே! என்று நினைக்காதே. நீ பத்து ரூபாய்க்காவது தருமம் செய்தால் தான் அருள்பெற முடியும். தருமங்கள் செய்வதால் தான் மழை உண்டு. நாட்டுக்குச் சுபிட்சம் உண்டு."

**பிச்சை எடுத்தாவது:**

"ஒவ்வொரு வீடாகச் சென்று அன்னதானத்திற்கு அரிசி வாங்கி வந்து அன்னதானம் செய். பிச்சை எடுத்தாவது ஆன்மிகத்தை வளர்க்கப் பார்!"

**ஏழைக்குத் தருமம் செய்!**

"ஒவ்வொருவனும் தன்னால் முடிந்த அளவு தருமம் செய்ய வேண்டும். அதுவும் நல்ல எண்ணத்துடன் தருமம் செய்யவேண்டும். ஐந்து ரூபாய் தருமம் செய்தால் பத்து ரூபாய் லாபம் கிடைக்குமா என்று எதிர்பார்த்துத் தருமம் செய்யக்கூடாது."

**சிறிய தொண்டு: சிறிய தருமம்:**

"நீ செய்யும் தொண்டு, நீ செய்யும் தருமம் சிறியதாக இருந்தாலும் அதற்கும் சக்தி உண்டு. அதற்கு வீரியம் உண்டு.



உன்னால் முடிந்த தொண்டுகளையும் தருமங்களையும் செய்துகொண்டே வா!"

**தருமத்திற்கும் உருவம் உண்டு:**

"காற்றை உன் கண்களால் காண முடியாது. ஆதிபராசக்தியாகிய என் உருவத்தை உன்னால் காணமுடியாது. சிலவற்றின் உருவங்களை உன்னால் காண முடியாது. சக்தி எந்த ரூபம்? தர்மம் எந்த ரூபம்? என்பதையெல்லாம் உன்னால் தெரிந்துகொள்ள முடியாது."

**தரும நெறிதான் பாதுகாப்பு:**

"தருமநெறியில் வாழ்பவனுக்குத் தான் இனி பாதுகாப்பு உண்டு."

**பக்தி உணர்வு:**

"பக்தி உணர்வோடு செலவழிக்கிற பணத்துக்கு அழிவில்லை. பாச உணர்வோடு செலவழிக்கிற பணத்துக்கு அழிவு உண்டு."

**தீமையைத் தீமையாலேயே அழிப்பேன்:**

"நேர்மையை நேர்மையினாலேயே வளர்ப்பேன். தீமையைத் தீமையினாலேயே வளரவிட்டு அழிப்பேன்."

**பணத்தின் இயல்பு:**

"பணம் என்பது பாழான நிலைமையை உண்டாக்கும். அன்பைக் கெடுக்கும். உண்ண உணவு தரும். அத்துடன் ஆணவம், ஏழ்மைநிலை, மான அழிவு இவற்றையும் சேர்த்து உண்டாக்கும்."

**சர்க்கரையும் உப்பும்:**

"உடல் வளர்ச்சிக்குச் சர்க்கரையும் வேண்டும். உப்பும் வேண்டும். இரண்டுமே அளவோடு இருக்க வேண்டும். ஆனால் என்னிடம் கேட்பவர்கள் அனைவருமே சர்க்கரை தான் அதிகம் வேண்டும் என்று கேட்கிறார்கள்."

**குடும்பச் சண்டை தீர...**

"இங்கே சலவைக்கல் அமைத்துக் கொடுப்பதாலும், அன்னதானப் பணிகளைப் பொறுப்பேற்றுச் செய்வதாலும் உங்கள் குடும்பங்களில் உள்ள சண்டைகள் தீரும்."

**பகுத்துண்டு வாழ்க:**

"பகுத்துண்டு வாழ்வதில் தான் பரவசம் உண்டு."

**ஆதிபராசக்தி அறநிலை:**

"நாளைய உலகத்தில் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்தில் கல்வி, மருத்துவ, பண்பாட்டு அறநிலைக்கு முக்கியப் பங்குண்டு; பெருமையும் உண்டு."

**பலதரப்பட்டவர்கள் வருவார்கள் (அறநிலைக்கு):**

"இங்கே பிசாசுக் குணம் படைத்தவர்கள் பலர் வருவார்கள். பஞ்சமா பாதகர்கள் வருவார்கள். தங்கள் தங்கள் நன்மைக்காகவே அவர்கள் எதையும் செய்ய வருவார்கள். யார் எதைச் செய்தாலும் அவற்றைச் சந்தோஷமாக ஏற்றுகொள்ள வேண்டும்."

**தருமம் தழைக்க...**

"மழை தேவையென்றால் காடுகள் அவசியம். காட்டிற்குச் செடி கொடிகள் அவசியம். தருமம் தழைக்க வேண்டுமென்றால் இங்கே அக்கிரமங்கள் அழியவேண்டும்."

**ஏழ்மைக்குக் காரணம்:**

"நல்வினை செய்கிறவர்கள் சிலராகத்தான் இருக்கிறார்கள்.

பெரும்பாலோர் அப்படி வாழ்வதில்லை. உலகத்தில் ஏழ்மையும் பசியும் மிகுந்திருப்பதற்கு அதுவே காரணம்."

**மற்றவர்களின் பிழைப்பிற்கும் வழி உண்டு:**

"கட்டடங்கள் கட்ட வைக்கிறேன். விழாக்கள் நடத்தச் சொல்கிறேன். கருவறையை அமைத்து ஸ்தபதிக்கு வேலை கொடுக்கிறேன். மண் கலசங்களை வேள்வியில் வைக்கச் சொல்கிறேன். குயவர்களுக்கு வேலை கொடுக்கிறேன். பூ விற்பவனுக்கும், பழம் விற்பவனுக்கும் தொழில் செய்து பிழைக்க வழி செய்கிறேன். ஆன்மிகம் என்ற போர்வை மூலமாகத் தொழிலாளிகளுக்குத் தொழில்களைத் தந்து அவர்கள் பிழைப்பதற்கும் வழிவகை செய்கிறேன்."

**அறநிலை: ஆலயம்: தருமநெறி:**

"நாளைய உலகமாவது நல்லமுறையில் இருக்கவேண்டும் என்பதற்காகவே, அறநிலை அமைத்து ஆலயம் அமைத்து அவற்றின் மூலம் தரும நெறி பரவ வழிகாட்டுகிறேன். கூட்டுவழிபாடு செய்யச் சொல்கிறேன்."



**உடன் பிறந்தானோடு பகை: நண்பர்களோடு உறவு:**

"தன் நண்பனுக்காக ஆயிரம் இரண்டாயிரம் என்று செலவு செய்கின்றான்.

அப்படிப்பட்டவன் தன் உடன் பிறந்தவனுடன் சண்டை என்றால் மிவும் செலவு செய்து வழக்கு மன்றம் வரை போகின்றான். நண்பனிடம் காட்டுகிற அன்பை, ரத்த சம்பந்தம் உள்ள உடன்பிறந்தவனிடம் காட்டுவதில்லை."

**நாளைய உலகம்:**

"நாளைய உலகம் ஆன்மிக உலகம். அதனை உணர்த்தவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறேன். கல்வி நிறுவனங்களை அமைத்து வருவதும் அதற்காகத்தான். எதிர்கால உலகம் ஆதிபராசக்தி உலகமாகவும், தாய்ப்பாசம் உள்ள உலகமாகவும் இருக்கும். பட்டிதொட்டியெல்லாம் ஆன்மிகம் பரவும்!"

**முடிந்த அளவு உதவி செய்:**

"விரலுக்குத் தக்க வீக்கம் என்பதற்கேற்ப உன் தகுதிக்குத் தக்கபடி மற்றவர்களுக்குப் பொருள் உதவி செய்யவேண்டும்."

**உனக்குப் பின்னால் எதுவும் வராது:**

"இன்று பிறப்பு! நாளை இறப்பு! நீ ஓடி ஓடி எத்தனை கோடி சேர்த்தாலும் அவை உன் பின்னால் வரப்போவதில்லை.'

**எதற்கு அடிமை?**

"மனிதன் பணத்திற்கு அடிமையாகக் கூடாது. தருமத்திற்கும் உடல் உழைப்பிற்கும் தான் அடிமையாக இருக்க வேண்டும்."

**இன்றைய மனிதனின் தேவைகள்:**

"தருமமும் தியானமும் இன்றைய மனிதனுக்குத் தேவை."

**கனியும் சுவையும்:**

"ஒரு மரத்தில் உள்ள கனியைக் கல்லால் அடித்து வீழ்த்தி எடுத்து உண்பதை விட, அது கனிந்து வீழ்ந்த பிறகு எடுத்துண்ண வேண்டும். அதுபோலப் பிறர் வற்புறுத்தலால் செய்கிற தருமத்தை விட உன் மனம் கனிந்து மற்றவர்களுக்குக் கொடுக்கிற தருமம் சிறந்தது."

## ஏழைக்குத் தருமம் செய்!

"ஒரு ஏழைக்குத் தருமம் செய்தால் பத்து பேர்க்குச் செய்த பலன் உண்டு. நாடு அமைதி பெற, நிம்மதி கிடைக்க, சொத்து, பணம் சேர தருமம் செய்யவேண்டும்."

## எப்படி உன்னை அரவணைக்கிறேன்:

"என்னை நினைத்து, என்னைத் தேடிப் பசியுடன் ஓடி வருகிறாய், அப்படி ஓடிவரும் போது அந்தப் பசியும் தெரியாமல் உன்னை நான் அரவணைக்கிறேன்."

## கல்வி நிறுவனங்களுக்கு முக்கியத்துவம்:

"கல்லையெடுத்து, உளியால் உடைத்து, சிலையமைத்து, கும்பாபிடேகம் செய்து, அருளையும் கொடுத்துப் பல சிலைகள் செய்தாலும் ஒரு சிலைக்குத் தான் மகிமையுண்டு. அதுபோல இங்கே பல நிறுவனங்கள் இருந்தாலும் கல்வி நிலையங்களுக்குத்தான் முக்கியத்துவம்."

## சுயநலம் கூடாது:

"மனிதர்களை இவர் இன்னார் இத்தகையவர் என்றறிந்து உதவி செய்யும் மனப்பான்மை வளரவேண்டும். தன் மனம், தன் உயர்வு, தன் வளர்ச்சி, தனது முன்னேற்றம் என்ற நாட்டத்திலேயே இருக்கக்கூடாது."

## ஏழையின் கண்ணீர்!

"புதிதாக எனக்குக் கோயில் கட்ட வேண்டாம். இருக்கிற கோயில்களை ஒழுங்காகப் பாதுகாத்தால் அதுவே போதுமானது. இன்றைய உலகில் செய்ய வேண்டிய பணி என்ன தெரியுமா? என் மக்கள் கோடிக்கணக்கானவர்கள் ஒரு வேளைச் சோற்றுக்கும் வழியின்றி உடுக்க உடையின்றி வாடுகின்றனர். அவர்கள் துயர் தீர்த்தல் வேண்டும். இக்கோயிலுக்கு வரும் அன்பர்கள் சிலராவது இதனைச் செய்ய முன்வர வேண்டும்."

## விதவையர் மறுவாழ்வு:

"இப்பரந்த நாட்டில் சாதி முதலானவற்றால் தோன்றும் குறைகளை அவ்வப்பொழுது நீக்க வழி வகுக்கிறார்கள். அரசாங்கமும் இத்தகைய பணிகளில் ஈடுபடுகின்றது. ஆனால், உலகில் வேறெங்கும் காணமுடியாத கொடுமை இந்த நாட்டில் மட்டுமே உண்டு. அதுவே விதவைகள் படும் துன்பம். அப்படியொரு



கூட்டம் உண்டு என்பதைக் கூட இந்த நாடு மறந்துள்ளது. அவர்கள் துயரைத் துடைக்கக்கூட யாரும் முன்வரவில்லை. எனவே, அவர்கள் துயரை மாற்றும் வகையிலே, விதவைகள் புனர்வாழ்வு இல்லம் என்ற ஒன்றைத் தொடங்கப் போகிறேன். விதவைகள் தம் பொழுதை நன்முறையில் போக்கவும், ஓரளவு ஊதியம் பெறவும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி உதவப் போகிறேன். தையல் இயந்திரங்கள், பிளாஸ்டிக் பை முதலியன பின்னும் கருவிகள் முதலியவற்றை வாங்கிப் போட்டு விதவைகள் வந்து இத்தொழிலில் ஈடுபடுமாறு செய்யப் போகிறேன்."

## போதுமென்ற மனம்:

"நான் என்ற ஆணவம் கூடாது. நல்லது கெட்டது தெரியாமல் எவ்வளவு பொருளை ஈட்டினாலும் எவ்வளவு தங்கத்தைச் சேர்த்து வைத்தாலும் அதனைச் சாப்பிட முடியாது. அதிகமான கொழுப்புள்ள பொருளை நீ சாப்பிட்டால் வாந்தியெடுக்க வேண்டியது தான். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து. பொன் பொன் என்று அலைந்தால் புண்ணாகி அலைய வேண்டியது தான்."

## தருமநெறி:

"தருமநெறி கொண்ட துறைகளில் ஈடுபாடு கொள்ள வேண்டும். சுயநலத்துடன் தருமம் செய்யாமல் ஒரு குழந்தையின் உள்ளத்தோடு தன்னலம் கருதாமல் தருமம் செய்ய வேண்டும்."

## என்றைக்கோ செய்த தருமம்:

"இப்போது உங்களால் தருமம் செய்ய முடியாவிட்டாலும், என்றைக்கோ நீங்கள் செய்த அந்தப் பத்துப்பைசா தருமத்திற்காகவே உங்களை இப்போதும் நான் காத்து வருகிறேன்."

## மூத்தோர் சொத்து – மூதேவி சொத்து:

"என்னிடம் வந்துள்ள சிலர், பரம்பரைச் சொத்தை அனுபவிக்க முடியவில்லையே... அதனைப் பெறுவதற்கு அம்மா வழி செய்யவில்லையே என்றெல்லாம் நினைக்கிறீர்கள். அந்த மூத்தோர் சொத்து மூதேவிச் சொத்துக்குச் சமம். அதுபற்றி வருந்தாதே! நீ உழைத்துச் சம்பாதித்த சொத்து தான் உனக்கு நிலைத்து நிற்கும்!"

## தருமத்தின் பலன் உடனே கிடைப்பதில்லையே... ஏன்?

"பத்து ரூபாய் தருமம் செய்துவிட்டு உடனே நமக்குப் பலன் கிடைக்கவேண்டும் என்று நீங்களெல்லாம் நினைக்கிறீர்கள். அந்தப் பத்து ரூபாய் தருமம் செய்வதற்கு முன்பே பத்து வினைகள் உன்னிடம் திரண்டிருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது."

## பட்டினி இருந்தாவது அன்னதானம் செய்:

"பட்டினியாக இருந்தாலும் பத்து பேருக்கு அன்னதானம் செய்ய வேண்டும். அப்படிப் பட்டினி கிடப்பதால் உன் உடலுக்கு ஒருபுறம் நன்மை. இன்னொருபுறம் உன்னால் பயன் பெற்றவர்கள் வாழ்த்துகின்ற வாழ்த்துக்களால் நன்மை. தாய் குழந்தைக்குப் பால் கொடுப்பதால் அவளது பாரமும் குறைகிறது. குழந்தைக்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதுபோல, அன்னதானத்தால் உன் வினைப்பாரமும் குறைகிறது. மற்றவர்களுக்கும் மகிழ்ச்சி விளைகிறது."

## விழாக்களும் – தான தருமங்களும்:

"எதற்கெடுத்தாலும் விழா! எந்த விழா என்றாலும் தான தருமங்கள்! என்றெல்லாம் நினைக்கிறீர்கள்!

நீங்கள் உண்ட உணவு செரிக்க வேண்டும். இரத்த ஓட்டம் பரவ வேண்டும். உடம்பில் உணவின் சக்தி பரவ வேண்டும். தேவையற்ற கழிவுகள் வெளியேற வேண்டும்.

தினம் தினமும் உண்டுவிட்டுச் சோம்பிக் கிடந்தால் இவ்வளவும் நடக்காது.

உயிருக்கும் உடம்பிற்கும் இயக்கம் எவ்வளவு தேவையோ, கழிவுகள் வெளியேறுவது எவ்வளவு முக்கியமோ அது போலவே ஆன்மிகத்திலும் விழாக்களும், தான தருமங்களும் உங்களுக்கு முக்கியமான தேவைகள்."

## இடையில் வந்தவை: இடையில் செல்பவை:

"உனக்கு இப்போது வந்து வாய்த்துள்ள சொந்த பந்தம்; வீடு வாசல்; மனைவி மக்கள்; பேர் புகழ்; வசதி வாய்ப்பு; எல்லாமே இடையில் வந்தவை. இடையிலே போகின்றவை. இதற்கெல்லாம் அழாதே!

ஆதிபராசக்தியின் கருணை ஒன்று மட்டும் இருந்தால் போதும் என்கிற இந்த ஒரு கருத்தை மட்டும் எப்போதும் புரிந்து வைத்துக்கொள்!"

## நாயின் நன்றியும் – நீங்கள் செய்யும் தருமமும்:

"உங்களிடம் வளர்ந்த நாய், இடையில் சில காலம் பிரிந்து, நாள் கழித்து உங்களைப் பார்த்து நன்றியுடன் வாலாட்டுகிறது. அதுபோலவே, நீங்கள் செய்த தருமமும் ஆண்டுகள் பல கழிந்த பிறகும் உங்களுக்கு நன்றியுடன் பலன் தரும். அதற்குக் கண்டிப்பாகப் பலன் உண்டு.



பிறருக்கு நீங்கள் செய்கிற தருமங்கள் உங்களுக்கே திரும்பிப் பலன் கொடுப்பது போல, உங்கள் குருவிற்கு நீங்கள் செய்கிற ஒவ்வொரு செயலுக்கும் உங்களுக்கே திரும்பப் பலன்களாகக் கிடைக்கும்."

## இறப்பு எந்த ரூபம்:

"மனிதனுக்குப் பிறப்பும் உண்டு; இறப்பும் உண்டு. பிறப்பு எந்த ரூபம் என்று தெரிகிறது. இறப்பு எந்த ரூபத்தில் என்று தெரிந்து கொள்ள முடிவதில்லை. அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் தருமம் செய்ய வேண்டும்."

## அழிவுகளிடையே...

"அழிவுகள் வரக்காத்துக் கொண்டிருக்கின்றன. நீங்கள் எவ்வளவு நல்லது செய்தாலும் பொறாமை ஏற்படும். சொத்து, சுகம் எதுவும் உங்களுக்குத் துணை வராது. நீங்கள் செய்யும் தருமம் தான் துணை வரும்."

## விலங்கினமும்: மனித இனமும்:

"விலங்கினங்கள் பிறக்கின்றன. வளர்கின்றன. காம உணர்வோடு இனப்பெருக்கம் செய்கின்றன. இறந்து போகின்றன. மனிதன் விலங்குபோல் வாழ்ந்து மறையக்கூடாது.

ஆன்மிகத்தில் ஈடுபட்டு, உணர்வை அடக்கிக் கட்டுப்படுத்தி, தருமம் செய்து வாழ்ந்து முன்னேறி வரவேண்டும்."

## தருமம்:

"பதவிக்கு அப்பாற்பட்டது தருமம், பரம்பரை பரம்பரையாகத் தருமம் செய்யவேண்டும். அதைவிட்டு இனி கோடி வைத்திருந்தாலும் பயனில்லை. கழுத்திற்குக் கயிறு தான் வரும்.

தருமம் செய்தால் தான் சிந்தனை தெளிவு பெறும். தேவையறிந்து தருமம் செய்யவேண்டும். அப்படிச் செய்வதால் அவனுடைய பாரமும் குறைகிறது. உன்னுடைய பாவமும் குறைகிறது."

## தருமமும் தொண்டும்:

"நீ பெற்ற பிள்ளைகளும், பேரன் பேத்திகளும் கூட உன் இறுதி வரை வரமாட்டார்கள். நீ செய்யும் தருமமும் தொண்டும்தான் நாளை உலகிற்கு உன் கூட வரும்."

## ஆலமரமும் – தருமமும்:

“ஆலமரம் விழுதுகளை ஊன்றித் தன்னையும் பாதுகாத்துக் கொள்கிறது. மற்றவர்களையும் பாதுகாக்கிறது.

அதுபோல நீங்கள் தருமம் என்னும் விழுதுகளை ஊன்றி உங்களைப் பாதுகாத்துக் கொள்வதுடன் மற்றவர்களுக்கும் பயன்படுமாறு வாழவேண்டும்.

ஒருவிதை பல பழங்களாகின்றது. ஒரு கிளை பல கிளைகளாகின்றது. ஒரு குலை பல மரக்குலைகளாகின்றது. அதுபோல நீ தனி ஒருவனாக இருந்தாலும் பலருக்கு நன்மை செய்து வாழவேண்டும்.”

## காக்கை பிடித்தாலும் கர்மவினை நீங்காது:

“சட்டியிலிருந்தால் தான் அகப்பையில் வரும். தருமம் செய்தால் தான் உங்கள் வாழ்க்கையில் பலன்கள் கிடைக்கும். அந்தக் காலத்தில் வீடு தேடி வந்த ஏழைகளுக்குச் சோறு போட்டான். காக்கைகளுக்கும் பிற உயிகளுக்கும் சோறு வைத்துவிட்டு அதன் பிறகே சாப்பிட்டான். அதனால் பலன் பெற்றான்.

இந்த காலத்திலோ எந்தத் தருமமும் செய்யாமல் காக்கை பிடித்தே காரியம் சாதித்துவிடலாம் என்று எண்ணுகிறான். காக்கை பிடித்தாலும் காரியம் நடப்பதில்லை. கர்மவினை நீங்குவதுமில்லை.

என்னிடம் வந்துவிட்ட நீங்கள் எவனையும் காக்கை பிடிக்க வேண்டிய நிலை வரக்கூடாது என்பதற்காகவே உங்கள் கையைப் பிடித்து இழுத்துத் தருமம் செய்யவைக்கிறேன்.”

## எதிர்காலப் பாதுகாப்பிற்குத் தருமம் செய்:

“நாளை அரைவயிற்றுக்காவது உணவு கிடைக்க வேண்டுமென்றால் இல்லாதவர்களுக்குத் தான தருமம் செய்! அப்போது தான் உனக்கு எதிர்காலப் பாதுகாப்பு உண்டு. பயன் உண்டு.”

## தருமம் தான் நிலைக்கும்:

“நீங்கள் பெற்றெடுத்த பெண்களும், பிள்ளைகளும் என்ன ஆவார்கள்? எங்கே போவார்கள் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியாது. ஆனால், நீங்கள் செய்த தருமம் மட்டுமே உங்களுக்குத் துணையாக வரும். அதுவே நிலைத்து நிற்கும்.”



## வாழ்க்கை கெட்டிப்பட...

“கொட்டிக் கொட்டித் தருமம் செய்தால் தான் உங்கள் வாழ்க்கை கெட்டியாக இருக்கும்.”

## அன்னதானம் செய்!

“இருமுடி, அன்னதானம் உன்னால் முடிந்ததைச் செய்! மற்றவர்களையும் செய்ய வை!

இன்று எங்கு நோக்கினாலும் நோய்கள்! காம நோய்! இதய நோய்! நரம்பு நோய்! வாத நோய்! காமவெறி! சிறுநீரக நோய்! மூட்டுப்பிடிப்பு! எனப் பல நோய்கள்! இவற்றைப் போக்க அங்கங்கே அன்னதானம் செய்! அன்னதானம் எல்லாவற்றிலிருந்தும் பாதுகாக்கும்!”

## தருமம் செய்! இன்றேல்...

“தருமம் செய்யாவிட்டால் எமதருமன் வருவான்.”

## பணக்காரனுக்கு...

“உன் பெயரில் வீடு, குடும்பம், நிலபுலம் என்று இருப்பதை விட, உன் பெயரில் ஒரு தரும சத்திரம் இருந்தால் அது உனக்குப் புகழைச் சேர்க்கும். உன் பெயரும் கெடாது.”

## கூட்டாகச் சேர்ந்து தருமம் செய்!

“இரண்டு பேர் சேர்ந்து தூக்கக்கூடிய பளுவைப் பத்துப் பேர் சேர்ந்து தூக்கினால் எளிதாக முடியும்.

இருவருக்குக் கிடைக்கும் பயன் எட்டுபேர்க்கும் கிடைக்கும். அதுபோலப் பலரும் சேர்ந்து ஒரு காரியத்துக்குத் தருமம் செய்யும் போது எல்லோருக்கும் பயன் கிடைக்கும்.”

## தருமத்தால் பயன்:

“உன் வீட்டில் உள்ள கால்படி தானியத்தை விதைத்தால் தான் அது பத்துப் படியாக வளர்ந்து பயன் கொடுக்கும். அவ்வாறு வளர்ந்த தானியத்தில் நீ தருமம் செய்தால் அதனால் உனக்கு அதிக பயன் கிடைக்கும்.

## மற்றவர்களுக்குப் பயன்பட வாழ்:

“வாழை மரம், மாமரம், ஆலமரம் போல நீங்களும்

மற்றவர்களுக்குப் பயன்பட வாழவேண்டும்.''

**சுயநலம் கூடாது:**

"நான் உழைத்துச் சம்பாதிக்கிறேன். நான் ஏன் இன்னொருவனுக்குக் கொடுக்க வேண்டும்? யாருக்கும் கொடுக்க மாட்டேன் என்ற எண்ணம் வரக்கூடாது.

தன்னல எண்ணத்தைப் போக்கிக் கொள்வதற்குத் தான் தருமம்!

தருமம் செய்தால் தான் ஆன்மிகத்தில் பலன் உண்டு.

இன்றைக்கு மக்களிடையே தெய்வ பயம் இல்லை. நான், எனக்கு என்ற தன்னல உணர்வு ஓங்கி வருவதனால் தான் பிரச்சனைகள்!

நான் என்ற தன்னல உணர்வு நீங்கி நாம் என்ற பொதுநல உணர்வு ஓங்கி வளர்ந்தால் பிரச்சனை இல்லை.''

**உன் குறை நீங்க...**

"உன்னிடம் உள்ள குறையை நீ தருமம் செய்து தான் நிறைவு செய்துகொள்ள முடியும்.''

**தருமத்தின் பலன்:**

"இருப்பவனிடமிருந்து வாங்கி இல்லாதவனுக்குக் கொடுக்கும் போது, ஆன்மிகத்தில் நீயும் தருமம் செய்த பலன் அடைகிறாய்.

மாறாகப் போலி உணர்வோடும், அழுக்கு வைத்துக் கொண்டும் நீ தருமம் செய்யும் போது, பாவத்தைச் சுமக்கிறாய்.

ஆன்மிகம் என்பது பூமாதேவி போன்றது. அதில் போலித்தனம் இருக்கக்கூடாது. வயதான பிறகு ஆன்மிகத்தில் ஈடுபட்டால் போகிறது என்று நினைக்கக் கூடாது.

கருவுற்று, உருவுற்ற நாள் முதலே உன்னுடைய பாவ புண்ணியங்களும் தொடர்கின்றன என்பதை மறந்துவிடாதே!''

**தருமம் இல்லையென்றால்...**

"ஒருவனுக்கு எல்லாம் இருந்தும் தருமம் இல்லையென்றால் பயனில்லை.''

**குறை நீங்க...**

"உன்னிடம் உள்ள குறை தீர தருமம் செய்து தான் நிறை செய்ய முடியும்''



**உள்ளம் வளர்வதற்கு...**

"ஒருவன் கேட்காமலே மனம் உவந்து தருமம் செய்வதுதான் சிறந்த ஆன்மிகம்! சிறந்த பக்தி! தருமம் செய்ய வேண்டும் என்ற உணர்வு தானாக வரவேண்டும். அது தான் உங்கள் உள்ளம் வளர்வதற்கு வழி.''

**வாழ்க்கையில் முன்னேற...**

"எவன் எந்தத் துறையில் இருந்தாலும், எவன் ஒருவன் மற்றவர்களுக்கு உதவி செய்கின்றானோ அவன்தான் வாழ்க்கையில் முன்னேற முடியும்.''

**தான தருமம் செய்!**

"தான தருமம் செய்தால் பலன் தருவேன். கொலை, கொள்ளை, களவுகளிலிருந்து காப்பாற்றவும் செய்வேன்.''

**சேறும் – சோறும்:**

"சேறு மட்டும் சோறாக மாறி விடாது சேற்றைக் குழைக்க வேண்டும். விதைக்க வேண்டும். பயிர் செய்ய வேண்டும். விளைந்த பிறகு அரிசியாக்க வேண்டும். அரிசியில் தண்ணீரை ஊற்றி வேக வைக்க வேண்டும். அது பக்குவமாக வெந்தால்தான் சோறு ஆகும். அதுபோல ஆன்மிகத்தில் தருமமும் தொண்டும் செய்தால் தான் பலனை அடைய முடியும்.''

**வளர்ச்சிக்கு வழி:**

"இங்கே எதையும் விதைத்தால் தான் எதுவும் விளையும்.

இறைத்தால்தான் கிணறும் சுரக்கும்; பலனும் வளர்ச்சியும் கிடைக்கும்.''

**மிச்சம் பிடிக்க நினைத்தால்...**

"ஐந்து பைசாவை மிச்சம் பிடிக்க வேண்டும் என்று நினைத்தால் ஐயாயிரம் ரூபாய் செலவு வரும். ஆதலால் ஏழை எளியவர்களுக்குத் தருமம் செய்.''

**கடன் வாங்கியாவது தருமம் செய்!**

"மிருகங்கள் உருவத்தாலும் குணத்தாலும் இனத்தாலும் பலவகை இருந்தாலும் அவைதரும் பால் ஒரே நிறம் தான். தூரத்துப் பச்சைதான் கண்ணுக்கு அழகாகத் தெரியும்.

ஆன்மிகத்தில் நல்லது கெட்டது தெரிந்து நடக்க வேண்டும். கடன் வாங்கியாவது தருமம் செய்யும் பழக்கம் வரவேண்டும்.''

### சிறு துளி பெருவெள்ளம்:

"சிறு துளி பெரு வெள்ளம் ஆகிறது. சிறு சிறு தொண்டு இங்கே பெரிய ஆலயம் ஆகிறது. உங்கள் சிறு சிறு காசு பெரிய தருமம் ஆகிறது.''

### திரும்பப் பலன் கொடுக்கும்:

"வளர்ந்த மரம் தளிர் விடும். வளர்ந்த மாடு முட்டும். ஆன்மிகம் மட்டும் தான் நன்மை தரும். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும். உலகத்துக்கு நீ தருமம் செய்தால் அதுவே உனக்குத் திரும்பப் பலன் கொடுக்கும்.''

### இப்பொழுது ஆள் இல்லை:

"உதை வாங்க ஆள் இருக்கிறான் உதை கொடுக்கவும் ஆள் இருக்கிறான். உழைத்துத் தருமம் செய்ய இப்பொழுது ஆள் இல்லை.''

### மரமும் – மனிதனும்:

"மரம் வளர்ந்து பழம் கொடுத்தால் தான் பலன் உண்டு அதுபோல மனிதனும் பிறந்து வளர்ந்து மற்றவர்களுக்குத் தருமம் செய்தால் தான் பலன் உண்டு.''

### தானாக மனம் கனிந்து...

"பிறர் செய்கிறார்களே என்பதற்காகவும், பிறர் சொல்கிறார்களே என்பதற்காகவும் தருமம் செய்யக் கூடாது. தானாக மனம் கனிந்து தருமம் செய்ய வேண்டும். பிறரோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தருமம் செய்யக் கூடாது.''

### உண்மையான தருமம்:

"வெளியே தெரியாமல் தருமம் செய்வதே உண்மையான தருமம். அதுவே உண்மையான ஆன்மிகம்.''

### சேர்த்து வைப்பதால் பலனில்லை:

"கையிலே நெல்லை வைத்துக் கொண்டிருந்தால் பயனில்லை. அதை நிலத்தில் விதைக்க வேண்டும். செழித்து வளர வேண்டும் எல்லோருக்கும் பயன்பட வேண்டும்.

அதுபோலச் செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பதால் பயனில்லை. அது எல்லோருக்கும் பயன்பட வேண்டுமானால் தருமம் செய்!



அன்னதானத்திற்குப் பணமாகக் கொடுப்பதைவிட, நீயே அன்னதானம் செய். தண்ணீர்ப் பந்தலுக்குப் பணமாகக் கொடுப்பதைவிட நீயே மற்றவர்களுக்குத் தண்ணீர் வழங்கு.

எந்தத் தருமமானலும் நீயே உன் கைகளால் செய்வதுதான் சிறப்பு. பணம் கொடுத்துவிடுவதும், ஆள் வைத்துச் செய்வதும் அவ்வளவு சிறப்பல்ல!''

### எதிர் வரும் காலம்:

"எவ்வளவுதான் ஆடம்பரத்தில் திளைத்தாலும் குடிசை வாழ்க்கையே மேல் என்று நினைக்கிற காலம் வரும். எங்கே பணம் வைத்தாலும் திருடன் எடுத்துக் கொள்வான்.''

### ஒருவன் உழைக்க...

"ஒருவன் உழைக்க ஒன்பது பேர் உட்கார்ந்து சாப்பிடும் காலம் இது.

உழைக்காமல் பிழைக்க எண்ணும் சோம்பேறித்தனம் பெருகி வரும் காலம் இது.

இத்தகைய சூழ்நிலையில் வம்பு, துன்பு, வெட்டு, குத்து எல்லாம் உண்டு.

ஆன்மிகத்திற்கு வந்து விட்டால் இதில் நிலையாக இருக்க வேண்டும்.

இருக்கும் காலம் வரை முடிந்த அளவு தருமம் செய்ய வேண்டும்.''

### தருமத்தின் இலக்கணம்:

"உன்னுடைய கை! உன்னுடைய பொருள்! உன் செயல்! உன் மனம்! -இவை அனைத்தும் ஒன்றுபட்டுச் செய்வது தான் தருமம்.

பாவனைக்காகத் தருமம் செய்வதால் பலன் இல்லை. பானை உடைந்தால் அப்பானையில் உள்ள தண்ணீர் கைக்குக் கிட்டாதது போல செய்யும் தருமத்திற்கும் பலன் இல்லாமல் போகும்.''

### தூய எண்ணங்களும் – செய்யும் தருமங்களும்:

"நொண்டி, முடவன், செவிடன், குருடன், ஊமை, ஆகிய இவர்கட்கும் ஒரு சக்தியைக் கொடுத்திருக்கிறேன்.

பிறந்த குழந்தை தாயின் செயல்களைப் பார்த்து ஒவ்வொரு செயலையும் கற்றுக்கொள்கிறது.

சூரியன் எப்படி இருளை நீக்கி ஒளியைக் கொடுக்கிறதோ அதுபோல அழிவிலிருந்து மனிதனை ஆன்மா தான் காப்பாற்றும்.

உன் தூய எண்ணங்களும் செய்யும் தருமங்களும் தான் உன்னை அழிவிலிருந்து காப்பாற்றும்.''

**இயற்கை உணர்த்தும் பாடம்:**

''புஞ்சை இல்லையென்றால் பஞ்சம் தீராது. இயற்கைக்கு வளர்ச்சி உண்டு.

பூ பூத்துக் காய் காய்த்துப் பழம் பழுத்துப் பழத்தில் விதை உற்பத்தி ஆகிறது. அந்த விதையைக் கையிலேயே வைத்திருந்தால் பலன் கிடைக்குமா? பூமியைத் தொண்ட வேண்டும். விதையை நட வேண்டும். நீர் ஊற்ற வேண்டும் அப்புறம் தான் பழம் கிடைக்கும். மற்றவர்க்கும் பலன் கிடைக்கும்.''

அதுபோலவே மனிதன் பிறக்கிறான்; வளர்கிறான்; இறக்கிறான் இப்படி வாழ்வதே வாழ்க்கையாகி விட்டது.

பிறந்தோம், வளர்ந்தோம் மற்றவர்களுக்கு நன்மை செய்துவிட்டுப் போவோம் என்று வாழ்ந்துவிட்டுப் போக வேண்டும்.''

அந்தப் பழுமரம் போல உங்கள் வாழ்க்கை மற்றவர்களுக்குப் பயன்பட அமைய வேண்டும். இந்த எண்ணத்தோடு வழி வழியாக மனித குலம் வாழ்ந்தால் பயன் உண்டு.''

**தருமம் செய்தே ஆக வேண்டும்:**

''விதை விதைக்கும் போது களை இருக்கும்; நாற்று நடும் போதும் களை இருக்கும் அறுவடை செய்து வீட்டிற்கு வந்து சேரும் வரை களை இருக்கத்தான் செய்யும்.

அதுபோலவே நீ ஆன்மிகத் துறையில் ஈடுபட்டு அழியும் வரை துன்பம் வரத்தான் செய்யும். துன்பம் தணிய வேண்டும் என்றால் நீ பிறர்க்கு நன்மை செய்தே ஆக வேண்டும். பிறர்க்கு நன்மை செய்ய வேண்டுமானல் நீ தருமம் செய்தேயாக வேண்டும்.''

**பழங்கால வாழ்க்கை முறையில்...**

''இந்த உலகில் வாழ்வது பச்சை மண்பாண்டத்தின் மேல் நடப்பதற்குச் சமம். பாண்டங்கள் உடையாமல் இருக்க முடியாது. பாவங்கள் சேராமல் வாழ்ந்துவிட முடியாது.

பகுத்துண்ணும் தன்மையும். பாசத்தோடு பழகும் தன்மையும் பழங்கால வாழ்க்கை முறையில் அமைந்திருந்தன. அந்த நிலை மீண்டும் வரவேண்டும்.



இன்று மக்கள் பிறப்பு அதிகமாகிவிட்டதே தவிர, ஆன்மிகமும் தருமமும் அதிகமாகவில்லை.''

**கர்மம் தீர்க்கத்தான்:**

''தருமம் என்பது உன் கருமம் தீர்க்கத்தான் என்று புரிந்து கொள்.''

**தருமத்தின் பலன்:**

''ஒருவன் வளர்த்த புறா அவனை விட்டுப் பிரிந்து பல நாட்கள் ஆனாலும் உயிரோடு இருந்தால் அது அவனிடம் வந்து சேர்ந்து விடும். அதுபோல நீங்கள் செய்த தருமத்தின் பலன் உங்களை என்றாவது ஒரு நாள் வந்தே சேரும். நீங்கள் செய்யும் தருமமும் தொண்டும் பின்னால்தான் பலன் தரும்.''

**தருமமும் – பரிகாரமும்:**

''குழம்பிய சேற்றில் ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றுவதால் தண்ணீர் சுத்தமாகிவிடாது. அதுபோலச் செய்த செய்கின்ற பாவங்களுக்குப் பரிகாரமாக ஏதோ ஒரு சமயம் தருமம் செய்து விட்டால் செய்த பாவங்கள் மறைந்து விடாது. தொடர்ந்து தருமம் செய்தபடி இருக்க வேண்டும்.''

**தருமம் நிலைக்கும்:**

''கடல் அலைகள் மறைந்து சென்றாலும், கீழே மணல் அலைகள் மறைவதில்லை. அதுபோல நீ மறைந்தாலும் நீ செய்த தருமம் நிலைக்கும்.''

**தருமம் கலந்த வாழ்வு:**

''மனிதர்களின் பருவம் கர்வத்தைக் கொடுக்கிறது. ஒருவனுக்கு எல்லாம் இருந்தும் தருமம் இல்லையென்றால் பலன் இல்லை.''

**நீ செய்யும் தருமம் அழிவதில்லை:**

''தாவரங்கள் காற்றாலும் மழையாலும் அழிந்து விட்டாலும், மறுபடியம் துளிர்விட்டு வளரும். அதுபோல நீ செய்யும் தருமம் நீ அழிந்த பிறகும் உன் பெயரைச் சொல்லும்.''

**கொடுப்பதால் வளரும் பாசம்:**

''செடி வளர்ந்து மரமாகிப் பூ பூத்துக் காய் காய்த்துக் கனியாகிப் பலன் கொடுக்கும்போது நாடி வரும் கூட்டம் அதிகமாகிறது.

பழம் குறையக்குறைய மரத்தை நாடிவரும் பறவை, மற்றும் மனிதக் கூட்டம் குறைய ஆரம்பிக்கும்.

அதுபோலப் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கப் பாசம் அதிகமாகிறது.

கொடுப்பதைக் குறைத்துக் கொண்டால் பாசம் என்ற பாதையை விட்டுப் பாவம் அதிகமாகிறது.''

**தரும சிந்தனை:**

"தரும சிந்தனையுடன் தருமம் செய்ய வேண்டும். பரம்பரை பரம்பரையாகச் செய்து வந்த புண்ணிம் உங்கள் தலை முறையைக் காப்பாற்றும்.

காக்க! காக்க! என்று சத்தி கவசம் படித்தால் மட்டும் போதாது. ஆன்மிகச் சிந்தனையுடன் கூடிய தருமம் மட்டுமே உங்களைக் காப்பாற்றும்.''

**மரமும் – மனிதனும்:**

"மழைக் காலத்தில் பெய்யும் தண்ணீரை உறிஞ்சி வைத்துக் கொண்டு மரம் சீராக வளர்கிறது. சீராகப் பயன்படுத்திக் கொண்டு வளர்வதுடன் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பயன் தருகிறது.

மனிதனோ வாழ்நாளைச் சரியாகப் பயன் படுத்திக் கொள்ளாமல் ராசி பலனையும், குருட்டு அதிர்ஷ்டத்தையும் நம்பி ஏமாந்து போகிறான்.

செடியும் மரமும் மற்றவர்களுக்கு உதவி செய்து பயன்பட வாழ்வது போல, மனிதனும் ஒருவர்க் கொருவர் தருமம் செய்து பயன்பட வாழ வேண்டும்.''

**தருமத்தை அழிக்க முடியாது...**

"நேற்று - இன்று - நாளை என விஞ்ஞானத்தால் அழிவுகள் ஏற்படலாம். இயற்கையை அழிக்கவும் முயலலாம். ஆனாலும் தருமத்தை அழிக்க முடியாது.

மக்கள் எந்தச் சூழ்நிலை ஏற்பட்டாலும் தங்கள் உள்ளத்து உணர்வுகளை ஒருமுகப்படுத்தி வாழ வேண்டும்.''

**தரும சிந்தனை இருந்தால்தான்:**

"மேகம் இல்லையென்றால் மழை இல்லை; அந்த மேகத்தைப் போன்றது உள்ளம். அந்த உள்ளத்தில் தரும சிந்தனை இருந்தால்தான் சொல்லாற்றல், செயலாற்றால் இருக்கும். மன நிம்மதியும், சந்தோஷமும் ஏற்படும்.''



**இறந்தும் – இறவாமல் இருக்க...**

"உன்னைவிட எனக்குத் திறமை உள்ளது என்று ஒருவன் நினைக்கிறான். யாருக்கு என்ன திறமை இருந்தாலும் இறந்தும் இறவாமல் இருக்க வேண்டுமானால் தருமம் செய்ய வேண்டும்.''

**இயற்கையும் – மனிதனும்:**

"இயற்கை பிரதிபலன் எதிர்பார்க்காமல் மனிதனுக்குத் தருமம் செய்கிறது. ஆனால் மனிதனோ மற்றவர்களுக்குத் தருமம் செய்யத் தயங்குகிறான்.

எவ்வளவுதான் சொத்து இருந்தாலும், கொடுத்த கடனைத் திரும்ப வாங்க முடிவதில்லை. நினைத்துப் பார்ப்பதற்குள் காலம் உருண்டோடி விடுகிறது.''

**உயிரைவிட மேலானது:**

"உயிரைவிட மேலானது தருமம்.''

# 13. பக்தி - பக்தர்கள்

**வெண்ணெயில் அகப்பட்ட ஈ:**

"இந்த மண்ணை மிதித்து என்னையே நினைக்கின்ற பக்தர்களை இளகிய வெண்ணெயில் அகப்பட்ட ஈ போல அணைப்பேனடா மகனே!"

**பக்தியின் சக்தி:**

"ஈட்டி எட்டியவரை பாயும்; பணம் பாதாளம் வரை பாயும் என்று தானே இதுவரை கேட்டிருக்கிறீர்கள். பக்தி அதற்கு மேலும் பாயும் என்பதை உங்களுக்கு உணர்த்துவேன்."

**பக்தியின் அருமை:**

"எங்கும் தேடி அலையாமல் இருந்த இடத்திலிருந்தே சம்பாதிப்பது - விலை கொடுத்து வாங்க முடியாதது - விற்கவும் முடியாதது - இந்த உலகத்தில் பக்தி ஒன்று தான் மகனே!"

**செல்வம் வரும்போது:**

"பயிர் செழித்து வளர்ந்தால் ஆடு, மாடுகள் மேய வரும். வேலியிட்டுக் காத்துக் கொள்ள வேண்டும். ஒருவனுக்குச் செல்வம் வருகிற காலத்தில் பொறாமை, பகை முதலியன ஏற்படும். பக்தி என்ற வேலியிட்டுக் காத்துக் கொள்ள வேண்டும்."

**பணமும் – பக்தியும்:**

"பணத்திற்கு எடைபோட்டு பக்தியை வளர்க்காதே!"

**உண்மை உணர்வோடு ஓம் சக்தி சொல்:**

"ஓம் சக்தி என்று சப்தம் போட்டு உச்சரித்து விட்டால் மட்டும் போதாது! ஓம் சக்தி! என்று உள்ளத்திலிருந்து புறப்பட்டு வரவேண்டும்! மௌனத்தையும் தொண்டினையும் கடைப்பிடிக்க வேண்டும். மின்சாரத்தைத் தொடும் போது மின்தாக்குதல் உண்டாவது போல மனப்பக்குவம் உண்டாகும் போதுதான் என் அருள்சக்தி கிடைக்கும்."



**உள்ளம் எப்படியோ பலனும் அப்படி!**

"மனத்தெளிவு, தெய்வத் தெளிவு, தியானத் தெளிவு, நாணயத் தெளிவு, உள்ளத்தெளிவு இவை இருக்கவேண்டும்.

உங்கள் வெளித்தோற்றத்தினால் பயன் கிடையாது. உங்கள் உள்ளத்தோற்றம் எப்படியோ அதற்குத் தக்கபடி தான் பயனுண்டு."

**சக்தி நினைத்தால் தான் போகும்:**

"உடம்பில் படிகின்ற அழுக்குகள் உண்டு; தூசியில் அழுக்குகள் உண்டு. அவை குளித்தால் நீங்கும். மனத்தில் அழுக்குகள் உண்டு. அவற்றை நீக்கிக் கொள்ள வேண்டும் என்று நீ நினைத்தால் மட்டும் போகாது. உன்னை நினைக்க வைக்கிற சக்தி நினைத்தால்தான் போகும். அந்த மன அழுக்குகளை நீக்க வேண்டும் என்று மனதார வேண்டி அழுதால்தான் நீக்குவேன்."

**உங்கள் பக்தியைப் பொறுத்தது:**

"சாமியும் சாணி ஆகலாம். சாணியும் சாமி ஆகலாம். சுவரில் சாணியைத் தட்டும்போது அதில் உள்ள பசையின் தன்மையைப் பொறுத்துச் சுவரில் ஒட்டிக் கொள்வது உண்டு. அதுபோலவே ஆன்மிகத்திலும் அம்மாவின் அருளை அடைவதும் அடையாததும் உங்கள் பக்தியைப் பொறுத்தது. உங்களிடம் உள்ள பசையைப் பொறுத்தது. உங்கள் பக்தி பாசி பிடித்த சுவரைப் போல இருக்கக்கூடாது. மனத்தைத் தூய்மைப்படுத்திக் கொண்டு பக்தி செலுத்த வேண்டும்."

**கடமையும் – கடவுள் தன்மையும்:**

"கடமையைச் செய்தால் கடவுள் தன்மை தானே கிடைக்கும். அதனைச் செய்யாதபோது யார் அரசாண்டாலும் உனக்குப் பயன் கிடைக்காது"

**மனித இனத்திற்கு வேண்டியவை; வேண்டாதவை:**

"மனித இனத்திற்குத் தெய்வ நம்பிக்கையும், ஆன்மிக உணர்வும் இருக்க வேண்டும். கபடு, சூது, பந்தபாசங்கள் இருக்கக் கூடாது."

**உன் பக்திக்குத் தக்கபடி...**

“அம்மா! என்ற சொல்லை நீ எப்படி உச்சரிக்கிறாய் என்பதைப் புரிந்து கொண்டு நான் அருளைக் கொடுக்கிறேன்.

அம்மா! என்று என்னை நீ பாசத்தோடு அணுகும்போது உனக்குத் துன்பம் தெரியாது. அம்மாதானே... என்று என்னை நீ அலட்சியப்படுத்தும் போது துன்பம் வரும். அம்மா என்ற சொல்லிற்கே பந்தபாசம் உண்டு.”

**மழை வளம்! மனவளம்!**

“மனவளம் உண்டென்றால் மழைவளம் உண்டு. வட்டம், மாவட்டம், மகா மட்டமாக இருக்கும்போது எப்படி மழை பெய்யும்?”

**பயபக்தியும் – அலட்சியமும்:**

“அம்மா... என்று பயபக்தியோடு நீ என்னை அணுகும்போது காப்பாற்றப்படுகிறாய். அதே அம்மா என்ற சொல்லை நீ அலட்சியப் படுத்தும்போது எல்லாமே அலட்சியப்படுத்தப்படுகிறது.”

**மனமும் – மணமும்:**

“மனத்தில் பணத்தாசை, பேராசைகள் எழும்பக்கூடாது. அந்த மனத்தில் தெய்வமணம் வீசவேண்டும். அன்பு உள்ளம் வேண்டும்; ஆசை உள்ளம் கூடாது.”

**கண்ணாடியும் – பாதரசமும்:**

“ஒரு கண்ணாடியில் முன்னின்று உன் உருவத்தைப் பார்த்தால் உன் உடம்பின் முன் பகுதி மட்டுமே தெரியும். பின்பகுதி தெரிவதில்லை. உன் வாழ்க்கையை முழுவதும் உணரவேண்டுமானால் ஆன்மிகம் என்கிற கண்ணாடியைப் பயன்படுத்த வேண்டும். கண்ணாடியைப் பயன்படுத்தும் பொழுது தூசு படிந்தால் துடைத்துக் கொள்ளலாம். பாதரசமே போய்விட்டால் கண்ணாடி பயன்படாது. அதுபோலவே ஆன்மிகம் என்ற பாதரசம் போய்விட்டால் பயனில்லை. அந்த நிலைக்குப் போகாமல் பார்த்துக் கொள்வது உன் பொறுப்பு.”

**பக்தனுக்கு வரக்கூடாத நினைப்பு:**

“இத்தனை காலம் கோயிலுக்கு வருகிறோம்; வழிபாடு செய்கிறோம்; அம்மா நமக்கு என்ன செய்துவிட்டது என்று



நினைக்கக்கூடாது. உன் பிரச்சனைகள் காரணமாக உன்னை அழிந்து போகவிடாமல் உன்னை இத்தனை காலமும் நல்ல முறையில் வாழ வைத்திருக்கிறேனே அதனை நினைத்துப் பார்! இயந்திரம் ஓர் அளவிற்குத் தான் வேலை செய்யும். அடிக்கடி எண்ணெய் போடுகிறாய். துடைக்கிறாய்; பழுது பார்க்கிறாய். அதுபோலவே தெய்வ அருளைப் பெற வேண்டி உன் முயற்சிகளும் தொடரவேண்டும். வழிபாடு, பக்தி, தியானம், தொண்டு இவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும். எந்த முயற்சிகளிலும் ஈடுபாடு காட்டாமல் அம்மாவை நொந்துகொள்ளாதே!”

**தெய்வம் – அருள்:**

“தெய்வு, அம் என்ற இரண்டும் சேர்ந்து தெய்வம் என்றாகும். தெய்வு என்பது தேய்மானமாகும். உயிர்களுக்கு ஏற்படுகிற அழிவே தேய்மானம் என்பது. அதனைத் தடுக்க அம் என்ற அம்மாவின் அருள் தேவை!”

**என்னை விலைகொடுத்து வாங்க முடியாது...**

“எதை வேண்டுமானாலும் விலை கொடுத்து வாங்கலாம். மகனே! என்னை மட்டும் விலை கொடுத்து வாங்க முடியாது. இரண்டிற்கு மட்டுமே நான் கட்டுப்படுவேன் மகனே! ஒன்று பக்தி! இன்னொன்று தூய்மையான தொண்டு!”

**அடைக்கலம் வந்தவனை...**

“கடலில் விழுந்த துரும்பு என்றாவது கரையைச் சேர்வது போல, என்னையே அடைக்கலமாக வந்து சேர்ந்த உங்களையெல்லாம் கரை சேர்க்காமல் விட்டுவிட மாட்டேன்.”

**உன் முயற்சியும் வேண்டும்:**

“மகனே! குழந்தை பிறந்து அதற்குப் பசி ஏற்படுகிறது. பசியால் அழுகிறது. கை கால்களை உதறிக் கொள்கிறது. அதன் தேவைக்காகப் பசியை ஏற்படுத்தி வைத்திருக்கிறேன். அழுகிற சக்தியைக் கொடுத்திருக்கிறேன். அழுகிற குழந்தையைத் தூக்கி வைத்துத் தாய் என்ன செய்கிறாள்? தன் மார்பில் வைத்துக் கொள்கிறாள். பாலை உறிஞ்சிக் குடித்துக் கொள்ள வேண்டிய முயற்சி யாருடையது? அந்தக் குழந்தையினுடையதல்லவா? அது போல இங்கே சில வாய்ப்புகளை நான் உங்களுக்கு ஏற்படுத்தித்தான் கொடுக்க

முடியும். மற்ற முயற்சிகளை நீ தான் மேற்கொள்ள வேண்டும். நீ தான் முயன்று உயரவேண்டும்.''

**படித்தவனும் – பாமரனும்:**

''அதிகம் படித்தவன் விளக்கொளியில் மயங்கி அழியும் விட்டில் பூச்சி போல அழிந்து போவான். அடிமட்டத்தில் இருப்பவனுக்கு ஆன்மிகம் உண்டு.''

**விளக்கும் – பக்தியும்:**

''எண்ணெய் ஊற்றித் தீபத்தை எவ்வளவு தான் தூண்டினாலும் காற்று அடித்தால் தீபம் அசையத்தான் செய்யும். அதுபோல வாழ்க்கை என்றால் சிரமங்களும் இருக்கத் தான் செய்யும். ஓம் சக்தி என்று என்னை நினைத்துக்கொள்! நான் காப்பாற்றுகிறேன் மகனே!''

**பக்தி வேரூன்ற வேண்டும்:**

''விளக்கில் எண்ணெய் விட்டுத் திரியிட்டு ஏற்றினாலும் நின்று எரிவதற்குச் சில மணித்துளிகளாகும். அதுபோல நீ என்னிடம் வந்து விட்டாலும் உனது பக்தி வேரூன்ற வேண்டும். அவ்வாறு வேரூன்றுவதற்கேற்ப உனக்குப் பலன்களும் கிடைக்க ஆரம்பிக்கும்.''

**கஷ்டத்தைக் குறைக்கின்றேன்...**

''எவ்வளவு பெரிய பாறாங்கல் போன்ற சுமையை நீ சுமந்து வந்தாலும் அதன் கஷ்டம் உனக்குத் தெரியாதவாறு குறைத்துத் தருகிறேன்.''

**ஆராயாதே:**

''அருள்வாக்கு! கனி! வேம்பு! தீர்த்தம் இவையனைத்தும் அன்னையே! அந்தந்த இடங்களில் அந்தந்த நிலையில் வைத்து நான் ஆன்மிகத்தை வளர்க்கிறேன். அதைப்பற்றியெல்லாம் ஆராயாதே! மற்றவர்களைக் குறைபேசுவதை விடுத்து உன் நிலையை வளர்த்துக் கொண்டு செயல்படு!''

**அழுக்குள்ளவனையும் ஏன் அரவணைக்கிறேன்?**

''காந்தம் தன்னைப் போல உள்ள ஒரு காந்தத்தினை இழுப்பதில்லை. ஆனால் இரும்பை இழுக்கிறது. பாத்திரத்தில் பாசி படிகிறது. அந்தப் பாசி எப்படி வந்தது? பாத்திரத்தில் உள்ள பொருளால் வந்ததா? பாத்திரத்தில் வந்ததா?



பாத்திரத்தில் பாசியுள்ளது என்பதற்காகப் பாத்திரத்தையே தூக்கி எறிய முடியுமா? முடியாதல்லவா? அதுபோல தாயாகிய என்னிடம் வந்து சேர்கிற ஆன்மாக்களிடம் உள்ள பாசியை நீக்க வேண்டி அவர்களை ஈர்க்கிறேன். பாத்திரங்களை வீசி எறிய மாட்டேன். கண்ணாடியில் தூசு இருந்தால் துடைக்கலாம். கண்ணாடியையே வீசி எறியலாமா?''

**முக்திக்குத் தேவை...**

''சக்தியும், பக்தியும் முக்திக்குத் தேவை.''

**சக்தி ஒளி:**

''ஒவ்வொரு வீட்டிலும் சக்தி ஒளி இருக்கவேண்டும். எந்தெந்த வீடுகளில் சக்தி ஒளி இருக்கிறதோ அங்கே நானிருக்கிறேன் என்று பொருள். அது வியாபாரப் பொருளல்ல. ஒரு தெய்வீகப் பொருள் என்பதை மறந்துவிடாதே.''

**படிப்பால் என்ன பயன்?**

''படிப்பு ஆடம்பரத்தையும் நவநாகரிகத்தையும் தான் வளர்க்கும்.''

**தேவையான பற்றுகள்!**

''தியானத்தில் பற்று; அமைதியில் பற்று; தொண்டில் பற்று; குருவிடம் பற்று; தாய் தந்தையிடம் பற்று என்கின்ற பற்றுகள் உன்னிடம் இருக்க வேண்டும்.''

**படிப்பறிவும் பட்டறிவும்:**

''படிப்பறிவு முக்கியமல்ல. பட்டறிவுதான் முக்கியம்.''

**குரு உபதேசம் பெற்றவர்கள்:**

''குரு உபதேசம் பெற்றவர்கள் உபதேசம் பெற்றுக் கொண்ட பிறகும் தியானத்தை விடாமல் கடைப்பிடிக்க வேண்டும்.''

**யோசிப்பதில் பயனில்லை:**

''எதற்காக ஆன்மிகம்? எதற்காக உணவு? எதற்காக உலகம்? என்றெல்லாம் காலங்கடந்து யோசிப்பதில் பயனில்லை. உள்ள காலம் குறைவு. இறப்பு நிச்சயம். அது ஐந்து வயதிலும் உண்டு. பத்து வயதிலும் உண்டு. எனவே, உங்களை ஆன்மிக நெறியில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்!''

**போலி பக்தியினால் நெருங்க முடியாது:**

“ஆலயத்தை வலம் வரும்போது ஓரளவுதான் காலில் மண் ஒட்டும். ஆலயத்தில் உள்ள மண் முழுவதும் ஒட்டாது. அதுபோல உண்மையான பக்தியினால் தான் அம்மாவை அடையமுடியும். அதிக அளவு மண் ஒட்டவேண்டும் என்பதற்காக ஈரக்கால்களுடன் ஆலயத்தை வலம் வந்தால் மண் ஒட்டாது. மண்ணில் உள்ள அழுக்கு தான் ஒட்டும். போலி வேடத்தாலும், பணத்தாலும் அம்மாவை அடையமுடியாது. காலில் ஒட்டக்கூடிய மண் போன்றவர்கள் அம்மாவின் வார்த்தையைக் கேட்டு நடக்கும் உண்மையான பக்தர்கள். ஈரக்காலில் ஒட்டும் அழுக்கு போன்றவர்கள் கவர்ச்சிக்காக அம்மாவை வழிபடுகிறவர்கள்.”

**உண்மையான பக்தி:**

“மண்ணில் உள்ள இரும்புத்தாது காந்தத்தினால் ஓரளவு கவரப்பட்டு மீதி விழுந்துவிடும். அதுபோல இங்கு வருபவர்கள் அனைவரும் அம்மாவின் அருளைப் பெற முடியாது. உண்மையான பக்தி உள்ளவர்கள் மட்டுமே அம்மாவின் அருளைப் பெற முடியும்.”

**என்னுடைய சித்தாடல்:**

“என்னுடைய சித்தாடல்களை உங்களால் புரிந்துகொள்ள முடியாது. உங்களைக் கொண்டே உங்களிடத்தில் சித்தாட வைப்பதுதான் பெரிய சித்து!”

**சிறுகச் சிறுக உங்களை வளர்க்கிறேன்...**

“குழந்தைக்கு எப்போது பசியெடுக்கும்? எப்போது ஊட்டலாம் என்று அளவறிந்து தாய் ஊட்டுகிறாள். அதுபோல உங்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பக்தியை ஊட்டி வருகின்றேன். எப்படிப் புகட்ட வேண்டுமோ அத்தகைய முறையிலெல்லாம் உங்களுக்குப் பக்தியைப் புகட்டி வருகின்றேன். குழந்தை நன்றாக வளரவேண்டுமே என்பதற்காக ஒரே நேரத்தில் அதிகமான உணவை ஊட்டினால் அது குழந்தைக்கு அஜீரணத்தை உண்டாக்கிவிடும். அதுபோல உங்களிடத்தில் ஒரேயடியாகப் பக்தியைப் புகுத்தினாலும் உங்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது.”

**சித்தர்:**



“சித்தருடன் பழகுவதைப் பெரிய பாக்கியமாகக் கருதவேண்டும்.”

**பக்தியும் சக்தியும்:**

“பக்திக்கும் சக்திக்கும் உள்ள பெருமையை உணரவேண்டும்.”

**இல்லறத்தில் ஈடுபட்டிருந்தாலும்:**

“இல்லறத்தில் ஈடுபட்டிருந்தாலும் தியானம், மௌனம், அர்ச்சனை, அபிடேகம் தேவை. ஆன்மிகத்திற்கு அமைதி தேவை.”

**பேரும் புகழும்:**

“பேருக்கும் புகழுக்கும் அடிமைப்படாதே! வெற்றியோ, தோல்வியோ கவலைப்படாதே! என்னை நம்பி உன் கடமையைச் செய்!”

**முக்தியடைய:**

“முக்தி அடைவதற்கு ஆன்மிகத்தில் ஈடுபடுவது தான் சிறந்த வழி!”

**68 நாயன்மார்கள்:**

“பக்திக்கு உதாரணமாக 63 நாயன்மார்களைச் சொல்வார்கள். ஆதிபராசக்தி இயக்கத்தில் அதனை 68 ஆக உருவாக்கப் போகிறேன். அவருள் முக்கால் பங்கு மகளிர் இருப்பார்கள்.”

**ஏன் அடிக்கிறேன்?**

“அடிமேல் அடி அடித்தால் தான் அம்மியும் நகரும். முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். அதனால் தான் உங்களை அடிமேல் அடி அடித்து உங்கள் உள்ளத்தில் உள்ள அழுக்கை நீக்கச் செய்கிறேன்.”

**திருந்துவதற்கு வாய்ப்பு கொடுக்கிறேன்...**

“தன் மகன் தவறு செய்தாலும் அதை வெளிக்காட்டாமல் மூடி மறைத்துத் திருந்தமாட்டானா என்று எதிர்பார்க்கும் தாயைப் போல, நானும் நீங்கள் செய்யும் தவறுகளை

மறைத்துத் திருந்துவதற்கு வாய்ப்புக் கொடுக்கிறேன்.''

**புகைப்படம் பேசுமா?**

''புகைப்படத்தில் உள்ள அம்மா படத்தைப் பார்த்து என் பக்தன் என்னைத் திட்டுகிறான். புகைப்படத்தில் உள்ள அம்மா பேசுமா? பேசும். கனவில் வந்து பேசும்.''

**குடும்பத்தோடு ஆன்மிக நெறியில் ஈடுபடு:**

''ஒரு குடும்பத்தில் ஒருவர் சம்பாதித்து, மற்றவர் எல்லோரும் உட்கார்ந்து சாப்பிட்டு வந்தால் என்ன நேரும்? வருமானத்தில் துண்டுவிழும். கடன் பெருகிவிட்டதே என்று கஷ்டப்பட வேண்டிவரும். ஒருவர் சம்பாதித்துப் பலர் சாப்பிடுவதை விடக் குடும்பத்தில் உள்ள அனைவரும் சம்பாதித்தால் குடும்பத்தில் கஷ்டம் வராது. அதுபோலக் குடும்பத்தில் ஒருவர் மட்டும் ஆன்மிகத்தில் ஈடுபட்டால் போதாது. அனைவரும் ஈடுபடவேண்டும். குடும்பத்தில் உள்ள பத்து பேரும் ஆன்மிகத்தில் ஈடுபடும்போது, அந்தப் பத்துப்பேரின் உழைப்பிற்கான பலன் கிடைக்கும்.''

**அடிமட்டத்தில் உள்ள பக்தர்கள்:**

''அடிமட்டத்தில் உள்ள உணவுப்பொருள் ருசியாக இருக்கும். அதுபோல அடிமட்டத்தில் இருக்கும் பக்தர்களுக்குத்தான் பக்தி அதிகம்.''

**மெய்சிலிர்ப்பு:**

''தெய்வத்தை நினைக்கும் போது மெய்சிலிர்ப்பு ஏற்படுகிறது. உடலில் அறியாமல் நிகழ்வது தான் மெய்சிலிர்ப்பு.''

**சிந்தனை செய்து பார்!**

''குழந்தை எதற்காகப் பிறக்கிறது? எதற்காக வளர்கிறது? எதற்காக வாழ்கிறது? அறிவு எதற்காக?

ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. ஏதோ ஒரு மாயை இருக்கிறது. இதற்கெல்லாம் என்ன முடிவு? என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். கடலலைகள் ஒன்றோடோன்று மோதிக் கொள்வது போல - அவை ஒன்றோடொன்று சந்திப்பது போல உங்கள் உள்ளத்திலும் சிந்தனை அலைகள் மோதிக் கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டும். உங்கள்



உள்ளத்திலும் கருத்து அலைகள் மோத வேண்டும். இவ்வாறு சிந்தித்துச் சிந்தித்துத் தெளிவிற்கு வரவேண்டும்.''

**நமக்கென்ன என்று இருக்கக் கூடாது:**

''வீட்டிற்கு வீடு வாசற்படி! அதனால் நமக்கென்ன? உனக்கென்ன? என்று அலட்சியமாக இருக்கக்கூடாது. மற்றவர்களின் துன்பங்களை நீக்க உதவி செய்கிற மனப்பான்மை வேண்டும்.''

**பிறவித் தொடர்பு:**

''சென்ற பிறவிக்கும் இந்தப் பிறவிக்கும் தொடர்பு உண்டு. பக்தியில் கவர்ச்சியும் உண்டு. கவலையும் உண்டு.''

**புறாவும் – பக்தியும்:**

''கையில் பிடித்து வைத்துள்ள ஒரு புறாவைப் பறந்து சென்று விடாமல் கவனமாகப் பிடித்துக் கொண்டிருப்பது போல, அம்மாவின் திருவடியைக் கவனமாகப் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். சற்றுக் கவனம் சிதறினால் புறா உன் கையில் இருந்து ஓடிவிடும். அதுபோல போட்டி, பொறாமை, சலசலப்பு என்று உன் கவனம் மாறும்போது, உன் பக்தியும் பறந்தோடி விடும்!''

**ஊழ்வினையை மாற்றுவேன்...**

''பக்தியுள்ள செவ்வாடைத் தொண்டனின் ஊழ்வினையையும் மாற்றுவேன்.''

**உன் எண்ணம் எப்படியெல்லாம் மாறுகிறது பார்!**

''வண்டியில் பயணம் வருகிறபோது ஒரு விபத்திலிருந்து தப்பி விட்டால் அம்மாவின் சக்தியினால் பிழைத்தேன் என்கிறாய்; சற்று நேரம் கழித்து டிரைவர் சாமர்த்தியமாக ஓட்டினான் என்கிறாய்; இன்னும் சற்றுநேரம் போன பின் ஏதோ போன பிறவியில் செய்த புண்ணியப் பலன் என்கிறாய். ஒரே நேரத்தில் உன் பேச்சு எப்படி எப்படியெல்லாம் மாறுகிறது? ஆன்மிகத்தில் உன் எண்ணம் சுத்தமாக இருக்க வேண்டும்.''

**எல்லாம் சக்தியே:**

''நாத்திகம் அழிந்து ஆன்மிகம் பரவவேண்டும். பொதுமக்களிடம் இறையுணர்வு, பக்தி நெறி சிறக்க வேண்டும். ஏழையின் வயிறு குளிர அவர்கள் வாழ்வு விரிவடையவேண்டும். அவர்களுக்கு உணவு, உடை வழங்க வேண்டும். ஏழை பணம்

ஏழைக்கே செலவழிய வேண்டும். ஆலயம் வருவோர் தீயவை விட்டு நல்லவை கொள்ள வேண்டும்.

மன ஒருமைப்பாடு, தியான நெறி விரிவு பெற வேண்டும். மக்கள் எவ்வுயிரையும் தன் உயிர் போல எண்ண வேண்டும். "நான்" என்னும் தம் முனைப்பு மாறி "எல்லாம் சக்தி" என்ற எண்ணம் உலகில் நிலைபெற வேண்டும். கடவுள் இல்லை என்று வந்தவர்கள் "எல்லாம் சக்தியே" என்று அருள்வெள்ளம் பருகல் வேண்டும்."

**இன்பம் துன்பம்:**

"உங்களை நான் புடம்போட்ட தங்கமாக உருவாக்கவே உங்களுக்குத் தாள முடியாத வேதனைகளையும் பல சோதனைகளையும் அளிக்கிறேன். துன்பத்தின் மூலம்தான் சிறந்த அனுபவம் கிட்டும். அதை அனுபவித்தே பெற வேண்டும். இவ்வுலகத் துன்பங்களையும் ஊழ்வினைகளையும் நீங்கள் இப்போதே என் முன்னாலேயே அனுபவித்துக் கழித்து விட வேண்டும்."

**பேரும் புகழும்:**

"புகழுக்கும் உயர்வுக்கும் அடிமைப்படாதே; வெற்றியோ தோல்வியோ கவலைப்படாதே. என்னை நம்பி எதையும் செய். பணத்திற்கும் பாசத்திற்கும் கட்டுப்படாதே! அன்புக்குக் கட்டுப்படு!"

**கொடியவனையும் அணைக்கிறேன்:**

"கொடியவனையும் திருடனையும் என் மகனாகவே கருதுகிறேன். அத்தகையோரால் சமுதாயம் கெடாமல் இருப்பதற்காகச் சிலரை என்னிடம் வந்து போகுமாறு பணித்துள்ளேன். அந்தச் சிறிது நேரமாவது சமுதாயம் நிம்மதியாக இருக்காதா என்ற எண்ணம் தான்!"

**பக்தி குறைந்தால் அழிவு உண்டாகும்:**

"ஒவ்வொருவரும் தெய்வ பக்தியையும் அருள் நெஞ்சத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்க வேண்டும். விழிப்புடன் இருக்க வேண்டும். பயபக்தியும் தங்களுக்குள் கட்டுப்பாடும் இருக்க வேண்டும். தெய்வபக்தி குறைந்தால் அழிவு உண்டாகும்."

**கடல் அழுக்கு – மன அழுக்கு:**



"கடலில் உள்ள அழுக்கைக் கடல் அலையானது நுரையாக வெளியேற்றுவது போல, மனத்தில் உள்ள அழுக்கை ஆன்மிகம் என்னும் அலையானது வெளியேற்றுகிறது."

**ஆடம்பரம் கூடாது:**

"ஆடம்பரத்தை நீக்கிக் கொள்ள வேண்டும். ஏமாற்றுபவர்களிடம் ஏமாறாமல் இருப்பது முக்கியம்."

**ஏழை பக்தர்களுக்கு...**

"ஆலயத் திருப்பணிகளுக்கு அள்ளிக் கொடுக்க யார் யாரோ காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏழை பக்தன் ஒவ்வொருவனுக்கும் இதில் பங்கு இருக்க வேண்டும். உன்னுடைய உழைப்பும் திருப்பணியில் இருக்க வேண்டும். கிடைக்கிற வாய்ப்பை நழுவ விட்டு விடாதே!"

**பக்தி யாவருக்கும் உண்டு:**

"பக்தி யாவருக்கும் உண்டு. நாய், பறவை இவற்றிற்கும் பக்தி உண்டு. பாசம் உண்டு."

**வசதிக்குறைவைப் பொருட்படுத்தாதே!**

"அரிசியில் கல் இருப்பது போல, பருப்பில் சொத்தைப் பருப்பு இருப்பது போல, இங்கு வருகிற பக்தர்களுக்கு வசதிக்குறைவு இருக்கத்தான் செய்யும். ஆன்மிகத்தில் சகிப்புத் தன்மை தேவை."

**கண்ணீரால் பயன் உண்டு:**

"கண்ணீர் சிந்துவதனால் உள்ளத் தெளிவு ஏற்படுகிறது."

**பக்தியும் – பாதரசமும்:**

"சூரிய வெப்பம் அதிகரிக்கும் போது பாதரச மட்டம் வெப்பத்தால் உயரும்; குறையும். சூரிய வெப்பத்தைப் போன்றும் பாதரசத்தைப் போன்றும் குறையாமல் பக்தியைச் சீராகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்."

**போலிகளுக்கு அருள் இல்லை:**

"மிட்டா மிராசு என்றில்லை. பஞ்சைப் பராரிகளுக்கும் என் அருள் உண்டு; தாயின் கருணை எல்லார்க்கும் உண்டு.

போலிகளுக்குத் தான் அருள் இல்லை.''

**பிறவி போகவேண்டும் என்று கேட்பதில்லை:**

''மகனே! என்னிடம் வருபவன் எல்லாம் ''எனக்குப் பொன் வேண்டும், பொருள் வேண்டும், பதவி உயர்வு வேண்டும், வந்த நோயை நீக்க வேண்டும், திருமணம் கைகூட வேண்டும் என்றெல்லாம் கேட்கிறானே தவிர, பிறவி நோய் போகவேண்டும் என்று கேட்கத் தெரியவில்லை. தாயே நீதான் எனக்கு வேண்டும் என்று எவனும் கேட்பதில்லை.''

**காணும் பொருள் – காட்சிப் பொருள்:**

''காணும் பொருளாய் இரு! காட்சிப் பொருளாய் இராதே!''

**பக்தி – பூகம்பம்:**

''பக்தியால் பூகம்பமும் குறையும்''

**உண்மையான பக்தியால் இருமடங்கு நன்மை:**

''காந்தத்தினால் கவரப்பட்ட இரும்பும் காந்த சக்தியை அடைகிறது. அந்த இரும்பும் மற்ற இரும்பை ஈர்க்கிறது. அதுபோல என்னிடமிருந்து அருளைப் பெறுவதால் உங்களால் பலர்க்கு நன்மை கிடைக்கிறது. உண்மையான பக்தியால் இருமடங்கு நன்மை உங்களுக்குக் கிடைக்கிறது.''

**மனிதர்களால் உண்டாக்கப் பட்டவை:**

''மதங்கள் மனிதனால் உண்டாக்கப்பட்டவை. தெய்வத்தால் அல்ல! தெய்வங்கள் சித்தர்களே! கட்சி, மதம், சிலை வழிபாடு இவை அனைத்தும் மனிதனால் உண்டாக்கப்பட்டவை!''

**பழம்பிறவி நினைவுடன்:**

''எத்தனை பிறவிகள் எடுத்தாலும் பழம்பிறப்பின் நினைவுடன், இனி என்ன செய்யவேண்டும் என்ற நினைவுடன் ஒருசிலரைப் பிறக்குமாறு செய்யப்போகிறேன். அவர்களை வைத்துக் கொண்டு உலகில் பெரும் மாற்றங்களைச் செய்யப் போகிறேன்.''

**ஆன்மிகம் – பக்தி:**

''ஆன்மிகம் என்ற செடிக்குப் பக்தி என்ற நீர் ஊற்றி வளர்க்க வேண்டும். செழிப்படையச் செய்ய வேண்டும்.''



**அழுக்கை நீக்கும் பக்தி:**

''உங்கள் மனத்தில் உள்ள அழுக்கை அகற்றிக் கொள்ள வேண்டும். அறியாமையை அகற்றிக் கொள்ள வேண்டும். மெழுகுவத்தி எரியும் போது அதனுடன் உள்ள அழுக்கும் சேர்ந்து எரியும். அதுபோல உங்களிடம் பக்தி கொழுந்துவிட்டு எரிந்தால் உங்களிடம் உள்ள அழுக்குகளும் அறியாமைகளும் சேர்ந்து எரிந்து மறைந்து விடும்.''

**அகங்காரமும் – அருளும்:**

''உன்னுடைய ஆர்வம் தூய்மையானதாக இருக்கும்போது நீ அகங்காரத்தை எவ்வளவுக்கெவ்வளவு நீக்குகின்றாயோ அவ்வளவுக்கவ்வளவு என் அருள் உன்னிடம் நிறையும். அகங்காரம் குறையக்குறைய அருள் நிரம்பும். அருள் நிரம்ப நிரம்ப அகங்காரம் குறையும். அருளை நிரப்புவது என் கடமை! அகங்காரத்தைச் சிறிது சிறிதாகப் போக்கிக் கொள்வது உங்கள் கடமை!''

**ஆன்மிக சக்தி:**

''தீயை நீரால் அணைப்பது போல தீய சக்திகளை ஆன்மிகத் தண்ணீரால் அணைக்கலாம்.''

**அடிப்பதும் – அணைப்பதும்:**

''அடித்தால் அணைக்கிறேன் என்று பொருள். அணைத்தால் அடிக்கிறேன் என்று பொருள். இரண்டும் இல்லையேல் அழிக்கிறேன் என்று பொருள்!''

**ஏழை – பணக்காரன்:**

''ஏழை - பணக்காரன் என்ற பாகுபாடு தெய்வத்திடம் இல்லை. ஏழையிடம் பண்பு, பாசம், பக்தி உண்டு. அவன் பணக்காரனை விட பக்தியில் உயர்ந்தவன். ஆகையால் ஏழை, தெய்வத்தினும் உயர்ந்தவன் மகனே!''

**பக்திப் பிரச்சாரம்:**

''கூட்டம் சேர்ப்பதும், சொற்பொழிவு செய்வதும் மட்டும் பக்திப் பிரச்சாரம் அல்ல மகனே! ராம! ராம! என்று சேர்ந்து சொல்லிக் கொண்டு இருப்பது கூடப் பக்தி தான்! அதுவும் பக்திப் பிரச்சாரம் தான்!''

### ஒவ்வொருவனும் பக்தனாக மாறவேண்டும்:

“உண்மையாகத் தொண்டு செய்ய வேண்டும். குடும்பமும், நாடும் செழிக்க வேண்டுமானால் ஒவ்வொருவனும் பக்தனாக மாறவேண்டும். ஒவ்வொருவனும் உண்மையான பக்தனாக மாறினால் சாதி வேற்றுமைகள் அகலும். உன் உள்ளம் குழந்தை உள்ளம் ஆகிவிட்டால் என் அருள் நிரம்பும்.”

### தூற்றுபவனை ஏன் தண்டிப்பதில்லை:

“மகன் தாயை அடித்தால் தாங்கிக் கொள்வாள். இந்தத்தாய் மகனைத் திருப்பி அடிக்க ஆரம்பித்தால் மரத்தின் ஆணிவேரே அழிந்து போகுமடா மகனே!”

### சரண் அடைந்துவிடு:

“ஆன்மிகத்துறையில் உள்ள உங்கள் பலருக்கும் சஞ்சலங்கள் வருகின்றன. வாழ்வா? தாழ்வா? பணமா? பாசமா? சாவா? சாக்கடையா? என்றெல்லாம் மனம் அலைமோதுகிறது. கடலாலும், காற்றாலும், புயலாலும், அலையாலும் சூரியன் என்னும் எரிகோளத்தாலும் அழிவுகள் ஏற்படுகின்றனவே. எப்படித்தான் வாழ்வது? என்று நினைக்கிறீர்கள். என்னை முழுமையாக நம்பிச் சரணாகதி அடைந்தவர்களுக்கு மனத்தடுமாற்றங்கள் வருவதில்லை.”

### சிலந்தியின் வாழ்க்கை:

“ஒரு தாய் தன் குழந்தையை வயிற்றில் வைத்துப் பாதுகாத்துப் பால் ஊட்டிச் சீராட்டி ஆசா-பாசத்துடன் வளர்க்கிறாள். சிலந்தியோ தன் இனத்தைப் பெருக்கிவிட்டு முக்தியடைந்து விடுகிறது. வஞ்சித்து வாழ வேண்டும் என்ற எண்ணமில்லாமல் தன் கூட்டிற்கு அருகில் வரும் பூச்சி, ஈ, கொசு போன்ற உயிர்களையே உணவாக உட்கொள்கிறது. அதுபோல நீங்களும் பந்த பாசங்களிலிருந்து விடுபட்டு ஆன்மிக உணர்வு உள்ளவர்களாக விளங்க வேண்டும்.”

### பாவங்களை வெளியேற்ற...

“கண் அழுதால் தான் கண்ணுக்குப் பலன்; செய்த பாவங்களை எண்ணி அழும்போது தான் உள்ளம் தூய்மை அடைகிறது. உள்ளம் தூய்மையாக இருந்தால் தான் உள்ளத்திற்குப் பலன்.”



### இஷ்ட தெய்வம் ஒன்று:

“மனத்தை ஒரு தெய்வத்திடம் வை.”

### வீட்டில் கூட்டு வழிபாடு:

“ஒலி அலைகளினால் அதிர்ச்சி ஏற்படுகிறது. அந்த அதிர்ச்சியினால் மேலே உள்ள பொருள் கீழேயும் விழுந்து விடுவது உண்டு. அதுபோல ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து “ஓம் சக்தி” என்று ஒலிக்கும் போது உங்கள் பாவமூட்டையானது அழிந்துவிடும்.”

### உன் மகன் திருந்த:

“உன் மகன் திருந்தவில்லையே என்று நினைக்காதே! உன் மகனைத் திருத்துவதற்கு முன்பாக உன்னை முதலில் திருத்திக் கொள்.”

### மனக்கட்டுப்பாடு தேவை:

“ஒரு பொருளைப் பார்க்கும் போதும், ஒரு பொருளைக் கேட்கும் போதும், ஒரு பொருளைப் பற்றிப் பேசும்போதும் இயல்பாகவே உன் மனம் வேறு ஒன்றின் மேல் பாயும் தன்மை கொண்டது. அதற்காகவே மனக்கட்டுப்பாடு அவசியம்.”

### உள் அழுக்கு போக வேண்டும்:

“பூசையோ அபிடேகமோ அர்ச்சனையோ - கோயிலைச் சுற்றுவதோ மட்டும் செய்தால் போதாது. உன் உள் அழுக்குகளைக் களைய வேண்டும். நீ அழுதால் தான் பால் குடிக்கலாம்.”

### அங்கங்கே அலைந்து ஏமாறாதே!

“மந்திரவாதி, சோதிடம், நாடி, குறிமேடை, அந்தச் சாமியார், இந்தச் சாமியார் என்றெல்லாம் அலையாதே! அன்னையிடம் வந்த பிறகு அன்னையே துணை என்று கருதிச் செயல்படு!”

### பாமரமக்களையும் ஈடுபடுத்து:

“வருகிற பக்தர்கள் பாமர மக்களாக இருந்தாலும் அவர்களையும் தியானம் கடைப்பிடிக்கச் சொல்! அங்கப்பிரதட்சணம் வரச்சொல்! அவ்வாறு செய்தால் அவர்களுடைய பாவங்களையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்!”

### மந்திர நசிவும் – ஆன்மிக நசிவும்:

“மந்திரத்தை முழுமையாக உச்சரிக்காமல் அரைகுறையாக உச்சரித்ததால் வந்ததுதானடா இந்த ஆன்மிக நசிவு! அவர்களை வெறுக்காதே! அவர்களையும் அரவணைத்து முழு உச்சரிப்பையும் கற்றுக்கொடு!”

**பக்தர்கட்கு:**

“மன்றத்தில் சேர்ந்து கொண்டு மானம் போகாமல் பார்த்துக் கொள்!

வழிபாட்டில் கலந்து கொண்டு வழுக்கி விழாமல் பார்த்துக் கொள்!

பாசத்தின் காரணமாகப் பக்தியை இழக்காமல் பார்த்துக் கொள்!”

**துன்பம் வந்தால் துவளாதே:**

“தங்கத்தை உருக்கி அடித்தால் தான் அது அழகிய தங்க நகையாக மாறும். அதுபோல நீங்கள் வாழ்க்கையில் உயரவேண்டுமானால் துன்பங்கள் அனுபவித்துத்தான் ஆகவேண்டும். அந்தத் துன்ப காலங்களில் உன் மனத்திற்குத் தான் கஷ்டமே ஒழிய அந்தக் கஷ்டம் ஆன்மாவிற்கு அல்ல.”

**எல்லாவற்றையும் சொல்லக்கூடாது:**

“நீதான் ஆதிபராசக்தி ஆயிற்றே...? எங்களுக்கு வரப்போவதையெல்லாம் ஏன் முன்கூட்டியே சொல்லிவிடக் கூடாதா? என்றெல்லாம் நினைக்கிறீர்கள். எல்லாவற்றையும் பச்சையாகப் பலரிடம் சொல்லக்கூடாது. நீங்கள் செய்த, செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் உங்கள் வீட்டுக் கல், சுவர், வீடு, கதவு, இவையெல்லாம் எடுத்துச் சொல்லிப் பேச ஆரம்பித்தால் என்ன ஆகும் என்பதை யோசித்துப் பார்!”

**சக்கரமும் – வேள்விகளும்:**

“சக்கரமும், வேள்விகளும் கண்ணும் கருத்துமாகச் செய்யவேண்டும். ஒரு குழந்தை வளரும்போது பொம்மை, தள்ளுவண்டி முதலிய விளையாட்டுப் பொருள்கள் தேவைப்படுகின்றன. அதுபோல மனிதனுக்கு வாழ்க்கை என்ற விளையாட்டிற்குச் சக்கரம், வேள்வி, ஆன்மிகம் என்ற பொம்மைகள் தேவைப்படுகின்றன. எவ்வளவு படித்தாலும்



உருவத்தை வைத்து உண்மையைக் கண்டு பிடிக்க முடியாது.”

**அம்மாவிடம் வரும்போது...**

“நீ இங்கே வரும்போது சிக்கல் மிகுந்த நூலுடன் வருகிறாய். அந்த நூலை வைத்து முழுமையாகத் துணியைத் தைத்துக் கொடுக்கச் சொல்கிறாய். அந்தச் சிக்கலைப் பிரித்து நூலின் நுனி எது? என்ற கண்டுபிடிக்க வேண்டும். பிறகு தான் துணியைத் தைக்க முடியும். அதுவரை நீ பொறுமையாக இருக்க வேண்டும்.”

**யாருக்கு ஆபத்து இல்லை?**

“உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாமல் இருப்பவன் எவனோ...

தன்னலம் கருதாமல் பொன், பொருள் என்று பாராமல் - சொந்தபந்தம் என்ற பற்றில்லாமல் - வெளி வேஷம் போடாமல் - உண்மையான பக்தி இருப்பவன் எவனோ அவனுக்கு எதிர்காலத்தில் எந்த ஆபத்தும் இல்லை.

நீர், நெருப்பு! இவற்றில் எச்சரிக்கையாக இருந்துகொள்ள வேண்டும்.”

**சீரான பக்தி:**

“மரம் நன்றாக வளர்ந்தால் கிளைகள் தழைக்கும். அதிக எண்ணிக்கையில் பழம் கொடுக்கும். அதுபோல ஆன்மிகத்தில் பக்தி சீராக இருக்கவேண்டும். அப்போது தான் ஆன்மிகத்துறையில் முன்னேற முடியும்.”

**கருமச் சட்டப்படி:**

“பக்தி இருந்தால் தான் காப்பாற்றுவேன். இல்லாவிடில் கருமச்சட்டப்படி அதனதன் போக்கில் விட்டுவிடுவேன். நான் இரும்பைக் கொடுத்தால் நீங்கள் துப்பாக்கி செய்யக் கற்றுக்கொள்கிறீர்கள்.”

**பக்தி குறைந்துவிட்டது:**

“அம்மாவிடம் தஞ்சம் அடைந்துவிட்ட பிறகு அதுவேண்டும்; இதுவேண்டும் என்றெல்லாம் கேட்கக் கூடாது.

செவ்வாடைத் தொண்டர்களுக்கு ஆரம்பத்தில் இருந்த

பக்தி இப்போது கிடையாது.

மீண்டும் பழைய நாள் போல விடியற்காலை எழுந்து 1008 படித்து வழிபாடு செய்! மழைவேண்டல் படி!''

**இப்படியும் பக்தர்கள்:**

''பழுமரம் நாடிவரும் பறவைகள், பழத்தைச் சாப்பிட்டுவிட்டு மரத்திலேயே எச்சமிட்டு விட்டுச் செல்கின்றன. அதுபோலவே, அம்மாவிடம் வந்துவிட்டு, ஆன்மிகத்தில் பயனையும் அடைந்துவிட்டு அம்மா நமக்கு என்ன செய்தது? என்று குறையும் சொல்லிவிட்டுப் போகிற பக்தர்களும் இருக்கிறார்கள்.''

**எங்கும் அலையாதே!**

''அம்மாவிடம் வந்து என்ன கிடைத்தது? என்று அலுத்துக் கொள்ளக் கூடாது. உன்னைக் கொண்டு ஆன்மிகம் வளர்கிறது. கூடவே நீயும் படிப்படியாக ஆன்மிகத்தில் வளர்ச்சியடைந்து வருகிறாய் என்பதை மறந்துவிடக் கூடாது.''

இன்று நானே அவதாரமாக வந்திருக்கிறேன். என்னைவிட்டு அகன்று காசி, நவக்கிரகம், அஷ்டலட்சுமி என்றெல்லாம் அலைவதால் மட்டும் எதையும் நீ சாதிக்க முடியாது.''

**உள்ளத்தூய்மை இருந்தாலே போதும்:**

''அம்மாவைக் கும்பிட்டுவிட்டு, அபிடேகம் செய்துவிட்டு, மந்திரங்கள் படித்துவிட்டுச் சென்றால் மட்டும் போதாது. உள்ளத்தூய்மை வேண்டும். அந்த உள்ளத்தூய்மை இருந்தால் அதுவே எனக்குப் போதும்.''

**கிளையும் – சுமையும்:**

''ஒரு மரக்கிளையில் கிளைக்கு ஏற்றவாறு இலைகளும், கனிகளும் இருந்தால் தான் கிளைக்கு அழகு. அதிகமான பழங்கள் இருந்தால் சுமை தாங்காமல் கிளை முறிந்துவிடும். அதுபோல, உடலுக்கும் ஏற்ற உள்ளமும், உள்ளத்திற்கு ஏற்ற ஆன்மாவும் இருந்தால் தான் பக்தி ஏற்படும்.''

**மக்கள் தொகை:**

''அறிவினாலும் கேடு வரும். அறியாமையினாலும்



கேடுவரும்.

மக்கள் தொகை அதிகமாகப் பெருகினால் உலகத்தில் நீரின் அளவு குறையும். காற்றில் சுகாதாரமும் குறையும்.

நாட்டில் உள்ள பிரச்சனைகளை எந்தப் பதவியாலும் தீர்த்துவிட முடியாது. மக்களிடையே மன ஒற்றுமை, மனக்கட்டுப்பாடு தேவை. இவை இரண்டும் தெய்வபக்தியால்தான் ஏற்பட முடியும்.''

**தெய்வ பக்தி:**

''தெய்வ பக்தி அதிகம் வளர்ந்தால்தான் உலகில் வளர்ச்சி ஏற்படும். இல்லையென்றால் பொதுமக்கள் சட்டத்தைக் கையிலெடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.''

**பகட்டு கூடாது:**

''பகட்டை விரும்பினால் பாடையாக மாறவேண்டி வரும்.''

**தீய எண்ணங்களை முளையிலேயே கிள்ளிவிடு:**

''வேலிகாத்தான் போன்ற முள்செடிகளைச் சிறு செடியாக இருக்கும் போதே பறித்து எறிந்துவிடுவது நல்லது. அவை மரமாக வளர்ந்த பிறகு வெட்டினால் கை, கால், உடம்பு எல்லாம் முள் தைக்கும். அதுபோலத் தீய எண்ணங்களையும், சோம்பேறித் தனத்தையும் ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். அவற்றை வளர விட்டால் துன்பத்தைத் தான் அனுபவிக்க வேண்டும்.''

**உங்கள் பக்தியின் நிலை:**

''நல்ல பாத்தியாகத் தேர்ந்தெடுத்து நாற்று விட்டுப் பறித்து வேறிடத்தில் நடும்போதுதான் பயிர் நன்றாகச் செழித்து வளரும். களைகள் தோன்றாமலும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் உங்களுக்கிருந்த பக்தி, இன்றுள்ள பக்தி, நாளைய பக்தி என்ற உங்களின் பக்தி நிலைமை என்ன என்பதை நான் மட்டுமே அறிவேன். உங்கள் உள்ளத்தில் வளர்கிற களைகளையும் நான் அறிவேன்.

உள்ளத்தில் அழுக்கு வைத்துக் கொண்டு எதையும் செய்யாதே! அழுக்கை நீக்கிக் கொண்டு தொண்டு செய்! மேலும் வளர்வாய்!

பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்ற நிலை உங்களுக்கும் வந்துகொண்டிருக்கிறது. உங்கள் பக்தியும் படிப்படியாகக் குறைந்துகொண்டு வருகிறது.

வீடு, சொத்து, சுகம் எல்லாம் இறுதிவரை உன்னோடு வராது நீ செய்யும் தருமமும், ஆன்மிகமும், தொண்டும் தான் உனக்கு நிலைத்து நிற்கும். அம்மா தான் உனக்கு இறுதிவரை துணை என்பதை மறவாதே!''

**பக்தியும் – தருமமும்:**

''உங்களிடம் பக்தியும் தருமமும் தேய்மானமாகி விட்டால் குடும்பமும் தேய்மானமாகிக் கொண்டே வரும்.''

இன்பம், துன்பம் இரண்டையும் சேர்த்தே அனுபவிக்க வேண்டும். அதற்கு ஆன்மிக சக்தி தேவை. அதற்கு அம்மாவின் உதவி உங்களுக்குத் தேவை.

என்னையே நம்பி வந்துவிட்ட பிறகு, என்னிடம் உள்ள சக்தியை நீங்கள் தான் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.''

**வீடு காடும்:**

''வீடு என்பது உங்களிடமிருந்து விடுபட்டு விடை கொடுத்து அனுப்புகிற இடம்.

உங்களுக்கு இடம் கொடுப்பது சுடுகாடு ஒன்று தான்.

இத்தகைய நிலையில் இருக்கிற நீங்கள் ''அம்மா என் உடலையும் உள்ளத்தையும் நன்றாக வை!'' என்று வேண்டிக்கொள்ள வேண்டும்.''

**இது தான் வாழ்க்கை!**

''வீடு, வாசல், பணம், பொன், பொருள் என்று சேகரித்து வைத்துக்கொண்டு பந்த பாசங்களோடு வாழ்ந்து வருகிறீர்கள்.

உயிர் இருக்கிற வரை உடல் நீங்கள் சொல்வதையெல்லாம் கேட்கும்.

காற்றடிக்கும் திசையில் மரம், செடி, கொடியெல்லாம் ஆடுவது போல உள்ளே ஆன்மா இருக்கிற வரையில் உடல் ஆடுகிறது. உரிய நேரம் வரும்போது உடலைப் பிரிந்து உயிர் போய்விடுகிறது.''

இது தான் வாழ்க்கை. இப்படிப்பட்ட வாழ்க்கையின்



நோக்கம் என்ன என்பதைப் புரிந்து கொண்டு வாழவேண்டும்.''

**சோதனையும் – வேதனையும்:**

''சோதனைகளையும் வேதனைகளையும் சாதனைகளாக மாற்ற வேண்டும்.''

**பக்தியும் கணக்குப் பார்க்கும் புத்தியும்:**

''ஒரு தொழிலைச் செய்வதால் பணம் சேர்கிறது. பணம் சேரச்சேர மனத்தில் ஆசைகளும் அதிகமாகச் சேர்கின்றன.

பக்தி நெறியில் ஈடுபட்டவன் எதையும் கணக்குப் பார்த்துச் செய்யக்கூடாது.

ஒரு ரூபாய் செலவிட்டால் ஐந்து ரூபாய் கிடைக்கும் என்று கணக்குப் பார்த்துச் செய்வது பக்தி அல்ல.

தருமம் செய்யப் பல வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறேன். அவற்றை ஒரே நிலையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.''

**எப்படி வாழவேண்டும்?**

''இப்படி இருந்தால்தான் இந்தச் சமுதாயத்தில் வாழலாம் என்று வாழக்கூடாது. இப்படித்தான் வாழவேண்டும். இப்படித்தான் வாழ்வேன் என்று எடுத்துக்காட்டாக வாழவேண்டும்.

நீ உனக்காக வாழ்கிறாய். மற்றவர்களுக்காக உன் வாழ்க்கை திரிந்துவிடக் கூடாது. பத்துபேர் மதிக்க வாழவேண்டும் என்பதற்காக எப்படியும் வாழக்கூடாது.''

**பணமும்: பாவமும்:**

''உனக்குப் பணம் அதிகம் இருந்தால் பாவமும் அதிகம் இருக்கும். குணம் அதிகம் இருந்தால் உன் குலம் விளங்கும். உனக்கு அமைதியும் கிடைக்கும்.''

**அநாகரிகம்:**

''நாகரிகம் என்ற பெயரால் இன்று உலகம் அநாகரிகமாக மாறி அழிவுப் பாதையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றது.''

**கூண்டோடு கைலாசம்:**

"கூண்டோடு கைலாசம் என்றால் அனைவரும் சேர்ந்து மடிந்து போவது என்று பொருள் அல்ல!

உன் உடல் கூட்டோடு உயிரும் சேர்ந்து இறப்பு இல்லாமல் போவது தான் கூண்டோடு கைலாசம்!"

**ஆதிபராசக்தி என்ற ஆணிவேர்!**

"ஒரு மரத்திற்கு ஆதாரமாக இருப்பது அதன் ஆணிவேர் ஆகும். அந்த ஆணிவேரைச் செல்லரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். செல்லரிக்கத் தொடங்கினால் அந்தச் செல் சுற்றியுள்ள பூமியிலும் பரவ ஆரம்பித்துவிடும்.

அதுபோல உங்கள் மனம் ஆதிபராசக்தி என்ற ஆணிவேரைப் பற்றிக் கொள்கிற போது, அழுக்கு, சோதனை, பந்தபாசம் என்ற செல்கள் உங்கள் மனத்தை அரிக்கத் தொடங்கும். அவ்வாறு அரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்."

**நீங்களும் – நானும்:**

"கயிற்றால் கட்டப்பட்ட கன்று, தொலைவில் உள்ள தாய்ப்பசுவைக் கண்டவுடனே அம்மா... என்று அழைத்துத் தன் ஆவலைப் புலப்படுத்துகிறது. அதுபோல பந்தபாசம் என்ற கயிற்றால் கட்டப்பட்டுள்ள நிலையில் நீங்கள் இருந்தாலும் அம்மா... என்று ஆவலோடு என்னை அழைக்கிறபோது அந்தத் தாய்ப்பசு போல ஓடிவந்து உங்களை அரவணைப்பேன்.

தாயை அடைந்த கன்று பால் உண்டு மகிழ்கிறது. பால் கொடுத்த இன்பத்தில் பசுவும் மகிழ்கிறது.

அதுபோல ஆன்மிகத்தில் நீங்கள் ஈடுபடும்பொழுது உங்களுக்கும் மகிழ்ச்சி! எனக்கும் மகிழ்ச்சி!"

**பக்தி எப்படி வரும்?**

"ஒருசிலர் மட்டும் தான் என்னிடம் பாசமும் பக்தியும் செலுத்துகிறார்கள். பலருக்கு அவை இல்லை. ஏன்?

பயிரைக் காய வைத்துத் தண்ணீர் பாய்ச்சினால் தான் அதிகத் தண்ணீரைக் கிரகிக்கும். உங்கள் ஆன்மாவிலும் பசி இருக்கவேண்டும். என் அன்பிற்கு ஏங்குகிற பசி இருக்கவேண்டும். அத்தகைய பசி இருப்பவனுக்கே என்னிடம் பக்தி இருக்குமாறு செய்வேன். பாசம் வளருமாறு செய்வேன்.



பக்தி கூட நான் கொடுத்துத் தான் வரவேண்டும்; அதற்கான பசி உன்னிடம் வரவேண்டும்."

**சோதிடம் நாடி அலையாதே:**

"அம்மாவிடம் வந்தோம்; நம்முடைய கஷ்டம் தீரவில்லையே என்று நினைக்கக்கூடாது. எந்தச் சோதனை, கஷ்டம் வந்தாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு ஜாதகம், சோதிடம், நாடி என்று போனால் அவன் இன்ன தோஷம் இருக்கிறது; இன்ன பரிகாரம் செய்ய வேண்டும் என்று கூறுவான். உனக்குப் பணம் தான் செலவாகும். தலைவலி போக மருந்து சாப்பிட்டால் ஜலதோஷம் பிடித்துக் கொள்ளும்."

**ஒரு சிலர்க்கே பக்குவம்:**

"பேர் வேண்டும்; புகழ்வேண்டும்; பொருள் வேண்டும்; சொத்து சுகம் வேண்டும் என்று வந்த உங்களில் ஒருசிலர்க்கே அருள் மட்டும் போதும் என்று நினைக்கிற பக்குவம் கடைசியாக வந்திருக்கிறது."

**பொய்யான ஆன்மிகத்தால் அடி உதைகள் தான் தொடரும்:**

"என்னவோ அம்மா, ஆன்மிகம் ஆன்மிகம் என்று சொல்லியபடியே வருகிறது. கும்பாபிடேகம் செய்து வைக்கிறது. நாமும் ஏதோ அம்மா பாட்டுக்களைப் பாடிவருவோம் என்றெல்லாம் நினைக்காமலும், அலுத்துக் கொள்ளாமலும், உண்மையான பக்தியுடனும், தொண்டு மனப்பான்மையுடனும், ஆன்மிகத்தில் ஈடுபட வேண்டும். அவ்வாறு ஈடுபட்டால் உன் கனவு நனவாக மாறும்.

பொய்யான ஆன்மிகமும், பொய்யான தொண்டும் இருந்தால் உனக்கு விழுகிற அடிகள் விழுந்தபடி தான் இருக்கும்."

**வெற்று பஜனைப் பாடல் வேண்டாம்:**

"வெற்று பஜனைப் பாடல்களெல்லாம் வேண்டாம். சமுதாயத்திற்குத் தொண்டு செய்ய வேண்டும். ஒரே தாய்! ஒரே குலம்! என்ற கோட்பாட்டை அன்றே வைத்தேன். அது இந்த நாட்டிற்கு எவ்வளவு முக்கியம் என்பதை இப்பொழுதாவது உணரவேண்டும்."

**என்னிடம் வரும்போது...**

"என்னிடம் வரும்போது பந்தபாசம் இல்லாமல், தருமசிந்தனையுடன் வரவேண்டும். அவ்வாறு வந்தால் நான் உனக்கு மோட்ச நிலையைக் கொடுப்பேன். பந்தபாசம் என்பன உன் ஆன்மாவைச் சுற்றியுள்ள பிசுபிசுப்புகள். அவை இல்லாமல் தெளிந்த மோர் போல நீங்கள் என்னிடம் வருதல் வேண்டும்.

இயற்கை, ஆசாபாச உணர்வுகள் ஆகியவற்றைக் தடுக்க முடியாது. அதற்காக நீ சுகர்நாடி, சோதிடம், குறி என்று அலைந்தால் உனக்குப் பணம் தான் நாசமாகும்."

**ஒருமரத்துக் காய்கள்:**

"ஒரே மரத்தில் தான் காய்கள் காய்க்கின்றன. என்றாலும் ஒரு கிளையில் காய்க்கிற காய்களுக்கும், இன்னொரு கிளையில் காய்க்கிற காய்களுக்கும் ருசியில் வேற்றுமை உண்டு.

அதுபோல பக்தர்களில் ஒருசிலர்க்கு அருளையும் கொடுப்பேன்; ஒருசிலர்க்குக் கன்னத்தில் அறையும் கொடுப்பேன்!"

**தெய்வ வரலாறும்: உன் வரலாறும்:**

"தெய்வங்களின் வரலாற்றைத் தெரிந்து கொள்வதை விட, உன்னைப் பற்றியும், உன் வரலாறு பற்றியும் தெரிந்து கொண்டு மற்றவர்க்கு உதவி செய்ய முற்படு!"

**ஆலயத்திற்கு எப்படி வரவேண்டும்?**

"இன்னதற்கு இன்ன பலன் என்று எதையும் கேட்டுக்கொண்டு ஆலயத்திற்கு வரக்கூடாது. அம்மா! அம்மா! என்று வந்தால் உனக்குத் தேவையான எல்லாவற்றையும் தருவேன்."

**சமநோக்கு வேண்டும்:**

"இன்பம் என்று வருகிற போது உங்கள் மனத்தைக் கட்டவிழ்த்து விடுகிறீர்கள். துன்பம் என்ற ஒன்று வந்தால் மட்டும் தாயிடம் ஓடி வருகிறீர்கள். தாயே என் துன்பத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறீர்கள்.

இன்பம் வந்தாலும் துன்பம் வந்தாலும் மனத்தைச்



சரிசமமாக வைத்துக் கொள்ளப் பழகி வரவேண்டும்."

**பக்குவம் அடைய வேண்டும்:**

"குழந்தைப் பருவத்தில் இன்பம் எது? துன்பம் எது? என்று பிரித்துணரும் நிலை தெரிவது இல்லை. வளர்ந்த பிறகு தான் ஓரளவு ஒவ்வொன்றும் தெரிகிறது. தன்னைத் தானே உணர்ந்து கொள்கிற நிலையும் ஏற்படுகிறது.

நெல் விதையாக மாறுகிற பக்குவம் வந்தால் தான் விளைச்சல் ஏற்படும். உங்களுக்கும் அத்தகைய பக்குவம் வந்தாகவேண்டும்.

இந்த உடலை விட்டு ஆன்மா நீங்குவதற்குள் அந்தப் பக்குவம் வந்தாக வேண்டும்."

**முதலில் உன்னை அளந்து பார்த்துக் கொள்!**

"ஆன்மிகம் என்பது ஒரு கரு போன்றது. அந்த ஆன்மிகத்தை அமைதியாகவும், மௌனமாகவும் கடைப்பிடிக்க வேண்டும்.

இவன் அப்படி! அவன் இப்படி! என்று மற்றவனைப் புறஞ்சொல்லித்திரியக் கூடாது!

நீ எப்படி...? என்று உன்னை நீயே அளந்து பார்த்துக் கொண்டு முன்னேறி வரவேண்டும்."

**சகிப்புத் தன்மை வேண்டும்:**

"உங்களிடம் சகிப்புத் தன்மை வளரவேண்டும். மரத்தை வெட்டிவிடுவது எளிது; வளர்ப்பது கஷ்டம்.

ஆரம்பத்தில் எப்படி இங்கே பக்தி வளர்த்தேனோ அதுபோலத்தான் இப்போதும் வளர்த்து வருகிறேன்.

எதிர்ப்புச் சக்தி தான் எனக்கு உரம்!"

**துன்பம் ஏன்?**

"அம்மாவை வழிபடுகிற நமக்குத் துன்பங்கள் வரக்கூடாது என்று நினைக்கக் கூடாது.

உடலுக்கு உணவு அவசியம். அதுபோல உள்ளத்திற்கு ஆன்மிகம் அவசியம்.

இதனை நீ உணர்வதோடு உன் சுற்றுப்புறமும் உணர்ந்து

வாழவேண்டும். இல்லையேல் சுற்றுப்புறத்தால் உனக்குப் பாதிப்புகள் ஏற்படும். அதனைத் தவிர்க்கவே, மற்றவர்களையும் ஆன்மிகத்தில் உங்களைக் கொண்டு ஈடுபட வைக்கிறேன். மன்றம் கூட்டு வழிபாடு, சமுதாயத் தொண்டு, தியானம் என வழிகாட்டுகிறேன். மற்றவர்களையும் இருமுடி போட்டு அழைத்துவரச் சொல்கிறேன்.''

**பக்தர்கள்:**

''பக்தர்கள் பன்றிக்குட்டிகளாக இருக்கக் கூடாது. கன்றுக் குட்டிகளாக இருக்க வேண்டும்''

**பக்தியை எடைபோடக் கூடாது:**

''பாசம், நேசம், அன்பு, தொண்டு என்னும் இவற்றை எடை போட்டுப் பார்க்க வேண்டும். பக்தியை எடைபோட்டுப் பார்க்கக் கூடாது. பக்தியை எடைபோட்டால் கத்தியை எடைபோட நேரிடும்.''

**என்னை அடைய...**

''நல்ல உள்ளமும், நல்ல செயலும் இருந்தால் சீக்கிரம் என்னை அடையலாம்.''

**சக்தியும்–பக்தியும்:**

''இங்குச் சக்தியும் பக்தியும் இருந்தால் எதையும் சாதிக்கலாம்.''

**பக்தியும் – பக்குவமும்:**

''நீ கேட்பதைக் கொடுக்க மட்டும் அம்மா உனக்குத் தேவைப்படுகிறது. நீ கேட்பதை அம்மா உனக்குக் கொடுக்க வேண்டுமென்றால் அம்மாவிடம் உனக்குப் பக்தியும் தேவை, பக்குவமும் தேவை. இந்த இரண்டும் இருந்தால் தான் நீ கேட்பது கிடைக்கும்.''

**அந்த நாடி – இந்த நாடி:**

''குழந்தை நடக்க ஆரம்பிக்கும் போது கைகொடுத்து நடக்கப் பழக்கினால் தான் அது நடக்க ஆரம்பிக்கும். அதுபோல நான் கொடுத்தால் தான் நீங்கள் வாழ முடியும். அதை விட்டு விட்டு அந்த நாடி, இந்த நாடி என்று எந்த



நாடியை நாடி அலைந்தாலும் இறுதியில் என்னைத்தான் நாடி வரவேண்டும் என்பதைப் புரிந்து கொள்!''

**படிப்பும் – பொருளும்:**

''நீ படித்த படிப்பும் பொருளும் கூட வராது. பண்பும், பராசக்தி பாசமும் தான் உன் கூட வரும்.''

**பக்தர்களுக்கும் – தொண்டர்களுக்கும்:**

''உங்களுக்கு அனைத்தையும் கற்றுக் கொடுத்துப் பக்தியையும், பாசத்தையும் ஊட்டியிருக்கின்றேன். இவற்றைக் கொண்டு நீங்கள் ஆன்மிகத்தில் வலிமை வாய்ந்தவர்களாக மாறி இருக்க வேண்டும். ஆனால் என் எளிமையை நினைத்து உங்கள் வலிமையை இழந்து வருகிறீர்கள், அதனால்தான் ஆன்மிகத்தில் இன்னும் நீங்கள் ஏழைகளாகவே இருக்கிறீர்கள்.''

**தத்தவங்கள் சொல்லியும்...**

''உங்களுக்கு எத்தனைத் தத்துவங்கள் சொன்னாலும் அவை பயனளிப்பதாகத் தெரியவில்லை.''

**இரவல் சோறு:**

''அடுத்தவனை அண்டி இரவல் சோற்றில் காலத்தை ஓட்ட முடியாது.

ஆன்மிகத் துறையில் ஈடுபாடு வைத்துக் கொண்டு, பக்தியையும், தொண்டினையும் நல்ல முறையில் வளர்த்துக் கொண்டால் வளர முடியும்.''

**விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை:**

''அன்பு, பண்பு, பாசத்தோடு வாழ வேண்டும்

கொடுக்கும் மனப்பான்மையும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் வேண்டும்.''

**கஷ்டங்கட்கு இடையிலும்:**

''பிறந்தாலும் கஷ்டம்; இறந்தாலும் கஷ்டம்; தெய்வத்தை வழிபட்டாலும் கஷ்டம்; வழிபடாவிட்டாலும் கஷ்டம்.

வாழ்க்கையில் இனிப்பும் உண்டு கசப்பும் உண்டு. உவர்ப்பும் உண்டு. துவர்ப்பும் உண்டு என்றாலும் மனிதன் தெய்வத்தைப் பற்றிக் கொண்டு ஆன்மிகத்தில் ஈடுபடுவது

சிறந்தது.''

பணம் பணம் என்று இருந்தால் மட்டும் போதாது. பணத்தோடு பக்தியும் வேண்டும். சக்தியும் துணையிருக்க வேண்டும். அந்தச் சக்தி தான் ஆதிபராசக்தி!''

**குணமா? பணமா?**

“உங்கள் குணத்திற்குத்தான் அம்மாவே தவிர, பணத்திற்காக அல்ல!''

**பக்தியும் – பக்திக்குரிய அடையாளங்களும்:**

“அபிடேகம் செய்வது, அலங்காரம் செய்வது, காணிக்கை செலுத்துவது -இவையெல்லாம் மட்டுமே பக்தி ஆகிவிடாது. இவை பக்தியை வெளிப்படுத்த வெறும் அடையாளங்கள்.

உங்கள் அடிமனத்திலிருந்து உள்ளன்போடும் பாசத்தோடும் அம்மா! என்ற உணர்வு பொங்கி வந்தால் அது தான் பக்தி! அதற்குத்தான் நான் கட்டுப்படுவேன்!

எந்த ஒரு வேண்டுதல் நிறை வேற வேண்டுமானாலும் தொண்டு செய்ய வேண்டும். அந்தத் தொண்டையும் பக்தியுடன் செய்ய வேண்டும்.''

**அன்று போல இன்றும்:**

“ஆரம்ப நாட்களில் அம்மாவிடம் நீங்கள் எப்படியெல்லாம் பக்தி செலுத்தி வந்தீர்களோ அதுபோலவே இன்றும் உள்ளன்போடு பக்தி செலுத்தி வரவேண்டும். தொண்டு செய்து வரவேண்டும்.''

**நிலை பெற்ற புகழ்:**

“பொறுமையையும் அடக்கத்தையும் கடைப்பிடித்து ஆசை வயப்பட்டு அலையாமல் வாழ்ந்தால் வருங்காலம் மட்டுமின்றி இறந்த பிறகும் உங்கள் புகழ் அழியாமல் இருக்கும்.''

**விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை:**

“மழையாகப் பெய்த தண்ணீர் நதியாக மாறிக் கடலில் சென்று கலப்பது போல வாழ்க்கை அன்பில் கலந்து முடிய வேண்டும். அதற்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வேண்டும்.''



**உள்ளும் புறமும்:**

“வீட்டின் வெளியே உள்ள குப்பையை அகற்றிவிட்டால் மட்டும் போதாது. உள்ளேயும் சுத்தமாக இருக்க வேண்டும். அதுபோல உடம்பின் வெளியே மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது. உள்ளமும் சுத்தமாக இருக்க வேண்டும்.''

**சரணாகதியின் தன்மை:**

“சொல் என்றால் சொல்ல வேண்டும். செய் என்றால் செய்ய வேண்டும். விடு என்றால் விட்டுவிட வேண்டும். பிடி என்றால் பிடித்துக் கொள்ள வேண்டும். கட்டு என்றால் கட்டிவிட வேண்டும். ஏன்? எதற்கு? என்ற கேள்வி கேட்கக் கூடாது.''

**எல்லாம் நானே!**

“உங்களுக்கு எண்ணங்களையும் ஏமாற்றங்களையும், ஏற்றங்களையும், ஏணியையும் கொடுப்பது நான் தான்.''

**என்னிடம் விளையாடாதே:**

“பணத்தைக் கொடுப்பேன் ஆனால் பலனை அனுபவிக்க விட மாட்டேன்.

அருளைக் கொடுப்பேன் ஆனால் அனுபவிக்க விடமாட்டேன்.

தருமம் செய்யச் சொல்வேன் ஆனால் தருமத்தை ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

என்னை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. எனவே என்னிடம் விளையாடாதே! என்னை விளையாட்டுப் பொருளாக நினைத்துக் கொள்ளாதே!''

**என்னை ஆராயாதே...**

“மின்சார விளக்கு எப்படி எரிகின்றது என்று ஆராய்வதற்காக அதன் பல்பை உடைத்துத் தொட்டுப் பார்த்தால் என்ன நடக்குமோ அதுபோல்தான் என்னை ஆராய்பவனுக்கும் ஏற்படும். அறியாமையால் கை வைத்துவிட்டு அல்லல் படாதே.

பார்வை கெட்டுப் போனால் பழைய பார்வை கிடைக்காது.

அருள்கொடு! அமைதிகொடு என்று கேள்!

நஞ்சை விளையாவிட்டால் கஞ்சிக்கே வழியில்லை! மழை கொடு! செழுமை கொடு என்று கேள்!''

**உன் கடமைகளைச் செய்!**

''அம்மா எனக்கு அது செய்ய வில்லை; இது செய்யவில்லை என்று குறை சொல்லிக் கொண்டிருந்தால் செய்ய மாட்டேன் உன் கடமைகளை நீ செய்து கொண்டே வா; உன் தேவையறிந்து உனக்குச் செய்வேன்.''

**கடந்த காலத் தவறுகள்:**

''கடந்த காலத் தவறுகளைத் தூக்கி எறிந்து விட்டு இனி நல்லதைச் செய்ய வேண்டும் என்று நினைக்க வேண்டும்.

தலைமுறை தலைமுறையாக ஆன்மிகம் வளர வேண்டும். வாழையடி வாழையாக என் குலம் தழைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ள வேண்டும்.''

**ஒருவரை ஒருவர் பார்க்கும் போது...**

''ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் பார்க்கும் போது தந்தையாகவும், தாயாகவும் சகோதரனாகவும், சகோதரியாகவும் பார்க்க வேண்டும்.''

**நான் தேடி வந்த போது...**

''நான் பக்தர்களைத் தேடி அலைந்த பொழுது பக்தர்கள் கிடைக்கவில்லை. என்னைத் தேடி அவர்கள் அலையும் பொழுது நான் எளிதில் கிடைக்கமாட்டேன்.''

**பக்தி உணர்வு:**

''ஆரம்ப காலத்தில் புற்று, பூமி, பாம்பு, வேம்பு என வைத்து வழிபட்டாய். பிறகு கல்லுக்கு உருவம் தந்து வழிபட்டாய். கல்லுக்கு உருவம் தந்தால் அது தெய்வமாகிறது. அந்தத் தெய்வத்திடம் பக்தி தானாக வர வேண்டும். பழம் தானாகக் கனிய வேண்டும். அவ்வாறு கனிந்தால் தான் ருசியாக இருக்கும். தடி கொண்டு அடித்துக் கனிய வைத்தால் ருசி இருக்காது. அதுபோல பக்தியும் தானாக வரவேண்டும். திணிக்கப்பட்டு வரக்கூடாது. பக்தியில் போலி பக்தி இருக்கக் கூடாது.''

**ஆணவம்:**

''ஆணவம் உன்னை அனாதை ஆக்கிவிடும். அன்பான வார்த்தைகள் தான் உனக்கு உயர்வு தரும்''



**செயற்கைச் சாதனங்கள்:**



# 14. இயற்கை

**மனிதன் உயர்ந்தவனா?**

''உயிர்களில் ஐந்தறிவு உள்ள உயிர்கள், ஆறறிவுள்ள உயிர்கள் என்ற பாகுபாடெல்லாம் கிடையாது. ஆறு அறிவு பெற்ற மனிதர்களிடமும் அறியாமை அதிகம் உண்டு. தன்னைப் போன்ற ஒருவன் சோற்றுக்குப் பிச்சையெடுப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிற இவன் எப்படி உயிரினங்களில் உயர்ந்தவன்?''

**என் சக்தியே காரணம்!**

''இந்த உலகம் என்ற கம்பியின் மீது நீங்கள் நடக்கின்றபோது கீழே கத்தி! பள்ளம்! நெருப்பு! நீர்! போன்ற ஆபத்துக்கள் எல்லாம் இருக்கும். ஆனாலும் அதில் தைரியமாக நீங்கள் நடந்து போவதற்கும் என் சக்தியே காரணம்!''

**எது சம தர்மம்?**

''பெரியவனைச் சின்னவன் ஆக்குவது சிறப்பல்ல. சின்னவனைப் பெரியவன் ஆக்குவது சிறப்பு மகனே!''

**இயற்கையும் செயற்கையும்:**

''இயற்கை வளம் குன்றிவிட்டால் செயற்கைக் குணம் வந்துவிடுகிறது. உங்கள் மனத்தை இயற்கையாக வைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் செயற்கைக் குணம் வந்துவிடும்.''

**ஒரு சில மருத்துவர்களின் பார்வை:**

''அடிகளாரின் பார்வை பட்டாலே பாவங்கள் தீருவது போல ஒரு சில மருத்துவர்களின் பார்வை பட்டாலே வியாதிகள் தீருகின்ற வகையில் அருளைத் தருவேன்.''

**எந்த ரூபத்திலும் குணமாக்குவேன்:**

''மாத்திரையும் உண்டு; வேப்பிலையும் உண்டு; எந்த ரூபத்திலும் மனிதர்களைக் குணமாக்குவேன்!''

**மருத்துவத் தொண்டர்களுக்கு:**

“நீ கொடுக்கிற ஊசி, மாத்திரைகளினாலா வியாதிகள் முழுவதும் குணமாகிறது? இல்லை மகனே! என் அருளால் தான் குணமாகிறது. நீ அசைவாக இரு! நான் அருளாக இருக்கிறேன்.”

**பலூனில் ஊதிய காற்றைப் போல:**

“மருத்தவம் என்பது பலூனில் உள்ள காற்றைப் போல! காற்றைப் பலூனில் ஓரளவு அடைத்தால் தான் அதை நாம் வேண்டியவாறு பூனை, குரங்கு பொம்மைகளாகச் செய்யலாம். ஆனால், அதே காற்று அதிகமானால் பலூன் வெடித்துவிடும். அதுபோலத் தான் மருத்துவமும்!”

**உடல் நோய்; பிறவிநோய்:**

“மகனே! நீ என்னை நினைத்து உபவாசம் இருந்தாலோ, கால்நடையாகப் புனிதப் பயணம் மேற்கொண்டாலோ, பக்தியில் வளர்ந்து வந்தாலோ உனது உடல் நோய்களை மட்டுமின்றிப் பிறவி நோயையும் நீக்குவேன்!”

**மருத்தின் மூலப்பொருள் நானே!**

“மருத்துவன் கொடுக்கின்ற மருத்தின் மூலப்பொருளாகவும் நான் தான் இருக்கிறேன் மகனே! ஒருவனது ஊழ்வினை முடியுங்காலம் வரை அவனுக்கு மருத்துவ வசதி செய்து கொடுப்பது இன்றியமையாதது. மருத்துவன் மருந்தைக் கொடுத்தாலும் அவனது வியாதி அந்த மருந்துக்குக் கட்டுப்படுவதும், கட்டுப்படாததும் என் கையில் மகனே! எனவே, மருந்துக்கு ஆகும் செலவினை வீண் என்று எண்ணாதே! அதற்குச் செலவாகும் பொருளைப் பற்றிக் கவலைப்படாதே!”

**பஞ்சபூதங்களுக்கு வயதாவதில்லை:**

“குழந்தைகளுக்கு - தனக்கு - தருமத்திற்கு - ஆலயங்களுக்கு - உடல் உறுப்புகளுக்கு - உண்ணும் உணவிற்கு - ஆசாபாசங்களுக்கு - உணர்ச்சிகளுக்கு - ஆகிய இவற்றுக்கெல்லாம் வயதாகிறது. ஆனால் மரம், செடி, கொடிகள் நிறைந்த இயற்கைக்கும் பஞ்சபூதங்களுக்கும் வயதாவதில்லை.”

**இயற்கை அழிவதில்லை:**

“இயற்கை அழிவதில்லை. மண்ணுக்கும் உயிர்ப்புத்தன்மை உண்டு.”



**மனிதனும் மிருகமும்:**

“நீங்கள் வளர்க்கும் ஆடு மாடுகளால் உங்களுக்குத் தொல்லை கிடையாது. நீங்கள் வளர்க்கும் மனிதர்களால் தான் தொல்லைகள் ஏற்படுகின்றன.”

**இயற்கை வளம் – குடும்ப வளம்:**

“இயற்கை வளம் நன்றாக இருந்தால் தான் உன் குடும்ப வளமும் நன்றாக இருக்கும்.”

**மனிதன் ஒரு கூட்டுப்புழு:**

“மனிதனும் ஒரு கூட்டுப்புழுவைப் போன்றவன் தான். இவன் பதவி ஆசை, சண்டை, சச்சரவு என்ற கூட்டிற்குள்ளேயே உழன்று கொண்டிருக்கிறான்.”

**மழையும் – ஆன்மிகமும்:**

“இங்கே மழை பெய்வது மேகத்தினால் தான். அவ்வாறே இங்கு ஆன்மிகம் வளர்வதும் ஆதிபராசக்தியினால் தான்.”

**பூமி – தாய்க்குச் சமம்:**

“பகவானே! என்று மேலே பார்த்தபடிக் கையைக் காட்டுவதில் அர்த்தம் ஒன்றுமில்லை. உன் உடலைத் தாங்குகிறதே பாதம்? அந்தப் பாதத்தைத் தாங்குகிறதே பூமி? அந்தப் பூமி உன் தாய்க்குச் சமம்!”

**தெய்வத்தை நிந்திக்காதே!**

“நடந்துபோகும் போது கல் தடுத்து காலில் காயம் உண்டானால் அது கல்லின் தவறா? உன் காலின் தவறா? அந்தக் கல்லைத் திருப்பி உதைத்தால் உன் காலிற்குத் தான் காயம் உண்டாகும். நீ நினைத்துக் கொண்டு வந்ததெல்லாம் நிறைவேறவில்லையென்று எண்ணிக்கொண்டு தெய்வத்தை நிந்திக்கக் கூடாது. குறை உன்னுடையது. தெய்வத்தினுடையது அல்ல. எந்த நேரத்தில் எதை எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்ய வேண்டும்.”

**கூட்டத்தை வைத்து எடை போடாதே:**

“உள்ளத்தில் நிறைவு இருக்கவேண்டும். கூட்டம் வரவேண்டும் என்பதற்காக எதையும் செய்யக்கூடாது. எந்த அரசாங்கம் வந்தாலும் இயற்கை ஒத்துழைத்தால் தான் வாழமுடியும்.”

## நீயும் உன் நிழலும்:

“தன்னுடைய நிழல் யாருக்கும் தெரியாது. கண்ணாடி முன் நின்று நீ சிரித்தால்தான் தெரியுமே தவிர, கண்ணாடி சிரிக்காது. கொடுக்கிற வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஐம்புலன்களை அடக்கவேண்டும். உபதேசம் பெறவேண்டும். ஒருசில கப்பல் தான் கரைசேர முடியும். ஒரு சில கப்பல்கள் மூழ்க வேண்டிய நிலை ஏற்படும்.”

## இயற்கையோடு அனுசரித்து நட:

“இயற்கையின் சீற்றத்தைத் தடுக்க முடியாது. ஒரு குழந்தையை ஒருநாள், இரண்டு நாள் பட்டினி போடலாம். அதற்கு மேல் அந்தக் குழந்தை தாங்காது. இயற்கையில் செடிகள் பலநாள் பட்டினியிருந்தாலும் தாங்கும். அடுத்த மழை பெய்யும்போது தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும். அதுபோல எதையும் தாங்கிக் கொள்ளும் தன்மை ஆன்மிகத்திற்குத்தான் உண்டு. ஆடு மாடுகள் உங்களுடைய பாதுகாப்பு இருந்தால் தான் பிழைக்கும். இயற்கையை நீ பாதுகாக்க வேண்டியதில்லை. இயற்கையோடு அனுசரித்து நடந்தால் போதும்.”

## உடல்வேறு; ஆவி வேறு:

“உடல் வேறு; ஆவி வேறு. உடல் அழியும். ஆவி அழியாது.”

## பொருளும் – பார்வையும்:

“வெறுப்பு, சலிப்பு, சோர்வு ஏற்படுகிறபோது உன் பார்வையில் வித்தியாசம் ஏற்படும். அப்போது நீ பார்க்கிற பொருளிலும் வித்தியாசம் ஏற்படும்.”

## சேர்த்து வைக்க எண்ணாதே!

“பிறந்தால் பாவம்! இறந்தால் பாவம்! உண்டால் பாவம்! உண்ணாமல் இருந்தாலும் பாவம்! சேர்த்து வைத்தால் சேறுதான். அது எங்கே போய்ச் சேரும் என்று உனக்குத் தெரியாது.”

## கள்ளப் பிள்ளையும் என் பிள்ளை தான்:

“ஒரு தாய்க்குப் பத்துப்பிள்ளை. அவற்றுள் ஒன்று கள்ளப்பிள்ளை அவன் தாயின் தாலியையும் திருடுவான். தாயின் ஆபரணங்களையும் திருடுவான். அவனையும், அவனைப் பெற்ற தாயையும் படைத்தவளாக நான் இருக்கிறேன்.”



## உடம்பும் – நோயும்:

“காற்றுச் சலனமில்லாத இடத்தில் விளக்கில் எண்ணெய் ஊற்றித் திரியை ஏற்றிக் கொளுத்தினாலும், தீபத்தின் ஒளி அசைந்தாடிக் கொண்டு தான் இருக்கும். அதுபோல மனித உடம்பு என்று ஒன்றை எடுத்துக் கொண்டு வந்த பிறகு உடம்பிற்கு நோய் வரத்தான் செய்யும்.”

## நரகம் என்பது:

“நடைமுறையில் நடப்பது நான் நரகம் என்பது.”

## ஆதிபராசக்தி:

“மனத்தின் சக்தி! மிருகத்தின் சக்தி! இயற்கைச் சக்தி! என்று ஒவ்வொருவருக்கும் ஒரு சக்தி இருப்பதைப் போல - கல் சக்தி! காற்றின் சக்தி என இருப்பது போல - மீன், நண்டு, புறா போன்ற உயிர்களுக்கு ஒவ்வொரு சக்தி இருப்பது போல - ஆதிபராசக்தி என்பது இயற்கை சக்தியான மனோசக்தியாகும்.”

## நினைப்பதும் – நடப்பதும்:

“நீ நினைப்பதெல்லாம் நடப்பதில்லை; நடப்பதை நீ நினைப்பதும் இல்லை.”

## குழந்தைகள் நன்கு வளர...

“ஒரு குடும்பத்தில் உள்ள தவைன், தலைவி இருவரிடத்தும் பாசமும் அக்கறையும் இருக்க வேண்டும். இருவரிடமும் ஒழுங்கு இருந்தால் தான் பெற்ற குழந்தைகள் ஒழுங்காக இருக்க முடியும்.”

## குடும்பம் ஒரு கோயில்:

“குடும்பம் ஒரு கோயில்! கோயில் தான் குடும்பம்! நானே கோயில்; உலகைச் சுற்றிக் கடல் சூழ்ந்திருப்பது போல உங்களைச் சுற்றி நான் சூழ்ந்திருக்கிறேன்.”

## வலிமையும் வீரமும்:

“நாவிற்கு வலிமை இருக்க வேண்டும். ஆனால் வளைந்து கொடுக்கக் கூடாது. உள்ளத்தில் வீரம் இருக்க வேண்டும். அந்த வீரம் தனக்குப் பயன்பட வேண்டுமே தவிர பிறரை அழிக்கப் பயன்படுத்தக் கூடாது.”

**மனத்தில் குறைபாடு இருக்கக்கூடாது:**

“மனிதனுடைய பார்வையில் குறைபாடு இருக்கலாம். குணத்தில் குறைபாடு இருக்கலாம். உடல் உறுப்புகளில் குறைபாடு இருக்கலாம். ஆனால் மனத்தில் குறைபாடு இருக்கக்கூடாது.”

**பிறப்பும் இறப்பும் இயற்கை நியதி:**

“புல், பூண்டு முதல் எல்லா உயிரினங்களுக்கும் வளர்ச்சியுண்டு அழிவும் உண்டு. அதுபோலவே மனித சமுதாயத்தில் பிறப்பும் உண்டு. இறப்பும் உண்டு.”

**நல்லவனால் மழை! தீயவனால் புயல்:**

“சமுதாயத்தில் ஒன்பது பேர் தீயவன்; ஒருவன் நல்லவன்; அந்த ஒருவனால் தான் மழை பெய்கிறது. மற்றவர்களால் புயல் அடிக்கிறது.”

**தாயும் – பிள்ளையும்:**

“தாயைப் போலப் பிள்ளையே தவிர பிள்ளையைப் போல தாய் அல்ல!”

**படிப்படியாகத் தான் ஆன்ம முன்னேற்றம்:**

“ஆதிகால மனிதன் சைகைகள் மூலம் தன் கருத்தை வெளியிட்டான். பிறகு ஒலியின் மூலம் தன் கருத்தை வெளிப்படுத்தினான். பிறகு, எழுத்து தோன்றியது. எழுத்தினால் மொழி தோன்றியது. படிப்படியாக நாகரிக முன்னேற்றம் ஏற்பட்டது. அதுபோலவே படிப்படியாகத் தான் நீங்கள் ஆன்ம முன்னேற்றம் அடைய முடியும்.”

**இயற்கையும் – ஆன்மிகமும்:**

“மருத்துவத்தாலும், விஞ்ஞானத்தாலும் நிலைத்த பயன் கிடையாது. இயற்கையாலும், ஆன்மிகத்தாலுந்தான் நிலையான பயன் உண்டு.”

**நிழலுக்குச் சக்தி!**

“மரத்தின் நிழலில் நீ வாழ்ந்தாலும் அந்த நிழலுக்கும் சக்தியைக் கொடுப்பது நான் தான்!”

**உருவம் ஒன்று; உள்ளம் வேறு:**

“ஆலமரத்தின் பழமும், அரச மரத்தின் பழமும் உருவத்தால் ஒன்று போலவே காணப்படுகின்றன. அவற்றின் ருசிக்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆலம் இலை உணவு உட்கொள்ள உதவும். அதன் குச்சி பல் துலக்க உதவும்.



அரசமரக்கிளை திருமணத்தின் போது உதவும். அதன் பழம் பறவைகளுக்கு உணவாகும்.

இலுப்பைப் பழமும், சப்போட்டாப் பழமும் நிறத்தாலும் உருவத்தாலும் ஒரே மாதிரி தான். ஆனால் ருசி வேறு.

அதுபோல மனிதர்கள் உருவத்தால் ஒன்று போல இருந்தாலும் உள்ளத்தால் வேறு வேறாக இருக்கிறார்கள்.”

**படைப்பும் காரணமும்:**

“ஒவ்வொரு காரியத்திற்காகவும் இந்த உலகில் ஒவ்வொரு உயிரும் படைக்கப்பட்டிருக்கிறது.”

**மனிதனும் – மிருகமும்:**

“ஒட்டகம், எறும்பு முதலிய பிராணிகள் புயல், மழை, காற்று, பகை மிருகங்கள் முதலானவற்றைத் தம் மோப்ப சக்தியாலேயே அறிந்து கொள்கின்றன. அதற்குத் தக்கபடி இடத்தை மாற்றிக் கொண்டு பாதுகாப்புடன் வாழ முயல்கின்றன. மனிதனுக்கும் இயற்கையிலேயே மோப்ப சக்தியுண்டு. ஆனால், அவன் செயற்கைத்தனமாக வாழத் தொடங்கி விட்டதால் இன்று சளி அடைத்துக் கொண்டு நாற்றமெடுக்கும் நிலையில் உள்ளது.”

**ஒன்றை ஒன்று விழுங்குவது ஏன்?**

“புழுவைப் பூச்சி உண்கிறது. பூச்சியைப் பல்லி உண்கிறது. பல்லியைத் தவளை உண்கிறது. தவளையைப் பாம்பு விழுங்குகிறது. பாம்பைக் கருடன் விழுங்குகிறது. இவை ஒன்றையொன்று விழுங்காமலிருந்தால் உலகம் என்ன ஆவது?”

**வாழ்க்கைப் பாதை:**

“வாழ்க்கைப் என்ற பாதையில் ஏற்றமும் உண்டு; இறக்கமும் உண்டு. ஒருகாலத்தில் ஏற்றம் உண்டு; இன்னொரு காலத்தில் இறக்கமும் உண்டு.”

**பாமரனும் படித்தவனும்:**

“பாமர மக்களிடம் பாசத்தைப் பார்க்கலாம். படித்த மக்களிடம் பாவத்தைப் பார்க்கலாம்.”

**பிடி சாம்பல்:**

“நாடு, வீடு, மாடு எல்லாமே கடைசியில் காடு! ஒரு குழந்தை தாயின் வயிற்றில் பிறந்தாலும் கடைசியில் பூமிக்குள்

சாம்பலாகத்தான் மாறவேண்டும். பூமியில் செடி முளைத்து, மரமாக வளர்ந்தாலும் கடைசியில் உரமாகத்தான் மாறவேண்டும்.''

### இறப்புக்குப் பின் பிறப்பு:

“பிறப்புண்டேல் இறப்பும் உண்டு. இறப்பிற்குப் பின் பிறப்பும் உண்டு.''

### எவரையும் ஏளனம் செய்யாதே!

“ஒருவரை ஏளனம் செய்வது கூடாது. அவ்வாறு செய்தால் அதற்குரிய பலன் நாளைக்குக் கிடைக்கும் என்பதில்லை. இப்பொழுதெல்லாம் அடுத்த நிமிடமே அதற்கான பதிலும் பலனும் கிடைக்கும்.''

### இதுதான் உன் வாழ்க்கை நிலை:

“குழந்தை உண்டு; கணவன் உண்டு; மனைவி உண்டு; கல்லடியும் உண்டு; எண்ணெய் உண்டு; எண்ணெய்க்கடனும் உண்டு. என்ன கொடுத்தாய்? எது கொடுத்தாய் எனக் கேட்கும் பிள்ளைகளும் உண்டு. சாகும்போது எதைக் கண்டாய்? எண்ணெய் கண்டாய்; சிகைக்காய் கண்டாய்; கடைசியில் சாம்பல் தான் கண்டாய். இது தான் உன் வாழ்க்கையின் உண்மை நிலை.''

### வேப்பிலையின் முக்கியத்துவம்:

“மற்ற இலைகளை விட வேப்பிலைக்குக் கசப்புத் தன்மை அதிகம் உண்டு. அதனால் தான் புழு, பூச்சிகள் பிறப்பதில்லை. அந்தக் கசப்புத் தன்மை தெய்வத்தன்மைக்குச் சமம். அதனால் வேப்பிலைக்குத் தனி முக்கியத்துவம் உண்டு.''

### குடும்பமும் – அரசும்:

“ஒரு குடும்பம் என்பது அரசு போன்றது. ஓர் அரசு என்பதும் ஒரு குடும்பம் போன்றது.

குடும்பத்தில் உள்ள சொத்திற்காகப் பிரிவினை ஏற்படும். அந்தச் சொத்திற்காகப் பிள்ளைகள் குடும்பத் தலைவனையும் தலைவியையும் கொல்லுகிற நிலைமை கூட வளர்ந்து வருகிறது.

அதுபோலவே நாட்டிலும் பிரிவினைகள் அழிவுகள் உண்டாகி விடுகின்றன. இதனால் அரசியல் பொறுப்பு யாருக்கும் கிடைக்காமலே போய்விடும்.

பிள்ளைகளை நேர்மையாக வளர்த்தால் பிரிவினைக்கு இடமில்லை. பாசத்தை ஊட்டாமல் கௌரவத்திற்காகப் பிள்ளைகளை



வளர்க்கும் போது இவ்வாறு சண்டை சச்சரவுகள் தான் உண்டாகும். உடைந்த மண் பாண்டத்தை யாரும் எடுத்து உடைப்பதில்லை. தானாகவே உடைந்துவிடும்.''

### விஞ்ஞானம்:

“பொருள் உற்பத்தியை அதிகரிப்பதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞானம் இன்று மெல்ல மெல்ல மனித உற்பத்தியை அழித்து வருகிறது. விஞ்ஞானத்தாலும், மருத்துவத்தாலும் உயிரைக் காப்பாற்றிவிட முடியாது. அறுவை சிகிச்சைகளும், புதிய மருந்துகளும் சில நாட்கள் வரை தான் காப்பாற்ற முடியும்.''

### மனிதனும் – மனிதத் தன்மையும்:

“மாவு எந்த உருவத்தில் இருந்தாலும் ருசி ஒன்றுதான். இனிப்புப் பண்டம் எந்த உருவத்தில் இருந்தாலும் ருசி ஒன்றுதான். அது போல மனிதர்கள் எத்தனை உருவங்களில் இருந்தாலும் மனிதத் தன்மை என்பது ஒன்றுதான்.''

### இயற்கை வழி: ஆன்மிக வழி:

“இயற்கையின் வழி வேறு; ஆன்மிகத்தின் வழி வேறு. உள்ளத்தில் பிடிப்பு இல்லாமல் மேலெழுந்தவாரியாக நீ ஆன்மிகத்தில் ஈடுபட்டால் சேற்றைத்தான் வாரிப்பூசிக் கொள்ள வேண்டும். அது நாற்றம் தான் அடிக்கும். ஆன்மிகத்துக்கு வந்துவிட்ட பிறகு எந்த ஒரு மரியாதையையும் எதிர்பார்க்கக் கூடாது.''

### புளிப்பும் கசப்பும்:

“பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பார்கள். அந்தப் புளிப்புக்கு ஒரு சக்தி உண்டு. கசப்புக்கு ஒரு சக்தி உண்டு. புளிப்புத்தன்மை பாலுக்கு இல்லையேல் அது விஷமாக மாறிவிடும்.''

### படைப்பு:

“உடல் இருந்தால் வலி உண்டு. பசி இருந்தால் பகுத்தறிவு உண்டு. பார்வையிருந்தால் தான் பாவச்செயல் தென்படும். கருவி இருந்தால் அழிவு உண்டு.''

### இயற்கையும் – விஞ்ஞானமும்:

“விஞ்ஞானத்தால் இயற்கையை வெல்ல முடியாது. இயற்கையோடு எந்த அளவு ஒட்டி வாழ்கிறாயோ அந்த அளவுக்கு உனக்கு நன்மைகள் மிகுதி.

செயற்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பற்பசைகளைவிட இயற்கையில் கிடைக்கும் ஆலும் வேலும் பற்கட்கு உறுதி.

இயற்கையோடு ஒட்டி வாழ்கிற நரிக்குறவர்களைப் பார். செயற்கையோடு ஒட்டி வாழ்கிற மக்களைப் பார்! யாருடைய ஆரோக்கியம் நன்றாக இருக்கிறது என்று பார்."

**அழிவது யாரால்?**

"இயற்கைச் சக்தியே ஆதிபராசக்தி! அந்தச் சக்தி பெண்களின் சக்தி!

ஆவதும் பெண்ணாலே! அழிவதும் பெண்ணாலே என்கிறார்கள். இன்றைய அழிவுகள் ஆண்களால் உண்டாகிறது. விஞ்ஞானத்துறைகளால் உண்டாகிறது. ஆக்கப் பணிகளுக்கும், வளர்ச்சிக்கும் பெண்கள் பயன்படுகிறார்கள்."

**உங்களுக்கு நீங்களே பாதுகாப்பு:**

"காட்டில் உள்ள மிருகங்கள், துப்பாக்கி, பீரங்கி வைத்திருக்கின்றனவா? அவை எப்படி கூரான நகங்களைக் கொண்டும், கொம்புகளைக் கொண்டும் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்கின்றன? அதுபோல நீங்கள் கல்வி, அறிவு, ஒழுங்கங்களின் துணை கொண்டு உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ள முயல வேண்டும்."

**குடும்பமும் உலகமும்:**

"குடும்பமும் ஓர் உலகம் போன்றது தான். வெளி உலகிலுள்ள பொறாமை, பொச்சரிப்பு குடும்பத்திலும் உண்டு.

ஆன்மிக நெறியில் உள்ள குடும்பத்திலும், உலகிலும் சகிப்புத் தன்மை வேண்டும். ஒழுக்கம் வேண்டும்."

**ஒழுக்கம் முக்கியம்:**

"பட்டியிலிருந்து ஆடு தப்பியோடிவிட்டால் அது மற்றொரு மிருகத்திற்குப் பலியாக நேரிடும். அதுபோல ஒருவன் ஒழுக்கத்தில் இருந்து தவறிவிட்டால் மற்றவர்களுக்கு பலியாக நேரிடும். எனவே, மனிதன் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்."

**தாய்ப்பால் கொடுக்கத் தவறினால்...**

"தாய்ப்பால் கொடுக்காத காரணத்தால் குழந்தைகளுக்குப் புதுப்புது வியாதிகள் வரும். குழந்தைகளுக்கு எருமைப்பால், பசும்பால் கொடுத்தால் எருமையின் புத்தியும், மாட்டுப்புத்தியும் தான்



உண்டாகும். தாய்ப்பால் கொடுக்காமல் போவதால் தான் பெண்களுக்குப் புற்றுநோயும் கட்டியும் வருகின்றன."

**சமுதாயத்தில் தீமைகள்:**

"சமுதாயத்தில் நல்லவர் மிகப் பலராகவும், தீயவர் மிகச் சிலராகவும் இருந்தால் நாளடைவில் தீமை வலுவிழந்து, நன்மை வலிமை பெறும். விஷம் ஒரு குவளையில் உள்ள சிறிதளவு பாலை விஷமாக மாற்றிவிடும். ஆனால் கடல் நீரையே விஷமாக மாற்றும் ஆற்றல் உண்டா?"

**ஆசையும் – அழிவும்:**

"பறவைகள், மனிதர்கள், விலங்குகள் எல்லாவற்றிற்கும் உள்ளம் உண்டு. மனிதர்கள் நடை, உடை, பாவனைகள் அவ்வப்போது மாறும். எல்லாவற்றிற்கும் ஆசையினால் அழிவும் அழிவினால் ஆசையும் உண்டு."

**ஆன்மிகத்தில் ஆசை வருவதில்லை:**

"தலை நரைத்த பிறகும் சிலருக்குப் பெண்ணாசை விடுவதில்லை. பொருளாசையும் விடுவதில்லை. மாறாகத் தர்மம் செய்வதில் ஆசையும், ஆன்மிகத்தில் ஆசையும் உண்டாவதில்லை."

**ஆன்மிகம் இல்லாவிட்டால் மகிமை இல்லை:**

"மண்ணுக்கு - தண்ணீருக்கு - ஒரு கருத்துக்கு - உழைப்புக்கு உயர்வுக்கு - அழகுக்கு - பேச்சுக்கு - ஒவ்வொன்றிற்கும் மகிமை உண்டு. அந்த மகிமை அழியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எவ்வளவு மகிமை இருந்தாலும் இவற்றில் ஆன்மிகம் கலவாவிட்டால் மகிமை இல்லை."

**குறுக்கு வழியில் சம்பாதிப்பவன்:**

"பொய், பித்தாலாட்டம் குறுக்கு வழியில் சம்பாதிப்பவனுக்கு அழிவு உண்டு."

**குடும்பமும் – குழப்பமும்:**

"குடும்பத்தில் குழப்பம், அழுக்கு, தொல்லை முதலியன இருக்கும். அவைகளை உடனடியாகப் போக்க முடியாது. பாலில் இருந்து உடனடியாக வெண்ணெய் எடுக்க முடியாது. பாலைக் காய்ச்சித் தயிராகக் கடைந்து தான் வெண்ணெய் எடுக்க வேண்டும். அதுபோலக் குடும்பத்தில் உள்ள குழப்பத்தைச் சிறிது சிறிதாகத்தான் போக்க முடியும்."

**சக்தி:**

"சக்தி ஒரு கம்பியிலும் பாயும்; பல வடிவங்களிலும் அல்லது உருவங்களிலும் பாயும்."

**சட்டத்தின் பிடியும் – சக்தியின் பிடியும்:**

"நெறி தவறிப் பணம் திரட்டுகிறவர்கள் சட்டத்தின் கைப்பிடியில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம்; ஆனால் சக்தியின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது,"

**கானல் நீர்:**

"இந்த உலகம் இந்தப் பிரபஞ்சம் எல்லாமே கானல் நீர் என்பதை மறந்துவிடாதே!"

**ஆன்மிகத்தின் தொடக்கம்:**

"இயற்கை உண்டு; செயற்கை உண்டு; அகம் உண்டு; புறம் உண்டு. மனம் உண்டு! புலன்கள் உண்டு. பறவை உண்டு. பழக்கம் உண்டு. பறவைகள் பழக்கத்தை மாற்றிக் கொள்வதில்லை. அதனால் தான் அவை பறவைகளாகவே இருக்கின்றன. மனிதன் பழக்கங்களை மாற்றிக் கொள்கிறான். அங்கிருந்து தான் மகனே ஆன்மிகம் தொடங்குகிறது."

**மனித குலம் எப்படி உயர்ந்தது?**

"பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் அடிமைத் தன்மை என்ற நிலை இல்லை. அவற்றில் உள்ள சமத்துவம் மனித குலத்தில் இல்லை. அப்படி இருக்கும்போது மனித குலம் உயர்வானது என்று சொல்வது தவறு."

**ஆன்மிக வைத்தியம்:**

"இயற்கை வைத்தியம், செயற்கை வைத்தியம் என்று பல வகை உண்டு. இங்கே வந்து பலர் குணம் பெறுவது ஆன்மிக வைத்தியத்தால் என்பதைப் புரிந்து கொள்!"

**தாயும்; செவிலியும்:**

"தாயும் செவிலியாகலாம்; செவிலியும் தாயாகலாம். அவளும் பெண்ணே! இவளும் பெண்ணே! தாய் குழந்தையை அரவணைக்கவும் செய்கிறாள்; அகற்றவும் செய்கிறாள். அதுபோல தான் இங்கே அன்னையும் செய்கிறாள்."



**ஆன்மிகப் பணிகளுக்குச் செய்யும் செலவு:**

"காய்ந்த நிலம் மழை பெய்வதனால் செழிப்படையும். கட்டைப்புல் மேய மேயத் துளிர்க்கும். ஆன்மிகப் பணிகளில் உங்கள் சொத்தைச் செலவழித்தால் அது வளர்ந்து கொண்டே இருக்கும்."

**சாதுக்கள்:**

"சாதுக்களுக்கும் சாமர்த்தியம் உண்டு. வலிமை உண்டு."

**இயற்கையைக் கட்டுப்படுத்த முடியாது:**

"மழை, இயற்கை! இவற்றை அடக்க முடியாது. எந்தக் கட்டுப்பாடும் அவற்றை ஒன்றும் செய்ய இயலாது!"

**ஏழை பணக்காரன் உறவு:**

"ஒரு குடும்பம் இருந்தால் அந்தக் குடும்பத்தில் உள்ள சிறுவர்கள் வேலைக்குச் சென்று சம்பாதிக்க முடியாது. வயதான பெரியவர்கள்தான் சம்பாதித்துக் காப்பாற்ற வேண்டும். அதுபோல சமுதாயத்தில் உள்ள நலிந்த பிரிவினரை வசதி படைத்தவர்கள் தான் போற்றிக் காப்பாற்ற வேண்டும். இந்த வசதியும், வாய்ப்பும் என் அருளால் கிடைத்தது எனக் கருதி ஏழைகளுக்கு உதவ வேண்டும். அதை விட்டுப் பணம் உள்ளது என்ற அகங்காரத்தால் ஏழைகளைத் துன்புறுத்தினால் அவன் அகங்காரத்தை வளரவிட்டே அழிக்கிறேன்."

**தொழிலாளி – முதலாளி உறவு முறை:**

"வசதியிருப்பவன் வாங்குவதற்கு ஒரு வாகனத்தை உற்பத்தி செய்ய வருகிறான் முதலாளி. அந்த உற்பத்திக்கு உதவுகிறான் தொழிலாளி! அவ்வாறு உதவுகிற போது பல தொழிலாளிகளின் உணவு, உடைப் பிரச்சனைக்கும் வழி கிடைக்கிறது அல்லவா? இருவர்களுக்கும் இந்த அடிப்படையில் இணக்கமான உறவு வேண்டும்."

**ஆன்மிகத்திற்கு எதிர்ப்பும் தேவை:**

"குழந்தைக்குக் கசக்கும் மருந்தை ஊசி மூலமும் தருவது உண்டு; உணவு மூலமும் தருவதுண்டு. அது இயற்கையான வளர்ச்சிக்கு உதவும். அதுபோலவே ஆன்மிகம் வளர்க்கக் கசப்பும் தேவை. எதிர்ப்பும் தேவை."

**மனமும் – மழையும்:**

"மக்களின் மனநிலைக்கு ஏற்பவே இங்கே மாரியும் இருக்கும்."

**ஆன்ம முன்னேற்றம் என்பது...**

"தென்னை மரத்தை வளர்த்து அது காய்த்துப் பறிக்கிற நிலை வருகிற போது கூட உனக்கு அது கிட்டாமல் போய்விடும். ஆன்மிகத்தில் பல தொல்லைகள் வரத்தான் செய்யும். ஒரு மனிதன் ஆன்மிகத்தில் கால் பங்கு தான் முன்னேற முடியும்."

**கிழிந்த துணியும் – மனமும்:**

"எவ்வளவு அறிவுரைகளைக் கூறினாலும் உங்கள் மனம் தூய்மையடைய மாட்டேன் என்கிறது. துணியை எவ்வளவுதான் வெளுத்தாலும் கிழிந்து போகிறதே தவிர அழுக்குப் போகமாட்டேன் என்கிறது. துணி கிழிகிற நிலையை அடைகிறது. உங்கள் மனமோ அழிவையே நாடிச் செல்கிறது."

**மன அழுக்கு:**

"அடுப்பில் பானையை வைத்தால் கரி பிடிக்கிறது. பானைளைக் கழுவும் போது கையில் கரி பிடிக்கும். அதைத் துடைக்கும் போது துணியிலும் கரி பிடிக்கும். அதுபோல எவ்வளவு கூறினாலும் சிலபேருக்கு மன அழுக்கு மறைவதில்லை."

**கடலும் – படகும்:**

"கடலில் செல்லும் படகானது பல எதிர்ப்புகளையும் தாங்கிக் கொண்டு கரை சேர்வது போல, ஆன்மித்திலும் பாசம், பந்தம் முதலானவற்றால் ஏற்படும் இன்னல்களைக் கடந்து தான் கரைசேர முடியும்."

**மனநிறைவுக்கு வழி:**

"ஆன்மிகத்தில் உன்னை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமே மனநிறைவு பெறமுடியும்."

**உலக நன்மைக்குப் பெண்கள்:**

"உடம்பைத் தேய்த்துக் குளித்தாலும் அழுக்கு உண்டு. சாக்கடையிலும் அழுக்கு உண்டு. அதுபோல உள்ளத்திலும் அழுக்கு உண்டு. அந்த அழுக்கினால் மனித இனத்திற்கு அழிவும் உண்டு. இந்த அழிவு பெண் இனத்தால் மட்டுமே கட்டுப்படுத்தப்படுகிறது."

**கழிவுப் பொருள்களும் – ஆசைகளும்:**

"உடம்பில் உள்ள கழிவுப் பொருள்களை வெளியேற்றுவது உடம்புக்கு நல்லது. அதுபோல உள்ளத்தில் கிடக்கிற ஆசைகளை வெளியேற்றுவது நல்லது."



**ஆன்மிக சக்தி:**

"மனிதனாலும் மருத்துவத்தாலும் செய்ய முடியாததை ஆன்மிகத்தால் செய்ய முடியும்."

**உனக்குள்ளேயே இருக்கிற சக்தி:**

"உன்னுள்ளேயே சக்தி இருக்கிறது. அந்தச் சக்தியினால் அடைய முடியாதது எதுவும் இல்லை."

**ஆன்மிகம் எதற்கு?**

"ஆன்மிக நெறியில் இயற்கை உண்டு; செயற்கை இல்லை ஐம்புலன்களை அடக்கிப் பழகுவதற்கே ஆன்மிகம்."

**மலை போல உள்ளம்:**

"மலை போன்ற நல்ல உள்ளமும் உண்டு; மலை போன்ற கள்ள உள்ளமும் உண்டு. அந்த நல்ல உள்ளத்திற்குப் பலன் உண்டு. கள்ள உள்ளத்தை வெடி வைத்துத் தான் தகர்க்க வேண்டும்."

**கடிகாரமும் – குடும்பமும்:**

"ஒரு கடிகாரம் வெளியில் அழகாக நொடி, நிமிடம், மணி, நாள், மாதம், வருடம் என்று காலத்தைக் காட்டுகிறது.

காலம் காட்டுகிற அந்தக் கடிகாரம் ஓடும்போது, உள்ளே இருக்கும் எந்திரங்கள் எதிரும் புதிருமாய்ச் சண்டையிட்டுக் கொள்ளுவது போல இயங்குகின்றன.

அதுபோல குடும்பத்தில் பல பிரச்சனைகள் இருந்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் காலத்தை ஓட்டவேண்டும்."

**மனித இயல்பு:**

"மனிதர்கள் அனைவரும் உருவத்தால் ஒன்றாக இருந்தாலும், எண்ணத்தால் பலராக இருக்கின்றார்கள்.

மனிதனின் முன் யோசனை, பின் யோசனை, பேச்சு, நடை, உடை பாவனை, சுவை, கசப்பு மணவாழ்க்கை, கோபம் போன்றவை மாறி வருகின்றன."

**இயற்கையும் மனிதனும்:**

"இயற்கை ஒன்று தான், ஆயினும் மனிதனின் நடை, உடை, பாவனைகள் தான் வேறுபடுகின்றன. உள்ளத்தில் உண்மை இருந்தால் தான் மனித குலத்துக்கு இனி உணவும் கிடைக்கும்.

கீழ்நிலையிலிருந்து முன்னேறி வருபவன் மீண்டும் அதர்மத்தால் கீழே வரவேண்டியவனே!

தங்கத்தோடு செம்பு சேர்ப்பதால் வளைந்து கொடுத்து நகை செய்ய உதவுகிறது. அதுபோல ஆன்மிகத்தில் வளைந்து கொடுக்கிற பண்பு வளரவேண்டும்.

புரியாத உலகத்தில் புலம்பி என்ன செய்வது? குழந்தையைத் தாய் காப்பது போல, கன்றினைப் பசு காப்பது போல நாளைய உலகத்திலும் என்னால் தான் உங்களைக் காப்பாற்ற முடியும்.

பணம் பிணமாக மாறிவருகிறது."

**இயற்கையும் – மனிதனும்:**

"இயற்கை தனக்காக வாழ்வதில்லை. ஆனால் மனிதனோ இயற்கைப் பொருள்களையும், ஆடு, மாடு, குதிரை போன்ற மற்ற உயிரினங்களையும் தனக்காகப் பயன்படுத்திக் கொள்கிறான். பிறர்க்காக வாழமாட்டேன் என்கிறான். இயற்கைப் பொருள்களிடம் உள்ள அந்தப் பண்பாடு மனிதனிடம் இல்லை."

**அறிவும் – அழிவும்:**

"எவ்வளவுக்கெவ்வளவு வேகமாக அறிவு வளர்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு வேகமாக எதிர்காலத்தில் அழிவுகள் வளரும்."

**கனவும் – பலனும்:**

"இரவில் ஆன்மிக உணர்வோடும் தர்ம சிந்தனையோடும் கனவு காணும்போது அந்தக் கனவு நனவாகிப் பலன் கொடுக்கும். அவ்வாறில்லாமல் பொய்யான ஆன்ம உணர்வோடும் பொய்யான தர்ம சிந்தனையோடும் கனவு கண்டால் கனவும் பொய்யாகிப் பலனும் பொய்யாகிவிடும்."

**துன்ப அனுபவம் தேவை:**

"ஒரு குழந்தைக்குப் பாட்டுப்பாடி, சிரிக்க வைத்து, விளையாட வைத்து அதன் பிறது சோர்வடைய வைத்து அந்தச் சோர்வு நேரத்தில் உணவை ஊட்டினால் உணவை ஏற்றுக்கொள்கிறது. அதுபோல ஆன்மிகத்தில் துன்பம் ஏற்பட ஏற்படத்தான் பக்குவம் ஏற்படுகிறது."

**உலக வாழ்க்கை:**

"உங்களுக்கு உலகம் என்ற ஒன்றைப் படைத்துக் கொடுத்து,



இதில் வாழ்க்கை என்ற ஒன்றையும் அமைத்துக் கொடுத்து உன்னை ஏமாற்றவும் செய்கிறேன்.

இல்லறம், நல்லறம், இனிப்பு, கசப்பு, இன்பம், துன்பம் எல்லாம் கலந்து இருக்க வேண்டும். அப்போது தான் உனக்கு அனுபவம் ஏற்படும். அனுபவங்கள் மூலம் தான் நீ உயர்ந்து வளர முடியும்."

**ஆதிகால மனிதன்:**

"ஆதிகாலத்தில் மனிதனின் எண்ணங்கள் நன்றாக இருந்தன. காய்கறிகள் சாப்பிட்டான். காட்டிலே மிருகங்களோடு வாழ்ந்தான். இயற்கையோடு ஒட்டி வாழ்ந்தான். எப்போது அவன் நிலம் என்ற ஒன்றைக் கண்டுபிடித்து உழவு செய்து உணவைப் பயிரிட ஆரம்பித்தானோ, அப்போதே அறியாமையிலிருந்து அறிவையும், அழிவையும் பெற்றான். இந்த அறிவையும், அறியாமையையும் வேறுபடுத்திக் காண்பிப்பது தான் ஆன்மிகம்."

**எண்ணங்களால் அழிவும் – வளர்ச்சியும்:**

"இயற்கையினால் ஏற்படும் காற்றழுத்தம் மேலே சென்று மேகங்களாக மாறி மழை பெய்து நன்மை கொடுக்கின்றது. அதே இயற்கைப் பொருள்கள் பூமியில் புதைந்து பூமிக்கு அடியில் அதிக அழுத்தத்தை உண்டாக்கும் போது நிலச்சரிவு, பூகம்பம் போன்ற தீமைகள் உண்டாகின்றன. அதுபோல மனிதனுடைய எண்ணங்கள் நல்லதாக வெளிப்படும்போது பலருக்கு நன்மை கொடுக்கிறது. அதே மனிதனின் எண்ணங்கள் அழுக்கு அடைந்து அழுத்தத்தைக் கொடுக்கிற போது தீய எண்ணங்களாக மாறி, அவனையே அழித்து விடுகிறது."

**மனித எண்ணங்களும் – இயற்கையும்:**

"மக்களுடைய எண்ணங்கட்கும் மனத்தில் உள்ள அழுக்கிற்கும் ஏற்றாற்போல பருவம் தவறி மழை பெய்கிறது."

**மிருகமும் – மனிதனும்:**

"ஆடு மாடுகளுக்கும் உள்ளம் உண்டு. அவை கிடைத்தவற்றைக் கொண்டு திருப்தி அடைகின்றன. மனிதனுக்குத் திருப்தி என்பது கிடையாது. அதனால் தான் கூச்சலும் அடிதடியும் ஏற்படுகின்றன."

**பருவ மழை:**

"தெய்வ பக்தியோடும் மனிதர்கள் ஒருவர்க்கொருவர்

பாசத்தோடும் இருந்தால் தான் பருவமழை தவறாது பெய்யும். மனிதன் மனத்தில் கர்வம் ஏறினால், மழைக்கும் கர்வம் ஏறுகிறது. புயலாக அடித்து அழிக்கிறது.''

**இயற்கையும் நீங்களும்:**

''உன்னால் இயற்கைக்குப் பலனில்லை. இயற்கையினால் உனக்குப் பலன் உண்டு.''

**உயிர்களின் தோற்றம்:**

''அழுக்கிலும் உயிர்கள் தோன்றும். அணுக்களிலும் உயிர்கள் தோன்றும். ஆனாலும் அவற்றிற்கு ஆன்மிகத்தினால் தான் சிறந்த வளர்ச்சி ஏற்படும்.''

பெண் உயிர்தான் முதல் உற்பத்தி!''

**எதிர்காலத்தில்:**

''இனிவரும் காவங்களில் எல்லாம் பொருள் கிடைக்கும். பாதுகாப்பும் அமைதியும் கிடைக்காது. காக்கைக் கூட்டம், கழுகுக்கூட்டம், நரிக்கூட்டம் என ஊழல் கூட்டங்கள் அதிகமாகிவிட்டன. அதனால் அழிவுகள். வரக்காத்திருக்கின்றன.''

**கிரமம்: அக்கிரமம்:**

''மரம், செடி கொடிகளில் பசைத்தன்மை இருக்கிறது. விதைகளில் எண்ணெய்த் தன்மை இருக்கிறது. இலைகளில் சாறு கிடைக்கிறது.

இந்த இயற்கைத்தன்மைகள் இல்லையென்றால் உங்களுக்கு மழையில்லை. எல்லாவற்றுக்கும் ஆதாரமாகக் காற்று வீசுகிறது.

எல்லாம் கிரமமாக நடக்கிறது. கிரமத்துக்கு மாறாக நடப்பது எதுவோ அது அக்கிரமம்.

எல்லாம் கிரமமாக நடந்தால் சீராக இருக்கும். அக்கிரமம் அதிகமானால் இயற்கை சீறுகிறது.''

இயற்கையின் சீற்றத்தை உங்களால் மாற்ற முடியாது.''

**நல்லவனாக இருந்தால் மட்டுமே...**

''ஒருவன் நல்லவனாக இருந்தால் தான் பத்து பேரைத் திருத்த முடியும்.''

**காற்றுக்கும் ஓசை:**

''காற்றுக்கும் ஓசை உண்டு.''



**சுழல்களிலிருந்து தப்பிக்க...**

''பசிக்கிறது என்று புசிக்கிறாய். நீ பார்த்துக் கொண்டிருக்கிறபோதே உனக்கு வயது கூடுகிறது. நோய் வருகிறது. உலகம் சுற்றுவது போல உன் வாழ்க்கையும் சுழல்கிறது. உன் உயிரும் சுழல்கிறது. இந்தச் சுழற்சியிலிருந்து விடுபட நினைப்பவன் அழகுக்கும் காமத்துக்கும் முதலிடம் கொடுக்கக் கூடாது.''

**இன்றைய அழிவுகள்:**

''இன்றைய மக்களிடம் நல்ல எண்ணங்கள் பெருகுவதில்லை. பஞ்சமா பாதகங்களும், பாவங்களும் தான் பெருகி வருகின்றன. அதனால் தான் பஞ்சபூதங்கள் அழிவை ஏற்படுத்தி வருகின்றன.

இதுதான் நீதி! இதுதான் தருமம்! என்று சொல்ல முடிவதில்லை. சுகாதாரமும் இல்லை. சோம்பேறித்தனம் அதிகமாகிவிட்டதால் இனி நோய்களும் அதிகரிக்கும்.''

**உழைப்பும்; நேர்மையும்:**

''ஒரு ரூபாய்க்கு ஆசைப்பட்டால் நூறு ரூபாய்க்குச் செலவு வரும். நேர்மையாக உழைத்துக் கிடைக்கிற பணம் தான் உனக்கு மிஞ்சும்.''

**பாமர மக்கள்:**

''பாமர மக்கள் தான் பராசக்தி மக்கள்! அவர்களே அன்பு மக்கள்!

பெற்ற தாய் தந்தையரைப் பிள்ளைகள் மதிப்பதில்லை. ஆனால் மற்ற தாய் தந்தையரை மதிப்பார்கள்.

பெற்றதை நினைத்துப் பார்த்தால் பிரச்சனை இல்லை.''

**உயிர் ஊட்டுவது முடியாது...**

''எல்லா உருவத்தையும் படைத்துவிடலாம். உயிர் ஊட்டுவது கடினம். பசைப் பொருளைக் கூடச் சூடு ஏற்றினால் தான் ஒட்ட முடியும். எல்லாப் பொருள்களுக்கும் உயிர் ஊட்டப்பட வேண்டும்.''

**எலும்புக்கூடும்; உருவ அமைப்பும்:**

''இலையில் இருக்கிற நரம்பு எவ்வளவு சிறியதாக இருந்தாலும் நீரை உறிஞ்சுகிற தன்மை அதற்கு உண்டு. அதுபோல எலும்பு, ரத்தக்குழாய்களால் தான் உயிர் இயங்குகிறது. எலும்புக்கூடுதான் உருவத்தைக் கொடுக்கிறது.

சிறிய, பெரிய நடுத்தர உடம்பானாலும் எலும்புக்கூடு தான் அமைப்பைத் தருகிறது.''

**மனித இனத்தின் முழுவளர்ச்சிக்குத் தடைகள்: தேவைக்கு அப்பால்...**

''ஒரு கரு வளர்ந்து உருவாகி, அந்த உரு ஒரு குழந்தையாக மாறுகிறது.

அது பெண்ணாகி, மகளாகி, மனைவியாகி, தாயாகி, பாட்டியாகி மனித எல்லையை அடைகிறது. இன்றேல் மகனாகி, கணவனாகி, தந்தையாகி, பாட்டனாகி மனித எல்லையை அடைகிறது.

இயற்கையில் ஒரு விதை, செடி, கொடி, மரம் என வளர்ந்து முழு வளர்ச்சி அடைகிறது.

மானிட உலகத்தில் ஆடல், பாடல், நாடகம், பொழுதுபோக்கு, ஆடம்பரம், ஆடை அலங்காரம் என்றெல்லாம் தேவைக்குமேல் அதிகமாகும்போது வேதனை உண்டாகிறது. அதனால் மனித வாழ்வு முழுவளர்ச்சி அடையாமல் போகிறது.''

**வாழ்வின் அமைதி:**

''கடலைச்சுற்றி அலைகளினால் சலசலப்பு ஏற்பட்டபடி இருக்கிறது. நடுக்கடல் அமைதியாக இருக்கிறது. வாழ்க்கையில் சுற்றியுள்ள ஆசாபாசங்களை விட்டால் அமைதி கிடைக்கும்.''

**1995 ஆண்டு வந்த சூரிய கிரகணம் பற்றி...**

''தீபாவளியன்று சூரிய கிரகணம் வரவிருக்கிறது. அது உலகத்திற்குக் கேடு விளைவிக்கும். ஆடிப்பூரத்தன்று கஞ்சி ஊற்றி, பாலபிடேகம் செய்து, அந்தப் பாலில் சிறிது எடுத்துச் சென்று, உங்கள் வீட்டில் தெளித்துச் சுற்றுப்புறமும் தெளிக்க வேண்டும். அதனால் அழிவுகள் குறையும்.''

**சூரியன்! சந்திரன்:**

''சூரியனும், சந்திரனும், தினமும் உதித்தாலும் மறைந்தாலும் ஆண் தன்மை பெற்றிருப்பதால் அவற்றை யாரும் மதிப்பதில்லை. ஆனால் பூமிதேவி, தண்ணீர் ஆகியவை பெண்தன்மை பெற்றிருப்பதால் எல்லோரும் மதிக்கிறார்கள்.''

**எப்படி அமையவேண்டும்?**

''உயிர் ஆன்ம உயிராகவும், குணம் ஆன்ம குணமாகவும்,



அழகு ஆன்ம அழகாகவும், அறிவு ஆன்மிக அறிவாகவும் அமைந்தால் எல்லாமே சிறப்பாக அமையும். ஆனால் குணம் ஆணவ குணமாக இருக்கிறது. அழகு அநாகரிக அழகாக இருக்கிறது. அறிவு விஞ்ஞான அறிவாக இருக்கிறது. இவ்வாறு அமைந்தால் அழிவுதான் உண்டாகும்.''

**அடக்கமும் – அகங்காரமும்:**

''மற்றவர்களுக்குப் பலன் கொடுக்கிற தாவர இனமெல்லாம தலை குனிந்தபடிக் கிடக்கின்றன. மற்றவற்றால் பயனடைகிற மனிதனோ தலை நிமிர்ந்தபடி நடக்கின்றான்.''

**பனிநீரும்: மழை நீரும்**

''மலையிலிருக்கும் பனிநீரைப் பயிருக்குப் பாய்ச்ச முடியாது. இயற்கையாகப் பெய்யும் மழை நீரைத் தான் பயிருக்குப் பாய்ச்ச முடியும்.

கடல்நீர் சூரிய உஷ்ணத்தால் ஆவியாகி, மீண்டும் மழையாகப் பெய்கிறது.

தண்ணீரை நன்கு குளிர வைத்தால் அது பனிக்கட்டியாக மாறிவிடுகிறது.

ஓர் உருவத்தை மற்றொரு உருவமாக மாற்றுவதும். மனிதனுக்கு உருவம் கொடுத்துப் பேச வைப்பதும் நான் தான். வெறித்தன்மை கொடுப்பதும் நான் தான்!''

**எதுவும் பயனற்றது அன்று:**

''பயிர் இருந்தால் களை இருக்கும். செடி இருந்தால் முள் இருக்கும். எந்தப் பொருளையும் உபயோகமற்றது என்று ஒதுக்கிவிட முடியாது.

உயிர்களுக்கு எந்தெந்த ரூபத்தில் உதவி செய்ய வேண்டுமோ அந்தந்த ரூபத்தில் உதவி செய்வேன்.

ஒதுக்கப்பட்ட பொருளானாலும் அதனாலும் ஒரு பயன் உண்டு.''

**நீண்ட நாள் வாழ...**

''ஆசை அலைகளில் அகப்படாமல் ஒழுக்கமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்தால் மனிதன் நீண்ட நாள் வாழலாம்.''

**மனித இனம் சிறந்த இனமா?**

''உயிரினங்களில் மிருக இனம் மனித இனத்திற்குப் பயன்படுகிறது.

தாவர இனம் மனித இனத்திற்குப் பயன்படுகிறது.

ஆனால் மனித இனம் மட்டும் பிற உயிரினங்களுக்குப் பயன்படுவது இல்லை.

மாமரம் சுவையான மாம்பழம் கொடுக்கிறது. தான் அனுபவிப்பது இல்லை.

அதுபோல மனிதன் பிற உயிரினங்களுக்குப் பயன்பட்டு வாழவேண்டும். அப்போது தான் மனிதனுக்குப் பெருமை.

**மனித சக்தி! தெய்வ சக்தி!**

“மிருகங்களைக் காக்க மனித சக்தி போதுமானது. ஆனால் மனித இனத்தைக் காக்க தெய்வசக்தி அவசியம்.

**இயற்கை! செயற்கை!!**

“இயற்கைத் தண்ணீர் தான் நல்லது. செயற்கைத் தண்ணீரால் அழிவுதான் ஏற்படும்.

ஆன்மிகத்தை விட்டால் உங்களுக்கு வேறு வழியே இல்லை. சின்னம் பின்னமாகி விடும். பின்னர் எதற்கும் பயன்படாது.

பணத்திற்கும், பதவிகளுக்கும், விஞ்ஞானத்திற்கும் இனி மதிப்பில்லை. இனி ஆன்மிகத்திற்குத் தான் மதிப்பு.”

**மனிதரைத் திருத்த:**

“மனித உருவத்தில் இருந்துகொண்டு தான் மனிதனைத் திருத்த முடியும்.

மிருக உருவத்தில் இருந்துகொண்டு தான் மிருகத்தைத் திருத்த முடியும்.

**இயற்கை – செயற்கை:**

“இயற்கையுடன் இணைந்து வாழும்போது உங்களுக்குத் தொல்லைகள் இல்லை. செயற்கையைச் சேர்த்துக் கொண்டு வாழத் தொடங்கும் போது தான் தொல்லைகளும் தொடங்குகின்றன.

பழச்சாற்றில் இனிப்பு உண்டு. கிடைக்கிற பழத்தை அப்படியே சாப்பிட்டால் பலன் உண்டு. எந்திரங்கள் மூலம் சாறு தயாரித்து உற்பத்தி செய்து பருகும்போது தான் ஆபத்து உண்டாகிறது.

தொழிற்சாலைகள் பெருகப் பெருகக் காற்று மண்டலம் தூய்மை இழக்கும். காலப்போக்கில் சுவாசிப்பதற்குச் சுத்தமான காற்றே உங்களுக்குக் கிடைக்காமற் போகும்.



தொழிற்சாலைக் கழிவுப் பொருள்களால் தொல்லைகளே உண்டாகும்.”

**காட்டுவாசி: நாட்டுவாசி:**

“காட்டுவாசி நாட்டுவாசியாக மாறிவருகிறான். நாட்டுவாசி காட்டு வாசியாக மாறி வருகிறான்.

இயற்கைக்கு எப்போதும் முக்கியத்துவம் உண்டு.

என்ன தான் அடுக்குமாடியில் வாழ்ந்தாலும் இயற்கையோடு ஒட்டித்தான் வாழ்ந்தாக வேண்டும்.”

**ஆசைகளால் அழிவு:**

“சாதாரணமான நிலையில் கடல் அலைகள் கரையைக் கடப்பதில்லை. பலமான புயற்காற்று வீசுகிற சமயங்களில் அந்த அலைகள் கரையையும் மீறிக்கொண்டு வந்து அழிவை உண்டாக்கும். அதுபோல மனிதனிடம் ஆசை அலைகள் அதிகமாகும் போது தான் அழிவுகள் உண்டாகின்றன.”

**உழைப்பு அவசியம்:**

“உழைப்பால் தான உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மை. அத்துடன் அந்த உழைப்பில் உண்மை உணர்வும் இருக்க வேண்டும்.”

**உடல் அழிவு: இயற்கை அழிவு:**

“கோபம் வரும்போது அமைதியாக இருக்க வேண்டும். நரம்புத் தளர்ச்சி, உஷ்ணம் என்ற அனைத்தும் கோபத்தால் தான் உண்டாகின்றன.

பல்வேறு எண்ணங்களின் அழுத்தம் தான் இரத்தக் கொதிப்பிற்குக் காரணம்.

அதிகமான ஆசை, மிதமிஞ்சிய பொறாமை, அதிகமான மன அழுக்குகள் இவற்றால் மனிதனுக்கு அழிவுகளே நேரும்.

உள்ளத்தின் அழுத்தம் எப்படி இரத்தக் கொதிப்பிற்கு வழி வகுக்கிறதோ, அதுபோல பஞ்சபூதங்களின் அழுத்தத்தால் தான் புயல், பூகம்பம், வெள்ளம் அனைத்தும் ஏற்படுகின்றன.

அடைபட்ட காற்று தான் புயலாகவும், பூகம்பமாகவும், மாறுகிறது. ஆக்க சக்தி தான் அழிவு சக்தியாக மாறுகிறது.”

**நோய் நொடிகளும்: மரணங்களும்:**

“அந்தக் காலத்தில் இயற்கை உரத்தைப் போட்டுப் பயிர் வளர்த்தார்கள். இந்தக் காலத்தில் செயற்கை உரம் வைத்துப் பயிர் வளர்க்கிறார்கள். அதன் காரணமாக எந்த மாத்திரை கொடுத்தாலும் நோய்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

மனிதன் அமைதியாக வாழ்ந்த காலத்தில் இறப்பு விகிதம் குறைவாக இருந்தது.”

**எண்ணங்களுக்கு ஏற்றபடி:**

“பூமியின் தன்மைக்கு ஏற்றாற்போலவே, உணவுப் பொருள் விளையும்.

உன் எண்ணங்களுக்கு ஏற்றாற்போலவே உன் வாழ்க்கையும் அமையும்.

இனிப்பும், கசப்பும் மாறிமாறி வரும். எதிர்ப்பும் உண்டு.

ஐம்புலன்களை அடக்க முயலவேண்டும்.

எந்தத் துறையானாலும் ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும்.”

**பசிவெறி கொலையைத் தூண்டும்:**

“உணவு கிடைக்கவில்லை என்றால் பசி வரும். பசி வந்தால் கொலையும் செய்யச்சொல்லும்.

மிருகத்தை ஆட்டிப்படைக்கிற மனிதன், அதனுடைய பசியையும் தீர்க்க வேண்டியுள்ளது.

தன்னைச் சுற்றியுள்ளவர் பசியைத் தணிக்க வேண்டியது மனிதனுடைய கடமை!”

**இளைஞர்களுக்கு ஆன்மிகம் ஏன்?**

“16 வயதிலிருந்து 40 வயது வரை வம்புதும்பு தான் வளரும். இந்த வயதில் தான் பக்குவமாக வளரவேண்டும்.”

**மனிதனிடம் உள்ள மாறாத குணங்கள்:**

“மனிதனுக்குப் பசு குணம், எருமைக்குணம், பறவைக்குணம், மிருககுணம், காக்கைக்குணம் எனக் குணங்கள் உண்டு. இவை மாறாது.

“மனிதனாகப் பிறப்பது அரிது” என்று சொல்லி வந்தார்கள். இந்தக் காலத்தில் மனிதனாகப் பிறப்பதே பாவம் ஆகும்.

மனிதனுக்கு ஆன்ம அமைதி தேவை.”



**தென்னை போல மனிதன் பயன்படவேண்டும்:**

“தென்னையின் ஓலை குருத்தோலையாக இருக்கும் போது குழந்தைகளுக்குக் “கிலுகிலுப்பை” செய்யப்பயன்படுகிறது. முற்றியவுடன் வீட்டுக்கு ஓலை பின்னுவதற்குப் பயன்படுகிறது. அதன் ஈர்க்குச்சி துடைப்பமாகப் பயன்படுகிறது. அதன் தேங்காய் எண்ணெயாகப் பயன்படுகிறது.

அந்தத் தென்னை போல மனிதன் பிறந்து வளர்ந்து ஆன்மிகத்தில் ஈடுபட்டுப் பலருக்கும் பயன்பட வாழவேண்டும்.”

**வளர்ப்பு மிருகங்களாலும் அழிவு:**

“வருமானத்திற்காக வளர்க்கும் விலங்குகளாலும் ஒருவனுக்கு அழிவுண்டு.”

**இயற்கை:**

“மரம், செடி கொடிகளுக்கும் நோய் வருகிறது. எனினும் அவை இயற்கையை வைத்தே தீர்த்துக் கொள்கின்றன.

இயற்கையை ஒட்டி வாழாவிட்டால், இயற்கைச் சீற்றத்தினால் அழிவு உண்டாகும்.

மறுபடியும் மண்பாண்டங்களைப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை வரும்.”

**இயற்கை சீறுவது ஏன்:**

“இயற்கை தன் கடமையை அமைதியாகச் செய்து வருகிறது. ஆன்மாவை அடக்கிப் பொறுமையாய் இருக்கும் வரையில் அது ஒழுங்காக நடக்கிறது. எல்லை மீறும்போது அதுவும் சீறுகிறது.

கடல், அலை, காற்று, பேச்சு, இறை - இவை அனைத்துக்குமே எல்லை என ஒன்று உண்டு. எல்லை மீறும் போது இயற்கையும் சீறுகிறது.”

**அக்கிரமங்கள் பெருகினால் அழிவு தான் முடிவு:**

“இன்றைய உலகில் பொய்யும் பித்தலாட்டமும் அதிகரித்து வருகின்றன. எங்கும் போதை என்ற காற்று தான் வீசுகின்றது. சிறியவன் பெரியவன் என்ற வேறுபாடு போய்விட்டது. உலகம் எவ்வளவு தாங்குமோ அவ்வளவுதான் தாங்கும். அக்கிரமங்கள் அதிகமானால் அழிவு தான் முடிவு!

கல்வித்துறை, கோயில், வீடு! - அனைத்திலும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்."

**மனிதர்களும் – மிருகங்களும்:**

"மனிதர்களிடம் பழகுகிற மிருகங்களுக்கும் பாச உணர்ச்சியுண்டு. பறக்கும் பருவம் வருகிற வரை தாய்ப்பறவை குஞ்சுகளைப் பாசத்தோடு தன்னுடன் வைத்துக் கொள்கிறது. ஆனால் மனிதர்களோ பால் மறப்பதற்குள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி விடுகின்றனர். அந்தக் குழந்தைகளும் பாசமில்லாமலே வளர்கின்றன.

மனிதர்களிடையே பாச உணர்ச்சி அற்றுப்போய் விட்டதால், ஒரு ரூபாய் செலவழிக்க வேண்டிய சூழ்நிலையில் ஓராயிரம் ரூபாய் செலவழிக்க வேண்டி வருகிறது.

இனி நிலம், நிலையில்லாமலும் வீடு பாசமில்லாமலும் போய்விடும்."

**பூச்சி மருந்தால் தீமை:**

"பயிர் செழிக்க வேண்டிப் பூச்சி மருந்து தெளிக்கிறார்கள். அந்தப் பூச்சி மருந்தின் சத்தும் மனித உடம்பிற்குள் நுழைந்து நோய் நொடிக்கு ஆட்படுகிறது."

**பூகம்பம் ஏற்படும்:**

"பூமியைத் தோண்டிப் பள்ளமாக்கிக் கொண்டு வருகிறார்கள். ஓரளவிற்குத் தான் பூமியும் தாங்கும். இப்படிப் பள்ளமாக்கிக் கொண்டே போனால் காற்றழுத்தம் காரணமாகப் பூகம்பங்கள் ஏற்படும்."

**செயற்கை மழை:**

"செயற்கை மழையை உண்டாக்குவதால் செலவு தான் அதிகமாகும். வெப்பமும் அதிகமாகும். இறப்பும் அதிகமாகும்.

இயற்கைக்கு மாறாக விஞ்ஞானம் செயல்பட்டால் வீண் விரயங்கள் தான் ஏற்படும். இயற்கை உங்களைச் சும்மா விடாது. எந்த ரூபத்திலும் குழப்பமே ஏற்படும். பஞ்சபூதங்களால் அழிவும் ஏற்படும்."

**தாவரங்கட்கும் நுட்ப அறிவு:**

"மரம், செடி, கொடிகளுக்கும் கண் உண்டு; உணர்ச்சியுண்டு. செடியிலும் தொட்டால் சுருங்கி என்ற செடி உண்டு. இன்றைய மனிதனுக்குத் தான் எதிலும் சொரணை இல்லாமல் போய்விட்டது."



**இயற்கை மாசுபட்டு விட்டது:**

"இயற்கைச் சூழலில் மாசு படிந்துவிட்டது. குடிக்கிற தண்ணீரைக் கூட இனி ஐந்து முறை சுடவைத்து வடிகட்டிக் குடிக்க வேண்டிய காலம் வரும்."

**மனிதனும் – மிருகமும்:**

"பசுவும் பெண்ணும் ஒன்று என்பதற்காகவே காமதேனுவைத் தெய்வமாகக் கொண்டாடுகிறோம். மிருகம் வேஷம் போட முடியாது. மனிதன் தான் வேஷம் போடுகிறவன்.

மிருகமெல்லாம் முன்னேறி மனித நிலைக்கு வருகின்றன. மனிதனோ முன்னேறிப் போகாமல் மிருகமாக மாறி வருகிறான்."

**கானல் நீர் வாழ்க்கை:**

"இன்றைய மனிதகுலம் வாழும் வாழ்க்கை கானல்நீர் வாழ்க்கை. இந்த வாழ்க்கை எடுபடாது. நல்ல உள்ளம் கொண்டவன் வாழ்க்கையே எடுபடும்."

**நாளைய உலகம்:**

"நாளைய உலகம் ஆன்மிக உலகமாக மாறும். என்றாலும் இடையில் கிரகங்களால் தொல்லைகள் ஏற்படவே செய்யும். நில அதிர்வு, புயல் உண்டு. அரசியலில் சட்டம். அமைதி இருக்காது."

**நாடு காடாவது ஏன்:**

"தாய்ப்பால் கொடுத்துக் குழந்தைகளை வளர்க்க வேண்டும். அப்படி வளரும் குழந்தைகள் பந்தபாசத்தோடு இருக்கும். அந்தப் பழக்கம் குறைந்து போயிற்று. அதனால் நாடு காடாக மாறிவருகிறது."

**பணம் அமைதி தராது:**

"ஒரு விளக்கை ஏற்றி வைத்த பிறகு அதனை அணையாமல் பாதுகாப்பதிலேயே கவனம் இருக்கிறது. அதுபோலப் பொருளைச் சம்பாதித்த பிறகு அதனைப் பாதுகாப்பதிலேயே கவனம் இருக்கிறது.

பணம் சேரச்சேர அமைதியும் அகன்று போகும்."

**படித்தவன் – படிக்காதவன்:**

"படித்தவனுக்குத்தான் வேதனைகள் அதிகம். படிக்காதவனுக்கு அவ்வளவு வேதனைகள் இல்லை. படிப்பால் மட்டும் வேதனைகள் தீர்ந்து விடாது."

**பாவம் செய்யத் தூண்டுவது எது?**

"கொழுப்பு சக்தி அதிகமாக இருப்பதால் தான் பாவம் செய்யத் தூண்டுகிறது. அவரவரும் தம் உடலுக்குத் தக்க வேலை செய்தால் பாவம் அதிகம் செய்ய முடியாது."

**மனிதன் வீணடித்து விடுவான்:**

"சூரியன், சந்திரன், நட்சத்திரம், வானம், பூமி, மழை, உப்பு, கடல் என்கிற இவை அனைத்தும் அருகில் இருந்தால் மனித இனம் இவற்றை வீணடிக்கும். இவற்றையெல்லாம ஒரு சுழற்சியில் வைத்திருப்பதால் தான் மனிதன் தன் வாழ்க்கைக்குத் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறான்.

கடல்நீர் உப்பில்லாமல் சுத்தமாக இருந்தால் மனிதன் அதையும் பயன்படுத்தி அழித்து விடுவான். அடுத்து குடிப்பதற்கும் தண்ணீர் கிடைக்காது. அதனால் தான் கடல்நீர் மேகமாக மாறி மறுபடியும் மழையாகி உங்களுக்கு நல்ல நீராகப் பயன்படுமாறு வைக்கிறேன்."

**பஞ்சபூதங்களை வணங்கு:**

"இறைக்கிற கிணறு தான் சுரக்கும். அப்படிச் சுரப்பதற்கும் இயற்கை வேண்டும். அதற்குத் தான் ஐம்பூதங்களை வணங்க வேண்டும்.

இயற்கையினாலும் ஆன்மிகத்தினாலும் தான் வாழ்க்கையில் முன்னேற வேண்டும்."

**குடும்ப ஒற்றுமை: மனித ஒற்றுமை:**

"242 வகை நரம்புகள் அடங்கியுள்ள நரம்பு மண்டலத்தில் ஒரு நரம்பு பாதிக்கப்பட்டலும் நரம்பு மண்டலமே பாதிக்கப்படுகிறது. அதுபோலவே குடும்பத்தில் ஒருவன் பாதிக்கப்பட்டாலும் நாட்டில் ஒரு பகுதி பாதிக்கப்பட்டாலும் குடும்பமும் நாடும் பாதிப்பிற்கு ஆளாகின்றன.

வெட்டப்பட்ட மரம், செடிகொடிகள் மீண்டும் தளிர்த்து வாழத் தொடங்கிவிடுகின்றன. மனித இனத்தில் அந்த நிலை இல்லை. எனவே குடும்பத்திலும் ஒற்றுமை தேவை. நாட்டிலும் ஒற்றுமை தேவை."

**இயற்கையும்– மனிதனும்:**

"படிப்பு வாசனையே இல்லாத தாவரங்கள், மிருகங்களிடம் இருக்கிற பண்பாடு கூட, இன்றைய படித்த மனிதர்களிடம் இல்லை.



தாவரங்களும், மிருகங்களும் மனித குலத்திற்குப் பல வகையில் உதவுகின்றன. மனிதனோ தன்னைப் போன்ற மனிதன் துன்பம் அடைவதைக் கண்டு உதவுவது இல்லை.

தன் தெருவில் உள்ள ஒரு வீடு பற்றி எரிகிறபோது எனக்கென்ன என்று இவன் உட்கார்ந்திருக்கிறான். காற்றின் வேகம் அதிகமானால் தன் வீட்டிற்கும் தீ பரவும் என்று எண்ணாமல் இருக்கிறான். ஓடிப்போய் உதவி செய்ய எண்ணமாட்டேன் என்கிறான்."

**காட்டுவிலங்கும் – வீட்டு விலங்கும்:**

"காட்டில் உள்ள மிருகங்களுக்கும், மனிதன் வளர்க்கிற மிருகங்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. மனிதனின் குணம் அவன் வளர்க்கிற மிருகங்களுக்கும் படிகிறது."

**அனுபவிக்க முடியாது:**

"பதவி வெறி, கொலை வெறி, இரத்த வெறி படிந்திருக்கும் உனது வீடோ, உனது நிலமோ உனக்குச் சொந்தமாகவே இருந்தாலும் அதை நீ அனுபவிக்க முடியாது."

**உலகில் இவ்வளவு ஏற்றத்தாழ்வுகள் ஏன்?**

"நல்லதையே எண்ணவேண்டும். நல்லதையே சொல்ல வேண்டும். நல்லதையே செய்ய வேண்டும். அப்படி எவனும் வாழ்வதில்லை. உலகில் உள்ள ஏற்றத் தாழ்வுகளுக்கு இதுவே காரணம்!"

**பராசக்தி என்ற தாய்ப்பாசத்தால் விளைபவை:**

"செடிகொடிகள் அந்தந்த பருவத்திற்கு ஏற்றவாறு முளைக்கின்றன; வளர்கின்றன; பூக்கின்றன; காய்க்கின்றன; கனிகின்றன.

பூத்துக் காய்த்துக் கனிந்து தன் இனத்தைப் பெருக்கி விட்டு மடிந்து போய்விடுகின்றன.

மனித இனமும் பிறக்கிறது; வளர்கிறது; வாழ்கிறது. இனத்தைப் பெருக்கிவிட்டு மடிந்துவிடுகிறது.

மனித வளர்ச்சிக்குப் பாசமும் அன்பும் தேவைப்படுகிறது.

பருவங்களின் தோற்றமும் பாச உணர்ச்சியின் தோற்றமும் பராசக்தி என்ற தாய்ப்பாசத்தால் விளைபவை."

**நல்லதும் கெட்டதும் கலந்தது வாழ்க்கை:**

"பாசிட்டிவ் (Positive), நெகட்டிவ் (Negative) என்ற இரண்டும் சேர்ந்தால் தான் மின்சாரம் பாய்கிறது.

அதுபோல நல்லதும் கெட்டதும் சேர்ந்திருப்பது தான் வாழ்க்கை."

**ஏன் பிறந்தாய்? என்பது உனக்கே தெரியாது:**

"உன் இரத்தத்தில் உள்ள தண்ணீர் உனக்குப் பயன்படுகிறது. வெளியில் உனக்கு அது தெரிவதில்லை. அதுபோல நீ ஏன் பிறந்தாய் என்று உனக்கே தெரியாது."

**உலகப் பாதுகாப்பு:**

"நல்லதைப் பார்ப்பதற்கே கண் கொடுக்கப் பட்டிருக்கிறது.

நல்லதைக் கேட்பதற்கே காது கொடுக்கப்பட்டிருக்கிறது.

உழைப்பதற்கும், தருமம் செய்வதற்குமே கைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

உயிர்கள் சுவாசிக்கவே காற்று மண்டலம் கொடுக்கப்பட்டுள்ளது.

உணவு உற்பத்திக்காகப் பூமியையும் தண்ணீருக்காகக் கடலையும் படைத்திருக்கிறேன்.

**அரசியலை அரசியலால்...**

"கண்ணாடியைக் கண்ணாடியால் அறுப்பது போல, வைரத்தை வைரத்தாலேயே அறுப்பது போல, உள்ளத்தை உள்ளத்தாலேயே அறுப்பது போல, அரசியலை அரசியலால் தான் அறுக்க வேண்டும்."

**மனித இனம் நம்பிக்கைக்குரிய இனம் அல்ல:**

"தெய்வங்கட்கு விலங்குகளையும், பறவைகளையும், வாகனங்களாகவும் ஆயுதங்களாகவும் வைத்திருக்கிறார்கள். மனிதர்களை வைத்துக் கொள்வதில்லை. ஏன் தெரியுமா? மனித இனம் நம்ப முடியாத இனம்!"

**நல்ல எண்ணங்கள்:**

"உங்கள் உள்ளத்தில் நல்ல எண்ணங்களே தோன்ற வேண்டும். நீங்கள் பேசுகிற வார்த்தைகளிலும் நல்லுணர்வே வெளிப்படவேண்டும். அத்துடன் உங்கள் ஆன்மாவிலும் நல்லெண்ணங்கள் புகுதல் வேண்டும்."



**நல்லமைதிக்கு வழி:**

"உழைப்பால் உயர்ந்தால் தான் ஒருவனுக்கு வாழ்க்கையில் நல்லமைதி கிட்டும். குறுக்கு வழியில் உயர முயல்பவனுக்கு என்றும் நல்லமைதி கிடைக்காது."

**வேப்பிலைக்கு முக்கியத்துவம்:**

"வேப்பிலைக்கு எப்போதும் முக்கியத்துவம் உண்டு. வில்வ இலைக்கு முக்கியத்துவம் உண்டு.

ஆல இலை, அரச இலைகள் உண்பதற்குப் பயன்படாது.

வேப்பிலை பழுக்கும் நிலையில் தான் புழு பூச்சிகள் வரும்.

ஆன்மிகத்தில் பழுத்துவிட்டால் எளிதாக உதிர்ந்து போகலாம். பழுத்தது போல நடித்தால் புழுபூச்சிகளுக்கு இரையாக வேண்டியது தான்."

**இயற்கைதான் பலன் தருகிறது:**

"இயற்கையினால் தான் பலன் உண்டு. ஆன்மா என்பது ஆழமான கிணறு போன்றது. அதில் பொய்யும் பித்தலாட்டமும் இருக்கக் கூடாது.

ஆறும் இயற்கை தான்! கிணறும் இயற்கை தான். ஆன்மாவை ஆழமான கிணறு என்று கொள்ள வேண்டும்.

ஆழமான ஒரு கிணற்றிலிருந்து வீடு கட்டவோ, பயிர் வைக்கவோ தண்ணீர் எடுக்கலாம்.

குளத்திலிருந்தும் தண்ணீர் எடுக்கலாம்; மின்சாரத்தின் மூலமும் தண்ணீர் எடுக்கலாம்.

உனக்கு ஆழமான பக்தியிருந்ததால் எந்தக் காரியத்தையும் எந்த வடிவிலும் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

இயற்கை என்ற அன்னையின் அருளை, உன் ஆழமான பக்தியின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்."

**உயிர்களின் தோற்றம்:**

"வெள்ளை உயிரணுக்கள் சேர்ந்து கரு உண்டாவது போல, பஞ்சபூதங்கள் வெடித்துச் சிதறி உயிர் அணுக்கள் உண்டாகிப்பல உயிரினங்கள் உண்டாகின்றன."

**பொருளாசை – சண்டைகள்:**

“ஒரு பொருள் யாருக்குக் கிட்டும்? யாரைக் கடிக்கும் என்பதெல்லாம் தெரியாது.

அருள், பொருள், ஆன்மா, அமைதி இவற்றை நான் தருகிறேன்.

மனிதன் சில நேரங்களில் தன்னை மறந்துவிடுகிறான். ஆத்திரத்தில் வெட்டுவிழுகிறது. பூதப்பொருள்கள் அலைமோதுகிற போது தடுப்பதற்கு ஆன்மா தேவை! அம்மா தேவை!”

**எல்லாம் கலந்தது வாழ்க்கை:**

“ஒரு நூலைத் தறியிலிட்டு இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் இழுத்து அடிக்கும் போது தான் அது புடவையாகிறது.

அதுபோல, மனம், பணம், நோய், நொடி ஆகியவை எல்லாம் கலந்து வரும்போது தான் அது வாழ்க்கையாகிறது.”

**மனித அமைப்பு:**

“மனிதனுக்கு உறுப்புகள் எல்லாம் ஒன்று போலவே அமைந்துள்ளன; ஆனால் உள்ளம், உருவம், நோய் ஆகியன வேறுவேறாகவே இருக்கின்றன.”

**உயிர் உன்னை ஏமாற்றிவிடும்:**

“உன்னிடம் பசை இருந்தால்தான் பத்துப்பேர் உன்னோடு சேர்வார்கள்.

உருவம் என்ற ஒன்று இருந்தால் அதில் தூசு படியவே செய்யும்.

உள்ளம் என்ற ஒன்று இருந்தால் அதில் அழுக்கு படியவே செய்யும்.

முகம் பார்க்கும் கண்ணாடியை அடிக்கடி துடைக்க வேண்டியிருக்கிறது. அப்படி அடிக்கடி துடைப்பதால், பாதரசமும் போய்க் கொண்டிருக்கிறது.

உயிர் என்ற ஒன்று இருந்தால் தான் பந்தம், பாசம், பதவி என்ற ஆசைகள் இருக்கும்.

இந்த ஆசைகள் காரணமாக நீ பலபேரை ஏமாற்றினால் உன் உயிர் உன்னை ஏமாற்றிவிட்டுப் போய்விடும்.”



**பழைய வாழ்க்கை முறை:**

“எதிர்காலத்தில் புதுப்புது நோய்கள் வரும். பழைய சோறு! பழைய வாழ்க்கையே சிறந்தது. இரசாயனம் தேவையில்லை. கஷாயமே சாப்பிடவேண்டும்.”

**இயற்கையிலேயே தெய்வங்கள்:**

“ஒலி அலைகள் பலவிதமான கருவிகளிலே புகும்போது இசை உருவாகிறது. அதுபோல இயற்கையில் தான் பல தெய்வங்கள் இருக்கின்றன.”

**உன் உள்ளத்து அலை:**

“காற்றலை கொண்டு இது எந்த ஓசை என்று தெரிந்து கொள்ளலாம். அதுபோல உன் உள்ளத்து அலையைக் கொண்டு நீ யார் என்று தெரிந்து கொள்ளலாம்.”

**ஆன்ம சக்தி:**

“சக்தி ஒரு பொருளுக்கு உருவம் அளிக்கும் தன்மை படைத்தது. ஆன்மிக சக்தியைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆன்மா தான் சக்தியாகிறது.”

**ஓர் அறிவு உயிருக்கும் திறமை உண்டு:**

“மிருகங்களுக்கும் குளிப்பாட்டி மனிதர்களைப் போலவே ஆடை அலங்காரம் செய்கிறார்கள்.

உயிர்களுக்கு ஓர் அறிவு, ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு என்று பிரித்து வைத்தது நீங்கள் தான்

ஆறறிவு பெற்றதாகச் சொல்லப்படுகின்ற மனிதர்களைப் போல ஓர் அறிவு உயிருக்கும் திறமை உண்டு.”

**மிருகத்தின் ஆயுள் – மனிதனின் ஆயுள்:**

“மிருகத்தின் ஆயுளை நிர்ணயிக்கலம். மனிதனின் ஆயுளை நிர்ணயிக்க முடியாது.”

**யாருக்குச் சந்தோஷம்?**

“பூமியில் விதை விழுவதால் விதைக்குச் சந்தோஷமா? பூமிக்குச் சந்தோஷமா? பயன் அடைபவனுக்குத்தான் சந்தோஷம்.”

## அழகும் – பாரம்பரிய குணமும்:

“மனிதன் தன்னுடைய அழகு நிலையை மாற்றிக் கொள்ளலாம். ஆனாலும் பாரம்பரிய குணம் மாறுவதில்லை.”

## உள்ளமும் உருவமும்:

“ஒரு களிமண் உருண்டையை நான்கு பேரிடம் கொடுத்து உருவம் செய்யச் சொன்னால், அவனவன் மனநிலையைப் பொறுத்தே உருவங்களும் அமையும். அந்த உருவங்களை வைத்துத்தான் அவரவர்களை எடைபோடுவார்கள்.

## இயற்கை வளத்தின் மேன்மை:

“ஆண்டு வளம், மனித வளம், மழைவளம் ஆகிய அனைத்தும் இயற்கை வளத்தைப் பொறுத்துத்தான் அமைகின்றன.

இயற்கை வளத்தைப் பொறுத்துதான் ஆண்டுப்பலன் கிடைக்கும். இயற்கையைப் பொறுத்துதான் அழிவும் நிம்மதியும் மனிதனுக்குக் கிடைக்கிறது.

இயற்கையை வைத்துத்தான் பருவமழையும், நாட்களும் கணக்கிடப்படுகின்றன.”

## உலக வளர்ச்சி; உயிர் வளர்ச்சி:

“மிதமான மழை; மிதமான பூமி; மிதமான அமைதி இருந்தால்தான் வளர்ச்சி உண்டு”

## இயற்கைதான் அடிப்படை:

“உடல் வளர்ச்சிக்கும், உயிர் வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருப்பது பால். இது இயற்கையில் உனக்குக் கிடைப்பது. அந்த இயற்கையால்தான் பால் வெண்மை நிறமாக மாறுகிறது.

மனித உடம்பிலும் ரசாயன மாற்றம் ஏற்பட்டுப் பால் வெண்மையாக மாறுகிறது. மரத்திலும் பால் சுரக்கும் தன்மை உள்ளது.

எல்லா உயிர்களின் வளர்ச்சிக்கும் இயற்கைதான் அடிப்படை.”

## அழுக்கும் – அழிவும்:

“கறுப்பு என்றும் கறுப்பு தான்! அதனை வெள்ளையாக மாற்ற முடியாது. உள்ளத்திலும் கறுப்பு உண்டு. அந்தக் கறுப்புதான் உள்ளத்து அழுக்கு. உள்ளத்தில் அழுக்குச் சேர்ந்தால் உனக்கு அழிவுதான் வரும்.”



## பிற உயிரினங்களும் – மனித இனமும்:

“பறவையினங்களும், விலங்கினங்களும் தமக்கென அமைந்த வாழ்க்கை முறைப்படி வாழ்கின்றன. மனித இனம் மட்டும் அவ்வாறு வாழ்வதில்லை.”

காதினால் இதைத்தான் கேட்க வேண்டும்; கண்ணினால் இதைத்தான் பார்க்க வேண்டும்; மனத்தினால் இதைத்தான் நினைக்க வேண்டும்; வாயினால் இதைத்தான் பேச வேண்டும் என்ற கட்டுப்பாடில்லாமல் மனித இனம் வாழ்கிறது.”

## கோயில் சிலைக்கு மதிப்பு:

“பக்தன் நினைப்பதைக் கொடுத்தால் தான் கோயில் சிலைக்கு மதிப்புக் கிடைக்கிறது. சொல்லாமல் செய்வது மதிப்பு. சொல்லியும் செய்யாமல் இருப்பதால் மதிப்பு இல்லை.

மண்டை இருக்கும் வரை சளி விடாது என்பார்கள். எல்லாப் பிரச்சனைகளுக்கும் உயிர்தான் பொறுப்பு.”

## தனித்தன்மை உண்டு:

“உயிரினங்களில் தாவரங்களுக்கும் மிருகங்களுக்கும் கூடத் தனித்தன்மை உண்டு.”

## தாயும் – தந்தையும்:

“தாய்ப்பறவை தன் குஞ்சுகளைக் காப்பாற்றுகிறது. அதுபோலத் தாயின் செய்கை பிள்ளைகளைக் காப்பாற்றுவதாக இருக்கிறது. ஆனால் பல குடும்பங்களில் தந்தை தான் பொறுப்பு இல்லாதவனாக இருக்கிறான்.”

## இயற்கை தான் தெய்வம்:

“குழந்தை தாயிடம் இருந்தால் பயமில்லை; தாய் தெய்வத்திடம் இருந்தால் பயமில்லை. இயற்கைதான் தெய்வம்.

உருவம் தெரியாத உருவம் உண்டு. உனக்குப் பயன் தருவதைத் தெய்வமாக்குகிறாய். அந்தப் பயனை இயற்கையே தருகிறது.”

## உலகம் அடிமையாவது எதற்கு?

“உலகம் சொல்லுக்கும் சேவைக்கும் தருமத்திற்கும் பொருளுக்கும் அடிமையாகும்.”

**நேற்று – இன்று – நாளை:**

“நேற்று சொன்னது நிலை பெறுகிறது. இன்று சொல்வது வளம் பெறுகிறது. நாளை சொல்லப் போவது பயன் பெறுகிறது.”

**உலகமும் – உயிர்களும்:**

“உயிர்கள் இருக்கும் வரை அழிவும் உண்டு. ஆணவம் அழிவை உண்டாக்கும்.”

**இயற்கையும் நீங்களும்:**

“உன்னால் இயற்கைக்குப் பலன் இல்லை; இயற்கையினால் உனக்குப் பலன் உண்டு.”

**படைப்பில் விசித்திரம்:**

“முட்டை குட்டையாக இருந்தாலும் கோழி நெட்டையாக வளர்கிறது. கரு சிறியதாக இருந்தாலும் குழந்தை பெரியதாக வளர்கிறது.

**பஞ்ச பூதங்கள்:**

“பஞ்ச பூதங்களைப் போற்றி வழிபடாவிட்டால் எல்லாம் பஞ்சு பஞ்சாக மாறிவிடும்.”

**உயிர்களுக்காகவே உலகப் படைப்பு:**

“உன்னைப் பிறக்க வைத்து விட்டேன் அதற்காகவே மழை, செடி, கொடி, மரம், உணவு, பிறப்பு, இறப்பு, ஆசை, அலங்காரம் போன்றவற்றைக் கொடுக்க வேண்டி உள்ளது.”

**பூமி – தாய் போன்றது:**

“பூமியைத் துளைப்பது தாயை இழிவு படுத்துவதற்குச் சமம்.”

**வாழவும் – அழியவும்:**

“இயற்கையை வைத்து உங்களை வாழவும் செய்கிறேன். நீங்கள் வரம்பு மீறும் போது இயற்கையை வைத்து அழிக்கவும் செய்கிறேன்.”

**உழைப்பும் – தாயன்பும்:**

“உழைக்காமல் பிழைப்பவனுக்கு உழைப்பின் மகிமை தெரிவதில்லை. அதுபோலத் தாயுடன் வாழாதவனுக்குத் தாயன்பு தெரிவதில்லை.”



**கண்களே அடையாளம்:**

“ஒருவனுடைய நிதானம், தெய்வ பக்தி, அவன் எப்படிப்பட்டவன் என்பதையெல்லாம் அவன் கண்களைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம்.”

**மரமும் – மனிதனும்:**

“வாழை மரம் பூப் பிடித்துக் காய் காய்த்துக் கனியாக மாறும் போது தன் காலம் நெருங்கிவிட்டதை அறிந்து, தான் அழிந்தாலும் தன் இனத்தைப் பாதுகாத்துக் கொள்கிறது. கூடவே ஒரு கன்றையும் விட்டுச் செல்கின்றது.

மரங்கள் மனிதனுக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றன. ஆனால் மனிதன் மட்டும் தான் மற்றவர்களை அழித்துக் கொண்டே இருக்கின்றான்.”

**இயற்கையில் ஒரு விசித்திர உண்மை:**

“எதையும் தேடி அலைந்தால் கிடைக்காது. தேடாமல் இருந்தால் தானாகக் கிடைக்கும்.”

**ஆண்! பெண்!**

“ஆண்களிடம் பெண் தன்மையையும் தாய்ப் பாசத்தையும் காண முடியாது. ஆனால் பெண்ணிடம் ஆண் தன்மையையும் தாய்ப் பாசத்தையும் காண முடியும்.”

**தனக்குத் தானே அழிவு:**

“இயற்கையை அழிப்பதன் மூலம் மனிதன் தன்னைத் தானே அழித்துக் கொள்கிறான்.”

**சூரியன் – சந்திரன்:**

“சூரியனும், சந்திரனும் தினமும் உதித்தாலும் மறைந்தாலும் ஆண் தன்மை பெற்றிருப்பதால் அவற்றை யாரும் மதிப்பதில்லை. ஆனால் பூமாதேவி தண்ணீர் ஆகியவை பெண் தன்மை பெற்றிருப்பதால் எல்லோரும் மதிக்கிறார்கள்.”

**குழந்தையும் – மனிதனும்:**

“குழந்தை வளர்ந்து மனிதனாகலாம். ஆனால் மனிதன் உருவத்தால் குழந்தையாக மாற முடியாது. என்றாலும் உள்ளத்தால் குழந்தையாக இருக்கலாம்.”

**மழை பெய்ய...**

"மூட நம்பிக்கையுடன் தெய்வ நம்பிக்கையும் இருந்தால் பெய் என்றாலும் மழை பெய்யும்."

**வித்தும் – விளைவும்:**

"ஒரு விதையின் உள்ளே அது செடியாகவோ, மரமாகவோ வளர்வதற்கான உயிர்த் தன்மை அடங்கிக் கிடக்கிறது. ஆனாலும் அந்த விதையை நிலத்தில் நட்டுத் தண்ணீர் ஊற்றி வளர்க்கிறபோதுதான் அது செடியாகி மரமாகிப் பூ பூத்துக் காய் காய்த்துக் கனியாகிறது. அப்போதுதான் வித்தின் வளர்ச்சியை உணர முடிகிறது."

அதுபோல மனிதனும் தாய் வயிற்றில் கருவாகி, உருவாகி, பிறந்து வளர்ந்து வெளி உலகிற்கு வரும்போது தான் உயிர் வளர்ச்சி வெளிப்படையாகத் தெரிகிறது."

**புகைப்படக் கருவியும் – மனமும்:**

"ஒரு புகைப்படக் கருவி ஒளியின் மூலமாக எவ்வாறு ஓர் உருவத்தைப் பதிவு செய்து கொள்கிறதோ, அதுபோல உங்கள் மனத்தில் எப்பொழுதும் நல்லதையே பதிவு செய்து கொள்ள வேண்டும்."

**விளக்கும் – மனமும்:**

"ஒரு எண்ணெய் விளக்கு எரியத் திரி வேண்டும். மின்சார பல்பு எரியக் கம்பி வேண்டும். அதுபோல மனிதன் திருந்துவதற்கு திருந்தி வாழ வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு வேண்டும்."

**விலங்கும் – மனிதனும்:**

"தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விரும்பும் மனிதன் மற்றவர்களை நம்புகிறான். ஆனால் இவனைவிடத் தாழ்ந்த விலங்கினமோ தன்னையே நம்பி வாழ்கிறது."

**வாழ்ந்தவர் – தாழ்ந்தவர்:**

"வாழ்ந்தவர் எப்போதும் வாழ்ந்தவர் இல்லை; தாழ்ந்தவர் எப்போதும் தாழ்ந்தவர் இல்லை. ஏழைதான் கூழுக்கு வழி சொல்வான்."

**ஆசைக்கு ஏற்றபடிக் கஷ்டம்:**

"அதிக ஆசை அதிகக் கஷ்டங்களைக் கொடுக்கும். கோடிக்கு



ஆசைப்பட்டால் அதற்கு ஏற்றபடிக் கஷ்டம் வரும். பத்து ரூபாய்க்கு ஆசைப்பட்டால் அதற்கு ஏற்றபடிக் கஷ்டத்தை அனுபவிக்க நேரிடும்."

**மனித இனமும் – இயற்கையும்:**

"மனிதனால் இயற்கைக்கு அழிவே தவிர, இயற்கையினால் மனிதனுக்கு அழிவு இல்லை."

**இயற்கையை வைத்துத்தான்...**

"சூரியனை வைத்துத்தான் காலத்தைக் குறிப்பிடுகிறீர்கள்; சந்திரனை வைத்துத்தான் பௌர்ணமி அமாவாசையைக் குறிப்பிடுகிறீர்கள். எல்லாமே இயற்கையை வைத்துத்தான் இயங்குகின்றன."

**பாசமும் – பாவமும்:**

"மற்றவர்களிடம் பாசம் காட்டினால் நீ பாவம் செய்ய முடியாது."

**இயற்கை வழிபாடும் – சிலை வழிபாடும்:**

"மனிதனுக்குத் தேவையான நீர் காற்று, உணவு, வெப்பம் ஆகியவற்றை இயற்கைப் பொருள்களான சூரியன், சந்திரன், ஆகாயம், பூமி, நீர், நிலம் ஆகியவை கொடுத்து வருகின்றன. மனிதன் அவற்றைத் தெய்வமாக வழிபட வேண்டும்.

அவ்வாறு வழிபடாமல், மனிதன் தன் கற்பனா சக்தியால் உருவாக்கிய சிலைகளையே தெய்வம் என்று கூறுகிறார்கள்.

இனியாவது இயற்கையை வழிபடு! பஞ்ச பூத வழிபாடு செய்! பலன் தெரியும்."

**பூமிக்கு மகிமை:**

"பூமிக்கு அதிக செல்வாக்கும் மகிமையும் உண்டு, சூரியனும், சந்திரனும் பூமியை நோக்கித்தான் ஒளி வீசுகின்றன. மழையும் பூமியை நோக்கித் தான் பெய்கிறது. பூமி அடி மட்டத்தில் இருந்தாலும் அதற்கு மகிமை உண்டு. அதுபோல அடிமட்டத்திலிருந்து ஆன்மிகம் வளர்ந்தால்தான் அது உண்மையான ஆன்மிகமாக இருக்கும்."

**பதம் வேண்டும்:**

"சேறு, தண்ணீர், ஈரப்பதம் என்ற மூன்றும் பதமாக இருந்தால் தான் அது பூமி! இல்லாவிட்டால் பூமி வெப்பம் மிகுந்ததாக மாறி விடும். பூமிக்கு எப்படிப் பதம் தேவையோ அதுபோல ஆன்மிகத்திலும் பதம் வேண்டும்."

**பரஸ்பர உதவி:**

“பூமி எவ்வளவு பெரியது? அது எவ்வளவு பெரியதாக இருந்தாலும் எல்லா இடங்களிலும் பயிர் விளைந்து விடுவதில்லை. அதுபோல இப்பரந்த உலகில் பத்தாயிரம் பேர் லட்சம் பேர்களுடன் ஒருவன் பழக முடிவதில்லை. அவ்வாறு பழக முடியாவிட்டாலும், பத்து பேருடன் பழகிப் பரஸ்பரம் உதவி செய்ய வேண்டும்.”

**முதிர்ச்சியும் – பக்குவமும்:**

“விளையும் பொருள்கள் முதிர்ந்து பக்குவப் பட்டால்தான் அவற்றில் சுவை இருக்கும். அதுபோல முதிர்ந்த அறிவும், அனுபவமும், பண்பும் பாசமும், பக்தியும், தொண்டும் இருந்தால் தான் பலன் கிடைக்கும்.”

**ஆரம்பம் பூஜ்யம்; முடிவும் பூஜ்யம்:**

“மனிதனாகப் பிறந்து விட்டு, சொத்து சேர்ப்பது, பங்களாவில் வாழ்வது, தருமம் செய்வது, தருமம் செய்யாமல் கஷ்டப் படுவது. கடைசியாக ஆதிபராசக்தியிடம் வருவது. வழிபடுவது, அடிகளார் என்ற சித்தரிடம் அருள்வாக்கு கேட்பது. கடைசியில் ஒன்றையும் தெரிந்து கொள்ளாமலே போய்ச் சேருவது.

- இப்படி பூஜ்யமாகவே பிறந்து கடைசியில் பூஜ்யமாகவே போய்ச் சேருகிறீர்கள்.”

**மனிதனுக்காகவே இயற்கை:**

“மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவே இயற்கையைப் படைத்துக் கொடுத்திருக்கிறேன். அதைப் பக்குவமாகப் பயன்படுத்தி மனிதன் தன் வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.”

**நேர்வழி நடந்தால்:**

“மேலே ஆகாயத்தைப் பார்த்தாலும் கீழே பூமியைப் பார்த்தாலும் பிரமிப்பாகத்தான் தோன்றும். வாழ்க்கையில் உயர்வு தாழ்வு பாராமல் நேர்வழி நடந்தால் முன்னேற முடியும்.”

**மனிதன் மிருகமாவது:**

“வயிற்றுக்காகத்தான் மனிதன் மிருகமாகிறான்.”

**நீ வகுத்த சாதி:**

“நீ வகுத்துக் கொண்டது தான் சாதி! அந்தச் சாதி என்ற



வலையில் நீயே மாட்டிக் கொண்டு தவிக்கிறாய். மனித இனத்தில் தான் சாதி, இனம், எல்லாம்.

பறவை, மிருகங்களிடம் சாதி இனம் என்ற வேறுபாடு இல்லை.”

**கொடுமையான தாய்:**

“ஒரு தாய் கொடியவளாக இருந்தாலும் அவளுக்கும் பாசம் உண்டு.”

**பிறர் போற்ற...**

“குழந்தை உள்ளமும், பிறரைப் போற்றும் மனப்பான்மையும் இருந்தால் உன்னைப் பிறர் போற்றுவர்.”

**இயற்கைப் பொருள் தான் ஆதிபராசக்தி:**

“இயற்கைக்கு அழிவில்லை; செயற்கைக்கு அழிவுண்டு.

உலகம் அழியப் போகிறது என்று ஒரு சமயத்தில் விஞ்ஞானிகள் சொன்னார்கள். போலிச் சாமியார்கள் சொன்னார்கள். நான் சொல்லவில்லை.

மனிதன் தெய்வமாக முடியாது. தெய்வம் தெய்வம் தான்! மனிதன் மனிதன் தான்.

உனக்குள் இருக்கிற ஆத்மா தான் எல்லாமே! ஆன்மாவைச் சரியாகப் பக்குவப் படுத்திக் கொண்டால் எல்லாமே சரியாக இருக்கும்.

சோதனை வரும்; வேதனைவரும். அவற்றிலிருந்து மீண்டு வருவதுதான் பக்குவம்.

பிறப்பு, வளர்ப்பு, இறப்பு எல்லாமே கலந்ததுதான் வாழ்க்கை! அழிவிலிருந்து காப்பாற்றுவது ஆன்மிகம் ஒன்றுதான்! தெய்வம் இல்லையென்றால் வளர்ச்சி இல்லை, இயற்கை இல்லை, உலகமும் இல்லை.

புழு, பூச்சி, நிலம், பூமி, விதை, வேர், பூ, கனி, இவை அனைத்துக்கும் வளர்ச்சி உண்டு. ஏதோ உன்னுயை சுய முயற்சியால் வளர்ந்து விட்டதாக நீ நினைத்துக் கொள்ளக் கூடாது.

இயற்கைப் பொருள்தான் ஆதிபராசக்தி!

**வேதனையும் – சாதனையும்:**

“ஒரு குழந்தை எப்போதும் சிரித்துக் கொண்டே இருந்தால் அதன் தேவையை யாரும் அறிந்து கொள்ள மாட்டார்கள். அது அவ்வப்போது பசி எடுத்து அழுதால்தான் அதற்கு உணவு

கிடைக்கும். அதுபோல வாழ்க்கையில் அழுதால்தான் பலன் கிடைக்கும். வேதனைதான் சாதனைக்கு வழி வகுக்கும்.''

**கஷ்டம் என்பது இயற்கையின் நியதி:**

''கடல் அலைகளினால் காற்று உண்டாகிறது. காற்றினால் மரம் அசைகிறது. இவை இயற்கையின் நியதி. வாழ்க்கையில் கஷ்டம் என்பதும் நியதி. எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் கஷ்டம் இருந்தபடிதான் இருக்கும்.''

**பூமி சுற்ற வேண்டும்:**

''சிலையைச் சுற்றி எந்தப் பயனும் இல்லை. சாமியைச் சுற்றியும் எந்தப் பயனும் இல்லை. இந்தப் பூமி சுற்றினால் தான் எல்லோருக்கும் பயன். அப்போதுதான் வளர்ச்சியும் ஏற்படும்.''

ஆகாயம், பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரம் இவைகள் தான் தெய்வம். இவை என்றும் மாறாதவை. உங்கள் அன்றாட வாழ்க்கையே இவற்றால் தான் நடக்கிறது.''

**உள்ளத்தின் வேகம்: அழிவு:**

''மனிதர்களின் உள்ளத்தின் வேகம் தான் அழிவை ஏற்படுத்துகிறது. அந்த வேகத்தால் தான் மனிதன் தடம் புரள்கிறான்.

அந்த வேகத்தைக் கட்டுப்படுத்தும் சக்தி ஆன்மித்திற்கு உண்டு. அந்தச் சக்தி பெருக ஒவ்வொருவரும் சமூகத் தொண்டு செய்ய வேண்டும்.''

**வெள்ளை மனம்:**

''மனத்தில் அழுக்கு இருந்தால் சிந்திக்கத் தோன்றாது. வெள்ளை மனம் இருந்தால் சிந்திக்கத் தோன்றும். அந்த வெள்ளை மனம் இருந்தால் பிறரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் தோன்றாது.''

**இயற்கையை ஒட்டியே வாழ்வு:**

''மனித இனம், உடம்பு, மனைவி, பேரன், பேத்தி என்கின்ற படியே இந்த உலகம் உழன்று கொண்டிருக்கின்றது. மரம், செடி, கொடி, பறவை, மிருகம், மனிதர் என்றே இயற்கை சுழன்று கொண்டிருக்கிறது. நீங்கள் அனைவரும் இயற்கையை ஒட்டித்தான் வாழ வேண்டும். இயற்கையை வெல்ல முடியாது.



உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க வீடு, அனைவருக்கும் ஒன்று தான்!''

**உணவுச் சுழற்சியும்: உலக இயக்கமும்:**

''பூமியின் எடையும், காற்றின் எடையும் குறைவதில்லை. உணவுச் சுழற்சியினால் உலகம் இயங்குகிறது.

ஒரு பழம் சாப்பிட்டுவிட்டு வீசும் விதையிலிருந்து இன்னொரு பழம் உற்பத்தியாகிறது.

- இவ்வாறு உற்பத்தியாகும் உணவுச் சுழற்சியிலிருந்தே உலகம் இயங்கி வருகிறது.''

**குழந்தைப் பருவமும் – வளர்ந்த பருவமும்:**

''குழந்தைப் பருவத்தில் இருக்கும் போது அறிவும் அனுபவமும் குறைவு. அப்பருவத்தே மாத்திரை அதிகம் தேவைப்படுவதில்லை. ஆனால் வளர்ந்து வயதான பிறகு அறிவும் அனுபவமும் கூடுகிறது. பந்தபாசமும் அதிகமாகிறது. மருந்து மாத்திரைகளும் அதிகமாகின்றன.''

நீ இருக்கும் வரை வாழ்விற்கு நான் வழிகாட்டியாக இருக்கிறேன். அமைதியாக வாழ்ந்து விட்டுப் போ!''

**பாமர மக்கள்:**

''பாமர மக்கள் தான் பாசம் உள்ள மக்கள். பலன் கருதாமல் வழிபடுகிறவர்கள் அவர்களே!''

**இயற்கை வளம்:**

''இயற்கை வளம் தான் சிறந்தது. மாங்காய் ஆனாலும், தேங்காய் ஆனாலும் எதுவானாலும் மழையும், சூரிய ஒளியும் வேண்டும். இவற்றை எதனாலும் உண்டாக்க முடியாது. விதைக்கிற விதையையும் பதம் பார்த்து, நிலம் பார்த்து விதைக்க வேண்டும்.''

**படைப்பில்...**

''இயற்கையில் தேனீயும், எறும்பும் கூடத் தேடிச் சென்று உணவைப் பெறுகின்றன. உங்களுக்கு எல்லாம் கொடுத்தும் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாமல் வடிகட்டி விட்டு விடுகிறீர்கள்.''

**நாடு போகிற போக்கு:**

''கட்டுப்பாட்டிற்குள் அடங்காத காட்டாறு போல இந்த நாடு

ஓடிக்கொண்டிருக்கிறது. சட்டம் கட்டையாக மாறிக் கொண்டு இருக்கிறது. தலை நகரம் நரகமாக மாறி விட்டது.

**மரமும் – மனிதனும்:**

“மரம் சாய்ந்து விட்டால் பலன் உண்டு. மனிதன் சாய்ந்து விட்டால் பலன் இல்லை.”

**ஆடுகிற ஆட்டத்தின் முடிவு:**

“கொலையாளிக்கு அதன் கொடுமையை உணர்த்த வேண்டும். போதைப் பழக்கம் உள்ளவனுக்குப் பாசத்தை ஊட்ட வேண்டும். திருடனுக்குப் பக்தி உணர்வு ஊட்ட வேண்டும்.”

எவ்வளவு வருமானம் வந்தாலும் அது அழிவைத்தான் உண்டாக்கும். அவனவன் ஆடுகிற ஆட்டமெல்லாம் அழிவில் தான் வந்து முடியும்.”

**நாகரிகம் வளர்ந்த பிறகுதான் பிரச்சனைகள்:**

“நாகரிக முன்னேற்றம் இல்லாமல் வாழ்ந்த பழங்காலத்தில் இவ்வளவு பிரச்சனைகள் இல்லை.

எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் பெற்று விட்டதாகச் சொல்லப்படுகிற இந்தக் காலத்தில் தான் அதிகமான வேற்றுமை உணர்ச்சிகளும் வெட்டு குத்துகளும் மலிந்து வருகின்றன.”

**கிராமத்துச் சண்டை: அரசியல் சண்டை:**

“கிராமங்களில் பாமர மக்கள் சண்டை போட்டுக் கொள்வது போலத்தான் அரசியலிலும் சண்டை நடக்கிறது. அரசியலுக்கு இனி மரியாதை இல்லை.”

**கடிகாரம்: உள்ளம்:**

“ஓரிடத்தில் கடிகாரங்கள் பல இருந்தாலும், அவை யாவும் ஒரே நேரத்தைக் காட்டுவதில்லை.

ஒரே கருவி பலவிதங்களில் இருந்தாலும் அவை ஒரே அளவைக் காட்டுவதில்லை.

அதுபோல மனிதர்களுக்குப் பொதுவாக உள்ளம் என ஒன்றிருந்தாலும் அவையாவும் ஒன்று போல இருப்பதில்லை.

உள்ளத்தால் ஒவ்வொருவருக்கும் வேற்றுமை உண்டு.”

**பயனுள்ள வாழ்வு:**

“தாவரங்கள் தங்கள் இலை, கனி, காய் என இவற்றின் மூலம்



கவர்ச்சியையும் அழகையும் காட்டி மனித இனத்தை ஈர்த்து உணவாகவும் மருந்தாகவும் பயன்படுகின்றன. மனித இனத்துக்குப் பயன்பட்டுத் தம்மையும் வளர்த்துக் கொள்கின்றன.

மனித இனமோ தாவரத்தை வைத்து வளர்கிறதே தவிர தாவர இனத்துக்குப் பயன்படுவது இல்லை.”

**மனித வாழ்வை மேம்படுத்துவது:**

“பரந்த வெளி, நிறைந்த மனம், சிறந்த தொண்டு! - இவைதான் மனித வாழ்வை மேம்படுத்தும்.

குறுகிய மனம், குறுகிய தொண்டு இருந்தால் அவை அழிவைத் தேடித் தரும். வாழ்க்கையில் குழப்பம் தான் ஏற்படும்.”

**நாயும் – மனிதனும்:**

“நாய் மோப்ப சக்தி உடையது; அது திறந்த வீட்டில் திடீரென்று வரும். கிடைத்ததைத் திருடிச் சாப்பிடும்; பாண்டத்தை உருட்டிவிட்டு ஓடிப்போய் விடும்.

அதுபோல ஏதோ பிறந்தோம் வளர்ந்தோம், கிடைத்ததைச் சாப்பிடுவோம் உருட்டிப் புரட்டி அடுத்தவனைச் சுரண்டி வாழ்வோம் என்ற மனப் போக்குடன் மனிதன் வாழக் கூடாது.”

**பஞ்ச பூதங்களே தெய்வங்கள்:**

“நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐந்துமே இயற்கை.

தண்ணீரின்றிக் காற்றே இன்றி உங்களால் வாழ முடியுமா? உயிர்கள் இயங்க முடியுமா? அதனால்தான் அவற்றைத் தெய்வங்கள் என்கிறோம்.”

**இயற்கையிலிருந்து பாடம் கற்றுக் கொள்!**

“நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகாயம், சூரியன், சந்திரன் போன்ற இயற்கைப் பொருள்கள் தங்கள் கடமைகளை முறையாகச் செய்து வருவதால்தான் இவ்வுலகம் இயங்குகிறது. உயிர்களும் வாழ்ந்து வருகின்றன. இவை தங்கள் கடமைகளை மறந்து வாழ்ந்தால் என்ன ஆகும்?

மனிதனும் தன் கடமைகளை உணர்ந்து ஒழுங்காக உழைத்து வாழ்ந்தால்தான் எல்லோரும் நன்றாக வாழ முடியும்.

ஆரம்ப கால மனிதனிடமிருந்த நல்ல பண்புகளும் செயல்களும் இப்போது இல்லை.

உழைப்பு, முன்னேற்றம், தாய் தந்தை பாசம், அக்கம் பக்கம் இருப்பவர்களோடு ஒட்டி வாழும் பண்பு. ஒற்றுமை உணர்வு என்பன இன்றைய மனிதர்களிடம் இல்லை.

எல்லோருடைய செயல்களும் எண்ணங்களும், பார்வைகளும் சும்மா இருப்பதில்லை.

ஆன்மிகத்தில் ஈடுபாடு வைத்துக் கொண்டு, உண்மை உணர்வோடு செயல்பட்டால்தான் இன்றைய மனிதர்களிடம் நல்ல எண்ணங்கள் உண்டாகும்.''

**இயற்கை வழிபாடு:**

"சிலையை வழிபட்டாய்; மதத் தலைவர்களை வழிபட்டாய்! இன்று இயற்கை வழிபாடுதான் சிறந்தது என்ற நிலைக்கு வந்து விட்டாய்.''

**அன்றைய வாழ்வு:**

"கட்டுச்சோறு! களி உருண்டை! மாட்டு வண்டி! என்றிருந்த அன்றைய வாழ்க்கை தான் அமைதியான வாழ்க்கை.''

**மனிதனுக்குப் பொறுப்புணர்ச்சி உண்டு:**

"பசிக்கு உணவும், தாகத்திற்குத் தண்ணீரும் அருந்தி வாழ்கிற விலங்கிற்கும், பறவைக்கும் எந்தப் பொறுப்பும் இல்லை. ஆனால் மனிதனுக்குப் பொறுப்புகள் உண்டு.''

**இயற்கை ஒத்துழைக்க வேண்டும்:**

"எத்தனை ராஜாக்கள் வந்தால் என்ன? எத்தனை விஞ்ஞானிகள் வந்தால் என்ன? இயற்கை வளர வேண்டும். இயற்கை ஒத்துழைக்க வேண்டும. இயற்கை வளமாக இருக்க வேண்டும். இயற்கையின் உதவியின்றி வாழ்ந்துவிட முடியாது.''

**சோம்பலும் சாம்பலும்:**

"சமுதாயம் சோம்பேறிக் கூட்டமாக இருந்தால் சாம்பலாக வேண்டியது தான்.''

**மனிதன் எந்த வகையில் உயர்ந்தவன்?**

"ஓவியமாகவும், வரைபடமாகவும், உருவாக்கிய ஒரு படத்துக்கு மரியாதை கொடுக்கிறான்; பூசை செய்கிறான். எவனோ வரைந்த ஓர் ஓவியத்துக்கு மரியாதை கொடுக்கிறான்.

ஒரு படத்திற்குத் தருகிற மரியாதையைக் கூடக் கஷ்டப்படும் ஒரு மனிதனுக்குத் தருவதில்லை. அப்படியிருக்கும் போது மனிதன் எந்த வகையில் உயர்ந்தவன்?''



**பிடிவாத குணம்:**

"வேண்டும் என்பதை வேண்டாம் என்றும், வேண்டாம் என்பதை வேண்டும் என்றும் நினைக்கும் பிடிவாத குணம் தான் ஒருவனைத் துன்பத்தில் அகப்பட வைக்கிறது,''

**பருவங்கள்:**

"இளமைப்பருவம், வாலிபப்பருவம் முதுமைப் பருவம் ஆகியவை ஒரு கரும்பின் அடிப்பாகம், நடுப்பாகம், நுனிப்பாகத்திற்கு ஒப்பானவை.''

**இயற்கையும் மனிதனும்:**

"மண், தண்ணீர், காற்று, வெப்பம் என்ற இவை உலகத்தின் எல்லா இடங்களிலும் ஒன்றாகத்தான் உள்ளன. ஆனால் உலகெங்கும் உள்ள மனிதன் மட்டும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை.''

**பஞ்ச பூதங்கள்:**

"நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகாயம் என்ற பஞ்ச பூதங்கள் ஐந்திற்கும் மகிமை உண்டு. ஏதோ மழை பெய்கிறது. ஏதோ பூமி விளைகிறது என்று நினைக்கக் கூடாது. பஞ்ச பூதங்களால் தான் பூமி இயங்குகிறது.''

**இயற்கை வழிபாடு:**

"இயற்கையை வணங்குவது தாயை வணங்குவதற்குச் சமம்.''

**இயற்கையே உணவு:**

"பூ வகைகளும், காய்வகைகளும் கனி வகைகளும், அந்தந்த மண்ணின் வளத்திற்கும் நீரின் தன்மைக்கும் ஏற்றாற் போல் தான் அமையும். உனக்கு அவை உணவாக அமைகின்றன. அவற்றுக்கு இயற்கை உணவாக அமைகிறது.''

**பணம்: குணம்:**

"பணத்தைவிடக் குணம் தான் மனிதனுக்கு அவசியம்.''

**குறையும் நிறையும்:**

"நல்லதையே செய்தால் கூடப் பொறாமை ஏற்படுவது உண்டு. குறையும் நிறையும் எதிலும் உண்டு.''

**எப்படி வளர வேண்டும்?**

“நமக்காக வாழாமல் பிறருக்காக வாழ வேண்டும். இந்த உலகமே என்னுடையது என்ற பரந்த மனப்பான்மையோடு வளர வேண்டும்.”

**இயற்கை கோயில் போன்றது:**

“இயற்கை கோயில் போன்றது. அதன் எளிமையை வைத்து எடை போடக் கூடாது. அதற்குள்ளே சக்தி இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.”

**எதற்கும் ஒரு சக்தி தேவை:**

“ஒரு கூட்டத்தைக் கட்டுப் படுத்தவும் ஒரு சக்தி தேவை! கூட்டத்தில் ஒரு குழப்பத்தை உண்டாக்கவும் ஒரு சக்தி தேவை.”

**ஆபத்து விளைவிப்பவை:**

“தங்கத்தாலும் வைரத்தாலும் உருவாகின்ற பொருள்களால் ஆபத்து உண்டு. தருமத்தாலும் கல்வியாலும் ஆபத்து இல்லை.”

**குடும்ப ஒழுங்கு:**

“தாய் நலமாக இருந்தால் தான் குழந்தைகளை நலமாகக் கவனித்துக் கொள்ள முடியும். தாயே சரியில்லை யென்றால் குழந்தைகளை யார் கவனிப்பது?

அதுபோல நீங்கள் ஒழுங்காக இருந்தால் தான் உங்கள் குடும்பமும் ஒழுங்காக இருக்கும்.”

**ஆக்கமும் அழிவும்:**

“ஆக்கப்பட்ட ஒன்றுதான் அழிவுக்கு வருகிறது.”

**இயற்கையும் – செயற்கையும்:**

“காரில் பேட்டரி இருந்தாலும் மனிதன் இயக்கினால்தான் இயங்கும். அதுபோலச் செயற்கையாக எதனைக் கண்டு பிடித்தாலும் இயற்கையின் உதவி இருந்தால் தான் எல்லாமே இயங்கும். இயற்கையின் துணை இல்லாமல் எதுவும் இங்கே இயங்க முடியாது.”

**குரங்கும் – மனிதனும்:**

“ஒரு குரங்கு தனக்குப் பழம் கிடைக்கவில்லையே என்று நினைக்குமே தவிர மற்ற குரங்குளைப்பற்றி நினைத்துக் கவலைப் படாது.

எவ்வளவு பழம் கிடைத்தாலும் தன் வாயிலும், வயிற்றிலும், கைகளிலும் அடைத்து வைத்துக் கொள்ளுமே தவிர மற்ற குரங்குகளுக்குக் கொடுக்காது.

மனித இனமும் அதுபோன்றது தான்.

மனித இனம் அதிகாரத் தோரணை கொண்டது. மற்றவர்களுக்கு உதவும் மனம் அற்றது.”

**எலிகளும் – நிர்வாகமும்**

“அறுவடை செய்பவனுக்குக் கிடைக்கும் நெல்லைவிட, எலிகள் தங்கள் வளைக்குள்ளே சேமித்து வைக்கும் நெல்லின் அளவு அதிகமாகும்.

அதுபோல நிர்வாகத்தில் எலிகள் அதிகமாக இருந்தால் பாசத்தையும் பணத்தையும் பறிகொடுக்க நேரிடும். அறிந்தும் புரிந்தும் நடந்து கொள்ள வேண்டும்.”

**களையும் பயிரும்**

“களை பயிரை அழிக்க நினைக்கிறது. பயிரால் உண்டாகும் நன்மை அதற்குப் புரிவதில்லை.”

**இயற்கையான பசும்பால்**

“பசுமாடு தானாக மேய்ந்து இயற்கை உணவை உண்டு கொடுக்கும் பாலை உண்டபோது நோய்கள் வந்ததில்லை.

செயற்கை உணவைப் பசு மாட்டிற்குக் கொடுத்துப் பாலைக் கறந்து உண்ணும்போது தான் நோய்கள் அதிகமாகின்றன.”

**குறைகளோடு அமைந்த வாழ்க்கை**

“பிள்ளை இருந்தாலும் தப்பு. இல்லாவிட்டாலும் தப்பு. பெண் குழந்தை பிறந்தாலும் தப்பு; பிறக்காவிட்டலும் தப்பு. திருமணம் ஆனாலும் தப்பு; ஆகாவிட்டாலும் தப்பு; குழந்தை பிறந்தாலும் தப்பு; பிறக்காவிட்டாலும் தப்பு.

- எப்படி வாழ்ந்தாலும் குறைகள் இருக்கத்தான் செய்யும்.”

**தாயும் – இயற்கையும்**

“ஒரு தாய்க்கு எல்லாக் குழந்தையும் ஒன்றுதான். அதுபோல இயற்கையின் முன் எல்லோரும் சமம்.”

**தாயும் – பூமியும்:**

“தாயின் மடியில் குழந்தை உட்காரலாம். குழந்தையின் மடியில் தாய் உட்கார்ந்தால் குழந்தை தாங்குமா?

நான் உங்களையெல்லாம் என் மடியில் தாங்கிக் கொண்டிருக்கிறேன். என் மடி என்பது பூமி!

தாய் மடி குலுங்கினால் குழந்தை விழுவது போல, பூமி குலுங்கினால் உங்களுக்கு ஆபத்து. ஆதலால் பூமியைச் சோதனையும் ஆராய்ச்சியும் செய்யக் கூடாது.”

**திரவப் பொருள்:**

“குழந்தையாக இருந்தபோது திரவப்பொருள் அருந்தியே வளர்கிறாய். பிறகு திடப் பொருளை உண்டு வளர்கிறாய். முதுமையில் மீண்டும் திரவப் பொருளுக்கே போகிறாய். இது தான் வாழ்க்கை.”

**இயற்கையைப் புறக்கணித்து விட்டு...**

“உயிர் வளர இயற்கை தேவை. அந்த இயற்கையை மதிக்காமல் நீங்கள் ஆடுகின்ற ஆட்டத்தாலோ, ஓடுகின்ற ஓட்டத்தாலோ எந்தப் பயனும் இல்லை.”

**இயற்கையை வணக்கு! தாய் தந்தையரை வணங்கு!**

“அறுவடை முடிந்தவுடன் நெல் மணிக்குப் பூஜை போட்டுக் கும்பிடுகிறாய். அது நல்லது தான்; அதனை விளைவித்துக் கொடுத்த பூமிக்குப் பூஜை போட்டுக் கும்பிடு. அது மிகவும் நல்லது.

உன் தாய் தந்தையரை வணங்குகிற நல்ல பழக்கத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்து விட்டால் மிகவும் நல்லது.

**உடம்பில் பஞ்ச பூதம்:**

“உன் உடம்பிலேயே பஞ்சபூத அமைப்பு உள்ளது. எந்தெந்தப் பாத்திரத்தை எப்படி எப்படிக் கையாள வேண்டுமோ அப்படிக் கையாள வேண்டும். அவ்வாறே ஆன்மிகத்தையும் பக்தியையும் பதமாகக் கையாள வேண்டும்.”

**புதுமை மோகமும் ஆணவப் போக்கும்:**

“இயற்கையாக நடைபெறும் செயல்கள் சிலவற்றை அதனதன் போக்கிலேயே விட்டுவிட வேண்டும். ஆணவத்தால் புதுமைக்கு முக்கியத்துவம் கொடுத்தால் அழிவுதான் ஏற்படும்.”



**பழமொழிகள்:**

“பழமொழிகள் வாழ்க்கைப் பாதைக்கு வழி வகுக்கும்.”

**இயற்கையும் – சித்த வைத்தியமும்:**

“காய்கறி உடம்பிற்கு நல்லது. சாக்லெட், ஐஸ்கிரீம், செயற்கை உணவுப் பண்டங்கள் உடலுக்கு நல்லது அல்ல.

இயற்கையும், சித்த வைத்தியமும் உடலுக்குச் சிறந்தவை.”

**உயிரினங்களும் – இயற்கையும்:**

“மனிதர்கள் குழந்தைகளாகப் பிறக்கின்றார்கள்; மகன் என்றும் மகள் என்றும் வளர்கிறார்கள்; தாய் என்றும் தந்தை என்றும், மாமனார் என்றும், மாமியார் என்றும் தாத்தா, பாட்டி என்றும் மாற்றம் அடைகிறார்கள்.

பறவையினங்களும் அடைகாத்துக் குஞ்சு பொறிக்கின்றன. அக் குஞ்சுகள் பறவையாகின்றன. தாய்ப்பறவை என்றும் தந்தைப் பறவை என்றும் அவற்றின் வாழ்விலும் மாற்றம் உண்டு.”

ஆனால் இவற்றை உள்ளடக்கிய இயற்கைக்கு மாற்றம் கிடையாது.

**வளர்ப்பு மாடு: காட்டு மாடு:**

“உன்னிடம் வளரும் மாடு உப்பு சாப்பிடுகிறது. காட்டில் வாழும் மாடு உப்பு சாப்பிடுகிறதா?”

**இயற்கை வழிபாடு: சிலை வழிபாடு:**

“குழந்தை வளர்ச்சி பெற வேண்டுமானால் ஆட வேண்டும். ஓட வேண்டும். மனித குலம் வளர்சிபெற வேண்டுமானால் இயற்கை வழிபாடு சிறக்க வேண்டும்.

கல்தான் சிலையாகிறது. அந்தச் சிலைதான் வழிபாட்டு உருவமாகிறது. சிலை வழிபாட்டைவிட இயற்கை வழிபாடு தான் சிறந்தது.”

**மனித எண்ணங்களும் – இயற்கையும்:**

“இயற்கையோடு இயைந்து வாழ்ந்தால் தான் நீங்கள் நல்ல முறையில் வாழ முடியும்.

இயற்கைக்கு மாறுபட்டு வாழும் போது மனிதர்களுக்கு மட்டுமின்றி எல்லா உயிரினங்களுக்கும் ஆபத்து ஏற்படுகிறது.

அதுபோல உங்கள் எண்ணங்கள் நேரியதாக இருந்து ஒன்றாகச் செயல்படும் போது எந்த ஆபத்தும் இல்லை.

எண்ணங்கள் மாறுபட்டுத் தோன்றும் போது தான் அழிவுகளும் ஏற்படுகின்றன.''

**நோய்வராமல் இருக்க...**

''கால் வயிறு போதும் என்றிருந்தால் நோய் வராது.''

**வரம்பு மீறினால்...**

''உலகம் இரவு, பகல், சூரியன், சந்திரன், காற்று, மழை, பருவ காலம் என இயற்கைப் பொருள் ஒவ்வொன்றிற்கும் சில இயல்புகள் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. அவை அந்தந்த இயல்பிலேயே இருக்க வேண்டும். வரம்பு மீறினால் உலக இயக்கம் பாதிக்கப்படும். வளர்ச்சி தடைப்படும்.

பருவக்காற்று மிதமாக வீசினால் அனுபவிப்பதற்கும் இதமாக இருக்கும். அதே காற்று புயலாக மாறும்போது ஆபத்து ஏற்படுகிறது. எதுவும் ஓரளவிற்கு உட்பட்டு இருக்கும்போது தொல்லை இல்லை அளவிற்கு மீறும் போது தான் தொல்லை.

ஆசைக்கும் ஓர் அளவு வேண்டும். அளவிற்கு மீறினால் பொறாமையாக மாறும். பொறாமை வரக் கூடாது. அதனால் ஒருவன் ஆன்ம வளர்ச்சி தடைப்படும்.''

**தெய்வம் குடி கொள்ள...**

''எங்கே சுத்தம் இருக்கிறதோ அங்குதான் தெய்வமும் இருக்கும்; அமைதியும் இருக்கும்.

எங்கே அழுக்கு உண்டோ அங்கே பொறாமையும் பொச்சரிப்பும் இருக்கும்.''

**இயற்கை வழிபாடு – தனி மனித வழிபாடு:**

''ஆரம்ப காலத்தில் இயற்கை வழிபாடுதான் அனைவர்க்கும் தெரிந்த முக்கிய வழிபாடாக இருந்தது. அது பிறகு மனித வழிபாடாக மாறியது. தனிமனித வழிபாட்டிற்கு மாறிய பிறகு வழிபாட்டின் மானம், மரியாதை போய்விட்டது.''

**கசப்பும் – இனிப்பும்:**

''கசப்பும் வேண்டும், இனிப்பும் வேண்டும். இரண்டும் ஒன்றோடொன்று சேர்ந்து இருக்க வேண்டும். ஒவ்வொன்றும் அதனதன் தகுதிக்கேற்பப் பயன் படுகிறது.''



**சிரிப்பும் – கண்ணீரும்:**

''உள்ளம் சிரிப்பது உடலுறுப்புகளுக்கு நல்லது. ஒரு சொட்டுக் கண்ணீர் விடுவது கண்ணிற்கு நல்லது.''

**சிந்தனையும் – சிரிப்பும்:**

''சிந்தனைக்கு நேரம் கொடுத்தால்தான் சிரிப்பிற்கும் இடம் கிடைக்கும்.''

**மனிதனின் அழிவுக்குக் காரணம்:**

''மனிதனின் உணர்வும் பொறாமையும் ஆசைகளும் தான் அழிவுக்குக் காரணம்.''

**ஒலியும் ஒளியும்:**

''சக்தி இருந்தால் தான் ஒலியும் கிடைக்கும். ஒளியையும் பார்க்க முடியும்.''

**அழகு செய்வதற்கும்:**

''அழகு செய்வதற்கும் ஓர் அளவு இருக்கிறது. மோகம் அதிகமாகிவிட்டால் அழிவுதான் ஏற்படும்.''

**குடிசையும் – மாடியும்:**

''குடிசை வாழ்க்கையில் இருக்கும் அமைதி மாடி வீட்டு வாழ்க்கையில் இருக்காது.''

**அருளுக்கும் – பொருளுக்கும் வழி:**

''அருளுக்கும் பொருளுக்கும் தருமமும் தொண்டும் தான் வழி.''

**உலகம்:**

''ஆண்! பெண்! உயிர்! ஐம்பூதம்! அனைத்தும் அடங்கியது தான் உலகம்.''

**தாய்க்கு மகிமை எதனால்?**

''குழந்தையே மனிதனாக மாறுகிறான். அந்தக் குழந்தைக்குப்பால் கொடுப்பதால் தான் தாய்க்கு மகிமை.''

**உருவமும் – உள்ளமும்:**

''ஒரு மாமரத்தில் பல்லாயிரக் கணக்கான காய்கள் காய்த்தாலும் அவையாவும் ஒரே வடிவத்திலும், ஒரே அளவிலும் சீராக

இருப்பதில்லை. அதே போல மனிதர்கள் எல்லோரும் மனித உருவில் இருந்தாலும் ஒரே மாதிரியான குணம் உடையவர்களாய் இருப்பதில்லை. இருக்கவும் மாட்டார்கள்.''

**எந்த நோக்கத்தோடு வந்தாய்?**

''உன்னுடைய வாழ்க்கையை அடுத்தவன் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. உன்னதமான வாழ்க்கை முறையை நீ மேற்கொண்டு வாழ முயலும் போது, மற்றவர்களைப் பார்த்து உன் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளக் கூடாது. இறங்கிவிடக் கூடாது.

எந்த நோக்கத்தோடு இந்த உலகத்திற்கு வந்தாயோ அதை நிறைவேற்ற வேண்டும்.''

**அரசியல் கட்சிகள்:**

''மக்களுக்குக் கொடி காட்டினால் மட்டும் போதாது. செடி கொடி மரங்களைக் காட்டிப் பிழைப்பிற்கு வழிகாட்ட வேண்டும்.''

**இயற்கையைப் பார்த்துக் கற்றுக் கொள்:**

''இயற்கையில் உள்ள ஒவ்வொரு பொருளும் பலனை எதிர்பாராமல் உதவுகின்றது. அந்த இயற்கைதான் உனக்கு வழிகாட்டுகிறது. வாழ்வு தருகிறது. அந்த இயற்கைக்கு நீ என்ன செய்தாய்?

ஆன்ம வளர்ச்சிக்கு என்ன செய்தாய்? ஆன்ம லாபத்திற்கு என்ன செய்தாய்? உழைப்பிற்கு என்ன செய்தாய்? - என்றெல்லாம் உனக்குள்ளே நினைத்துப் பார்க்க வேண்டும்.

பதர்போல வாழ்ந்து குப்பைக்குப் போய்விட்டு, மறுபடியும் பயன்பட வாழ வேண்டும் என்று நினைக்காதே!''

**மாங்கொட்டையும் – மனிதனும்:**

''மாம்பழத்திலிருந்து வீசி எறியப்படும் ஒரு மாங்கொட்டை கூட மீண்டும் உயிர் பெற்றுச் செடியாகி, மரமாகிப் பழமாகிப் பலன் கொடுக்கிறது. பலாக் கொட்டையும் அவ்வாறே பழமாகிப் பலன் தருகிறது.

மனிதனோ யாருக்கும் பயன் படாமல் அடிதடி, சண்டை, வெட்டு, குத்து என அழிகிறான். சாதி வேற்றுமைகளை வளர்த்துக் கொண்டு கலவரம் செய்து மடிகின்றான்.''



**அரிசியும் – அரசியலும்:**

''எந்த அரசியலும் இனி மக்களுக்குப் பயன்படாது. அரிசியை நம்பு! அது தான் மக்களுக்குப் பயன் படும்.''

**நெல்லும் – பதரும்:**

''நெல் விதையாகவும் மாறும்; விதை நெல்லாகவும் மாறும். அந்த விதை நெல் நாற்றாக மாறி நாற்று கதிராக மாறி மனிதனுக்கு உணவாகப் பயன்படுகிறது. ஆனால், அந்த நெல்லில் உள்ள பதர் உணவாகப் பயன்படுவதில்லை. எனினும் அது குப்பைக்குப் போய் எருவாக மாறிப் பயிர் விளைச்சலுக்குப் பயன்படுகிறது.

உழைக்காமலும், மற்றவர்களுக்குப் பயன்படாமலும், மனிதன் பதராக மாறிவிடுகிறான். அந்தப் பதர்போல் இல்லாமல் எல்லோரிடமும் பாசத்துடன் பழகிப் பலருக்கும் பயன்பட வாழ வேண்டும்.''

**கோளம் குவிய உள்ளது:**

''கோளம்(பூமி) குவிய உள்ளது. இப்போது தப்பி விடலாம். ஆனாலும் எங்கு போனாலும் இயற்கையால் அழிவு உண்டு.''

**பூமி தான் தாய்!**

''பூ இல்லாமல் விதை இல்லை; விதை இல்லாமல் செடி இல்லை; செடி இல்லாமல் விதை இல்லை. எல்லாச் சுழற்சிக்கும் பூமிதான் ஆதாரம். ஆதலின் பூமிதான் தாய்.''

**இயற்கையை ஒட்டிய வாழ்வு:**

''இயற்கையை ஒட்டி வாழ்ந்தால் தான் நீண்ட நாள் வாழலாம். செயற்கையை ஒட்டி நீண்ட நாள் வாழ முடியாது. மனிதனுடைய இன்பத்திற்காகத்தான் வாழ்க்கையைக் கொடுத்தேனே தவிர, தன்னைத் தானே அழித்துக் கொள்வதற்காக அல்ல.''

**அமாவாசை! பௌர்ணமி:**

''சூரியனுக்கும் சந்திரனுக்கும் ஒளியின் தன்மையில் மாறுபாடு உண்டு. பக்தி அதிகமாவது அமாவசையில் தான் பௌர்ணமியில் அல்ல. கருத்தரிப்பதும் வளர்வதும் இருட்டில் தான்.''

**இயற்கை உணவு:**

''பச்சைக் காய்கறிகளைத் தின்றபோது மன அமைதி இருந்தது. வேக வைத்துச் சாப்பிட ஆரம்பித்த பிறகுதான் வேதனை வருகிறது,''

## பிறருக்கு நல்லவழி காட்டு:

"பிறருக்கு நல்வழி காட்டினால் உனக்கு நல்வழி கிடைக்கும்."

## தாயும் தெய்வம்:

"குழந்தை தாயை வெறுத்தாலும் தாய் குழந்தையை வெறுப்பதில்லை அதனால் தான் தாய் தெய்வம்."

## கூட வரப்போகிறவர்கள் யார்?

"நீ என்னதான் பணம் சம்பாதித்தாலும் உன் கூட வருவது என்ன? இறுதியில் உன் கூட வரப் போகிறவர்கள் யார்? அம்மா தான்!

உனக்கு மன அமைதியைத் தருவதும் அம்மா தான்."

## பொருளைச் சேர்த்து வைத்தால்:

"பொருளைச் சேர்த்து வைத்தால் களவு தான் போகும். பிறர் பசியைப் போக்கி அனைவரையும் நேசித்தால் உலகம் செழிக்கும். உன் வாழ்வும் செழிக்கும். எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவனவனுக்கும் வர வேண்டும்."

## சொத்தும் – சுகமும்:

"பசு எங்கெல்லாமோ ஓடியாடிப் புல்லைத் தின்று மேய்ந்து பாலாக்கித் தன் கன்றுக் குட்டிக்குத் தருகிறது. கன்றுக் குட்டியும் தாய்ப் பசுவின் வலி தெரியாமல் முட்டி முட்டிப் பாலைக் குடிக்கிறது.

ஆடு திருட்டுத் தனமாக வேலிதாண்டிப் புகுந்து, தோட்டத்தில் மேய்ந்து அதைப் பாலாக்கித் தன் குட்டிக்குத் தருகிறது. ஆட்டுக் குட்டியோ தாயின் வலி தெரியாமல் வாலை ஆட்டிக் கொண்டு பாலைக் குடிக்கிறது.

நாய் கள்ளத் தனமாக உணவைத் திருடித் தன் இரத்தத்தையே பாலாக்கித் தன் குட்டிகளுக்கு ஊட்டுகிறது குட்டிகளும் சந்தோஷமாகக் குடிக்கின்றன.

அதுபோலவே மனிதனும் தன் வாழ் நாள் முழுதும் ஓடியாடிச் சம்பாதித்துத் தன் பிள்ளைகளுக்குச் சேர்த்து வைக்கிறான். பெற்றவன் கஷ்டம் புரியாமல் பிள்ளைகள் அனுபவிக்கிறார்கள்.

நீங்கள் சேர்க்கும் சொத்தும் சுகமும் எப்படிப் பட்டவை என்பதைப் புரிந்து கொண்டு வாழ வேண்டும்."



## தாய்ப்பாலின் மகிமை:

"பாசத்தையும் நல்ல குணங்களையும் வளர்க்கும் தன்மை தாய்ப் பாலுக்கு உண்டு. மற்ற பாலுக்கு இத்தன்மை இல்லை."

## களவு எண்ணம் பெருகுவது ஏன்?

"பொருளைச் சேர்த்து வைக்க வேண்டும் என்று நீங்கள் ஆரம்பித்தால் மறுபுறம் களவு மனப்பான்மை வளரும். உன் பொருளும் களவு போகும். எனவே பொருளாசை கொண்டு அலைவதை விட்டுப் பிறர் பசியைப் போக்க வேண்டும். பிறர் பசியை நீக்க அனைவரையும் நேசிக்க ஆரம்பித்தால் தான் உலகம் செழிக்கும்."

## கருக் கலைப்பு:

"14 வயதிலேயே கருவைக் கலைக்கிறார்கள். கேட்டால் இது மேல் நாட்டுப் பாணி என்கிறார்கள். மேல் நாடாக இருந்தாலும் கீழ் நாடாக இருந்தாலும் ஆன்மா ஒன்று தான்."

## பூமிதான் தாய்:

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன்பே தாவரங்கள், பறவைகள், விலங்கினங்கள், மனிதர்கள் போன்ற உயிரினங்கள் தோன்றி வளர்வதற்குத் தாயாக விளங்குவது பூமிதான்."

## இயற்கையும் மனிதனும்:

"பூமியில் பலவகையான தாவரங்கள் செழித்து வளர்கின்றன. ஆயினும் அவை ஒன்றைப் பார்த்து ஒன்று பொறாமைப் படுவது இல்லை.

ஆகாயத்தில் பறவைகள் பறக்கின்றன. பலூன்கள் பறக்கின்றன. விமானங்களும் பறக்கின்றன. எனினும் இவை யாவும் எனக்குரிய இடத்தில் பறக்கின்றனவே என்று ஆகாயம் பொறாமைப் படுவதில்லை.

மனிதனிடம் மட்டும் தான் பொறாமையும் பொச்சரிப்பும் உள்ளன. பொறாமையை வளர்த்துக் கொள்வதும் இவனே! அழிவதும் இவனே!

பொறாமை மறைந்து பொறுமை வளர்ந்தால் பயனுண்டு. கடல் போலவும், பூமியைப் போலவும், பொறுமைக் குணம் வளர வேண்டும். அவ்வாறு வளர்ந்தால் பயன் உண்டு."

**ஒன்றிற்கு ஒன்று ஆதாரம்:**

“உயிருக்கு ஆதாரம் உணவு; உணவிற்கு ஆதாரம் தண்ணீர்; தண்ணீருக்கு ஆதாரம் வளர்ச்சி; வளர்ச்சிக்கு ஆதாரம் பூமியே ஆகும்.”

**ஒன்றுக்கு ஒன்று மாற்று:**

“விஷப்பாம்பைப் படைத்து விஷத்தை எடுக்கிறேன்.

கெட்டதைப் படைத்து நல்லதை உருவாக்குகிறேன்.

மிருகங்களை வைத்தே மிருகங்களை அழிக்கிறேன்.

வெடிகுண்டுகளை வைத்தே வெடிகுண்டுகளை அழிக்கிறேன்.

ஒவ்வொரு துறைக்கும் மாற்றுத் துறை உண்டு.

இன்று ஏமாறுவதற்கும்; ஏமாற்றுவதற்கும் நிறையவே ஆட்கள் இருக்கிறார்கள்.”

**இயற்கையும் – இறையும்:**

“இயற்கையை இறையாகக் கருதி வழிபட வேண்டும். அதனை இரையாக்கிக் கொள்ளக் கூடாது. இயற்கை உங்களுக்கு இரையாகுமானால் அதிகமான இறப்பும் இழப்பும் தான் ஏற்படும்.”

**நினைத்ததைச் செயல் படுத்த...**

“நீங்கள் நினைத்ததைச் செயல் படுத்தவும் என் அருள் வேண்டும்.”

**இயற்கையின் பதமான சூழ்நிலை:**

“உங்களைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழ்நிலை எப்போதும் பதமாகவே இருக்க வேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்க்கிறீர்கள்.

ஆனாலும் அவ்வப்போது அனல் காற்று வீசுகிறது. குளிர் அடிக்கிறது. கனமழை பொழிகிறது. உஷ்ணம் அதிகரிக்கிறது. இயற்கைச் சீற்றங்கள் ஏற்படவே செய்கின்றன.

அதுபோலவே மனிதன் நல்லவனாக வாழ நினைத்தாலும் அவ்வப்போது பொறாமை பொச்சரிப்புகள், வம்பு துன்புகள் ஏற்படுகின்றன. அதனால் மனிதச் சீற்றமும் ஏற்படுகிறது,

நமக்கிருக்கும் உணர்ச்சிகள் தான் மற்றவர்கட்கும் இருக்கும் என்றெண்ணிக் கொண்டு மற்றவர்களிடமும் அன்பு, பண்பு, பாசம், பரிவு செலுத்தி வாழப் பழக வேண்டும்.”



**சுற்றுச் சூழல் பாதிப்பு:**

“சாக்கடையைக் கலக்கச் செய்து மனிதன் ஆற்றின் இயல்பையும், உப்பங்கழியின் இயல்பையும் மாற்றி வருகிறான்.

பொறாமை, பொச்சரிப்பு போன்ற சாக்கடைகள் கலப்பதால் மனிதன் தன் இயல்பைவிட்டு, மனிதத் தன்மையை இழந்து வருகிறான்.”

**இயற்கையே துணை:**

“மனிதன் இயற்கையின் துணையைக் கொண்டே வாழ வேண்டும். இயற்கை வழிவிட்டால் தான் நீங்கள் வாழ முடியும். பணத்தை வைத்துக் கொண்டே எல்லாவற்றையும் சாதித்துக் கொள்ள முடியாது. பணம் எல்லாவற்றுக்கும் ஒத்துவராது. இயற்கை தரும் மழையினால்தான் மனிதன் பயன் அடைகிறான். பணத்தை வைத்துக் கொண்டு மழையைக் கொண்டுவர முடியாது.”

**இன்பமும் – துன்பமும்:**

“மழை பெய்யும் போது பயனுள்ள செடியும் வளரும். கூடவே கொடிய காளான்களும் வளரும். அதுபோல மனிதன் வாழும் காலத்தில் இன்பமும் வரும். கூடவே துன்பமும் வரும்.”

**அளவு கோல்:**

“இயற்கைக் கென்று ஓர் அளவு கோல் கிடையாது. ஆன்மிகத்தில் தருமத்துக்கென்று ஓர் அளவு கோல் கிடையாது. ஆனாலும் மனிதன் எல்லாவற்றுக்கும் அளவுகோல் வைத்திருக்கிறான்.”

**உபயோகமற்ற பொருள்:**

“உலகில் உபயோகமற்ற பொருள் என எதுவும் இல்லை. ஒன்றுக்கும் உதவாதது மற்றொன்றுக்குப் பயன்படும். குட்டிச் சுவராக இருந்தாலும் நாலுகால் ஜீவன்களுக்கு அதுவும் ஒரு பாதுகாப்பாக இருக்கிறது.”

**ஆசையும் – அழகும்:**

“ஆசைகளுக்கு அளவில்லை; அதற்கு மரியாதையும் இல்லை. ஆசைப்பட்டு எதைச் சாப்பிட்டாலும் அதன் சுவை தொண்டை வரைக்கும் தான். தொண்டைக்குக் கீழே போனால் எந்த ருசியும் இல்லை.

ஆசை மூட்டைகள் எல்லாமே அழுக்கு மூட்டைகளாகச் சேரும்.

எந்த அளவிற்கு ஆசைக்கும் அழகுக்கும் அடிமை ஆகிறீர்களோ அந்த அளவிற்கு அழிவும் உண்டு.''

**உண்மையும் போலியும்:**

''காட்டு மல்லி எளிதில் விலை போகும்; வீட்டு மல்லி எளிதில் விலை போவது இல்லை. இன்றைய உலகில் வேஷம் போடுகிறவனுக்குக் காலமாக இருக்கிறது. உண்மையாக நடப்பவனுக்குக் காலம் இல்லை.''

**ஆடம்பரப் பொருள்கள் – செயற்கைப் பொருள்கள்:**

''உங்கள் உடம்பு தண்ணீரை ஏற்கிறது; உணவை ஏற்கிறது; ஆனால் மற்ற ஆடம்பரப் பொருள்களையும், செயற்கைப் பொருள்களையும் ஏற்பதில்லை.''

**பானை ஓடும்; கண்ணாடித் துண்டுகளும்:**

''உடைந்துபோன மண்பானை ஓடுகளால் கால்களுக்கு ஆபத்து இல்லை. ஆனால் உடைந்த கண்ணாடித் துண்டுகளால் கால்களுக்கு ஆபத்து மிகுதி. உங்கள் வாழ்க்கை கண்ணாடி போன்றது. அது உடையாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.''

**மனிதர்களில் உயர்ந்தவன்:**

''மனிதர்களில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்பது இல்லை.

நல்ல உள்ளத்தாலும், செய்கிற தான தருமங்களாலும் உயர்ந்தவன் எவனோ அவனே மனிதர்களில் உயர்ந்தவன்.

மனித இனத்தில் உங்களை உயர்த்தவே தான தருமங்களைச் செய்யச் சொல்கிறேன். இருமுடி அணிந்து வரச்சொல்கிறேன்.''

**தீய வழியில் வரும் செல்வம்:**

''பனிக் கட்டியிலிருந்தும் தண்ணீர் கிடைக்கும். அந்தத் தண்ணீர் உடம்புக்கு நல்லது அல்ல. அதுபோல ஒருவனுக்குத் தீய வழியிலும் செல்வம் கிடைக்கும். அச்செல்வம் உங்கள் வாழ்க்கைக்கு நல்லது அல்ல.''

**பூமியைத் தோண்டிக் கொண்டு போகாதே!**

''இயற்கைக்கு முக்கியத்துவம் உண்டு. பூமியைத் தோண்டித் தோண்டி. எந்த அளவுக்கு மாடிகள் பெருகுகின்றனவோ அந்த அளவிற்குப் பூகம்பங்களுக்கு வாய்ப்பு உண்டு.



எந்த அளவிற்கு வளர்ச்சிகள் உண்டோ அந்த அளவிற்குப் பொறாமையும் உண்டு.

மாடிமேல் மாடிகட்டிக்கொண்டே போனாலும் பாதுகாப்பாக வாழ்ந்துவிட முடியாது. மின் கசிவு ஏற்பட்டால் தீயினுக்கு இரையாக வேண்டியது தான்.''

**பிரபஞ்ச விதி:**

''விஞ்ஞானம் எது எதற்கோ சுருக்கமான விதி கண்டு சொல்கிறது. பிரபஞ்சம் என்றால் என்ன? சுருக்கமான விதி இது:

ஆன்மா + ஐம்பூதம் = பிரபஞ்சம்''

**ஆரம்பகாலத்திலிந்து...**

''பெற்றவளுக்குத்தான் குழந்தையின் அருமை தெரியும். நேற்று வந்து வளர்ப்பவளுக்குக் குழந்தையின் அருமை தெரியாது. அதுபோல ஆரம்ப காலத்திலிருந்து ஆன்மிகத்தில் ஈடுபடுபவர்களுக்குத் தான் அதன் அருமை தெரியும். நேற்று வந்தவர்களுக்குத் தெரியாது.''

**எல்லாம் நன்மைக்கே...**

''பிறப்பது ஒரு நன்மை, பிறக்காவிட்டால் ஒரு நன்மை, வளர்ந்தால் ஒரு நன்மை. வளராவிட்டால் ஒரு நன்மை; உயிர் இருந்தால் ஒரு நன்மை. உயிர் இல்லாவிட்டால் ஒரு நன்மை, ஆக நல்லதும் கெட்டதும் சேர்ந்ததுதான் வாழ்க்கை.''

**காடும் – நாடும்:**

''காட்டில் விஷத்தன்மை கொண்ட தாவரங்கள் உண்டு; விலங்குகளும் உண்டு. நாட்டில் விஷத்தன்மை கொண்ட மனிதர்கள் இருக்கிறார்கள்.''

தேவலோகமோ - நரக லோகமோ அதை அமைத்துக் கொள்வது நீங்கள் தான்.''

**புதுமையும் – பழமையும்:**

''புதுமையைவிடப் பழமைக்குத்தான் மதிப்பு அதிகம்.''

**அளவிற்குமேல் பணம் வந்தால்...**

''பருத்தியை இழையாக மாற்றி, நூலைப் புடவையாக மாற்றுவதற்கு எவ்வளவு முயற்சி தேவையோ, அவ்வளவு முயற்சி பணம் சம்பாதிக்கவும் தேவை.

அளவிற்குமேல் பணம் வந்தால் பின்னல்கள் சுற்றிக் கொண்டு இன்னல்களையும் அனுபவிக்க வேண்டும்.''

**எதிலும் அளவோடு இருந்தால்...**

''எதிலும் அளவோடு இருந்தால் நல்லது.

எந்தக் காரணத்தைக் கொண்டும் அதிகமாக ஆசைப்படக் கூடாது.

மழையும் அதிகமாகப் பெய்தால் அழிவுதான் ஏற்படும்.

பொருளைப் படைத்தால் மட்டும் போதாது. அதைக் காப்பாற்ற வேண்டும்.

உணவு! உடை! இருப்பிடம்! இவை இருந்தாலே போதும் என்ற எண்ணம் இருக்க வேண்டும்.

அளவிற்கு அதிகமாகப் பணம் சேர்த்து என்ன செய்யப் போகிறாய்?

எவ்வளவுக் கெவ்வளவு வசதி வாய்ப்புகள் பெருகுகின்றனவோ, அந்த அளவுக்கு ஏற்றவாறு பிரச்சனைகள் பெருகும்.

அளவிற்கு மீறி ஆசைப்பட்டுப் பெரிதாக வீட்டையும் கட்டிவிட்டு, வெள்ளை அடிக்கக் காசில்லையே என்று புலம்புவதில் பயன் என்ன?

உழைத்துப் பிழைப்பதற்கு ஆன்மா வழி செய்து கொடுத்தால் அதுவே போதும் என்று இருக்க வேண்டும்.''

**பூமியைத் தோண்டத் தோண்ட...**

''பூமியைத் துளைபோட்டுத் தோண்டத் தோண்ட அழிவுதான் ஏற்படும். நில நடுக்கம் தான் ஏற்படும்.''

**நிலையான ஆன்ம வளர்ச்சி:**

''முற்றாத காயைக் கூடப் பழுக்க வைக்க முடியும். ஆனால் ருசி இருக்காது. முற்றிய காய் தானாகப் பழுத்தால் அதில் ருசி இருக்கும்.

அதுபோல மனத்தூய்மை, நேர்மை இல்லாமல் ஆன்மிகத்தில் ஈடுபட்டால் ஆன்ம வளர்ச்சி கிடைக்காது.

மனத் தூய்மை, நேர்மையான வழிகளில் மனத்தைப் பக்குவப் படுத்திக் கொண்டால் ஆன்ம வளர்ச்சி பெற முடியும். அத்தகைய வளர்ச்சியே நிலையான வளர்ச்சி!''



**வெப்பம்:**

மனித மனத்தில் வெப்பம் அதிகம் ஆகும்போது கோபம் அதிகமாகிறது; பொறாமை ஏற்படுகிறது.

பூமி தாங்குகிற அளவிற்கு வெப்பம் இருந்தால் நல்லது.

**இயற்கையும் – செயற்கையும்:**

''குளிர் சாதன வசதி (Air Condition) மின்விசிறி இவையெல்லாம் செயற்கைச் சாதனங்களே! இயற்கையான காற்றுதான் சிறந்தது.

நீராகாரமும், பழைய சோறும் சாப்பிட்டுப்பார். பழைய சோறும் பழைய வாழ்க்கை முறையும் தான் சிறந்தது. இயற்கையோடு ஒன்றி வாழும் வாழ்க்கைதான் சிறந்தது.

பெரிய வீடாக கட்டிக் கொண்டால் அங்கு சீதோஷ்ண நிலை மாறுபட்டுக் கொண்டே இருக்கும். ஆனால் குடிசை வீடு குளிருக்கும் வெயிலுக்கும் இதமாகவே இருக்கும்.

இயற்கையுடன் ஒன்றி வாழும் எளிய வாழ்வே உன்னதமானது.''

**பெட்ரோலும் – அதர்மமும்:**

''எதை அழிக்கலாம், எதை அழிக்கக் கூடாது என்று பெட்ரோலுக்குத் தெரியாது. எல்லாவற்றையும் அழிக்கும் இயல்புடையது அது. அதுபோலவே அதர்மமும் நல்லது கெட்டது என்று பார்க்காமல் உலகத்தில் அழிவுகளை ஏற்படுத்தும்.

அதர்மங்கள் தாண்டவமாடும் போது நல்லதும் அழியும், கெட்டதும் அழியும்.''

**இயற்கை தரும் வளம் – ஆன்மிகம் தரும் வளம்:**

''பூமியிலிருந்து பித்தளை, செம்பு, தாமிரம், தங்கம், வைரம் போன்ற கனிமப் பொருள்கள் கிடைக்கின்றன. மேகத்தின் மூலம் மழை கிடைக்கிறது. அதுபோல ஆன்மிகம் வளர, வளர குடும்பமும் வளரும். உன் பரம்பரையும் வளர்ச்சி அடையும்.''

**மனித இனம் – விலங்கினம்:**

''பந்தம், பாசம், உறவு முறை போன்றவை மனித இனத்திற்கும் உண்டு, விலங்கினத்திற்கும் உண்டு . ஆனால் விலங்கினத்தில் இருக்கும் பாசம் மனித இனத்தில் இல்லை.''

**மனிதனுக்குக் கவசம்:**

''மனிதனுக்குக் கவசமாக இருப்பது அவன் செய்யும் தொண்டும்

தருமமும் தான். இதை மறந்து இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடத்தைத் தேடக் கூடாது.''

**அநாகரிகத்தால் அழிவு:**

"நாகரிகம் என்ற பெயரில் அநாகரிகம் பெருகும்போது அழிவுகள் ஏற்படும்.''

**ஈவு இரக்கம் தேவை:**

"குளிர் காலமானாலும், வெயில் காலமானாலும், சூரிய ஒளி எப்போதும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். ஈரப்பசையும், காற்றின் இயல்பும் தான் சூரிய ஒளியின் தன்மையை மாற்றுகின்றன.

உள்ளத்தில் ஈவு இரக்கம் இல்லாதபோது உள்ளம் காடாகி விடுகிறது.''

**பதரும் – அழுக்கும்:**

"விதையிலும் பதர் இருப்பது போல உன் உள்ளத்திலும் அழுக்கு இருக்கிறது.''

**ஐம்பூதங்களில் பால்வேறுபாடு:**

"ஐம்பூதங்களில் ஆண்பாலும் உண்டு; பெண்பாலும் உண்டு. அந்தப் பெண் பாலினால்தான் பூமியில் குளிர்ச்சி கிடைக்கிறது.''

**செல்வாக்கும் – சொல்வாக்கும்:**

"சொல்லும் செயலும் ஒன்றாகச் செயல்பட்டால்தான் செல்வாக்கு கிடைக்கும். சொல்வாக்கு இருந்தால்தான் செல்வாக்கு உண்டு. சொல்வாக்கு செயல்படாதபோது, பொய் வாக்காக மாறிவிடும்.''

**விஷ மனிதன்:**

"கல்லிலே விஷக்கல் இருக்கிறது. பாம்பிலே விஷப்பாம்பு இருக்கிறது. பறவைகளிலும் விஷப்பறவை இருக்கிறது. கடல் மீன்களிலும் விஷ மீன்கள் இருக்கிறது. இலைகளிலும் விஷமான இலை இருக்கிறது. அதுபோல மனிதர்களிலும் விஷ மனிதன் இருக்கிறான்.''





# 15. தியானம்

**இங்கு வரும்போதெல்லாம் தியானம் செய்!**

"ஒவ்வொருவரும் 1008 முறை 108 முறை மந்திர அர்ச்சனை செய்துவிட்டோம். பலமுறை இருமுடி செலுத்திவிட்டோம் என்று எண்ணுகிறீர்கள். அவ்வாறு எண்ணாமல் ஒவ்வொருவரும் இங்கு வரும்போதெல்லாம் தனியிடத்தில் அமர்ந்து கொண்டு 10 அல்லது 20 நிமிடம் வரை தியானம் செய்துவிட்டே செல்லவேண்டும். மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.''

**தியானத்தின் போது...**

"தியானத்தின் போது உன் மனம் எங்கெங்கோ ஓடும். தளரவேண்டாம். முதலில் உன் மனத்தை ஓடவிடு! அது முதலில் குதிரை போலவும். மான் போலவும் ஓடும். பிறகு, அது ஒரு நிலைக்கு வந்துசேரும்!''

**அங்கவலம் வருவோர்க்கு:**

"அங்க வலம் வருகிற அனைவரையும் அங்கவலம் முடிந்ததும் 10 அல்லது 25 நிமிடம் தியானத்தையும், மௌனத்தையும் கடைப்பிடிக்குமாறு சொல்.''

**தியானம்! பலம்:**

"நல்ல பசுமாட்டின் மடியிலிருந்து கறக்கக் கறக்கப் பால் கிடைப்பது போல, தெய்வத்தை நோக்கி நீங்கள் செய்யும் தியானம், மௌனம், இருமுடி விரதம், பூசைகள் இவற்றைக் கடைப்பிடிக்க அவற்றால் உங்களுக்குப் பயன்களும் கிடைக்கும்.''

**அமாவாசை, பௌர்ணமி:**

"அமாவாசை, பௌர்ணமி நாட்களில் தம் இல்லங்களிலோ, மன்றங்களிலோ 5 நிமிடம் மௌனத்தைக் கடைப்பிடித்தால், தியானத்தைக் கடைப்பிடித்தால் அதற்கான பலனைத் தருவேன்.''

**பெண்களுக்கு ஏன் வலியுறுத்துகிறேன்:**

“நாளைய உலகத்தில் என்ன நடக்கும் என்று உங்களால் சொல்ல முடியாது. விஞ்ஞானத்தால் அழிவுதான் உண்டாகும். குழந்தைப் பருவத்தில் எதையும் புரிந்து கொள்ளும் தன்மையில்லை. அதே குழந்தை தாய்மைப் பருவத்திற்கு வந்தவுடன் பக்குவமும். எதையும் புரிந்து கொள்ளும் தன்மையும் உண்டாகும்.

பின்னால் நடக்க இருக்கும் நிலைமைகளைப் பெண்களாகிய நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் உங்களுக்கு ஆன்மிகம், தியானம், மௌனம் போன்றவைகளை வற்புறுத்துகிறேன்.”

**உறக்க நிலையும் மனநிறைவும்:**

“ஒரு குழந்தை தவறு செய்யும்போது எவ்வளவு தான் தடுத்தாலும், நல்லனவற்றைக் கூறினாலும், ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. பிடிவாதம் பிடிக்கிறது. பின் அழுது அழுது ஏங்கி உறங்கிவிடுகிறது. அவ்வாறு ஏங்கி உறங்கும்பொழுது தான் அந்தக் குழந்தைக்கு மனநிம்மதி ஏற்படுகிறது.

அதுபோல உங்களையெல்லாம் ஆன்மிக நெறியில் ஈடுபடுத்துவதற்காகவே கலசபூசை, விளக்குபூசை, வேள்விபூசை, தியானம், மௌனம் முதலான பலவழிகளில் உங்களை ஈடுபடுத்துகிறேன். இவற்றையெல்லாம் செய்து ஐம்புலன்களை அடக்கித் தியானம், மௌனம் முதலிய உறக்க நிலைக்கு நீங்கள் வருதல் வேண்டும். அந்த நிலைக்கு வரும்போது தான் உங்களுக்கு மனநிறைவு ஏற்படும்.”

**ஆன்மிகமும், தியானமும்:**

“மனித சமுதாயம் ஆன்மிக நெறியில் ஈடுபடும் போது, தியானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.”

**குரு உபதேசம் பெற்றவர்கள்:**

“குரு உபதேசம் பெற்றவர்கள், உபதேசம் பெற்றுக்கொண்ட பிறகும் தியானத்தை விடாமல் கடைப்பிடிக்க வேண்டும்.”

**நாளைய உலகத்திற்கு:**

“தெய்வ வழிபாடு, ஆன்ம வழிபாடு, கல்வி, மருத்துவம், தியானம், மௌனம், மனக்கட்டுப்பாடு ஆகியவை நாளைய உலகத்திற்கு வழி வகுக்கும்.”



**தியானம் தேவை:**

“தியானம் தேவை. இல்லறத்தில் ஈடுபட்டிருந்தாலும் தியானம், மௌனம், அர்ச்சனை, அபிடேகம் ஆகியவை தேவை. ஆன்மிகத்தில் அமைதி தேவை.”

**மன அமைதிக்குத் தியானம்:**

“தேய்க்கத் தேய்க்கத்தான் பாத்திரங்கள் பொலிவு பெறும். அதுபோலத் தியானம் பழகப்பழக மன அமைதியேற்படும்.”

**ஐம்புலன்களை அடக்கவே தியானம்:**

“ஆன்மிகத்துறைக்கு வந்துவிட்ட உங்களுக்குப் பொறுப்பு இருக்க வேண்டும். தியானம் இருக்கவேண்டும். உங்கள் ஐம்புலன்களையும் அடக்குவதற்காகவே தியானம்!”

**மேல்மருவத்தூரில் தியானம் செய்வதால்:**

“இந்த மண்ணில் 108 முறை அமர்ந்து தியானம் செய்தவர்களையும் ஒன்பது முறை இங்கே இருமுடி செலுத்தியவர்களையும் ஏவல், பில்லி, சூனியங்கள் தாக்காது.”

**உலக வளர்ச்சிக்கு ஏற்பாடுகள்:**

“உலக வளர்ச்சிக்கும் தியானப் பயிற்சிக்கும் இங்கு ஏற்பாடுகள் உண்டு!”

**செவ்வாடைத் தொண்டர்களுக்குத் தியானப் பயிற்சி:**

“இங்கே செவ்வாடைத் தொண்டர்களை அமர்த்தி, தியான முறையைக் கற்பிப்பதன் மூலம் சக்தியைப் புரிந்து கொள்ளலாம்.”

**தியான மண்டபம் அமைத்துக் கொடு (அறநிலைக்கு):**

“கருவறையைச் சுற்றிச் சலவைக்கல் போட்டுத் தியானம் செய்வதற்குரிய வசதிகளைச் செய்து வை! இந்தத் தியானமண்டபத்திற்குச் சலவைக்கல் கொடுப்பவர்களின் குடும்பங்கள் வளரும். பெண்களுக்கான ஆசிரம அமைப்புகளும் எதிர்காலத்தில் இங்கு உண்டு.”

**தியானப் பயிற்சி:**

“நீங்களெல்லாம் அடிகளாரிடம் தியானப் பயிற்சியைக் கற்றுக்கொள்ள வேண்டும்.”

**பெண்களுக்குத் தியானம்:**

“பெண்கள் பகல் 12.00 மணிக்குத் தியானம் செய்ய வேண்டும். மனக்கட்டுப்பாட்டுடன் தியானம் செய்ய வேண்டும். இரவு வேளையிலும் வீட்டில் தியானம் பழகலாம். ஆனால் உங்களால் அது முடியாது. மாதவிலக்காக இருந்தாலுங்கூட 10 அல்லது 15 நிமிடங்கள் தியானம் கடைப்பிடிக்க வேண்டும்.”

**தியானமும்; ஆன்மிகமும்:**

“தியானம் நிதானத்திற்கு வழிவகுக்கும். நாளைய வளர்ச்சிக்கு ஆன்மிகத்தில் வழி உண்டு.”

**மனத்தையும், காமத்தையும் கட்டுப்படுத்த...**

“வாடுகிற நேரத்தில் வாடியும், பாடுகிற நேரத்தில் பாடியும், அழுகிற நேரத்தில் அழுதும் உங்களிடத்தில் ஆன்மிகத்தை வளர்த்து வருகிறேன். வெளிவேடம் தேவையில்லை. மனத்தையும் காமத்தையும் கட்டுப்படுத்தத் தான் தியானப்பயிற்சி அளிக்கிறேன்.”

**தியானப்பயிற்சி – சில நுணுக்கங்கள்:**

“தியானம் இருக்கும் போது இடுப்பு வலி, விலாவலி, முதுகு வலி, கழுத்து வலி முதலியன ஏற்படும். படிப்படியாக 10,20,30,40 நிமிடம் என்று நேரத்தைக் கூட்டிக்கொண்டே வரவேண்டும். அதன் பின் சிறுநீர் கழிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். இந்தத் தடைகளையெல்லாம் கடந்து தான் நீங்கள் முன்னேறி வரவேண்டும். பிறகு கட்டுப்பாட்டுடன் 40 நிமிடங்களிலிருந்து மூன்று மணிநேரம் வரை பொறுமையாகத் தியானம் இருந்தால் நீங்கள் கால்பங்கு ஆன்மிக முன்னேற்றம் அடையலாம்.

தியானத்தை நிதானத்தால் தான் கட்டுப்படுத்த முடியும். வெள்ளத்தைத் தடைசெய்ய வேண்டுமானால் தொடக்கத்திலேயே கட்டுப்படுத்த முடியாது. வெள்ளநீரைச் சிறிது வடிந்து போகும்படி விட்டு, அதன் பிறகு தான் கட்டுப்படுத்த முடியும்.”

**இன்றைய குழப்பங்களிலிருந்து விடுபட:**

“அரசியலில் சாக்கடை உண்டு. சுத்தம் கிடையாது. அது சக்தியற்றது. அங்கே சேதாரங்கள் உண்டு. இந்தத் துன்பங்களிலிருந்து விடுபட வேண்டுமானால் காலை ஆறுமணிக்குள் எழுந்து 1008, 108 மந்திரங்கள் படித்து முடித்துத் தொடர்ச்சியாக இருமுடி ஏந்தி வரவேண்டும். உங்கள் தாய், தந்தையரிடம் பாசமாக இருக்க வேண்டும். ஆன்மிக உணர்வினால் தான் இன்றைய கொடுமைகளைக் கட்டுப்படுத்த முடியும்.”



**ஆரம்பப் படிப்பு:**

“அ-ஆ - என்ற எழுத்துக்கள் ஆரம்பத்தில் எழுதிப்படிக்கும் போது அதனருமை தெரியாது. ஆனால் அந்தப் பயிற்சி தான் உங்கள் பிற்காலப் படிப்பிற்கு அடிப்படை. அதுபோல இங்கே நான் தருகிற இந்தப் பயிற்சிகளின் அருமை இப்போது உங்களுக்குத் தெரியாது. உங்களின் பிற்கால ஆன்மிக முன்னேற்றத்திற்கு இந்தப் பயிற்சி தான் அடிப்படை. இவற்றின் அருமைகள் காலப்போக்கில் பின்னால் தான் தெரியும்.”

**தியானமும்: கட்டுப்பாடும்:**

“மூக்கு, காது, வாய் என்னும் மூன்றையும் அடக்கித் தியானப் பயிற்சி செய்வதால் மூன்று ஆசாபாசங்களும், மூன்று குணங்களும், ஐம்புலக் கட்டுப்பாடும் ஏற்படும். மூன்று குணங்களும் முக்கோண வடிவமாகும். தியானம், மௌனம் கடைப்பிடிப்பதால் அவை கட்டுப்படுகின்றன. மனக் கட்டுப் பாடில்லாததால் சில வார்த்தைகள் கட்டுப்பாட்டை மீறிப் போய்விடுகின்றன.”

**ஆன்மிக ஈடுபாட்டால் வருவன:**

“ஆன்மிக ஈடுபாட்டால் பலம், பலன், பொருள், பாசம், வளர்ச்சி, மனக்கட்டுப்பாடு, தியானக் கட்டுப்பாடு உண்டாகும்.”

**ஆன்மாவில் அமைதி இல்லையென்றால்...**

“ஆத்மா வேறு; மனசாட்சி வேறு. மனசாட்சியால் ஆன்மாவைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு மனக்கட்டுப்பாடு அவசியம். ஆன்மக்கட்டுப்பாடு இல்லாவிடில் நீ எத்தனை முறை கோயிலுக்கு வந்தாலும் பலனில்லை. எத்தனை முறை 1008 போற்றி படித்தாலும் பலனில்லை. ஆன்மாவில் அமைதி இல்லையெனில் ஆன்மா ஆணவமாக மாறும்.”

**தியானம் – நிதானம்:**

“தியானம் நிதானத்திற்கு வழிகாட்டுகிறது.”

**எந்த நிலையிலும் என் நினைவு உனக்கு வரவேண்டும்:**

“மகனே! நீரோடைக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு தூண்டில் போட்டுக் கொண்டு மீன் பிடிப்பவனைப் பார்த்திருக்கிறாயா? ஒரு கையில் “டீ” டம்ளரை வைத்துக் கொண்டிருப்பான். இன்னொரு கையால் துண்டு பீடி வைத்துக்கொண்டு புகை பிடிப்பான். இன்னொரு புறம் டிரான்சிஸ்டர் கருவியில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருப்பான். அங்கே யாரேனும் ஒருத்தி நடந்து சென்றால் அவளையும் ரசித்துக்

கொண்டிருப்பான். இத்தனை காரியங்களையும் செய்து கொண்டிருக்கின்ற அவனுடைய கவனமெல்லாம் எதிலே இருக்கும் தெரியுமா? அந்தத் தூண்டிலிலே - தக்கையிலே தான் இருக்கும். அதுபோல உலகியலில் உன் கவனமெல்லாம் என்னைச் சுற்றியே இருக்கவேண்டும். புரிந்துகொள்!''

**சித்தர் பீடத்தில் தியானம்:**

"காலை அபிடேகத்தின் போது விடியற்காலம் சுமார் ஐந்து மணி முதல் ஆறு மணி வரையில் சலசலப்பில்லாத போது - பக்தர்களைப் புற்று மண்டபத்திற்கு வெளியிலும் கருவறைக்கு வெளியே பின்புறத்திலும், வேப்பமரத்தைத் தாண்டாமலும் அமரச் செய்து தியானத்தில் ஈடுபடுத்த வேண்டும். மனத்தை ஒரு நிலைப்படுத்தி இரண்டு நிமிடம் தியானம் இருந்தாலும் போதுமானது.''

**தியானத்தின் மூலம் பலனடையலாம்:**

"பாலைக் கடையக் கடைய அதிலிருந்து பல பொருள்கள் வெளிப் படுகின்றன. தயிர், வெண்ணெய், நெய், மோர் என்ற பல பொருள்கள் பாலில் இருந்து வெளிப்படுகின்றன. அதுபோல ஆன்மிகத்தில் உள்ள பல பொருள்களைத் தியானத்தின் மூலமாக நீங்கள் வெளிக்கொணரலாம்.''

**மன அமைதிக்குத் தியானம்:**

"ஆன்மிக உணர்விற்குத் தியானம் தேவை. உடம்பிற்கும் மனத்திற்கும் ஓய்வு தருவதற்காகவே தியானம்! தியானத்தால் மன அமைதி பெறலாம்.''

**எதை வைத்து உயர வேண்டும்?**

"ஒவ்வொருவரும் உழைப்பாலும் தியானத்தாலுந்தான் உயரவேண்டும். பாமர மக்களும் தியானம் செய்ய வேண்டும். இங்கு வருகிற பக்தர்கள் பாமரமக்களாக இருந்தாலும் அவர்கள் தியானம் செய்வதால் அவர்களுடைய பாவத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்.''

**தியானத்தால்...**

"தியானம் செய்வதனால் சகிப்புத்தன்மை, பண்பு, கட்டுப்பாடு உண்டாகும். நீங்கள் எங்கிருந்தாலும் சண்டை சச்சரவுகள், சின்னச்சின்ன தகராறுகள் ஏற்படும். ஆன்மிகத்திலும் தியானத்திலும் ஈடுபடுவதால் சகிப்புத்தன்மையுண்டாகிறது.''



**பெண்களுக்கு முக்கியம்:**

"பெண்களுக்குத் தியானம் முக்கியமானது.''

**தியானத்தில் கிடைக்கிற அனுபவம்:**

"தியானத்தில் உட்காரும்போது நீங்கள் செய்த பாவந்தான் முன்கூட்டிக் காட்சிகளாக வரும்! அவற்றிற்குப் பிறகுதான் புண்ணியக் காட்சிகள் வரும்! படக்காட்சியில் புதுப்புது காட்சிகளை அமைப்பது போல எதிர்காலத்தை எப்படி எப்படி அமைத்துக் கொள்வது என்ற எண்ணம் உங்களுக்குத் தோன்ற வேண்டும்.''

**ஆன்மிகம் என்ற செடி!**

"ஒரு செடியை நடுகிறபோது இது நமக்கு ஆகாத செடி என்று கருதி வேறொரு செடியை நடுகிறாய். செடி நடும்போது பல தொல்லைகள் ஏற்படுகின்றன. வளர்ந்த பிறகு பூச்சிகள் அழிக்கின்றன. அவற்றைக் கட்டிக்காக்க பொருளாதாரம் இடந்தரமாட்டேன் என்கிறது. எல்லா நெருக்கடிகளையும் கடந்து விவசாயம் பலன் தரும்போது அதன் பலனை உணர்கிறாய். அந்த மரங்கள் உனக்கு மட்டுமின்றி உன் சந்ததிகளுக்கும் பலன் தருகின்றன.

அதே போலத்தான் உன் ஆன்மிக ஈடுபாடும்! நீ ஆன்மிகத்தில் ஈடுபடும்போது பலரும் உன்னைப் பற்றிப் பலவிதமாகப் பேசுவார்கள். பல இடையூறுகளும் வரும். அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் ஐம்புலன்களை அடக்கித் தியானத்தினை மேற்கொண்டு முழுமையாக ஆன்மிகத்தில் ஈடுபடும்போது தான் ஆன்மிகத்தின் முழுப்பலனையும் உன்னால் பெறமுடியும். அவ்வாறு ஏற்படும் பலன்கள் உனக்கு மட்டுமின்றி உன் சந்ததியினருக்கும் கிடைக்கும்.''

**தியானம் தான் எல்லாம்:**

"தியானம் தான் மனக்கட்டுப்பாட்டிற்கு வழி!

தியானம் தான் எல்லாவற்றிற்கும் சிறந்தது!

தியானம் தான் ஒருவன் வளர்ச்சிக்கு அடையாளம்!

தியானம் தான் எல்லாவற்றிலும் மேலான பொருள்!

தியானம் தான் நிதானத்தைக் கொடுக்கும்!

தியானத்தினால் எல்லாவற்றையும் நீ அடையலாம்!

இனி எந்தத் துறையிலும் அழிவு உண்டு. அதிலிருந்து விடுபட விரும்புகிறவன் ஆன்மிகத்தில் ஈடுபாடு வைத்துக் கொண்டு, மனக்கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ள வேண்டும்.''

**வேர் பிடித்து நிலைக்க வேண்டும்:**

''செடி நன்றாக வேர் பிடித்து வளராமல் மேலோட்டமாக வளர்ச்சி பெற்றிருந்தால் காற்றாலும், வெள்ளத்தாலும் அழிந்து போகும்.

அந்தச் செடியின் வேரானது கல், முள் எல்லாவற்றையும் தாண்டிப் பூமியில் ஆழமாக வேர்விட்டு ஊன்றி வளர்ந்திருக்குமானால் நல்ல பிடிப்புடன் நிலைத்து நிற்கும்.

அதுபோலவே மனிதனும் ஆன்மாவை அடக்கி, ஆதிபராசக்தியைப் பற்றிக் கொண்டு ஆழமாக வேர் பிடித்து வளர்ந்து நிலைக்க வேண்டும்.'

**தொல்லைகளால் துவளாதிருக்க:**

''எல்லோருடைய வீட்டிலும் கஷ்டம் உண்டு. தொல்லை உண்டு. இவற்றையே எண்ணிக்கொண்டு கவலைப்பட்டால் மட்டும் தீர்ந்துவிடாது. எனவே தினந்தோறும் தியானம் செய்!''

**ஆன்மிகமும் – தியானமும்:**

''பயிருக்குப் பாதுகாப்பு அளிப்பது போல ஆன்மிகத்தில் உனக்குப் பாதுகாப்பு வேண்டுமாயின் தியானப் பொறுப்பை ஏற்றுச் செயற்பட வேண்டும்.''

**அழுக்குகள் தீர தியானம்:**

''பெரிய உள்ளத்தில் சிறிய அழுக்கு உண்டு. சிறிய உள்ளத்தில் பெரிய அழுக்கு உண்டு. கடல் அலைக்கும் நுரை உண்டு. அந்த நுரைக்கும் வெளியேற கரை உண்டு.''

**செவ்வாடைத் தொண்டர்களுக்குத் தியானம்:**

''செவ்வாடை அணிந்தாலும் அழுக்கு இருக்கிறது. செவ்வாடை அணிந்து கொண்டு உள்ளத்தில் அழுக்கு இருக்கக் கூடாது. உள்ளத்து அழுக்குகளைப் போக்கிக் கொள்ளவே தியானம் தேவை.''

**கிரகணத்தின் போது தியானம்:**

''கிரகணத்தின் போது நீங்கள் தியானத்தில் அமர்ந்தால் பல ஆக்க விளைவு, பக்தி உணர்வு, மந்த புத்தி நீங்குதல் ஆகிய பலன்கள் உண்டாகும்.''



**மேல்மருவத்தூருக்கு வரும்போது...**

''மாதத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை இங்கே வந்து செல்வது உனக்கு நல்லது. ஏதோ வந்தோம் போனோம் என்று இருக்கக்கூடாது. எனக்கு அர்ச்சனை செய்துவிட்டால் மட்டும் போதாது. இங்கே வரும்போதெல்லாம் இரண்டு அல்லது மூன்று நிமிட நேரம் தியானம் செய்துவிட்டுச் செல்!''

**ஆன்மாவை ஒருநிலைக்குக் கொண்டு வா:**

''கார் எவ்வளவு வேகமாகப் போனாலும் ஓர் இடத்தில் நின்று தான் ஆகவேண்டும். அதுபோல ஆன்மாவையும் ஒரு நிலைக்குக் கொண்டுவர வேண்டும்.''

**தியானம்:**

''கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு தான் வெளியுலகத்தைப் பார்க்க முடியும் என்பதில்லை. கண்களை மூடிக்கொண்டும் வெளியுலகத்தைப் பார்க்கலாம். தியானம் பழகி வந்தால் இந்த உண்மை புரியும்.''

**தியானத்தின் போது...**

''தியானத்தின் போது நீங்கள் சிறு வயதில் செய்த தவறுகள், துரோகங்கள் உங்கள் முன் வருகின்றன. அவற்றை அப்படியே விடு! பின்னால் அந்த எண்ணங்கள் மாறும்!''

**வெளிவேஷம் வேண்டாம்:**

''மற்றவர்களெல்லாம் பார்க்க வேண்டும் என்பதற்காக மந்திரங்களைப் படிப்பதைக் காட்டிலும், இருட்டறையில் இருந்து கொண்டு தியானம் செய்வது சிறப்பு.''

**கஷ்டங்கள் வரும்போது...**

''கஷ்டங்கள் வரும்போது தியானத்தை மேற்கொள்ள வேண்டும். ஐந்து நிமிடம் மௌனம் இருக்க வேண்டும்.''

**தியான முறை:**

''அறுகோணம் போல் கால்களை வைத்துக் கொண்டு சின்முத்திரையுடன் தியானம் செய்ய வேண்டும்.''

**உன்னை நீயே புரிந்துகொள்ள வேண்டும்:**

''உன்னை நீயே புரிந்து கொள்ள வேண்டும். உன் ஆன்மாவையும் புரிந்து கொள்ள வேண்டும்.''

**தியானம் எதற்கு?**

“ஓய்விற்காகத் தியானமும் உணவுக் கட்டுப்பாட்டுக்காக விரதமும் பயன்படுகின்றன. பெண்களுக்கு வீட்டு விலக்கு ஏற்படுவதும் ஓய்வு பெறுவதற்காகத்தான்! ஓய்வு என்பதற்குச் சோம்பேறித் தனமாக இருப்பது என்று பொருள் அல்ல!”

**தியானம்: விளக்கம்:**

“தீ, யானம் இரண்டும் கொண்டது தியானம் ஆகும். தீ என்பது தீய பழக்கங்களைக் குறிக்கும். யானம் என்பது பாத்திரங்களைக் குறிக்கும். உன் மனம் தான் அந்தப் பாத்திரம். உன் மனம் என்ற பாத்திரத்தில் உள்ள அழுக்குகளை வெளியேற்றி, நீ தெய்வ நிலைக்கு உயரவேண்டும் என்பதற்காகவே தியானம்!”

**தியானமும் மௌனமும்:**

“எப்போதெல்லாம் உன் மனம் குழம்புகிறதோ...

எப்போதெல்லாம் உனக்கு எதிர்ப்புகள் வருகிறதோ...

அப்போதெல்லாம் ஒரு பத்து நிமிடம் மௌனமும் தியானமும் மேற்கொள்!”

**அடிகளார் – சுயம்பு – அன்னை:**

“அடிகளார், சுயம்பு, ஆதிபராசக்தி இம் மூன்றையும் நினைத்து ஒரு முகத்தோடு தியானம் செய்! உன் வாழ்வில் உயர்வு எப்படி உள்ளது என்பதைப் பிறகு பார்!”

**இந்த மண்ணில்தான் உண்டு:**

“செல்வம் உள்ளவனுக்கும் அமைதியில்லை. செல்வம் இல்லாதவனுக்கும் அமைதியில்லை.

அவனவனும் வந்து கடைசியில் என்னிடம் கேட்பது என்ன?

அமைதி ஒன்றுதான்! நிம்மதி ஒன்றுதான்.

அன்புக்கும், பண்புக்கும், பாசத்திற்கும் நான் பொறுப்பு. இவையெல்லாம் இந்த மண்ணில் உண்டு (மேல்மருவத்தூர்).

மனிதன் மனத்தை அலைபாய விட்டு விட்டு அமைதியை இழந்து தவிக்கிறான்.

பணம் பணம் என்று ஓயாமல் அலைந்தால் கடைசியில் ஓய்ந்து போவீர்கள்.



உங்கள் ஆன்மாவிற்கு என்றும் அழிவில்லை. எனவே அலைபாயும் மனத்தைக் கட்டுப்படுத்து.

தியானத்தில் மனத்தைச் செலுத்து.

எவ்வளவுதான் ஓடியாடி அலைந்தாலும் சில நிமிட நேரமாவது தனிமையில் அமர்ந்து தியானம் பழகு! தியானத்தில் இரு!”

# 16. இருமுடி

## இருமுடி – பொருள்:

“இருமுடி என்பதற்கு இருள்முடி என்று பொருள். இதயத்தில் உள்ள இருளைப் போக்க அணியும் முடி என்று பொருள். கணவன், மனைவி இருவரின் அகத்தோற்றத்தையும் முடி போடுவது என்று பொருள். மற்றும் மனிதனின் அகமும், புறமும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதையும் இருமுடி குறிக்கும்.”

## எப்படியும் ஏற்றுக் கொள்கிறேன்:

“திருமணம் என்பது பத்திரிகை வைத்தும் நடக்கிறது. பதிவு செய்யப்பட்டும் நடக்கிறது. வெற்றிலை வைத்தும் நடக்கிறது. எல்லாமே திருமணமாக ஏற்கப்படுகிறது. அதுபோலவே இருமுடி எப்படி ஏந்தி வந்தாலும் ஏற்றுக் கொள்கிறேன்.”

## இருமுடிக் குழுவின் குருவுக்கு:

“இருமுடி எடுத்து வருகிறவன் தன் தலையில் உள்ள இருமுடியை ஒரு கையால் பிடித்துக் கொண்டு மற்றவன் தலையில் இருமுடியை எடுத்து வை! உன் தலையெழுத்தையும் பிடித்துக் கொள்! அவனுடைய தலையெழுத்தையும் எடுத்து வை!”

## தடையை மீறிக்கொண்டு வந்தால்:

“என்னிடம் வரமுடியாதபடிப் பல தடைகள் வரும். அவற்றையும் மீறிக்கொண்டு வரவேண்டும். அப்போது என் அருள் உண்டு.’

## இருமுடி மூவகை: சிவப்பு – மஞ்சள் – பச்சை:

“உலகமே சிவப்பாகி, சிவப்பு மஞ்சளாகி, மஞ்சள் பச்சையாக மாறுகின்ற வாய்ப்பைக் கொடுக்கப் போகிறேன்.”

## உன்னுடைய அழுக்கு: குடும்பத்தின் அழுக்கு:

“இருமுடி செலுத்துவது உன்னுடைய அழுக்குகளை நீக்கிக் கொள்ளவே! உன் உள்ளத்தில் உள்ள அழுக்கு; உன் குடும்பத்தில் உள்ள அழுக்கு; இவ்விரண்டு அழுக்குகளை நீக்கிக் கொள்ளவே



இந்த இருமுடி! ஒழுக்கம்; கட்டுப்பாடு இன்றி நீ செலுத்தும் இருமுடியால் பயனில்லை.”

## இருமுடி செலுத்துபவர்களுக்கு:

“இருமுடி செலுத்த வருகிற பக்தர்கள் 5 நிமிடங்கள் அல்லது 10 நிமிடங்கள் அல்லது 15 நிமிடங்கள் மௌனம் இருந்து இருமுடி செலுத்திவிட்டுப் பின்னர் சுற்றுப்புற சுகாதாரம், தொண்டர்களுக்கும், பக்தர்களுக்கும் உணவு பறிமாறுதல், அங்கப்பிரதட்சணம் வருகிற பக்தர்களுக்கு உதவி செய்தல் போன்ற தொண்டுகளைச் செய்துவிட்டு அதன் பிறகு தியானம் கடைப்பிடிக்க வேண்டும். தியானத்தை முடித்துக் கொண்டு அதன் பிறகு குளித்து அங்கவலம் செய்ய வேண்டும்.”

## இருமுடிப் பணியாற்ற வரும் பெண் தொண்டர்களுக்கு:

“அன்பு, அடக்கம், பக்தர்களிடம் பொறுமை, நிதானம் கடைப்பிடிக்க வேண்டும். இங்கே பணிசெய்ய வரும் முன்பாக ஐந்து நிமிடங்கள் தியானம் முடிந்த பின் செல்! வந்திருப்பவர்களுடன் சேர்ந்து ஒரு வேலையைச் செய்து வழிகாட்டு. அவர்களுக்கு உத்தரவு போடாதே! வீட்டுப் பிரச்சனைகளைப் பற்றி இங்கே பேசாதே! அதே சமயம் வருகிற பக்தர்களை உபசரிக்கத் தவறாதே!

எப்போதும் சுத்தம், சுகாதாரம், ஒழுக்கம் போன்ற நடைமுறைகளைக் கடைப்பிடி! இருமுடி அபிடேகம் செய்யும் பணியும் ஒரு நல்ல சந்தர்ப்பமே! இதை நன்கு பயன்படுத்திக் கொள்! இந்தப் பணி செய்வதனால் மற்றவர்களை விட உங்கள் மனநிலை ஒருபடி உயர்ந்துள்ளது.

பெண்களுக்குப் பலம் உண்டு. அறிவு உண்டு. அறிவார்ந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும். காலம், நேரம் தெரிந்து பயன்படுத்திப் பெண்கள் சமுதாயம் பலம் மிக்க சமுதாயம் என்று கூறும்படிப் பெண்கள் யுகத்தை வடிவமைக்க வேண்டும். உங்கள் வீடுகளில் பார்ப்பவர்கள் இவளா இங்கு இப்படிப் பணி செய்கிறாள்? என்று வியக்கும் வண்ணம் நடந்து கொள்ள வேண்டும். இங்கே செய்யும் பணியின் பலன் இந்தப் பிறவியிலேயே மட்டும் கிடைக்கும் என்று நினைக்காதே! அடுத்த பிறவிக்கும் பலன்கள் கிடைக்கும்!”

## வழிவழியாக வந்து இருமுடி செலுத்து:

“1008, 108 எல்லாம் படித்து வழிபாடு செய்ய முடியவில்லையே என்று நினைக்காதே! இங்கே இருமுடிப் பணியில் செய்யும் தொண்டு போதும்! உன் குடும்பத்தில் உள்ள பெண்ணை வெளியே கொடுத்த

பிறகு அது அவள் குடும்பம்; உன் குடும்பம் தனி! இப்படி வழிவழியாக வந்து இருமுடி செலுத்த வேண்டும். பெண்கள் மஞ்சள் உடையில் வரவேண்டும். ஒன்பது மாலை செலுத்தாதவர்கள் செவ்வாடையில் வருதல் வேண்டும்.

பெண்கள்! பெண்கள்! என்று ஏன் குறிப்பிடுகிறேன்? பெண்கள் பக்கம் பக்தி குறையக்கூடாது. பெண்களிடம் பக்தி வளர்வதால் குடும்பத்திலும் பக்தி வளர்கிறது. பெண்கள் ஆன்மிகத்தில் ஈடுபடுவதால் அழிவு தடுக்கப்படுகிறது."

### உள்ளத்து அழுக்கும், வெளி அழுக்கும்:

"எத்தனை முறை இருமுடி செலுத்தினாலும் என் குறை தீரவில்லையே என்று நினைக்கக் கூடாது. எத்தனை முறை குளித்தாலும் அழுக்குப் போவதில்லை. உள்ளத்து அழுக்கைப் போக்கிக் கொள்ள வேண்டி என்னை நாடினால் அருள் உண்டு. உங்களின் வெளி அழுக்குகளுக்கு நான் பொறுப்பல்ல!"

### இருமுடி செலுத்த வருபவர்களுக்கு:

"1. உங்கள் குறைகளைப் போக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டு மௌனமாகச் சந்நிதியை வலம் வரவேண்டும்.

2. இருமுடி பிரிக்கும் போது பிரிப்பவர்களும் மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

3. கருவறையில் இருமுடி அபிடேகம் செய்யும்போது மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

4. கருவறையின் வாயிற்படியை மறைக்காமல் நின்றபடி அபிடேகம் செய்ய வேண்டும்.

5. இங்கே செய்யவேண்டிய தொண்டுகளெல்லாம் செய்து முடிந்த பிறகு, கருவறைக்குப் பின்னால் சென்று குறைந்தது பத்து நிமிடமாவது தியானம் இருக்க வேண்டும்.

6. பின்னர் அம்மாவின் சந்நிதி முன்னால் ஒரு நிமிடம் அமர்ந்துவிட்டு எழுந்து செல்லவேண்டும்."

### வசதி உள்ளவர்களுக்கு:

"நீங்கள் ஒவ்வொருவரும் குறைந்தது ஐந்து பேர்களுக்காவது இருமுடி அணிவித்து அந்தச் செலவினங்களை நீங்களே ஏற்று, அவர்களையும் இங்கே அழைத்துவர வேண்டும். நீங்கள் சைவ உணவு சாப்பிடுகிறவர்களாக இருக்கலாம். பக்கத்து வீட்டில்



வைக்கும் கருவாட்டுக் குழம்பின் நாற்றம் உங்களுக்கும் தான் எட்டும். அதுபோல நீங்கள் என்னதான் ஆன்மிக நெறியில் ஈடுபட்டாலும் உங்கள் பக்கத்தில் உள்ளவர்களையும், ஆன்மிகப் பாதைக்கு அழைத்துவர வேண்டும். அவ்வாறு அழைத்து வந்தால் அந்தக் கருவாட்டு நாற்றம் உங்களுக்கு எட்டாது.

ஆன்மிக நெறியில் ஈடுபடாதவர்களையும், ஆன்மிகத்தில் ஈடுபடுத்தினால் அவர்களுக்கும் நிம்மதி கிடைக்கும்; உங்களுக்கும் நிம்மதி கிடைக்கும்.

ஐந்துபேர்க்கு இருமுடி போட்டுக் கூட்டி வருவதனால் அந்த ஐந்து பேருடைய ஆன்மாவும் குளிர்கிறது. அப்படிக் குளிரும் போது அந்தப் பலன் உங்களுக்கும் கிடைக்கும்."

### இருமுடியின் பலன்:

"கலங்கிய நீரைத் தெளிவடைந்த பிறகே குடிப்பது போல, இருமுடி செலுத்தியும் துன்பம் தீராத நிலையில் இருப்பவர்கள், பின்னர் மனம் தெளிவடைந்து நிம்மதி பெறுகிறார்கள்."

### சக்தி விரதம் ஏன்?:

"ஐம்புலன்களை அடக்கத்தான் விரதம்! விரதம் இருந்தால் தான் நோய் வராது. உடலில் சேர்கிற அழுக்கைக் குளித்துப் போக்கிக் கொள்வது போல, துருப்பிடித்த பொருட்களை எண்ணெய் கொண்டு சுத்தப்படுத்துவது போல, உள்ளத்தில் ஏற்படும் அழுக்குகளை நீக்கிக் கொண்டு தூய்மையாக வாழ்வதற்கு விரதங்கள் உதவும்."

### இருமுடியின் ஆற்றல்:

"அழுக்கு நிறைந்த கோணியில் தானியங்களைக் கொட்டி, அந்தக் கோணியைச் சிறு கயிற்றால் கட்டுகிறார்கள். கோணியில் அதிகமாக உள்ள பொருளைக் கட்டுப்படுத்தக் கூடிய சக்தி ஒரு கயிற்றுக்கு உள்ளது. உங்கள் உள்ளம் என்னும் கோணியில் பாவங்கள் நிறைந்து மூட்டையாக உள்ளது. இருமுடி கட்டிவந்து இங்கே அவிழ்ப்பதனால் உங்கள் பாவங்கள் வெளியேற்றப்படுகின்றன. சிறிய கயிறு கோணியில் உள்ள பொருள்களைக் கட்டுப்படுத்துவது போல உங்கள் இருள்முடியை (பாவமூட்டைகளை) நான் கட்டுப்படுத்துகிறேன்."

### வினை தீர்வது:

"ஒன்பது முறை இருமுடி செலுத்திவிட்டால் உன் குறைகளெல்லாம் தீர்ந்துவிடும் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது.

சிலருக்கு ஐந்தாவது இருமுடி அணிந்தாலே வினை தீரும். சிலருக்கு 10, 11 என்று அணிந்தாலும் வினை தீருவதில்லை.''

### இருமுடி ஏந்தி வருகிறபோது...

''இருமுடி ஏந்தி வருகிற நீங்கள் பத்து பேர் சேர்ந்து, அடுத்த பத்து பேர் வீட்டிற்குச் சென்று விரதமிருக்கும் நாட்களில் மாற்றி மாற்றி 108 படித்து வழிபாடு செய்து கொள்ள வேண்டும்.''

இந்தச் சந்நிதிக்குள் இருமுடி செலுத்துவதற்கு முன்பாக இரண்டு அல்லது மூன்று ஏழைகள் இல்லங்களுக்குச் சென்று அங்கேயும் 108 படித்து, முடிந்தால் அவர்களுக்கு அன்னதானம், ஆடைதானம் செய்யுங்கள்! அவர்கள் அளிக்கும் எளிய விருந்தோம்பலையும் அன்போடு ஏற்றுக்கொள்! அவர்களுக்கு என் குங்குமப் பிரசாதத்தைக் கொடு! அதன் பிறகே இங்கு புறப்பட்டு வா!''

### ஏழைகளுக்கு இருமுடி போட்டு அழைத்து வா!

''அனாதைக் குழந்தைகளையும் அணைக்க வேண்டும் என்பதற்காகத் தான் பத்து பேர்க்கு மாலை போட்டு அழைத்து வரும்படிச் சொல்கிறேன். அவர்களுடன் இருந்து செய்தால் பெருமை! பெருமை பணத்தால் இல்லை. அன்பாலும், தொண்டாலும் வருகிற பெருமையே பெருமை! அவற்றுக்குத்தான் பலனுண்டு!''

### மாந்திரிகம் அழியும்:

''இருமுடி அணிந்தால் உங்களுக்கெதிரான மாந்திரிகம் அழியும்.''

### இருமுடியும் பலனும்:

''இருமுடி செலுத்தியதும் பலனை உடனே எதிர்பார்க்காதே! ஒரு செடியை ஊன்றி, நட்டபின் அது வேர்பிடித்து தளிர்விட்டு பூத்துப்பின் காய்த்து அதன் பிறகே கனி வரும். அதுபோல உன் ஒவ்வொரு இருமுடிக்கும் கட்டாயம் பலன் உண்டு.''

### ஆண் ஆணுக்கு; பெண் பெண்ணுக்கு:

''மன்றத்தில் ஆண் ஆணுக்கும், பெண் பெண்ணுக்கும் சக்தி மாலை போடவேண்டும். மாற்றிச் செய்யக்கூடாது.''

### சக்தி மாலை:

''சக்தி மாலையணிந்து வரும்போது தொண்டு செய்ய வேண்டும். பத்துப் பைசாவாவது தருமம் செய்ய வேண்டும். அன்னதானம் செய்ய வேண்டும்.''



### ஏழைகளுக்கு இருமுடி:

''எத்தனை ஏழைகளுக்கு இருமுடி அணிய வைத்து அழைத்துக் கொண்டு வருகிறாயோ அவ்வளவுக்கவ்வளவு உனக்குப் பலனுண்டு!''

### ஒன்பதுடன் நிறுத்திக் கொள்ளாதே:

''தொடர்ந்து இருமுடி செலுத்து! ஒன்பது மாலை போதும்! பத்து மாலை போதும் என்று நிறுத்திக் கொள்ளாதே! நீ செலுத்தும் ஒவ்வொரு இருமுடிக்கும் கட்டாயம் பலன் உண்டு.''

### பயன் உண்டு:

''கூச்சல், சலசலப்பு இல்லாதபடி மௌனமாக இருமுடி செலுத்தினால் சக்தியுண்டு. கட்டாயம் மௌனம் கடைப்பிடிக்க வேண்டும். இருமுடி ஏந்திப் புறப்படும்போது உன் உறவினர், சுற்றத்தார் எல்லோரையும் அழைத்து வழிபடு! அன்னதானம் செய்து அவர்கள் கொடுக்கும் காணிக்கையை இங்கே கொண்டு வந்து செலுத்து!''

### வசதி படைத்தவர்களுக்கு:

''ஏழைச் சிறுவர் 5 பேர்; சிறுமியர் 5 பேர் ஆக இருமுடி போட்டு அழைத்து வந்தால் பலன் உண்டு.''

### இருமுடியை நிறுத்திக் கொள்ளாதே:

''இருமுடி அணிவதால் துன்பத்திலிருந்து நம்மை அம்மா காப்பாற்றுகிறாள். பாதுகாக்கிறாள் என்பதைத் தற்போது உணர்கிறீர்கள். செலுத்த வேண்டிய இருமுடியைச் செலுத்தி முடித்துவிட்டோம் என்று நினைத்து நிறுத்திக் கொள்ளாதே! அவ்வாறு நினைத்தால் எல்லாம் முடிந்துவிடும்.

இருமுடி முடிந்துவிட்டது என்று நினைக்கக்கூடாது. இருமுடியை விட்டுப்பார்! என்ன நடக்கிறதென்று தெரியும். ஒரு சமயம் மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால், போகப் போக இரண்டு மடங்காகக் கஷ்டங்கள் வரும்.''

### காட்சி கொடுப்பேன்:

''ஒழுக்கமில்லாமல், கட்டுப்பாடின்றி நீ கொண்டு வந்து செலுத்தும் இருமுடியினால் பயன் என்ன? விரதமிருந்து, கட்டுப்பாட்டை மேற்கொண்டு இருமுடி ஏந்தி வருகிற சிலருக்குக் காட்சி கொடுப்பேன். அந்தக் காட்சி பெற்றவர்க்கு மறுபிறவியில்லை.''

**கணக்குப் பார்க்காதே:**

“அடிக்கடி தாயின் சந்நிதிக்கு வருவதற்கோ, இருமுடி செலுத்துவதற்கோ, வேள்வியில் கலந்து கொள்வதற்கோ கணக்குப் பார்க்காதே! இங்கே அடிக்கடி வரவரத்தான் உன்னுடைய சிறப்புகள் மேலோங்கும். ஒருமுறை இருமுடி செலுத்தியவுடன் பயனில்லையே என்று நினைக்க வேண்டாம். ஒவ்வொரு முறையும் செலுத்தியவர்களுக்குப் பலனுண்டு.”

**இருமுடி செலுத்தியும்:**

“இத்தனை இருமுடி செலுத்தியும் ஒருவனுக்குக்கூட இம்மியளவு கூட மன அழுக்குக் குறையவில்லை. இதனைத் தவிர்க்க இருமுடி அபிடேகம் செய்தவுடன் மௌனம், தியானம் ஆகியவற்றை அதிகப் படுத்திக் கொள்ள வேண்டும்.”

**இருமுடியும் மன நிம்மதியும்:**

“பக்தர்கள் மன நிம்மதியோடு இங்கே இருமுடி செலுத்தும் போதுதான் அழைத்து வந்த தொண்டர்களுக்கும், இங்கே இருமுடிப் பணிசெய்யும் தொண்டர்களுக்கும் பலன் கிடைக்கும்.”

**உன்னை வைத்து மற்றவர்க்கும் அருள்:**

“உண்மை உணர்வுடனும், பயபக்தியுடனும், உரிய முறையில் விரதமிருந்து நீ பத்து பேர்க்கு சக்தி மாலை அணிவித்து அழைத்து வருகிறபோது நீயும் குரு ஸ்தானத்தை அடைகிறாய். உன்னை மற்றவர்கள் வணங்குவதால் நீ என்னிடம் பெற்ற அருள் மற்றவர்களும் பெறுவதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது.”

**எதையும் உண்மை உணர்வுடன் செய்:**

“ஏதோ செவ்வாடையணிந்து விட்டோம்; இருமுடியும் செலுத்தி விட்டோம்; நம் கடமை முடிந்து விட்டதென்று நினைத்துக் கொள்ளக் கூடாது. எதையும் உண்மையுணர்வோடு செய்தால் தான் பலன் கிடைக்கும்.”

**தருமம் செய்; தானம் செய்:**

“சக்தி மாலை அணிந்து கொண்டு வருகிறபோது தொண்டும் செய்ய வேண்டும். ஒரு பத்துப் பைசாவாவது தருமம் செய்ய வேண்டும். அன்னதானம் செய்ய வேண்டும். ஏதோ நன்கொடை கொடுத்துவிட்டால் மட்டும் போதாது.”



**விதவைப் பெண்களும் இருமுடி செலுத்த உரிமை உண்டு...**

“மனைவியை இழந்த கணவனுக்கு இருமுடி செலுத்த உரிமை இருப்பது போல, கணவனை இழந்த விதவைகளும் விரதம் இருந்து இருமுடி செலுத்த உரிமை உண்டு.”

**இருமுடி; இருவினை அறுக்கும் முடி:**

“இருமுடி இருள் முடியாகக் கூடாது. உன் கழுத்தை அறுக்கும் முடியாகவும் இருக்கக் கூடாது. உன் இருவினைகளையும் அறுக்கும் முடியாக இருக்க வேண்டும்.

எல்லோரையும் இருமுடி போட்டு வருமாறு சொல்! பாமர மக்களையெல்லாம் இருமுடி போட்டு அம்மாவிடம் அழைத்துக் கொண்டு வா! இதனால் என்ன பயன்? என்று இப்போது உனக்குத் தெரியாது. காலம் உணர்த்தும். அப்போது உணர்ந்து கொள்வாய்!”

**இருமுடித் தொண்டு:**

“இருமுடித் தொண்டு பொறுப்பான தொண்டு! அத்தொண்டு என்றும் வீண் போகாது!

எங்கு பார்த்தாலும் நோய் நொடிகள்! வன்முறைகள் பெருகி வருகின்றன.

எவ்வளவுக்கெவ்வளவு இருமுடி பக்தர்கள் பெருகுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு தணியும்.

அவற்றை இருமுடி தகர்த்து எறிந்துவிடும்.”

**தருமம் செய்!**

“இருமுடி செலுத்தினால் மட்டும் போதாது! பத்துப் பேருக்குத் தருமம் செய்யவேண்டும்.”

**வீட்டிற்கும் நல்லது; நாட்டிற்கும் நல்லது**

“ஏழை எளிய மக்களுக்கும் சக்தி மாலை அணிவித்து அழைத்து வருவது இந்த நாட்டிற்கும் நல்லது. உன் வீட்டிற்கும் நல்லது. பக்தியோடு சக்தியும் சேர்ந்தால் கத்திக்கு வேலையில்லை.

தன்னைப் பாதுகாத்துக் கொள்ள உருவாக்கிய கத்தியும், துப்பாக்கியும் அழிவுக் கருவிகளாகவே பயன்படுகின்றன.”

## இருமுடியால் பாவங்கள் உதிர்கின்றன:

"பூவை எடுத்து நாரோடு சேர்த்துத் தொடுக்கும் போதுதான் அதன் அழகு தெரிகிறது. அதுபோல ஆன்மிகத்தில் நீ நல்ல உள்ளத்தோடு செய்யும் தொண்டு சிறப்படைகிறது.

தலையில் வைத்த பூ, வாடின பிறகு அதனைத் தலையிலிருந்து எடுக்கும் போது, உதிரத்தக்க தலைமுடியும் கூடவே உதிர்கிறது. அதுபோல நீ இருமுடி எடுத்து வரும்போது, நீ தெரியாமல் செய்த பாவங்களும் உனக்குத் தெரியாமலே உதிர்ந்து விடுகின்றன."

## இருமுடி அழிவுகளைக் குறைக்கும்:

"எங்கெங்கே அதிக அளவில் சக்தி மாலை அணிந்து இங்கு வந்து இருமுடி செலுத்தகிறார்களோ அங்கே அழிவுகள் அதிகம் இருக்காது."

## திசை திருப்பவே இருமுடி !

"திசை தெரியாமல் அலையும் இன்றைய மக்களைத் திசை திருப்பவே இருமுடி செலுத்த வைக்கிறேன். ஒருமுறை இருமுடி செலுத்தினாலாவது திருந்துவானா என்று பார்க்கிறேன்."

## இருமுடி:

"உங்கள் பாவங்களைத் தணிக்கவே இருமுடி! பட்டிதொட்டி எங்கும் அலைந்து மற்றவர்களை இருமுடி போட்டு அழைத்து வருகிறபோது உங்களுக்கும் பயன் உண்டு. அவர்களுக்கும் பயன் உண்டு."

## இருமுடி: கணக்குப் பார்க்காதே !

"கடலில் பயணம் செய்பவர்களுக்குக் கலங்கரை விளக்கு வழிகாட்டும். அதுபோலக் கடற்கரை வேள்வியும், பூசையும், இருமுடியும் உங்கள் எதிர்கால ஆன்மப் பயணத்திற்கு வழிகாட்டும்.

இருமுடி விஷயத்தில் கணக்குப் பார்க்காதே!"

## கொடுக்கப்பட்ட அரிய வாய்ப்பு:

"பத்து வருடகாலம் உங்களிடையே பக்தி உணர்வைச் சிதற வைத்து, அதன்பின் அம்மா? என்று பேச வைத்து, என் மடியில் நீங்கள் வந்து விழுந்த பிறகுதான் உங்களுக்குச் சக்தி மாலை என்ற அரிய வாய்ப்பைக் கொடுத்தேன்."

கணவன், மனைவி ஒற்றுமையை வலுப்படுத்த தாலி



எவ்வளவு முக்கியமோ, அதுபோல உங்கள் வாழ்க்கையில் செழிப்பிற்குச் சக்தி மாலை முக்கியம். இந்த நுட்பத்தைப் புரிந்து கொண்டு உண்மை உணர்வுடன் சக்தி மாலை செலுத்து.

சாதாரண நிலையில் அது மணிமாலைதான். அதனைச் சக்தி மாலையாக அணியும் போது அதற்கு தனி மகிமை உண்டு."

## சக்தி மாலை: பாதுகாப்பு வேலி போன்றது:

"திருமணம் இனிது நிறைவேறவும், திருவிழாக்கள் இனிது நிறைவேறவும் காப்பு நாண் அணிகிற(காப்புகட்டுதல்) வழக்கம் உள்ளது. ஒரு கட்டுப்பாடு விதித்துக் கொள்ளவே அந்தக் காப்பு நூல்.

தாலியும் ஒரு வேலி போன்றதே! அதுபோல வாழ்க்கைக்கு வேலி போலப் பாதுகாப்பு தருவது சக்தி மாலை.

நீ அணியும் சக்திமாலைதான் உனது மனசாட்சி!

## இறைவசமாக்கவே இலவச இருமுடி !

"மனித இனத்தை இறைவசமாக்க வேண்டியே இலவச இருமுடி போட்டு அழைத்துவரச் சொல்கிறேன்.

உங்கள் இனத்தை இனவசமாக்க அன்னதானம் செய்யச் சொல்கிறேன்.

இருமுடியும் அன்னதானமும். உங்களையெல்லாம் இறைவசமாக்க உதவும் வழிகள்!

## இருமுடி ஏந்தும் போது...

"இருமுடி அணியும் பொழுது குறைந்தது ஒரு நிமிடமாவது தன்னை மறந்து சந்தோஷமாக இருக்க வேண்டும்.

பிறந்ததிலிருந்து இன்று வரை நீங்கள் வந்த பாதையைத் திரும்பிப் பார்க்க வேண்டும்.

இருமுடி செலுத்துவதற்கு முன்பாக ஆலயத்தில் அரைமணி நேரமாவது மனத்தை ஒரு முகப்படுத்தி இருக்க வேண்டும். அதுவும் முடியவில்லையென்றால் கருவறைக்கு முன் அரை நிமிடமாவது மனத்தை ஒரு முகப்படுத்தினால் கூட, அவர்களுக்கு இருமுடிப் பயனை நான் தருகிறேன்.(1999-ஆம் ஆண்டு கூறியது)

## அழிவிலிருந்து காப்பாற்றுவேன்:

"நான் கூறும் விதி முறைப்படி உண்மையாக விரதமிருந்து இருமுடி ஏந்தி வரும் சக்திகளை அழிவிலிருந்து காப்பாற்றுவேன்."

**இலவச இருமுடி:**

"யார் யாருக்கு எத்தனை இலவச இருமுடி என்று சொல்லியிருக்கிறேனோ அதைத் தொடர்ந்து செய்து கொண்டு வா! அதன் பயனைப் பின்னால் பார்!"

**இயற்கைச் சீற்றங்களிலிருந்து விடுபட...**

"மழை, வெள்ளம், இயற்கைச் சீற்றங்களிலிருந்து விடுபட இருமுடி ஏந்தி வரவேண்டும்."

உலகின் பல பாகங்களிலிருந்தும் இங்கு வந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் பலர் வரக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது கிடைக்கும் வாய்ப்பை நழுவ விடாதே."

**இருமுடி: குரு ஸ்தானம்:**

"அடிகளாரைக் குருவாக ஏற்று, பாதபூசை செய்து குருகாணிக்கை சமர்ப்பித்து குரு ஸ்தானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து இருமுடியைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்."

**இருமுடியால் சமுதாயத்துக்கும் நன்மை உண்டு:**

"சிலை வடிவில் கொலை வடிவம் உண்டு. காற்றிலும் கலப்படம் உண்டு. நூறு பேர்க்கு இருமுடி போட்டு அழைத்து வந்து ஆன்மிகத்தில் ஈடுபடுத்த வேண்டும். அவ்வாறு இல்லையேல், ஒருவனே நூறுபேரை அழிக்கும் நிலை ஏற்படும்."





# 17. ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கம்

**சமுதாய மேம்பாட்டிற்காக:**

"ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கம் மனித சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட வேண்டும். ஆன்மிகத்தால் தான் அமைதியும், கட்டுப்பாடும் இருக்கும். ஆன்மிகநெறி மூலமாக ஒவ்வொருவனும் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள வேண்டும். ஆன்மிகத்தில் ஐம்புலன்களையடக்கும் தன்மையும், கட்டுப்பாடும் தேவை."

**ஆதிபராசக்தி இயக்கத்தின் வழிபாடு:**

"பல்லாயிரம் ஆண்டுகளாகவே சக்திக்கும், சித்தர்களுக்கும், பஞ்சபூதங்களுக்கும் வழிபாடு உண்டு. சக்தியையும், சித்தர்களையும், பஞ்சபூதங்களையும் வழிபடுகின்ற வழிபாடு தான் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்தின் வழிபாடு."

**அடிகளாரும் ஆன்மிக இயக்கமும்:**

"அடிகளார் இல்லறத்துறவியாகஇருப்பது தான் இந்த ஆன்மிக இயக்கத்திற்கே சிறப்பு! இந்த ஆன்மிக இயக்கத்தில் நீங்கள் கணவன் மனைவியாக இருவரும் ஈடுபடுவது தான் மிகச் சிறப்பு!"

**கட்டுப்பாடு தேவை:**

"ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்திற்கு ஆன்மிகவழி தான் தேவை! அதற்குக் கட்டுப்பாடு அவசியம் தேவை! ஆதிபராசக்தி இயக்கம் நல்லொழுக்கம் உள்ள ஓர் இயக்கமாக இருக்க வேண்டும்."

**பெண்களுக்கு முக்கியத்துவம் உண்டு:**

"நாளைய உலகத்தில் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்திற்குப் பெருமையுண்டு. அதில் பெண்களுக்கு முக்கியத்துவம் உண்டு. இந்த இயக்கம் பெண்கள் இயக்கமாக மாறும்!"

**முதலிடம் வகிக்கும்:**

“உலகத்திலேயே ஆதிபராசக்தி இயக்கந்தான் ஒழுக்கத்தில் முதலிடம் வகிக்கும்.”

**அழுக்கு உள்ளவனும் வந்துசேர்வான்:**

“ஓடுகிற ஆற்றில் சாக்கடையும் வந்து கலக்கும். முதலில் அசுத்தமாகத்தானிருக்கும். ஆற்று வெள்ளத்தின் ஓட்டம் சிறிது தூரம் ஓடிச்சென்று தெளிந்து போகும். அதுபோல இந்த ஆன்மிக வெள்ளத்தில் அழுக்கு உள்ளவனும் வந்து விழுவான். காலப்போக்கில் தெளிவடைவான். ஆன்மிகவாதியாக மாறுவான்.”

**பட்டிதொட்டிகளிலெல்லாம்...**

“பட்டிதொட்டிளிலெல்லாம் பக்திமயமாக்குவேன்.”

**உன்னைத்தேடி நதி வராது; நதியை நோக்கி நீ வரவேண்டும்:**

“மகனே! அழுக்கு உடம்பிலும் உண்டு; மனத்திலும் உண்டு. உடல் அழுக்கைப் போக்கிக் கொள்ள நீதான் நதியை நோக்கி வரவேண்டும். உன்னை நோக்கி நதி வராது. மன அழுக்கைப் போக்கிக் கொள்ள நீதான் ஆன்மிக இயக்கத்தை நோக்கி வரவேண்டும். உன்னை நோக்கி இயக்கம் வராது.”

**கலியுகத்தின் இயல்பு:**

“ஆன்மிகத்தை உலகமே எதிர்க்கும். அதுதான் கலியுகத்தின் இயல்பு! நீ உன் கடமைகளைச் செய்து கொண்டே போ! தோல்வி வரும்! சோர்ந்து போகாதே! முடிவில் ஆன்மிகம் தான் வெல்லும்!”

**பழுத்து உதிர்வன சிலவே உண்டு:**

“இந்த ஆன்மிக இயக்கத்தில் இலையாய் இருக்கும்போது உதிர்வன உண்டு; அரும்பாய் இருக்கும் போது உதிர்வன உண்டு; பூவாய் இருக்கும்போது உதிர்வன உண்டு; பிஞ்சாகி உதிர்வன உண்டு; காயாகி உதிர்வன உண்டு; கனியாகி உதிர்வன உண்டு.”

**தொண்டர்களுக்கு:**

“முழுவதுமாக என்னைச் சரணடைந்து ஆன்மிகத் தொண்டு செய்பவன் குடும்பம் என் பொறுப்பில் வந்துவிடுகிறது. என்னையும் என் வழிமுறைகளையும் ஆராயாதே! உன் மூளைக்கு அவைகள் எட்டாது. நான் என்ன கட்டளை இடுகின்றேனோ அதன்படிச் செய்!



இயற்கையில் எந்த ரூபத்திலும் நான் ஆன்மிகம் வளர்ப்பேன். உனக்குக் கொடுக்கிற வாய்ப்பையும், கிடைக்கிற வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டு ஆன்மிகத்தில் முன்னேறு! ஆதிபராசக்தி இயக்கத்தினால் ஏழ்மை, வறுமை ஒழிக்கப்பட்டு வருகின்றது. செவ்வாடையென்றால் ஆன்மிகம்! ஆன்மிகம் என்றால் ஆதிபராசக்தி மன்றங்கள் என்ற நிலைக்கு வருதல் வேண்டும். இம்மன்றங்கள் தமிழ்நாட்டையே மாற்ற வேண்டும்.”

**அரசியல் தொண்டும்! ஆன்மிகத் தொண்டும்!**

“நீ அரசியலில் தொண்டு செய்தால் அதன் தலைவன் உன்னைக் கறிவேப்பிலையாகப் பயன்படுத்திக் கொண்டு உன்னைத் தூக்கி எறிந்துவிடும் நிலையுண்டு. தெய்வத்தை மையமாக வைத்து நீ ஆன்மிகத் தொண்டு செய்யும் போது அகங்காரம் குறைய வாய்ப்புண்டு. அதனால் ஆன்மிக முன்னேற்றம் பெற வாய்ப்புண்டு. தெய்வத்திற்கும் ஆன்மிகத்திற்கும் தொண்டு செய்பவனுக்கு ஐந்து தலைமுறைக்கு என் அருள் உண்டு. அந்த அருள் உன் பேரன் பேத்திகளுக்கும் சென்று பயன்தருவது.”

**நாளைய உலகம்:**

“நாளைய உலகம் ஆன்மிக உலகம்! ஆதிபராசக்தி உலகம்! ஆதிபராசக்தி யுகம் அரும்பத் தொடங்கிவிட்டது. நாளைய உலகிற்கு ஆன்மிகமும் வேள்விகளும் முக்கியம்.”

**குடும்பங்களைத் திருத்துகிற இயக்கம்:**

“உலகில் பலவகைப்பட்ட குருமார்கள் இருக்கலாம். மடங்கள் பல இருக்கலாம். ஆனால் சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருக்கிற ஏழை எளிய மக்களையெல்லாம் ஆன்மிகத்தில் ஈடுபடுத்தி எல்லாவகைப் பூசை முறைகளிலும் பெண்களையே பழக்கப்படுத்தி அப்பெண்களைக் கொண்டு குடும்பங்களையே திருத்தும் இயக்கம் வேறு எதுவும் இல்லை என்பதைத் தெரிந்து கொள்!

மற்ற இயக்கங்களில் லட்சம் லட்சமாகப் பொருள் வசதி இருக்கலாம். ஆனால் ஆன்மிக இலட்சியம் உள்ள இயக்கம் ஆதிபராசக்தி இயக்கம் தான்.”

**மதச்சார்பற்ற இயக்கம்:**

“ஆதிபராசக்தி இயக்கம் போன்ற மதச்சார்பற்ற இயக்கம் இல்லாவிட்டால், உலகத்தில் குலக்கொடிகளும், கொலைக் கொடிகளும் தான் பறக்கும்.

மனித நேயம் தான் இங்கு போற்றப்படுகிறது.”

**பெண்களை ஈர்க்கும் சக்தி:**

“பெண்களை ஈர்க்கும் சக்தி ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்திற்குத் தான் உண்டு.”

**எண்ணிக்கை பலம்:**

“எண்ணிக்கை பலம் நமக்குத் தேவையில்லை. நல்ல எண்ணத்தின் பலம் தான் தேவை. அரசியல் நாட்டம், பொருளாதாரத் தேவைகளை மட்டும் வளர்த்துக் கொண்டால் போதாது. நாட்டின் வளர்ச்சிக்கு ஆன்மிக பலம்தான் முக்கியம்.”

**எங்கே அலைந்தாலும்:**

“மனத்தில் அழுக்கை வைத்துக் கொண்டு நீ புதுப்புது இயக்கங்களை நாடிப் போனாலும் சரி! புதுப்புது சாமியார்களிடம் போனாலும் சரி! உன் மன அழுக்கு நீங்கிவிடாது.

பழுதடைந்த பழைய கடிகாரத்தில் புதிய செல் போட்டாலும் ஓடாது. அதுபோல உன் மனத்தில் அழுக்கை வைத்துக் கொண்டு எங்கு அலைந்தாலும் ஆன்ம வளர்ச்சி கிடைத்து விடாது.

உன் மனம் ஆன்மிக உணர்வுடன் செயல்பட வேண்டும். அப்போதுதான் பலன் கிடைக்கும். வளர்ச்சி ஏற்படும்.”

**குறைத்து மதிப்பிடதே!**

“ஏதோ ஒரு வார வழிபாட்டு மன்றம்! ஏதோ ஒரு அடிகளார்! என்னவோ ஒரு செவ்வாடை! ஏதோ ஒரு சிறிய இயக்கம்! என்று இந்த ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்தைக் குறைத்து மதிப்பிடாதே.”

**எதிர்கால வளர்ச்சி:**

“உங்கள் எதிர்கால வளர்ச்சிக்கும் ஆன்ம முன்னேற்றத்துக்கும் உதவியாகவே ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கம் என்னும் ஒரு பெரிய இயக்கத்தை உருவாக்கித் தந்திருக்கிறேன். அதனைப் பற்றிக் கொண்டு தொண்டு செய்து உயர்வது உங்கள் ஆர்வத்தையும் முயற்சியையும் பொறுத்தது.”

**பெண்களுக்கு முக்கியத்துவம்:**

“இந்த ஆன்மிக இயக்கம் போல வேறு எந்த இயக்கமும் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க முடியாது.”

**எதிர்ப்பும் தேவை:**

“ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்திற்கும் எதிர்ப்பு வரும். அந்த எதிர்ப்பை வைத்துத்தான் இதற்கு வளர்ச்சி ஏற்படும்.”



**ஒரு குடும்பம் போல...**

“ஆலயத்தில் இருக்கும் போது கட்டுப்பாடாக இருந்து, ஆன்மிகம் வளர்ப்பது போல, வெளியிலும் நீங்கள் எல்லோரும் ஒரு குடும்பம் போல ஒற்றுமையாக இருக்க வேண்டும்.”

நீங்கள் எல்லோரும் ஆதிபராசக்தி குடும்பம் என்று மற்றவர்கள் மெச்சும்படி ஒற்றுமையாக இருக்க வேண்டும்.”

**தொண்டும்: தருமமும்**

“இவ்வியக்கம் இல்லாவிட்டால் இங்கே தொண்டும் இல்லை; தருமமும் இல்லை.”

**நீ செய்த புண்ணியம்**

“ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்தில் இருப்பது நீ செய்த புண்ணியம் என்று நினைக்க வேண்டும்.”

# 18. விழாக்கள்

## விழாக்கள் எல்லாம் உங்களுக்காக...

“விழாக்களெல்லாம் எனக்காக அல்ல! உங்களுக்காக! அதோ! அந்தச் சாலை வழியாகப் போகிறவன் எல்லாம் அங்கிருந்தபடியே வேடிக்கை பார்த்துவிட்டு அப்படியே போகிறானே தவிர இந்த மண்ணை மிதிக்கமாட்டேன் என்கிறான். இம்மண்ணை அவனாக வந்து மிதித்தால் அதை வைத்துச் சில பலன்களைத் தரலாம் என்று பார்க்கிறேன். அப்படியும் வரமாட்டேன் என்கிறான் மகனே!

இதுபோல விழாக்கள் என்று வைத்தால் இங்கே நடக்கிற பாட்டு, கூத்து, விளக்கு அலங்காரம் எதையாவது பார்த்துவிட்டு இங்கு என்னதான் நடக்கிறது என்று வருவான். அவன் வேடிக்கை பார்க்க வந்தாலும் அதை வைத்து அவனுக்கு வேண்டிய பலனைத் தருவேன். அதற்காகவே இந்த விழாக்கள்! உங்களுக்காகவே இந்த விழாக்கள்.”

## வேரும் – அடிமரமும்:

“வேரும், அடி மரமுந்தான் மரத்தைத் தாங்கி நிற்கின்றன. ஆனால், மண்ணிற்கு அடியில் உள்ள வேரைப் பற்றி எவ்வளவு பேர் உணர்ந்து போற்றுகிறார்கள்? அவர்கள் கண்களுக்கு இலையும், மலரும், காயும், கனியும் அல்லவோ காட்சி அளிக்கின்றன?

புறக்காட்சியில் நீண்ட நேரம் ஈடுபட்டால் தான் இவை அனைத்திற்கும் காரணம் வேர்தான் என்ற அகக்காட்சி சிறிது நேரமாவது நினைவில் தோன்றும். எனவேதான், இப்படிப்பட்ட விழாக்களை உங்கள் நன்மைக்காகக் கொண்டாடச் சொல்கிறேன்.”

## மன மாற்றத்திற்காக விழாக்கள்:

“மனிதன் எப்போதும் உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அந்த உழைப்பினால் ஏற்படும் களைப்பைப் போக்கிக் கொள்வதற்காகவும், ஒரு மாற்றத்திற்காகவும் தைப்பூசம், ஆடிப்பூரம் போன்ற விழாக்கள் உதவும்.

எறும்பு, பறவை போன்ற உயிரினங்கள் இடமாற்றம்



செய்துகொண்டு வாழ்கின்றன. மனிதர்களுக்கு மனமாற்றம் ஏற்படவேண்டும். அதற்காகத்தான் இத்தகைய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.”

## ஆடிப்பூரம் – தைப்பூசம்:

“ஆடிப்பூரம் என்றால் அன்னதானம், தைப்பூசம் என்றால் இருமுடி என்று சொல்கிற அளவிற்குச் சிறப்பாக அமைய வேண்டும். அவரவர்களும் முடிந்த அளவு ஏழைச் சிறுவர் ஐந்துபேர் சிறுமியர் ஐந்துபோர்க்கு இருமுடி போட்டு அழைத்து வரவேண்டும்.”

## ஆடிப்பூரக் கஞ்சிக் கலயம்:

“இரும்புப் பொருளை ஈர்க்கும் சக்தி காந்தத்திற்கு உண்டு. அதுபோல எல்லாச் சக்திகளையும் ஈர்க்கும் தன்மை ஆடிப்பூர அங்கப்பிரதட்சணத்திற்கு உண்டு.”

## விழாக்கள் ஏன்?

“எல்லோரும் சேர்ந்து விழாக்களைக் கொண்டாடுகிறீர்கள். ஏன்? ஒரு வேலையைப் பலரும் சேர்ந்து செய்யும் போது அந்த வேலை சுத்தமாகச் செய்யப்படுகிறது. இதனால் மன அமைதி ஏற்படுகிறது. இதனால் ஏவல் சக்தி, பொறுப்பு சக்தி, ஆன்ம சக்தி முதலியவை உங்களுக்கு ஏற்படுகின்றன.”

## விழாக்கள் பற்றி:

“தைப்பூச விழா சென்று முடிந்தது. அடுத்து அடிகளார் பிறந்த நாள் விழா வருகிறதே என்று துவளாதே! தெய்வத்திற்கு எத்தனை விழாக்கள் எடுத்தாலும் உங்களுக்குப் பயன்கள் உண்டு. கொடுக்கின்ற வாய்ப்பையும் கிடைக்கின்ற வாய்ப்பையும் நீங்கள் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். வெளிநாட்டார் இங்கே விழா எடுத்து நடத்தும் காலம் வருகிறதென்பதைப் புரிந்து கொள்.”

## விழாக்களின் பயன்:

“விழாக்களைக் கொண்டாடுவதன் மூலந்தான் பக்தர்களும் அன்பும், பக்தியும் வளர்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.”

## எதற்காக விழா?

“தர்மம் மறைந்து அதர்மம் தலைதூக்கி விட்டது. என்னிடம் வருகிற நீ என்ன நினைக்க வேண்டும் தெரியுமா? அம்மா! உன்னை நான் மறந்துவிட்டதால் என்னையும் நீ மறந்துவிட்டாய் என்று தான் நினைக்க வேண்டும். அவ்வாறு நீங்கள் நினைக்க வேண்டும் என்பதற்காகவே விழாக்கள்!”

**ஆடிப்பூரக் கஞ்சி:**

"ஆடிப்பூரக் கஞ்சி அனைத்தும் இங்கே வந்த சேர்ந்த பிறகு, படைத்த பிறகு அனைவரும் அதனை வாங்கிக் குடிக்க வேண்டும்."

**ஆடிப்பூர விழா – அங்கப் பிரதட்சணம்:**

"ஆடிப்பூர விழாவின் போது நான் அங்கப்பிரதட்சணம் வரும்போது - நான் உருண்டு வந்த இடத்தில் உள்ள மண் சிறிதளவை எடுத்துத் துணியில் முடிந்து வைத்துக்கொள்! அதனை உன் வாயிற்படியில் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும். உன் விளைநிலத்திலும் தூவிக் கொள்ள வேண்டும்."

**ஆடிப்பூரம் போன்ற விழாக்கள் ஏன்?**

"ஏதோ ஒரு நாள்! ஏதோவொரு குடும்பம்! ஏதோவொரு வினை! ஏதோவொரு சக்தி! ஏதோவொரு இனச்சேர்க்கை என்றெல்லாம் கருதி வாழ்கிற உங்களுக்கு, அப்படியில்லாமல் உங்கள் மன நிம்மதிக்காகவும், அமைதிக்காகவுந்தான் ஆடிப்பூரம் போன்ற விழாக்கள்!

பருவ காலத்தைப் பொறுத்து இயற்கை அமைவது போல மனிதர்களாகிய நீங்கள் செய்த பாவங்கள் தணிவதற்காகத்தான் ஆடிப்பூரம் போன்ற விழாக்கள்!"

**தொடர்பை விடாதே:**

"ஆடிப்பூரத்திற்கு அங்கவலம் வருதல், கஞ்சி வார்த்தல், பாலபிடேகம் செய்தல் என்றெல்லாம் இத்தனை வருடங்களாகச் செய்துவிட்டோம். இவ்வளவு போதும் என்று நினைக்காதே. எத்தனை வருடம் கலந்து கொள்கிறாயோ அத்தனை வகையான அனுபவங்கள் உனக்கு ஏற்படும்."

**ஆடிப்பூரமும் – கஞ்சியும்:**

"பத்து ஏழைகளைக் கூட்டிவந்து அவர்களுக்குக் கஞ்சி காய்ச்சக் கலயம் வாங்கி, அதற்கு மஞ்சள் பூசி, வேப்பிலை சுற்றி, உன் கையால் அவர்களுக்குக் கஞ்சியெடுத்து வைத்துக் கூட்டி வரவேண்டும். அவர்களெல்லாம் சேர்ந்து உன் தலையில் கஞ்சியெடுத்து வைக்க வேண்டும். பத்து ஆன்மா அவ்வாறு ஒன்று சேர்ந்தால் உனக்குப் பலனுண்டு."



**நாளை அமெரிக்க பக்தர்கள்:**

"இன்று மலேசியா பக்தர்கள் தைப்பூச விழா எடுப்பதைப் பார்க்கிறீர்கள். நாளை அமெரிக்க பக்தர்கள் விழா எடுப்பார்கள்!"

**பெண்கள் விகிதம் குறையாது:**

"வருங்காலத்தில் பெண்களின் எண்ணிக்கை விகிதம் குறைந்துகொண்டே போகும். அதனால் தான் இங்கே பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறேன்.

அடுத்தடுத்து விழாக்கள் வந்தபடி இருக்கின்றனவே என்று நீங்கள் நினைக்கலாம். விழாக்கள் குறைந்தால் பக்தியும், பெண்களின் முக்கியத்துவமும் குறைந்துவிடும்."

**தமிழ் வருடப்பிறப்பு:**

"தமிழ் வருடப்பிறப்பு நாளைக் கொண்டாடுவதில் தமிழர்களே ஆர்வம் காட்டுவதில்லை. தமிழ் வருடப்பிறப்பில் ஓர் ஆர்வத்தை உண்டாக்குவதற்கும் பட்டிதொட்டியெங்கும் ஆன்மிகம் பரப்புவதற்கும் இங்கு விழா நடத்தப்படுகிறது. கருவிலேயே ஆன்மிக உணர்வு ஏற்படுவதற்கும் இத்தகைய விழாக்கள் வழிவகுக்கும்."

**நவராத்திரி அகண்டம்:**

"அகண்டத்திற்குக் கண்டத்தை நிவர்த்திக்கும் தன்மை உண்டு.

நவராத்திரியில் ஒரு நாளோ, மூன்று நாளோ, ஐந்து நாளோ அகண்டத்தின் சுடரைப் பிடித்தால் நன்மை உண்டு."

**நவராத்திரியின் மகிமை:**

"நவராத்திரிக்கு மகிமை உண்டு. நவதான்யங்கள் ஒன்பது. நவக்கிரகங்கள் ஒன்பது. நவரத்தினங்கள் ஒன்பது. ஒன்பது என்ற எண்ணுக்கு மகிமை உண்டு. நவராத்திரி விழாவில் ஆலயவளர்ச்சிக்கும் கருத்து உண்டு. நவராத்திரி விழாவில் கலந்து கொள்வதால் ஏவல், பில்லி, சூனியம், மாந்திரிகம், வைப்பு முதலானவை நீங்கிவிடும்."

**ஆடிப்பூரப் பாலபிடேகம்:**

"ஒன்பது முறை, பதினெட்டு முறை, 108 முறைகள் ஆடிப்பூரப் பாலபிடேகம் செய்பவர்களுக்கு அருளையும் அமைதியையும் கொடுப்பேன்."

## எந்த விழாவானாலும்...

“எந்த விழாவைக் கொண்டாடினாலும் உள்ளத்தில் உண்மை உணர்வும், பக்தி உணர்வும் கூடிய பண்பு தேவை.”

## 1995 – நவராத்திரி விழாவின் போது அன்னை கூறியது:

“நவராத்திரி விழாவன்று செய்யப்படும் அபிடேகத் தீர்த்தத்தை எடுத்துச் சென்று உங்கள் வீடுகளில் தெளிக்க வேண்டும்.

நவராத்திரி அகண்ட விளக்கு எண்ணெயை எடுத்துச் சென்று, அதில் முக்கூட்டு எண்ணெய் சேர்த்து, உங்கள் வீட்டில் ஒன்பது இடங்களில் விளக்கேற்றி வைக்க வேண்டும்.

முன்வாசல், பின்வாசல், பூசையறை, பணம் இருக்கும் இடம், அடுப்படி முதலிய முக்கியமான ஒன்பது இடங்களில் விளக்கேற்றி வைக்க வேண்டும்.”

## நவராத்திரி:

“நவராத்திரி நவக்கிரகங்களுக்கு உகந்தது. நவராத்திரி அகண்ட விளக்கிற்கு எண்ணெய் ஊற்றினால் மட்டும் போதாது. உன் உள்ளம் ஒளிபெற உள்ளத்திற்கு எண்ணெய் ஊற்ற வேண்டும்.”

## நவராத்திரி அகண்டம்:

“உலகத்திற்குப் பயன் உண்டாகவும், உலகிற்கு ஒளி தேவை என்பதற்காகவும், மழை தேவை என்பதற்காகவும். ஆன்மிகம் வளர வேண்டும் என்பதற்காகவும் நவராத்திரி அகண்டம் ஏற்றி வைக்கப்படுகிறது.

நவராத்திரி விழாவில் கலந்து கொண்டு அகண்டத்தைத் தரிசிப்பதால் பில்லி, சூனியத் தொல்லைகள் விலகும். நவராத்திரி அகண்டம் அகந்தையை அடக்கும். அமைதியைக் கொடுக்கும்.”

## தெய்வத்தின் பால் ஈர்க்க:

“விழா என ஒன்றை அமைக்கிற போது தடைகளும் உண்டு. கூச்சலும் உண்டு. திருடர்களும் உண்டு. பக்தர்களும் உண்டு.

மனித மனத்தைத் திசை திருப்பித் தெய்வத்தின் பால் ஈர்க்க வேண்டியே விழாக்கள்!”

## விழாக்கள் யாருக்கு?

“விழாக்கள் என்பதெல்லாம் உங்களுக்குத்தானே தவிர, உங்களுக்குள்ளே இருக்கும் ஆன்மாவிற்கு அல்ல!



ஆன்மாவிற்கு இன்ப துன்பம் கிடையாது. அதற்கு உணவு கிடையாது. நகை நட்டு கிடையாது. கூந்தல் கிடையாது. பட்டாடை கிடையாது. ஆசாபாசம் அதற்குக் கிடையாது.

பணம், நகை, வீடு, வாசல் என்பனவெல்லாம் கொள்ளை போகிற பொருள்கள்!”

## விழா நாட்களில்:

“விழா நாட்களில் மன்றம் மூலமாக ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று அவர்கள் குடும்பம் நன்றாக இருக்க வேண்டும் என்று வாழ்த்தி மஞ்சள், குங்குமம் கொடுக்க வேண்டும்.”

## அனுபவம் கிடைக்கும்:

“இங்கு நடைபெறுகிற விழாக்கள் எல்லாம், உங்களுடைய எதிர்கால வளர்ச்சிக்காக! விழாக்கள் எனக்கோ அடிகளார்க்கோ அல்ல!

இங்கே தைப்பூசம், இருமுடி போன்ற விழாப் பணிகளில் 10, 18 நாள் தங்கித் தொண்டு செய்தால் பல அனுபவங்கள் கிடைக்கும்.

கௌரவம் பார்க்காமல் தொண்டு செய்கிற போது பல உண்மைகள் தெரியும்.

அவன் எப்படி? இவன் எப்படி? என்றெல்லாம் தெரிந்து கொள்வீர்கள். இதனால் இங்கே இருக்கும் போலிகளைத் தெரிந்து கொள்வீர்கள். அதனால் எச்சரிக்கையாக இருப்பதற்குப் பெண்களுக்கு அது வாய்ப்பாக அமையும். ஒவ்வொரு துறையிலும் உங்களுக்கு அனுபவங்கள் ஏற்படும்.

கிடைக்கிற வாய்ப்பையும், கொடுக்கிற வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வீட்டு வேலைகளைச் செய்தால் மட்டும் போதாது. பெண்கள் வெளி உலகத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். தான தர்மம் செய்து ஆன்மிகத்தில் நீங்கள் வளரவேண்டும்.

விழாக்கள் மூலமாக வெளிஉலக அனுபவங்கள் கிடைப்பதுடன், உங்களுக்குப் பாவங்கள் சேராமல் பாதுகாப்பும் கிடைக்கிறது.”

## விழாவும் தருமமும்:

“மரம், செடி வளர்வதற்கும் கவனிப்பு தேவை! அதுபோல ஆன்மிகம் வளர்வதற்கு விழாவும், தருமமும் தேவை!”

## ஆடிப்பூர விழா !

“ஆடிப்பூர விழாவில் கஞ்சி ஊற்றுவதும், பாலபிடேகம் செய்வதும் மழைக்கு முக்கியத்துவம் கொடுக்கும்.

உன் சுற்றுப்புறக் கிராமத்து மக்களையெல்லாம் அழைத்து வந்து கஞ்சி ஊற்றச் சொல்! பாலபிடேகத்தில் பங்கு பெறச் சொல்!

கஞ்சிக்கு அலையாமல் இருக்க வேண்டுமானால் கஞ்சி ஊற்றச் சொல்!”

## அன்னதானம் – ஆடை தானம்:

“அன்னதானம், ஆடைதானம் என்ற நிகழ்ச்சிகளை நடத்தும்போது, ஆண்களுக்கு ஆண்களும், பெண்களுக்கு பெண்களும் வழங்குமாறு செய்யவேண்டும்.”

## 1985 ஆடிப்பூர விழாவின் போது:

“இந்த ஆடிப்பூர விழாவில் பொறுமையாகவே அங்கப்பிரதட்சணம் வருவேன். இந்த மண்ணில் அதிகமான பாவங்கள் வந்து குவிகின்றன. நன்மை, தீமை இரண்டில் தீமையே அதிகமாக உள்ளது. எனவே பாவத்தை நானே சுமக்கிறேன்.” (16.7.85 அன்று கூறியது).

## 1985 ஆடிப்பூர விழா !

“இந்த ஆடிப்பூர விழாவில் ஒரு சிலருக்குக் காட்சி தருவேன்!” (16.7.85 அன்று கூறியது).

## அழைப்பிதழில் பெயர் இல்லையே...

“இங்கே நடக்கிற விழாக்களில் பத்திரிகையில் என் பெயர் இல்லையே என்று வருந்தக்கூடாது. பத்திரிகையில் வரும் பெயர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது. எல்லா வேலைகளையும் பொறுப்பேற்று நடத்த வேண்டும். யாருடைய பெயர் பத்திரிகையில் இல்லையோ அவர்களுக்குக் கடைசிவரை இங்கே இடம் உண்டு.”

## நவராத்திரி அகண்டம்:

“நவராத்திரி அகண்டத்தில் முக்கூட்டு எண்ணெய் ஊற்றி முகர்வது மூன்று சிக்கல்கள் தீர்வதற்கு.

வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், ஆமணக்கு எண்ணெய் ஆகியவற்றுக்கு மகத்துவம் உண்டு.”



## ஒவ்வொரு விழாவும்:

“ஒவ்வொரு விழாவிற்கும் வருடாவருடம் சில காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறேன். நீதான் புரிந்து கொண்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உண்மை உணர்வுடனும், நல்ல உள்ளத்துடனும் பங்குகொண்டு பயன்பெற வேண்டும்.”

## விழாக்களில் களியாட்டங்கள் ஏன்?

“குழந்தைக்கு விளையாட்டுக் காட்டிக் காட்டிப் பாலும் சோறும் ஊட்டுகிற தாய் போல், விழாக்களையும், களியாட்டங்களையும் நடத்த வைத்து உங்களுக்கு ஆன்மிகத்தை ஊட்ட வேண்டியிருக்கிறது.”

## விழாக்களும் யாகங்களும்:

“இங்கு விழாக்களைக் கொண்டாடுவது பெரிதல்ல. வருகிற பக்தர்களுக்குப் பக்குவத்தை உண்டாக்க வேண்டும். அமைதியை நிலைநாட்ட வேண்டும்.

மனிதனின் மனம், செயல், பார்வை மூன்றும் ஒருநிலைப்பட வேண்டும். அதற்குத் தான் வேள்வி.

உங்கள் உள்ளம் கலங்கக் கூடாது. அது கறுப்பாக மாறக்கூடாது. உங்கள் பரம்பரையும், பாரம்பரியமும் காக்கப்பட வேண்டும்.

அதற்காகவே விழாக்கள்! யாகங்கள்!”

## விழாக்கள் தேவை:

“வீசாத காற்றும், விளையாடாத குழந்தையும், பார்க்காத பயிரும், பயன் தருவதில்லை. அதுபோல விழாக்கள் இல்லாத ஆன்மிகமும் பயன் தராது. ஆதலின் விழாக்களும் தேவை.”

## மனத்தை ஒரு முகப்படுத்த...

“உங்கள் மனத்தை ஒருமுகப் படுத்தும் பயிற்சி பெறவே விழாக்களை ஏற்பாடு செய்து தருகிறேன்.”

## ஆடிப்பூரம்:

“ஆடிப்பூரம் என்பது ஆன்மிகப் பூரம். பூரம் என்றால் பூரிப்பு, மகிழ்ச்சி என்று பொருள். ஆடிப் பூரத்தில் பூமி என்ற கோளுக்கு நன்மை உண்டு. அன்னையின் அருளுக்கும், தாயின் பாசத்திற்கும் ஆடிப்பூரத்திற்கும் தொடர்பு உண்டு.”

**உற்சாகத்துக்குத்தான்:**

“விழாக்கள் பல கொண்டாடுவது மனிதனுடைய சந்தோஷம், புகழ், உற்சாகம் இவற்றுக்காகத் தான்! விழாக்களைக் கொண்டாடும் போது வீண் செலவுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.”

**விழாக்களும் அவசியம்:**

“உயிர் இல்லையென்றால் உடல் இயங்காது. பூ இல்லையென்றால் பழம் இல்லை. செடி இல்லையென்றால் இலை இல்லை.

உடல், உற்றார், உறவினர் அனைவர்க்கும் உயிர் முக்கியம். உயிர் வாழத் தண்ணீர் அவசியம். உள்ளத்திற்கு ஆடல், பாடல் அவசியம். அதுபோல ஆன்மிகத்திற்கு விழாக்களும் அவசியம்.”

**நவராத்திரி விழா நாட்களில்...**

“நவராத்திரி விழா நாட்களில் இரண்டு வேளை மட்டுமே உணவு உண்டு, அகண்ட ஜோதி தரிசனம் செய்ய வேண்டும்.”

**நவராத்திரி விழாவும் – நாட்டு நலனும்:**

“நம் வீட்டு விழாவைப் போல இங்கு நவராத்திரி விழாவை நடத்தினால் நாடு நாடாக இருக்கும்.”

**நவராத்திரி விழா:**

“நவராத்திரி விழா என்பதும் ஜோதி தரிசனம் என்ற தத்துவம் கொண்டது தான்.

நான்குபேர் சேர்ந்து செய்யும் தொண்டு, நான்குபேர் சேர்ந்து செய்யும் அர்ச்சனை என்ற கூட்டு முயற்சி கொண்டது தான்.”

**விழாக்களின் நோக்கமும் – பயனும்:**

“சித்திரா பௌர்ணமி, ஆடிப்பூரம், நவராத்திரி என்று அடுத்தடுத்து விழாக்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

ஒவ்வொரு விழா வரும் போதும் அதைச் செய்! இதைச் செய்! என்று அம்மா சொல்லிக் கொண்டே இருக்கிறது. நமது நிலைமை அம்மாவுக்குத் தெரியமாட்டேன் என்கிறதே என்றெல்லாம் நினைக்கிறீர்கள். சிலர் அலுத்துக் கொள்கிறீர்கள்.

நான் சொல்வதையெல்லாம் செய்து வர வில்லையென்றால், இன்றுள்ள நிலைமையைவிட உலகில் மேலும் மோசமான நிலைமைகளும், விளைவுகளும் ஏற்படும்.



தருமங்களெல்லாம் அதருமங்களாக மாறும். நீதிகள் எல்லாம் அநீதிகளாக மாறும்; புண்ணியங்கள் எல்லாம் பாவங்களாக மாறும்.

அவற்றையெல்லாம் நெறிப்படுத்தவே உங்களுக்கு தொண்டுகளும், பணிகளும் உருவாக்கித் தருகிறேன்.

நீ செய்து தான் ஆலயம் வளரும் என்று நினைத்துக் கொள்ளாதே!

ஆள் உண்டு! அருள் உண்டு! ஆட்காட்டி விரல் உண்டு!

சாக்கடையிலும் நாற்றம் உண்டு. உன் உடம்பிலும் நாற்றம் உண்டு.

இந்த நாற்றங்களையெல்லாம் போக்கிவிடலாம். ஆனால் உன் உள்ளத்தில் உள்ள அழுக்குகளை ஆன்மிகம் என்ற சோப்பு போட்டுத்தான் கழுவிக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு அழுக்கைப் போக்கி உங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ளவே உங்களுக்கு விழாக்கள்!

வேலைகள்! தொண்டுகள்! வாய்ப்புகள்!

இவற்றையெல்லாம் புரிந்து கொண்டு நடந்து கொள்ள வேண்டும்.”

**வழிபாடும் – தொண்டும்:**

“மன்றங்களில் நீங்கள் நடத்தும் எந்த ஒரு விழாவானாலும், சமுதாயத் தொண்டுகளை இணைத்தே செய்ய வேண்டும். தொண்டு கலவாத விழாக்களாலும் விழாக்கள் கலவாத தொண்டுகளாலும் என்னைத் திருப்திப்படுத்த முடியாது.”

**தைப்பூச ஜோதி:**

பூமி பூசை போட்டு, பூமியைத் தோண்டிப் பள்ளம் எடுத்து, அந்த அடுப்பின் மேல் பானையை வைத்து, அருகம்புல் இட்டு, பால் ஊற்றி, அந்த அடுப்பில் கற்பூரம் ஏற்றி, நெருப்பு மூட்டி, சமமாகச் சூடு ஏற்றி வணங்குகிறோம். சிறிது நேரத்தில் தண்ணீர் “தை தை” என்ற ஒலி கேட்டதும் மல்லிகைப் பூப்போன்ற அரிசியை அதில் இட்டு வணங்குகிறோம். பொங்கி வரும் பொங்கலுக்குச் சர்வ சமயமும் சம்மதம் எனும் சகோதர பாசம் அங்கே நினைவாக நிற்கிறது.

அந்தத் **தை** மாத**ப்** பொங்கலுக்கும், **பூ**ப்போன்ற அரிசிக்கும் சர்வ சமயமும் **சம்**மதம் எனும் பாசத்தோடு தைப்பூசம் வருகிறது.

பூமியைப் பிளந்து நெருப்பு வந்தால் அது எரிமலை ஆகாயத்திலிருந்து நெருப்பு வந்தால் அது எரிகல். மனத்திலே ஆன்மிக நெருப்பேறி இருளை எரித்தால் அந்த நெருப்பு ஒரு ஜோதி. அந்த ஜோதியை ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஏற்ற வரும் ஏற்றமிகு விழாவே தைப்பூச ஜோதி. **சூரியனின் வெப்பத்தையும் நிலவின் குளிர்ச்சியையும் ஒருங்கே இணைக்கும் பாலமே தைப்பூச ஜோதி.**

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். கடன் அடையும், கல்யாணம் நடக்கும். மழை பொழியும்; தானியம் விளையும் என்பார்கள் கடவுள் கண் திறப்பார் என்பார்கள். அதற்கான நம்பிக்கை ஒளிக்கீற்றுத்தான் தைப்பூச ஜோதி.

மண்ணில் தோன்றிய மனிதன், முடிவில் மண்ணுக்குள் தான் போகிறான். மனிதன் பிறக்கும் போது மழலை உள்ளத்தோடு பிறக்கிறான். அவன் வளரும் போது மனமும் மழலை உள்ளமாகவே வளரவேண்டும். வெள்ளை உள்ளமாகவே வளரவேண்டும். மனதில் அழுக்கற்று வளரவேண்டும். ஆனால் மனிதன் அப்படி வளர்வதில்லை. வளர விடுவதில்லை. அப்படி மழலை உள்ளத்தோடு வளர்ந்தால் அந்த மனிதன் மனிதர் குல மாணிக்கமாக ஒளி வீசுவான். போற்றப்படுவான். தீய எண்ணங்களை நீக்கி நல்ல உள்ளத்தோடு வாழும் மனிதனே மனிதர் குல மாணிக்கம். அப்படிப்பட்ட ஒளி பொருந்திய மாணிக்கங்கள் பெருகப்பெருக, அத்தகைய மாணிக்கங்களின் ஒளிச்சேர்க்கையே ஒரு நாட்டின் ஜோதி. அந்த ஜோதியின் பிரகாசம் பெருகப்பெருக அந்த நாட்டிலும் நிரந்தர சுபிட்சம் பெருகும்.

அந்தக்காலத்தில் சகுனம் பார்க்க காக்கையைப் பார்த்தார்கள். ஆனால் இன்றோ காசு பார்க்கக் காக்காய் பிடிப்பதையே வாழ்க்கையின் படிக்கல்லாகப் பலர் மாற்றி விட்டார்கள். அவை போற்றத்தகும் செயல்களல்ல. அவையெல்லாம் மன இருள்கள்.

மற்ற உயிர்களிடம் காட்டும் உண்மையான அன்பு, உண்மையான பாசம், பண்பு, உழைப்பு, அந்த உழைப்பால் கிடைக்கும் ஊதியம், அந்த ஊதியத்தின் ஒரு பகுதியால் செய்யப்படும் தர்மம், அந்த தர்மத்தையே ஈந்து உவக்கும் பொழுது மனதில் எழும் ஒளி, அந்தப் பிரகாசங்கள் ஒன்றிணைவதால் நம் உள்ளத்தின் உள்ளே ஏற்றப்படும் ஒளி ஜோதியாக மாறி உள்ளத்தின் இருளை அகற்றுகிறது.



அந்த உதவும் உன்னத நிலை, அது தரும் சுகம், அதில் வரும் அமைதி, அதில் விரிவடையும் மனம், அங்கிருந்து விலகும் இருள், அங்கே உட்புகும் ஒளி, அந்த ஒளியின் பெருக்கம், அது அனைவர் மனத்திலும் காட்ட வேண்டிய நெருக்கம் இவற்றின் அடையாளச் சின்னமே தைப்பூச ஜோதி.

இயற்கையே இறை. இயற்கை எனும் இறையை மனிதன் மனத்தில் சிறை வைத்து வணங்கும்போது இயற்கையின் பரிசளிப்பு மனிதனுக்குத் தொடர்ந்து கொண்டே உள்ளது. நிலம் தாங்கிட, தீ வெப்பம் தர, நீர் குளிர்விக்க, காற்று உயிர்மூச்சுத்தர, எந்த ஆதாயத்தையும் எதிர்நோக்காமல் ஆகாயம் அரவணைக்கிறது. ஆனால் பயன்பெறும் மனித இனமோ அளவுக்கு மீறி நிலத்தைத் தோண்டி, தீயால் இயற்கைச் செல்வங்களையே அழித்து, சக உயிருக்கும் நீர் தர மறுத்து, காற்றை மாசுபடுத்தி, ஆகாயத்தில் ஓசோனை ஓட்டையாக்கித் தனக்குத்தானே தொடர்ந்து குழிபறித்து வருகிறது.

பூ செடியில் பிறக்கிறது. செடி மண்ணில் பிறக்கிறது. அந்த மண்ணையே ஆதாரமாகப் பற்றிக்கொள்கிறது. இயற்கையால் வளர்கிறது. இயற்கையாய் வாழ்கிறது. ஆனால் இறையால் படைக்கப்பட்ட மனித இனமோ, இறையைப் பற்றிக்கொள்ள மறந்துவிடுகிறது. இறையாக நின்று பயன்தரும் இயற்கையையும் மறந்துவிடுகிறது இயற்கை இறையின் கருணை என்பதை மறந்து இயற்கையைத் தன்னுடைய உரிமை என்றும், உடைமை என்றும் தன்வயப்படுத்த நினைக்கிறது. தான் வணங்க வேண்டிய பொருளை தன் வயப்படுத்த நினைக்கிறது. அதில் தங்களுக்குள்ளே போட்டியையும், பொறாமையையும் வளர்த்துக் கொள்கிறது. பொருந்தாத பல செயல்களையும் பொறுப்பின்றிச் செய்கிறது. எனவே, இருளான எண்ணங்களே பொருளாகப் பிறக்கின்றன.

அந்த இருளும் பொருளுமே இறையின் அருளுக்குத் தடங்கல் என்று மனம் உணராமல் மேலும் மேலும் இருளை வளர்த்துக் கொள்கிறது. எப்படி ஒரு ஆசிரியரின் பிள்ளைக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஒரு ஆசிரியர் தேவைப்படுகிறாரோ அதுபோல, இறை தன் பிள்ளைகளைத் திருத்த தன் அங்கமாகிய இயற்கையை ஆசிரியனாக்குகிறது. இயற்கை எனும் ஆசிரியரும் நம் மேல் இரக்கம்காட்ட மறுத்து, சீற்றம் கொள்ளும்போது, அதைக் கட்டுப்படுத்தத் தெரியாமல் மனித இனம் தடுமாற்றம் கொள்கிறது.

காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பது போல கண்ணுள்ளபோதே பார்க்க வேண்டும். காதுள்ள போதே கேட்க

வேண்டும். வாயுள்ளபோதே வழிபட வேண்டும். உயிருள்ள போதே அன்புப்பயிர் வளர்க்கவேண்டும். என மனிதன் உணரும்பெழுது நிலைமை மீறி விடுகிறது. இயற்கை சீறிவிடுகிறது.

ஒன்று இல்லாத போது தான் அதன் அருமை புரிகிறது.

தாயில்லாத போது தான் தாயின் அருமையும்,

கண்ணில்லாத போது தான் கண்ணின் அருமையும்,

காதில்லாத போது தான் காதின் அருமையும்,

காலில்லாத போது தான் காலின் அருமையும்,

உப்பில்லாத போது தான் கடலின் அருமையும் தெரிகிறது.

அதுபோலவே, நீரில்லாத போதுதான் நீரின் அருமையும் தெரிகிறது. இயற்கை சீறும்பொழுது அஞ்சும் மனித இனம், அதை நெஞ்சில் வைத்துத் தஞ்சம் என்று வணங்கவேண்டிய நேரத்தில் வணங்கவில்லை. அதன் விளைவு, தண்ணீர்ப்பஞ்சமாக உருவெடுக்கிறது.

இப்படி எங்கெங்கு சுற்றிச்சுற்றி வந்தாலும் **நாம் புரிந்துகொள்ள வேண்டியது ஒன்றுதான். மன இருள் அகலவேண்டும்.** மனத்தில் வரும் பஞ்சமா பாதக எண்ணங்கள் அகலவேண்டும். பஞ்சமா பாதகங்களே பஞ்சத்திற்கு வழிகாட்டிகள் என்பதை உணரவேண்டும்.

இயற்கையில் தான் சங்கமம் உண்டு. சமதர்மம் உண்டு. கடலில் சங்கமம் உண்டு. சமதர்மம் உண்டு. கடலிலிருந்து மேகம் உற்பத்தியாகிறது. அந்த மேகத்தின் நீர் பூமியில் விழுந்து நிலத்தடி நீரைப் பலப்படுத்தி மனித இனத்திற்கு வற்றாத கருணை புரிந்து, இறுதியில் கடலிலேயே சங்கமமாகிவிடுகிறது. எனவேதான் கடற்கரையில் யாகம் நடத்துவது மிகுந்த பலன் தரும் என்று முன்பே கூறியுள்ளோம். அதற்காகவே இயற்கை வள மேம்பாட்டை முன்னிருத்தி **1988-ல் சென்னைக கடற்கரையில் மாபெரும் யாகம் நடத்தினோம். அதுபோன்ற யாகங்கள் தொடர்ந்து நடக்க வேண்டும்.** சமுத்திரக் கரையில் நடத்தும் யாகத்தீயின் ஒளியால், ஏற்றப்படும் விளக்குகளின் ஜோதியால், நீர்வளம் பெருகும். நிலவளம் பெருகும். நீர்வளமின்றிப் பார் வளமில்லை. எனவே இயற்கையின் திருப்தியே இறையின் திருப்தி. இறையின் திருப்தியே இயற்கை எனும் கொடை.



அந்த இறையை வணங்க வணங்க, மன இருள் நீங்கும். அந்த இருள் நீங்கி மன ஒளி பெற சக்தியின் ஜோதி வடிவத்தையே அடையாளமாக, ஆதாரமாக நினைத்து ஏற்றி வணங்கப்படுவது தைப்பூச ஜோதி.

அது...

வெப்பத்தையும், குளிர்ச்சியையும் ஒன்றிணைக்கும் ஜோதி,

இறைவனின் வடிவத்தை நினைவூட்டும் ஜோதி,

இயற்கையின் இறையருளை இனங்காட்டும் ஜோதி,

உள்ள இருளை உருக்கி அகற்றும் ஜோதி,

கள்ள இருளைக் கொள்ளை கொள்ளும் ஜோதி,

வெள்ளை உள்ளமாய் மாற்ற வரும் ஜோதி,

நல்ல மனம் தரும் நம்பிக்கை ஜோதி,

அதுவே தைப்பூச ஜோதி...

# 19. ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றங்கள்

**பன்றிக்குட்டி – கன்றுக்குட்டி:**

“வார வழிபாட்டு மன்றங்கள் கன்றுக்குட்டி போல விளங்க வேண்டும். பன்றிக்குட்டிகள் போல ஆகிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நமக்குப் பன்றிக்குட்டிகள் தேவையில்லை. கன்றுக்குட்டிகள்தான் தேவை.”

**மன்றங்கள்:**

“செவ்வாடை அணிந்து மன்றத்திற்கு வந்து பக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும். பணம், பேர், புகழ், பதவி இவற்றுக்காகவே மன்றத்துக்கு வருகிறான். பணத்தைக் கையாடல் செய்கிறான். மூன்று பைசாவிற்கு அடித்துக் கொள்கிறான். இதெல்லாம் எனக்குத் தெரியாது என்று நினைக்கிறான்.”

**மன்றங்கள்:**

“தன்னால் மன்றம் வளர்கிறது என்று நினைத்துக்கொள்ளக் கூடாது. அடிகளார் தான் எல்லாம்! அடிகளாரை அடிமைப்படுத்த நினைக்காதே!”

**ஆதிபராசக்தி மன்றம்:**

“தெருவுக்கு ஒரு ஆதிபராசக்தி மன்றம் என்ற நிலை உருவாக வேண்டும்.”

**மன்றங்கள் இயங்க வேண்டிய முறை:**

“மன்றங்கள் அடிகளாருக்கு உட்பட்டவை. அம்மாவும் அடிகளாரும் சொல்வது தான் வேதவாக்கு. மன்றப் பொறுப்பில் உள்ளவர்கள் எல்லோரையும் இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். அன்பை வைத்து எதையும் செய்யலாம். அதிகாரத்தை வைத்து எதையும் செய்ய முடியாது என்பதைப் பொறுப்பில் உள்ளவர்கள் உணர வேண்டும்.”



**ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றங்கள்:**

“ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றங்கள் மூலமாகச் சிறு தொழில்கள் தொடங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அவற்றின் மூலமாக ஏழை எளியவர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும். அவர்கள் உழைத்துப் பிழைக்க வழிகள் செய்ய வேண்டும். அதே சமயம் ஆதிபராசக்தி பெயரை வைத்துக் கொண்டு சம்பாதிக்கலாம்; தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணம் வரக்கூடாது.

மன்றங்கள் சிறந்த முறையில் செயல்பட வேண்டும். அங்ஙனம் செயல்படுமேயானால் இங்கே மழைவளம் உண்டு; செழிப்பு உண்டு; பசுமை உண்டு.

நாட்டிற்கு எது தேவை? வீட்டிற்கு எது தேவை? என்று திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். கிராம மக்களை உயர்த்த வேண்டும்.

நான்கு உள்ளங்கள் ஒன்று சேர வேண்டும். ஐம்புலன்களை அடக்குகிற முயற்சி வரவேண்டும். அதற்காகவே ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றம்.”

**வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடு:**

“மன்றத்தில் வசதி இல்லாதவனுக்கு ஒரு வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடு! அதற்கான ஒரு தொகையை ஒரு மகன் ஏற்றுக் கொண்டால் அதற்குரிய பலன் உண்டு.”

**பசுத்தோல் போர்த்திய புலி:**

“மன்றங்கள் சில சரிவரப் பணி செய்வதில்லை. ஆன்மிகத்திற்கு மாறாக நடக்கின்றன. ஆன்மிகப் போர்வையில் பசுத்தோல் போர்த்தியுள்ள புலிகளுக்குச் சோதனை தருவேன்.”

**ஒரே தாய்! ஒரே குலம்!**

“இங்கே எம்மதமும் சம்மதம்! ஒரே தாய்! ஒரே குலம்! என்ற எண்ணம் மனிதனிடம் உண்டாக வேண்டும்.”

**மதங்களிடையே ஒற்றுமை தேவை:**

“அங்கங்கே சிறுசிறு குட்டைகளாகத் தேங்கியிருக்கும் ஆன்மிகம் ஒன்றாகச் சேர்ந்து உண்மை உணர்வோடு செயற்பட்டால் நல்ல பலன்கள் கிடைக்கும்.”

## ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றங்கள்:

"மனநிலை போல மன்ற நிலை! மன்ற நிலை போல பக்தி நிலை! பக்தி நிலை போல மழை நிலை!"

## வார வழிபாட்டு மன்றங்களுக்கு – செவ்வாடைத் தொண்டர்களுக்கு:

"1. செவ்வாடைக்கு மக்கள் மரியாதை கொடுக்கும்படி வைத்திருக்கிறேன். அந்த மரியாதையை நீங்கள் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்.

2. மன்றம் நடத்துபவர்கள், இது மன்றமா? மடமா? என்று கேட்கும் அளவுக்குப் போகாமல் முறையாக நடத்த வேண்டும்.

3. மன்ற உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் பார்க்கும் போது சகோதர பாசத்துடன் பார்க்க வேண்டும்.

4. மன்றங்களின் வாயிலாக ஏழைமக்களுக்குப் பிழைப்புக்கு வழி வகுத்துக் கொடுப்பேன். மன்றங்களுக்கு எல்லா மதத்தவரையும் அழைத்துக் காட்டுவேன்.

5. மகளிர் மன்றங்களிலிருந்து இங்கே கருவறைப் பணி செய்ய வருகிற பெண்கள், பருத்தி நூலால் ஆன ஆடைகளை அணிந்து வரவேண்டும்.

6. அமாவாசை, பௌர்ணமி நாட்களில் தம் இல்லங்களிலோ, மன்றங்களிலோ 5 நிமிடம் மௌனம், 5 நிமிடம் தியானம் இவற்றைக் கடைப்பிடித்தால் அதற்கான பலனைத் தருவேன்.

7. சிலர் செவ்வாடையில் வந்து நடிக்கிறீர்கள். முன்னதாகவே வந்துவிட்டதால் உங்களை மற்றவர்கள் மதிக்கிறார்கள். அதனைக் காப்பாற்றிக் கொள்!

8. இங்கே நான் ஒருவனுக்குத் தலைமைப் பொறுப்பு கொடுத்தால் அவன் கழுதையானாலும் அவனுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். போட்டி பொறாமையின்றிச் செயல்படவேண்டும்.

9. மின்விளக்கில் ஒளி வருகிறது. அதனைச் சுற்றிப் பலவிதமான பூச்சிகள் சுற்றி வந்து விளையாடுகின்றன. ஆபத்தை எதிர்நோக்குகின்றன. அதைப்போல நீ நெருப்போடும் நீரோடும் விளையாடாதே! ஆபத்தானது!"



## படமும் – பாடமும்:

"மன்றங்களின் தன்மை இப்போது தான் மக்களுக்குப் புரிய ஆரம்பித்துள்ளது. மேலும், சமுதாயத் தொண்டுகள் புரிந்து ஆன்மிக உணர்வை வளர்க்க வேண்டும். நீங்கள் செய்கிற தொண்டுகளை வரைபடங்கள் மூலம் விளக்க வேண்டும். படம் பார்க்கிற உலகம் இது! ஆதலின் படங்கள் மூலம் ஆன்மிகத்தை விளக்க வேண்டும். படமும் ஒன்றுதான்; பாடமும் ஒன்று தான்!

# 20. வேள்விப் பூசை, வழிபாடு

**வேள்வியின் முக்கியத்துவம்:**

“நாளைய உலகிற்கு ஆன்மிகமும் வேள்விகளும் அவசியம்.”

**தூய்மைக்கும் பாவக் கழிவிற்கும்:**

“மருத்துவ விடுதிகளில் அறுவை அரங்கங்கள் உண்டல்லவா? நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை முடிந்த பிறகு அவற்றைத் தூய்மைப் படுத்துவது இயல்பு. அதுபோல ஆலய விழாக்களில் பக்தர்களைத் தூய்மைப் படுத்தவும் அவர்களின் பாவக் கழிவுகளுக்கும் இந்த வேள்விகள் உதவும். விழாக்களைப் புதுப்பிக்கவும் வேள்விகள் உதவும்.”

**கலச தீர்த்தம்!**

“கலச தீர்த்தத்தை வீட்டைச் சுற்றித் தெளிப்பதால் உங்கள் குடும்ப ஊழ்வினை நீங்கும்.”

**குடும்பத்தோடு கலந்துகொள்:**

“குடும்பத்தோடும் குழந்தைகளோடும் கலச விளக்குப் பூசைகளில் கலந்து கொள். அதனால் ஏற்படும் பயன்களைத் தக்க காலத்தில் உணர்ந்து கொள்வாய்.”

**வேள்வியின் பயன்:**

“ஒரு குடும்பத்தைத் திருத்த அதன் தலைவனைத் திருத்தினால் போதும். ஓர் ஊரைத் திருத்த ஒரு கிராமத்தைத் திருத்தினால் போதும். உலகத்தைத் திருத்த ஒரு நாட்டைத் திருத்தினால் போதும். இங்கு நீங்கள் போடும் சக்கரமும், கலச பூசையும் அண்டங்கள் அனைத்தையும் வழிப்படுத்த உதவும்.”

**தமிழ்நாட்டில் பிறந்தது வாய்ப்பு:**

“தமிழ்நாட்டில் பிறந்தது உங்களுக்கு வாய்ப்பு! இங்கே கோயில்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பூசைகளும் செய்வதால் கொந்தளிப்பு தவிர்க்கப்பட்டுள்ளது.”



**வழிபாடு:**

“பக்தர்களுக்குப் பக்தர்களே வழிபாடு செய்ய வேண்டும். ஆசான் வழிபாடு முக்கியம். தேங்காய் உடைத்துச் செவ்வாடை அணிந்து விட்டால் பொறுப்புத் தீர்ந்தது என்று நினைத்துக் கொள்ளக் கூடாது.”

**மன்றங்களில் படத்தை வைத்து வழிபடச் சொல்வது ஏன்?**

“தெய்வச் சிலைக்கு என்ன தான் உயிர்ப்புத் தன்மை இருந்தாலும், அது தங்கமாக இருந்தால் திருட ஆரம்பித்து விடுகிறார்கள். சிலையாக இருந்தால் சின்னா பின்னமாக்கி விடுவார்கள். அதனால் தான் படத்தில் உயிர்ப்புத் தன்மை கொடுத்து வழிபடச் சொல்கிறேன்.”

**ஒருமுகச் சிந்தனை:**

“அன்னைக்கு அலங்காரம் செய்யும் போது வேறு எந்தச் சிந்தனையும் இல்லாமல் ஒருமுகப் படுத்திச் செய்வதால் உனக்குப் பூரண அருள் கிடைக்கிறது. அத்தகைய நிலையில் உன் பார்வை படும்போது மற்றவர்களுக்கும் நல்லது நடக்கிறது.”

**குடும்பத்தினர் கூட்டு வழிபாடு:**

“ஒலி அலைகளினால் அதிர்ச்சி ஏற்படுகிறது. அந்த அதிர்ச்சியினால் மேலே உள்ள பொருள் கீழேயும் விழுந்து விடுவதுண்டு. அதுபோல ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே குரலாக “ஓம்” என்று ஒலிக்கும் போது உங்கள் பாவ மூட்டையும் அழிந்துவிடும்.”

**அமைதிக்கு:**

“சக்கரம், தெய்வீகம், ஆன்மிகம் ஆகியவை மனிதனுக்கு அமைதியைக் கொடுக்கும். மனிதனை ஆட்டிப் படைப்பது ஆன்மா!”

**உழைப்பால் மட்டும் உயர்ந்துவிட முடியாது:**

“ஆன்மிகத்தில் வழிபாடு தேவை. உழைப்பால் மட்டுமே உயர்ந்துவிட முடியாது.”

**அவரவர் பூஜா பலன்கள்:**

“அம்மாவைக் கும்பிட்டாலும் அவரவர் பூஜா பலன்களுக்குத் தக்கபடி தான் யாவும் நடைபெற்றுக் கொண்டு வரும்.”

**108 மந்திரமும் – வேப்பிலையும்:**

“தினமும் 108 மந்திரம் சொல்லி ஒரு வேப்பிலை சாப்பிடு.”

## வேள்விப் புகை:

“உலகில் பல மூலிகைகள் உண்டு. ஆஸ்துமா, இழுப்பு போன்ற நோய்களுக்கு வேள்விப் புகை மருந்தாக அமையும்.”

## திருஷ்டி – விளக்கம்:

“பழுத்த மரத்தின் மேல் கல்லடியும் படும்; கண் அடியும் படும். ஒரு சிறிய பூதக் கண்ணாடி வழியாக ஊடுருவி வரும் ஒளி, அருகில் உள்ள பஞ்சையும் எரித்து விடுகிறது அல்லவா? அதுபோலவே இந்தச் சிறிய கண்களின் மூலம் ஐம்புலன்களால் வெளிப்படும் பொறாமைத் தீ மற்றவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.”

## பள்ளிப்படிப்பும் – ஆன்மிகப் படிப்பும்:

“நாற்பது பிள்ளைகள் கூடிய ஒரு வகுப்பில் அவரவர் திறமைக்கும், உழைப்புக்கும் தக்கவாறு பயன் கிடைக்கிறது. அதுபோல ஆன்மிகத்திலும், வேள்விக் குண்டம், கலசம், விளக்கு ஆகிய பூசைகளில் கலந்து கொண்டு பங்கு பெறும்போது அவரவர் பக்திக்கு ஏற்பப் பலன் உண்டு.”

## கல்லைக் கும்பிட்டாலும்:

“பகுத்தறிவை எல்லோருக்கும்தான் கொடுத்திருக்கிறேன். எல்லோரும் அதனைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று கூற முடியாது. நீ கல்லைத்தான் கும்பிடுகிறாய். அந்தக் கல்லைக் கும்பிட்டதற்காகவும் உன்னைக் காப்பாற்றுகிறேன்.”

## அழுதால் கிடைக்கும்:

“குழந்தை அழுதால் பசி ஆறுகிறது. கன்று அழுதால் பால் குடிக்கிறது. இயற்கை அழுதால் வளம் கிடைக்கிறது. அதுபோலத் தெய்வத்திடம் நீ அழுவதால் அதற்குரிய நல்ல பலன்கள் உனக்குக் கிடைக்கின்றன.”

## நவராத்திரி அகண்டம்:

“உலகத்திற்குப் பலன் உண்டாகவும், உலகத்திற்கு ஒளி தேவை என்பதற்காகவும், மழை தேவை என்பதற்காகவும், ஆன்மிகம் வளரவேண்டும் என்பதற்காகவும் அகண்டம் ஏற்றப்படுகிறது.



நவராத்திரி அகண்டம் அகந்தையை அடக்கும்; அமைதியைக் கொடுக்கும்.”

## உலகத்தில் கொந்தளிப்புகள்:

“உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கொந்தளிப்பு உண்டு இக் கொந்தளிப்பு உலையில் அரிசி கொதிப்பது போன்றது. கைகளில் படாமல் உலையின் கொந்தளிப்பை எப்படித் தடுத்துக் கொள்கின்றீர்களோ அதுபோல நாட்டில் உள்ள கொந்தளிப்புகளையும் பதமாகத் தடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு பதமான முறையில் தடுத்துக் கொள்ளும் வழிவகைகளை உணர்த்தவே ஆன்மிகம், தியானம், அமைதி, வழிபாடு போன்றவை.”

## இலட்சார்ச்சனையின் போது...

“இலட்சார்ச்சனை நடைபெறுகிறபோது பயபக்தியுடன் மந்திரம் படிக்க வேண்டும். சங்கல்பம் என்பது ஏதோ ஒரு சந்தர்ப்பத்திற்காகச் செய்யப்படுகிறது என்று அமையாமல் மற்றவர்கள் சங்கடத்தைத் தீர்ப்பதற்காகச் செய்யப்படுவது என்று கருதவேண்டும்.”

## மனத்தூய்மைக்கு வழிபாடு:

“பாத்திரத்தை அவ்வப்பொழுது துலக்கி ஈயம்பூசி சரிசெய்து கொள்வது போல, உங்கள் மனத்தை அவ்வப்பொழுது தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். அதற்காகவே வழிபாடு!”

## இயற்கையை வணங்க வேண்டும். ஏன்?

“சூரிய சந்திரனை வணங்க வேண்டும். மரம், செடி, கொடிகளைப் போற்ற வேண்டும். அந்த இயற்கைப் பொருள்களை நீ நன்கு அனுபவிக்கிறாய். அவ்வாறு அனுபவிக்கிற அந்தப் பொருள்களை நீ போற்றி வணங்க வேண்டியது உன் கடமை! அவ்வாறு அனுபவிக்கிற அந்தப் பொருள்களைக் கொண்டு தான் இறைவனுக்குச் சமர்ப்பிக்கிறாய். இறைவனுக்குச் சமர்ப்பிக்கப் படுகிற அந்த இயற்கைப் பொருள் போற்றி வணங்கத் தக்கவை!

அக்கால மக்களிடம் இருந்த இயற்கையை வழிபடும் அந்தப் பழக்கம் மீண்டும் உங்களுக்கு வருதல் வேண்டும்.”

## வேள்வியும் – பயனும்:

“இங்கே நடைபெறுகிற வேள்வியைப் பார்த்து அமைதியாக இருந்தாலே உங்களுக்குப் பயன் உண்டு. தியானம் செய்த பலன், யோகம் செய்த பலன் உண்டு. இந்த மந்திர ஒலிகள் உங்கள் உடம்பின் மேல் பட்டால் பெரும் பயன் உண்டு.”

## கலச விளக்குப் பூசைகளை முறைதவறிச் செய்யக்கூடாது:

"கலச விளக்கு வேள்விப் பூசைகளை எப்போது யார் செய்தாலும் மழை வரும் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. அடிகளார் அனுமதியுடனும், பக்தியுடனும் நான் அருளிய வழிமுறைகளுடனும், முறைப்படியும் செய்தால் தான் பலன் கிடைக்கும். வேள்விப் பூசைகளை வியாபாரமாக ஆக்கக் கூடாது."

## கடற்கரையில் ஏன் வேள்வி?

"இயற்கையில் தான் சங்கமம் உண்டு. சமதர்மம் உண்டு. கடலில் சங்கமம் உண்டு. கடலிலிருந்து மேகம் உற்பத்தியாகிறது. அந்த மேகத்தின் நீர் கடலில் சங்கமம் ஆகிறது. அதற்காகத் தான் கடற்கரையில் யாகம்!" (25.6.1986)

## வழிபாட்டில் ஏற்றத்தாழ்வு:

"இடக்கை, வலக்கை என்ற இந்த இரண்டும் சேர்ந்து வணங்கும் போது சமமாக ஆகிவிடுகிறது. ஒரு கை செய்யும் வேலையை இன்னொரு கை செய்ய முடியாது. ஆனால் வணங்குகிற போது மட்டும் ஏற்றத் தாழ்வு இல்லாமல் இணைகின்றன. அதுபோல இறைவழிபாட்டில் ஒருவர்க்கொருவர் ஏற்றத்தாழ்வு பார்க்கக் கூடாது. வணங்குகிற போது உங்கள் இரு கைகளும் இணைவது போலவே வழிபாட்டிலும் உங்கள் ஐம்புலன்களும் ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டும்."

## வேள்விப் பூசை:

"சாதாரணமாக உடைத்து, எறிந்து வீசப்படுகிற பூசணிக்காயை இன்று தெய்வமாக மாற்றியிருக்கிறேன் மகனே! இதுபோல உதிரி பக்தர்களையும் தெய்வமாக்குவேன் மகனே!"

## கருவறைப் பணியில் பெண்கள்:

"பெண்கள் கருவறையில் அலங்காரம் செய்யும்போது மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தேங்காய் உடைக்கும் பணியையும் பெண்களே செய்ய வேண்டும். பயபக்தியோடு கருவறைத் தொண்டில் ஈடுபட வேண்டும். கருவறையில் வேடிக்கை வீண் பேச்சு கூடாது. எச்சரிக்கையாக இருந்து கொள்!"

## ஆகம விதிகள்:

"ஆகம விதிகள் என்பனவெல்லாம் புறத்தோற்றம் கொண்டவைகளே! அகத்தில் தான் கட்டுப்பாடு இருக்க வேண்டும்."



## கூட்டு வழிபாடு:

"மனிதகுல மேம்பாட்டுக்குக் கூட்டுவழிபாடு தேவை."

## உங்களை வளர்த்துக் கொள்ள...

"1008, 108 மந்திரம் படிப்பது; தொண்டு செய்வது; தியானம் செய்வது - இவற்றால் மட்டும் என்னையோ அடிகளாரையோ அடைய முடியாது. இவை அனைத்தும் இந்தச் சித்தர் பீடத்தையோ அடிகளாரையோ வளர்ப்பதற்காக அல்ல! உங்களை நீங்களே வளர்த்துக் கொள்வதற்காக!"

## வேள்வியில் கிடைத்த நவதான்யம்:

"வேள்விப் பூசையில் கிடைத்த நவதானியத்தை வீட்டின் வாயிற்படியின் அடியில் போட்டுக் கொள்ள வேண்டும்."

## திருஷ்டிக்கு எலுமிச்சம் பழம் ஏன்?

"எலுமிச்சம் பழத்திற்குக் கரைகளைப் போக்கும் தன்மை உண்டு. மற்ற பழங்களுக்கு அந்தத் தன்மை இல்லை. அது எப்போதும் எல்லாக் காலத்திலும் கிடைக்கும். விலையும் மலிவு. ஏழைகளும் எளிதில் வாங்கக் கூடியது.

பெரியவர்களைச் சந்திக்கச் செல்லும் போதும், பைத்தியம் தெளிய வைக்கவும் எலுமிச்சம் பழம் பயன்படுத்துகிறாய். அதனால் பெரியவர்களும் பைத்தியமும் ஒன்றாக முடியுமா?"

## திருஷ்டிக்குப் பூசணிக்காய் ஏன்?

"தன்னுடன் சேர்ந்த பொருளை ஈர்க்கவும், குங்குமம் போன்ற பொருளைக் கலக்கும் போது கலந்த பொருளின் நிறமாகவே மாறக்கூடிய தன்மை இந்தக் காய்க்கு உண்டு.

அதில் நீரும் இருப்பதால் சுத்தப்படுத்தும் தன்மை உண்டு. அது குப்பை மேட்டிலும் கிடைக்கும். சுடுகாட்டிலும் கிடைக்கும்.

அதனால் தான் திருஷ்டி சுற்றப் பூசணிக்காய்!"

## குடும்ப நல வேள்வியின் போது...

"வீட்டில் கலச விளக்கு வேள்வி செய்யும் போது உங்கள் ரத்த சம்பந்தப்பட்டவர்களைத் தான் பூசையில் உட்கார வைக்க வேண்டும்."

## வேள்வி பற்றிய கோள நூல்:

"பௌர்ணமி, அமாவாசை நாட்களில் "கோள நூல்" புத்தகத்தை வரிவிடாமல் படிக்க வேண்டும்."

## பூசையில் வெற்றிலை பாக்கு ஏன்?

“வெற்றிலை பசுமைத் தன்மை நிறைந்தது. செடியிலிருந்து பிரித்தாலும் அதன் பசுமைத் தன்மை மாறுவது இல்லை. அதுபோலக் குடும்பத்திலிருந்து பிரிந்தவர்களும் பசுமையாக இருக்க வேண்டும் என்பதற்காகப் பூசையில் வெற்றிலை வைக்கப்படுகிறது.

பாக்கு துவர்ப்புத் தன்மை கொண்டது. களைப்பைப் போக்கும் தன்மையும் கொண்டது. ஆன்மிக முறையில் பாக்கு அவ்வளவு உயர்ந்த பொருளன்று. எனவே வெற்றிலையுடன் பூவும் மஞ்சளும் வைப்பது சிறந்தது.

மஞ்சள் பொலிவு தரும். கிருமிகளை அழிக்கும். பூ மென்மைத் தன்மை வாய்ந்தது. ஆகையால் பசுமைக்கு வெற்றிலையும், உங்கள் வாழ்க்கை பொலிவடைய மஞ்சளையும், உங்கள் உள்ளம் மென்மையடைய பூவும் வைத்து வழிபடவேண்டும்.

கல்லுக்குப் புகையை ஈர்க்கும் தன்மை உண்டு. அதைக் கழுவுவதற்குரிய தன்மை சுண்ணாம்பிற்கு உண்டு.

இயற்கைப் பொருள்களை வணங்கும்போது இயற்கைப் பொருள்களால் தான் வழிபட முடியும்.”

## பூசைக்கு முன்பாக...

“எந்தப் பூசைக்கும் முன்பாகப் பெண்கள் கணவன் காலைத் தொட்டுக் கும்பிட வேண்டும்.”

## கூட்டு வழிபாடு:

“இங்கே சந்நிதியில் அபிடேகம் நடைபெறும் போதும், 1008, 108 மந்திரங்கள் ஓதும்போதும், வழிபாட்டுப் பாடல்களைப் பாடும்போதும், மற்ற பக்தர்களும் சேர்ந்து பாடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.”

## கூட்டு வழிபாடு:

“கூட்டு வழிபாட்டில் கலந்து கொண்டால் பழவினைகள் மாறும்; சக்தியருள் கிட்டும். துன்பம் நீங்கும்.”

## 1008, 108 மந்திரங்கள்:

“நிலத்தைப் பக்குவப்படுத்திப் பயிர் வளர்ப்பது போல, உங்கள் மனத்தைப் பக்குவப்படுத்தி ஆன்மிகப் பயிரை வளர்க்கிறேன். அந்த மனப்பக்குவம் அடைவதற்காகவே மூலமந்திரம், 1008, 108 மந்திரங்கள் தந்துள்ளேன்.”



## சந்ததியைக் காப்பாற்றுவேன்:

“எவன் ஒருவன் விடியற்காலை எழுந்து 1008, 108 மந்திரம் படித்து மன ஒருமையுடன 1008 நாட்கள் தொடர்ச்சியாக வழிபட்டு வருகிறானோ அவனையும், அவன் சந்ததியையும் காப்பாற்றுவேன்.”

## எது கடமை?

“என்னை வழிபடுவது தான் உன் அன்றாடக் கடமை! உனக்கு அளிக்கப் பட்டுள்ள உத்தியோகம் தான் உனக்குக் கிடைத்துள்ள ஓய்வு!”

## சூலம் பற்றிய விளக்கம்:

“மகனே! என்னிடம் பொருளையும், போகத்தையுமே பெரும்பாலான மக்கள் விரும்புகின்றார்கள். அருளை நாடுவோர் மிகச் சிலரே! இந்தச் சிலர்தான் உயர்ந்த நிலையைப் பெறுகின்றனர். இதனை விளக்கவே நான் சூலம் ஏந்தியுள்ளேன். அந்தச் சூலத்தைப் பார்!

கூர்மையான மூன்று முனைகளில் இரண்டு மட்டும் கீழ்நோக்கி வளைந்துள்ளன. நடுவிலே ஒன்று மட்டும்தான் மேல்நோக்கி உயர்ந்துள்ளது. அது போல யாரோ ஓரிருவர் மட்டும் தான் என்னை அடையவேண்டும் என்று நினைப்பவர்கள். அத்தகையவர்கள் சிலர்தான். ஆனால் அவர்களே உயர்ந்த நிலையைப் பெறுபவர்கள். பெரும்பாலோர் அந்தச் சூலத்தின் இரண்டு முனைகளைப் போன்றவர்கள். அவர்களின் மனம் உயரவில்லை. கீழ்நோக்கியபடியே உள்ளது.”

## உழைப்பும் வழிபாடும்:

“எதையும் தாங்கும் சக்தி உங்களுக்கு வேண்டும். கடுமையாக வேலை செய்தால் சோர்வு ஏற்படலாம். ஆனாலும் சோறு கிடைக்கும். சோம்சேறித்தனமாக இருந்தால் சோறும் கிடைக்காது. சோதனையும் ஏற்படும். ஆன்மிகத்தில் ஈடுபட்டவருக்கு வழிபாடு தேவை. உழைப்பால் மட்டுமே எதிலும் உயர முடியாது. என் திருவருள் துணையும் இருக்க வேண்டும்.”

## வழிபாடும் உன் மனமும்:

“சுடுகாட்டில் கூட என் படத்தை வைத்து வணங்கு! அங்கேயும் நான் தான் இருக்கிறேன். வெறும் சுவரினைப் பார்த்து நீ கையெடுத்துக் கும்பிட்டாலும் போதும்! உன் மனம் தான் முக்கியம்.”

## சந்நிதியில் தியானம் இரு!

“இங்கே வருகிற பக்தர்கள் சுத்தம், சுகாதாரம் உள்ளவர்களாகவும், ஆன்மிகப் பொறுப்பு உள்ளவர்களாகவும், இருக்க வேண்டும்.”

## ஒரு சித்திரா பௌர்ணமி கலச வேள்விப் பூசை பற்றி:

“இந்தச் சித்திரா பௌர்ணமி கலச வேள்விப் பூசை நாட்டின் அமைதிக்கும். நல்ல முன்னேற்றப் பாதைக்கும் வழி வகுக்கும். வருங்காலத்து மனித சமுதாயத்துக்கு நன்மை தரவும், கலந்து கொள்கிற மகளிர் குழந்தைப் பேற்றுக்கும் இந்தப் பூசைகள் வழி வகுக்கும்.”

## தெய்வ வழிபாடும் – கட்டுப்பாடும்:

“தெய்வ வழிபாட்டுக்குக் கட்டுப்பாடு அவசியம். சுத்தம் செய்யச் செய்ய ஓர் இடம் தூய்மை அடைவது போல, மனக்கட்டுப்பாட்டுடன் வழிபாடு செய்வதால் அகம் தூய்மை அடையும். அகத் தூய்மையினால் நல்லுணர்வும் பயபக்தியும் ஏற்படும்.”

## எதற்காக அர்ச்சனை? ஆராதனை?

“எதற்காக அர்ச்சனை? எதற்காக ஆராதனை? எதற்காக வழிபாடு? எதற்காக இவைகள் எல்லாம்? என்று நீங்கள் நினைக்கலாம்.

ஒரு குழந்தையை எதற்காகக் குளிப்பாட்டுகிறோம்? எதற்காக ஒழுக்கமாக வளர்க்கிறோம்?

பெற்றவர்களின் பெருமையைக் குழந்தையும், குழந்தையின் பெருமையைப் பெற்றவர்களும் அறிந்து இருபால் இணைப்பு ஏற்படவேண்டும் என்பதற்காகத் தான் மேற்கண்ட வழிபாடு!”

## கலச விளக்கு வேள்விப் பூசைகள் பற்றி:

“பட்டி தொட்டியெங்கும் ஆன்மிகம் வளர்ப்பதற்காகவே இந்தக் கலச விளக்கு வேள்விப் பூசை! ஒருவன் ஐந்து நிமிடம் தன்னை ஆன்மிகத்தில் ஈடுபடுத்திக் கொள்வானேயானால் அதுவே பிறகு ஐம்பது நிமிடங்களாக மாறும். இப்படிப் படிப்படியாகத் தன்னை ஆன்மிகத்தில் ஈடுபடுத்திக் கொள்வதால், அவனால் பிறர்க்கு ஏற்படும் தீமையும், பிறரால் அவனுக்கு ஏற்படும் தீமையும் தவிர்க்கப் படுகின்றன.

தனிப்பட்ட ஒருவன் பூசை செய்து வழிபடுவது போக, இப்போது மன்றங்கள் அமைத்து வழிபடச் செய்கிறேன். இதன் மூலம்



குடும்பமே ஒற்றுமையாக வழிபாடு செய்து ஆன்மிகத்தில் ஈடுபட முடிகிறது.

இவ்வாறு ஆன்மிகத்தில் ஈடுபடுவதால் பத்தில் ஒருவன் திருந்த வழியேற்படும். பத்து மாணவர்களில் ஒரு மாணவன் நல்ல மதிப்பெண் பெற்றால் ஆசிரியனுக்கு மகிழ்ச்சியும் பெருமையும் உண்டாவது போல, ஆன்மிகத்தில் ஒருவன் திருந்தினாலும் ஆன்மிகத்திற்குப் பெருமை உண்டாகும்.”

## கும்பாபிடேகம்:

“கும்பாபிடேகம் என்பது குல அபிடேகம். மனித குலத்தில் ஆண்கள், பெண்கள் அனைவரும் சேர்ந்து செய்யக்கூடிய அபிடேகமே கும்பாபிடேகம். இது மற்ற மதங்களில் கிடையாது. இந்து மதத்திற்கே உரிய தனித்தன்மை பெற்றது இது!”

## வேள்வி:

“மன்றத்தினர் வேள்விகளை வியாபாரமாக ஆக்கக் கூடாது. அவ்வாறு ஆக்கினால் விஷமாக மாறிவிடும்.”

## சிலை வணக்கம் எதற்காக?

“ஏன் சிலையை வணங்க வேண்டும்? ஏன் அதற்குப் பூசை செய்ய வேண்டும்? என்றெல்லாம் நினைக்கிறீர்கள்.

வணக்கம், வழிபாடு எல்லாம் எனக்கு அலல! உங்களுக்காக! உங்கள் உள்ளே இருக்கிற ஆன்மாவுக்காக!”

## ஒன்றோடு ஒன்று தொடர்பு:

“உடம்பு, உணவு, இயங்கும் சக்தி! இறப்பு! இவை ஒன்றுக்கொன்று தொடர்பு உள்ளவை. ஆனால் ஆன்மாவிற்கு இவற்றுடன் தொடர்பு இல்லை. ஆயினும் நீ செய்யும் வழிபாட்டுக்கும் உன் ஆன்மாவிற்கும் தொடர்பு உண்டு.”

## பஞ்சபூத வழிபாடு:

“எல்லாத் துறையிலும் அழுக்கு இருப்பது போல அழிவும் இருக்கும். இயற்கையைச் செயற்கையால் வெல்ல முடியாது.

பஞ்சபூதங்களால் அழிவு உண்டாகாமல் இருக்க வேண்டுமானால் பஞ்சபூத வழிபாடு தேவை.

இயற்கையை மாற்ற முடியாது. இயற்கையைப் பக்குவத்தோடு பயன்படுத்தி வாழாவிட்டால் அழிவு தான் வரும்.

இயற்கை சதி செய்தால் உங்களால் வாழ முடியாது.''

**பஞ்சபூதங்கள்:**

''பஞ்சபூதங்களைப் போற்றி வழிபடாவிட்டால் எல்லாம் பஞ்சு பஞ்சாக மாறிவிடும்.''

**பஞ்சபூத வழிபாடு:**

''இயற்கையை அழியாமல் காக்க வேண்டும். அதற்காகவே பஞ்சபூத வழிபாடு! அது தான் இங்கே (மேல்மருவத்தூர்) நடக்கிறது.''

**வேள்வி:**

''வேதனை தீர்வதற்கும் வினைகள் அழிவதற்கும் தான் வேள்வி.

யாக குண்டத்தில் உள்ள ஒரு கல்லை எடுத்துச் சென்று வீடு கட்டலாம் அல்லது பூசையறையில் வைத்து வழிபடலாம்.''

**மழை பெய்ய!**

''பஞ்சபூத வழிபாட்டின் மூலம் வேள்வி செய்யும் போது மழை பெய்யும்.''

**வாழ்க்கைக்கு வழி:**

''எங்கெங்கு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் அமைத்து, வழிபாடு செய்யப்படுகிறதோ அங்கே வாழ்வதற்கு வழி கிடைக்கும்.

மன்றங்களை வைத்து வியாபாரம் செய்யக்கூடாது.''

**விழாக்களும் – பூசைகளும்:**

''பஞ்சபூதங்களை நம்பித்தான் கரு உற்பத்தியும், உணவு உற்பத்தியும் அமைகின்றன.

செடி வளர மழை தேவைப்படுகிறது. அங்கு மழைக்கு முக்கியத்துவம் உண்டு. பூமிக்கும் முக்கியத்துவம் உண்டு.

எல்லாமே ஒன்றை ஒன்று சார்ந்தபடி உலகம் இயங்குகிறது.

அதுபோல ஆன்ம முன்னேற்றத்திற்கும் விழா, வேள்வி, பூசை என்ற காரியங்கள் ஒன்றையொன்று சார்ந்து நடத்தப்படுகின்றன.

இவை நல்லவனுக்கும் தேவைப்படுகின்றன. திருடனுக்கும் தேவைப்படுகின்றன!

திருடனும் மனிதன் தானே...? அவன் திருந்தவும் வாய்ப்பளிக்கப்படுகிறது.



செவ்வாடைத் தொண்டர்களுக்காகவும், பொது மக்களுக்காகவும் வேண்டியே இங்கு ஆடிப்பூரம், சித்திரா பௌர்ணமி, நவராத்திரி விழாக்கள்!

இவை மக்களை நல்வழிப்படுத்த உதவும்.''

**வேள்வி ஏன்?**

''மனிதனுக்கு உணவும், உடையும், தண்ணீரும் எவ்வளவு தேவையோ அது போல மனித குலத்துக்கு வேள்விகள் தேவை.''

**வேள்விக் குண்டத்தில்...**

''அடுத்து நடைபெறும் வேள்விகளில் நவசமித்துக்களுடன் எலுமிச்சங்குச்சி, அருகம்புல், அரசங்குச்சி, தும்பை ஆகியவற்றை முக்கியமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நவதானியத்தை வீட்டில் வைப்பதாலும், யாக குண்டத்தில் கொண்டு வந்து செலுத்தினாலும் பயன் உண்டு.''

**பஞ்சபூத வழிபாடு:**

''இயற்கை இயங்குவதால் தான் உங்களுக்கு இரை கிடைக்கின்றது. அந்த இயற்கை இறையாகவும் கருதப்படுகிறது. அந்த இறையை வணங்குவதால் அமைதி கிடைக்கிறது.

உள்ளத்தை ஒருமுகப் படுத்தும் போது தான் உருவம் தெரியும். ஐந்து விரல்களால்தான் ஒரு பொருளுக்கு உருவத்தைக் கொடுக்க முடியும்.

பஞ்சபூத வழிபாட்டால் தான் இயற்கையைக் கட்டுப்படுத்த முடியும்.''

**பஞ்சபூத வழிபாடு செய்வது எப்படி?**

''மணலைப் பரப்பி, நான்கு பக்கமும் எலுமிச்சம்பழம் பிழிந்து திருஷ்டி கழித்துவிட்டு, மணலின் நடுவே கற்பூரம் வைத்து - வேள்விக் குச்சி வைத்து, 108 மந்திரம் சொல்லிப் பூசை செய்! அது பஞ்சபூத வழிபாட்டிற்குச் சமமானது.''

**இயற்கையை வழிபடு:**

''காற்று, பூமி, நட்சத்திரம், சூரியன், சந்திரன் என்ற இவைகளெல்லாம் இருந்தால் தான் உலகத்தில் மரம், செடி, கொடிகள் எல்லாம் வளரும். இவை வளர்ச்சி பெற்று இருந்தால் தான் உங்களுக்கு உணவு உற்பத்தி செய்ய முடியும்.

எனவே, இயற்கையை வழிபடும் பழக்கம் வரவேண்டும்.''

## மன அமைதிக்கு வழிபாடு:

"இனி எந்தத் துறையிலும் அமைதி கிடைக்காது. ஆன்மிகத் துறையில் மட்டுமே அமைதி உண்டு.

ஒரு நிமிடமாவது மனம் ஒன்றி வழிபாடு செய்து வந்தால் தான் ஆன்மிகத் துறையிலும் அமைதி கிடைக்கும்."

## 1995–ஆம் ஆண்டு சித்திரா பௌர்ணமி வேள்வி பற்றிச் சொன்னது:

"இந்த யுவ ஆண்டு சித்திரை மாதம் பிறக்கும் பௌர்ணமியன்று சந்திர கிரகணம் வருவது நாட்டிற்கும் நல்லதல்ல. வீட்டிற்கும் நல்லதல்ல.

எனவே, சித்திரை பௌர்ணமியை ஒட்டி மிகப் பெரிய அளவில் கலசவிளக்கு வேள்விப் பூசை நடத்தப்பட வேண்டும்.

நெருப்பு, மின்சாரம் இவற்றால் ஆபத்து வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டமும் ஒரு யாக குண்டமும், ஐந்து கலசங்களும் கேட்டுப் பெற வேண்டும்.

யாக சாம்பலைக் கலச நீரில் கலந்து மாவட்டத்தின் எல்லைகளில் எடுத்துச் சென்று நான்கு மூலைகளிலும் தெளித்து நடுப்பகுதியிலும் தெளிக்க வேண்டும்.

இவ்வாறே மன்றங்களும் தங்கள் பகுதிகளில் செய்ய வேண்டும். ஒவ்வொரு மன்றமும் தனியாக ஒரு யாக குண்டமும் இரண்டு கலசங்களும் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டும்.

பக்தர்கள் ஒவ்வொருவரும் ஒரு யாக குண்டமும் இரண்டு விளக்குகளும் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டும்.

அழிவுகள் வரக்காத்திருக்கின்றன.

அவற்றைத் தணிப்பதற்குத் தான் இந்த யாகம்!

நீங்கள் ஆன்மிகத் துறையில் வளரவேண்டும். அமைதி கிடைக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் பதம் தேவை. எல்லோரும் ஒரே நிலைக்கு வரமுடியாது.

உடலுக்குத் தலை எப்படிப் பிரதானமோ, அப்படி உங்கள் வாழ்க்கைக்குப் பூமி பிரதானம்! அதனால் தான் பூமியை



வணங்குவதற்கு யாகம் செய்யச் சொல்கிறேன்.

சித்திரா பௌர்ணமி கலச விளக்கு யாக பூசை சிறப்பான முறையில் அமைத்துக் கொள்!

இந்த யாக குண்டத்தில் 108 சுள்ளிகள், 108 கற்பூரத் துண்டுகள், முக்கூட்டு எண்ணெய் சேர்த்து யாகம் செய்தால் உங்களுக்கு எதிரான மந்திர தந்திரங்கள் வலிமை இழக்கும்."

1) நவதானியம் 2) உப்பு 3) எலுமிச்சம் பழம் 4) வீட்டு மண் 5) தோட்ட மண் 6) பழைய துணி 7) மிளகாய் ஆகிய இவற்றை மஞ்சள் துணியில் முடித்து, ஒரு வாரம் உன் வீட்டுப் பூசையறையில் வைத்திருந்து, எடுத்து வந்து இந்த யாக குண்டத்தில் தலையைச் சுற்றிப் போட வேண்டும்.

இறுதியில் யாக சாம்பலைக் கலச நீரில் கலந்து வீட்டைச் சுற்றித் தெளிக்க வேண்டும்.

தீய சக்திகளை அழிக்கத் தான் இந்த யாக பூசை!

யார் யாருக்குப் பழைய கலச விளக்குகளைக் கடலில் போடச் சொல்லியிருக்கிறேனோ அவர்கள் கடலில் செலுத்தி விட வேண்டும்.

மற்றவர்கள் பழைய கலசங்களைக் கடலில் செலுத்திவிடவும்.

பழைய விளக்குகள் இருந்தால் அவற்றைக் கடலில் செலுத்த வேண்டியதில்லை. அவற்றை உருக்கிப் பெரிய விளக்குகளாகச் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்த பிறகு அவற்றைச் சித்திரா பௌர்ணமியன்று ஆலயத்துக்கு எடுத்துக் கொண்டு வந்து இங்கே ஏற்றிய பிறகு வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம்.

சித்திரா பௌர்ணமி முதல் புது விளக்கு வாங்கி வீட்டில் ஏற்ற வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் இனி பழைய விளக்குகளை ஏற்றக் கூடாது.

இந்த யாகத்தில் அனைவரையும் கலந்து கொள்ளச் சொல்! அனைவரையும் கலச விளக்கு வாங்கிப் பயன்படுத்தச் சொல்!"

## அகமும் – புறமும்:

"கலச விளக்கு வேள்விப் பூசைகள் எத்தனை செய்தாலும், உன் உள்ளம் கலச யாக குண்டங்களாக மாற வேண்டும்."

## கலச விளக்கு வேள்விப் பூசைகள்:

"உங்களிடம் உள்ள அறியாமையை நீக்கி, அறிவை வளர்ப்பதற்காகவே கலச விளக்கு வேள்விப் பூசை.

யாகம் யோகத்திற்கும் உதவும். ஓம் என்ற ஓங்கார ஒலிக்கும் பயன்படும். உயர்வு தாழ்வுகள் நீங்கவும் பயன்படும்.

இயற்கையை ஒட்டி நீங்கள் வாழ்வதற்கு வேலிபோலப் பாதுகாக்கும்.

உலகத்தில் உள்ள சலசலப்புகள் நீங்கிக் கலகலப்பு ஏற்படக் கலசங்கள் உதவும்.

அதர்மங்கள் நீங்கித் தர்மங்கள் செழிக்க வேண்டுமானால் கலச வேள்விப் பூசை அவசியம்.

மேல்மட்டம், நடுமட்டம், கீழ்மட்டம் என்று பாராமல் எல்லோரும் பூசை செய்ய வேண்டும்.

எந்த வேள்விக்குப் போனாலும் வந்தாலும் பெண்கள் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பருத்தி நூல் புடவை தான் உடுத்த வேண்டும். ஜாக்கிரதையுடன் யாக சாலையில் எண்ணெய் ஊற்ற வேண்டும்.''

**தினமும் வழிபாடு:**

''செவ்வாய், வெள்ளி, ஞாயிறு, அமாவாசை, பௌர்ணமி போன்ற நாட்களில் மட்டுமே வழிபாடு செய்தால் போதாது. எல்லா நாட்களிலும் வழிபாடு செய்வது உன் கடமை.

உள்ளம், ஆன்மா, தெய்வம் என்ற உணர்வுகளைச் சிதறவிடாமல் ஒருமுகப்படுத்தி வழிபாடு செய்ய வேண்டும்.''

**கானல் நீரை நோக்கி ஓடும் மான்கள்:**

''1008 படி! 108 படி! என்றால் யாரும் வருவதில்லை. சினிமாப் படக் காட்சி என்றால் அங்கே தான் கூட்டம் கூடுகிறது. தண்ணீரைத் தான் குடிக்கலாம். கானல் நீரைக் குடிக்க முடியாது. ஆனாலும் உலகம் கானல் நீரை நோக்கித் தான் ஓடுகிறது. கானல் நீரை நம்பி ஓடும் மான்களாக இன்றைய மக்கள் இருக்கிறார்கள்.''

**வழிபாடு: அன்றும் – இன்றும்:**

''மனித குலம் ஒரு காலத்தில் பாம்பு, சூரியன், சந்திரன் ஆகிய இயற்கையை வழிபடத் தொடங்கியது.

அதன் பிறகு ஒரு சித்தனை உருவம் வைத்து வழிபட்டது. பிறகு சிலை வடித்து, ஒரு தெய்வம் என்று சொல்லி வழிபட்டது. பிறகு ஏசு என்றது; அல்லா என்றது.



வழிபாடு என்பது ஒழுங்காக அமையும் போது, மனித குலத்திற்கு நன்மை உண்டாகும். அது வழிதவறிப் போகும் போது அழிவு தான் உண்டாகும்.

மிருகங்களிடம் ஒரு குணம் மட்டுமே உண்டு. ஆனால் மனிதனிடம் உள்ள ஐம்புலன்களும் ஐந்து மிருகங்களுக்குச் சமம். இவற்றைக் கட்டுப்படுத்தி முன்னேறுவதற்காகவே வழிபாடு!

கலச விளக்கு யாக பூசைகளெல்லாம் உங்களுக்குக் கற்றுத் தருகிறேன்.

செங்கல் கொடு! சிமெண்ட் கொடு! எனச் சொல்லி உங்களைத் தருமம் செய்யச் சொல்லி உங்களுக்கு அதனால் பலன் தருகிறேன். பலன் தருவதோடு நில்லாமல் உங்கள் ஆன்மாவைச் சுத்தம் செய்து கொண்டும் வருகிறேன். மேலும் மேலும் அழுக்குகளை ஏற்றிக் கொள்ளாமல் நீங்கள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.''

**இயற்கை தான் தெய்வம்! அதை வழிபடு!**

''உனக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்து கொடுப்பது தான் தெய்வம்!

உனக்குத் தேவையான காற்று, நீர், நெருப்பு, உணவு ஆகியவற்றை உற்பத்தி செய்து கொடுக்கும் இயற்கை தான் தெய்வம்! அந்த இயற்கையை வணங்குவது தான் சிறந்த பண்பாடு! அந்தப் பண்பாடு உங்களிடம் வளர வேண்டும்.

இயற்கை வழிபாடு என்பது பஞ்சபூத வழிபாடு.

**ஆன்மிக மாநாடுகளும் – வேள்விகளும் தான் பரிகாரம்:**

''இன்று உலகமே கொந்தளிப்பாக இருக்கிறது. இந்தக் கொந்தளிப்புகள் அடங்கி அமைதி பெற வேண்டுமானால் கலச விளக்கு வேள்விப் பூசைகளும் ஆன்மிக மாநாடுகளும் தேவை.

உனக்குப் பசி என்றால் நீயாகத் தான் சாப்பிட வேண்டும். உனக்குத் தாகமென்றால் நீயாகத்தான் தண்ணீர் குடிக்க வேண்டும்.

உலகம் அமைதி பெற ஆன்மிக மாநாடு நடத்த வேண்டும் என்று தாயிடம் நீங்கள் வேண்டிக் கொள்ள வேண்டும்.

ஆன்மிக மாநாடுகளும், கலச விளக்கு வேள்விப் பூசைகளும் உங்களுக்காகவே தவிர எனக்காகவோ, அடிகளாருக்காகவோ அல்ல!

எந்த அரசும், எல்லோருக்கும் சேர்ந்து, எந்த நன்மையையும்

பாதுகாப்பையும் அளித்து விட முடியாது. உனக்கு நீ தான் பாதுகாப்பு!

தீய சக்திகள் பெருகிவிட்டன. தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் காலமும் நெருங்கிவிட்டது.

பத்துப் பேர் நல்லவனாக இருந்தால் நூறு பேர் கெட்டவனாக இருக்கிறான். அந்த நூறு பேர் ஐநூறு பேரைக் கெட்டவர்களாக மாற்றுகிறார்கள். அந்த நூறு பேரை மாற்ற ஆன்மிகம் தேவை!

ஒரே ஒரு கதிர்மணி மூட்டையாவதில்லை. பல கதிர்மணி சேர்ந்தால் தான் மூட்டையாக முடியும். அதுபோல எல்லோரும் சேர்ந்து ஒற்றுமையாக ஆன்மிகப் பணிகளைச் செய்ய வேண்டும்.''

### சாந்தி வேள்வி!

''உலகில் திடீர் மரணத்தினால் 400 பேர்; 500 பேர் என இறக்கும் போது மரணமடைந்த ஆன்மாக்கள் அமைதி அடையாமல் பேயாக அலையும். இவற்றை ஆன்மிகத்தால் தான் சாந்தி செய்ய வேண்டும். அக்கிரமங்களினால் சாந்தி செய்ய முடியாது.''

### உங்களைப் பதப்படுத்த:

''வெள்ளிக்குத் தங்க முலாம் பூசினாலும், செம்புக்குத் தங்க முலாம் பூசினாலும் காலப்போக்கில் வெளுத்து விடும்.

நெல்லிலும் பதர் உண்டு. ஆன்மிகத்திலும் பதர்கள் உண்டு.

உங்களையெல்லாம் ஆன்மிகத்தில் பதப்படுத்திக் கொண்டு வருகின்றேன்.

தனியான தங்கத்தில் எதுவும் செய்ய முடியாது. செம்பும் சேர்த்தால் தான் உருவம் உண்டாகும்.

உங்களை வேள்விப் பூசையெல்லாம் செய்ய வைக்கிறேன்.

உங்களைக் கோபுரத்தில் ஏற்றுகின்ற அளவுக்குக் கொண்டு வந்திருக்கின்றேன்.

வேதனைகளையெல்லாம் குறைத்துச் சாதனையாக்குகின்றேன்.

பெண்களுக்கு முக்கியத்துவம் தந்து ஆன்மிகத்தில் அவர்களை உயர்த்தி வருகின்றேன்.''

### உள்ளுணர்வுக்குத் தெரிய வேண்டும்:

''செவ்வாடை அணிந்து இருக்கிறோம்; அம்மாவை



வணங்குகிறோம் என்று வெளியில் தெரிந்தால் மட்டும் போதாது. உன் உள்ளுணர்வுக்குத் தெரிய வேண்டும்.

கற்பூர தீபாராதனை, தேங்காய் உடைப்பது போன்றவற்றை எவ்வளவு தான் செய்தாலும் உன் உள்ளுணர்வு நன்றாக இருந்தால் மட்டுமே அவை பயன்தரும்.''

### தெய்வம் வழிகாட்டும்:

''இயற்கை வழிபாடு, சக்தி வழிபாடு, தாய், தந்தை வழிபாடு, என்ற வழிபாட்டு உணர்ச்சி வளர்ந்தால்தான் உனக்கு நல்ல வழிகாட்டியாகத் தெய்வம் அமையும்.''

### வணக்கமும் – வழிபாடும்:

''வெறும் புற்றுதானே...? வெறும் சிலை தானே...? என்றெல்லாம் நினைக்கின்றனர்.

கல் எடுத்து உருக்கொடுத்தவன் சிலையை வணங்க மாட்டான். அதனால் அவனும் வளர மாட்டான்.

தன் படத்தைத் தான் வணங்குபவன் தான் உத்தமன். தன் ஆத்மாவைத் தான் வணங்குபவன் தான் சிறந்தவன்.

எந்தப் பொருள் உங்களுக்கு வாழ்வு கிடைக்க உபயோகப்படுகின்றதோ அத்தகைய பொருள்களை வணங்க வேண்டும்.''

### மூர்த்திக்கு மகிமை:

''ஐயப்பன், பெருமாள், முருகன், காமாட்சி, மீனாட்சி, என்று எத்தனைபேர் கடவுளாக முடியும்? மக்கள் மனத்தில் பக்தி, பாசம், இருக்கும் வரைதான் அந்த மண்ணிற்கு மகிமை; மூர்த்திக்கும் மகிமை''

### எதற்காகத் திருஷ்டி?

''எதற்காகக் கற்பூரம்? எதற்கு எலுமிச்சம் பழம்? எதற்குப் பூசணிக்காய்? எதற்குத் தேங்காய்? இவற்றால் எதற்குத் திருஷ்டி கழிக்கிறார்கள்? என்று நினைக்கிறீர்கள். அந்த ரூபத்திலாவது திருஷ்டி கழியட்டுமே... என்றுதான் திருஷ்டி கழிக்கப்படுகிறது.''

### சிலை வழிபாடும்... இயற்கை வழிபாடும்...

''சிலை வழிபாட்டை விட இயற்கை வழிபாடுதான் சிறந்தது. உருவ வழிபாடு இல்லாவிட்டால் உணவுக்கும், ஊதியத்துக்கும்

வழி கிடைக்காமல் போய்விடுமே என்பதற்காக ஆன்மிகத்தில் இயற்கை வழிபாட்டை மறைத்துவிட்டார்கள்.''

**பூஜை என்பது:**

''பூஜை என்பது பூஜ்யத்திலிருந்து தான் ஆரம்பமாகிறது.''

**பெரிய அளவில் பூஜைகள்! கூட்டு வழிபாடுகள்!**

''மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆன்மிக மாநாடு நடத்திய போது அழிவுகள் இல்லை என்பதை நினைத்துப் பார்!

மிகப் பெரிய அளவில் ஆன்மிக மாநாடுகள்! மிகப் பெரிய அளவில் பூஜைகள்! கூட்டு வழிபாடுகள் நடத்த வேண்டும். அவ்வாறு நடத்தினால் அழிவுகள் குறைய வாய்ப்பு உண்டு.''

**மன ஒருமையோடு நினைக்கிறாயா...?**

''குழந்தை இல்லை; திருமணம் நடக்க வில்லை; பொருளாதார வசதி இல்லை என்ற ஏக்கங்களோடு வருகிறீர்கள்; போகிறீர்கள்;

ஒரு நிமிடமாவது உன் அவயங்களை ஒரு முகப்படுத்தி அம்மாவை நினைத்தால் எல்லாம் சரியாக நடக்கும்.''

**வீடும்! நாடும்!**

''வழிபாடு செய்தால்தான் வீடும் வளர்ச்சி அடையும்; நாடும் வளர்ச்சி அடையும். விஞ்ஞானத் துறையால் மட்டும் வளர்ச்சியடைந்து விட முடியாது.''

**1999–சித்திரா பௌர்ணமி வேள்வி பற்றி...**

''அடுப்பின்மேலே உள்ள பானை கீழே எரியும் தீயின் வெப்பத்தை ஏற்றுத் தண்ணீரைக் கொதிக்கச் செய்து, அரிசியை எப்படிப் பக்குவமாகச் சமைக்கிறதோ, அதுபோல உங்கள் மனமும் பக்குவப்படவே இந்த வேள்வி!''

**வழி பாட்டிற்குப் பலன்:**

''நீ செய்யும் வழிபாட்டிற்கு ஏற்பப் பலன் கிடைக்கும். பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பதற்கு ஏற்ப சிலருக்கு வழிபாடு புளிப்பு போல ஆகிவிட்டது. ஆரம்பத்தில் உங்களிடமிருந்த தெய்வ வழிபாடு இப்போது இல்லை.

சுளை இருக்கத் தோல் விழுங்கும் உலகமாக ஆகிவிட்டது.''



**சக்கரங்கள் – கோடுகள் – கோணங்கள்:**

''கோடுகள் கோணங்கள் ஆகும். கோணங்கள் கோலங்கள் ஆகும். கோலங்கள் கோணல் ஆனால். கோளங்கள் கோணல் ஆகும்.''

**உன் மன நிலைக்குத் தக்கபடி...**

''இது கல் இல்லை! தெய்வம் தான் என்று மனத்தை ஒரு முகப்படுத்தி வழிபட்டால் பலன் உண்டு.''

**அனுபவங்கள் கிடைக்க...**

''இயற்கையை வணங்கவேண்டும். அந்த இயற்கையின் வடிவத்திற்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதனால் ஒரு சிலை வைத்து வழிபட வேண்டி உள்ளது. அது வெறும் சிலை என்று நீ நினைத்தால் தெளிவு கிடைக்காது. அதனை ஒரு தெய்வம் என்று நீ நினைத்து பக்தியுடன் வழிபடும் போது அதனால் உனக்குச் சில அனுபவங்கள் கிடைக்க வழி ஏற்படும்.''

**பஞ்ச பூத வழிபாடு:**

''இயற்கையை வணங்கச் சொல்கிறேன்; வழிபடச் சொல்கிறேன். பஞ்ச பூதங்களை உங்களைக் கொண்டே எப்படி வணங்கச் சொல்கின்றேன் என்ற நுட்பம் எல்லாவற்றையும் நீங்கள் உணர வேண்டும்.''

**ஆன்மா வளர்ச்சியடைய... முன்னேற...**

''வயது 90 ஆகிவிட்டது; நடை தடுமாறுகிறது; கண்பார்வை குறைந்து வருகிறது; பேசவும் முடிவதில்லை. உண்பதற்கும் கூடப் பிறர் உதவி தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையிலும் மனிதனுக்குப் பண ஆசை பதவி ஆசை விடுவதில்லை.

இத்தகைய ஆசைகளின்றி ஆன்மா வளர வேண்டுமானால் தெய்வ வழிபாடு தேவை. வழிபாட்டை விடக்கூடாது. அப்போது தான் உன் ஆன்மா முன்னேறி என்னிடம் வரும்.''

**இயற்கை வழிபாடு அவசியம்:**

''ஐம்பூதங்களும், ஐம்புலன்களும் ஒன்றுபட்டு இணைந்ததே இயற்கை. அந்த இயற்கையை வணங்க வேண்டும்.

ஆரம்ப காலத்தில் இயற்கை வழிபாடே இருந்தது. அதன் பிறகு சிலை வழிபாடு ஏற்பட்டது.

இன்றைய நிலையில் மேல்மட்டம், கீழ் மட்டம், படித்தவன், படிக்காதவன், தெரிந்தவன், தெரியாதவன் ஆகிய அனைவருக்கும் இயற்கை வழிபாடு அவசியம்.''

**ஒரு நாள் கூத்து:**

''ஒரு புறம் மக்கள் பெருக்கம் குவிந்து கொண்டே வருகிறது. இன்னொரு புறம் மனித மனம் குறுகிக் கொண்டே வருகிறது.

63 நாயன்மார்களுக்கும், சிலை வைத்து, ஒரு நாள் மட்டும் தண்ணீர் ஊற்றி ஊர்வலம் வந்தால் மட்டும் போதாது. அவர்கள் போதனைகளைக் கடைப்பிடித்து வாழ வேண்டும். தொண்டு நெறி படர வேண்டும்.''

**மூலப் பொருளுக்கு மதிப்புக் கொடு:**

''பூமியில் உற்பத்தியாகி விளைகிற பொருள்களுக்கு மதிப்புக் கொடுக்கிறீர்கள். அவற்றை உற்பத்தி செய்யும் பூமிக்கு மதிப்புத் தருவதில்லை. அந்தப் பூமியையும் தெய்வமாக நினைத்து நன்றியுடன் வணங்குகிற பண்பு உங்களுக்கு வரவேண்டும்.''

**தெய்வ வழிபாடு அவசியம்:**

''வாய், பற்கள், நாக்கு. இவையாவும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்திருப்பது போல, ஆன்மாவும் காற்றும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்தே இருக்கும். ஆன்மாதான் அமைதி கொடுக்கும். அதற்குத் தெய்வ வழிபாடு அவசியம்.''

**கூட்டு வழிபாடும் – வீட்டு வழிபாடும்:**

''ஆன்மிகம் வளர வேண்டும். கூட்டம் கூடி வழிபாடு செய்யாவிட்டால் வீடும் காடாக மாறும்.

வெள்ளிக் கிழமைகளில் பெண்கள் வீட்டில் வழிபாடு செய்யும் முன், வீட்டில் மஞ்சள் நீர் தெளிக்க வேண்டும்.

வெள்ளிக் கிழமை தோறும் ஒருசில நிமிடங்களாவது வீட்டில் உள்ள அனைவரும் சேர்ந்து கூட்டு வழிபாடு செய்ய வேண்டும்.

சுயம்புவையும், சிலையையும் மனத்தில் நிறுத்தி வழிபட வேண்டும்.

கட்டுப்பாடு இருந்தால்தான் பட்டியில் அடங்கும் ஆடுபோல மனம் அடங்கும்.

அந்தக் கட்டுப்பாட்டை உயிர்ப்பிக்கவே வழிபாடு!''



**கிராமங்களில் வழிபாடு கட்டாயம் ஏன்?**

''எந்த நாட்டில் உழைப்பு குறைகிறதோ அங்கே அழிவுகள் அதிகமாகும். உழைப்பவனையும் ஏன் உழைக்கிறாய் என்று கேட்கும் காலம் இது.

அதிசயங்களை மிஞ்சும் அளவிற்கு அதிசயங்கள் நடக்கும். அழிவுகள் நடக்கும். அதனால்தான் கிராமங்களில் வழிபாடு செய்யும்படி வற்புறுத்துகிறேன்.''

**கெடுக்கும் கூட்டம்:**

''நெருப்பும் பஞ்சும் சேர்ந்தால் அணைத்து விடலாம். பெட்ரோலும் சேர்ந்து எரிந்தால் அணைப்பது கடினம்.

உழைக்கும் வர்க்கத்தை ஏமாற்றக் காத்திருக்கிறார்கள்.

வழிபாடு செய்து பலன் அடைபவர்களையும் கெடுப்பவர்கள் இருக்கிறார்கள்.''

**சமாதானம்:**

''தெய்வ சக்தியினால்தான் எதையும் செய்ய முடியும்.

இன்று அரசியலுக்கு மரியாதை இல்லை. ஆன்மிகத்திற்கு மரியாதை உண்டு. இயற்கையைப் பற்றி ஆராய்ச்சி செய்யாமல் சண்டை, சச்சரவு, வெட்டு குத்து இல்லாமல் சமாதானமாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

தன்னைத் தானே திருத்திக் கொண்டு வழிபாடு செய்து வந்தால் தான் உன்னைச் சார்ந்தவர்களையும் திருத்த முடியும்.''

**வெகுதான்ய ஆண்டு பற்றிக் கூறியது:**

''இந்த வெகுதான்ய ஆண்டில் சித்திரை பௌர்ணமியில் அக்கினி நட்சத்திரத்தின் போது மழை பெய்ததைப் பார்த்தீர்கள். இதுபோல எப்போதும் அக்கினி நட்சத்திரத்தில் மழை பெய்தது இல்லை என்றும் அறிவீர்கள். காரணம் என்ன?

இது வெகுதான்ய ஆண்டு என்பதால் இங்கே தானியங்கள் முளைக்க வைத்து, வேள்வியும், வழிபாடும் செய்யப்பட்டன. அதனால் தான் அந்த மழை பெய்தது என்பதையும் நீங்கள் உணர வேண்டும்.''

**உலக அமைதிக்குக் கலச விளக்கு வேள்விப்பூசை:**

''கலச விளக்கு வேள்விப் பூசைகள் செய்தால் உலகம் அமைதி பெற வழியுண்டு. செழிக்கவும் வழியுண்டு. அவ்வாறு

செய்தால்தான் தருமம் தலை தூக்கும். நாடும் முன்னேறும். இல்லையேல் அழிவுதான் ஏற்படும்.''

**கோள்களால் கோளாறுகள்:**

"காலங்கள் கோளாறு செய்கின்றன. கோள்களால் கோளாறு ஆகாமல் உங்களைப் பாதுகாக்க வேண்டியது அம்மாவின் பொறுப்பு. அதற்காகவே கலச விளக்கு வேள்விப் பூசை எல்லாம். வேப்பிலை கொடுப்பதும் உன் பாதுகாப்பிற்காகவே!''

**உலகில் கொந்தளிப்புகள்:**

"இன்று உலகமே கொந்தளிப்பாக இருக்கிறது. இக்கொந்தளிப்புகள் அடங்கி அமைதி பெற வேண்டுமானால் கலச விளக்கு வேள்விப் பூசைகளும் ஆன்மிக மாநாடுகளும் தேவை.

உனக்குப் பசியென்றால் நீயாகத் தான் சாப்பிட வேண்டும்.

உனக்குத் தாகம் என்றால் நீயாகத் தான் தண்ணீர் அருந்த வேண்டும்.

உலகம் அமைதிபெற நீங்கள் தான் ஆன்மிக மாநாடு நடத்த வேண்டும். நீங்கள் தான் அம்மாவை வேண்டிக் கொள்ள வேண்டும்.

ஆன்மிக மாநாடுகளும், கலச விளக்கு வேள்விப் பூசைகளும் உங்கள் நன்மைக்காகவேயன்றி எனக்காகவோ, அடிகளாருக்காகவோ அல்ல.''

**சடங்குகளும் தேவை:**

"ஒரு பக்கம் சாதனை, ஒரு பக்கம் வேதனை இருக்கிறது. இன்றைய மக்களுக்கு உழைப்பு கடினமாகத் தோன்றுகிறது. 24 மணி நேரமும் பாடவும் முடியாது, ஆடவும் முடியாது. எனவே உழைத்துக் களைத்துப் போகிற நிலையில் தான் ஆடல், பாடல் தேவை.

உடலில் உள்ள கழிவுப் பொருள்கள் வெளியேறினால் தான் உடல் ஆரோக்கியமாக இருக்கும். அதுபோல அவ்வப்போது நான் கற்றுத் தருகிற சடங்குள் வாழ்க்கைக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.''

**முறையான வழிபாடும் – மழையும்:**

"எங்கெங்கே முறையான வழிபாடு நடக்கிறதோ அங்கெல்லாம் மழை உண்டு.''



**சிலையும் – தெய்வமும்:**

"கலைப் பொருளாக உருவான ஒரு கோயில் சிலைதான் தெய்வமாக மாறுகிறது. அதுபோல உன்னுள்ளே இருக்கும் ஆன்மாவைப் புரிந்து கொண்டால் நீயும் தெய்வமாக மாறலாம். ஆன்மிகத்தில் முன்னேறலாம். உன் ஆன்மாவே கடவுள்.''

**கருவறைத் தொண்டர்களுக்கு:**

"நெருப்போடும், மின்சாரத்தோடும் பழகும்போது எவ்வளவு பயமும், எச்சரிக்கை உணர்வும் தேவையோ, அந்த அளவு பயமும், எச்சரிக்கை உணர்வும் கருவறையில் உள்ள தொண்டர்களுக்குத் தேவை.''

# 21. அன்னை அருளிய மருத்துவக் குறிப்புகள்

**நீராகாரம்:**

"புளித்த நீரில் அரை உப்புப் போட்டுக் குடித்து வருவது நல்லது. பழைய உணவு முறையே நல்லது. காபி, டீ உடலுக்கு நல்லது அல்ல.

பழைய கஞ்சி, பழைய சோறு சாப்பிட்ட காலத்தில் இவ்வளவு ஆஸ்துமா நோயாளிகள் கிடையாது.

புதியரக அரிசி அதன் செயற்கை புத்தியைக் காட்டும்."

**ஆட்டுப்பாலின் அருமை:**

"காட்டில் வாழும் மானின் பாலுக்குக் காலத்தை வெல்லும் தன்மை உண்டு. மான் காட்டிலுள்ள இலைகளையும், மூலிகைகளையும் உண்பதால் மான் பாலுக்குச் சக்தி உண்டு.

அந்தக் காலத்தில் காட்டில் தவம் செய்பவர்கள் மான் பாலை ஒருவேளை அருந்தி ஒரு வருடம் ஓட்டுவார்கள்.

இப்போதுள்ள மாட்டுப் பாலுக்கு அந்தத் தன்மைகளெல்லாம் கிடையாது.

நீர் சேர்தல், கொழுப்பு, வாய்வு போன்ற தொல்லைகள் எல்லாம் மாட்டுப் பாலால் உண்டு.

மான் பால் கிடைப்பது அரிது. அதனால் தான் நோயோடு என்னிடம் வருகிற சிலரிடம் ஆட்டுப் பால் அருந்தச் சொல்கிறேன்."

**இதய நோய்; காரணம்:**

"இன்று நீங்கள் உண்கிற உணவிலும், காய்கறிகளிலும், எண்ணெயிலும் கலப்படமே மிகுந்து கிடக்கிறது. அதனால் பலருக்கு இதய நோய் ஏற்படுகிறது.

தேவையற்ற அலைச்சல், ஓய்வின்மை காரணமாகவும் இதயநோய் வருகிறது."



**எதிர்கால நோய்கள்:**

"இதயம், நுரையீரல், கண், காது தொடர்பான நோய்கள் அதிகமாகும். இயற்கைச் சூழ்நிலையை மாசுபடுத்தி வந்ததால் ஏற்படும் விளைவுகள் இவை!"

**சளித்தொல்லை நீங்க:**

"துளசிச் சாறு, இஞ்சிச்சாறு, மஞ்சள் தூள் போட்டுக் குடித்து வரவேண்டும்."

**கழுத்து வலி நீங்க:**

"கன்னிக்கோழி முட்டையை உடைத்து மஞ்சள் கருவை நீக்கிவிட்டு வேப்பெண்ணெய் கலந்து கழுத்தில் தேய்த்து ஊற வைக்க வேண்டும். அதன் பிறகு பாசிப்பருப்புப் பொடி செய்து வைத்துக் கொண்டு தேய்த்துக் குளித்து வரவேண்டும்."

**தவிர்க்க வேண்டியவை:**

"தக்காளி, உப்பு, எண்ணெய் இவற்றை அதிகம் தவிர்க்க வேண்டும்."

**குடிப்பதற்கு உரிய சாறு:**

"வெள்ளைப் பூண்டின் சாறு, முள்ளங்கிச் சாறு, எலுமிச்சம் பழச்சாறு மூன்றையும் வெந்நீரில் கலந்து குடிப்பது நல்லது.

**குளிர்சாதனப் பெட்டி தீமை:**

"குளிர்சாதனப் பெட்டியில் எதையும் வைத்துச் சாப்பிடக் கூடாது."

**களி செய்து உண்ணுக:**

"பச்சரிசி, கோதுமை, கேழ்வரகு - இவற்றைக் களி செய்து சாப்பிடுவது நல்லது."

**மாதம் ஒருமுறை:**

"இஞ்சி, துளசி, எலுமிச்சைச் சாறு தயாரித்துத் தேன் கலந்து மாதம் ஒருமுறை குடித்து வருவது நல்லது."

**குழந்தைகள் வயிற்றில்:**

"குழந்தைகளின் வயிற்றில் தலைமுடி சென்று விட்டால் வெண்ணெய் சாப்பிடக் கொடுக்க வேண்டும். அவ்வாறு சாப்பிட்டால் தலைமுடி வெளியேறும்."

**குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து:**

“வேக வைத்த புழுங்கல் அரிசிச் சோறு அல்லது பச்சரிசிச் சோற்றுடன் வெண்ணெய், பருப்பு கலந்து கொடுப்பது உங்கள் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தாக அமையும்.”

**முக்கியத்துவம் உள்ள பொருள்கள்:**

“விளாங்காய், நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், துளசி, வேப்பம்பழச் சாறு முதலியவற்றிற்கு மருத்துவத்தில் முக்கியத்துவம் உண்டு.”

**தோல் வியாதிகள் வராமல் தடுக்க:**

“நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும்.”

சிகைக்காயுடன் பச்சைப் பயறு, கஸ்தூரி மஞ்சள், ஆலம்பட்டை, அரசம்பட்டை, எலுமிச்சம்பழத் தோல், கேழ்வரகு, மல்லி ஆகியவற்றை அரைத்து வைத்துக் கொண்டு தேய்த்துக் குளித்து வரவேண்டும்.”

**மூட்டுவலி நீங்க:**

“வேப்பமர வேர், எலுமிச்சை வேர், அரசமர வேர், துளசி வேர், கண்டங்கத்திரி வேர் ஆகியவற்றைச் சேர்த்துக் கஷாயம் வைத்து இரண்டு சொட்டு தினம் குடித்து வந்தால் மூட்டு வலிக்கு நல்லது.”

**சீதள உடம்பு கொண்டவர்களுக்கு:**

“விளாம்பழ இலை, நெல்லி இலை, நொச்சி இலை ஆகியவை சீதள உடம்பிற்கு நல்லது.”

**கிழங்கு வகை:**

“பூமியில் உள்ள கிழங்கு வகைகளைச் சாப்பிடக்கூடாது.”

**பெண்களுக்கு:**

“கேழ்வரகுக் களி, சோளக்களி, வரகரிசிக்களி ஆகியவற்றை உண்டு வந்தால் வீட்டு விலக்கு சமயங்களிலும் ரத்த ஓட்டத்திற்கும் நல்லது. கருச்சிதைவு ஏற்படாது.”

**அவ்வப்போது:**

“பாகற்காய், சுண்டைக்காய்களை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். கசப்புச் சுவை புற்று நோயைக் கூடக் குணப்படுத்தும்.”



**பச்சைக் காய்கறிகள்:**

“பச்சைக் காய்கறிகள், பாகற்காய், சுண்டைக்காய், புடலங்காய், பீட்ரூட், வெங்காயம், மிளகு, ஏலக்காய் சேர்த்துச் சாப்பிட வேண்டும்.”

**ஜீரண சக்திக்கு...**

“ஜீரண சக்திக்கு இஞ்சி, கொத்துமல்லி, புதினாச்சாறு பிழிந்து குடித்து வரவும்.”

**நரம்புத் தளர்ச்சி உள்ளவர்களுக்கு:**

“ஆட்டுப் பாலைக் காய்ச்சி, ஆடை நீக்கி, அதனுடன் அவல், பனங்கற்கண்டு சேர்த்துக் குடித்து வரவேண்டும்.”

**கோவைக்காய்:**

“உணவில் கோவைக்காய்க்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.”

**சிறந்த சாறு:**

“எலுமிச்சைச் சாறு, துளசி, பூண்டு, வெந்நீரில் கலக்கிச் சாற்றைக் குடிக்க வேண்டும்.”

**பெருங்காயம்:**

“உணவில் பெருங்காயத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.”

**வேப்பிலை:**

“தினம் வேப்பிலையைச் சேர்த்து உண்ண வேண்டும்.”

**பற்கள் உறுதி பெற...**

“பற்பசைகள் உறுதி தராது. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.

உமியைக் கருக்க வைத்து, வேப்பிலையைக் காய வைத்துத் தூளாக்கி இவற்றுடன் உப்பு சேர்த்துப் பல் துலக்கப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.”

**உணவு முறை:**

“கண்ட கண்ட உணவுகளைச் சாப்பிட்டால் உடலுக்குக் கேடு தான் வரும்.

பழங்காலம் போல, களி, சோளம் முதலியவற்றைச் சாப்பிடுவது நல்லது.

நெல்லிக்கனி, அத்திப்பழம், பேரீச்சம்பழம், கொடி வேர்க்கடலை, பாகற்காய், சுண்டக்காய் என்பன உடலுக்கு நன்மை தருவன.''

**மூட்டு வலிக்கு:**

''மூட்டு வலிக்கு வேப்பெண்ணெய் சூடு செய்து பச்சைக் கற்பூரம் போட்டுத் தேய்த்து வரவேண்டும்.''

**உடலுக்கு நல்லது:**

''அத்தி, விளாம்பழம், பேரிக்காய் உடலுக்கு நல்லது.''

**ஆவி பிடித்தல்:**

''தும்பை, நொச்சி, துளசிச் சாறு எடுத்து வெந்நீரில் போட்டு ஆவி பிடிக்கவும்.''

**பச்சைக் காய்கறிகள்:**

''வாரத்திற்கு ஒரு நாள் பச்சைக் காய்கறிகளைச் சாப்பிட வேண்டும். உருளைக் கிழங்கு, வாழைக்காய், தக்காளி அதிகம் சேர்த்துக் கொள்ளக் கூடாது. பூண்டு அதிகம் சேர்த்துக் கொள்ளலாம்.''

கஞ்சி சாப்பிட்டால் நோய்க்கு அஞ்சவேண்டியதில்லை. கூழ் சாப்பிட்டால் வயிற்றுக்குக் குழப்பம் இல்லை.

உடல் வளர்வதற்கு உணவு அவசியம், ஆன்மா வளர்வதற்கு ஆன்மிகம் அவசியம்!''

**வாரம் ஒருமுறை:**

''வாரம் ஒரு முறை கேழ்வரகுக் கஞ்சி, சோளக்களி, பூண்டு, பனங்கற்கண்டு சாப்பிட்டு வருவது நல்லது.''

**உணவுப் பழக்கம்:**

''கஞ்சி, கூழ், களி என்று உணவுப் பழக்கங்கள் இருந்த காலத்தில் இவ்வளவு நோய்கள் இருந்ததில்லை. பலகாரங்கள் விதவிதமாகப் பெருகிய பிறகு விதவிதமான நோய்களும் வருகின்றன.

வாரம் ஒரு முறை சோளக்களி, கேழ்வரகுக் களி உண்பது நல்லது.

கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்யக் கூடாது.''



**நோய் வராமல் தவிர்க்க...**

''நோய்கள் வராமல் தவிர்க்க வேண்டுமானால் உப்பு, புளி, காரத்தைக் குறைக்க வேண்டும்.

நல்லெண்ணெயில் கொழுப்புச் சக்தி குறைவு. சமையலில் அதனைப் பயன்படுத்த வேண்டும்.''

**புற்று நோய்க்கு:**

''நித்தியகல்யாணி என்ற பூ வாய்க்காலிலும் இருக்கும். குப்பை மேட்டிலும் இருக்கும். அது புற்றுநோய்க்குச் சிறந்த மருந்து!''

**அவ்வப்போது குடித்து வருக:**

''எலுமிச்சம் பழச்சாறு, வேப்பிலை, மிளகு, சுக்கு அனைத்தையும் வெந்நீரிலோ அல்லது பாலிலோ கலந்து குடித்து வரவேண்டும்.

கொத்துமல்லி, துளசி, வேப்பிலை, இஞ்சிச்சாறு இவற்றுடன் தேன் கலந்து குடிப்பது நல்லது.''

**தலைக்கனம், சளி, தும்மல் நீங்க...**

''நொச்சி இலை, நீலகிரி இலை, துளசி இலை இவற்றைக் கொதிக்கும் நீரில் போட்டு வேது பிடித்தால் தலைக்கனம், சளி, தும்மல் ஆகியவற்றுக்கு நல்லது.''

**மூட்டு வலிக்கு:**

''விளக்கெண்ணெய் சூடு செய்து, நாட்டுக்கோழி முட்டையை மஞ்சள் கரு நீக்கி, எண்ணெயுடன் கலந்து மூட்டுகளில் தடவி வந்தாலும், உமியைச் சூடு செய்து ஒத்தடம் கொடுத்து வந்தாலும் மூட்டுவலி நீங்கும். பிறகு சிகைக்காய் பொடி போட்டுக் கழுவி விடவேண்டும்.''

**ஆவி பிடிக்க...**

''நீலகிரித் தைல இலை, நொச்சி இலை, எலுமிச்சை இலை இவற்றை வேகவைத்து ஆவி பிடிக்க வேண்டும்.''

**இரசாயன உரம் கூடாது:**

''மூலிகைச் செடிகளுக்கு இரசாயன உரம் போட்டு வளர்க்கக் கூடாது.''

**சளித்தொல்லை நீங்க...**

"தும்பைப் பூ, நொச்சி, துளசி, நீலகிரி இலை அனைத்தையும் அரைத்து வேப்பெண்ணையைச் சுமாராகச் சூடு செய்து அதில் அரைத்த இலையைப் போட்டுப் பச்சைக் கற்பூரம், மிளகு போட்டு மார்பகம், தோள்பட்டை ஆகியவற்றில் தடவி வந்தால் வலி, சளித்தொல்லை நீங்கும்."

**நாட்டு மருந்துகள்:**

"என்ன தான் விஞ்ஞான முறையில் மருத்துவம் செய்தாலும், நாட்டு மருந்துகளான வேப்பிலை, துளசிக்கு என்றும் மகத்துவம் இருந்து கொண்டுதான் இருக்கும்."

**மூட்டு வலிக்கு:**

"முருங்கைப் பட்டை, சுக்கு, கஸ்தூரி மஞ்சள், வெள்ளைக் கடுகு, கேழ்வரகு மாவு, இவற்றைக் கொஞ்சம் எடுத்து, அம்மியில் வைத்துக் கெட்டியாக அறைத்து, வலியுள்ள முழங்கால் மூட்டுகளின்மேலே தடவி ஒரு மணி நேரம் ஊற விட வேண்டும். முருங்கைப் பட்டைச் சாற்றுக்கு மூட்டுகளின் இடையில் சென்று தேய்மானத்தைச் சரி செய்யும் சக்தி உண்டு. பின் அரிசி களைந்த கழுநீரைச் சுட வைத்துப் பதமாக முழுங்கால் மூட்டுகள் மேல் ஊற்றிக் கழுவ வேண்டும். இவ்வாறு ஒரு மாதம் செய்து வந்தால் குணம் தெரியும்."

**உடல் இளைக்க:**

"ஒரு டம்ளர் வெந்நீரில் சிறிது எலுமிச்சம்பழச்சாறு கலந்து வெறும் வயிற்றில் காலையில் குடித்து வரவேண்டும். மூன்று சொட்டு தேன், ஐந்து வேப்பிலை, ஐந்து துளசி ஆகியவற்றுடன் வடிகட்டிய ஆட்டுப்பாலைச் சேர்த்து தினமும் சாப்பிட வேண்டும்."

**யானைக்கால் வியாதிக்கு:**

"ஒரு சுக்கு, இரண்டு மிளகு, மூன்று திப்பிலி ஆகிய இவற்றுடன் வேப்பெண்ணெயில், நாட்டுக்கோழி முட்டையைக் கலந்து முழுங்காலில் இருந்து கீழ்நோக்கித் தினமும் தடவி வரவேண்டும்."

**நரைமுடிக்கு:**

"விளக்கெண்ணையைச் சூடு செய்து அதனுடன் மிளகுத்தூளை சற்று கரியாக்கி விளக்கெண்ணையுடன் கலந்து தலையில் தடவலாம்."



**ஒவ்வாமை (சளி—தூசி—அலர்ஜி):**

"சுக்கு, மிளகு, திப்பிலியைப் பொடியாக்கி கொதிக்க வைத்த ஆட்டுப்பாலில் கலந்து குடிக்கவும். அத்திப்பழம், விளாம்பழம், நெல்லிக்கனியைத் தினமும் சாப்பிடவும். ஆட்டுப்பாலைக் காய்ச்சி அதில் படியும் ஆடையை நீக்கிவிட்டுத் திரும்பவும் சூடுபண்ணி சுக்கு, மிளகு, திப்பிலி சேர்த்துக் குடிக்க வேண்டும்."

**தைராய்டு நோய்க்கு (குறைவாக சுரத்தல்):**

"ஒரு வில்வம், ஒரு வெற்றிலை, ஒரு வேப்பிலை, இஞ்சி ஒரு சிறிய துண்டு, ஒரு கிராம்பு, ஒரு ஏலக்காய் இவற்றுடன் சிறிது தேன் கலந்து வாரம் இரண்டு முறை சாப்பிடவும்."

**காமாலைக்கு:**

"கோதுமை மாவுக் கஞ்சி வைத்துக் குடிக்கவும். மதியம் எலுமிச்சை சாற்றுடன் சிறிது உப்பு சேர்த்துக் குடிக்கவும். தினமும் அரிசிக் கஞ்சியைக் குடிக்கவும்."

**இருதயப் பாதிப்பிற்கு:**

"சிறிது வேப்பிலையையும், சிறிது நிலக்கடலையையும் ஆட்டுப்பாலில் கலந்து சாப்பிட்டால் இருதய நோய் குணமாகும். மாரடைப்பிற்கும் கொழுப்புச் சத்தைக் குறைப்பதற்கும் வாரத்திற்கு மூன்று நாட்களுக்கு - இஞ்சி, புதினா, கொத்துமல்லி, கருவேப்பிலை, வேப்பிலை ஆகியவற்றைச் சாப்பிட்டு வரவேண்டும். அடுத்த நான்கு நாட்களுக்கு அரிசி கோதுமை, பனை வெல்லம், அவல், பொட்டுக்கடலை, கொடி வேர்க்கடலை, சுக்கு, பசும்பால், வேப்பிலை ஆகியவற்றைச் சாப்பிட வேண்டும்."

**வாயுத் தொல்லை:**

"சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலக்காய் ஆகியவற்றைப் பொடி செய்து அதனுடன் சிறிது சர்க்கரையைச் சேர்த்து பசும்பால் அல்லது ஆட்டுப்பாலில் சிறிது வெந்நீரைச் சேர்த்து வெள்ளி அல்லது செவ்வாய்க்கிழமைகளில் தொடர்ந்து சாப்பிட்டால் வாயுத்தொல்லை நீங்கும்."

**உடல் வளம் சீராக இருக்க...**

"பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வேப்பெண்ணெய் அல்லது இலுப்பெண்ணையில் நாட்டுக்கோழி முட்டையின் வெள்ளைக் கருவைச் சேர்த்து அவற்றுடன் சிறிது பச்சைப்பயறு, எலுமிச்சம்

பழத்தோல் ஆகியவற்றைப் பொடி செய்து தேய்த்து குளிக்க வேண்டும். குளித்த பின்பு சாம்பிராணி புகை போட்டுக் கொள்ள வேண்டும்.''

**உடல் பலவீனத்திற்கு:**

''பச்சைப்பயறு, கோதுமை, பச்சரிசி ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்துப் பொடி செய்து கஞ்சி வைத்து சாப்பிடவும். கை, கால்களில் சிறு கட்டி இருந்தால் சுக்கு, மிளகு, வேப்பிலை, மஞ்சள் இவை அனைத்தையும் அறைத்து சூடு செய்து ஒத்தடம் கொடுத்து வந்தால் கட்டி கரைந்து போகும்.''

**அடிபட்டு வீங்கிய இரத்தக் கட்டிக்கு:**

''புளியைக் கெட்டியாக அறைத்து சூடு செய்து வெதுவெதுப்புடன் தொடர்ந்து மூன்று நாட்கள் தடவி வந்தால் இரத்தக்கட்டி குணமாகும்.''

**ஞாபக சக்திக்கு:**

''இரண்டு வேப்பிலை, துளசி, மிளகு, பூண்டு ஆகியவற்றைத் தினமும் சாப்பிட்டு வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.''

**குடியை மறக்க:**

''வெறும் வயிற்றில் எலுமிச்சம்பழம் (கால் பகுதி), ஆரஞ்சுப்பழம் (கால் பகுதி), சாத்துக்குடி (கால் பகுதி) இவற்றைச் சாறு பிழிந்து அவற்றுடன் ஒரு பாட்டில் சோடாவைக் கலந்து நன்றாக நுரை வரும் அளவுக்கு குலுக்கிய பின்பு அதை உடனே குடிக்க வேண்டும். குடித்ததும் அவர்களுக்கு மது அருந்துவது போன்ற உணர்வு உண்டாகும். நாளடைவில் குடிப்பதை மறந்துவிடுவார்கள்.''

**மூல வியாதி:**

''பாதி ஆப்பிள் பழத்தை ஜூஸ் செய்து சம அளவு கை பொறுக்கும் வகையில் வெந்நீரை விட்டு குடித்து வரவேண்டும். வெள்ளாட்டுப் பாலைக் காய்ச்சி ஆடையை நீக்கிக் கொடி வேர்க்கடலை, அவல் சேர்த்து சாப்பிட்டு வரவேண்டும்.''

**சர்க்கரை நோய்:**

''தினமும் மலை நெல்லிக்காயும், விளாம்பழமும் தொடர்ந்து சாப்பிட்டால் சர்க்கரை நோய் குணமடையும்.''

**உடல் சோர்வு நீங்க:**

''ஓர் எலுமிச்சம்பழம், இரண்டு ஆரஞ்சுப்பழச் சாற்றுடன் ஒரு



டேபிள் ஸ்பூன் தேன் கலந்து சாப்பிடவும். (குளிர் காலத்தில் சிறிது வெந்நீர் சேர்த்துக் கொள்ளவும்).''

**உடல் சூடு, கண் எரிச்சல் குறைய:**

''விளக்கெண்ணெய், நல்லெண்ணெய் சம அளவு கலந்து, இரண்டு சிறிய பூண்டுடன் ஆறு மிளகைச் சேர்த்து சூடு செய்து தலைக்குத் தேய்க்க வேண்டும். சிறிது நேரம் கழித்து சீயக்காய் அல்லது அரப்புத்தூள் தேய்த்துக் குளிக்கவும்.

(அல்லது)

தேங்காய் எண்ணெயுடன் மறுதோன்றி இலை, மஞ்சள் கரிசலாங்கண்ணி இலை, சிறியாநங்கை இலை இவற்றைச் சேர்த்துக் காய்ச்சித் தினமும் தலைக்குத் தடவி வரவேண்டும்.''

**சிறுநீர் கல் – சிறுநீரகக் கோளாறு:**

''வெள்ளை முள்ளங்கிச்சாறு, துளசிச்சாறு, பூண்டுச்சாறு, இஞ்சிச்சாறு, எலுமிச்சஞ்சாறு இவற்றையெல்லாம் சம அளவு எடுத்துக் கொண்டு இரண்டு டம்ளர் தண்ணீரில் கலந்து சாப்பிட்டு வரவேண்டும்.''

**நெஞ்சு வலிக்கு:**

''வேப்பெண்ணெயைச் சூடு செய்து அதனுடன் சிறிது பூங்கற்பூரத்தைச் சேர்த்து நெஞ்சில் தடவி தவிடு ஒத்தடம் கொடுத்தால் நெஞ்சு வலி குறையும்.

(அல்லது)

பச்சரிசி, கோதுமை, பாசிப்பயிறு, மூன்றையும் அறைத்து மாவைக் கொதிக்க வைத்துக் கஞ்சியாக்கி பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். கன்னிக் கோழி (நாட்டுக் கோழி) முட்டையின் வெள்ளைக் கருவை மட்டும் பசும்பாலில் சேர்த்துச் சாப்பிட வேண்டும். இரவில் சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றை ஒருநாள் விட்டு மறுநாள் (புதன், வியாழன் நீங்கலாக) சாப்பிடவும்.''

**மாரடைப்பிற்கு:**

''ஐந்து வேப்பிலை, ஐந்து துளசி இலை தினமும் சாப்பிடவும். எண்ணெய், புளி, மாமிசம் இவைகளை உணவில் குறைக்கவும். உணவில் கொத்துமல்லி, புதினா, கறிவேப்பிலை ஆகியவற்றை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

புழுங்கலரிசி, நொய், கோதுமை நொய், பாசிப்பயிறு, மிளகு, சீரகம், வெள்ளைப் பூண்டு ஆகியவற்றுடன் சேர்த்துக் கஞ்சி வைத்து சாப்பிடவும்.

நொச்சி இலை, தும்பை இலை, துளசி இலை, நீலகிரி இலை ஆகியவற்றின் சாறு எடுத்து அதைக் காய்ச்சிச் சூடு செய்து பின் அத்துடன் வேப்பெண்ணெய் சேர்த்து இளஞ்சூட்டுடன் நெஞ்சில் தடவவும்.''